
வானதி பதிப்பகம்


கடல் ராணி
சாண்டில்யன்
வானதி பதிப்பகம்

| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : டிசம்பர், | 1981 |
| இரண்டாம் பதிப்பு | : டிசம்பர், | 1984 |
| மூன்றாம் பதிப்பு | : டிசம்பர், | 1986 |
| நான்காம் பதிப்பு | : மார்ச், | 1990 |
| ஐந்தாம் பதிப்பு | : டிசம்பர், | 1997 |
| ஆறாம் பதிப்பு | : மார்ச், | 2000 |
| ஏழாம் பதிப்பு | : மே, | 2002 |
| எட்டாம் பதிப்பு | : ஜுன், | 2004 |
| ஒன்பதாம் பதிப்பு | : மார்ச், | 2006 |
| பத்தாம் பதிப்பு | : ஆகஸ்ட், | 2007 |
| பதினொன்றாம் பதிப்பு | : அக்டோபர், | 2008 |


உரிமை : ஆசிரியருக்கு

**திருநாவுக்கரசு தயாரிப்பு**

**விலை : ரூ.170.00**

- TITLE : **KADAL RANI**
- AUTHOR : SANDILYAN
- EDITION : 11TH EDITION, OCTOBER, 2008
- TOTAL PAGES : 512
- PUBLISHED BY : **VANATHI PATHIPPAKAM**
  23, Deenadayalu Street,
  Thyagaraya Nagar, Chennai - 600 017.
  ☎ 24342810 / 24310769
  E-Mail : vanathipathippakam@vsnl.net
  Website : www.vanathi.in
- PRICE : **Rs.170.00**

Typeset at : FONTS DTP Service, Chennai - 600 005.

Printed at : Novena Offset Printing Co., Chennai-5. ☎ 28446891, 28446166

# முன்னுரை

'கடல் ராணி' கதைக்கு முன்னுரை எதுவும் தேவையில்லை. இக்கதையில் வரும் சம்பவங்கள் நூற்றுக்கு எண்பது சரித்திரத்தில் நடந்தவை. பாத்திரங்கள் நூற்றுக்குத் தொண்ணூறு சரித்திரத்தில் ஜீவித்தவர்கள். கதை அமைப்புக்காகச் சேர்க்கப்பட்டுள்ள பாத்திரங்கள் கடல்ராணி ரத்னா, பேஷ்வா பாஜிராவின் மருமகள் சாரு, இந்திரஜித் அனந்த் இவர்கள் தான். மற்ற எல்லோரும் சரித்திரத்தில் இருந்திருக்கிறார்கள்.

இந்தக் கதையைப் பற்றிய சரித்திர ஆராய்ச்சியில் இறங்கியபோது, எப்பேர்ப்பட்ட பரம்பரையில் இந்தப் பாரதம் வந்திருக்கிறது, எத்தகைய அமானுஷ்ய நிகழ்ச்சிகள் அரபிக் கடலில் நடந்திருக்கின்றன என்பதை அறிந்து பிரமித்துப் போனேன். சிவாஜி மகாராஜாவின் அற்புத சிருஷ்டி சிந்துதுர்க்கம் எனும் கடல்சூழ் கோட்டையும், அதைக் கட்டியபோது சத்ரபதி மற்றக் கூலிகளோடு தானும் ஒரு கூலியாக மண்ணும் கல்லும் சுமந்த விசித்திரமும், எண்ண எண்ண இன்னும் பெருமையாக இருக்கின்றன. நமது நாட்டு வரலாற்றில் எத்தனை பொக்கிஷங்கள் புதைந்து கிடக்கின்றன என்று சிந்திக்கும் போது, இத்தனையும் சாதித்த சமுதாயம் இன்று எங்கே போய்விட்டது என்று நினைக்கும்போது, பாரதியார் சொன்ன 'நெஞ்சு பொறுக்குதில்லையே'

என்ற தீர்க்கதரிசன வாக்கியம் எத்தனை உண்மை என்பது புலனாகியது.

'சரித்திரக் கதை எதற்கு? அது சமுதாயத் திற்குத் தேவைதானா?' என்று பல வீணான கேள்விகள் இன்று பிறக்கின்றன. அறிவு தேவை யானால் சரித்திர ஆராய்ச்சி தேவை. எத்தனையோ புதுமை களைச் சரித்திர ஆராய்ச்சியில் காண்கி றோம். இலக்கிய உண்மைகள் பலவும் வெளி யாகின்றன.

ஒரு உதாரணம் சொல்லமுடியும். R.L. Stevenson எழுதிய 'Treasure Island' என்ற நாவலை, எனக்கு இண்டர்மீடியட்டில் பாடபுத்தகமாக வைத்திருந்தார்கள். அதில் வரும் ஒற்றைக்கால் Long John silver ஆசிரியரின் கற்பனையில் எழுந்த அற்புதப் படைப்பு என்று எங்களுக்குப் போதித் தார்கள். ஆனால், அந்த ஸில்வர் மலையாளத்தில் இருந்திருக்கிறான் என்பதும், அரபிக்கடல் கொள்ளைக் கூட்டத்தில் அவனும் ஒருவன் என்பதையும் 'Pirates of Malabar' என்ற நூலில் கர்னல் ஜான் பிட்டல்ப் குறிப்பிட்டு, ''இந்தப் பாத் திரத்தைத்தான் ஸ்டீவன்ஸன் தமது ட்ரெஷர் ஐலண்ட் நாவலில் கையாண்டிருக்கிறார்'' என்று தெளிவாக்குகிறார்.

இப்படி எத்தனையோ இலக்கிய விளக்கங் களைச் சென்ற 25 ஆண்டு ஆராய்ச்சியில் நான் கண்டிருக்கிறேன். ஒவ்வொரு நூலிலும் கல்லூரியில் கிடைக்காத பூர்த்தி, ஆராய்ச்சியால் ஏற்பட்டிருக் கிறது. எழுத்து மட்டும் எனக்குத் தொழிலாக



அமையாவிட்டால் நான் படித்துக்கொண்டே காலத்தைக் கழித்துவிடுவேன்.

''கடல் ராணி'யை நீங்கள் படிக்கும்போது அரபிக்கடலின் கொள்ளையர் சரித்திரத்தைப் படிப் பீர்கள். அத்துடன் கற்பனை கலந்த இன்பக் கதை யையும் படிப்பீர்கள், மகிழ்வீர்கள் என்பது என் எண்ணம்.

இது 'கல்கி'யில் வந்தபோது படித்து ஆதரித்த தமிழ் மக்கள், இந்தப் புத்தகத்துக்கும் ஆதரவளிக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

இதை எழுதத் தூண்டிய 'கல்கி' ஆசிரியர் திரு. ராஜேந்திரன் அவர்களுக்கும், இதைப் புத்தக வடிவில் சிறப்பாகக் கொணர்ந்திருக்கும் வானதி அதிபர் திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகும்.

**சாண்டில்யன்**

# BIBLIOGRAPHY

1. Maharashtra State Gazeteer
   *- Ratnagiri District.*
2. Pirates of Malabar
   *- By Col.John Biddulph*
3. Indian Pirates
   *- By R.N.Salatore*
4. Kanoji Angre-Maratha Admiral
   *- By Manohar Malgonkar*
5. Chitnis Bakar
6. Tailor's Sailing Directory
7. McGrindle's Periplus
8. Siva Chatrapathi
   *- By Surendaranath Sen M.A.*
9. Nairne's Manuscript on Malwan Pirates.


# கடல் ராணி

## அத்தியாயம் - 1

## அலைகடல்தாமரை!

**பொ**ழுது புலர்ந்து பத்து நாழிகைகள் ஓடிவிட்ட போதிலும் பங்குனியின் பின்பனி மூட்டம் சிறிதும் விலகாமல் அலைகடலை அளவுக்கு மீறியே உறையச் செய்திருந்தும் சிந்து துர்க்கத்தின் கரிய பெரிய கூரிய மலைப்பாறைகள் பேய்களைப் போல் பயங்கரமாக எழுந்து நின்று மிரட்டியும், பனியில் குளிர்ந்தாலும் மனம் குளிராத அரபிக்கடல் காற்றில் சீறி எழுந்திருந்து அலைக் கரங்களால் புரட்டியுங்கூட, எதற்கும் மசியாத அந்த யுவதி மிக அலட்சியமாக அலைகளின் மீது தாவியும் புரண்டும், தனது நீண்ட கரங்களை வீசியும் நீந்தி நீந்தித் துழைந்து விளையாடினாள்.

கடலிருந்த பயங்கரத்தின் காரணமாகச் சிந்து துர்க்கத்தின் படகுகள்கூடப் பக்கத்தில் கடல் குடைந்து விட்டிருந்த மலையின் சுழற்சியில் பதுங்கிக் கிடந்ததால், கடலில் அவளைத் தவிர வேறு யாரும் இல்லாததால், அவள் சுதந்திர ராணியாக அலைகளில் வெகுவேகமாக நீந்தினாள். அலைகளின் வீச்சில் அவள் சிலவேளைகளில் எழுந்தாலும் பெரும்பாலும் மூழ்கியே சென்றதால், எழுந்திருந்த சமயங்களிலாவது அவளது லாவண் யத்தைக் காணலாம் என்ற ஆசையின் விளைவாகக் கதிரவன் திருட்டுத்தனமாகத் தனது கிரணங்களில் ஒன்றிரண்டைப் பனி மூட்டத்தில் லேசாகச் செலுத்தினான். அதற்கு அவளிடம் இருந்தோ, கடலிடமிருந்தோ எதிர்ப்பு ஏதும் வராததால், இடம் கொடுத்தால் மடம் பிடுங்கும் கதையாகப் பனித்திரையைப் பல

இடங்களில் நன்றாகவே பிளந்து கதிரவன் அவளைத் தனது கிரணங்களால் தழுவலானான்.

கிரணங்களால் ஒளி பெற்ற அலைகள்கூட அற்பனுக்கு ஐசுவரியம் கிடைத்தது போல நீந்திய அவளைச் சுழற்றிச் சுழற்றி அடித்துத் தங்களுக்கும் வல்லமை உண்டு என்று காண்பித்தன. இயற்கையின் இத்தனை போராட்டமும் இந்திர ஜாலமும் அவளை மட்டும் சிறிதும் பாதிக்காததைக் கண்ட இரண்டு கருடன்கள் சிந்து துர்க்கத்தின் கோட்டைப் பாறைகள் இரண்டின்மீது உட்கார்ந்து ஒன்றையொன்று அர்த்தபுஷ்டியுடன் பார்த்துக் கொண்டன. தூரத்தே எழுந்த ஸஹ்யாத்ரி மலைத்தொடரின் பெரிய உச்சிகளிலிருந்த மரங்களும் காற்றில் பெரிதாக ஆடிக் கடலின் தோல்வியைப் பரிகசிப்பன போல் மலர்களைக் கலகலவென உதிர்த்தன. அதுவரை பனிக்குப் பயப்பட்டுப் பதுங்கிக் கிடந்த கடல் நாரைகள் சில ஜிவ்வென்று ஆகாயத்தில் கிளம்பி அந்தப் பெண்ணிருந்த இடத்தை நோக்கி வட்டமிட்டன.

கதிரவன் கிளம்பிவிட்ட காரணமோ, அல்லது இனி இவளை அலசிப் பயனில்லை என்ற தோல்வி மனப்பான்மையோ தெரியாது, அலைகள் சிறிது மந்தப்படவே செய்ததால் அவள் மல்லாந்து நீந்தினாள், கடலின் மீது. நீச்சலுக்காகச் சிற்றாடையைப் புனைந்து மகாராஷ்டிரப் பாணியில் இறுகக் கச்சமாகவும் கட்டியிருந்ததால் மல்லாந்த நிலையில் அவள் மிக மனோகரமாக விளங்கினாள். அதுவரை அவளைப் புரட்டியடித்த அலைகள், கதிரவன் காலை ஒளியில் மின்னி எழுந்த அவள் அழகிய மார்பகத்தை லேசாகத் தழுவிச் சென்றன. சிற்றிடையில் பிணைந்து கீழே சரேலென்று இறங்கிய சிற்றாடை, கால்களின் பரிமாணத்தையும் உடல் சுழற்சியையும் தெளிவாக்க முயன்ற நிலையில் ஏதோ தேவகன்னிகை காலத்தால் கடலில் வந்து விழுந்து விட்டது போன்ற பிரமையை உண்டாக்கியது.

இரவாயிருந்தால் அவள் முகத்தைச் சந்திரனுக்கு ஒப்பிடலாம். ஆனால், பகல் நன்றாகவே பிறந்துவிட்டதால் கடலில் முளைத்த தாமரைபோல் முகத்தைத் தெரியச் செய்யும் நோக்கத்துடன் அவள் மல்லாந்த உடலை நீரில் மறைத்துத் தலையை மட்டும் வெளியில் தெரியச் செய்து, கீழே கால்களை உதைத்துத் தாமரைக்கொடியென நின்றாள். அப்படிக் கொடி முனையில் நின்ற



தாமரையை மேலும் மலரச் செய்யக் கதிரவன் தன் கிரணங்களை அதிகமாகவே ஏவினான். ஆனால், முகம் மலர்ந்த தாமரையென்றால் மற்ற லட்சணங்களைப் பற்றி என்ன சொல்வாய் என்று கதிரவனைக் கேட்பதுபோல், அவள் மீண்டும் மல்லாந்து நீந்தித் தரையை நோக்கிக் கால்களை உதைத்துச் சென்றாள். அந்த நிலையில் அழகிய மார்புத் தாமரை மொட்டுக்கள் வேகமாக அசைந்தன.

காளிதாஸன் மட்டும் முன்பாக சுதக்ஷிணையைப் பார்க்காமல் இவளைப் பார்த்திருந்தால், *'தாமரை மொட்டுகள் மேல் வண்டுகள் உட்கார்ந்த அழகை அவள் இரட்டை அழகுகள் அலட்சியம் செய்தன' என்று எழுதியிருப்பான் கவி இல்லாததால் அந்தப் பணியைத் தானே செய்யலாம் என்று அலைகள் அவள் ஆடையை லேசாக அகற்ற முயலவே, அவள் சிரித்துப் புரண்டு மறுபடியும் அழகை நீருக்குள் மறைத்துக் கரையை நோக்கி வேகமாகக் கைகளை மாற்றிப் போட்டு நீந்தினாள்.

ஒரு பெண், மீனாக மாற முடியும் என்பதற்கு அத்தாட்சி காட்டுவதுபோல் அவள் கால்களையும் உடலையும் வளைத்து அழகாக நீந்தி, பாறைகள் குச்சி குச்சியாக எழும்பி சிந்து துர்க்கத்துக்குக் கரை அமைத்திருந்த இடத்தை அடைந்தாள். கரையை அடைந்த பின்பு நீர் சொட்டிக் கொண்டிருந்த தனது நீண்ட கருங்குழலை எடுத்து அரை குறையாக முடிந்து கொண்டு சற்று எட்ட இருந்த பெரிய மலைப் பாறையின் மறைவை நோக்கிச் சென்றாள். அப்பொழுது சிந்து துர்க்கம் துயிலெழுந்து விட்டதால் கோட்டைக்குள் எங்கும் அரவம் கேட்டதன் விளைவாக அவள் சிறிதும் தாமதிக்காமல் கோட்டைக்கு வெளியே இருந்த சிறு மலைப் பாறைகளில் வெகு வேகமாகவும் அலட்சியமாகவும் மலைக்காட்டு மானைப் போல் துள்ளித் துள்ளி ஏறினாள்.

அப்படி ஏறியவள் நேராகச் சிந்து துர்க்கத்தின் கோட்டை வாயிலுக்குச் செல்லாமல் பெரிய மலைப் பாறையின் மறைவுக்குச் சென்று அதன் சரிவிலிருந்த சிறு கட்டிடத்தை நோக்கி நடந்தாள். அவள் சென்ற பாதை மிகக் கடுமையானதுதான். மலைக்கற்கள்

---

* திரச்சகார ப்ரமராபி லீனயோ:
ஸுஜாதயோ; பஞ்கஜ கோசயோ: ச்ரியம்
(- ரகுவம்சம் -, ஸர்க்கம் -3)

அவள் பாதங்களைக் குத்தவே செய்தாலும், பக்கத்திலிருந்த ஓரிரு புதர் முட்கள் கூடக் காலில் பட்டாலும், அவற்றைப் பற்றிக் கவனிக்காமலே அவள் அந்தச் சிறு கட்டிடத்தை நோக்கி மலைச் சரிவில் ஏறிச் சென்றாள். கட்டிடத்தின் உட்புறத்தில் அவள் தன் ஆடைகளை வைத்திருந்ததால் அவற்றைச் சீக்கிரம் அணிந்து கொண்டு இல்லம் செல்ல வேண்டுமென்று மனம் எடுத்துக் கூறிய துரிதம் அவள் நடையிலும் தெரிந்தது.

வெகு சீக்கிரம் அக்கட்டிடத்தை அடைந்த அவள் அதைப் பார்த்துக் கொண்டே சிறிது நேரம் நின்றாள். கட்டிடம் பல இடங்களில் பாழடைந்து கிடந்தது. மீதியுள்ள சுவரை ஒழுங்காக வைப்பது இந்த தர்மத்துக்கு ஒவ்வாது என்ற காரணத்தால் இரண்டு இடங்களில் அரசு முளைத்துத் தங்கள் ஆட்சி வேரை உள்ளே அனுப்பிக் கொண்டிருந்தன. அதனால் ஏற்பட்ட பிளவுகளிலிருந்து வழலைப் பாம்புகள் இரண்டு தலை நீட்டி மீண்டும் உள்ளே பதுங்கின. இவை அனைத்தும் மிக இன்பமாயிருந்தன, அந்த யுவதியின் உள்ளத்துக்கு. அந்தக் கட்டிடத்தை அவள் பல சமயங்களில் தனக்கு ஒப்பிட்டிருக்கிறாள். கட்டிடம் கடலுக்குத் தனது முதுகைக் காட்டிக் கொண்டிருந்தது. தானும் அப்படிக் கடலை அலட்சியம் செய்ததால் தானும் கட்டிடமும் ஒன்று என்று நினைத்தாள் அவள்.

அந்த எண்ணத்தால் மலர்ந்த உள்ளத்துடன் கட்டிடத்தைச் சுற்றி அப்புறமிருந்த வாயிலை அடைந்த அந்தப் பெண் வாயில் இருந்த நிலை கண்டு பிரமை பிடித்து நின்றாள். வாயிற் கதவு திறந்து கிடந்தது. அதற்கு நேராகக் கிழிந்த ஆடை அணிந்த ஒருவன், நீண்ட நாளாகத் தனக்கென்று போட்டிருந்த மஞ்சத்தில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டிருப்பதைக் கண்டாள். அது மட்டுமின்றித் தன் ஆடைகளில் ஒன்றைச் சுருட்டி அவன் தலைக்கு உயரம் வைத்துக் கொண்டிருந்தது, அவள் சீற்றத்தை எல்லை மீறச் செய்ததால் வெளியே நின்றபடியே, ''டேய்! யாரது?'' என்று தணலை விடச் சுட்ட சொற்களால் அழைத்தாள்.

அவன் மெல்லக் கண்களை விழித்தான். பிறகு மஞ்சத்தில் உட்கார்ந்து கைகளைத் தூக்கி இருமுறை சோம்பல் முறித்தான். கைவிரல்களைச் சொடுக்கிக் கொண்டான். அரைத் தூக்கக் கண்களை வெளியே ஓட்டி, ''என்ன வேண்டும்? யார் நீ?'' என்று கேட்டான்.



தான் கேட்க வேண்டிய கேள்விகளை அவன் கேட்பதைக் காதில் வாங்கிய அந்தப் பெண்ணின் கோபம், முன்னைவிட அதிகமாகியதால் அவள் அவனை உற்று நோக்கினாள்.

அவன் வயது இருபத்துநான்குக்கு மேல் இருக்க முடியாது என்பதை அவன் முகமே எடுத்துக் காட்டியது. அது மிகவும் அழகான முகமானாலும் கண்களில் ஒரு மந்தமும் முகத்தில் ஒரு சோர்வும் காணப்பட்டதை அவள் உணர்ந்தாள். வாழ்க்கையில் அவனுக்கு ஏதோ பெரும் ஏமாற்றமோ துன்பமோ ஏற்பட்டிருக்க வேண்டும் என்று அவள் ஊகித்தாள். கிழிந்து விலகிக் கிடந்த அவன் சட்டையின் மூலம் தெரிந்த கழுத்தும் மார்பும் மிக உறுதியாக இருந்ததாலும், அவன் உடல் ஒல்லியாகவும் வாளிப்பாகவும் இருந்ததாலும், இடுப்புக் கச்சையில் இரண்டு கைத்துப்பாக்கிகள் காட்சியளித்ததாலும் அவன் வீரன்தான் என்பதையும், ஆனால் யாருக்காகவோ மறைந்து திரிகிறான் என்பதையும் அவள் நிச்சயம் செய்து கொண்டதால், ''வா வெளியே!'' என்று அதட்டினாள்.

அவன் மெதுவாக மஞ்சத்திலிருந்து எழுந்து ஆடி ஆடி வெளியே வந்தான். அவளை ஒரு விநாடி உற்று நோக்கினான். பிறகு கேட்டான்: ''நீ இந்த இடத்தின் சொந்தக்காரியா?'' என்று.

''ஆம்'' என்றாள் அவள்.

''நான் இந்தக் கதவுக்கு வெளியிலேயே உட்கார்ந்து உறங்கலாமா?'' என்று அவன் கேட்டான் மரியாதை நிரம்பிய குரலில்.

''அத்தனை தூங்குமூஞ்சியா நீ?'' என்று அவள் வினவினாள்.

''ஆம்.''

''ஏன்?''

''வேறு வேலை இல்லை.''

''வேலை இல்லையா? வேலை செய்ய இஷ்டமில்லையா?'' என்று அவள் கேட்டாள் எரிச்சலுடன்.

''எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள்!'' என்று ஏகவசனத்தில் அசட்டையாகப் பேசிய அவன் வெளியே வந்து கதவின் பக்கத்தில் உட்கார்ந்து சுவரில் நன்றாகச் சாய்ந்து கொண்டு, கால்களை நீட்டி, கண்களையும் மூடிக்கொண்டான்.

அவனை வெறுப்புடன் நோக்கிய அவள் வேகமாக உள்ளே சென்று கதவை மூடித் தாழிட்டாள். அவள் உள்ளே நடமாடியதால் இருமுறை கண் விழித்து அலுத்துக்கொண்ட அந்த வாலிபன், அவள் நனைந்த ஆடையை அவிழ்த்துத் தரையில் போட்டபோது ஏற்பட்ட 'சொத்' என்ற சத்தத்தையும், பிறகு புத்தாடை புனைந்த போது ஏற்பட்ட சரசரவென்ற ஒலியையும் கேட்டுத் தனது இதழ்களில் ஒரு விநாடி இளநகையைப் படரவிட்டுக்கொண் டான். அடுத்த விநாடி மீண்டும் கண்களை மூடினான்.

கண்களை அப்படி அவன் மூடியிராவிட்டால், முழுச் சோம்பேறியாக இல்லாவிட்டால், அதே கட்டிடத்தை நோக்கி இரு வெள்ளையர் வருவதைக் கவனித்திருப்பான். வந்தவர்களும் நல்ல எண்ணத்தோடு வரவில்லை என்பதையும் புரிந்து கொண்டிருப் பான். ஆனால், தூக்கம் தெளியாததால் வந்த இருவரில் ஒருவன் பூட்ஸால் தன்னை உதைத்த பிறகே லேசாகக் கண்களைத் திறந்தான். இன்னொரு வெள்ளையன் அதே சமயத்தில் கட்டிடக் கதவைத் தடதடவெனத் தட்ட... உள்ளிருந்த பெண் வெளியே வந்ததையும், வந்த உடன் வெள்ளையரின் கைத்துப்பாக்கி அவள் மார்புக்கு நேரே நீட்டப்பட்டதையும் உணர்ந்தான்.

''இன்று நீ தப்பமுடியாது. எங்களுடன் வந்துதான் ஆக வேண்டும்'' என்றான் கைத்துப்பாக்கியை நீட்டியவன்.

அதே சமயத்தில் வாலிபனைப் பூட்ஸால் உதைத்தவனும், ''என்னுடைய கைத்துப்பாக்கியும் உன் மார்பை நோக்குகிறது'' என்று அறிவித்து, தான் ஏதோ பெரிய காரியத்தைச் சாதித்துவிட்டது போல் நகைத்தான் குரூரமாக.

பூட்ஸ் காலால் உதைக்கப்பட்டும் எழுந்திருக்காத அந்த வாலிபனைப் பார்த்து அந்தப் பெண், ''நீ வீரன்தானே! உன் கச்சையிலிருப்பதும் கைத்துப்பாக்கிதானே?'' என்று இகழ்ச்சி யுடனும் சிற்றத்துடனும் வினவினாள்.

''அவன் உதவியை நீ எதிர்பார்த்துப் பயனில்லை. இந்தச் சோம்பேறியைக் காவல் வைத்தது உன் மடத்தனம்!'' என்றான் பிஸ்டலை அவளை நோக்கி நீட்டிக்கொண்டிருந்த வெள்ளைக்காரன்.

இதைக் கேட்ட வாலிபன் மிக மெதுவாகக் கண்களை விழித்தான். ''அவள் அப்படியொன்றும் முட்டாளல்ல!'' என்றும் கூறினான்.



''அட! காவலர் நம்மைக் கொன்றுவிடுவார் போலிருக்கிறது'' என்றான் இரண்டாவது வெள்ளையன்.

''அது என் உத்தேசமல்ல...'' என்று கூறினான் அரைவாசி கண்ணை விழித்துக் கொண்டிருந்த வாலிபன்.

''வேறு என்ன செய்ய உத்தேசமோ?'' என்று கேட்டான் முதல் வெள்ளையன்.

பதில் வெகு துரிதமாக வந்தது வாலிபனிடமிருந்து. முதல் வெள்ளையன் பிடித்திருந்த பிஸ்டல் சட்டென்று நிலத்தில் விழுந்து நானாவித ஒலிகளுடன் மலைப்பாறைகளில் உருண்டோடியது. அவன் தன் கையை இறுகப் பிடித்துக்கொண்டு பெரிதாக அலறினான். பூட்ஸ் காலால் உதைத்தவன் தன் முழங்காலைப் பிடித்துக்கொண்டு ஏதோ நொண்டியாட்டம் ஆடுபவனைப் போல் இருமுறை சுற்றினான். வாலிபன் தன் கையிலிருந்த துப்பாக்கி யிலிருந்து கிளம்பிய புகையை மெதுவாக வாயால் ஊதி மீண்டும் கச்சையில் செருகிக்கொண்டான்.

அவனை நன்றிக் கண்களுடன் பார்த்தாள் அந்தப் பெண். ''ஐயா! நீங்கள் யார்?'' இம்முறை மிக மரியாதையாகக் கேட்டாள்.

''நீ யார்?'' என்று பழைய கேள்வியை மீண்டும் திருப்பினான் வாலிபன்.

பதில் அவளிடமிருந்து வரவில்லை. கையில் ரவை பாய்ந்த வெள்ளையன் சொன்னான், ''முட்டாள்! அவள்தான் ராணி!'' என்று.

''ராணி என்றால்?'' குழப்பத்துடன் வினவினான் வாலிபன்.

''கடல் ராணி!'' என்று நொண்டியடித்துக் கொண்டிருந் தவன் கூறினான்.

## அத்தியாயம் - 2

# சிகிச்சையும் அதிர்ச்சியும்!

புகழ் என்பது மனித வாழ்க்கையில் ஏற்படும் ஒரு பிரமை. எந்த மனிதனும் தனக்கு ஏதோ தனி சக்தி இருப்பதாகவும் அதனால் தன் புகழ் ஓங்கியிருப்பதாகவும் நினைக்கிறான். ஆனால், ஒவ்வொருவன் புகழுக்கும் அளவிருக்கிறது; காலம் இருக்கிறது. சிலர் புகழ் வீட்டோடு தங்கிவிடுகிறது. இன்னும் சிலரது புகழ் அவர்கள் உள்ள பிராந்தியத்தோடு நின்றுவிடுகிறது. அப்படி ஏற்படும் பிராந்தியப் புகழ்கூட அவன் காலத்துடன் மலையேறி விடுகிறது.

நில வரம்புக்குள் அடங்காத, காலத்தின் கட்டுக்குள் வராத புகழை வெகு சிலரே அடைகிறார்கள். அவர்கள் உலகத்துக்கு நன்மை செய்வதற்கே வாழ்க்கையை அர்ப்பணித்த மகான்களாகவும் மகாவீரர்களாகவும் விளங்குகிறார்கள். அவர்கள் புகழை வெறும் பிரமை என்று உணர்ந்து அதிலிருந்து விலகப் பார்க்கிறார்கள்; அவர்களைப் புகழ் விடுவதில்லை. சிலர் புகழைச் சம்பாதிக்கப் பார்க்கிறார்கள், புகழ் அவர்களை அணுகுவதில்லை.

கடல் ராணி புகழை நாடவில்லை. அதை விலக்கவும் பலவகையில், பல ஆண்டுகள் முயன்றாள். ஆனால், அவள் கையாண்ட முறைகள் எல்லாம் பயனற்றுப் போயின. சொந்தப் பெயரை மாற்றிக் கொண்டாள் பலமுறை. சொந்தப் பெயர்தான் மாறியதேயொழிய 'கடல்ராணி' என்ற பெயர் மட்டும் மாறவில்லை.

பல வேடங்களில் பல இடங்களில் தோன்றியிருக்கிறாள். எந்த வேடமும் அவளை மறைக்க முடியவில்லை. அவள் கண்களைப் பார்த்தவர்கள் அவளை உடனடியாகக்கண்டு பிடித்துக் கொண்டு, ''அவள்தான், அவள்தான்'' என்று பேசிக்கொண்டார்கள்.

அந்தக் கண்களில் வேறு யாருக்கும் இல்லாத ஏதோ ஒரு கவர்ச்சி, ஒரு புதுமை இருந்தது. ஊனக்கண்கள் தான் என்றாலும் அவை ஞானக் கண்களாக யாரையும் எவரையும் அலசும் ஆற்றல்



பெற்றிருந்தன. அவற்றில் அச்சத்தை யாரும் எப்பொழுதும் பார்த்ததில்லை.

இத்தகைய புகழ் பெற்றவளின் பெயரைச் சொல்லியும் கூடக் கதவின் பக்கத்தில் சாய்ந்திருந்தவன் மிரள மிரள விழித்ததைக் கண்ட முதல் வெள்ளையனின் கோபம் உச்சஸ்தாயியை அடைந்து கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில், ''கடல் ராணி என்றால் யார்?'' என்று மீண்டும் அந்தச் சோம்பேறி கேட்கவே அந்த வெள்ளையன் வெடித்தான்: ''கடல் ராணி என்றால் உனக்கு உண்மையாகத் தெரியாது?'' என்று.

''தெரியாது!'' என்று பரமபவ்யத்துடன் ஒப்புக்கொண்ட அந்த வாலிபன், கதவுக்குப் பக்கத்துச் சுவரில் மீண்டும் சாய்ந்து கொண்டான்.

அதுவரை ரவை பாய்ந்த முழங்காலைப் பிடித்து நொண்டியடித்துக்கொண்டிருந்தவன் சிறிது நிதானித்துத் தனது கண்களை அந்த வாலிபன் மீது நாட்டி, ''நீ இந்த உலகத்தைச் சேர்ந்தவன் தானா?'' என்று வினவினான், கண்களில் தெரிந்த கொடுமை சொற்களிலும் விரிய.

இதைக் கேட்ட வாலிபன் சாய்ந்த நிலையிலேயே புன்முறுவல் காட்டி, ''வேறு உலகத்துக்குப் போக இன்னும் காலம் இருக்கிறதென்று நினைக்கிறேன்'' என்று பதில் சொன்னான் சர்வசாதாரணமாக.

முதல் வெள்ளையன் உக்கிரமாக மாறி, ''இவன் சுத்த அயோக்கியன்'' என்று கூவினான், தனது நண்பனை நோக்கி.

''இவளைச் சேர்ந்தவனாக இருக்கவேண்டும்'' என்றான் நொண்டி.

அதுவரை மௌனமாக அந்த நாடகத்தையும் உரையாடலையும் கேட்டுக்கொண்டிருந்த கடல்ராணி, ''இவரை இதற்கு முன்பு நான் பார்த்ததில்லை'' என்றாள் சிறிதும் சலனமற்ற குரலில்.

முதல் வெள்ளையன் குருதி வழிந்துகொண்டிருந்த தனது கையை இன்னொரு கையால் இறுக்கிப் பிடித்துக்கொண்டான், ரத்தத்தை நிறுத்தும் நோக்கத்துடன். அந்த நிலையில், காயத்தால் ஏற்பட்ட வேதனையில், வேதனை அளித்த வெறியில் வினவினான், ''இவன் இந்தக் கட்டிடத்தில்தானே இருந்தான்?'' என்று

''ஆம்!'' மிக அலட்சியமாக வந்தது கடல் ராணியின் பதில்.

நொண்டி வினவினான்: ''எங்களை இவன்தானே சுட்டான்?''

'அப்படித்தான் இருக்கவேண்டும்'' என்றாள் கடல்ராணி புன்முறுவல் பூத்து.

''அப்படித்தான் இருக்கவேண்டும் என்றால் என்ன பொருள்?'' முதல் வெள்ளையன் வினவினான் மூர்க்கமாக.

''சுட்டதை நான் பார்க்கவில்லை!'' என்றாள் அவள்.

''நானும் பார்க்கவில்லை!'' என்றான் கையில் காயமடைந்தவன்.

''என்னிடம் துப்பாக்கி இல்லை'' என்று கடல்ராணி தனது இடுப்பைத் தொட்டுக் காட்டினாள்.

''அதனால்?'' நொண்டியின் கேள்வி உக்கிரமாக வந்தது.

''என்னிடம் துப்பாக்கி இல்லை. உங்கள் கையிலும் காலிலும் ரவை பாய்ந்திருக்கிறது. தவிர...'' இந்த இடத்தில் பேச்சை நிறுத்தி விஷம நகை காட்டினாள் கடல் ராணி.

''தவிர...?'' என்றான் முதல் வெள்ளையன்.

''உங்களை நீங்களே சுட்டுக்கொண்டிருக்கமாட்டீர்கள்?'' என்று ராணி சுட்டிக் காட்டினாள்.

''இதை ஊகிக்கப் பெரிய அறிவு தேவையில்லை!'' என்றான் நொண்டி.

''தேவையில்லை. அதனால் நீங்களே ஊகித்திருப்பீர்கள் என்று நினைத்தேன். நீங்கள் ஊகிக்காததால், நான் ஊகித்தேன்'' என்ற கடல் ராணி மெல்ல நகைத்தாள்.

இந்த உரையாடலைக் கேட்ட அந்தச் சோம்பேறி நகைக்கவுமில்லை; வேறு எந்தவித அக்கறையைக் காட்டவுமில்லை. எதையோ நினைத்துக்கொண்டு மெல்ல எழுந்தான், உட்கார்ந்த நிலையிலிருந்து. அவன் எழுந்ததும் நொண்டி தனது கையிலிருந்த துப்பாக்கியை நீட்ட முயன்றதைக் கண்ட சோம்பேறி, ''துப்பாக்கியை இடையில் செருகிக்கொள்ளுங்கள், உங்களைக் கொல்ல நான் விரும்பவில்லை'' என்று கூறி, எதிரி நீட்டிய துப்பாக்கியை லட்சியம் செய்யாமல் அவனருகே சென்று, அவன் கைத்துப்பாக்கியைப் பிடுங்கி அவன் பெல்ட்டில் அழுத்திச் செருகினான். பிறகு



அவன் காலடியில் உட்கார்ந்து கால் காயத்தைப் பரிசோதித்தான். அடுத்தபடி முதல் வெள்ளையனிடம் சென்று அவன் கையை நன்றாகத் திருப்பிக் காயத்தைப் பார்த்தான். கடைசியாகக் கடல் ராணியை நோக்கித் திரும்பி, ''பெண்ணே! அந்த முழங்கால் காயம் பாதகமில்லை. இந்தக் கைக்காயம் அபாயமானது. ரவை உள்ளே பாய்ந்து ரத்தக் குழாய்களில் பதிந்திருக்கிறது. உடனடியாகச் சிகிச்சை செய்யாவிட்டால் ரத்தம் வழிந்தே இவன் பிராணனை விடுவான்!'' என்று கூறிவிட்டு வெள்ளையனை நோக்கி, ''மன்னிக்க வேண்டும். உங்களைக் கொல்ல நான் விரும்பவில்லை. லேசாகக் காயப்படுத்தத்தான் முயன்றேன். குறி சிறிது தவறிவிட்டது'' என்றான்.

''குறி தவறி விட்டதா!'' வெள்ளையன் பிராண பயத்திலும் வியப்பைக் காட்டினான்.

''ஆம், நான் குறிவைத்தது துப்பாக்கிக்கு. ஆனால், ரவை உங்கள் கையில் பாய்ந்துவிட்டது. சென்ற பத்து நாட்களாகத் துப்பாக்கி பயிலாத தவறு'' என்று மிகவும் வருத்தம் தோய்ந்த குரலில் கூறிய அந்த வாலிபன், வெள்ளையனை விட்டுக் கடல் ராணியை நோக்கினான். ''உள்ளே ஏதாவது துணி இருந்தால் கொண்டுவா!'' என்று உத்தரவிட்டான்.

விநாடிக்கு விநாடி கடல் ராணியின் வியப்பு அதிகப்பட்டுக் கொண்டிருந்ததால் அவள் இருந்த இடத்தைவிட்டு அசையவும் இல்லை, பதில் கூறவும் இல்லை. அவள் பதில் கூறாமல் கற்சிலையாகி விட்டதைக் கண்ட அந்த வாலிபன்,''கடல் ராணியாம் கடல்ராணி'' என்று முணுமுணுத்துக்கொண்டு உள்ளே சென்று புத்தம் புதுச்சேலையொன்றை எடுத்து வந்து, அதன் முந்தானையை நீட்டம் நீட்டமாகக் கிழித்தான். பிறகு இரு வெள்ளையர்களையும் பார்த்து, ''நீங்கள் குடிக்கும் பழக்கம் உண்டா?'' என்று வினவினான்.

''உண்டு'' என்றான் முதல் வெள்ளையன்.

''பையில் குப்பி இருக்கிறதா?''

வாலிபன் கேள்வியுடன் அவன் பையையும் கவனித்தான். அது சற்றுப் புடைத்திருந்ததைக் கண்டு, ''ஓகோ இருக்கிறதா? நல்லது'' என்று கூறியவண்ணம் அவன் பையிலிருந்த பாட்டிலை

எடுத்து அதன் கார்க்கை நீக்கி அதிலிருந்த விஸ்கியை வெள்ளையன் கைக்காயத்தில் ஊற்றினான் சிறிது. அதன் எரிச்சல் அளித்த இம்சையால் பல்லைக் கடித்து முகத்தையும் சுளித்துக்கொண்ட வெள்ளையனை நோக்கிய வாலிபன், ''இது தற்காலிகமாக ரத்தப் பிரவாகத்தை நிறுத்தும். ரவையை அப்புறம் எடுக்கலாம்'' என்று சமாதானம் சொல்லிவிட்டு கிழித்த புடைவையின் ஒரு பகுதியால் காயத்தை நன்றாக இழுத்துக் கட்டியதன்றிக் கையை அசைத்தும் பார்த்தான். ''குட்! வெரிகுட்!'' என்று ஆங்கிலத்திலும் சொன்னான்.

அவன் ஆங்கிலம் பேசுவதைக் கேட்ட அந்த வெள்ளையனின் வியப்பு உச்சநிலைக்குச் செல்லவே அவன் ஏதோ கேட்க முயன்ற சமயத்தில் கையின் சைகையால் அவனை அடக்கி, அந்தச் சோம்பேறி, விஸ்கி பாட்டிலுடன் மிக மெதுவாக நொண்டியடித் தவனை அணுகி அவன் முழங்கால் காயத்தை விஸ்கியால் அலம்பினான். அலம்பியதும் கடல் ராணியை நோக்கித் திரும்பி, ''பெண்ணே! இப்படி வா'' என்று அழைத்தான்.

அந்த வாலிபனின் ஒவ்வொரு செய்கையையும் கவனித்துக் கொண்டிருந்த கடல்ராணி மெல்ல நடந்து அவனை அணுகினாள். ''இந்தக் கட்டைப் போட உதவி தேவை. துணியின் ஒரு பாதியை நீ பிடித்துக்கொள். நான் முழங்காலில் துணியைச் சுற்றும்போது எதிர்ப்புறமாக முழங்காலுக்குச் சிறிது மேலும் கீழுமாகச் சுற்றிவா. அப்பொழுதான் கட்டு நிற்கும்'' என்றான்.

பதிலுக்கு அவள் தலையை மட்டும் அசைத்து அவன் கொடுத்த துணியின் பகுதியைப் பிடித்துக்கொண்டாள். அவனுடன் சேர்ந்து நொண்டிக்குக் கட்டுப் போட்ட பிறகு சிறிது விலகி நின்றாள். வாலிபன் நொண்டியின் காலை இருமுறை அசைத்துப் பார்த்தான். ''இது சரியாயிருக்கிறது. இனி நீ காலை ஊன்றலாம்'' என்றும் கூறிவிட்டு முகத்தில் மகிழ்ச்சியைக் காட்டினான் முதன் முதலாக.

அடுத்து அவன் என்ன செய்ய உத்தேசிக்கிறானென்று மற்ற மூவருக்கும் புரியாததால் மூவர் கண்களும் அவன்மீதே நிலைத்திருந்தன. ஆனால், அந்த வாலிபன் அவர்களைப் பார்க்காமல் பாறைகளில் இறங்கிச் சென்று பாறைமீது மோதிக்கொண்டிருந்த அலை நீரில் கைகளை அலம்பி ரத்தக் கறைகளைப்போக்கிக்கொண்டு திரும்பினான். கைகளைத் தனது



சராயில் நன்றாகத் துடைத்துக்கொண்டு, ''ராணி... இப்படி அழைப்பது சௌகரியமாக இருக்கிறது'' என்று பேச்சைத் துவங்கி, ''இவர்களை இனி பாண்டவர் கோட்டைக்கு அழைத்துச் செல் வோம்'' என்றும் கூறினான்.

இதைக் கேட்ட ராணி பிரமை பிடித்து நின்றாள் பல விநாடிகள். ''உங்களுக்குப் பைத்தியம் ஏதுமில்லையே?'' என்று வினவினாள்.

''இல்லையென்று நினைக்கிறேன்!'' வாலிபன் பதில் நிதானமாகவும் திட்டமாகவும் வந்தது.

கடல்ராணியும் எந்தப் பதற்றத்தையும் காட்டாவிட்டாலும் சகலரையும் கவர்ந்த தனது காந்த விழிகளை அந்த வாலிபன்மீது நிலைக்க விட்டாள் சில விநாடிகள். அந்தச் சோம்பேறியும் தனது விழிகளை அவள் விழிகளுடன் கலந்தான் சுரணை ஏதுமின்றி. சுரணை இல்லாத அந்தக் கண்ணில் ஏதோ ஒரு விசித்திர சக்தி இருக்கவேண்டும். கடல் ராணியே தனது கண்களை முதலில் அகற்றினாள் அவன் முகத்திலிருந்து, அத்துடன் கேட்டாள்: ''இவர்களை அங்கே கொண்டு போனால் என்ன ஆகும் என்று தெரியுமா?'' என்று.

''என்ன ஆகும்?'' வாலிபன் கேட்டான் சகஜமாக.

''கொல்லப்படுவார்கள். பாண்டவர் கோட்டையிலும் சரி, சிந்துதுர்க்கத்திலும் சரி, இவர்களை அறியாதவர்கள் கிடையாது'' என்றாள் கடல் ராணி.

''அத்தனை பிரபலமா?''

''ஆம்.''

''பாதகமில்லை. அழைத்துச் செல்வோம். கையில் காயம் உள்ளவருக்கு உடனடியாகச் சிகிச்சை இல்லாவிட்டால் இறந்து விடுவார்.''

இதைக் கேட்ட நொண்டி, ''அதற்காக நாங்கள் இருவரும் சாகவேண்டுமா?'' என்று வினவினான்.

''நண்பனுடன் இறப்பதைவிட பாக்கியம் உலகத்தில் என்ன இருக்கிறது?'' என்ற வாலிபன், ''சரி ராணி! இவர்களை அழைத்துச் செல்வோம்!'' என்றான்.

''எப்படி அழைத்துச் செல்வது? இவர்களால் நீந்த முடியாதே!'' என்றாள் கடல்ராணி.

''படகில் அழைத்துச் செல்வோம்'' என்றான் வாலிபன்.

''படகு ஏது?'' குழப்பத்துடன் வினவினாள் கடல்ராணி.

''இருக்கிறது வா!'' என்ற வாலிபன் மூவரையும் தன்னுடன் வரும்படி சைகை செய்து மலைப்பாறைகளில் இறங்கிச் சென்றான். அடிவாரத்தில் அலை மோதிய இடத்தில் ஒரு படகு தளையில் பிணைக்கப்பட்டிருந்தது. இதைக் கண்டதும் ராணியின் விழிகள் நெருப்பைக் கக்கின. வாலிபனை நோக்கித் திரும்பினாள், மித மிஞ்சிய சீற்றத்துடன். ''இது என் படகு'' என்றும் கூறினாள் உஷ்ணம் மிதமிஞ்சிய குரலில்.

''இதை எங்கிருந்து திருடினாய்?'' ராணியின் கண்களில் நெருப்புப் பொறி பறந்தது.

''நீ கட்டி வைத்த இடத்திலிருந்து'' என்றான் அந்த வாலிபன் சர்வசாதாரணமாக.

ராணியின் கண்களிலிருந்த கோபம் சட்டென்று மறைந்தது. ''நீ யார்?'' என்று மிகுந்த சந்தேகத்துடன் வினவினாள் ராணி.

அந்த வாலிபன் சிறிது தயங்கினான். பிறகு மெள்ள உதடுகளைச் சங்கடத்துடன் அசைத்துத் தனது பெயரை உச்சரித்தான். பெயரைக் கேட்ட ராணி மட்டுமல்ல, மற்ற இருவரும்கூடப் பிரமிப்பின் உச்சகட்டத்தை அடைந்தார்கள்.

ராணியின் பிரமிப்பில் வியப்புக் கலந்திருந்தது. மற்ற இருவர் பிரமிப்பில் அச்சமும் அதிர்ச்சியும் பரவியிருந்தன. அந்த இடத்தில் அவர்கள் யாரை எதிர்பார்த்திருந்தாலும் அந்த வாலிபனை எதிர்பார்க்கவில்லை ஆதலால் தங்கள் முடிவுகாலம் நெருங்கி விட்டதை உணர்ந்து கொண்டார்கள்.

## அத்தியாயம் - 3

# கனவில் ஒரு திருப்பம்!

கடல் ராணியின் வியப்புக்கும் மற்ற இருவரின் கவலைக்கும் அச்சத்துக்கும் காரணமாயிருந்த அந்தப் பெயர் மகாராஷ்டிரத்தில் மிகப் பிரப்லமாயிருந்தும், அந்தப் பெயருக்குடையவன் அத்தனை வாலிபனாகவோ சுத்தசோம்பேறியாகவோ இருக்கமுடியும் என்பதை மூவருமே எதிர்பார்க்காததால் மூவரும் பல விநாடிகள் பிரமை பிடித்து நின்றுவிட்டார்களானாலும், மூவரில் முதலில் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொண்ட ராணி மட்டும் வின வினாள்: ''உங்கள் பெயர் என்னவென்று சொன்னீர்கள்?'' என்று.

தனது பெயரைக் கேட்டதும் அம்மூவரின் முகத்திலும் விரிந்த உணர்ச்சிகளை அரைக்கண்களாலேயே கண்ட அந்த வாலிபன் இதழ்களில் இளநகை இலேசாக விரிந்தது. ''அனந்த்... இந்திரஜித் அனந்த்'' என்று தனது பெயரின் பாதியை முதலிலும் முழுப் பெயரை இரண்டாம் முறையும் மிகுந்த சங்கோஜத்துடன் சொன்னான்.

அந்தப் பெயருக்குடையவன் புகழுக்கும் நடத்தைக்கும் சம்பந்தம் இல்லாதிருப்பதை எண்ணிப் பார்த்த கடல்ராணி, ''எந்த அனந்த் நீங்கள்? துலாஜி ஆங்கரேயின் நண்பரா?'' என்று வினவினாள்.

அனந்தின் கண்கள் சற்றே மேலெழுந்தன. ''ஆம்'' என்றான் சர்வசாதாரணமாக.

அவன் சொற்களிலோ நடத்தையிலோ எந்தவித உணர்ச்சியும் இல்லாவிடினும் இரண்டு வெள்ளையர்களின் முகங்களிலும் அச்சம் மிதமிஞ்சிக் கிடந்தது. ''இவனை நாங்கள் நம்பமாட்டோம்'' என்றான் கையில் ரவை பாய்ந்த வெள்ளையன்.

''இவன்தான் *சுந்தா ராஜாவின் புரவிப் படைக்குத் தலைமை வகித்துக் காற்று வேகத்தில் வந்தான். பிரிட்டிஷ்

* சுந்தா என்பது வட கன்னடத்தில் அரபிக் கடலையொட்டியுள்ள சமஸ்தானம். இப்பொழுது ஸோந்தா என்று அழைக்கப்படுகிறது.

படையில் பெரும்பான்மையை அழித்துவிட்டான்'' என்றான் இரண்டாவது வெள்ளையன்.

இதைக் கேட்ட ராணியின் முகம் பழையபடி தாமரையென மலர்ந்தது. ''அதைப்பற்றி நானும் கேள்விப்பட்டேன். பாரதப் போர் சரித்திரத்தில் அது நிரந்தரமான இடம் பெறும் என்று சிந்து துர்க்கத்தில் கூடப் பேசிக்கொண்டார்கள். நீங்கள் செய்தது மிகுந்த சாகசச் செயல்!'' என்ற ராணியின் குரல் மிக மதுரமாயிருத்ததது.

அவள் பாராட்டுதலையோ, வெள்ளையரின் குற்றச்சாட்டு களையோ அனந்த் ஒப்புக்கொண்டதாகத் தெரியவில்லை.

''அது அகஸ்மாத்தாக ஏற்பட்ட தவறு. அந்தப்போரில் நான் ஈடுபடவே நினைக்கவில்லை. வெள்ளைக்காரர்கள் கார்வார் பகுதியில் சில கிராமங்களைக் கொளுத்திவிட்டார்கள் என்று கேள்விப்பட்டு, விஜயதுர்க்கம் செல்லவேண்டியவன் அந்தப் பக்கம் திரும்பினேன். கடற்கரையில் பிரிட்டிஷ் கப்பல்கள் நின்றுகொண்டிருந்தன. படகுகளில் வீரர்கள் இறங்கிக் கொண் டிருந்தார்கள் சுந்தா ராஜாவின் புரவிப்படை மிகச் சிறியதா யிருந்தது. ராஜாவிடம் நானே அணுகிக் கேட்டேன் 'உங்கள் படையை நான் நடத்தட்டுமா?' என்று. ராஜா சம்மதித்தார். ஆனால், எனக்கு பிரிட்டிஷார் அதிக வேலை வைக்கவில்லை. பாதிப் பேர் குடித்து மயக்கமாயிருந்தார்கள். அவர்கள் தலைவன் குடித்திருந்ததால் மயக்கம் போட்டுக் கடலில் விழுந்துவிட்டான். படையெடுக்க வந்த படகுகள் கவிழ்ந்தன. தரையில் ஓடிவந்த சிலரைத் தாக்கவேண்டியதாயிற்று. அவர்கள் தலைவனைக் கடலிலிருந்து நானே தூக்கித் தரையில் போட்டேன். அதைப் போர் என்று சொல்லமுடியாது'' என்று மெள்ள விவரித்த அனந்த் அதற்குமேல் கதையை வளர்த்த இஷ்டப்படாவிட்டாலும் கையில் ரவை பாய்ந்த வெள்ளைக்காரன் விடவில்லை.

''இவர் சொல்வது போல் அந்த வெற்றி அகஸ்மாத்தாக ஏற்பட்டதல்ல. பிரிட்டிஷ் படைகள் தரையில் இறங்கும்வரை வாளாவிருந்துவிட்டு, பீரங்கிகளையும், எங்கள் துப்பாக்கிகளையும் அலட்சியம் செய்து திடீரெனப் பாய்ந்து வருவது அத்தனை சுலபமல்ல. அன்று நடந்தது சம்திங் பிரில்லியண்ட், எக்ஸ்ட்ரார் டினரி'' என்று மகாராஷ்டிரத்திலும் ஆங்கிலத்திலும் கலந்து பேசினான்.



இன்னொருவனும் அதை ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான். இருவர் முகத்திலும் ஈயாடவில்லை.

அப்பொழுது அனந்த் முகத்தில் சிறிது வெறுப்பைக் காட்டினான். ''காப்டன் ஸ்டாண்டன், லெப்டினண்ட் ஸ்மித் ... ஐ ஆம் ஒப்ளைஜ்ட் டு யூ ஃபார் த காம்ப்ளிமெண்ட்'' என்று கூறிவிட்டுக் கடல் ராணியை நோக்கி, ''நாம் புறப்படுவோமா?'' என்று வினவினான்.

கடல் ராணி இரு வெள்ளைக்காரர்களையும் பார்த்தாள். ''நான் இங்கிருந்து நகர மாட்டேன். ஐ வோண்ட் ஸ்டர் ஒன் இஞ்ச்'' என்றான் காப்டன் ஸ்டாண்டன்.

''என் கருத்தும் அதுதான்!'' என்றான் ஸ்மித்

''ஏன்?'' என்று வினவினான் அனந்த்.

''பாண்டவர் கோட்டையில் நாங்கள் தூக்கிலிடப்படுவோம். எங்கள் தலைகள் ஈட்டியில் குத்தப்பட்டுக் கோட்டை மீது நடப் படும். எங்கள் நண்பர்களுக்கு இந்தக் கதிதான் ஏற்பட்டது கார்வாரில்!'' என்று கூறிய ஸ்டாண்டன் குரலில் மிதமிஞ்சிய கிலி ஒலித்தது.

அனந்தின் இதழ்களில் புன்முறுவல் மலர்ந்தது. ''உங்களுக்கு எந்தவிதத் தீங்கும் வராதபடி நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று உறுதி கூறினான் வாலிபனான அனந்த்.

''கடல்ராணியைப் பிடிக்க மூன்று முறை முயன்று இன்று அவளையும் பிடிக்காமல் உன் கையிலும் அகப்பட்டுக் கொண் டோம். சிந்து துர்க்கத்திலும் பாண்டவர் கோட்டையிலும் இவளை எல்லோரும் தங்களைக் காக்கும் தெய்வமாக நினைக்கிறார்கள். ஆகவே இந்தக் கோட்டையில் சிக்கினாலும் அங்கு சிக்கினாலும் எங்கள் கதி அதோகதிதான்!'' என்றான் ஸ்டாண்டன்.

''கடல்ராணி உங்களுக்கு அபயம் அளிக்கிறாள்'' என்று காப்டனுக்குப் பதில் சொன்ன அனந்த், ராணியை நோக்கித் திரும்பி, ''என்ன ராணி?'' என்று வினவினான்.

அவன் கேள்வி கேட்ட முறையிலும் குரலிலும் பார்வை யிலும் ஏதோ ஒரு வசீகர சக்தி இருந்திருக்க வேண்டும். ''ஆம்,

உங்களுக்கு எந்தத் தீங்கும் வராது!'' என்று கடல் ராணி பதில் கூறினாளாயினும், 'இந்த வெள்ளையரை, அதுவும் என்னைக் கடத்திச் செல்லத் திருட்டுத்தனமாக வந்த அயோக்கியர்களை இவர் ஏன் காப்பாற்ற முயலுகிறார்?' என்று தனக்குள் கேள்வியொன்றையும் எழுப்பிக் கொண்டாள்.

அதற்குப் பிறகு அனந்த் தனது சோம்பேறித்தனத்தை உதறித் துரிதத்தைக் காட்டலானான். படகில் ஏறும்படி இரு வெள்ளையருக்கும் உத்தரவிட்டு ராணியை அழைத்துக் கொண்டு படகில் ஏறித் துடுப்புகளைத் தானே துழாவலானான்.

அப்படித் துழாவியவன் சற்றுப் பின்னால் நகர்ந்து கொண்டிருந்த சிந்து துர்க்கத்தையும் முன்னால் புலப்பட்ட பாண்டவகட் என்றும் பத்மனாபகட் என்றும் அழைக்கப்பட்ட பாண்டவர் கோட்டையையும் கண்டு மெய்மறந்தான். அந்த நிலையில் சொன்னான்: ''ராணி! நீ பெரும் பாக்கியம் செய்திருக்க வேண்டும்!''. என்று.

அந்த வாலிபனின் கண்கள் சென்ற திசைகளை ராணியின் அழகிய விழிகளும் கவனித்ததால், அவன் மனத்திலோடிய எண்ணங்களை அவள் புரிந்து கொண்டிருந்தாலும் புரியாதது போலவே கேட்டாள். ''என்ன பாக்கியத்தைக் குறிப்பிடுகிறீர்கள்?''. என்று.

அனந்தின் கண்களில் கனவு விரிந்து கிடந்தது. கதிரவனின் கிரணங்கள் அலைகள்மீது தாவி அவற்றைக் கண்ணாடிகளாக அடித்துவிட்ட இந்திரஜாலத்தையும் அவை கண் சிமிட்டிச் சிமிட்டி ராணியின் அழகைப் பிரதிபலிக்க முற்பட்ட விந்தையையும், சிந்து துர்க்கத்தின் பெரும்கோட்டையின் வட்டமான பீரங்கி நிலையங்களின் கம்பீரத்தையும், பாண்டவ கட்டின் பச்சைத் தோப்புகளையும், வெள்ளி போன்ற மணல் கரையையும் கண்டு அவற்றில் மனத்தைப் பறிகொடுத்துக் கொண்டிருந்தானாதலால் அவன் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. கடைசியாக மிக மெதுவாகப் பதில் சொன்னபோது அவனுக்கு அக்கோட்டை களைப்பற்றி இருந்த அறிவு வியக்கத் தக்கதாயிருந்தது!

''இந்தக் கோட்டைகளின் ராணியாயிருக்கும் பாக்கியத்தைச் சொன்னேன்!'' என்ற அனந்த் மேலும் சொன்னான்: ''ராணி! இந்த நாட்டில் ராமாயணம் இன்னும் மடியவில்லை''. என்று.



அவன் சொன்னதன் பொருள் அவளுக்குப் புரிந்துதானிருந்தது. என்றாலும் அவன் வாயாலேயே அதை வரவழைக்கக் கருதி ''ராமாயணமா?'' என்று வினவினாள் வியப்புப் பெரிதும் விரிந்த குரலில்.

அனந்தின் கரங்கள் படகை மெள்ளத் துழாவின. கண்கள் அரைவாசி மூடிக் கிடந்தன. சொற்கள் நிதானமாக உதிர்ந்தன: ''ராணி! கடல்மீது அணை கட்ட ராமபிரான் கடலின் முன்பு சரணாகதி செய்தான். அதை நாம் பார்த்ததில்லை. ஆனால், சத்ரபதி சிவாஜி இந்தக் கோட்டைகளுக்காகக் கடலரசன் முன்பு விரதமிருந்ததை அறிவோம். விரதத்தின் பலனாக இந்தத் தீவுகளைப் பெற்றார் மகாராஜா. ஜன்ஜீராவைப் பிடிக்கத்தான் அவர் அதோ தெரியும் ஸஹ்யாத்ரியில் ஏழு நாள் உபவாசம் இருந்தார். ஏழாவது நாள் கடலரசன் அவர் கனவில் தோன்றி 'நான் இங்கு உனக்கு இடம் தருகிறேன். ஜன்ஜீராவை விடப் பலமான கோட்டையைக் கட்டிக் கொள்'. என்று வரமளித்தான். *மறுநாள் காலை மகாராஜா கண்விழித்தார். கடல் பின்வாங்கியிருந்தது. கடல் மட்டத்திலிருந்து இந்த மலைத்தீவுகள் மூன்றும் கடலுக்கு மேலே எழுந்திருந்தன. கடல் சூழ்ந்த இந்த மலைத்தீவுகளில் கோட்டைகளைக் கட்டினார் சத்ரபதி. இது புராணமல்ல, சரித்திரம் ராணி...''-இந்த இடத்தில் அனந்த் சிறிது பேச்சை நிறுத்தினான் உணாச்சி மிகுதியால்.

ராணியின் கண்களிலும் உணர்ச்சி மிதமிஞ்சிக் கிடந்தது. ''மேலே சொல்லுங்கள்!''. என்ற அவள் சொற்களும் குழைந்து கிடந்தன.

அனந்த் மேலும் சொன்னான் ''அது மட்டுமல்ல ராணி! 'நீயாக இந்தக் கோட்டையைப் புறக்கணித்தாலொழிய இதை எந்த எதிரியும் பிடிக்க முடியாது. அப்படி வரும் எதிரியை நானே அழித்து விடுவேன்' என்றும் கடலரசன் கனவில் உறுதி கூறியிருந்தான் சத்ரபதிக்கு. இன்னும் இது உன் கையில் இருப்பதால் கோட்டையின் வரலாறு கட்டுக்கதையல்ல, புராணமும் பொய்யல்ல, அதுவும் ஒரு காலத்தின் சரித்திரந்தான் என்று புலனாகிறதல்லவா? '' -இங்கு சிறிது நிறுத்தினான் அனந்த்.

* From the 'History of Siva Chatrapati' by Surendranath Sen

கடல் ராணி கேட்டாள், ''இந்தக் கோட்டைகளின் சரித்திரம் பூராவும் உங்களுக்குத் தெரியும் போலிருக்கிறது!.'' என்று.

''தெரியும். நான் ஒரு சரித்திர மாணவன்'' என்று மிக மெதுவாகப் பதில் சொன்ன அனந்த், ''ஆம் ராணி! இந்தக் கோட்டைகளைப் பற்றிப் பல விஷயங்கள் எனக்குத் தெரியும். சிந்து துர்க்கத்தைக் கட்டும்போது சிவாஜி மகாராஜா தொழிலாளிகளோடு தானும் ஒரு தொழிலாளியாகக் கோட்டைச் சுவர்களுக்குக் கல்லெடுத்தும் சேறு குழைத்தும் வேலை செய்தார் என்பது தெரியும். இந்தக் கோட்டை மதில்கள் முப்பது அடி உயரமென்பதும் பன்னிரண்டு அடி அகலமென்பதும் தெரியும். இதன் வாயில் எதிரி மரக்கலங்களுக்குத் தெரியக்கூடாது என்பதற்காக ஜன்ஜிராவைப் போல் வடமேற்கில் வைக்காமல் வடகிழக்கில் ஸஹ்யாத்ரியை நோக்கும்படி அமைத்திருக்கிறார் என்பதும் தெரியும்!'' என்று விளக்கினான்.

அதுவரையில் படகில் அவளுக்கு முதுகைக் காட்டிக் கொண்டு உட்கார்ந்த வண்ணம் கேள்விகளை எழுப்பிக் கொண்டிருந்த கடல்ராணி, தலையைத் திருப்பி அவனைப் பார்த்தாள். ஆனால், அவன் அவளைப் பார்க்கவில்லை. அவன் தலையும் பின்புறம் திரும்பிச் சிந்து துர்க்கத்தின் வாயிலையே கவனித்துக் கொண்டிருந்தன. கைகள் மட்டும் யந்திரங்களைப் போல் துடுப்புக்களை வலித்துப் படகைப் பாண்டவர் கோட்டைக்குச் செலுத்திக் கொண்டிருந்தன. ''அங்கு என்ன பார்க்கிறீர்கள்?'' என்று ராணி கேட்டாள். அவள் குரலில் என்ன காரணத்தினாலோ எரிச்சல் தெரிந்தது.

அந்த எரிச்சல் குரல்தான் அந்த வாலிபனின் தலையைத் திருப்பியிருக்க வேண்டும். அவன் கண்களில் அப்பொழுதும் கனவே விரிந்து கிடந்தது. ''மாருதி கோவிலைப் பார்க்கிறேன்!'' என்று அவன் சொன்னதும் மேலும் பிரமிப்பை அடைந்த ராணி, ''இங்கிருந்து அது தெரியுமா?'' என்று வினவினாள்.

''மனக்கண்ணில் தெரிகிறது'' என்றான் அனந்த்.

''வேறு என்ன தெரிகிறது?''

''பவானி கோவில், மஹாதேவ் மந்திரம், மகாபுருஷர் கோவில்கள் தெரிகின்றன... அவை மட்டுமல்ல, மாலுமி வேஷம் போட்ட சிவாஜி மகாராஜாவும் தெரிகிறார்!''



இதைச் சொன்ன அவன் கண்களில் மகிழ்ச்சிச் சாயை படர்ந்தது. அதை ராணியும் கவனித்தாள். ''இத்தனையும் கண்டீர்களா?'' என்றாள் மெதுவாக.

''ஆம்'' என்றான் அவன்.

''என்னைக் காணவில்லை?'' என்று கேட்டு அவள் நகைத்தாள்.

அவன் சற்று ஏறெடுத்து அவளை நோக்கினான். ''என் கண்களிலிருந்து எதுவும், யாரும் தப்புவதில்லை'' என்று கூறினான். அதைச் சொன்னபோது அவன் கண்களில் மறுபடியும் அந்தப் பழைய தூக்கம் படர்ந்தது.

''அப்படியா?'' என்று வினவினாள் அவள்.

''ஆம் ராணி! உதாரணமாகப் பின்னால் வரும் நான்கு படகுகளைக் கூட நான் காணத் தவறவில்லை!'' என்று கூறித் துடுப்புகளை வலிப்பதை நிறுத்தினான்.

''ஏன் நிறுத்திவிட்டீர்கள்?'' என்று அவள் வினவினாள்.

''அந்தப் படகுகள் அருகில் வரட்டும்!'' என்றான் அனந்த்.

படகுகள் வெகுவேகமாக வந்தன, ராணியின் படகை நோக்கி படகு நின்றதைக் கண்டதும் வந்தவர்கள் உற்சாகம் மிதமிஞ்சிப் பெருகியிருக்கவேண்டும். ஒன்றாக வந்த படகுகள் நாலு திக்கிலும் பிரிந்து ராணியின் படகைச் சூழ்ந்துகொண்டன. அதிலிருந்த வெள்ளையர் துப்பாக்கிகளின் வாய்கள் அனைத்தும் ராணியையும் அனந்தையும் நோக்கிப் பயங்கரமாக விழித்தன. ராணியின் படகில் உட்கார்ந்திருந்த இரு வெள்ளையர்கூடச் சற்று நிமிர்ந்து உட்கார்ந்தார்கள். தங்களுக்கு விடிமோட்சம் ஏற்பட்டு விட்டது என்ற காரணத்தால், எந்த நிலையிலும் நிதானம் இழக்காத ராணியின் கண்கள் கூடச் சீற்றத்தைக் கக்கின - அந்தத் துப்பாக்கிகளைச் சுட்டுவிடுவன போல.

ஆனால், அனந்த் இருந்த நிலையைவிட்டுச் சிறிதும் அசையவில்லை. ராணிக்கு அப்பாலிருந்த இரு வெள்ளையரையும் நோக்கி, ''காப்டன்! லெப்டினண்ட்! அந்தப் படகுகளை விலகி நிற்கச் சொல்லுங்கள்'' என்று கூறினான்.

''தே ஆர் நாட் ஸ்டுப்பிட்'' என்றான் காப்டன் ஸ்டாண்டன்.

''எஸ். தே ஆர்!'' என்ற அனந்த், ''இஃப் தே டோண்ட் லீவ் இம்மீடியட்லி ஐ வில் மேக் மின்ஸ் மீட் ஆஃப் யூ போத்( அவர்கள் உடனடியாகப் போகாவிட்டால் உங்கள் இருவரையும் சுட்டுப் பொசுக்கி மாமிசப் பிண்டமாக உருட்டிவிடுவேன்)'' என்றான் சர்வசாதாரணமாக.

காப்டனும் லெப்டினண்டும் பேசவில்லை. எதிரி படகி லிருந்த ஒருவன் பேசினான்: ''எங்களுக்கு வேண்டியவன் இந்திரஜித் அனந்த், ஒருவன்தான்! அவனை அனுப்பி விட்டால் நாங்கள் போய்விடுகிறோம்'' என்று கூறி, அவன் தனது கையி லிருந்த துப்பாக்கியை அனந்துக்குக் குறி வைத்தான்.

''அப்படியானால் நாங்கள் வேண்டாமா?'' என்றான் காப்டன் ஸ்டாண்டன், தன்னையும் லெப்டினண்ட் ஸ்மித்தையும் சுட்டிக் காட்டி.

''வேண்டாம்!'' குறி வைத்தவன் திட்டமாகக் கூறினான்.

''ஏன்?'' ஸ்மித்தின் கேள்வி உக்கிரத்துடன் எழுந்தது.

''யூ ஆர் போத் இடியட்ஸ்'' என்ற அந்த வெள்ளையன், ''இவன் எங்களை ஒழிக்க வந்த யமன். அதற்கு முன்பு அவனை நாங்கள் ஒழித்துவிடத் தீர்மானிக்கிறோம்'' என்றான்.

இதைக் கேட்ட கடல்ராணி வெகுண்டாள். அனந்த் சிறிதும் வெகுளவில்லை. ''ஸௌண்ட்ஸ் ரீஸனபிள்(அவன் சொல்வது நியாயமாகத்தான் படுகிறது)'' என்று கூறிக்கொண்டு மெதுவாக எழுந்து நின்றான் படகின் நட்ட நடுவில். அதுவரை சிந்து துர்க்கத்தைப் பற்றி அவன் கண்ட கனவு திசைமாறி விபரீதத்தில் வந்து முடிந்துவிட்டதைக் கண்ட ராணியும் அவனுடன் எழுந்து நின்றாள். ஆனால், அனந்தின் இதழ்களில் ஒரு பயங்கரப் புன்னகை விரியலாயிற்று.

அத்தியாயம் - 4

# மரக்கால் மனிதன்!

அப்பொழுது சிந்து துர்க்கக் கடல் பகுதியிலிருந்து காலைப் பனி அநேகமாக விலகிவிட்டதால் ஒளிவிட்ட சூர்யரச்மிகள் இந்திரஜித் அனந்தின் முகத்துக்குப் புதுச்சோபையை அளித்திருந்த தன் விளைவாக அவன் முகத்தில் விரிந்த பயங்கரப் புன்முறுவலை அதிக பயங்கரமாக அடித்திருந்ததை அவனுடன் எழுந்திருந்த கடல் ராணி கவனிக்கவே செய்தாள். அத்தனை அபாயத்திலும் சிறிதும் சலனமடையாத அவன் உறக்கக் கண்கள், பாதி திறந்த மாதிரி இருந் தாலும், அந்தத் திறந்த பாதியும் கதிரவன் கிரணங்களில் மிகப் பயங் கரமாகப் பளிச்சிட்டதையும் ராணியின் அழகிய விழிகள் கண்டன.

அவன் எதற்காக எழுந்து நின்றான், எதற்காக எந்தச் செய லிலும் ஈடுபடாமல் நடுக்கடலில் நடுப்படகில் குத்துக் கல் மாதிரி நிற்கிறான் என்பதை ராணியால் அறியமுடியவில்லை ஆகையால், தான் ஏதாவது செயல்பட முடியுமா? என்பதை அறியச் சுற்று முற்றும் நோக்கினாள். அவள் கண்கள் சுழன்றதை எதிரிப் படகில் இருந்தவனும் கவனித்திருக்கவேண்டும்.

''ராணி! உன்னையும் நாங்கள் அறிவோம். உனக்கு எந்தவிதத் தீங்கும் செய்ய நாங்கள் விரும்பவில்லை. ஆனால், இந்திரஜித் அனந்தைக் காப்பாற்ற நீ எந்தவிதமான முயற்சி எடுத்தாலும் பெண்ணான உன்னைச் சுட்டுப் பொசுக்கவும் நாங்கள் தயங்கமாட்டோம்'' என்று அவன் அறிவித்தான், கையிலிருந்த துப்பாக்கியின் குறியை அனந்தின் முகத்திலிருந்து இம்மிகூட அகற்றாமலே.

அதுவரை சாந்தமாயிருந்த ராணியின் அழகிய விழிகளில் சினம் துளிர்த்தது. ''அத்தனை துணிவு உண்டா உனக்கு?'' என்று சீற்றம் நிரம்பிய குரலில் வினவினாள் ராணி.

இந்திரஜித் அனந்த் ராணியை நோக்கி மெள்ள முகத்தைத் திருப்பித் தனது கண்களை அகலவிரித்து அவளைப் பார்த்தான். ''ராணி! இந்தத் தலைமுறையின் பெரிய கடல்வீரனைப் பார்க்கிறாய் நீ முதன்முதலாக. ஆகையால்தான் அவன் துணிவைப் பற்றிச் சந்தேகப்படுகிறாய். இவன் எதையும் சாதிக்க வல்லவன், எதையும் செய்யக் கூடியவன். ஆனால், பெண்ணான உன்னைக் கொன்று விடுவதாகக் கூறுவதை மட்டும் நம்பாதே. எட்வர்ட் இங்க்லண்ட் பெண்களையும் குழந்தைகளையும் நிராயுத பாணிகளையும் தொட்டது கூடக் கிடையாது. இவன், காப்டன் டெய்லரைப் போன்றவன் அல்ல'' என்றும் சொன்னான். அவன் சொற்களில் எதிரியைப் பற்றிய மரியாதை நிரம்பிக் கிடந்தது.

ராணி ஒரு விநாடி தன் கமலவிழிகளை இந்திரஜித் அனந்தின் கண்களோடு கலக்கவிட்டாள். பிறகு பார்வையை எதிரிவீரன் மீது திருப்பினாள்.

''யூ ஆர் இங்க்லண்ட்!'' என்று ஆங்கிலத்தில் வினவினாள் மிதமிஞ்சிய வியப்பு குரலில் நிரம்பி வழிய.

மடகாஸ்கரில் தளம் அமைத்துக்கொண்டு அரபிக் கடலை ஆட்டிப்படைத்த கடற்கொள்ளைக்காரனான காப்டன் இங்க்லண்ட் துப்பாக்கியைத் தாழ்த்தாமல், தலையை மட்டும் ஒரு பக்கம் ஒருக்களித்து, ''அட் யுவர் சர்விஸ் மிஸ்'' என்றான் , ஏதோ பிரிட்டிஷ் சாம் ராஜ்யத்தால் 'ஸர்' பட்டம் பெற்ற கண்ணியமான கனவானைப் போல்.

ராணி மேலும் பேச்சை வளர்த்த முற்பட்டு, ''காப்டன்! ஐ ஹாவ் ஹேர்ட் ஆஃப் யூ அண்ட் யுவர் ஃபேமஸ் எக்ஸ்ப்ளாயிட்ஸ் (காப்டன், நான் உங்களைப் பற்றியும் உங்களுடைய மகோன்னத சாதனைகளைப் பற்றியும் கேள்விப்பட்டிருக்கிறேன்)'' என்று கூறினாள். ''எஸ். ஐ ஹாவ் ஹேர்ட் ஆப் காப்டன் டெய்லர் டூ. ஹி இஸ் எ வெரி க்ரூயல் மான்( நான காப்டன் டெய்லரைப் பற்றியும் கேள்விப்பட்டிருக்கிறேன். அவன் மிகக்கொடிய மனிதன்.)'' என்றும் தன் கருத்தைச் சந்தேகத்துக்கு இடமின்றித் தெரிவித்தாள்.

காப்டன் இங்க்லண்டின் உதடுகளில் புன்னகை விரிந்தது. அவன் ஆங்கிலத்தில் பேசுவதை விட்டு மகாராஷ்டிர மொழியிலேயே பேச ஆரம்பித்தான்: ''ராணி! எங்களைப் பற்றி நீ அறிந்திருப்பதைப் பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். உன் சாதனைகளைப் பற்றியும் நான் பல சொல்லமுடியும். ஆனால், நான் பாராட்டுகளைப் பெறவோ திருப்பவோ வரவில்லை. என் எதிரியைப் பிடிக்க வந்திருக்கிறேன். முடிந்தால் உயிருடன் அழைத்துப் போகிறேன். இல்லாவிட்டால்...'' என்ற அந்தக் கொள்ளைக்காரன், வார்த்தைகளை முடிப்பதற்குப் பதிலாகத் தனது துப்பாக்கியின் குதிரையைக் 'கிளிக்' என்று சத்தப்படுத்தினான். அத்துடன் அனந்தை நோக்கிக் கேட்டான்: ''உயிருடன் வருகிறாயா' அல்லது உன்னைப் பிணமாகத்தான் தூக்கிச் செல்லவேண்டுமா?'' என்று,



அனந்தின் புன்முறுவல் அதிகமாக விரிந்தது அவன் வதனத்தில். ''காப்டன்! எத்தனை நாளாக உனக்குப் பிணம் தூக்கும் வேலை வந்தது?'' என்று கேட்டான். அத்துடன் தொடர்ந்து, ''காப்டன் இங்க்லண்ட்! நிராயுதபாணிகளைச் சுட்டு உனக்குப் பழக்கம் கிடையாது. அப்படிப் பழக்கம் இருந்திருந்தால் உன்னைப் பிடிக்க வந்த காப்டன் மக்ரேயைக் கொன்றிருக்கலாம் அல்லது கொல்ல முயன்ற டெய்லரை அனுமதித்திருக்கலாம். இரண்டையும் ஏன் செய்யவில்லை?'' என்று வினவினான்.

இதைக் கேட்ட காப்டன் இங்க்லண்ட் முகத்தில் அதுவரை காணப்படாத பிரமிப்பு விரிந்தது. ''வாட் டூ யூ நோ அபௌட் மக்ரே? (மக்ரேயைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?)...'' இப்படிப் பேசிய இங்க்லண்ட் அதிகமாகப் பேசிவிட்டதை உணர்ந்து சட்டென்று வாசகத்தை முடிக்காமல் நிறுத்தினான்.

காப்டன் இங்க்லண்டின் பலவீனத்தைத் தான் தொட்டு விட்டதை உணர்ந்த அனந்த் சொன்னான்: ''காஸண்ட்ரா கப்பலைப் பற்றியும் தெரியும்; அதில் நடந்த விவரங்களும் தெரியும். என்னுடன் வந்தால் உங்கள் இதய நண்பனைக் காட்டுகிறேன்'!''

காப்டன் இங்க்லண்ட் அதுவரை காட்டிய நிதானத்தைக் காற்றில் பறக்கவிட்டான்: ''உன்னுடன் வருவதா! அதைவிட நானாகவே என்னைச் சுட்டுக்கொள்ளலாமே'' என்றான் உஷ்ணம் அதிகமாகத் தொனித்த குரலில்.

''தற்கொலையை ஹிந்துமதம் அனுமதிக்கவில்லை!'' என்றான் அனந்த்.

''நான் ஹிந்து அல்ல'' என்றான் இங்க்லண்ட்.

''அதற்காகத் தற்கொலை அவசியம் இல்லை.''

''ஏன்?''

''ஏனென்றால்....''

''சொல்.''

''நான் சொல்வதைவிட நீ பார்ப்பது நல்லது'' என்று சொன்ன இந்திரஜித் அனந்தின் குரலில் ஒரு விபரீத ஒலி இருந்ததைக் கவனித்த காப்டன் இங்க்லண்ட், இந்தத் தர்க்கத்தின் ஊடே இன்னொன்றை யும் கவனித்தான். இந்தத் தர்க்கத்தின் ஊடே, காஸண்ட்ராவைப் பற்றிச் சொன்ன விவரங்களால் தான் அயர்ந்துவிட்ட ஒரு விநாடியில் அனந்தின் இடதுகை சரேலெனச் சரிந்து அவன் கச்சையில் செருகப்பட்டிருந்த கைத்துப்பாக்கிகளில் ஒன்றைச் சற்றே நிமிர்த்திவிட்டதையும், அப்படி நிமிர்த்தப்பட்ட துப்பாக்கி தன் வயிற்றை நோக்குவதையும் கண்ட இங்க்லண்ட், கண் ணிமைக்கும் நேரத்தில் நிலைமை தலைகிழாக மாறிவிட்டதை உணர்ந்தான். அதை உணர்ந்தும் முகத்தில் சிறிதளவு அதிர்ச்சியையோ அச்சத்தையோ காட்டாமல், ''வாட் டூ யூ ப்ரபோஸ் டு( என்ன செய்ய உத்தேசிக்கிறாய்?)'' என்று மட்டும் வினவினான்.

இந்திரஜித் அனந்தின் முகத்தில் பழைய சோம்பேறிக் களை விரிந்தது. ''காப்டன் இங்க்லண்ட்! இப்பொழுது உன்னை நான் சுட்டுவிடமுடியும்! ஆனால், நீ இறக்கு முன்பு என்னையும் சுட்டு விட்டு இறக்கமுடியும். இருவரும் சாவதால் யாருக்கும் பய னில்லை. இருவரும் பிழைப்பதால் பயன் உண்டு'' என்று உறுதி நிரம்பிய குரலில் கூறிய அனந்த், ''காப்டன் ட்ராப் யுவர் கன். லெட் தீஸ் கோ பாக் டு யுவர் ஷிப்(காப்டன்! உன் துப்பாக்கியைக் கீழே போடு. இவை உன் கப்பலுக்குத் திரும்பிச் செல்லட்டும்)'' என்றும் சொல்லி மற்ற எதிரிப் படகுகளைக் காட்டினான்.

காப்டன் இங்க்லண்ட் துப்பாக்கியைக் கீழே போடவில்லை, தனது மற்ற வீரர்களையும் போடச் சொல்லவில்லை. ஆனால், மற்ற மூன்று படகுகளையும் திரும்பிச் செல்லுமாறு சைகை காட்டினான். அவை திரும்பிச் சென்றதும், ''ஆல் ரைட் அனந்த்! ஐ வில் கம் வித்



யூ. லெட் யுவர் போட் ப்ரொஸீட் மைன்(சரி அனந்த் வருகிறேன். ஆனால், உன் படகு என் படகுக்கு முன்னால் செல்லட்டும்)'' என்றான்.

அவன் எண்ணத்தை அனந்த் மட்டுமின்றி ராணியும் உணர்ந்தாள். படகிலிருந்த ஸ்டாண்டன், ஸ்மித் இருவரும் கூட உணர்ந்து கொண்டார்கள். தங்கள் படகு முன் சென்றால் பின்னால் வரும் படகிலுள்ள இங்க்லண்ட் மற்றும் மூவரும் தங்கள் முதுகுக்குத் துப்பாக்கிகளைக் குறி வைத்து வருவார்கள் என்பதை யும், ஏதாவது மோசடி நடந்தால் உடனடியாகத் தாங்கள் கொல்லப் படுவது நிச்சயம் என்பதையும் புரிந்து கொண்டாலும் பாண்டவர் கோட்டைக்குச் சென்றதும் அங்குள்ள பீரங்கிகள் இங்க்லண்டின் மீது திருப்பப்பட்டால், அவன் கதி என்னவென்பதையும் எண்ணிப் பார்த்தார்கள். விளைவு அவர்களுக்குப் புரிந்துதான் இருந்தது. அவர்களுக்கு மட்டுமின்றி இங்க்லண்டின் படகிலிருந்த வெள்ளை யருக்கும் புரிந்ததால் அவர்களில் ஒருவன் இங்க்லண்டைக் கேட்டான்: ''எதிரே தென்படும் கோட்டையில் பீரங்கிகள் இருக்குமே?'' என்று.

''இருக்கும்!'' அலட்சியமாகப் பதில் வந்தது இங்க்லண்டிட மிருந்து.

''பீரங்கிகள் இயங்கினால்...?'' என்று வினவினான் இன் னொரு வெள்ளையன்.

''தே ஒண்ட்!'' இங்க்லண்டின் பதில் திட்டமாக இருந்தது.

''யூ பிலீவ் திஸ் அனந்த்? (இந்த அனந்தை நம்புகிறீர்களா?)''

''எஸ்.''

''டூ வாட் எக்ஸ்டண்ட் யூ கான் பிலீவ் ஹிம்? (எந்த அளவுக்கு நம்பமுடியும்?)''

''எனி எக்ஸ்டண்ட்(எந்த அளவுக்கும் நம்ப முடியும்)'' என்ற இங்க்லண்ட், ''டோண்ட் ஆஸ்க் ஸில்லி கொஸ்சன்ஸ். ஃபாலோ த போட்( முட்டாள்தனமாகக் கேள்வி கேட்காதீர்கள். அந்தப் படகைத் தொடர்ந்து செல்லுங்கள்)'' என்று உத்தரவும் இட ...

இரண்டு படகுகளும் ஒன்றன் பின்னால் ஒன்றைத் தொடர்ந்து பாண்டவர் கோட்டையை நோக்கிச் சென்றன.

சிந்து துர்க்கம், பாண்டவர் கோட்டை ஆகிய இரண்டு கோட்டைத் தீவுகளுக்கும் இடையே அரைமைல் தூரம் இருந்ததால் படகுகள் இரண்டும் பாண்டவர் கோட்டையின் கரையை அடையச் சுமார் இரண்டு நாழிகைக்கு மேல் பிடித்ததன் விளைவாகக் கரையின் ஓரத்துக்குப் பல வீரர்கள் கோட்டையிலிருந்து ஓடிவந்து அப்படகுகளை எதிர்கொள்ளத் தயாராய் நின்று கொண்டிருந் தார்கள். முதலில் தனது படகை மணலில் செலுத்தித் தரையில் குதித்த அனந்த் ராணியையும் இறங்கச் சொல்லி, ''ராணி! உனது வீரர்களை விலகி நிற்கச் சொல். இந்த எச்சரிக்கைக்கோ எதிர்ப் புக்கோ அவசியமில்லை'' என்றான்.

ராணி கடல்வழி நெடுகத் தீவிர சிந்தனையில் மூழ்கியிருந்தாளாகையால் வீரர்களை விலகி நிற்கச் சைகை காட்டவே, வீரர்கள் படகுத் துறையிலிருந்து விலகிக் கோட்டைப் படகுகள் பிணைக்கப்பட்டிருந்த தளைகளை நோக்கிச் சென்றார்கள். அவர்கள் விலகியதும் அனந்த் சொன்னான்: ''ராணி! காப்டன் ஸ்டாண்ட னையும் ஸ்மித்தையும் காவலில் வை. ஸ்டாண்டனின் கையிலிருந்து ரவையை எடுக்க ஏற்பாடு செய். நான் இங்லண்டை அழைத்து வருகிறேன். அவன் என்னுடனேயே தங்குவான்'' என்று.

ராணி அவன் மீது மீண்டும் தன்விழிகளை நாட்டினாள். அவள் புருவங்கள் இரண்டும் கேள்வி கேட்கும் பாவனையில் சற்றே உயர்ந்தன. ''ஆம் ராணி! நேற்றிரவு நான் இங்குதான் தங்கினேன். கோட்டையில் நுழைந்ததும் இடது புறமிருக்கும் மாலுமிகளின் பெரிய விடுதியில் ஓர் அறையை எனக்கு ஒழித்து விட்டார்கள். அதில் இப்பொழுதுகூட எனது நண்பன் இருக்கிறான்'' என்று விளக்கினான்.

அது விளக்கமே அல்லவென்பதையும், இரண்டு துர்க்கங்களுக்கும் அதிபதியான தனக்குத் தெரியாமலேயே சென்ற இரவில் பல நிகழ்ச்சிகள் பாண்டவ கட்டில் ஏற்பட்டிருப்பதையும் உணர்ந்தாளானாலும், அதைப்பற்றி எந்தக் கேள்வியும் கேட்காமல்



எட்ட நின்றிருந்த தனது வீரர்களில் இருவரை அழைத்து, ''இந்த இருவரையும் அழைத்துச் சென்று இவர்கள் காயங்களுக்குச் சிகிச்சை செய்யுங்கள்'' என்று உத்தரவிட்டு, எதிரே தெரிந்த மணற் பாங்கி லிருந்த தென்னஞ் சோலையை நோக்கி நடந்தாள் கடல் ராணி.

அவள் நடையைப் பார்த்துக்கொண்டு அதில் லயித்துவிட்ட இந்திரஜித் அனந்தை, இங்க்லண்டின் சொற்கள் இந்த உலகத்துக்குக் கொண்டுவந்தன: ''மை காட்! அனந்த்! யுவர் ஹால் ஈஸ் வெரி பிரெட்டி! (அனந்த், உன் கடற்கொள்ளை மிக அழகாயிருக்கிறது)'' என்ற இங்க்லண்டின் வார்த்தைகளைக் கேட்டுத் திரும்பிய அனந்த், ''யூ ஆர் ராங் காப்டன், ஷீ இஸ் பிரெட்டி, பட் நோ ஹால் ஆஃப் மைன் (அவள் அழகிதான் காப்டன். ஆனால் என் கொள்ளையில் சிக்கவில்லை)'' என்று விடையளித்துவிட்டு, ''கமான்'' என்று கூறிக் கொள்ளைக்கார காப்டனையும் அவன் சகாக்கள் மூவரையும் அழைத்துக்கொண்டு ராணி சென்ற தென்னஞ் சோலையை நோக்கிச் சென்றான். தென்னஞ்சோலையின் பசுமையை அடுத்துப் பாண்டவர் கோட்டையின் மதிலும், அதன் நடுவே திறந்து கிடந்த பெரிய வாயிலும் தெரியவே, அந்த வாயிலில் நுழைந்து அதை அடுத்துத் தென்புறமிருந்த ஒரு பெரிய விடுதியை நோக்கி நடந் தான் அனந்த்.

அந்த விடுதியை அடைந்ததும், ''இங்க்லண்ட்!நேற்று நாங்கள் இங்குதான் தங்கினோம்'' என்று கூறிய அனந்த், அவனை உள்ளே அழைத்துச் சென்றான். அந்தப் பெரிய விடுதியின் உட்புறம் மிக அலங்கோலமாயிருந்தது. பல நாட்டு மாலுமிகள் எங்கும் நிறைந்திருந்தார்கள். சிலர் உட்கார்ந்து புகை பிடித்துக் கொண்டிருந் தார்கள். சிலர் நடமாடிய வண்ணம் ஏதோ அலுவல்களைச் செய்து கொண்டிருந்தார்கள். இருவர் ஹூக்கா குடித்துப் புகையை இழுப்பதும் விடுவதுமே சொர்க்கானுபவம் என்பதை உணர்ந்து கண்களை இறுக மூடிக்கொண்டிருந்தார்கள். சில மாலுமிகள் தங்களை ஆந்தைகளாக நினைத்துக்கொண்டு பகல் வந்துவிட்டதால் படுத்துக் கண்களை மூடி உறங்கிக் கொண்டிருந்தார்கள். இவர்களையெல்லாம் தாண்டி மாலுமி விடுதியின் கடைசிக் கட்டுக்கு வந்த அனந்த் அங்கிருந்த ஓர் அறையை லேசாகத் தட்டினான்.

உள்ளிருந்து, ''ஹூ ஈஸ் இட்? (யாரது)'' என்று கரகரத்த, கடுமையான குரல் எழுந்தது.

அந்தக் குரலைக் கேட்டதும் இங்க்லண்ட் எல்லையில்லாப் பிரமிப்பை அடைந்து அனந்தை நோக்கினான். அனந்த் பதிலுக்குத் தலையை அசைத்தான். பிறகு உரக்கச் சொன்னான், ''நான்தான் அனந்த்'' என்று.

உள்ளேயிருந்து மீண்டும் பதில் வந்தது, ''கதவு திறந்திருக்கிறது'' என்று.

கதவை மெள்ளத் திறந்தான் அனந்த். அறைக் கோடியில் ஒரு நாற்காலியில் நல்ல உயரமுள்ள ஒரு வெள்ளைக்காரன் சாய்ந்து கொண்டிருந்தான். அவன் இடுப்பு பெல்ட்டில் நான்கு கைத்துப் பாக்கிகள் செருகப்பட்டிருந்தன. ஒன்று மட்டும் உள்ளே வந்தவர்களை நோக்கி நீட்டப்பட்டிருந்தது. உள்ளே அனந்துக்குப் பின்னால் வந்தவனைப் பார்த்ததும் அந்த மனிதன் பெரிதாகக் கூவினான், ''யூ ராஸ்கல் இங்க்லண்ட்! ஹௌ டிட் யூ கம் ஹியர்?(அட ராஸ்கல் இங்க்லண்ட்! இங்கு எப்படி வந்து சேர்ந்தாய்?)'' என்று.

இங்க்லண்ட் பேச நா எழாமல் நின்றான். அவர்களுக்குப் பின்னால் பூனைபோல் நுழைந்த ராணியும் அந்த மனிதனைப் பார்த்துப் பிரமித்தாள். ''யூ மஸ்ட் பி ஸில்வர்! யூ ஹாவ் ஒன்லி ஒன் லெக் தி அதர் ஈஸ் மேட் ஆஃப் உட்( நீ ஸில்வர் என்பவனாக இருக்க வேண்டும். உனக்கு ஒரு கால்தான் உண்டு. இன்னொரு கால் மரத்தால் செய்யப்பட்டது.)'' என்றாள் ராணி.

பதிலுக்கு அந்த மரக் கால் மனிதன் பேய்ச் சிரிப்புச் சிரித்தான்!.

அத்தியாயம் - 5

# பகைவனா நண்பனா?

பகல் பெரிதும் ஏறிவிட்டதால் அந்தக் கருங்கல் அறையின் ஒற்றைச் சாளரத்தின் மூலம் உள்ளே புகுந்து எதிர்ச் சுவரில் பட்டையாக விழுந்திருந்த வெயிலின் காரணமாக அறையில் வெளிச்சம் மிக அதிகமாயிருந்த அந்தச் சமயத்தில்கூட, மரக் கால் மனிதனின் அந்தப் பேய்ச் சிரிப்பு மிகப் பயங்கரமாகச் சுவர்களில் தாக்கி எதிரொலி செய்தது. அந்தச் சிரிப்பில் ஒலித்த குரூரத்தையும் அசட்டையையும் கண்டு எதற்கும் அஞ்சாத ராணியின் இதயத்தில் கூட ஓரளவு அச்சம் உதயமாகவே செய்தது. ஆனால், அந்த அச்சத்தை இம்மியளவும் வெளியில் காட்டாத கடல் ராணி வறட்சியும் அதிகாரமும் மிகுந்த பார்வையை அந்த ஒற்றைக் கால் மனிதன் மீது செலுத்தினாள்.

அவன் யாரையும் லட்சியம் செய்யாமலும், ஆங்காங்கு ஒட்டுப் போடப்பட்ட மாலுமி உடையைப் பற்றி எந்த அக்கறையும் காட்டாமலும், சாய்த்துத் தலையில் குறுக்காக வைக்கப்பட்டுத் தலையின் இருபுறங்களிலும் நீண்டிருந்த 'ஹாட்' டைக் கூட ஒழுங்காக வைக்காமலும் நாற்காலியில் சாய்ந்தே கிடந்தான். தரையில் ஊன்றிக் கிடந்த அந்த மரக் கால் சரியாயிருந்த உயிர்க் காலைப் போலவே உறுதியுடன் தரையில் ஊன்றப் பட்டிருந்தது. இடையிலிருந்த பல கைத்துப்பாக்கிகளும் பல சந்தர்ப்பங்களில் உபயோகப்பட்டிருந்ததற்கு அடையாளமாக அவற்றின் பிடிகள் சிறிதளவு பழுதடைந்திருந்தாலும், சதா கவனிப்பில் இருந்ததன் விளைவாக ரவை திணிக்கும் பகுதியும் சுடும் இடங்களும் பளபளத்துக்கொண்டிருந்தன.

ஒவ்வொரு கைத்துப்பாக்கியின் பிடியும் ஒவ்வொரு விதமாக இருந்ததால் அவனுக்குத் துப்பாக்கிகளைச் சேகரிப்பதிலேயே ஒருதனி ஆசை இருக்கவேண்டுமென்பது புலனாயிற்று.

அவன் மத்திய வயதை அடைந்திருந்ததை அவனுடைய கன்னக் கதுப்புகள் காட்டினாலும் கண்களில் பளிச்சிட்ட பயங்கரமும் கூர்மையும் வயது அவனுக்கு எந்தவிதப் பலவீனத்தையும் அளிக்கவில்லை என்பதைச் சந்தேகமற எடுத்துக் காட்டின.

இவையனைத்தையும் கண்டு அந்த மனிதனுடைய குணாதி சயங்களை அலசிப் பார்த்த ராணி, அந்த மனிதனிடம் தான் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டிய அவசியத்தைத் தெரிந்து கொண்டாள். ஸில்வர் என்று ஒரு மரக் கால் கொள்ளைக்காரனைப் பற்றியும் மலையாளப் பிராந்தியத்தில் அவன் சென்ற இரண்டு ஆண்டுகளில் அடித்த கொள்ளைகளைப் பற்றியும் அவள் பெரிதும் கேள்விப்பட்டிருந்தாளாதலால் அவன் எதற்காக சிந்து துர்க்கம் வந்திருக்கிறான் என்பதைப் பற்றிய சிந்தனையும் அவள் உள்ளத்தே எழுந்தது. இத்தகைய கொள்ளைக்காரனிடம் அனந்த் எப்படி சேர்ந்து கொண்டான் என்பதும் விவரிக்க இயலாத புதிராயிருந்தது அவளுக்கு.

அனந்தின் பெயரைக் கேட்டதுமே காப்டன் ஸ்டாண்டனும் லெப்டினண்ட் ஸ்மித்தும் நடுங்கியதையும், கார்வார் கோட்டையில் வெள்ளைக்காரர் தலைகளை ஈட்டிகளில் குத்தி நிற்க வைத்த பயங்கரத்தைப் பற்றி அவர்கள் சொல்லித் திகிலடைந்ததையும் எண்ணிப் பார்த்த ராணி, அனந்தும் ஒருவேளை கொடியவனோ என்று நினைத்தாள். ''சே! ஒருக்காலும் இருக்காது. இவரைப்பற்றி மகாராஷ்டிரத்தில் பெருமையுடன்தானே பேசிக் கொள்கிறார்கள்'' என்று தன்னைச் சமாதானப்படுத்திக்கொண்டாள். அப்படிச் சமா தானப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் என்ன என்பதையும் யோசித்துச் சிறிது புன்முறுவலும் கொண்டாள். எப்பேர்ப்பட்ட கடல் ராணிக்கும் பெண் என்ற பலவீனம் போகவில்லை என்பதைச் சிந்தித்துத் தன்னைப் பற்றிச் சிறிது சினமும் கொண்டாள்.

இப்படி அவள் பலபடி யோசித்து நின்று கொண்டிருந்ததை அனந்த் மட்டுமல்ல, மரக் கால் ஸில்வரும் கவனித்தான். ஆகையால் தனது சிரிப்பைச் சட்டென்று உறையவைத்துக் கொண்டு தனது விழிகளை ராணிமீது செலுத்தினான் சில விநாடிகள். பிறகு நாற்காலிக்குப் பக்கத்திலிருந்த பாட்டிலை எடுத்து அதிலிருந்த 'ரம்'மை அருந்தினான். அடுத்தபடி அந்தக் குப்பியை மடியில் வைத்துக்கொண்டு இடது கையால் வாயை அலட்சியமாகத்



துடைத்துவிட்டுக் கொண்டான். அடுத்தபடி அனந்த்தை நோக்கி ''மை பிரண்ட் ஹூ ஈஸ் திஸ் பாரட்? யூ நோ ஐ லைக் பாரட்ஸ்'' (தம்பி! இந்தக் கிளி யார்? எனக்குக் கிளிகள் மிகவும் பிடிக்குமே. உனக்குத் தெரியுமல்லவா?) என்று கேட்டான். அந்தச் சொகுசுக் கேள்வியிலும் குரலின் கரகரப்பு சொல்லத் தரமல்லாததாக இருந்தது.

இதற்கு அனந்த் பதிலேதும் சொல்லவில்லை. இங்க்லண்ட் மட்டும் சொன்னான்: ''அவளுடன் விளையாடாதே ஸில்வர். மால் வான் பகுதியின் கொள்ளைக்காரர்களின் தலைவி அவள்!'' என்று.

''கொள்ளைக்காரியா?'' என்று ஸில்வர் மீண்டும் அவளை நோக்கினான். இன்னொரு முறை 'ரம்'மையும் குடித்து நாக்கால் நொட்டை விட்டான்.

''எஸ்!'' இங்க்லண்ட் திட்டமான குரலில் பதில் கூறினான்.

*லைக் அவர் மேரி மீட்? லைக் அவர் ஆன்? (நமது மேரி மீட், ஆன் இவர்களைப் போலவா?)'' என்று வினவினான் ஸில்வர். அந்தப் பெயர்களை உச்சரித்தபோது அவன் குரலில் பெருமை பெரிதும் ஒலித்தது.

''எஸ்.'' - மீண்டும் அந்த ஒற்றைச் சொல்லையே பதிலாகச் சொன்னான் இங்க்லண்ட்.

''ஐ ஆம் ஹாப்பி. மைகாட்! வாட் எ ப்யூட்டிஃபுல் பைரேட்! (மிக்க மகிழ்ச்சி! அட கடவுளே! எத்தனை அழகிய கொள்ளைக் காரி)'' என்று கூறிய ஸில்வர் தனது குரலில் உண்மையான மகிழ்ச்சியைக் காட்டினான்.

இந்தச் சமயத்தில் இடை புகுந்த ராணி சொன்னாள்: ''நான் கொள்ளைக்காரி அல்ல'' என்று.

ஸில்வர், ராணியையும் நோக்கி இங்க்லண்டையும் நோக்கி னான். அரபிக்கடல் , செங்கடல் பிராந்தியங்களில் பயங்கரக் கொள்ளைக்காரனென்று பிரசித்தி பெற்ற இங்க்லண்ட்கூட அந்த

* இங்கிலாந்தில் சிறந்த கடல்கொள்ளைக்காரர்கள் மட்டுமல்ல, மேரிமீட், ஆன் போன்ற பிரசித்தி வாய்ந்த கொள்ளைக்காரிகளும் இருந் தார்கள்.Refer 'pirates of Malabar' By col. John Biddulph.

மரக் கால் மனிதனின் பார்வையால் சிறிது சங்கடப்பட்டான். அதன் விளைவாக இங்க்லண்ட், ராணியை நோக்கி, ''அப்படியானால் நீ இந்தப் பகுதிகளில் வரும் கப்பல்களை மடக்குவதில்லை? அதிலுள்ள பொருள்களைக் கவர்ந்து கொள்வதில்லை?'' என்று வினவினான் சிறிது உஷ்ணத்துடன்.

''உண்டு. இந்த நாட்டை வர்த்தகத்தின் மூலம் சூறையாட வரும் ஆங்கிலக் கப்பல்களைப் பிடிப்பதுண்டு. எங்களுக்குண்டான கடல் வரியைக் கட்டி, கனோஜி ஆங்கரேயின் தஸ்தக் (அனுமதிப் பத்திரம்) வைத்திருந்தால் பிடிக்கமாட்டோம். ஏமாற்ற முயன்றால் போராடுகிறோம்'' என்று பதில் சொன்ன ராணி மேலும் தொடர்ந் தாள்: ''காப்டன் இங்க்லண்ட்! இங்கு வந்துள்ள டச்சுக்காரர்கள், போர்ச்சுக்கீசியர்கள், இங்கிலீஷ்காரர்கள் வர்த்தகத்துக்காக வரவில்லை. பொன் விளையும் இந்தப் பாரத நாட்டை ஆள, சுரண்ட, கவர வருகிறார்கள். அதை நாங்கள் அனுமதிக்க முடியாது. உங்கள் துப்பாக்கிகளை நாங்களும் வைத்திருக்கிறோம். உங்கள் பீரங்கி களை நாங்களும் இயக்க முடியும். அதனால்தான் மகாராஷ்டிர ஸார்கேல் (கடற்படைத் தலைவர்) ஆங்கரேயை உங்களால் அடக்க முடியவில்லை. அரபிக் கடலில் அவரது ஆட்சியை அசைக்க முடியவில்லை, பெரிய பெரிய ஆங்கிலக் கடற்படை களால். நாங்கள் செய்வது கொள்ளையல்ல, தற்காப்புப் போர்.'' இதை வெகுவாக அழுத்திச் சொன்னாள் ராணி. அவள் குரலில் உறுதியும், கடுமையும் கலந்து கிடந்தன.

அவள் சொற்களைக் கேட்ட இங்க்லண்ட் அசந்து போனான். ஆனால், ஸில்வர் சிறிதும் அசரவில்லை. அவன் பயங்கரமாகப் புன்முறுவல் செய்தான். ''மிஸ்! யூ ஹாவ் கிவன் மீ ஃப்ரெஷ் ஐடியாஸ் (பெண்ணே! நீ எனக்குப் புதிய சிந்தனைகளை அளித்திருக்கிறாய்)'' என்று பாராட்டினான். ''இங்க்லண்ட்! யூ ராஸ்கல்! இப்பொழுது புரிந்ததா உனக்கு? பிறர் கப்பலைப் பிடிப் பது, அதிலிருக்கும் பொருள்களை அபகரிப்பது கொள்ளையல்ல; தேச சேவை. ஸர்விஸ் மை பாய் ஸர்விஸ்'' என்று இங்க்லண்டை யும் நோக்கிக் கூறிவிட்டுப் பயங்கரமாகச் சிரிக்கவும் செய்தான்.

காப்டன் இங்க்லண்ட் பதிலேதும் சொல்லாமல் கல்லாய்ச் சமைந்து விட்டான். சில விநாடிகளுக்குப் பிறகு பக்கத்திலிருந்த



அனந்தைக் கவனித்தான். அனந்தின் கண்கள் அரைவாசி மூடிக் கிடந்தன. அவன் மனத்தில் சிந்தனை ஓடுவதைப் பொட்டில் புடைத்திருந்த ஓர் ஒற்றை நரம்பு நிரூபித்தது.

எல்லாவற்றையும் அலட்சியம் செய்து அரை உறக்கத்தில் சுவரில் சாய்ந்துகொண்டு, ஒரு காலை மடித்து ஏதோ தவம் செய்பவனைப் போல் சுவரின்மீது வைத்துக்கொண்டு நின்றிருந் தான் அனந்த்.

அவனைச் சுட்டிக் காட்டி இங்க்லண்ட் வினவினான், ஸில்வரை நோக்கி: ''இவனை உனக்கு எப்படித் தெரியும்?'' என்று.

ஸில்வரின் கண்கள் அனந்தைக் கவனித்தன ஒரு விநாடி. அப்பொழுது ஸில்வரின் கண்களில்கூட ஒரு பரிவு காணப்பட்டது. ''ஐ ஓ ஹிம் மை லைஃப். ஸேவ்ட் மீஃப்ரம் டெத் (இப்பொழுது நான் உயிருடனிருப்பதற்கு இவன்தான் காரணம். மரணத்தின் பிடியிலிருந்து என்னைக் காப்பாற்றினான்'' என்ற ஸில்வரின் கரகரத்த குரலில்கூட எங்கோ நன்றி இலேசாக ஒலித்தது.

இந்த விவரம் இங்க்லண்டுக்குப் பெரும்வியப்பைத் தந்ததால் அவன் கண்கள் பெரிதும் மலர்ந்தன. நீல நிறக் கண்மணி கள் மிக அழகிய ஒளியை வீசின: ''ஸில்வர்! நீ சுய புத்தியிலிருக் கிறாயா?'' என்று வினவினான் இங்க்லண்ட்.

''எத்தனை குடித்தாலும் எனது சுயநினைவு தப்பாது'' என்றான் ஸில்வர்.

''இவன் யாரென்று உனக்குத் தெரியுமா?'' என்று இங்க்லண்ட் மீண்டும் வினவினான்.

''தெரியும்!'' என்றான் ஸில்வர்.

''யார்?'' இங்க்லண்ட் கேள்வியில் சந்தேகம் தொனித்தது.

''எ காம்ரேட்... எ பைரேட் (ஒரு தோழன் ஒரு கொள்ளைக் காரன்)'' என்றான் ஸில்வர்.

''இல்லை... இவன் தோழனும் இல்லை, கொள்ளைக் காரனும் இல்லை. கொள்ளைக்காரர்களை அரபிக்கடல் பிராந்தியத்திலிருந்து ஓட்ட சபதம் செய்து வந்திருக்கிறான்'' என்று இங்க்லண்ட் விளக்கினான்.

''யாரிடம் சபதம் செய்திருக்கிறான் அப்படி?'' என்று வினவினான் ஸில்வர்.

''மகாராஷ்டிரா மன்னன் ஷாஹுவிடம்'' என்றான் இங்க்லண்ட்.

இதுவரை மௌனமாயிருந்த அனந்த், ''இது பொய்! நான் ஷாஹு மன்னரைச் சந்தித்ததில்லை'' என்று இடைபுகுந்து கூறினான்.

''டோண்ட் லை (பொய் சொல்லாதே)'' என்றான் இங்க்லண்ட் ஆத்திரம் தொனித்த குரலில்.

''அனந்த் நெவர் லைஸ் (அனந்த் பொய் சொல்வதில்லை)'' என்ற அனந்தின் குரல் சிறிது கடுமையாயிருந்தது.

''அப்படியானால் சிந்துதுர்க்கத்திற்கு ஏன் வந்தாய்?'' என்று இங்க்லண்ட் வினவினான்.

''இங்குதான் எனது நண்பரை மறைத்து வைக்கமுடியும். வெளியில் அவருக்கு ஆபத்து இருக்கிறது.''

''யார் அந்த நண்பர்?''

அனந்த் பதிலுக்கு ஸில்வர்மீது கண்களைத் திருப்பினான். ''ஸில்வர் உன் நண்பனா?'' என்று வியப்பு நிறைந்த குரலில் கேட்டான் இங்க்லண்ட்.

''அவரே சொல்லவில்லையா நான் அவர் தோழன் என்று?'' என வினவினான் அனந்த்.

இங்க்லண்ட், ஸில்வரை நோக்கினான். ராணியும் ஸில்வரை நோக்கினாள். ஸில்வர் நிதானமாகச் சொன்னான்: ''நான் ஏற்கெனவே சொன்னேன், இவன் என் தோழன் என்று; அவன் எதிரிகள் எனக்கும் எதிரிகள் என்று.''

இதைக் கேட்ட இங்க்லண்ட் திகைத்துப் போனான். ''நோ! நோ! ஹீ ஈஸ் அவர் எனிமி அண்ட் எ டேன்ஜரஸ் ஒன் அட்தட் (இல்லை. இல்லை. அவன் நமது பகைவன். அதுவும் அபாயமான எதிரி)'' என்று அச்சத்துடன் சொன்ன இங்க்லண்ட், ''ஸில்வர்! இவன் யாரென்று தெரியுமா உனக்கு?'' என்று வினவினான் சினத்துடன்.



யூ ஸீம் டு நோ எவ்ரிதிங், டெல் மி.'' (உனக்குத்தான் எல்லாம் தெரியுமே, சொல்) என்ற ஸில்வர் மடியிலிருந்த 'ரம்' புட்டியைத் தரையில் வைத்துவிட்டு எழுந்தான். ஈஸிசேரிலிருந்து பக்கத்திலிருந்த ஊன்றுகோலை எடுத்துக் கட்கத்திலும் வைத்துக்கொண்டான்.

அவன் நின்ற தோரணையில் ஒரு பயங்கரமும் இருந்தது. கம்பீரமும் இருந்தது. ஒரு குரூரங்கூடக் கலந்திருந்தது. நின்ற நிலையில் அவன் கேள்வி கேட்கவில்லை. புருவங்களை மட்டும் உயர்த்தினான், லேசாகக் கேள்வி கேட்கும் பாவனையில்.

''இவன் இந்திரஜித் அனந்த்'' என்றான் இங்க்லண்ட்

''தட் ஐ நோ, எனிதிங் எல்ஸ்?'' என்று வினவினான் ஸில்வர்.

இம்முறை இங்க்லண்ட் தனது மாலுமி ஹாட்டை நன்றாக நிமிர்த்தி வைத்துக்கொண்டு பூட்ஸ்களைத் தரையில் கரகரவென்று அரைத்தான். கால்களை உக்கிரத்துடன் அசைத்து, ''அனந்த்! நீயே சொல் நீ யாரென்று'' என்று அதட்டலான குரலில் கூறவும் செய்தான்.

அனந்த் பதிலேதும் சொல்லவில்லை ஒரு விநாடி. பிறகு பதில் சொன்னபோது இகழ்ச்சி அதில் மண்டிக் கிடந்தது. ''ஸில்வர் உன்னைத்தான் கேட்டான். நீயே சொல்!'' என்றான்.

இங்க்லண்ட் சிறிது தாமதித்தான். பிறகு மிக மெதுவாகச் சொன்னான், ''இவன் ருத்ராஜி அனந்தின் தம்பி'' என்று.

இதைக் கேட்ட ஸில்வர் மட்டுமின்றி ராணியும் அசந்து போனாள். ''யார்! *விஜயதுர்க்கத்தின் காவலர், கனோஜி ஆங்கரேயின் வலது கரம், பிரிட்டிஷ்காரர்களின் எதிர்ப்புக்கும் வெற்றிக்கும் பெருந்தடையாக இருப்பவர், அந்த ருத்ராஜி அனந்தின் தம்பியா இவர்?'' என்று மரியாதையும் அச்சமும் கலந்த குரலில் வினவினாள் ராணி.

ஸில்வர் வியப்பு நிரம்பிய விழிகளை அனந்தின்மீது திருப்பினான். ''யுவர் பிரதர் ஈஸ் எ கிரேட் ஃபைட்டர் (உன் சகோதரன் பெரிய போர் வீரர்)'' என்று சிலாகித்தான்.

* Rudraji Ananth, Angrey's battle-seasoned subedar of Gherja (Vizayadurg)- 'Khanoji Angrey Maratha Admiral' -By Manohar Malgonkar —P. 272.

இங்க்லண்ட் பொறுமை இழந்தான். ''ஆல் ரைட் ஸில்வர் லெட் அஸ் கோ'' என்று கூறினான் சினம் குரலில் துளிர்க்க.

அந்தச் சமயத்தில் ராணி கேட்டாள்: ''எங்கே போகப் போகிறீர்கள்?'' என்று.

''என் கப்பலுக்கு'' என்றான் இங்க்லண்ட்.

இதைக் கேட்ட ஸில்வர் குதூகலித்தான். 'யூ மீன் த காஸண்ட்ரா ஈஸ் ஹியர்? (காஸண்ட்ரா இங்கேயா இருக்கிறது?)'' என்று கேட்டான் உற்சாகத்தின் ஊடே.

''எஸ்.''

''எங்கு?''

''இங்கிருந்து மூன்று மைல் தூரத்தில்.''

''அதை இங்கு ஏன் கொண்டு வரவில்லை?''

இந்தச் சமயத்தில் ராணி நகைத்தாள்: ''ஸில்வர், சிந்து துர்க்கத்தின் அருகில் எந்தக் கப்பலும் வரமுடியாது. 380 பீரங்கிகளை உடைய காஸண்டராவும் அதற்கு விலக்கல்ல. எந்தக் கப்பல் இந்தத் தீவுக் கோட்டையை நெருங்கினாலும் எங்கள் பீரங்கிகள் கப்பலைச் சுக்குநூறாக்கிவிடும்'' என்றாள் நகைத்துக் கொண்டே. அடுத்த விநாடி அவள் குரலில் நகைப்பு மறைந்து கண்டிப்பு தெரிந்தது. கண்களில் பயங்கர தீட்சண்யம் ஒளிவிட்டது. உதடுகள் திடமாக அசைந்தன: ''யாரும் இந்தத் தீவை விட்டு வெளியேற முயல வேண்டாம், நான் அனுமதி கொடுக்கும் வரை'' என்றும் அதிகாரத் தோரணையில் கூறினாள் ராணி.

அப்பொழுது ஸில்வர் தனது கையிலிருந்த கைத்துப் பாக்கியைச் சற்று எழுப்பினான். ''புட் தட் கன் அவே ஸில்வர், நோ ட்ரிக்ஸ் இங்க்லண்ட்(உன் துப்பாக்கியை அகற்று ஸில்வர்! இங்க்லண்ட், நீயும் விஷமம் ஏதும் செய்யாதே)'' என்று அனந்தின் குரல் கடுமையாக எழுந்தது. ஸில்வர் ஓரக்கண்ணால் அனந்தைக் கவனித்தான். அனந்தின் கைத்துப்பாக்கி ஏதோ விளையாட்டுக் கருவிபோல் தன்னையும் இங்க்லண்டையும் நோக்கி அனாயாசமாக உலாவுவதைக் கண்டான்.

## அத்தியாயம் - 6

# சந்திக்க ஓர் இடம்!

வரலாற்றுக் கதைகள் ஜீவகாவியங்களாக அமைவதற்கு முக்கியக் காரணம் ஒன்று உண்டு. காலத்தால் அழியாத, அவ்வப் போது ஏற்படும் சமுதாய மாறுபாடுகளால் மறையாத வரலாற்று நிகழ்ச்சிகளையும், பாத்திரங்களையும் அஸ்திவாரமாகக் கொண்டு புனையப்படுவதால் சரித்திரக் கதைகள் இலக்கியத்தில் சாசுவத மான இடத்தைப் பெறுகின்றன. மக்கள் மனத்தில் நிலைத்தும் நின்றுவிடுகின்றன.

உதாரணமாக ராபர்ட் லூயி ஸ்டீவன்ஸன் தமது 'ட்ரஷர் ஐலண்ட்' என்ற நாவலில் சிருஷ்டித்துள்ள சிறந்த கதாபாத்திரமான லாங்ஜான் ஸில்வர், அரபிக்கடல் பிராந்தியத்திலிருந்த பல கொள்ளைக்காரர்களில் ஒருவனென்றும், அவன் மலையாளத் திலிருந்து வந்த வெள்ளைக்கார மாலுமியென்றும் சொன்னால், இலக்கிய மாணவர்களுக்கு வியப்பாயிருக்கலாமென்றாலும், உண்மை அதுதான். காஸண்ட்ரா கப்பலில் சிறைப்பட்டுக் கொள்ளைக்கார டெய்லரால் தூக்கிலிடப்படவிருந்த பிரிட்டிஷ் காப்டன் மக்ரேயைக் காத்தவன் இந்த ஒற்றைக் கால் கொள்ளைக் காரன் என்பதைச் சரித்திரம் கூறுகிறது.

இந்த நிகழ்ச்சியிலிருந்துதான் *ராபர்ட் லூயி ஸ்டீவன்ஸன் ஒற்றைக் கால் ஜான் ஸில்வரைச் சிருஷ்டித்திருக்க வேண்டும். இப்பொழுது லாங் ஜான் ஸில்வர் ஆங்கில இலக்கியத்தின் சிறப்புப் பாத்திரங்களில் ஒருவன். இவனை மட்டுமின்றி காஸண்ட்ரா என்ற கப்பலைப் பற்றியும் மலபாரைப் பற்றியும் ஸில்வர் வாயிலாகவே ஸ்டீவன்ஸன் தமது கதையில் பிரஸ்தாபிக்கிறார்.

* Stevenson in his Treasure island evidently took his idea of Long John Silver- the one legged pirate from this incident — 'The Pirates of Malabar' By col. John Biddulph P.139.

இப்படி ராபர்ட் லூயி ஸ்டீவன்ஸனுக்குக் கைகொடுத்தவனும், நிதானம், மரியாதை, பணிவு, கொடுமை, தந்திரம், சக்தி இவற்றைக் குணங்களாக உடையவனென்று அவரால் சித்திரிக்கப் பட்டவனுமான ஸில்வர், பாண்டவர் கோட்டையில் அன்று இந்திரஜித் அனந்தின் கைத்துப்பாக்கி உலாவுவதைக் கவனித்ததும் சிறிது எச்சரிக்கையே அடைந்தான். எச்சரிக்கை காரணத்தால் மறு விநாடி அவனுடைய தோரணையில் பெரும் மாற்றம் ஏற்பட்டதேயன்றிப் பழைய அந்த நகைப்பு, மீண்டும் அந்தக் கருங்கல் அறையில் தாக்கி எதிரொலிக்கவும் செய்தது.

''இங்க்லண்ட்! எதையும் செய்ய முயலாதே. அனந்தின் கைத்துப்பாக்கி குறி தவறாதது. மூன்று பேரை ஒரே சமயத்தில் சுட்டுத்தான் இவன் என்னைக் காப்பாற்றி அழைத்து வந்தான்!'' என்று இங்க்லண்டையும் அடக்கினான் ஸில்வர்.

பிரசித்தி வாய்ந்த கடல் கொள்ளைக்காரனான இங்க்லண்ட் அந்த ஒற்றைக் கால் மனிதனின் போக்கைக் கண்டு பெரு வியப்படைந்தான். ''ஸில்வர், நீயா இப்படிப் பேசுகிறாய்!'' என்று வினவவும் செய்தான் வியப்பு குரலிலும் ஒலிக்க.

ஸில்வர் தனது கொடிய விழிகளை இங்க்லண்ட் மீது திருப்பி, ''எப்படிப் பேசுகிறேன்?'' என்று வினவினான்.

''இன்னொரு மனிதனின் மிரட்டலுக்கு நீ அடங்கிப் பேசுவதை இன்றுதான் பார்க்கிறேன்'' என்றான் இங்க்லண்ட் வெறுப்பு மண்டிய குரலில்.

''அடங்க வேண்டிய சமயத்தில் அடங்குபவன்தான் அறிவாளி'' என்று சொன்ன ஸில்வர்,'' இங்க்லண்ட்! மை பாய்! யூ டோண்ட் வாண்ட் டு டை, டு யூ? (இங்க்லண்ட்! தம்பி! இறக்க இஷ்டமில்லையே உனக்கு?)'' என்று வினவினான்.

இங்க்லண்ட் பதில் ஏதும் சொல்லவில்லை. நீலமணிகள் போன்ற அவன் கண்களில் நெருப்புப்பொறி பறந்தது.

அந்தக் கண்களில் ஒளிவிட்ட எரிச்சலையும், ஆவேசத்தையும், ஸில்வர் கண்டான். அதைக் கண்டு லேசாக நகைத்தான். ஒரு முறை சற்றே எழுந்த தனது கைத் துப்பாக்கியிலிருந்து கையை



எடுத்து அதை மீண்டும் பெல்ட்டில் அழுத்தினான் மற்ற துப்பாக்கிகளுடன். அவன் காட்டிய குறிப்பை உணர்ந்த இங்க்லண்டும் தனது ரிவால்வர் மீதிருந்த கையை எடுத்துப் பக்கவாட்டில் தொங்க விட்டுக் கொண்டான்.

அப்பொழுது சொன்னான் ஸில்வர்: ''அனந்த்! உன் ரிவால்வரையும் கச்சையில் செருகிக் கொள், இனி அதற்குத் தேவையில்லை!'' என்று.

அனந்த் பதிலேதும் சொல்லாமல் தனது கைத்துப்பாக்கியையும் இடையில் செருகிக் கொண்டு ஸில்வரை நோக்கி, ''ஐ ஆம் ஸாரி ஸில்வர், பட் யூ லெஃப்ட் மி வித் நோ ஆல்டர்நெடிவ் (வருந்துகிறேன் ஸில்வர், ஆனால், எனக்கு வேறு வழியை விடவில்லை நீ)'' என்று கூறினான் வருத்தம் தோய்ந்த குரலில்.

மேலும் சொன்னான் அனந்த்:''ஸில்வர், நான் இங்கு வந்தது கொள்ளைக்காரர்களைப் பிடிக்க அல்ல, அவர்களை அழிக்கவும் அல்ல. அப்படிப் பிடித்து அழிக்கும் அலுவலை மேற்கொண்டால் கொள்ளைக்காரர்களில் சிறந்த உன்னைக் காப்பாற்றியிருக்க மாட்டேன். நான் வந்த காரணம் கொள்ளைக்காரர்கள் ஒழிப்பென்றால் அதற்கு நான் சிந்து துர்க்கம் வந்திருக்கமாட்டேன். இத்தகைய ஒரு பயங்கரக் கொள்ளைக்காரியைக் காப்பாற்றியும் இருக்க மாட்டேன்!'' இந்தச் சொற்களை நிதானமாகவும் திடமாகவும் சொன்ன அனந்த் கடைசியாகக் கடல் ராணியையும் தன் கையால் சுட்டிக் காட்டினான்.

அனந்தின் சொற்களைக் கேட்ட கடல் ராணி புன்முறுவல் கொண்டாள். அவள் அழகிய பெருவிழிகள் அவனைப் பார்த்து நகைத்தன. புன்முறுவலை வெளியிட அவள் உதடுகளை விரித்த போது அவள் அழகிய வழவழத்த கன்னங்களில் குழிகள் விழுந்து அந்த முகத்துக்கு ரதி விலாஸச் சாயையை அளித்தன. ''உங்கள் பாராட்டுதலுக்கு எனது நன்றி!'' என்று கடைசியாக அவள் பேசியபோது குரலிலிருந்த கடுமை மறைந்து மதுரம் சொட்டியதை அனந்த் கவனித்தான்.

ஆனால், அவள் சொற்களோ முகவிலாசமோ அனந்தின் முகத்தில் எந்தவித மாறுதலையும் விளைவிக்கவில்லை. அவன் கண்கள் அப்பொழுதும் அரைவாசி மூடியே இருந்தன. கருங்கல்

சுவரில் பதிந்த காலும் பதிந்தபடியே இருந்தது. அவன் பதிலிலும் உணர்ச்சி அதிகம் இல்லை. ''ராணி! அளவுக்கு மீறி நான் எதையும் சொல்லவில்லை. மால்வான் கடற்கொள்ளைக்காரர்கள் கொள்ளைக்காரர்களிலேயே மிகக் கொடியவர்கள், சிறந்தவர்கள் என்ற பிரசித்தி இருக்கிறது. அவர்களின் தலைவி நீ. *மால்வானின் மூன்று பிரிவுகளான சிந்து துர்க்கம், பாண்டவ கட், மால்வான் கோட்டை மூன்றையும் நீ தனிப்பட ஆள்கிறாய். உன்னைப்பற்றி எனக்குச் சகலமும் தெரியும்'' என்ற அனந்த் மற்ற இருவரையும் நோக்கி, ''நான் சொன்னதில் தவறு ஏதேனும் உண்டா?'' என்று வினவினான்.

அனந்த் சொன்ன அனைத்தும் உண்மை என்பதைப் புரிந்து கொண்டிருந்த ஸில்வர் பதிலேதும் சொல்லவில்லையானாலும் இங்க்லண்ட் மட்டும், ''அத்தகைய கொடியவளிடம் நாம் சிக்கியிருக்கிறோம். அவளைக் காக்க நீ எங்களை நோக்கித் துப்பாக்கியை எடுத்தாய்!'' என்று குற்றம் சாட்டினான்.

அனந்த் அந்தக் குற்றச்சாட்டுதலை ஒரு கையை வீசி அர்த்த மற்றது என்பதை விளக்கினான். ''டாக்ஸ் டோன்ட் ஈட் டாக் (நாய்கள் நாயைத் தின்பதில்லை)'' என்றும் வெறுப்புடன் சொன்னான்.

அந்த ஆங்கில வார்த்தையைக் கேட்டு நீண்ட நாளானதால் ஸில்வர் மிகுந்த குதூகலத்தைக் காட்டினான். ''மை பாய் அனந்த்! யூ மஸ்ட் ஹாவ் பீன் பார்ன் இன் இங்க்லண்ட். யூ ஸ்பீக் பர்ஃபெக்ட் இங்கிலீஷ்( தம்பி அனந்த்! நீ இங்கிலாந்தில் பிறந்திருக்கவேண்டும். நீ நல்ல ஆங்கிலம் பேசுகிறாய்)'' என்று பாராட்டிய அவன் குரலில் உற்சாகம் மிதமிஞ்சி ஒலித்தது.

அதுவரை முகத்தைப் பந்து போல் உப்பவிட்டு சினத்திலிருந்த காப்டன் இங்க்லண்டின் முகமும் விகசித்தது. ''ஷ்யூர்! யூ ஸ்பீக் ஃபைன் இங்கிலீஷ் (உண்மை. நீ நல்ல ஆங்கிலம் பேசுகிறாய்)'' என்ற அவன் பாராட்டுதலில் குரோதம் சிறிதும் இல்லை. அன்புகூட ஏதோ ஒரு மூலையில் ஒலித்தது.

அந்த ஆங்கிலேயர் இருவருக்கும் தங்கள் மொழியைச் சரியாகப் பேசியதும் ஏற்பட்ட ஆனந்தத்தைக் கண்டு அனந்த்

* Malvani Pirates were said to be very cruel and daring. 'Maharashtra gazetteer — Ratnagiri, Dt., P.P.773-774.



பெருமூச்சு விட்டான். 'சுயமொழி பக்தியால் தேசபக்தியும் அதிகமாகிறது. அந்த அறிவு நமது நாட்டில் சிறிதும் இல்லையே. ஒன்று பட்டாடோபத்துக்காகச் சுயமொழி வெறி, அல்லது சுயமொழி இழிவு, இவற்றைத் தவிர இங்கு வேறென்ன இருக்கிறது? அப்படிச் சுயமொழி பக்தியும் அறிவில் ஆசையும் இல்லாத நாட்டில் வளர்ச்சி ஏது வீரம் ஏது, நாட்டுப்பற்றுதான் ஏது?' என்று தனக்குள் சொல்லிக்கொண்ட அனந்த், வெளிப்படையாக ஸில்வரை நோக்கிச் சென்னான்: ''ஸில்வர்! உனக்கும் இந்திய மொழிகள் பலவும் தெரியும். மலையாளம், மராத்தி இரண்டுமே உனக்குக் கைவந்த மொழிகளாயிற்றே'' என்று.

அதை ஆமோதிப்பதற்கு அறிகுறியாக ஸில்வர் தனது தலையை ஒருபுறமாக அசைத்தான். ''இந்த நாட்டில் பிழைக்க வேண்டுமானால் இந்த நாட்டு மொழி தெரிய வேண்டாமா? அதற்காகக் கற்றுக்கொண்டேன். பிழைப்புக்காகக் கற்கும் மொழி வேறு, ரத்தத்தில் ஓடும் பிறவிமொழி வேறு'' என்றும் கூறினான் ஸில்வர்.

அதுவரை மௌனமாயிருந்த கடல்ராணி உரையாடலின் குறுக்கே புகுந்து, ''நாம் இங்கே கூடியிருப்பது மொழிச் சர்ச்சைக்காக அல்லவென்று நினைக்கிறேன்'' என்றாள். அவள் குரல் மிக நயமாயிருந்தது. அதில் வெறுப்பு கடுகளவும் இல்லை!

அவள் சொல்வது இங்க்லண்ட், ஸில்வர் இருவருக்கும் நியாயமாகப் பட்டதால் இருவரும் அவளைக் கேள்வி கேட்கும் பாவனையில் நோக்கினார்கள். கேள்விக்குப் பதில், அவளிடமிருந்து வருவதற்குப் பதிலாக அனந்திடமிருந்து வந்தது. ''அடுத்த இரண்டு நாட்களுக்கு உங்களைத் தன் விருந்தாளியாக வைத்திருக்க ராணி விரும்புகிறாள்!'' என்று பணிவு நிரம்பிய குரலில் வேண்டிக் கொண்டான்.

''எங்களையா?'' இங்க்லண்ட் பிரமிப்புடன் கேட்டான்.

''விருந்தினர்களாகவா கைதிகளாகவா?'' ஸில்வரின் குரல் சாதாரணமாகத்தான் இருந்தது. ஆனால், விழிகளில் ஒரு பயங்கரச் சாயை படர்ந்தது.

''விருந்தினர்களைக் கைது செய்வது ராணியின் வழக்கமல்ல!'' இந்திரஜித் அனந்த் திட்டமாகத் தெரிவித்தான்.

''ராணி ஏதும் சொல்லவில்லையே'' என்று கேட்டான் ஸில்வர்.

''நான் தனிப்பட ஏதும் சொல்ல அவசியமில்லை'' என்றாள் ராணி.

''அனந்த் சொன்னால் நீ சொன்ன மாதிரிதானா?'' ஸில்வர் கேட்டான் வியப்புடன்.

''ஆம்!'' ராணியின் பதில் திட்டமாயிருந்தது.

''அனந்தை எத்தனை நாட்களாக உனக்குத் தெரியும்?'' என்று இங்க்லண்ட் வினவினான்.

''இன்று காலை முதல்!''

''முன்பு தெரியாது?''

''தெரியாது!''

''அதற்குள் அவனிடம் பூரண நம்பிக்கை ஏற்பட்டு விட்டதா ?''

''ஆம்.''

''ஏனோ?''

''அவரைப் பார்த்ததில்லையே தவிர, அவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்.''

இதற்குப் பிறகு ராணி அதிகமாகப் பேச மறுத்தாள். ''ஸில்வர், இங்க்லண்ட்! நீங்கள் இருவரும், ஏன் நேற்று என்னைப் பிடித்துப் போக வந்த ஸ்டாண்டன், ஸ்மித் இருவருங்கூட இன்றும் நாளையும் விருந்தினராயிருங்கள். அதற்குப் பிறகு உங்களை என்ன செய்வது என்று முடிவு செய்கிறேன். இந்த இரண்டு நாட்களும் இந்தப் பாண்டவர் கோட்டையில் எங்கு வேண்டுமானாலும் சுதந்திரமாக உலாவலாம். உங்களுக்குச் சகலவசதிகளும் செய்து தரப்படும். ஆனால், தப்ப மட்டும் முயலாதீர்கள்'' என்று உத்தரவு பிறப்பித்த ராணி, அனந்தைத் தன்னுடன் வரும்படி சைகை செய்து அந்த அறையை விட்டு வெளியேறினாள்.

அனந்த் ஒரு விநாடி சிந்தித்தான். பிறகு ''ஸில்வர், இங்க்லண்ட்! இருவரும் இங்கேயே இருங்கள். மீண்டும் வருகிறேன்'' என்று கூறிவிட்டு அறையிலிருந்து வெளியேறி ராணியைத் தொடர்ந்து சென்றான். அவன் பின் தொடர்ந்து வருவதைத் திரும்பிப் பார்க்காமல் சென்றாள் ராணி . அனந்த் அவளைப் பின்பற்றி



அவள் நடைக்கு ஈடுகொடுக்கச் சிறிது வேகமாகவே நடந்தான். ராணி விடுவிடுவென்று நடந்து மாலுமிகள் விடுதியிலிருந்து வெளியே வந்து படிகளில் இறங்கினாள் வேகமாக. அனந்தும் அவள் துரிதத்துக்கு ஈடு கொடுத்துப் படிகளில் இறங்கிச் சென்றான். ராணி எட்ட இருந்த மாளிகையை நோக்கி நடக்க முற்பட்டதும் அனந்த் சட்டென்று நின்று, ''ராணி!'' என்று அதட்டலான குரலில் அழைத்தான்.

ராணி நின்று தலையை அரைவாசி திருப்பி அனந்தைக் கவனித்தாள், கண்களின் ஓரத்தினால். ''என்ன?'' என்றும் வின வினாள் அதிகாரத்துடன்.

''நான் உன்னுடன் வரமுடியாது இப்பொழுது'' என்றான் அனந்த்.

''ஏன்?'' ராணியின் கேள்வியில் சந்தேகம் இருந்தது.

''எனது நண்பர்களை நான் கவனிக்க வேண்டும். பிறகு சந்திக்கிறேன் உன்னை'' என்றான் அனந்த்.

''எப்பொழுது?''

''இன்று மாலை.''

''எங்கு?''

அனந்த் சிறிது சிந்தித்தான். ராணியின் இதழ்களில் புன் முறுவல் விரிந்தது மெல்ல. ''சரி, இன்று விளக்கு வைத்ததும் அதோ அந்தத் தென்னஞ் சோலைக்கு வாருங்கள்'' என்று கூறி விட்டு வேகமாகத் தனது மாளிகையை நோக்கி நடந்தாள் ராணி.

அவள் செல்வதைக் கவனித்துக்கொண்டே நின்றிருந்தான் அனந்த்.

'அடி ராணி! உன் கள்ளத்தனம் எனக்குத் தெரியாதென்று நினைக்காதே. உன்னை அடக்குகிற முறையில் அடக்குகிறேன்' என்று மனத்துள் கறுவிக்கொண்டான்.

அது விளைத்த சினத்துடன் மாலையில் நிகழவிருந்த தென்னஞ்சோலைச் சந்திப்பின் எதிர்பார்ப்பினால் ஏற்பட்ட சந்துஷ்டியும் கலந்து கொண்டதால் அவன் இதழ்களில் இரண்டும் கலந்த புன்முறுவல் மலர்ந்தது.

அத்தியாயம் - 7

# சோலைக் காட்சி!

மாலுமி விடுதிப் படிகளிலிருந்து இறங்கி மாளிகையை நோக்கி வேகமாக நடந்து சென்ற கடல் ராணியைச் சினமும் சந்துஷ்டியும் கலந்த புன்முறுவலுடன் பார்த்துக்கொண்டு, அவள் எட்ட இருந்த பெரிய மாளிகையில் நுழையும்வரை இமை கொட்டாமல் நின்றிருந்த இந்திரஜித் அனந்த், அவள் கண்ணுக்கு மறைந்ததும் திரும்பவும் படிகளில் ஏறி மிக நிதான நடை நடந்து இங்க்லண்டும் ஸில்வரும் இருந்த அந்தப் பழைய அறைக்கு வந்து சேர்ந்தான்.

தீர்க்க யோசனையுடனும் விளக்கம் தரமுடியாத புன்சிரிப்புடனும் உள்ளே நுழைந்த அனந்தை இரு கொள்ளைக்காரர்களும் இரண்டுவிதக் கண்களுடன் பார்த்தார்கள். இங்க்லண்டின் கண்கள் கோபத்தினால் சிவந்து இந்திரஜித்தை எரித்துவிடுவனபோல் நோக்கின. ஆனால், ஸில்வரின் கண்கள் பழைய தோழமையையும் நன்றியையும் அன்பையும் அள்ளித் தெளித்தன. அவன் மீண்டும் பழையபடி நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து இரு கால்களையும் நீட்டிக் கொண்டிருந்தான். அவன் கையில் அந்த 'ரம்' குப்பி அப்பொழுதும் காட்சியளித்தது. அனந்த் உள்ளே நுழைந்ததும் ஸில்வரே அவனை ஏதும் நடக்காததுபோல் வரவேற்று, ''அனந்த்! மை பாய்! ஐ ஆம் ஸாரி ஃபார் யூ ஹாவ் ரிடர்ன்ட் டு க்வீக்'' என்று கூறிக் கடகடவென்று நகைக்கவும் செய்தான்.

இந்திரஜித் அனந்த், இங்க்லண்டின் கோபக்கண்களை அலட்சியம் செய்தாலும் ஸில்வரின் வரவேற்பை மட்டும் மிகுந்த எச்சரிக்கையுடன் ஏற்றுக்கொண்டு, ''ஸில்வர்! நாம் இப்பொழுது மராட்டியில் பேசலாம். இங்க்லண்டுக்கும் அந்த மொழி தெரியும்'' என்று கூறிவிட்டு, ''இங்க்லண்ட்! இப்பொழுது கடல்ராணியின் அழகைப்பற்றியோ அவள் என்னைத் திரும்ப அனுப்பிவிட்டதைப் பற்றியோ விவாதிக்க அவசியமில்லை. ஆனால், நம் மூவருக்கும் இடையே உள்ள உறவு எப்படிப்பட்டது என்பதை தீர்மானித்துக் கொள்ள வேண்டியது மிக அவசியம்'' என்றும் சொன்னான்.



இங்க்லண்டின் நீலவிழிகளில் சினம் மறைந்து மதிப்பு உதயமாயிற்று. ''முற்றிலும் சரி'' என்ற அவன் சொற்களில் அந்த மதிப்பு 'ஒலித்தது.

ஸில்வர், குடியால் சிவந்து கிடந்த தனது கண்களைச் சற்றே உயர்த்தி இங்க்லண்டை நோக்கினான்! ''எது முற்றிலும் சரி?'' என்று வினவினான்.

''நம் மூவருக்கும் உள்ள உறவை முதலில் நிர்ணயிக்க வேண்டும் என்று அனந்த் கூறியது!'' என்றான் இங்க்லண்ட்.

இதைக் கேட்ட ஸில்வர் நகைத்தான். ''அதில் என்ன சந்தேகம் வந்துவிட்டது இப்போது?'' என்று வினவினான்.

அதுவரை அறையின் நடுவில் நின்றிருந்த இங்க்லண்ட் சற்று நகர்ந்து சுவரில் சாய்ந்துகொண்டான். ''கொள்ளைக்காரர்களைப் பிடிக்கச் சபதம் செய்து இவன் வந்திருப்பதாக எனக்குச் செய்தி கிடைத்தது. இந்தப் பிராந்தியத்தில் இவன் எங்கோ உலாவுவதாகவும் தெரிய வந்தது. அதற்காக நான் விசாரிக்க வந்த சமயத்தில் இவனையும் ராணியையும் அந்த இரண்டு வெள்ளை மடையர்களையும் பார்த்தேன். இவன் அகப்பட்டுவிட்டான் என்று எண்ணிய சமயத்தில் இவனிடம் நான் அகப்பட்டுக்கொண்டேன். இவனோ இங்கு வந்து உன்னைக் காட்டுகிறான். அபாயமான கொள்ளைக்காரனான உன்னைத் தனது நண்பனென்கிறான். கடற்கொள்ளைக்காரியான ராணியை இவன் காப்பாற்றி இருக்கிறான்- இரண்டு பிரிட்டிஷ் ஸோல்ஜர்களிடமிருந்து. இவன் கொள்ளைக்காரனானால் கொள்ளைக் காரர்களைப் பிடிக்க வரமுடியாது.

கொள்ளைக்காரர்களைப் பிடிக்க வருவதானால் மகாராஷ்டிர ஸார்கேல் கனோஜி ஆங்கரேயின் வலக் கை போன்ற ருத்ராஜி அனந்தின் தம்பியாக உலாவ முடியாது. ஒருபுறம் அரசாங்கத்தின் கையாகவும் இன்னொரு புறம் கொள்கைக்காரர்களின் நண்பனாகவும் திரியும் இவன் சரித்திரத்தைக் கேட்கக் கேட்க என் தலை குழம்புகிறது'' என்று வேகத்துடன் பேசிய இங்க்லண்ட், ''இவன் சட்டத்தின் பக்கமா நமது பக்கமா?'' என்றும் வினவினான். அவன் தோரணையும் கேள்வி ஒலித்த விதமும் திட்டமான பதிலை எதிர்பார்த்தன.

ஸில்வர் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. நீண்டநேரம் யோசித்தான். பிறகு சிந்தனையிலிருந்து விடுபட்டுத் தெளிவடைந்து,

''இங்க்லண்ட்! மை பாய் யூ டாக் ஆஃப் லா (தம்பி இங்க்லண்ட்! நீ சட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டாய்)'' என்று பதிலைச் சிறிது நீட்டினான்.

''ரைட்'' என்றான் இங்க்லண்ட்.

ஸில்வரின் இதழ்களில் கொடூரமான ஒரு புன்னகை விரிந்தது! ''மை பாய், யூ நோ எவ்வரிபடி ஹாஸ் ஹிஸ் லா. தி மராட்டாஸ் ஹாவ் தெயர் லா. ஷாஹு அஸ் கிங் ஹாஸ் ஹிஸ் லா. ஆங்கரே ஹிஸ் ஓன் லா. வீ பைரேட்ஸ் ஹாவ் அவர் ஓன் லா. மை பாய், லா ஈஸ் எ ப்ராஸ்டிட்யூட், இட் ஸூட்ஸ் த கன்வீனியன்ஸ் ஆஃப் மெனி (தம்பி! ஒவ்வொருவருக்கும் தனிச்சட்டம் இருக்கிறது. மகாராஷ்டிரர்களுக்கு அவர்கள் சட்டம் இருக்கிறது. ஷாஹுவுக்கு அரசன் என்ற முறையில் தனிச்சட்டம் இருக்கிறது. ஆங்கரே, அவர் சட்டம் தனி. நம்மைப் போன்ற கொள்ளைக் காரர்கள் தனிப்பட்ட சட்டத்தைக் கையாளுகிறார்கள். சட்டம் ஒரு விபசாரி மாதிரி. பலருக்கு அவர்கள் இச்சையின் இஷ்டப்படி வளைகிறது)'' என்று சொன்ன ஸில்வர், ''ஆம் ஐ ரைட் அனந்த்?'' என்று அனந்தையும் கேட்டான்.

அதுவரை தானும் ஆங்கிலத்தைவிட்டு மற்ற இரு வெள்ளையர்களையும் விடச் சொன்ன அனந்த், ஸில்வரின் ஆங்கிலத்தில் மயங்கி அவர்கள் மொழிக்கே திரும்பி, ''பர்ஃபெக்ட்லி ரைட்'' என்று திட்டமான குரலில் அறிவித்தான்.

இங்க்லண்டின் முகத்தில் அப்பொழுதும் சந்தேகம் விலக வில்லை. ''யூ மீன் டு ஸே யூ டோன்ட் பிலீவ் இன் லா ஆஃப் யுவர் கிங்?'' என்று கேட்டான் இங்க்லண்ட் சந்தேகம் குரலில் ஒலிக்க.

அனந்த் சிறிது யோசித்தான். பிறகு சொன்னான்; ''நான் ஒரே ஒரு சட்டத்தை நம்புகிறேன்!'' என்று.

''விச் லா? (எந்தச் சட்டத்தை நம்புகிறாய்)?'' என்று வினவினான் இங்க்லண்ட். பதிலுக்குத் தனது கச்சையில் இருந்த இரு கைத்துப்பாக்கிகளையும் தொட்டுக் காட்டினான் அனந்த். ''திஸ் லா- பிஸ்டல் லா. (இந்தச் சட்டம்- கைத்துப்பாக்கியின் சட்டம்)'' என்று கூறினான்.

இதைக் கேட்ட ஸில்வர் பெரிதாகக் கைகளைத் தட்டினான். மரக் காலையும் இருமுறை குதூகலமாகத் தரையில் உதைத்தான். ''கரெக்ட்!தட் ஈஸ் எ லா யூ கான் பிலீவ்'' என்று குதூகலத்தைக்



குரலிலும் செய்கையிலும் காட்டிய ஸில்வர் இங்க்லண்டை நோக்கி, ''மை பாய்! திஸ் ஃபெலோ ஈஸ் எ க்ராக் ஷாட் (தம்பி! இவன் மின்னல் வேகத்தில் சுடக்கூடியவன்)'' என்றும் அறிவித்தான்.

இங்க்லண்ட் அதைத் தனது படகில் வந்தபோதே புரிந்து கொண்டிருந்தான்: தான் அசந்து பேசிய சமயத்தில் அனந்த் பிஸ்டலை உருவிய வேகம் அந்த அறையில்கூட அவன் கண் முன் நின்றது. ஆகவே, ''ஐ நோ தட் (அது எனக்குத் தெரியும்)'' என்று கூறினான்.

அதுவரை பலபடிப் பேசி மற்ற இருவரையும் உற்சாகப் படுத்திக்கொண்டிருந்த மரக் கால் மனிதனான ஸில்வர் மெள்ள விஷயத்துக்கு வந்தான். பேச்சைத் துவங்கு முன்பு 'ரம்'மைச் சிறிது உறிஞ்சிவிட்டுக் குப்பியை இங்க்லண்டுக்கும் அனந்துக்கும் நீட்டி னான். இருவரும் தங்கள் தலையசைப்பினாலேயே அதை மறுத்து விட, ஸில்வர் குப்பியை மடியில் வைத்துக்கொண்டு அனந்தைத் தனது விழிகளால் ஏறிட்டு நோக்கி, ''அனந்த்! இப்பொழுது எங்களை என்ன செய்ய உத்தேசித்திருக்கிறாய்?'' என்று வினவினான். சுத்தமான மராட்டியில் அந்தக் கேள்வியைக் கேட்டான் ஸில்வர்.

நேரான பதில் வரவில்லை, அனந்திடமிருந்து. ''ஸில்வர், யுவர் மராட்டி ஈஸ் வெரிகுட் (ஸில்வர்! உன் மகாராஷ்டிரம் மிக நன்றாயிருக்கிறது!)'' என்று சிலாகித்தான் அனந்த்.

''கொள்ளைக்காரனுக்குப் பலமொழிகள் தெரியவேண்டும். அவன் ஒரு நாட்டுச் சொத்தை மட்டும் கொள்ளையடிப்பதில்லை'' என்ற ஸில்வர் புன்முறுவல் காட்டினான்.

ஸில்வரின் பேச்சிலிருந்த நகைச்சுவையைப் பெரிதும் ரசித்தான் அனந்த். ''கடல் கொள்ளைக்காரர்களுக்கு நீ சொல்வது மிகவும் பொருந்தும். அவர்கள் பல நாடுகளையும் சுற்றிவருகிறார் கள். கொள்ளையடிப்பதில் சொந்த நாடு பிறநாடு என்று பார்ப்ப தில்லை? இந்த இங்க்லண்ட் பிரிட்டிஷ் கப்பல்களைச் சூறையாட வில்லையா?' போர்ச்சுகீஸ், டச்சுக் கப்பல்களை மடக்கவில்லையா? இதில் ஒரு சமதர்மம் இருக்கிறது'' என்று அனந்தும் கூறினான்.

இங்க்லண்டுக்கு இந்தத் தர்க்கமும் தத்துவங்களும் பிடிக்காத தால் தரையில் தனது பூட்ஸ்களைச் சங்கடத்துடன் அசைத்தான். ''அனந்த், ஸில்வர் உன்னை ஒரு கேள்வி கேட்டான். அதற்குப் பதில் சொல்லவில்லை'' என்று சீறினான்.

''என்ன கேள்வி?''

''எங்களை என்ன செய்யப்போகிறாய் என்று ஸில்வர் கேட்கவில்லை?''

''கேட்டான்!''

''அதற்குப் பதில் சொல்லவில்லை நீ.''

''சொல்ல அவசியமில்லை.''

''ஏன்?''

''கொள்ளைக்காரர்களுக்குத் தனிச் சட்டம் இருக்கிறதென்று ஸில்வர் சொல்லவில்லையா?''

''ஆம். சொன்னான்.''

''அந்தச் சட்டத்தால் நானும் கட்டுப்பட்டவன்.''

''நீ கொள்ளைக்காரன் என்பதற்கு என்ன அத்தாட்சி?''

''ஸில்வரை ஏன் காப்பாற்றினேன்? வொய் டிட் ஸ்டாண்டன் அண்ட் த ஓல்ட் வுமன் ஷூட் மி? (ஸ்டாண்டனும் கிழவியும் என்னை ஏன் சுடவேண்டும்?)''

இதைக் கேட்ட இங்க்லண்ட் சிறிது குழம்பினான். ''ஹூ ஈஸ் ஓல்ட் வுமன்? (கிழவி என்பது யார்)'' என்று வினவவும் செய்தான், குழப்பம் துளிர் விட்ட குரலில்.

இங்கு ஸில்வர் நகைத்தான். ''டோண்ட் யூ நோ இங்க்லண்ட்! அப்கோர்ஸ் தட் ஃபெலோ லெப்டினண்ட் ஸ்மித் ஈஸ் *ஓல்ட் வுமன். (உனக்குத் தெரியாதா இங்க்லண்ட்? லெப்டினண்ட் ஸ்மித்தின் பெயர்தான் கிழவி.)லெப்டினண்ட் ஸ்மித் காட் த் நேம் ஆஃப்டர் கார்வார் ஃபைட். யூ நோ ஹி வாஸ் வெரி ஸ்லோ ஈவென் ஹொய்ல் வித் ட்ராயிங் (அவனுக்குக் கார்வார் போரில் அந்தப் புனைபெயர் கிடைத்தது. பின்வாங்கும் போதும் தள்ளாட்டத்தைக் காட்டினான் ஸ்மித்)'' என்று விளக்கினான், ஸில்வர் நகைப்பின் ஊடே.

ஸில்வரை மேற்கொண்டு பேசவிடாமல் அனந்த் குறுக்கிட்டு, ''இங்க்லண்ட்! பிரிட்டிஷ் சோல்ஜர்கள் என்னைச் சுட முயற்சி செய்கிறார்கள். ஸில்வரை நான் காப்பாற்றுகிறேன். உங்கள் பக்கத்தில் நான் இருப்பதற்கு இன்னும் என்ன அத்தாட்சி வேண்டும்?'' என்று வினவினான்.

* Smith nick named, `The old Women' ordered Retrest and pulling off his red coat vanished - `Indian Pirates' —By R.N. saletore P.79.



இங்க்லண்ட் புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான். இருப்பினும் கேட்டான்:''நீ எங்களை என்ன செய்யப்போகிறாய் என்பதைச் சொல்லவில்லையே?'' என்று.

''இங்க்லண்ட்! என்னையும் உங்களையும் பிரித்துப் பேசுவதில்தான் உன் தவறு இருக்கிறது. நாம் என்ன செய்யப் போகிறோம் என்று நான் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன். இன்று இரவு பதில் சொல்கிறேன்'' என்றான் அனந்த். அவன் சொற்களில் ஒரு முடிவு இருந்தது. உறுதியும் ஒலித்தது. இப்படிச் சொல்லிவிட்டு அந்த அறையை விட்டு அகன்றான் அனந்த்.

ஸில்வரும் இங்க்லண்டும் அவனை அதற்குப் பின் உச்சி வேளைக்குப் பிறகே சந்தித்தார்கள். அவர்களுடன் மாலுமி விடுதியிலேயே உணவருந்த வந்தவன் அவன். அவன் முகத்திலிருந்த வியர்வையும், சட்டை, சராய் இவற்றில் காணப்பட்ட ஈரமும் அவன் நல்ல வெயிலில் கடலோரத்திலோ கடலிலோ சஞ்சரித்து வந்திருக்கிறான் என்பதை உணர்த்தினாலும் இருவரும் அவனை ஏதும் கேட்கவில்லை.

உணவருந்திய பின்பு அறைக்கு அவர்களுடன் வந்த அனந்த் தரையில் படுத்து உறங்க ஆரம்பித்தான். அவன் எதைப் பற்றியும் நினைக்காமல், கவலைப்படாமல் உறங்குவதைக் கண்ட இங்க்லண்ட் பெரிதும் ஆச்சரியத்துக்குள்ளானான். ஆனால், அதைப் பற்றிச் சிறிதும் லட்சியம் செய்யாத ஸில்வர் தன் பையிலிருந்த இரண்டு காகிதத் துண்டுகளையும் ஒரு டப்பியையும் எடுத்தான். டப்பியிலிருந்த புகையிலைத் தூளைக் காகிதத் துண்டில் கொட்டிக் காகிதத்தைச் சுருட்டி சிகரெட் தயார் செய்து அதைப் பற்ற வைத்துக்கொண்டு இங்க்லண்டிடமும் சிகரெட் சாமக்கிரியைகளை நீட்டினான். இங்க்லண்ட் சிகரெட்டை நிர்மாணித்துப் பற்ற வைத்துக்கொண்டு தரையில் உட்கார்ந்து சுவரில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டான்.

கிட்டத்தட்ட மாலை நெருங்கும் நேரத்தில் கண்விழித்த அனந்த் மற்ற இருவரையும் நோக்கிப் புன்முறுவல் செய்தான். ''அதிக நேரம் தூங்கிவிட்டேன்!'' என்று மன்னிப்புக் கேட்கும் பாவனையில் கூறிவிட்டு வெளியே சென்றான். விளக்கு வைத்த பிறகு அவன் மீண்டும் திரும்பியபோது பழைய கிழிந்த உடைகளுக்குப் பதில் புத்தாடை அணிந்திருந்தான். அந்த உடையில் அவன் தோரணை ராஜ தோரணையாய் இருந்தது, ''ஒரு பெண்ணைச்

சந்திக்கச் செல்லும்போது பார்ப்பதற்குக் கண்ணியமாய்ச் செல்ல வேண் டும்'' என்று, தான் புத்தாடை அணிந்ததற்குக் காரணம் சொன்னான்.

''ஸில்வர்! நீங்கள் இருவரும் இங்கேயே இருங்கள். பன்னி ரண்டு மணிக்கு உங்களைச் சந்திக்கிறேன்'' என்று கூறிவிட்டு அவர்கள் பதிலுக்குக் காத்திராமல் மறுபடியும் வெளியில் சென்றுவிட்டான்.

அறையைவிட்டுக் கிளம்பிய அனந்த், மாலுமி விடுதியின் முகப்புப் படிகளுக்கு வந்ததும் மேல் படியில் நின்றபடியே தூரத்தே கடலுக்கருகே வெள்ளிய மணற்பரப்பை அடுத்திருந்த தென்னஞ் சோலையைக் கவனித்தான் சில விநாடிகள்.

அப்பொழுதுதான் வானத்தில் கிளம்பிய நான்காம் பிறைச் சந்திரன் லேசான கிரணங்களைக் கடல் அலைகள் மீது பரப்ப முற்பட்டு, தனது பலவீனத்தைக் காட்டினான். ஆனால், அத்தனை பலவீனத்திலும் கடற்கரையோரமாக இருந்த வெள்ளை மணலை அதிக வெள்ளையாக்கவும், பசுமையான தென்னஞ்சோலையைச் சிறிது கருமையாகச் செய்யவும் அவனால் முடிந்தது. பூரணத்வம் பெறாததால் பலவீனமாகக் காட்சியளித்த அந்தப் பிறை மதியின் கிரணங்களில்கூட ஓரளவு ரம்மியம் இருக்கத்தான் செய்தது என்பதை உணர்ந்த அனந்த், படிகளில் இறங்கித் தென்னந்தோப்பை நோக்கி மிக நிதானமாக நடந்து சென்றான்.

சோலையை அடைந்ததும் மிகுந்த எச்சரிக்கையுடன் அதில் நுழைந்த அனந்த் சோலையின் முகப்பிலிருந்து பத்தடி தள்ளியிருந்த நான்கு தென்னை மரங்களின் நடுவில் பிணைக்கப்பட்டுத் தொங்கிய மரக்கொடி ஊஞ்சலொன்றில் வெள்ளை வெளேரென்ற சேலையை உடுத்தி அப்சரஸ் போல் அமர்ந்திருந்த ராணியைக் கண்டான். கண்ட பின் நகரவில்லை அவன். திடீரென்று நகர முற்பட்டபோது அவன் போக்கு மிக விபரீதமாயிருந்தது. இரண்டே எட்டில் பத்து அடிகளைக் கடந்த இந்திரஜித், மரக்கொடி ஊஞ்சலி லிருந்த அவளை அப்படியே தழுவிக்கொண்டு தரையில் விழுந்தான். தரையில் விழுந்தவன் தழுவலைத் தளர்த்தாமல் அவளைக் கட்டிக் கொண்டு மும்முறை மணலில் புரண்டான். பிறகு அவள் இடையில் கை வைத்துச் சேலையைச் சிறிது நெகிழ்த்தவும் தொடங்கினான்.

### அத்தியாயம் - 8

# விளங்காத நேரம்!

**க**ணவேகத்தில் பாய்ந்து வந்து தன்னைக் கட்டித் தழுவித் தூக்கிக் கடல்மணலில் தள்ளி இறுக்கிய கைகளைத் தளர்த்தாமலே கடகடவெனப் புரண்டுவிட்ட இந்திரஜித் அனந்த், தன்னை மணலில் அழுத்திய வண்ணம் இடைச்சேலையை நெகிழ்த்திய போதுகூடக் கடல்ராணி சிறிதும் நிலைகுலைந்தாள் இல்லை. அவன் தழுவலோ, புரண்ட வேகமோ காமஇச்சையின் காரணமல்ல என்பதை அவள் சந்தேமற உணர்ந்திருந்தாளாதலால், சேலைக்கும் இடைக்கும் இடையே அவன் கைவிரல்கள் புகுந்தபோது அவற்றை அகற்றவோ, தன் உடலால் முரண்டு, அவன் ஆதிக்கத்தை நீக்கிக்கொள்ளவோ முயற்சி எடுக்கவில்லை அவள்.

அந்தச் சமயத்தில் இந்திரஜித் அனந்துக்கு இன்ப எண் ணங்கள் இம்மியளவும் இல்லை என்பதை அவன் அடுத்து எடுத்த நடவடிக்கை நிரூபித்தது. கடல் மணலில் அந்தக் கட்டழகியின் சரீரத்தை அழுத்திக் கிடந்த அனந்த், அவள் இடைக்குள் கையை விட்டு அங்கிருந்த சின்னஞ்சிறு கைத்துப்பாக்கியை மிகத் துரிதமாக எடுத்து, நீட்டிக் கிடந்த அவள் வலக் கையில் அதைத் திணித்து, ''வலதுபுறம் இருக்கும் தென்னை மரத்தின் இடப்புறத்தைநோக்கிச் சுட்டுவிடு'' என்று அவள் காதுக்கருகில் முணுமுணுத்தான்.

கடல்ராணியின் கை அடுத்தவிநாடி மின்னல் வேகத்தில் இயங்கியது. தலையைச் சிறிது லேசாக மரமிருந்த திக்கை நோக்கித் திருப்பிக் கடைக்கண்ணால் அனந்த் குறிப்பிட்ட தென்னையை நோக்கிச் சரேலெனக் கைத்துப்பாக்கியின் குதிரையை இழுத்துக் கணநேரத்தில் சுட்டுவிட்ட கடல்ராணி, அந்தத் திக்கில் 'தட்' என்று விழுந்துவிட்டது யார் என்பதை அறிய ஆவலுள்ளவளாக இருந் தாலும், தன்னை அழுத்திக் கிடந்த வலிய உடலை அகற்ற இயலாத வளாய், ''இனிமேல் ஆபத்து அந்த மனிதனால் வர முடியாதென்று நினைக்கிறேன்!'' என்று சொன்னாள், அனந்தை நோக்கி. சொன்ன தன்றிச் சிறிது புன்முறுவலும் கொண்டாள்.

அவள் சொன்ன சொல்லின் பொருள் அப்பொழுதான் புரிந்ததால் பெரிதும் சங்கடத்துக்குள்ளான அனந்த் சட்டென்று எழுந்திருந்து கடல் ராணியின் அழகிய உடலுக்கு விடுதலையளித்து விலகி நின்றான்.

''மன்னிக்கவேண்டும்,வேறு வழியில்லை'' என்று சங்கடம் குரலில் ஒலிக்கத் தனது விபரீதச் செயலுக்கு மன்னிப்பும் கேட்டான். கடல்ராணி அதற்குப் பதில் சொல்லாமலே தரையிலிருந்து எழுந்திருந்து இடையில் சரிந்து விட இருந்த தனது சேலையை எடுத்து மீண்டும் இறுகப் பழையபடி முடிந்துகொண்டாள். மேலே நெகிழ்ந்துவிட்ட தலைப்பையும் ஒரு சுழற்றுச் சுழற்றி வெளியே தலைகாட்டி முறைத்த மார்பின் இரட்டையழகையும் போர்த்தி மறைத்தாள். பிறகு தன்னால் சுடப்பட்டவன் யார் என்பதைப் பார்க்க வடக்குத் திசையிலிருந்த தென்னை மரத்தை நோக்கி நடந்தாள்.

அனந்த் அவளைத் தொடரவில்லை. திடீரெனத் தன்னைக் கவ்விவிட்ட பிரமைக்கு அடிமையாகி நின்ற இடத்திலேயே நின்றுவிட்டான். ஆபத்து அகன்றவுடன் தான் செய்த செயலின் விளைவுகளால், கண்முன்பு விளையாடிய விந்தைகளால், சுய நிலை இழந்து கிடந்தான் அவன். சுமார் இரண்டு மூன்று விநாடி காலம் கடல்ராணியின் கட்டமைந்த உடல் தன் சரீரத்துக்குக் கீழே கிடந்ததை அப்பொழுதான் எண்ணிப் பார்த்தான் அனந்த். அவள் எழுந்து கலைந்த சேலையைச் சீர்ப்படுத்தியபோதுதான், கட்டி வீழ்த்திய நிலையில் அவள் சேலை பலபடி நெகிழ்ந்து, பற்பல இந்திர ஜாலங்களை விளைவித்து விட்டது என்பதை உணர்ந்து கொண்டதால், அனந்தின் உள்ளத்தில் விவரிக்க இயலாத உணர்ச்சி அலைகள் மோதத் தொடங்கின.

அவள் வேகமாக மேலாடையைச் சுற்றி மறைத்ததற்கு ஒரு விநாடி முன்பு தன்னை நோக்கிக் கோபத்துடன் முறைத்த இரட்டை அழகுகளின் அளவையும் திண்மையையும் நினைத்துப் பார்த்த தால் ஏற்பட்ட மனநெகிழ்ச்சி அவனைச் சித்திரவதை செய்ய முற் பட்டது. அந்த அழகு தன் மார்பில் சற்று முன்பு அழுந்திக் கிடந்ததென்ற சிந்தனை அவன் சிந்தையை எங்கோ அள்ளிச் சென்றது. அவள் தென்னை மரத்தை நோக்கி நடந்து சென்றபோது இலங்கிய நுண்ணிடையைப் பின்புறத்திலிருந்து நோக்கிய அவன்,



அந்த இடையின் முன்புறத்தில் தனது கை நுழைந்தபோது அது எத்தனை மிருதுவாக இருந்தது, எத்தனை வழவழத்து இருந்தது, என்று எண்ணி, அந்த இடையில் அவள் கைத்துப்பாக்கியைச் செருகியிருந்ததால் அந்த இடம் கன்னிச் சிவந்திருக்குமே என்று மனத்தில் அனுதாபத்தையும் வளரவிட்டுக் கொண்டான். அந்த அனுதாபத்தின் விளைவாகக் கன்றியிருந்த அந்த இடத்தைப் பார்க்கலாமா என்ற யோசனைகூட அவன் மனத்தில் எழுந்தாலும், அப்படி ஏதாவது செயலில் தான் இறங்கும் பட்சத்தில் ராணி தன்னைச் சுடத் தயங்கமாட்டாளென்ற எண்ணத்தால் ஒரளவு புன்முறுவலையும் இதழ்களில் படரவிட்டுக் கொண்டான்.

தென்னையை நோக்கி ராணி அன்ன நடை போட்ட போது பின்புறம் இடைக்குக் கீழே அளவுடன் அசைந்த பின்னழகுகளின் எழுச்சியையும் திடத்தையும் முற்றும் பார்க்க முடியவில்லை யென்றாலும், சேலை அசைந்த விதத்திலிருந்து அவற்றின் நிலையை நன்றாகப் புரிந்து கொள்ள முடிந்ததால், ஊகத்தால் ஏற்பட்ட சஞ்சலம் அவன் மனத்தைப் பெரிதும் ஆட்டிப் படைத்தது.

இத்தனைக்கும் ஒரு விஷயம் திட்டமாகப் புரிந்ததால் அனந்த் ஒருமுறை ஏக்கப் பெருமூச்சுவிட்டான். அவள் யாருக்கும் எட்டாக்கனியென்பதைப் பல காரணங்களால் அவனால் சந்தேக மற உணர முடிந்தது. தான் அவளைக் கட்டித் தூக்கிக் கீழே புரண்டது வேண்டுமானால் எதிர்பாராத செய்கையாக இருக்க லாமேயொழிய, ராணி தன் கீழே கிடந்த சமயத்தில் அவள் சுயநிலை அடைந்துவிட்டாள் என்பதை நினைத்துப் பார்த்த அனந்த், ராணி மட்டும் இஷ்டப்பட்டிருந்தால் கையை என்னிடமிருந்து விடுவித்துக்கொண்டு என் வயிற்றில் சுட்டிருக்கலாம் என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

'அப்படி அவள் சுட்டிருந்தால் எனக்கு வீர சொர்க்கம் கிட்டியிருக்கலாம். ஆனால், சற்று முன்பு சில விநாடிகள் அனுபவித்த இன்ப சொர்க்கம் கிட்டியிருக்காது' என்று நினைத்துப் பார்த்ததால் அவன் உதடுகளில் விரிந்த புன்சிரிப்பு, மகிழ்ச்சிச் சாயையை அவன் முகம் பூராவும் படரவிட்டது. ராணி தன் கீழே கிடந்த சமயத்தில் அவள் மலர் உடலின் பல பகுதிகள் சட்டென்று இறுகிவிட்டதுகூட அந்தச் சமயத்தில் அவன் நினைவுக்கு வரவே,

அப்படி இறுகியது இச்சையாலல்ல, சினத்தால், அத்துமீறிய என் செய்கையால், வெறுப்பால், என்று முடிவு கட்டினான் அனந்த்.

கீழே அவள் விழுந்து கிடந்த சமயத்தில் அவள் கால் சேலை சிறிது மேலே ஏறிவிட்டதால் வழவழத்த அவள் ஆடுதசைப் பகுதி தனது காலில் இழைந்ததையும், இழைந்த சமயத்தில் தன் கால் சராய் இடையே தடுத்தும்கூடத் தன் உணர்ச்சிகள் மின்னலாகத் தன்னை ஊடுருவிவிட்டதையும் எண்ணிப் பார்த்த அனந்த், ''எத்தனை அநாகரீகமாக நடந்துவிட்டேன் நான்?' என்றும் தன்னைக் கண்டித்துக்கொண்டான். இருப்பினும் அந்தக் கண்டிப்பு பொய்க் கண்டிப்பு என்பதை உணர்ந்ததால், 'சமயம் வரும்போது எந்த ஆண் மகனும் அயோக்கியன்தான்' என்று ஆண் வர்க்கத்தின் அவல நிலைக்குச் சமாதானம் சொன்னான்.

சொந்தக் குற்றங்களுக்கு வர்க்கத்தின் மேல் பழிபோடுவது மனித இயற்கையாதலால், அந்த இயற்கைக்குத் தானும் விலக்கல்ல என்பதை அந்தச் சந்தர்ப்பத்தில் அனந்தும் நிரூபித்தான். இப்படி கடல்ராணியை, அவள் அழகின் சிறப்புகளை, மர்மங்களை, விலாசங்களை எண்ணி எண்ணி நிலைகுலைந்து நின்ற அனந்தை ராணியின் அழைப்புக் குரல் சுயநிலைக்குக் கொண்டு வந்தது.

''இப்படி வாருங்கள்'' என்ற ராணியின் அழைப்பால் மீண்டும் இந்த உலகத்துக்கு வந்த இந்திரஜித் அனந்த், அவள் இருந்த இடத்தை நோக்கி நடந்தான். அவன் அங்கு சென்றதும் அவள் மீண்டும் பழையராணயாகிவிட்டதுடன் கம்பீரத்துடன் மிக அலட்சியமாகக் காலடியில் விழுந்து கிடந்த உடலை அவள் பார்த்துக்கொண்டு இருந்ததையும் கண்டதால், உணர்ச்சிகளை அடக்கும் துரிதத்தில் ராணிக்கு இணை ராணியே என்பதைப் புரிந்துகொண்டான். அதுமட்டுமல்ல அவன் புரிந்துகொண்டது, ராணியிடம் எத்தனை அழகிருந்ததோ அத்தனை ஆபத்தும் இருந்ததை அனந்த் புரிந்து கொண்டான்.

அவள் மிக துரிதமாகச் சிறிதும் குறி தவறாமல் சுட்ட துப்பாக்கியின் ரவை கீழே கிடந்த மனிதனின் இரு புருவங்களுக்கு ம் இடையே பொட்டு வைத்ததுபோல் பாய்ந்திருந்ததையும், அது பாய்ந்த விநாடியில் அந்த மனிதனின் உயிர் பறந்துவிட்ட தென்பதையும் கண்டுகொண்ட இந்திரஜித், 'கடல்ராணி அபாய மானவள்' என்று பரவியிருந்த வதந்தி சிறிதும் பொய்யல்ல என்று



தீர்மானித்தான். ஒரு மனிதனைக் கொலை செய்துவிட்ட ராணி, அதனால் எந்தவித மாற்றமும் அடையாமல் நின்றிருந்ததைப் பார்த்த அனந்த் இத்தகைய கொலைகள் அவளுக்குப் புதிதல்ல என்பதையும் உணர்ந்து கொண்டதால், 'அத்தகைய ஒரு கடுமை ஒரு பெண்ணிடம் எப்படி இருக்கமுடியும்?' என்று எண்ணி விடை கிடைக்காமல் தவித்தான்.

அவன் தவித்ததைப் பற்றி அறியாமலும், அறிய ஆசைப் படாமலும் ராணி கேட்டாள்: ''இவன் யார்?'' என்று.

''ஸாத் ஸித்தியின் படைத் தலைவன். பெயர் யாகூப்'' என்றான் அனந்த் மிக மெதுவான குரலில்.

''இங்கு எதற்காக வந்தான்?'' ராணியின் கேள்வி சர்வ சாதாரணமாக - எந்தவித உணர்ச்சியுமில்லாமல் உதிர்ந்தது உதடு களிலிருந்து.

இந்திரஜித் மாண்டு கிடந்தவனைப் பார்த்தபடியே பதில் சொன்னான் ராணிக்கு: ''ஸ்டாண்டனும் ஸ்மித்தும் எதற்காக வந்தார்கள்?''

புரிந்ததற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தாள் ராணி. ''என்னைத் தூக்கிப் போகத்தான் வந்தானா?'' என்று கேட்கவும் செய்தாள்.

''ஆம் ராணி'' என்றான் அனந்த்.

''இவனை எப்பொழுது, எப்படிப் பார்த்தீர்கள்?'' என்று ராணி கேட்டாள்.

''இன்று பகலிலேயே பார்த்தேன். வணிகர் படகுகளுடன் கலந்து ஒரு தனிப்படகில் வந்தான். இவனையும் வணிகனென்று நினைத்ததால் உங்கள் காவலர் இவனை மடக்கவில்லை. அகஸ்மாத்தாகக் கடல்புறத்தில் நான் மட்டும் இவனைத் தூரத்திலிருந்து பார்த்தேன். படகிலிருந்து எழுந்தபோது அவன் இடைக் கச்சையிலிருந்து ஒரு காகிதம் விழுந்தது. படகை அவன் கட்டிச் சென்ற பின்பு நான் படகை அடைந்து அதை எடுத்துக் கொண்டேன். அதிலிருந்து அவன் யாரென்பதையும் வந்த பணி என்ன என்பதையும் புரிந்துகொண்டேன்'' என்று விளக்கிய அனந்த், ''இதோ அந்தக் கடிதம்!'' என்று கூறிக் கடிதத்தைத் தனது

கச்சையிலிருந்து எடுத்து அவளிடம் நீட்டினான். ராணி அதைப் பிரிக்கவோ படிக்கவோ முயலவில்லை. வாங்கித் தனது இடையில் செருகிக்கொண்டாள்.

துப்பாக்கிச் சத்தம் கேட்டதால் விரைந்து வந்த தனது காவலரிடம், இறந்தவன் சடலத்தைக் காட்டி, ''எடுத்துச் செல் லுங்கள்'' என்று உத்தரவிட்டு அவர்கள் அந்த உடலைத் தூக்கிச் சென்றதும் மீண்டும் சோலைக்குள் நுழைந்தாள் கடல் ராணி.

அனந்தும் அவளைத் தொடர்ந்தான், பழைய எண்ணங்கள் உள்ளத்தில் சுழல, கடல் ராணியின் இதயத்திலும் ஏதோ எண் ணங்கள் சுழன்றாலும் அவள் அவற்றை வெளி காட்டாமல் தென்னை மரத்துக்கிடையே தொங்கிக்கொண்டிருந்த கொடி ஊஞ்சலை நோக்கி நடந்தாள். அதை அணுகி உட்காருமுன்பு கீழே தான் விழுந்து உருண்ட இடத்தை நின்று கவனித்தாள் சில விநாடிகள். தான் உருண்ட இடங்களில் இருந்த மணலின் சிதைவைக் கவனித்துப் புன்முறுவல் கொண்டாள். அடுத்துத் தன்னைக் கீழே வீழ்த்தி அனந்த் அழுத்திப் பிடித்தபோது தன் உடல் கிடந்த இடத்தில் தனது தலையும் முதுகுப்புறமும், கால்களும், விசிறிக் கிடந்த கைகளும் தீட்டியிருந்த மணல் சித்திரத்தைக் கவனித்தாள். அவற்றில் தன் பின்னெழில்கள் பதிந்து கிடந்த இடம் சிறிது ஆழமாகவே இருந்ததைப் பார்த்து, 'இயற்கையே இயற்கை யைக் காட்டிக் கொடுக்கிறது.' என்று நினைத்தாலும், 'இதை இவரும், பார்த்திருப்பாரோ' என்ற இன்பத் திகிலாலும் சிறிது சங்கடத்துடன் அசைந்தாள் கடல்ராணி.

கடல்ராணி சட்டென்று கொடி ஊஞ்சலுக்கு முன்பாகவே நின்றுவிட்டதையும்,அவள் பார்த்த மணற் சித்திரத்தையும் கண்ட அனந்தின் உணர்ச்சிகள் மீண்டும் சுடர்விடத் தொடங்கின. அவள் பின்னெழில் புதைந்த இடத்தை அவனும் கவனிக்கவே செய்தான். அந்தச் சமயத்தில் அந்தச் சித்திரத்தைக் கலைக்கக் காலால் மணலைத் தள்ள முயன்ற ராணியின் காலைச் சிறிது குனிந்து பிடித்த அனந்த், ''வேண்டாம் ராணி!அதைக் கலைக்க வேண்டாம்'' என்றும் கேட்டுக் கொண்டான்.

தலையைச் சிறிது திருப்பி அனந்தைப் பார்த்தாள் ராணி! அந்தப் பார்வையில் ஒளிவிட்ட சிரிப்பு அனந்தின் மனத்தை ஒரு



உலுக்கு உலுக்கியது. அவள் செவ்விய உதடுகளில் விரிந்த புன் சிரிப்பு அவனை வேறு உலகத்திற்கு அழைத்துச் சென்றது. ''ஏன் வேண்டாம்?'' என்று வெளிப்பட்ட அவள் கேள்வியில் இருந்த குழைவு அவனுக்கு மோகனவலை விரித்தது.

அந்தச் சமயத்தில் அவன் கை, அவள் காலை முழந்தாளுக்குச் சிறிது மேலேதான் பிடித்திருந்தது. ஆனால் அந்தப் பிடி நகர்ந்தது சிறிது மேலே. ராணி அவனைத் தடுக்கவில்லை. அதனால் உண்டான தைரியத்தாலோ என்னவோ அவன் இடது கை அவள் இடையில் தவழ்ந்தது; சுற்றி வந்தது. கைத்துப்பாக்கியைச் செருகியிருந்த இடத்தை இரண்டு விரல்கள் தடவிப் பார்த்தன- அங்கு கன்றி விட்டதா என்று கவனிக்க!

ராணி ஆடாமல் அசையாமல் நின்றாள். அனந்த் தன்னைப் பின்னால் நெருங்குவதை உணர்ந்தாள். உணர்ந்த பின்னும் தடுத்தாளில்லை. உணர்ச்சிப் பெருக்கால் 'ஹூம்' என்று தடை விதித்தாள் அவள். ஆனால், அது தடையாகத் தெரியவில்லை. அழைப்பாகவே தோன்றியது அனந்துக்கு. மிக நெருங்கினான் அவன். அவள் பின்னால் அவன் உடல் இழைந்தது மெதுவாக. இழைந்ததா இணைந்ததா விளங்கவில்லை அவளுக்கு. விளங்காத நேரம் அது.

## அத்தியாயம் - 9

# அக்ஷரலக்ஷம்!

**நா**ழிகைகள் பத்து ஓடிவிட்டதால் நாலாம்பிறைச் சந்திரன்
இலேசாக மங்கத் தொடங்கி விட்டதனாலும், தென்னை மர ஓலை
களின் இடுக்குகளின் வழியாக அதுவரை பாளம் பாளமாகச் சோலை
களின் பல பகுதிகளில் பாய்ச்சியிருந்த நீண்ட ஒளி வீச்சுகள் கூட
மறையத் தொடங்கிவிட்ட காரணத்தினாலும் மேதைகள் மறைந்த
இடத்தில் முளைக்கும் சிற்றறிவாளர்களைப் போல, வானத்தில்
எழுந்துவிட்ட ஏராளமான நட்சத்திரங்களின் வெளிச்சம் அதிகப்
பலனை அளிக்காததனாலும் ஏற்பட்டிருந்த மோகனச் சூழ்நிலையில்
மூழ்கி நின்ற இந்திரஜித் அனந்த் சுயநிலையை அடியோடு இழந்து
கிடந்தான்.

அதன் விளைவாக ஒரு கையைக் கடல்ராணியின் இடை
யிலே தவழவிட்ட அனந்த், இன்னொரு கையை அவள் தோள்மீது
படரவிட்டுத் தன்மீது லேசாக அவள் உடலைச் சாய்த்துக் கொண்
டான். பின்புறமாகத் தன்மீது சாய்ந்த அந்த உடலுக்குத் தன்னை
அடியோடு உலுக்கிவிடும் சக்தி உண்டென்பதை அதுவரை அறியாத
அனந்த் உணர்ச்சிப் பெருக்கால் அவள் தலையை நோக்கிக்
குனிந்தான். அவள் குழலில் இறங்கிய அவன் முகவாய்க்கட்டை
தலையை லேசாகத் தொட்டபோது குழல்களிலிருந்து கிளம்பிய
சாம்பிராணி வாசனை அவன் நாசிகளில் புகுந்ததால் அவள் நீராடி
தூபம் போட்டு வந்தது அவள் கருங்குழலுக்கா, தனது உணர்ச்சி
களுக்கா என்பதை அவனால் நிர்ணயிக்கமுடியவில்லை.

சாதாரணமாகவே உறக்க நிலையை அடைந்துவிடும் அவன்
மனம் அப்பொழுது பெரிய இன்பநித்திரையை நோக்கிப் போய்க்
கொண்டிருந்தது. அப்படி நித்திரையை நோக்கிச் செல்லும் தனது
மனதுக்கு அவ்வப்போது சவுக்கடி கொடுத்து எழுப்பித் தனது
வழக்கமான துரிதத்துக்கு இயக்கக்கூடிய வன்மை அவளது பின்புற
எழில்களுக்கு இருந்த காரணத்தால் எப்பொழுது எரிமலை



வெடிக்குமோ என்ற அச்சத்திலும் அவன் துணிவு நெஞ்சம் ஆழ்ந்து
கிடந்தது. அந்த அச்சத்தின் விளைவாகவோ வேறு என்ன
காரணத்தாலோ, அவள் தோளில் பதிந்த வலது கை அவள் தோளை
இறுகப் பற்றியது. இடையைச் சுற்றிய இடது கையும் கன்றிச் சிவந்த
அவள் இடையின் இடத்தை வலிக்கும்படியாகப் பற்றியும்
தடவியும், விரல்களை அகல விரித்துப் பதித்தும், பாறை
உச்சிகளை நாடும் காட்டுக் கொடியின் வளை சுருள்களைப் போல்
திண்டாடிக்கொண்டிருந்தது. இந்த இந்திர ஜாலத்தில் சிக்கிய
மனமும் அளவு மீறிய உணர்ச்சிகளால் பற்றப்பட்டதால் இன்ப
வேதனையில் சுழன்றான் அனந்த்.

அந்த வேதனையில் அவளும் பங்கு கொண்டிருக்க வேண்
டும். இல்லையேல் அவள் உடல் ஏன் அப்படிச் சங்கடப்பட்டு
அசைய வேண்டும்? இடையிலிருந்த கையையும் தோளுக்கு
மேலிருந்த கையையும் அவள் ஏன் உதறித்தள்ள வில்லை? தோளி
லிருந்த கை சிறிது கீழே இறங்க முற்பட்டதும் எதற்காக அப்படி
நெளிந்து அதற்கு இடம் கொடுக்கிறாள்? கேள்விகளுக்கு இடம்
தராத நிலை அது. எந்தச் சமயத்தைச் சேர்ந்தவனும் சிக்கித்
தவிக்கும் சந்தர்ப்பம் அது. இதில் ஜாதியில்லை, பேதமில்லை.
இனபேதம் கூட அழிந்து போகும் நிலை அது. இனங்கள்
இரண்டும் இணைய முற்படும்போது உணர்ச்சி வெள்ளம் சகல
பேதங்களையும் அழித்துவிடுவதால் எப்பேர்ப்பட்ட பலசாலியும்
பலவீனப்படும் அந்த நேரத்தில் அனந்த், ராணி இருவருமே
பலவீனப்பட்டு நின்றார்கள். இரண்டு பேரில் ராணியின் நிலை
மிகப் பலவீனமாக இருந்தது.

தான் எப்பேர்ப்பட்ட ராணியானாலும், தன்னை அடக்க
மால்வானுக்கு வந்த பலரும் தோற்று ஓடிவிட்டாலும்,
தன்னையும் அடக்க, தன் உணர்ச்சிகளையும் ஈர்க்க ஒருவன் வந்து
விட்டான் என்பதை அனந்தின் கர ஸ்பரிசம் ஏற்பட்ட முதல் சில
விநாடி களுக்குள்ளாகவே அவள் புரிந்துகொண்டாள்.

'சற்றுமுன்பு ஒற்றன் ஒருவனை மிகத் துணிகரமாகச் சுட்ட
தனது கை ஏன் இப்படி நடுங்குகிறது?' என்று ஆராய்ந்து பார்த்த
ராணி, அதற்குக் காரணம் பின்னால் இணைந்து நின்ற இந்திரஜித்
அனந்த்தான் என்பதை அறிந்துகொண்டாள். கேவலம் அரைநாளே

பழகிய அனந்திடம் அத்தனை பற்றுதல் தனக்கு எப்படி ஏற்பட்டது என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டாலும் விஷயம், காரண காரியங்களுக்கு அப்பாற்பட்டது என்பதை உணர்ந்து கொண்டாள்.

அவள் இதயம் இப்படியெல்லாம் பேசிக்கொண்டிருந்ததால் உதடுகள் உதிர்க்கவில்லை சொற்களை. வழவழப்பும் நீரோட்டமும் உள்ள உதடுகள் உணர்ச்சி மிகுதியில் மடிந்து மடிந்து இரண்டு மூன்று முறை திறந்ததால் அவற்றில் ஏற்கெனவே பளிச்சிட்ட ஈரம் அதிகமாகி அவற்றுக்கு எல்லை இல்லா அழகையும் இம்சையையும் அளித்தன. அந்தச் சமயத்தில் அனந்த் தனது முகவாய்க்கட்டையை அவள் குழலிலிருந்து அகற்றிப் பக்கப்புறமாக வந்து லேசாக அவள் கழுத்தில் முகத்தைப் புதைக்கவே அவள் உதடுகள் சீற்றமடைந்திருக்க வேண்டும். ''அங்கென்ன இருக்கிறது அப்படி மதுரமாக?'' என்று. ஆனால், உள்ளே ஓடிய உணர்ச்சிகளால் அவள் கழுத்து மேலே நீண்டு அவன் இதழ்கள் அதிகமாகப் புதைய இடம் கொடுத்து, அதரங்களின் இறுமாப்பை அடக்க இதுதான் சமயமென்றும், தன்னிடமும் தனிப்பட்ட ரஸம் உண்டென்பதையும் நிருபித்து, தலையை அவள் தூக்கியதால் நீண்ட அவள் கழுத்தில் புதைந்த அவன் வலிய உதடுகள் மேலும் கீழும் சஞ்சரிக்கவே அவள் அடியோடு நிலைகுலைந்து மெள்ளச் சரியத் தொடங்கிய மேலாடையைக் கூடத் தூக்கிவிட்டுக் கொள்ளத் திராணியற்றவளாகத் துவண்டாள்.

கழுத்தில் புதைந்த உதடுகளில் கடுமையும், மேலுதட்டில் வளர்ந்த அரும்பு மீசை அளித்த இம்சையும் அவளுக்குத் தேவையாக இருந்திருக்க வேண்டும். இல்லையேல் அவள் ஏன் கழுத்தை அப்படி அசைக்கிறாள்? கழுத்தைத்தான் அசைத்தாள். தரையில் ஊன்றிய கால்களை ஏன் மெள்ள அசைத்தாள்? அசைத்த அவள் இரு பாதங்களும் எதற்காக அப்படித் திரும்ப வேண்டும்? கால் கட்டை விரல்கள் எதற்காக அரை வட்டங்களை மணலில் வரைய வேண்டும்?

நொண்டி பிடித்து விளையாடும் விளையாட்டுக்குக் குந்தம் போடுவதுபோல் சக்கரங்களை மணலில் தீட்ட முயன்ற கமலப் பாதங்களின் கட்டை விரல்கள் அரை வட்டக் கோடுகளைத்தான் வரைய முடிந்தது. அப்படித் திண்டாடிய கால்களை அவள் வண்டு



விழிகள் நோக்கின. சற்று எட்ட மணலில் தெரிந்த அவள் பழைய சித்திரமும் பின்னெழில் பதிந்ததால் ஏற்பட்ட மணற் பள்ளங்களும் அவள் கண்களில் படவே வலது காலைச் சிறிது அகற்றிப் பள்ளங்களிலொன்றை மணலால் நிரப்பினாள் அவள்.

அதை அனந்தும் கவனித்தான். ஆகையால் இடது புறத்தில் பதிந்திருந்த மற்றொரு பள்ளத்திலும் மணலைத் தள்ளித் தன் காலால் அழித்தான். அத்துடன் தனது உதடுகளை அவள் கழுத்திலிருந்து நீக்கி அவள் காதுக்கு அருகில் கொண்டு வந்து, ''ராணி!'' என்று மிக மெதுவாக அழைத்தான்.

ராணி பேசும் சக்தியை இழந்திருந்ததால் ''உம்'' என்ற ஒரே உம்காரத்தை மட்டும் வெளியிட்டாள். அந்த உம்காரத்தில் மகிழ்ச்சி, வெட்கம், அச்சம் மூன்றுமே ஒலித்தன.

அதைக் கவனிக்கவே செய்தான் இந்திரஜித். ''நான்...'' என்று ஏதோ சொல்ல முயன்றான் மெதுவாக.

அவன் குரலில் இருந்தது அச்சமா, அழைப்பா, சமாதானமா என்று ஏதும் புரியவில்லை ராணிக்கு. ஆகவே மறுபடியும் அவள் 'உம்' கொட்டினாள்.

''நான் ...இது...'' உளறினான் இந்திரஜித்.

ராணியிடமிருந்து பதில் ஏதும் இல்லை. ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது. உடல் அசைந்து அவன் மேல் உராய்ந்தது ஒரு முறை.

''இது நான்...''

''உம்...''

''எதிர்பாராதது.''

''ஊம்...''

''எதையோ!''

''உம்...''

''தவிர்க்கப் போய் எதிலோ முடிந்தது. அவ்வளவுதான்.''

ராணியின் உதடுகளில் புன்முறுவல் படர்ந்தது. அந்த ஆண் மகனின் திண்டாட்டம் அவளுக்குக் கொண்டாட்டமாயிருந்தது. தோளிலிருந்து கீழ்நோக்கிப் படரத் துணிந்த அவனது வலது கையை

அவள் தனது வலது கையை உயர்த்திப் பற்றினாள். அவள் விரல்கள் அவன் விரல்களுடன் பின்னிக்கொண்டு இறங்க முயன்ற அவன் கையை மேலேயே தேக்கின. அவள் மலர் விரல்களுக்கு இருந்த வலுவைக் கண்ட அனந்த் பிரமித்தான். அவள் விரல்கள் பொதுவாக மென்மையாக இருந்தாலும் சில இடங்களில் காய்த்திருப்பதை உணர்ந்த அனந்த், அவை அவளது தொடர்ச்சியான துப்பாக்கிப் பயிற்சிக்கு அடையாளம் என்பதைப் புரிந்துகொண்டான். ஆனால், சுரசுரவென்ற அந்த வடுக்களை அடுத்து வழவழவென்று இருந்த விரல்களை மெல்ல நெறித்த இந்திரஜித், அந்தக் கடுமையும் வழவழப்பும் அடுத்தடுத்து இருப்பது அவள் வாழ்க்கை நிலையையும் குறிப்பதை உணர்ந்து கொண்டான்.

சதா எதிரிகளால் சூழப்பட்ட அந்த மலைக்காட்டு மலரை அடைய விரும்புபவன் இன்பம்- துன்பம் இரண்டுக்குமே தயாராக இருக்கவேண்டும் என்று சந்தேகமறப் புரிந்துகொண்டான் அனந்த் அந்த நேரத்தில். அந்தத் துன்ப முட்களுக்கு இடையே மென்மையான ரோஜா புஷ்பமும் இருப்பதால் ஒரு சமயத்தில் முள் குத்தினாலும் இன்னொரு சமயத்தில் வீசும் சுகந்தம் அந்தத் துன்பத்தை மறைத்துவிடும் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லையென்றும் உணர்ந்துகொண்டதால் அவள் அளிக்கும் சொர்க்கம் விலக்கத் தக்கதல்ல என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டான்.

அவன் அந்தத் தீர்மானத்துக்கு வருவதற்கும் சந்திரன் அஸ்தமித்து அந்தச் சோலையில் இருள் சூழ்வதற்கும் நேரம் சரியாக இருந்ததால், இருவர் இதய வேகமும் சந்திர கிரணங்களைப் போல் அஸ்தமிக்காமல் அதிகப்படவே ராணி அவன் கைகளில் மெள்ளச் சுழன்றாள். அந்தக் குறிப்பை அவனும் உணர்ந்துகொண்டான். குறிப்பால் உணர்த்துதல் என்று தமிழர்கள் சொல்வார்களே அது இதுவாகத்தான் இருக்குமோ என்று தன்னைக் கேட்டுக்கொண்ட இந்திரஜித், அவளை மெள்ளத் தன்னை நோக்கித் திருப்பினான். திருப்பிய அவளைச் சுற்றித் தன் கைகளைச் சுழலவிட்டு அந்தப் பூங்கொடி தொத்தி ஏறப் படல் அமைத்தான். பூங்கொடி தொத்தவும் இல்லை. ஏறவுமில்லை, படல்தான் நெருங்கியது, நெருக்கியது!

வேலி பயிரை மேயக் கூடாது என்பதுதான் விதி. ஆனால், விதிகள் உடையும் வேளைகள் உண்டு என்பதை அவர்கள் இருவர் நிலையும் நிரூபித்தது. அனந்த் தனது இதழ்களை அவள் கழுத்தின் முன்புறத்தில் தைரியமாகவே புதைத்தான். மீண்டும் அவள் தலை நிமிர்ந்தது. இதழ்கள் அவள் இதழ்களை நோக்கி வந்தன. அவள் இதழ்கள் மெள்ள விரிந்து உள்ளிருந்த இரு முத்துக்களை லேசாகக் காட்டின. விலைமதிக்க முடியாத அந்த முத்துக்கள் மீண்டும் ஒளி பரப்பினால் என்ன செய்வதென்ற அச்சத்தில் அந்த முத்துக்களை மறைத்துவிட்டான் அனந்த்.



உணர்விழந்த நிலையில் இருந்தாள் ராணி அந்தச் சமயத்தில் . ஏதோ ஒரு பெருமூச்சு, ஓர் 'உம்' இந்த ஒலிகளே வெளிவந்தன அவளிடமிருந்து. இதழ்களில் ஈரம் வறண்டுபோன ஓர் உணர்ச்சி அவளுக்கு. கண்கள் மூடிக் கிடந்தன. தவறில்லை அதனால். இரவில் இரவு அளித்த இருளில் பங்கஜம் எப்படித் திறந்திருக்கும்? முகக் கண்கள் மூடினாலென்ன மூழ்கிப் போய்விட்டது- அவள் இதயக் கண்கள்தான் திறந்திருந்தனவே. உடலெங்கும் பாய்ந்த மின்னல், அனலை வாரித் தெளித்தது உணர்ச்சிகள் வழியாக. கரை உடைந்த உணர்ச்சிகளால் காலம் கடந்தது தெரியவில்லை இருவருக்கும். காலம் என்பது ஓர் அளவுகோல்- இரவையும், பகலையும் அளப்பதற்கு. காதலுக்கு அது பயன்படுவதில்லை. காலத்துக்குக் கட்டுப்படாதது அது. இறைவன் அளித்த ஒரு விந்தை. அதைப் பழிப்பவர்களும் அதிலிருந்து விடுபடுவதில்லை. பழிப்பு உதட்டு அளவில். அனுபவம் உயர்ந்த அளவில். இது கயவர்களின் போக்கு.

சிருஷ்டியின் போக்கு அது அல்ல. இயற்கையின் போக்கும் அப்படி அல்ல. இணைந்து சோலையில் நின்ற அந்த இருவரும் இயற்கையால் உந்தப்பட்டார்கள். அதனால் ராணியின் தலை அவன் தோளில் சாய்ந்தது. அவள் கட்டை விரல்களைத் தரையில் ஊன்றிச் சற்றுத் தன்னை உயரமாக்கிக்கொண்டாள். அவன் மார்பில் புதைந்தன அவள் மார்புகள். இதயங்கள் நேருக்குநேர் இருந்ததால் ஏதோ பேசிக் கொண்டன. உறவாடும் நேரமும் மெள்ள மெள்ள நெருங்கிக் கொண்டிருந்தது.

காளிதாஸன் அந்த வேளையைப் பற்றி இப்படிச் சொன்னான்: 'யுவதி ஜனேஷு சனை:சனை: அனங்க.' யுவதிகளை மன்மதன் மெள்ள மெள்ள நெருங்கலானான் என்பது பொருள். 'மெள்ள மெள்ள' என்ற இரண்டு சொற்களுக்கு அக்ஷரத்துக்கு லக்ஷம் பொன் கொடுக்கும்படி போஜ மகாராஜா உத்தரவிட்டான். அனங்கன் முறையே மெள்ள மெள்ள அணுகுவதுதான், அது அளிப்பதுதான் இன்பச் சித்ரவதை.

அத்தியாயம் - 10

# பாய்ந்து வந்த கிளி!

இன்பச் சித்ரவதைக்கு இலக்காகி, உணர்ச்சிகளால் உந்தப்பட்டதால் ஊமைகளாகி, ஒன்றிவிட்ட மனங்களால் ஓடும் காலத்தின் துரிதத்தை உணராமல் நின்றுகொண்டிருந்த அந்த இருவரையும், தென்னஞ்சோலைக்கு இடையே இருந்த இரண்டு முந்திரி மரங்களில் உறங்க முயன்ற கிள்ளைகளின் சப்தமோ, குயில்களின் இனிய கீதமோ, காதல் என்னும் கடும் சுழலிலிருந்து மீட்க முடியவில்லை என்றால், கீழே விழுந்து கிடந்த முந்திரிப் பழுப்புகளைச் சலசலவென்று அசைத்து ஓடித் தென்னை மரமொன்றில் ஏற முற்பட்ட ஓணானின் அபசப்தங்கூட அவர்களை விலக்க வல்லமையற்றதாயிற்று. சகல சப்தங்களுக்கும் அப்பாற் பட்ட இன்பமந்திரம் இருவர் இதயங்களிலும் பெரிதாக ஒலித்துக் கொண்டிருந்தது.

ஆனால், அந்த இன்ப மந்திரத்தையும் மீறக்கூடிய வலிமை சில கர்ம வீரர்களுக்கு உண்டு என்பதை இந்திரஜித் அனந்த் அந்தச் சமயத்தில் நிரூபித்தான். அந்த ஏந்திழை, அவன் உடலுடன் இழைந்த நேரத்தில் அவன் மனக்கண் முன்பு வேறொரு உருவம் எழுந்தது. 'இதற்குத்தான் உன்னை அனுப்பினேனா?' என்று அந்த உருவம் கேட்டது.

'இல்லை, இல்லை' என்று உள்ளுக்குள்ளேயே அந்த உருவத்துக்குப் பதில் சொன்னான் அவன்.

மேற்கொண்டு அந்த உருவம் கேள்விகளை வீசவில்லை. 'சிந்து துர்க்கத்தைப் பார்' என்று மட்டும் சொல்லிவிட்டு மறைந்துவிட்டது.

அது வந்துபோன அந்த ஒரு விநாடியில் அவன் உணர்ச்சிகள் உறைந்தன. அதன் விளைவை அவன் கையிலிருந்த கட்டழகிகூட உணர்ந்தாள். முரட்டுத்தனமாகத் தன்னைக் கட்டி நின்ற கைகள் சிறிது பலவீனப்பட்டுவிட்டதையும், தன் கால்களை நெருங்கிய



கால்களும் சிறிது இடைவெளி கொடுத்து விலகிவிட்டதையும், கடல்ராணி உணரவே செய்தாள். அந்தத் திடீர் மாற்றத்துக்குக் காரணம் அவளுக்குப் புரியவில்லை!

இத்தகைய சந்தர்ப்பங்களில் பலவீனப்படுவதும், கருத்தழிந்து போவதும் இயற்கையே என்பதையும், அநாதி காலமாக மனித சரித்திரமும் புராணங்களும் போதித்த பாடம் என்பதையும் அவள் உணர்ந்தேயிருந்ததால் தான் நிலைகுலைந்த சமயத்தில் அனந்த் மட்டும் எப்படித் தன்னைத் திடப்படுத்திக் கொண்டான் என்பதை அறியமுடியாமல் தவித்தாள்.

பிரிவு அவளுக்கு வேதனையைத் தந்தது. சோதனையாகக்கூட இருந்தது. தன்னை அணுக முயன்ற எத்தனையோ வாலிபர்களைத் தூக்கி எறிந்த தன் மனம் ஒரே நாள் பழகிய இந்திரஜித் அனந்திடம் ஏன் அடிமையாகி விட்டது? அவன் கைகள் சற்று விலகியதும் தன்னுடைய உடல் எதற்காக இப்படி நடுங்குகிறது? என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள். ஆகவே, 'திடீரென இவருக்கு என்ன வந்துவிட்டது? ஏன் என்னைவிட்டு விலகுகிறார்?' என்று வினாவை யும் தொடுத்தாள்.

வாயால் அவள் அதைக் கேட்கவில்லைதான். ஆனால், அவனே சொன்னான்: ''ராணி, எந்த மனிதனும் கடமைக்கு அடிமை. சில நேரங்களில் அதை மறந்துவிடுகிறான்'' என்று.

அவள் பதில் ஏதும் சொல்லவில்லை. ''உங்கள் கடமை இன்னதென்று இன்னும் எனக்குப் புரியவில்லை'' என்று சில விநாடிகளுக்குப் பிறகு சொன்னபோதும் அவள் குரலில் பலவீனம் அதிகமாயிருந்தது.

அவளைத் தழுவி நின்ற கைகள் பூரணமாக அகன்று அவளுடைய அழகிய தோள்கள்மீது பதிந்தன! ''ராணி! முற்றிலும் இப்போது புரியவைக்க என்னால் முடியாது. ஆனால், ஒன்று சொல்ல முடியும். சிந்துதுர்க்கத்துக்கும் என் கடமைக்கும் மிகுந்த சம்பந்தம் இருக்கிறது. ஆகவே என் கடமைக்கும் உனக்குங்கூட சம்பந்தம் இருக்கிறது'' என்றான் அனந்த்.

இதைக் கேட்ட ராணியின் கண்கள் அந்த இருட்டிலும் இரண்டு நட்சத்திரங்களைப் போல் ஜொலித்தன. ''சிந்து துர்க்கத்தின்

தலைவி நான் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். என் அனுமதியின்றி இங்கு நீங்கள் எதுவும் செய்ய முடியாது'' என்று கூறினாள் ராணி. அவள் குரலில் கோபம் சற்று அளவுக்கு அதிகமாகவே ஒலித்தது.

''அப்படி நான் நினைக்கவில்லை.'' சர்வசாதாரணமாகப் பதில் கூறினான் அனந்த்.

''நினைக்கவில்லையா?''

''ஆம்.''

''ஏன்?''

''உன்னைத் தூக்கிக் கொண்டுபோக இன்று காலை இரு வெள்ளைக்காரர்கள் வந்தார்கள்... பிறகு ஒரு கொள்ளைக்காரனும் வந்தான்.சற்று முன்பு ஒரு முஸ்லிம் வீரனும் வந்தான். நானும் சிந்து துர்க்கத்தில் யார் அனுமதியும் இல்லாமல் நுழைந்திருக்கிறேன். நான் ஓர் இந்து. இப்படியாக உன்னைத் தூக்கிக் கொண்டு போவதில் சகல மதத்தினரும் அக்கறை காட்டுகிறார்கள். எப்படியோ சகல மதத்தினரையும் சமரசப்படுத்தும் வலிமை உன்னிடம் இருக்கிறது'' என்று கூறி இலேசாகச் சிரித்த அனந்த், ''இன்று காலையிலிருந்து ஏற்பட்ட நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போது சிந்து துர்க்கமோ இந்தப் பாண்டவர் கோட்டையோ, தரையை அடுத்திருக்கும் மால்வான் கோட்டையோ அத்தனை பாதுகாப்புள்ள அரண்களாக எனக்குப் புலப்படவில்லை. அவற்றின் தலைவியான உன் நிலையும் மிக ஆபத்தில் இருக்கிறது என்பதுதான் தெரிகிறது'' என்றும் சொன்னான். கடைசிச் சொற்களில் அவனுக்கு இருந்த கவலை தெளிவாகத் தெரிந்தது.

அவன் கவலையை அவள் கவனிக்கவே செய்தாள். அதனால் அவளும் சிறிது நகைத்தாள். ''வீரரே! ஏதோ இன்று நிகழ்ந்து விட்ட சில அற்ப விஷயங்களை வைத்து என்னையும் சிந்து துர்க்கத்தையும் எடைபோட வேண்டாம். முக்கியமான போராட்டங்கள் நிகழும் போது கடல்ராணி யார், சிந்து துர்க்கம் எத்தன்மையது என்பதைப் புரிந்து கொள்வீர்கள்!'' என்று கூறினாள் ராணி.

அனந்த் சில விநாடிகள் சிந்தனையில் இறங்கினான். பிறகு சொன்னான்: ''சிந்து துர்க்கத்தைப்பற்றி எனக்குச் சகலமும் தெரியும்.



உன்னைப் பற்றியும் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், ராணி! தவறாக நினைத்துக் கொள்ளாதே. எந்த ஒரு தனிமனிதரையும், எந்த அரணையும் மீறும் சக்திகள் உலகத்தில் இருக்கின்றன. உன் வீரம் மகத்தானதுதான், துணிவு நிகரற்றதுதான் - இருப்பினும் சமயத்தில் உனக்குப் பாதுகாப்பு அவசியம்.''

''எனக்கா? பாதுகாப்பா!'' என்று கேட்ட ராணி சற்றுப் பெரிதாகவே நகைத்தாள்.

''ஆம். அதை அளிக்கத்தான் நான் வந்திருக்கிறேன்.'' அனந்தின் சொற்களில் உறுதி நிரம்பிக் கிடந்தது. ராணி நகைத்ததை அவன் லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை.

அவன் சொற்களில் இருந்த நிதானத்தால், அவற்றில் ஒலித்த கவலையால், உறுதியால், ராணி தனது நகைப்பை நிறுத்திக் கொண்டாள். ஆனால், கடுகளவும் கவலைப்படாத குரலில் கேட்டாள், ''என்னை எப்படிப் பாதுகாப்பதாக உத்தேசம்?'' என்று.

''இரண்டு வழிகள் இருக்கின்றன'' என்றான் இந்திரஜித்.

''அவை என்னவோ?''

''ஒன்று - உன் அனுமதியுடன் உன்னைப் பாதுகாப்பது, இன்னொன்று - உன் அனுமதியைப் பெறாமலேயே உன்னையும் மீறி உன்னைப் பாதுகாப்பது.''

''என்னையும் மீறி என்னைப் பாதுகாப்பீர்களா?''

''ஆகா.''

''அதையும் பார்ப்போம்'' என்று ராணி தனது பவளவாயில் இரண்டு விரல்களை வைத்துப் பெரிதாக ஊதினாள். அதிலிருந்து எழுந்த ஒலி அந்தச் சோலையை ஊடுருவிச் சென்றது. அடுத்தபடி தடதடவென்று பலர் ஓடிவரும் சத்தம் கேட்டது.

அது மட்டுமல்ல. தனது இடையிலிருந்த சிறு கைத்துப்பாக்கியை மின்னல் வேகத்தில் அனந்தின் கண்களுக்குக் குறி வைத்தாள் ராணி. ''கொஞ்சங்கூட அசைய வேண்டாம்'' என்று எச்சரிக்கை செய்த ராணி தனது விரலும் குரலும் கலந்து எழுப்பிய ஓசை கேட்டு ஓடிவந்த வீரர்களிடம், ''இவரை நமது சிறையில் அடைத்து வையுங்கள்'' என்று உத்தரவிட்டாள்.

அனந்த், ராணியின் உத்தரவைக் கேட்டுச் சிறிதும் கலங்கினானில்லை. தனது கண்கள் முன்பு தெரிந்த கைத்துப்பாக்கியையும் லட்சியம் செய்தானில்லை. ''இவர்களைப் போகச் சொல்'' என்று மட்டும் கூறினான் மிக நிதானமாக.

''போகச் சொல்லாவிட்டால்...?''ராணியின் கேள்வி உக்கிரத்துடன் வந்தது.

''உனக்கு உள்ள ஒரே பாதுகாப்பை இழந்து விடுவாய்!'' என்றான் இந்திரஜித்.

''அதாவது- நீங்கள்?'' இகழ்ச்சி இருந்தது ராணியின் கேள்வியில்.

''ஆம்.''

ராணி நகைத்தாள்.''இப்போது உங்களுக்கு வேண்டியது எனது பாதுகாப்பு, என் தயவு.''

''யார் தயவிலும் அனந்த் இதுவரையில் இருந்ததில்லை.''

''இப்பொழுது ஆரம்பிப்பதால் தவறில்லை.''

''எப்பொழுதும் ஆரம்பிக்கத் தேவையில்லை'' என்று கூறிய அனந்த், ''வீரர்களுடன் செல்கிறேன். ஆனால், ஒன்று மட்டும் செய்'' என்றான்.

''என்ன?''

''நடுநிசியாகப் போகிறது. ஸில்வரிடம் சென்று நான் உன் மாளிகையில் படுத்துக் கொள்வதாகச் சொல்லிவிடு.''

''நன்றாயிருக்கிறது!''

''என்ன சொல்கிறாய் ராணி?''

''நான் போய், நீங்கள் என் மாளிகையில் படுத்துக் கொள்ளப் போவதாகச் சொன்னால் ஸில்வர் என்ன நினைப்பான்?.''

''தவறாக எதுவும் நினைக்க மாட்டான். ஸில்வருக்கு என்னை நன்றாகத் தெரியும்'' என்று கூறி அனந்த் திரும்பிப் போகக் காலை எடுத்து வைத்தான்.

ராணியின் வீரர்கள் அனந்தைச் சூழ்ந்து கொண்டார்கள் ''சற்று நில்லுங்கள்!'' என்ற ராணி, ''இந்தச் செய்தியை நான் சொல்லாமல் போனால் என்ன ஆகும்?'' என்று கேட்டாள்.



''ஆபத்து உண்டாகும்!''

''யாருக்கு?''

''உனக்கு.''

''என் கோட்டையிலேயா?''

''ஆம்.''

''என்ன ஆபத்து?''

''சிறை செய்யப்படுவாய்.''

அனந்தை ராணி உற்று நோக்கினாள். ''உங்களுக்குப் பைத்தியம் இல்லை என்று நினைக்கிறேன்'' என்றும் சொன்னாள்.

''அப்படித்தான் எனது எண்ணமும்'' என்ற இந்திரஜித்தின் பதிலில் கேலி இருந்தது.

''எனது கோட்டையில், என் வீரர்களையும் மீறி அந்த நொண்டி என்னைச் சிறை செய்துவிடுவான் என்று சொல்வது விந்தையாக இருக்கிறது வீரரே!'' என்ற ராணியின் சொற்களில் இகழ்ச்சி இருந்தது.

''அவன் கால்தான் நொண்டியே தவிர, அறிவு நொண்டியல்ல. ஒற்றைக் காலைக் கொண்டு அவன் சாதிக்கக் கூடியதை இரண்டு கால்களைக் கொண்ட பலர் சாதிக்க முடியாது! ஸில்வரைக் குறைத்து எடைபோடாதே'' என்று அனந்த் எச்சரித்தான்.

அவன் எச்சரிக்கையை அவள் சட்டை செய்யவில்லை. ஆனால், சட்டென்று அவள் நிமிர்ந்து நின்றாள். 'டக்!டக்' என்று அந்தச் சோலையின் ஒரு பகுதியிலிருந்து ஒலி ஒன்று தொடர்ந்து வந்தது. அதை உற்றுக் கேட்ட ராணி அனந்தை நோக்கினாள்.

அனந்தின் முகம் கல்லாயிருந்தது. அவன் கைகள் ராணியை அணைத்துப் பிடித்தன மீண்டும். ''இவர்களை அனுப்பிவிடு ராணி'' என்று கூறினான் அனந்த். அவன் பேச்சில் அதிகாரமிருந்தது.

''ஏன் அனுப்ப வேண்டும்?'' என்றாள் ராணி.

''ஸில்வர் வருகிறான்!'' இதை மிக மெதுவாகச் சொன்னான் அனந்த்.

''அதனால் என்ன?'' என்றாள் ஏதும் புரியாமல்.

''அவன் தனியாக வரவில்லை'' என்றான் அனந்த்.

''இங்க்லண்ட் வருகிறானா?''

''இல்லை.''

''வேறு யார்?.''

''மனிதரல்ல.''

''மனிதரல்லவா?''

''அல்ல.''

''மிருகமா!''

''அல்ல. ஒரு பறவை. அந்தச் சத்தம் கேட்டது சற்று முன்பு.''

'' என்ன பறவை?''

''கிளி.''

ராணிக்கு எதுவுமே புரியவில்லை. 'கிளியால் என்ன ஆபத்து நேரிட முடியும்? ஸில்வருக்குக் கிளி எப்படி உபயோகம்?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள். அந்தச் சமயத்தில் ஸில்வர் உரத்த குரலில் குடிவெறியில் பாடிய பாட்டும் பயங்கர நகைப்பும் அந்தச் சோலையை ஊடுருவின. பெரிய பஞ்ச வர்ணக்கிளியொன்று பெரிதாகச் சிறகடித்துக்கொண்டு ராணியை நோக்கிப் பாய்ந்து வந்தது.

''ராணி! அபாயம் அணுகிவிட்டது. இனி நீயோ நானோ தப்ப முடியாது'' என்று கூறினான் அனந்த். அடுத்த விநாடி அவன் இடது கை மிக ஆதரவாக அவள் இடையைச் சுற்றி அவளை இழுத்துக் கொண்டது அருகில். வலது கை பாய்ந்து வந்த கிளியை வெகு லாகவமாகப் பற்றிக் கொண்டது. அவன் கண்கள் மூடின, அரை நித்திரையில் இருப்பவன் கண்களைப் போல. அபாயம் எது வாக இருந்தாலும் அதைச் சமாளிக்க அவன் தயாராகி விட்டான் என்பதை ராணி புரிந்து கொண்டாள். அதே சமயத்தில் ஸில்வர் வந்தான் எதிர்ப்புறத்திலிருந்து- அவன் தனித்து வரவில்லை!

## அத்தியாயம் - 11

# ஸில்வரின் சங்கீதம்!

இடது கையால் தனது இடையை வளைத்த இந்திரஜித், தன்னைக் கொத்திவிடுவது போல் அலகை விரித்துப் பாய்ந்து வந்த கிளியை வலதுகையால் வெகு லாகவமாகப் பிடிப்பதற்கும், இன்னொரு வெள்ளையனுடன் ஸில்வர் கைக்கோல்களை ஊன்றித் துரிதமாகத் தாங்கள் இருந்த இடத்துக்கு வந்ததற்கும் விநாடிகள் சிலவே சென்றதால் நிலைமையை முற்றும் சீர்தூக்கிப் பார்க்கும் நிலையில் இல்லை ராணியின் மனம்.

ஸில்வர் அளவுக் கதிகமாகவே குடித்திருந்தாலும் நிதானம் சிறிதும் பிசகாமலும், தள்ளாடாமலும் நடந்து வந்ததையும், வந்த பிறகும் அவன் பதற்றம் எதுவும் காட்டாமல் இருவரையும் பார்த்துப் பெரிதாக நகைத்ததையும் கண்ட ராணியின் உள்ளம் எரிமலையாக இருந்தாலும்,வெளியே எந்த உக்கிரத்தையும் காட்டாமல் சிந்து துர்க்கத்தின் ராணியாகவே மிகக் கம்பீரமாக நின்றிருந்தாள். அவள் தோரணையைக் கண்ட ஸில்வர் பக்கத்திலிருந்த வெள்ளைக் காரனை நோக்கி, ''யூ ஸீ டெய்லர்! தி டூ பாரட்ஸ் மாட்ச் ஈச் அதர். தே ஆர் போத் போல்ட் அண்ட்...... (பார்த்தாயா டெய்லர்! இந்த இரண்டு கிளிகளும் நல்ல அழகு, நல்ல தைரியம் உள்ளவை. தவிர......)'' என்றான். வாசகத்தை முடிக்கவில்லை அவன்.

''அண்ட் வாட்?'' டெய்லரின் குரல் கரகரப்பாகவும் பயங்கரமாகவும் ஒலித்தது.

''தே ஆர் போத் இன் த ஹாண்ட்ஸ் ஆப் மை ஃபிரண்ட் அனந்த் (இரண்டும் என் நண்பன் அனந்தின் கையில் சிக்கியிருக்கின்றன)'' என்று கூறிய ஸில்வரின் கண்கள் பளிச்சிட்டன. உதடுகள் பழைய குடிகார நகைப்பைப் பெரிதாக உதிர்த்தன.

டெய்லர் எந்தப் பதிலும் சொல்லவில்லை. உதட்டைக்கூட அசைக்காமல் நின்றான். அவன் தோரணையைப் பார்த்த கடல்

ராணியின் உள்ளத்தில்கூட ஓரளவு அச்சம் உதயமாயிற்று. ஆறடி உயரத்தைத் தாண்டியிருந்த டெய்லரின் பழுப்புக் கண்களிலிருந்த சாயை ஈவிரக்கமற்ற கொலைகாரனை நினைவூட்டியது ராணியின் இதயத்துக்கு. டெய்லரின் உடல் மிகப் பருமனாக இருந்ததையும், அது வீண் பருமனாயிருக்காமல் உடலின் ஒவ்வொரு பாகமும் இரும்பைப் போல் இறுகியிருந்ததையும், உதடுகள் மிகப் பெரிதாகவும், மடிப்பிலே ஒரு குரூரத்தைக் காட்டுவதாக அமைந்திருந்ததையும் ராணி கவனித்தாள். அவன் பருத்த கன்னங்களும், கன்னங்களை அடுத்து உதடுகள் மேலிருந்த பொன்னிற மீசையும் கண்களை வளைத்து வளைத்து அவற்றின் நிறத்துக்கு ஈடு கொடுத்த பழுப்புப் புருவங்களும் அவன் முகக் குரூரத்தை மிகைப்படுத்துவதையும் ராணி கண்டாள். அவன் இடை பெல்டில் இருந்தவை இரண்டே கைத்துப்பாக்கிகள்தான் என்றாலும் அவற்றின் பரிமாணமும், பிடிகளின் பளபளப்பும் டெய்லர் அவற்றைக் கண்களைப் போல் பாதுகாக்கிறான் என்பதை அறிவுறுத்தின ராணியின் சிந்தைக்கு!

டெய்லர் கையில் நீண்டதொரு டெலஸ்கோப் வைத்திருந்தான். ஏதோ பிறரை அடிப்பதற்குத் தயாராயிருப்பவன்போல் அதை அவன் பிடித்திருந்ததையும் பார்த்தாள் ராணி. இஷ்டப் பட்டால் அந்தத் தூரதிருஷ்டிக் கண்ணாடியாலேயே யார் மண்டையையும் பிளக்கக் கூடியவன் அவன் என்பதை ராணி சந்தேகமறப் புரிந்து கொண்டாள். தன்னை அவன் பார்த்தபோது கசாப்புக் கடைக்காரன் ஆட்டைப் பார்க்கும் அன்பு அவற்றில் ஒளி விட்டதை ராணி கவனித்தாள்.

ராணிதான் இத்தனையும் கவனித்தாளே தவிர, அனந்த் எதையும் கவனித்ததாகத் தெரியவில்லை. கண்கள் அரைவாசி மூடியிருந்தன. இரண்டு கைளும் இரண்டு அலுவல்களில் இருந்ததால் அவன் இடையிலிருந்த கைத் துப்பாக்கியை எடுக்கவும் வசதியில்லாதிருந்தது.உண்மையில் பயங்கரமான இரு எதிரிகளுக்கு இடையில் நிராதரவான நிலைமையில் அவன் நின்றிருந்தது நன்றாகப் புரிந்தது ராணிக்கு. அது எதிரிகளுக்கும் புரிந்திருந்தாலும் அவர்கள் இருவரும் அவனை அணுகாமல் சற்று எட்டவே நின்றிருந்தது ராணியின் வியப்பை உச்ச நிலைக்குக் கொண்டு சென்றது.



அவன் எண்ணங்கள் இப்படி அம் மூவரையும் எடை போட்டுக் கொண்டிருந்த சமயத்தில் ஸில்வர் பேசினான்: ''அனந்த்! நீ கூறியபடி நள்ளிரவு நேரத்தில் வரவில்லை என் இருப்பிடத்துக்கு. ஆகவே நான் வந்தேன்'' என்று கூறினான் பேச்சைத் துவக்க.

அனந்த் பதில் சொல்லவில்லை. மௌனமாக நின்றிருந்தான். ''நேரம் முக்கியம் அனந்த். அதை மீறினால் அது நம்மை மீறிவிடுகிறது'' என்று சொன்ன ஸில்வர் டெய்லரை நோக்கி, ''யூ அக்ரி(நீ ஒப்புக் கொள்கிறாயா?)'' என்று வினவினான்.

டெய்லர் பதில் ஏதும் சொல்லவில்லை. ஏதோ உயர்ந்து பருத்த ரோமாபுரிச் சிலை போல் விழித்த கண் விழித்தபடி நின்றிருந்தான். ஸில்வர் அவனையும் நோக்கி அனந்தையும் நோக்கினான். ''நீங்கள் இருவரும் ஊமைகளா?'' என்று விசாரித்தான் சகஜமாக. அத்துடன் தனது ஒரு கைக்கோலை ஊன்றி அனந்தை நோக்கி நகர முயன்றான்

அனந்தின் அரைவாசி மூடிய கண்கள் ஸில்வரை நோக்கின. உதடுகளும் அரைவாசியே விரிந்தன. ''நேரத்தைப் பற்றிப் பேசினாய் ஸில்வர்!'' என்ற சொற்கள் வறண்ட குரலில் உதிர்ந்தன அவன் உதடுகளிலிருந்து.

''ஆம் அனந்த்! நேரத்தை ஓட்டி விட்டாய். காரணம் பக்கத்தில் நிற்கிறது. அதுவும் ஒரு கிளிதானே அனந்த்!'' என்றான் ஸில்வர்.

''கிளிதான் ஸில்வர். ஆனால் உன் நேரம் சரியில்லை'' என்று அனந்த் மறுபடியும் பதில் சொன்னான்.

''என் நேரமா?'' சற்றுக் குரல் மாறியது ஸில்வருக்கு. சந்தேகமும் அதில் ஒலித்தது.

''உன் கிளியின் நேரம்கூட'' என்ற அனந்த், ''ஸில்வர்! இந்த ராட்சதக் கிளியைக் கொண்டு வராதே என்று உன்னை நான் காப்பாற்றியபோதே சொன்னேன். நீயும் அதைப் பறக்க விட்டாய். இப்பொழுது புரிகிறது எனக்கு. நீ எங்கிருந்தாலும் இது உன்னைத் தொடர்ந்து வரும். நீ ஏவினால் யார் கண்ணையும் கொத்தத் தவறாது. எத்தனை அழகான பறவைக்கு ராட்சதத்தனத்தைக் கற்பித்திருக்கிறாய்?'' என்றும் சொன்னான்.

இப்படிச் சொன்ன அனந்த், ராணியின் இடையிலிருந்த தனது இடது கையை எடுத்து அதில் கிளியை மாற்றிக் கொண்டான். பிறகு வலது கையால் அதன் பெரிய கழுத்தைத் தடவினான். ''இதன் கழுத்து மிக அழகாக இருக்கிறது ஸில்வர். இதை நெரிக்க எனக்கு இஷ்டமில்லை'' என்றும் கூறினான்.

இடது கையிலிருந்த அந்தக் கிளி மற்ற கிளிகளை விடப் பன்மடங்கு பெரிதாயிருந்தது. அதன் அலகு கழுகின் அலகைப் போலிருந்தது. வண்ண இறகுகள் அளவுக்கு மீறியும் உடல் கொழுத்தும் இருந்தது. அந்த உடலைச் சற்று இறுக்கிப் பிடிக்க அனந்த், தன் வலது கையால் அதன் கழுத்தைச் சுற்றிப் பிடித்தான்.

''அனந்த்! மை பாய்! டோண்ட் கில் இட்... டோண்ட் இஞ்சூர் இட், (அனந்த்! அதைக் கொல்லாதே. இம்சை செய்யாதே)'' என்று கெஞ்சினான். ஸில்வர்.

கிராதகனான ஸில்வருக்கு அந்தக் கிளியிடம் ஏன் அத்தனை அன்பு, பரிவு என்பது ராணிக்குப் புரியவில்லையாயினும் அனந்துக்குப் புரிந்திருந்ததால் அவன் சொன்னான்: ''ஸில்வர்! டச் மை பாரட், ஐ வில் ரிங் த நெக் ஆஃப் யுவர் பாரட் என் கிளியைத் தொடு. உன் கிளியின் கழுத்தைத் திருகி விடுகிறேன்)'' என்று.

ஸில்வர் வெலவெலத்துப் போனான். ஆகவே சுதேசி மொழிக்குத் திரும்பினான். ''அனந்த்! உன் கிளிக்கு எந்தவிதக் கெடுதலும் இல்லை. நாங்கள் தப்ப வேண்டும். எங்களுடன் நீயும் வா, அவளை அழைத்துக் கொண்டு. உன்னையும் அழைத்துப் போகிறோம்'' என்று சொன்னான். அவன் குரலில் அன்பு சொட்டியது.

அனந்த் டெய்லரை நோக்கினான். ''டெய்லர்! யூ பிராமிஸ் நாட் டு ஹார்ம் திஸ் கேர்ல் (டெய்லர்! இந்தப் பெண்ணுக்கு எந்த ஹானியும் விளையாதென்று உறுதி கூறுகிறாயா?)'' என்று கேட்கவும் செய்தான்.

டெய்லர் பதிலை மராட்டியில் சொன்னான். நல்ல மராட்டியே பேசினான் அவன். ''டெய்லர் யாருக்கும் எந்த உறுதியும் கூறுவதில்லை'' என்றான் டெய்லர், புருவத்தைக் கூட அசைக்காமலும் குரலில் எந்த உணர்ச்சியையும் காட்டாமலும்.

அனந்தின் கண்கள் முக்கால்வாசி மூடிக்கொண்டன. ''அப்படியானால் நான் இங்கிருந்து நகர உத்தேசமில்லை'' என்றான் அனந்த்.



டெய்லரின் உதடுகள் கடுமையாக மடிந்தன: '' நீ ஒரு முட்டாள்'' என்று கூறி, அனந்தின் இடையில் செருகப்பட்டிருந்த இரு கைத்துப்பாக்கிகளையும் கவனித்தான். ''இந்தத் துப்பாக்கிகளால் நீ துரிதமாகச் சுடுவதாக ஸில்வர் சொன்னான். அந்த விளையாட்டை டெய்லரிடம் வைத்துக் கொள்ளாதே. டெய்லரைவிடத் துரிதமாகச் சுடக்கூடியவன் இனிமேல் பிறந்துதான் வரவேண்டும். பேசாமல் என்னுடன் வருவது உனக்கும் நல்லது அந்த ராணிக்கும் நல்லது!'' என்ற டெய்லர், ''வாருங்கள் என்னுடன்'' என்று சொல்லிவிட்டுச் சோலையிலிருந்து கடலுக்குச் செல்லும் வழியில் நடந்தான். ''வெயிட் டெய்லர் வெயிட்'' என்று ஸில்வர் கூறியதை அவன் காதில் வாங்கவில்லை. திரும்பிப் பார்க்கவும் இல்லை.

டெய்லர் செல்வதை உற்றுப் பார்த்துக் கொண்டு நின்ற அனந்த், ''வா ராணி! டெய்லரின் திறமை எத்தனை தூரத்திலிருக்கிறது என்பதைக் கவனிப்போம்'' என்று கூறி, டெய்லர் சென்ற திசையில் நடந்தான். ராணி அவனைத் தொடர்ந்தாள். அவர்கள் பின்னால் ஸில்வர் கைத்தடிகளை ஊன்றிப் பாய்ந்து வந்தான். கையிலிருந்த அசுரக் கிளியை ராணியிடம் கொடுத்து, ''ராணி! இதைப் பத்திரமாக எடுத்து வா. உன்னைக் கொத்தினால் கழுத்தை நெரித்துவிடு'' என்று ஸில்வரின் காது கேட்கச் சொல்லிவிட்டு மேலும் நடந்தான்.

சோலையைவிட்டு வெளிப் போந்ததும் அங்கு தங்களைச் சுற்றி வளைக்க யாரும் இல்லாததைக் கண்டு ராணி வியந்தாள். அதைப் பற்றிக் கேட்கவும் செய்தாள்: ''இங்கு யாருமே இல்லையே?'' என்று.

பின்னால் வந்த ஸில்வர் இதைக் கேட்டு நகைத்தான். ''ஹி ஈஸ் எ லோன் உல்ஃப்! டெய்லர் ஈஸ் (டெய்லர் யாரையும் துணை கொள்வதில்லை. அவன் ஒரு தனிப்பட்ட ஓநாய். யார் மீதும் தனியாகவே பாயும் சக்தி அவனுக்கு உண்டு)'' என்று கூறி நகைத்தான்.

அப்பொழுது டெய்லர் கடலோரத்தை நெருங்கிக் கொண்டிருந்தான், தனியாக. கரையோரத்தில் ஒரு படகு மட்டும் இருந்தது. படகு டெய்லருடையது என்பது சந்தேகமறத் தெரிந்தது அனந்துக்கு. அந்தச் சமயத்தில் ஸில்வர், அனந்தை இரண்டு எட்டில் அணுகி, ''இதுதான் சமயம், அவன் முதுகில் சுட்டுவிடு!'' என்று ரகசியமாகக் கூறினான்.

''அனந்த் யாரையும் முதுகில் சுடுவதில்லை'' என்றான் அனந்த் வறண்ட குரலில்.

''சரி;கழுத்தில் சுடு'' என்றான் ஸில்வர்.

''பின்புறத்தில் சுடும் பழக்கமில்லை எனக்கு. முதுகாக இருந்தாலும் கழுத்தாக இருந்தாலும் ஒன்றுதான் எனக்கு.'' அனந்தின் குரல் மிகவும் கடினப்பட்டு ஒலித்தது.

''சுடும் வழக்கமில்லை! சாவதுதான் வழக்கமா?'' என்றான் ஸில்வர்.

இதற்கு ஸில்வருக்குப் பதில் சொல்லவில்லை அனந்த். ராணியிடம் சொன்னான்: ''ராணி! இன்னொரு முறை இவன் வாயைத் திறந்தால் கிளியின் கழுத்தை முறித்துவிடு.''

பிறகு நடந்தான் கடற்கரையை நோக்கி.

பாண்டவகட்டின் கடற்கரையில் அமைதி நிலவிக் கிடந்தது. அலைகளின் இரைச்சலைத் தவிர ஒலி எதுவும் இல்லை. எட்ட இருந்த சிந்து துர்க்கத்தின் கலங்கரை விளக்கத்தின் ஒளி கூட மிகப் பயங்கரமாகக் கடல்மீது விழுந்ததே தவிர, அங்கிருந்த காவலர் ஒலியும் காதுக்குக் கேட்கவில்லை. சாதாரணமாகப் பாண்டவர் கட்டைப் பாதுகாக்கும் காவலர்கூட யாரும் காணோம் எங்கும் நிலவிக் கிடந்த மௌனமே பயங்கரமாக இருந்ததென்றாலும் டெய்லர் பயமற்ற நோக்குடன் படகருகில் நின்றுகொண்டிருந்தான். அவனுக்கருகில் படகிலிருந்த பீரங்கி ஒன்று எதிரே அணுகி வந்த மூவரையும் நோக்கிப் பயங்கரமாக விழித்தது.

நல்ல பாதுகாப்புடனேயே டெய்லர் வந்திருக்கிறான் என்பதைப் புரிந்துகொண்டான் அனந்த். தங்களைத் துப்பாக்கியாலும் அவன் சுடலாம், இல்லையேல் படகில் தாவிப் பீரங்கியை இயக்கியும் அழிக்கலாம் என்பதைச் சந்தேகத்துக்கிடமின்றி உணர்ந்து கொண்டான் அனந்த்.

'சிந்து துர்க்கத்திலும் சரி, பாண்டவர் கோட்டையிலும் சரி, ஏன் பீரங்கிகள் அமைதியாக இருக்கின்றன? அப்பேர்ப்பட்ட என்ன மந்திரம் டெய்லரிடம் இருக்கிறது?' என்று சிந்திக்கவும் செய்தான் அனந்த். விடை ஏதும் புரியாததால் டெய்லரை நோக்கி, ''இங்க்லண்ட் எங்கே?'' என்று வினவினான்.



''காஸண்ட்ராவுக்கு அனுப்பப்பட்டான்'' என்றான் டெய்லர், இமைகளைக் கூடக் கொட்டாமல்.

இந்தச் சமயத்தில் ஸில்வர் இடைபுகுந்து, ''புவர் பாய்! இங்க்லண்ட் லைக்ஸ் காஸண்ட்ரா (பாவம்! இங்க்லண்டுக்குக் காஸண்ட்ரா மிகவும் பிடிக்கும்)'' என்று கூறினான்.

''ஷட் அப்!'' டெய்லரின் சொல் கடுமையாக ஒலித்தது. அடுத்த விநாடி கடுமை மாறியது. ''மேடம்! ப்ளீஸ் ஸ்டெப் இன் (அம்மணி இங்கு ஏறுங்கள்)'' என்று படகைச் சுட்டிக் காட்டினான், ராணிக்கு மிக மரியாதையுடன்.

ராணி அனந்தை நோக்கினாள். அனந்த் ராணியின் இடையில் தனது கையைக் கொடுத்தான்.

''நீ தேவையில்லை. ராணி மட்டும் வரட்டும்'' என்றான் டெய்லர்.

அனந்தின் இதழ்களில் புனமுறுவல் படர்ந்தது. ''ராணி எங்கு போகிறாளோ அங்கு நானும் வருவேன்'' என்றான் அனந்த்.

''நோ (முடியாது)'' டெய்லர் குரல் பயங்கரமாக ஒலித்தது.

''எஸ்... (ஆம் முடியும்)'' அனந்தின் குரல் மிக இனிமையாயிருந்தது.

டெய்லர் முதன் முதலாக நிதானத்தை இழந்தான். ''என்னை எதிர்த்துப் பிழைத்தவர் கிடையாது!'' என்று டெய்லர் சொன்னான். அவன் கை அவன் பெல்ட்டிலிருந்த துப்பாக்கியை நோக்கிச் சென்றது.

''காப்டன் டார்லிங்! டோன்ட் பீ எ ஃபூல். வாட்ச் அவுட் (காப்டன் தங்கமே முட்டாள்தனம் செய்யாதே, பார் சரியாக)'' என்று அனந்தின் குரல் ஒலித்தது, நகைத்தது.

டெய்லர் வியப்புடன் நோக்கினான். எதிரே ராணியின் கையில் அவள் இடையிலிருந்த துப்பாக்கி டெய்லரைப் பார்த்துக் கொண்டிருந்தது. ராணியின் இடையை வளைத்தபோதே அவள் ஆடையைத் தளர்த்திக் கைத் துப்பாக்கியை நகர்த்தி அவள் கைக்குள் திணித்துவிட்ட அனந்தின் கருத்தை ராணி புரிந்து கொண்டாள். கையிலிருந்த துப்பாக்கியுடன் மேலாடையை

இழுத்துப் போர்த்திக் கொண்டாள். சமயத்தில் மேலாடை அகன்றது. துப்பாக்கி தோன்றியது.

துப்பாக்கியைக் கவனித்த டெய்லர் சிறிதும் அஞ்சவில்லை. ''கேர்ல் யூ ஆர் பிரேவ் (பெண்ணே! நீ துணிவுள்ளவள்)'' என்று பாராட்டினான். அத்துடன் சொன்னான்: ''சரி! ராணி! அனந்தும் வரட்டும்'' என்று.

அடுத்தபடி ராணி அனந்தை நோக்கிக் கேட்டாள்: ''இனி நாம் செய்யவேண்டியது என்ன?''

''டெய்லரைத் திருப்தி செய்வோம். படகில் ஏறிக்கொள்'' என்றான்.

அதுவரை மௌனமாய் இருந்த ஸில்வர், ''அனந்த்! டெய்லருடன் போக வேண்டுமா?'' என்று கேட்டான்.

''காலண்ட்ராவில் வேலையிருக்கிறது எனக்கு'' என்ற அனந்த், ''சரி ராணி! ஏறு படகில்'' என்றான்

கையிலிருந்த துப்பாக்கியை அகற்றாமலே படகில் ஏறினாள் ராணி. அவளைத் தொடர்ந்து அனந்தும், அனந்தைத் தொடர்ந்து ஸில்வரும் ஏறிக்கொள்ள டெய்லரே படகைச் செலுத்தினான் துடுப்புகளால். கடலின் அலைகள் பெரிதாக எழுந்து தாழ்ந்தன. ஆகாயத்தில் விண்மீன்கள் கண் சிமிட்டின. அகண்டமான இருளில் படகு அலைகளில் எழுந்தும் தாழ்ந்தும் போய்க் கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் ஸில்வர் சொன்னான்: ''அனந்த்! உன் போக்கு எனக்குப் புரியவே இல்லை'' என்று.

''பலருக்குப் புரியவதில்லை'' என்ற அனந்த், ''ஸில்வர்! உன் வழக்கமான பாட்டைப் பாடு'' என்று கேட்டான்.

அந்த நிலையில் அனந்த் அவனைப் பாடச் சொன்னதை ராணி ரசிக்கவில்லை. அவள் ரசிக்காததற்காக சங்கீதத்தை நிறுத்த வில்லை ஸில்வர். பெரிய குரலெடுத்து அலைகளுக்குச் சரியாகப் பாடத் தொடங்கினான்.

## அத்தியாயம் - 12

# காற்றினில் கலந்த கீதம்!

காரிருளின் கடுமை எங்கும் கடுமையாகச் சூழ்ந்திருந்த நள்ளிரவு முற்றியதன் காரணமாகக் கடலலைகள் பயங்கரமாக எழுந்து படகை ஆகாயத்தில் தூக்குவதுபோல் தூக்கியும், மீண்டும் பாதாளத்தில் அழுத்துவதுபோல் இறக்கியும் விளைவித்த இயற்கையின் கோரம் இதயத்தை உலுக்க, சிந்து துர்க்கத்திலும் பாண்டவர் கோட்டையிலும் இருந்த பெருங் கட்டிடங்களும் உயர்ந்து வளர்ந்த தென்னை மரங்களும் ஏதோ பெரிய பிசாசுகளைப் போல் விழித்து நிற்க, தங்கள் தலைவி ஒரு கொடிய கொள்ளைக்காரனால் கொண்டு போகப்படுவதை உணர்ந்ததைப் போல் சிந்து துர்க்கத்தின் கலங்கரை விளக்கத்தின் ஒளி அகல் விளக்கின் ஒளியைப் போல் மங்கி அலைந்து அலைந்து விழித்துத் தவிக்க, எங்கும் எப்படியும் தப்புவதற்கு வழியில்லாத நிலையில் அனந்த் எதற்காக ஸில்வரைப் பாடச் சொன்னான் என்பது ராணிக்குப் புரியவில்லை. அவன்தான் சொன்னான் என்றால், அந்த மரக் கால் ஸில்வர் எதற்காகக் கரகரத்த தனது பயங்கரக் குரலை உயர்த்திப் பாட வேண்டும் என்பதும் விளங்கவில்லை அவளுக்கு. இத்தனையிலும் அவள் கையிலிருந்த துப்பாக்கியை டெய்லரின் முகத்துக்கு நேராகப் பிடித்துக் கொண்டு படகின் அத்தனை எழுச்சி தாழ்ச்சியிலும் ஆடாமல் அசையாமல் சிலை போல் உட்கார்ந் திருந்தாள்.

ஸில்வர் மிகப் பெரிதாக அனந்த் கேட்ட பாட்டைப் பாட ஆரம்பித்தான். தன் குரலுக்கு அடுத்தபடிதான் அலைகளின் இரைச்சல் என்பதை அவன் காட்டியதோடல்லாமல் பாட்டின் வரிகளும் கடலின் பயங்கரத்துக்கு எள்ளளவும் குறைந்ததல்ல என்பதையும் ஸில்வர் நிரூபித்தான். அந்தப் பயங்கரப் பயணத்தின் போது அவன் பாடியது ஆங்கிலக் கொள்ளைக்காரர் பாட்டு. அதன் வரிகளில் பயங்கரச் சாவுகளும் பொக்கிஷமும் கலந்திருக்கிறது என்பதை ராணி புரிந்து கொண்டாள் எளிதில்.

'Fifteen men on the dead man's chest-
yo-ho-ho, and a bottle of rum!
Drink and the devil had done for the rest
Yo-ho-ho, and a bottle of rum!'

'இறந்தவன் பெட்டி மீது பதினைந்து பேர், குடியும் பேயும் மற்றதைத் தீர்த்தன' என்ற இரண்டு வரிகளில் பயங்கரக் கதை கலந்திருக்கிறது, 'யோ ஹோ ஹோ ஒரு புட்டி ரம்' என்பதில் கொள்ளைக்காரர் குடிப்பழக்கமும் வெறியும் பாட்டுக்குச் சந்தமும் சேர்ந்திருக்கிறது' என்று ராணி தனக்குள் சொல்லிக் கொண்டாள். அந்தப் பாட்டை 'ரம்'மைக் குடித்துவிட்டவன் போல் தாளம் தவறாது, சந்தம் தவறாது திரும்பத் திரும்பப் பாடினான் ஸில்வர். அவன் பாட்டுக்கு அலைகள் பளேல் பளேல் என்று படகின் பக்கவாட்டில் அறைந்து தாளம் போட்டன. அவற்றின் பேரிரைச்சல் அவன் குரலுக்குச் சுருதி கூட்டின!

அலைகளும் இருளும் அவன் பாட்டும், பாடும்போது அவன் ஆடிய வேகமும் ஊழிக்கால இரைச்சலும் கூத்தும் பாட்டும் கிட்டத்தட்ட இப்படித்தான் இருக்குமென்பதை ராணிக்கு நினை வூட்டியது. ஸில்வரின் வெறி கலந்த பாட்டுக்கும் கும்மாளத்துக்கும் ராணி சிறிதும் அசையவில்லை. ஆனால், கடலின் சூழ் நிலையோ அல்லது கொள்ளைக்காரன் வெறியோ தெரியவில்லை.

இருமுறை ஸில்வர் பாடியதும் மூன்றாம் முறை டெய்லரும் அந்தப் பாட்டில் கலந்து கொண்டான். படகில் ஏறியவரை இடித்த புளி போலும் இரும்பு போலும் உணர்ச்சி ஏதுமின்றி நின்றிருந்த டெய்லர், ஸில்வர் பாடத் தொடங்கியதும், அதற்குச் சரியாக இரு முறை ஆடத் தொடங்கினான். அவன் கையிலிருந்த துடுப்புகள் கூட ஸில்வரின் பாட்டுக்குத் தாளம் போடுவன போல் அதற்கு இணைந்து இணைந்து கடல் நீரைத் துழாவி எழுந்தது. அப்படித் துடுப்புகள் ஆடிய நிலையில், டெய்லர் தனது வாயைத் திறந்து ''யோ - ஹோ - ஹோ- அண்ட் எ பாட்டில் ஆஃப் ரம்'' என்று பாடினான். பிறகு முழுப்பாட்டிலும் கலந்துகொண்டு ஸில்வரோடு சேர்ந்து கத்தினான்.

ஒவ்வொரு முறையும் முழுப் பாட்டையும் டெய்லர் பாடினான். ஒவ்வொரு முறை அடி விட்டு இன்னொரு அடியில் கலந்து, பாசுரங்களில் முன்னடி பின்னடி சந்தம் சொல்வது போல் 'யோ-ஹோ-ஹோ-அண்ட் எ பாட்டில் ஆஃப் ரம்' என்று மட்டும் கூவினான். தொண்டை கிழிய இரண்டு கொள்ளைக்காரர்களும் அலைகளின் இரைச்சலை அடக்க உறுதி கொண்டவர்கள் போல் கதறினார்கள். அத்தனை கதறலிலும் சந்தத்தையும் தாளத்தையும் விடவில்லை அவர்கள்.



சங்கீதத்தின் மகிமையை அப்பொழுது புரிந்து கொண்டாள் ராணி. கொள்ளைக்காரனாயிருந்தாலும், கொலைகாரனாக இருந்தாலும், எத்தனை கடின இதயமுள்ளவனாக இருந்தாலும், சங்கீதம் அனைவரையும் ஆட்டிபடைக்கும் சக்தி வாய்ந்தது என்பதைப் புரிந்துக் கொண்டாள். இல்லாவிட்டால் ஜகப் பிரசித்தி வாய்ந்த டெய்லர், சங்கீதத்துக்கு மசிவானா?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள்.

அவர்கள் பாட்டின் உக்கிரத்திலும், பாடல் சொற்களின் பயங்கரத்திலும் ஏதோ ஒரு முறை, ஒரு தாளக் கட்டு இருந்ததை அவள் கவனித்தாள். அந்தத் தாளக்கட்டு அலைகளின் சரேல் சரேல் என்ற தட்டுக்கு இம்மி கூடப் பிசகாதிருந்ததையும் கவனித்தாள். இயற்கை எப்படி எந்தக் கிராதகன் உடலிலும் சங்கீதத்தை ஊறவைத்திருக்கிறதென்பதை ராணி புரிந்து கொண்டதால் வியப்பும் அடைந்தாள். அவள் வியப்பு அத்துடன் நிற்கவில்லை. அதைப் பலமடங்கு உயர்த்த மற்றொரு நிகழ்ச்சியும் ஏற்பட்டது.

அதுவரை மௌனமாகவே பாட்டை ரசித்த அனந்தும் மற்ற இரு கொள்ளைக்காரர்களுடன் சேர்ந்து இரைந்து பாடத் தொடங் கினான். ரம் புட்டியை பற்றி வரும் வரிகளை அவன் பாடிய போது மற்ற இருவர் குரலும் அடங்கும்படியாகக் கத்தினான். அவன் பாடத் தொடங்கியதும் 'இவரும் இந்த மாதிரிக் கொள்ளைக் காரனோ?' என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்ட ராணி அடுத்த சில நிமிடங்களில் தன் கருத்தை மாற்றிக் கொண்டாள்.

அனந்தின் குரல் இரைந்த நிலையிலும் மிக மதுரமாயிருந்தது. மற்ற இருவரது குரல்களிலிருந்து மாறுபட்டு நின்றது. அவன் சாரீரம் உச்சஸ்தாயியில் கரகரப்புடன் ஒலித்தாலும் அதில் தம்புராவின் மந்திரக் கரகரப்பு இருந்தது. ஸில்வரின் குரலாலும் டெய்லரின் குரலாலும் பயங்கரமாகத் தெரிந்த அலை ஓசையும் சிறிய காற்றின் ''ஜோ'' வென்ற சத்தமும் கூட அவன் இன்ப சாரீரத்தால் இனிமை

யடைந்து விட்டதை ராணி கவனித்தாள். கடலில் கச்சேரி செய்வதற்கே பிறந்தவன் போல் அந்த ஆங்கிலப் பாட்டை அலை, காற்று ஆகிய இயற்கையின் ஆதார சுருதியுடன் இணைத்துப் பாடினான் அனந்த். அவன் சாரீரத்தால் அந்த ஆங்கிலப் பாட்டும் அதன் வர்ண மெட்டும் கூடச் சிறப்படைந்தன. படகு செல்லச் செல்ல அனந்த் மிக மும்முரமாகப் பாடினான். அவன் பாட்டினால் வேகமடைந்த இதயங்களுடன் டெய்லரும் ஸில்வரும் பெரும் கூச்சல் போட்டு இசைத்தார்கள்.

அவர்கள் வேகம் கடலுக்கும் காற்றுக்கும் கூட ஏற்பட்டிருக்க வேண்டும். காற்றின் வேகம் படகு முன்னேற முன்னேற அதிகமாயிற்று. அலைகள் பனைமர உயரத்துக்குக் கிளம்பின. இயற்கை கூட அனந்துடன் இணைந்து விட்டதாகத் தோன்றியது ராணிக்கு. இருளும் அலைகளும் காற்றும் சேர்ந்த நிலையில் வானத்தில் மின்னிய நட்சத்திரங்களைப் பார்த்தாள் ராணி. அந்த நட்சத்திரங்கள்கூடக் கண்ணிமைப்பதை நிறுத்தி இசையை அனுபவிப்பன போல் தோன்றின ராணியின் கண்களுக்கு.

அந்தச் சமயத்தில் பாட்டை நிறுத்திய அனந்த், ''ராணி வானத்தைப் பார்க்காதே! நீயும் பாடு'' என்று ஊக்கினான்.

வானத்திலிருந்து கண்களை இறக்கி அனந்தைப் பார்த்த ராணி முடியாதென்பதற்கு அறிகுறியாகத் தலையை இரு புறமும் அசைத்தாள். அனந்த் விடவில்லை. ராணி அசையாமல் கையில் பிடித்திருந்த கைத்துப்பாக்கியைத் தன் கையில் பிடுங்கிக் கொண்டு, ''ராணி! பாடு! நீயும் கொள்ளைக்காரிதானே. பாட்டு ஆங்கிலப் பாட்டாயிருந்தால் என்ன?'' என்று கூறி அவளை ஊக்கினான்.

அத்தனை இருளிலும் அனந்தின் கண்கள் பளிச்சிட்டதை ராணி கவனித்தாள். அவற்றிலிருந்து ஏதோ ஓர் ஒளி அவளுக்கு ஏதோ செய்தி சொல்லியதாகத் தோன்றியது. திரும்பத் திரும்ப அந்தப் பாட்டைக் கேட்டதால் பாட்டும் அவளுக்கு மனத்தில் பதிந்து கிடக்கவே அவள் முதலில் மெதுவாக ஆரம்பித்தாள்.

''ஃபிஃப்டீன் மென் ஆன் த டெட் மான்ஸ் செஸ்ட்'' என்ற ஆரம்ப வரியின் பயங்கரம் அவள் இனிமையான குரலால் இன்பமடைந்து இசையில் சுழன்றது. மெள்ள மெள்ள அவள் சாரீரத்தை உயர்த்த உயர்த்த பாடலின்பம் ஆயிரம் முறை உயர்ந்தது.



அந்தச் சாரீரம் காற்றைக் கூடக் கவர்ந்திருக்க வேண்டும். காற்றின் உக்கிரம் குறையவில்லை என்றாலும் அதன் 'ஜோ' வென்ற ஓசை அவள் இன்ப சாரீரத்துக்குக் கீழ் ஸ்தாயி அமைப்பது போல் தோன்றியது. கைத்துப்பாக்கியை அனந்த் வாங்கிக் கொண்டு விட்டதால், அவள் தனது இரு கைகளாலும் தாளம் போட்டுப் பாடினாள், அந்தப் பயங்கர ஆங்கிலப் பாட்டை.

அவள் கைதட்டலுக்கு அலைகள் தாளம் போட்டன. அவள் அசைந்து ஆடி ஆடிப் பாடினாள். அந்த அசைவும் ஆட்டமும் பாட்டும் டெய்லரைக் கூடக் கவர்ந்ததால் அவன் பாடுவதை நிறுத்தி, ''ஸிஸ்டர்! யூ ஸிங் வெரி வெல் (சகோதரி! நீ நன்றாகப் பாடுகிறாய்)'' என்று சொன்னதன்றி, ''ஸில்வர், யூஃபூல் ஸ்டாப் யுவர் பிளாப்பர் (ஸில்வர், முட்டாள், நீ உன் உளறலை நிறுத்து)'' என்றும் கூவினான்.

ஸில்வருக்குப் பாட்டை நிறுத்தும் உத்தேசமில்லை. அந்தப் பாட்டு அவன் உடலில் ஊறியிருந்தது. இருப்பினும் டெய்லரின் கட்டளையை மீறவும் முடியாமல் ''ஊஹூம் ஊஹூம்''என்று கறுவிக் கொண்டு தனது குரலை அடக்கிக்கொண்டான். ராணி மிக இன்பமாகப் பாடினாள். மெள்ள மெள்ள சாரீரத்தை உயர்த்தி மேல் ஸ்தாயிக்குச் சென்றாள். ''யோ-ஹோ-ஹோ-அண்ட் எ பாட்டில் ஆஃப் ரம்'' என்ற இடம் சிறிது கூடத் தாளம் தவறாமல் மேலே ரீங்காரத் த்வனியில் கலந்தது.

சங்கீதத்துக்குக் கிழக்கு மேற்கு கிடையாது. திசை கிடையாது. இரவு பகல் கிடையாது; மொழி கிடையாது. அதில் இழைவது தனிப்பட்ட ஒரு சொர்க்கம் என்பதை அனந்த் கூட அன்று உணர்ந்து கொண்டான். ராணி குரலை அனாயாசமாகச் சஞ்சரிக்க விட்டாள். அவளுக்கு ஆங்கில முறை சங்கீதமும் ஓரளவு தெரியும் என்பதை ஸில்வரும் டெய்லரும் கூட உணர்ந்து கொண்டார்கள். அவள் உடல் அசைவுக்குத் தகுந்தபடி அவ்விருவரும் அசைந்தார்கள். டெய்லர் படகைச் சரியாகத் துழாவவில்லை என்பதை அனந்த் கவனித்தான்.

காற்று பலமாக அடித்தது. அதைவிடப் பலமாக எழும்பியது ராணியின் குரல் உச்ச ஸ்தாயியில். அவள் தாளக்கட்டு பிரமாதமாக இருந்தது. 'ஃபிஃப்டீன் மென் ஆன் த டெட் மான்ஸ் 'செஸ்ட், செஸ்ட், செஸ்ட்' என்று மும்முறை ''செஸ்டை'த் தட்டிக் காட்டி

னாள். அதில் ஒரு தனிப் பக்குவமிருப்பதை ஸில்வர் கவனித்தான். ''ப்யூட்டிஃபுல்'' என்று கூறினான்.

காற்று அவள் கீதத்தைக் கவர்ந்து சென்றது. அவள் மட்டும் அப்பொழுது பாடிக் கொண்டிருந்தாள். சற்று லேசாக கர்நாடக இசை முறையையும் அந்த ஆங்கில சங்கீதத்தில் கலந்தாள். அதனால் மெருகு ஏறிய சங்கீதத்தில் லயித்துக் கிடந்தான் டெய்லர். அவ்வளவு இனிய சங்கீதத்தை அனந்த் காதில் வாங்கிக் கொண் டிருந்தாலும் இடையிடையே ஆகாயத்தையும் கவனித்தான். பிறகு மற்ற இருவரும் ராணியின் முகத்தில், உதடுகளின் அசைவில் ஈடுபட்டிருந்த சமயத்தில் லேசாகத் திரும்பிப் பார்த்தான். பின்னால் விரிந்த காட்சியால் திருப்தி அடைந்து, இயற்கையின் உதவி இசைக்கு எத்தனை தூரம் கிடைக்கிறது என்று எண்ணினான். அந்த எண்ணத்தால் படகில் நன்றாகச் சாய்ந்து கொண்டான். அவன் சாய்வதை டெய்லர் காணவில்லை என்றாலும் ஸில்வர் கண்டதால் சட்டென்று எழுந்திருக்க முயன்றான். ஆனால், அந்த முயற்சியைக் கைவிட்டான். அனந்தின் கைத்துப்பாக்கி தனது இடையில் அழுந்தியிருந்ததால், பேச உதடுகளைத் திறக்க முயன்றான். பின் அந்த முயற்சியையும் கைவிட்டான். அனந்தின் கண்கள் தன் விழி களைச் சுட்டதால், டெய்லரை எச்சரிக்க முயன்றான் தனது ஒரு காலால், அந்தக் காலை அனந்தின் கால் பலமாக மிதித்திருந்தது.

பக்கத்தில் ஏற்பட்ட அசைவால் டெய்லர் தனது மயக்கத்தி லிருந்து மீண்டும், ''என்ன?'' என்று கேட்டுத் திரும்பினான்.

அனந்தின் கண்கள் மூடிக் கிடந்தன முக்கால்வாசி. அவன் கை திடீரென ஸில்வரின் இடையிலிருந்து எழுந்து டெய்லரின் முகத்தை நோக்கியது. படகின் பீரங்கியைத் திருப்ப அதை நோக்கினான் டெய்லர். அது திரும்ப முடியாதபடி அனந்தின் தோள் அதில் சாய்ந்து கிடந்தது.

''எதையும் செய்ய முயலாதே டெய்லர்'' என்றான் அனந்த் சற்று இரைந்த குரலில்.

''ஏன்?''

''திரும்பிப் பார்!''



திரும்பிப் பார்த்தான் டெய்லர். சிந்து துர்க்கத்திலிருந்து பத்துப் பதினைந்து படகுகள் அந்தப் படகை நோக்கி வந்து கொண்டிருந்தன. நிலைமையைப் புரிந்து கொண்ட டெய்லரின் விழிகளில் பயங்கரச் சாயை படர்ந்தது.

''இதற்கென்ன அர்த்தம்?'' என்று வினவினான் டெய்லர்.

''காற்று கரையை நோக்கி வீசுகிறது!'' என்றான் அனந்த் மெதுவாக.

''அதனால்?''

''அது ராணியின் கீதத்தைக் கவர்ந்து சென்றது. காற்றில் கலந்த கீதம் கரையை எட்டியது. ராணியின் கீதம் யாரையும் மயக்குவது. அதை அறியாதவர்கள் கிடையாது. சிந்து துர்க்கம் அறியாதிருக்குமா?'' என்று பின்னால் வந்த படகுகளைக் காட்டினான்.

டெய்லர் தான் தோற்றுவிட்டதை உணர்ந்து கொண்டான். ஆனால், அவன் முகத்தில் பயத்தின் அறிகுறி சிறிதும் இல்லை. ''அடுத்து என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று வினவினான் டெய்லர்.

உத்தேசத்தைச் சொன்னான் இந்திரஜித். அது டெய்லர், ஸில்வர் இருவரை மட்டுமல்ல, ராணியையும் பிரமிப்பில் ஆழ்த்தியது. அனந்துக்குப் பைத்தியம் இல்லை என்பதைத் தீர்மானித்துக் கொள்ள அவனை உற்று நோக்கினாள் ராணி.

## அத்தியாயம் - 13

# மின்னல் நிகழ்ச்சிகள்!

இந்திரஜித் அனந்த் தனது உத்தேசத்தைச் சொன்னதும் படகிலிருந்த மூவரும் பிரமிப்படைந்தார்கள் என்றால், அதற்குக் காரணம் இருக்கவே செய்தது. எப்பேர்ப்பட்ட தைரியசாலியாக இருந்தாலும், எப்பேர்ப்பட்ட திறமைசாலியாக இருந்தாலும், அந்தச் சமயத்தில் சொப்பனத்தில் கூட நினைக்க முடியாத உத்தேசத்தை அனந்த் வெளியிட்டான்.

''அடுத்து என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று டெய்லர் கேட்ட கேள்விக்கு, ''இதில் என்ன சந்தேகம்? உன்னுடன் வரத்தான் உத்தேசம்! காஸண்ட்ராவுக்குச் செல்லத்தான் உத்தேசம்'' என்று அனந்த் பதில் சொன்னதும் ராணிகூட அவனுக்கு ஒரு வேளை சித்தப் பிரமை இருக்குமோ என்று நினைத்தாள். தன்னைப் பாட வைத்ததன் காரணமாகச் சிந்து துர்க்கத்திலிருந்து உதவியும் வந்து கொண்டிருந்த நிலையில், மிகுந்த சாமர்த்தியத்துடன் டெய்லரையும் ஸில்வரையும் செயலிழக்கச் செய்து விட்ட நிலையில், தங்கள் கை ஓங்கி எதிரியின் கை தாழ்ந்துவிட்ட தருணத்தில் இரு கொள்ளைக் காரர்களையும் படகைத் திருப்பச் சொல்லிச் சிந்து துர்க்கம் அழைத்துச் செல்வது உசிதமாயிருக்க, காஸண்ட்ராவுக்குப் போக ஏன் துடிக்கிறான் அனந்த் என்பது ராணிக்கு விளங்கவில்லை!

சங்கேதத்தில் திளைத்துப் படகு துழாவுவதை நிறுத்திவிட்ட டெய்லர், தனது படகு அலைகளால் நன்றாகப் பின்னுக்குச் சென்றுவிட்டதையும், பின்னால் நன்றாகத் துழாவப்பட்டுத் துரிதமாக வரும் சிந்து துர்க்கத்தின் படகுகள் வெகு சீக்கிரம் தனது படகை சூழ்ந்து கொள்ள முடியும் என்பதையும் நிர்ணயித்ததால் அனந்தின் தீர்மானம் அவனுக்கும் பெரு விசித்திரமாக இருந்தது.

நுண்ணிய அறிவுள்ள ஸில்வருக்கு மட்டும் இதில் ஏதோ சூது இருப்பதாகத் தோன்றியதால், அவன் கேட்டான் அனந்தை நோக்கி: ''எதற்காக நீ காஸண்ட்ராவுக்கு வர ஆசைப்படுகிறாய்?'' என்று.



அனந்தின் கண்கள் பகல் வேளைப் பூனைக் கண்களைப் போல் அரைவாசி மூடியே கிடந்தன. ''ஆசை என்னுடையதல்ல. என்னை காஸண்ட் ராவுக்கு அழைத்துச் செல்ல ஆசைப்பட்டது டெய்லர்'' என்றான்.

இம்முறை டெய்லர் ஆத்திரத்துடன் இடைமறித்து, ''இல்லை, இல்லை. நான் ராணியை மட்டும்தான் அழைத்துப் போக எண்ணினேன். நீதான் வலுக்கட்டாயமாக வந்தாய்'' என்று கூறினான். அத்துடன் நிற்கவில்லை டெய்லர்: ''காஸண்ட்ராவில் உனக்கு மரணம் காத்திருக்கிறது என்று தெரிந்தும் எதற்காக வந்தாய் அனந்த்?'' என்று விசாரிக்கவும் செய்தான், குழப்பத்துடன் துடுப்புகளை மீண்டும் எடுத்து மெள்ளத் துழாவிக் கொண்டே.

''காரணம் இருந்தது!'' என்றான் அனந்த் கண்களை விரிக்காமலே.

''என்ன காரணம்? ராணியைக் காப்பாற்றவா?'' என்று டெய்லர் வினவினான்.

''இல்லை.'' அனந்தின் ஒற்றைச் சொல்லில் ஏளனம் ஒலித்தது.

''வேறு யாரைக் காப்பாற்றவோ?'' என்று கேட்டான் டெய்லர் மீண்டும்.

''உன்னைக் காப்பாற்ற.'' அனந்த் இதைச் சர்வ சாதாரணமாகச் சொன்னான்.

டெய்லரின் பழுப்பு நிறப் புருவங்கள் மேலெழுந்தன கேள்வி கேட்பனபோல்: ''என்னைக் காப்பாற்றவா?'' என்ற சொற்கள் உதடுகளிலிருந்து உக்கிரத்துடன் உதிர்ந்தன.

''ஆம்...''

''எனக்கு யாரால் ஆபத்து? காஸண்ட்ராவில் இருப்பவர்கள் அனைவரும் என் மாலுமிகள். அதுவும் என்னைக் கண்டால் நடுங்கும் கொள்ளைக்காரர்கள்.''

''காஸண்ட்ராவை அடைந்தால்தானே அந்தப் பாதுகாப்பு?''

''காஸண்ட்ராவை அடைவதை என்னை யார் தடுக்க முடியும்?''

''ஸில்வர் தடுக்கலாம்...'' என்று அனந்த் சொன்னதும், ''டெய்லர் மை பாய்! ஹீ லைஸ், திஸ் ராஸ்கல் டஸ் (டெய்லர்

மகனே இந்த ராஸ்கல் பொய் சொல்கிறான்)'' என்று ஸில்வர் கூவினான்.

டெய்லரின் விழிகள் ஸில்வரைப் பயங்கரமாகப் பார்த்தன. அனந்தையும் திரும்பி நோக்கின. ''இதை நீ நம்பச் சொல்கிறாயா என்னை?'' என்றும் வினவினான்.

அனந்த் சற்று அகலமாகவே திறந்தான் கண்களை. ''நீ நம்பினாலும் சரி நம்பாவிட்டாலும் சரி. அனந்த் எப்பொழுதும் பொய் சொல்வதில்லை. இதை மகாராஷ்டிரம் அறியும்'' என்று கூறினான் புன்னகையுடன். மேலும் தொடர்ந்து, ''டெய்லர்! நீ இப்பொழுது உயிருடன் இருப்பதற்கு நான் தான் காரணம்'' என்றும் சொன்னான்.

டெய்லருக்கு ஏதும் புரியவில்லை. ஸில்வர் மட்டும் அனந்தின் மனப்போக்கைப் புரிந்துகொண்டதால் சிரமப்பட்டுப் படகில் அசைந்தான் சங்கடத்துடன். அனந்த் சொன்னான்: ''டெய்லர், தென்னஞ் சோலையிலிருந்து எங்களை வரச் சொல்லி நீ முன் நடந்தாய்...

''ஆம் நடந்தேன்.'' டெய்லர் மனத்தில் ஏதோ சந்தேகம் முளைத்ததற்கு அவன் முகத்தில் அறிகுறி புலப்பட்டது.

''அப்பொழுது உன்னை முதுகில் சுடும்படி ஸில்வர் சொன்னான். யாரையும் முதுகில் சுடும் வழக்கம் எனக்கு இல்லையாகையால் மறுத்தேன். வேண்டுமானால் ராணியைக் கேட்டு பார்.'' என்றான் அனந்த்.

''நான் இவனைச் சுடச் சொல்லவில்லை. முழுப் பொய், நம்பாதே டெய்லர்! நான் காப்டன் மக்ரேயையே உன்னிடமிருந்து காப்பாற்றவில்லையா?'' என்று மன்றாடினான் ஸில்வர். அவன் குரலில் குழைவு மண்டிக் கிடந்தது.

டெய்லரின் விழிகள் பயங்கரமாக விழித்தன ஸில்வரை நோக்கி. பிறகு அவற்றில் குழப்பமும் விளைந்தது. ''எதை நம்புவதென்று எனக்குப் புரியவில்லை!'' என்று டெய்லர் சொன்னாலும் அவன் ஸில்வரை நம்பவில்லையென்பதையும், இரு கொள்ளைக்காரருக்குமிடையே தான் சந்தேகப் பேயைப் புகுத்தி விட்டதையும் அனந்த் சந்தேகமறப் புரிந்து கொண்டான்.



இந்தத் தர்க்கத்துக்கிடையே பின்னால் வந்த படகுகள் டெய்லரின் படகைச் சூழ்ந்து கொள்ளவே தர்க்கம் நின்றது. முதல் படகில் வந்த நடுத்தர வயதுள்ள மனிதர் ஒருவர் படகிலிருந்து எழுந்து நின்று, ''துப்பாக்கியைத் தொடும் யாரையும் மால்வான் கோட்டையில் தூக்கில் போட்டுவிடுவேன்'' என்று மிரட்டியதன்றி தனது பெரும் கைத்துப்பாக்கியையும் படகிலிருந்த இரு வெள்ளையரையும் நோக்கி நீட்டினான்.

டெய்லர் அவரை மிக அலட்சியமாகப் பார்த்தான். ''ஹூ த டெவில் ஆர் யூ? (யார் நீ)'' என்று கேட்ட அவன் குரலிலும் அலட்சியம் பலமாக ஒலித்தது.

''ராணியின் தந்தை! *சங்கர் பந்த். மால்வான் பகுதியின் தளபதி'' என்று அறிமுகம் செய்து வைத்தான் இந்திரஜித்.

சங்கர் பந்தையும் நோக்கி அவர் அழைத்து வந்த பதினைந்து படகுகளிலிருந்த வீரர்களையும் நோக்கினான் டெய்லர். கடைசியில் அவன் கண்கள் சங்கர்பந்தின்மீது நிலைத்தன. ''எங்களை என்ன செய்ய உத்தேசம்?'' என்றான்.

சங்கர்பந்த், டெய்லருக்குப் பதில் சொல்லவில்லை. அனந்தை நோக்கி, ''நீ யார்?'' என்று விசாரித்தார்.

டெய்லரின் விழிகள் வியப்பைக் கக்கின. ''இவனை உங்களுக்குத் தெரியாது?'' என்று வினவினான்.

''தெரிந்தால் ஏன் கேட்கிறேன்?'' என்றார் சங்கர் பந்த்.

இதுவரை வாளாவிருந்த ராணி குறுக்கிட்டு, ''இவர்தான் இந்திரஜித் அனந்த். ருத்ராஜி அனந்தின் சகோதரர்'' என்று அறிமுகம் செய்து வைத்தாள்.

இதைக் கேட்ட சங்கர் பந்தின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. ''இவன் எப்பொழுது வந்தான் இங்கே?'' என்று விசாரித்த அவர் சொற்கள் துப்பாக்கி ரவைகளைப் போல் வெளிவந்தன.

''ஒன்றரை நாட்கள்தான் ஆகின்றன'' என்று அனந்தே பதில் சொன்னான் அவருக்கு.

* Shankar Pant, Commander in Chief of Malvan siezed an English ship - Maharashtra State Gazetteer Ratnagiri Dt. P.775.

''என்ன வேலையாக வந்தாய்?'' என்று விசாரித்தார் சங்கர் பந்த்.

''சிந்து துர்க்கத்தைப் பார்க்க வந்தேன்.''

''எதற்காக நீ சிந்து துர்க்கத்தைப் பார்க்க வேண்டும்?''

''சிவாஜி மகாராஜா கட்டிய கடற்காட்டையை நீங்கள் எந்த ஒழுங்கில் வைத்திருக்கிறீர்கள் என்பதை அறிய.''

''நீ எதற்காக அறிய வேண்டும்?''

''அது என் அந்தரங்கம்!''

''உன் அந்தரங்கத்தைச் சிந்து துர்க்கத்தில் உடைக்கிறேன் வா'' என்று சீறிய சங்கர் பந்த், ''இந்தப் படகைத் திருப்புங்கள், கோட்டையை நோக்கி!'' என்று இரைந்தார் தம்முடன் வந்த படகு வீரர்களை நோக்கி.

பதினைந்து படகுகள் நெருங்கிய சமயத்தில்- கடலலைகளில் எல்லாமே ஆடி நின்ற தருணத்தில் அனந்த் இரைந்து சொன்னான், ''நாம் சிந்து துர்க்கம் செல்லவில்லை'' என்று.

''அது உன் இஷ்டமல்ல!'' என்றார் சங்கர் பந்த்.

அனந்தின் கைத் துப்பாக்கி சங்கர் பந்தை நோக்கி விழித்தது. ''தளபதி! அனந்தை மீற யாருக்கும் அதிகாரம் கிடையாது'' என்று ஒரு கையிலிருந்த கைத்துப்பாக்கியை அவரை நோக்கி நீட்டிய அனந்த், ராணி அவளது துப்பாக்கியை எடுப்பதைப் பழர்த்ததும் இன்னொரு துப்பாக்கியை இன்னொரு கையில் எடுத்துக் கொண்டு அவளையும் ஸில்வரையும், டெய்லரையும் ஏக காலத்தில் அச்சுறுத்தும் வண்ணம் வளைத்து, ''யாரும் அறிவீனமான செய்கையில் ஈடுபட வேண்டாம்'' என்று அதட்டினான். அத்துடன்,' 'டெய்லர்! துடுப்புகளை எடுத்துத் துழாவு. படகு காஸண்ட்ராவை நோக்கிச் செல்லட்டும். மால்வான் தளபதி! உத்தரவிடுங்கள், உங்கள் படகுகளுக்கு எங்களைப் பின்பற்றி வர. நாம் செய்ய வேண்டிய முடிவுகளை காஸண்ட்ராவில் செய்வோம்'' என்று மளமளவென உத்தரவுகளைப் பிறப்பித்தான் இந்திரஜித்.

அதற்குப் பிறகு அதிகப் பேச்சுக்கு இடமில்லாததால் அவன் உத்தரவுப்படி படகுகள் நகர்ந்தன மேற்கு நோக்கி. அரை ஜாமம் சென்றதும் எதிரே பெரிய கடல் ராட்சதன் போல் நின்றிருந்தது



காஸண்ட்ரா. அதன் விளக்குகள் அதிகமாகப் பளிச்சிடவில்லை ஆதலாலும் மங்கலாக நான்கு விளக்குகளே எரிந்து கொண்டிருந்த தாலும் கடல் ராட்சதன் தன் விழிகளை லேசாக மூடி உறங்குவது போன்ற பிரமையை அளித்தது. அந்த மாபெரும் போர்க் கப்பல் காஸண்ட்ராவின் மாலுமிகள் தளத்தில் உலாவிக் கொண்டிருந்ததால் தூரத்தே ஏதோ பிசாசுகள் உலாவுவதைப் போன்ற பயங்கரத்தை அளித்தது, கப்பலின் தோற்றமும் சூழ்நிலையும்.

இவற்றையெல்லாம் மற்றவர்களைப் போல் ஸில்வரும் கவனித்தான். அவன் மௌனமாகவே வந்தான் கடைசி வரை. அவனது கூரிய அறிவுக்குத் தன் திட்டம் ஓரளவுக்குப் புரிந்திருக்க வேண்டும் என்று தீர்மானித்த அனந்த், அவனைப் பார்த்துப் புன்முறுவல் காட்டினான்.

ஸில்வர் புன்முறுவல் செய்யவில்லை. தன் நிஜார் பாக்கெட்டிலிருந்த புட்டியை எடுத்துச் சிறிது ரம்மை அருந்தினான். அதை டெய்லரிடமும் நீட்டினான். டெய்லர் தன் தலை அசைப்பினாலேயே அதை மறுத்துவிடவே ஸில்வர் பின்னால் சாய்ந்து விட்டான் படகில். அவன் உறங்குவதுபோல் பாசாங்கு செய்தாலும் அவன் உணர்ச்சிகள் பெரிதும் விழித்திருப்பதை அனந்த் உணர்ந்து கொண்டதால், அவன்மீது ஒரு கண்ணை வைத்துக் கொண்டே படகில் பயணம் செய்தான்.

மெள்ள மெள்ள காஸண்ட்ராவும் அணுகியது. அப்பொழுது தான் அந்தத் திடீர் நிகழ்ச்சி ஏற்பட்டது. சரேலென்று வீசப்பட்ட ஒரு தடியின் ஒலி! திடீரென்று சுடப்பட்ட துப்பாக்கியின் பயங்கரச் சத்தம், இரண்டும் கடலிலே ஒலித்தன ஒரே சமயத்தில். அவற்றால் இணைந்த ''ஹா!'' என்று எழுந்த அலறல் பயங்கரத்தை உச்ச நிலைக்குக் கொண்டு சென்றது. அடுத்து மின்னல் வேக நிகழ்ச்சிகள் தொடர்ந்தன.

## அத்தியாயம் - 14

# நான்காவது உருவம்!

டெய்லரின் படகில் இருந்தவர்களோ, சங்கர் பந்தின் படகுக் கூட்டத்திலிருந்த வீரர்களோ சற்றும் எதிர்பாராத அந்தத் திடீர் நிகழ்ச்சிகளைத் துவக்கியவன் படகில் சாய்ந்து கிடந்த ஒற்றைக் கால் ஸில்வர்தான். காஸண்ட்ராவை அடையப் பத்து நிமிஷங்களே இருந்த சமயத்தில் சரேலென்று ஒருபுறமாகப் புரண்ட ஸில்வர் தன் ஊன்றுகோல்களில் ஒன்றை எடுத்து அனந்தின் மீது அசுர வேகத்தில் வீசினான். வீசியது மட்டுமின்றிக் கண் இமைக்கும் நேரத்தில் எழுந்து மற்றொரு ஊன்றுகோலைத் தாங்கிக்கொண்டு நின்று இடையிலிருந்த கைத்துப்பாக்கியையும் வேகமாக உருவினான்.

அவன் காட்டிய வேகத்துக்கும், சிறிதும் குறி வைக்கா விட்டாலும் அனந்தின் மண்டையை நோக்கி வீசப்பட்ட அவன் கைத்தடியின் பலத்துக்கும் அனந்தைத் தவிர வேறு யாராயிருந் தாலும் பலியாகியிருப்பார்கள் என்றாலும், கண்களை அரைவாசி மூடியிருந்த அனந்த் மட்டும் மின்சாரத்தால் இயக்கப்பட்டவன் போல் துரிதமாக இயங்கினான்.

ஸில்வரின் ஊன்றுகோல் தன்னை நோக்கிச் சீறி வந்த அதே சமயத்தில் சட்டென்று தலை குனிந்த அனந்த், தடியின் வீச்சிலிருந்து தப்பியது மட்டுமல்லாமல் குனிந்த வேகத்தில் தலையை நிமிர்த்தி இருகைகளிலும் தோன்றிய கைத் துப்பாக்கிகளில் ஒன்றை வெகு வேகமாகச் சுடவே, துப்பாக்கி ரவை ஸில்வரின் வலக் கையில் பாய்ந்தது. குறி தப்பியதன் விளைவாகக் கைத்தடி படகு ஓரத்தில் தாக்கி, ஒலியெழுப்ப, அனந்த் சுட்ட துப்பாக்கியின் பயங்கர ஒலி படகிலிருந்த மற்றவர்களுக்குப் பயத்தையும் படபடப்பையும் ஒருங்கே அளிக்க, காயமடைந்த ஸில்வர் 'ஹா' என்று கதற, டெய் லரும் சங்கர் பந்தும் ராணியும் ஏக காலத்தில் தங்கள் கைத்துப்பாக்கி களை எடுத்துக் குறிவைக்கவே, பலருக்குக் கடல் சமாதி கிடைக்கும் பயங்கரச் சூழ்நிலை அந்தச் சமயத்தில் உருவாயிற்று.



முடிந்திருந்தால் டெய்லர், சங்கர் பந்த் இருவருமே அனந்தைச் சுட்டிருப்பார்கள். ராணி தன் கைத் துப்பாக்கியை டெய்லரை நோக்கிக் குறி வைத்திருந்ததால் டெய்லருக்கும் இந்தப் பாவிகளின் உலகத்தைவிட்டுப் பரமபிதாவின் புண்ணிய உலகத்துக்குச் செல்லும் வாய்ப்பு இருந்தது. ஆனால், இது எதுவுமே நிகழாதிருக் கவும், எல்லோரையும் காப்பாற்ற வந்த தேவதூதன்போலவும் படகில் எழுந்து நின்றுகொண்டிருந்த அனந்தின் துப்பாக்கிகள் மீண்டும் மும்முறை சப்தித்தன.

அந்தச் சப்தங்கள் புறப்படுவதற்கும் சங்கர் பந்தின் கைத்துப் பாக்கி அவர் கையிலிருந்து பறப்பதற்கும், டெய்லரின் துப்பாக்கி கையிலிருந்து சுடப்பட்டாலும் அது திடீரென்று திசைமாறி ரவை கடலில் பாய்வதற்கும், ராணியின் கைத்துப்பாக்கி அவள் காலின் கீழ் விழுந்து சரணாகதி செய்வதற்கும், பரம ஒற்றுமை இருந்ததால் மேற்கொண்டு யாருக்கும் துப்பாக்கியை இயக்க அவசியம் இல்லாமல் போயிற்று.

அந்தச் சமயத்தில் மிகவும் இரைந்து பேசினான் அனந்த்: ''உங்கள் எல்லோரையும் எச்சரிக்கிறேன். நான் சொல்வதை மீறி யார் நடந்து கொண்டாலும், ஆயுதம் - தடியாயிருந்தாலும் கைத் துப்பாக்கியாயிருந்தாலும் குறுவாளாயிருந்தாலும் அவற்றைப் பிரயோகிப்பவர்கள் யாராயிருந்தாலும் அந்த விநாடியே அவர் களுக்கு இந்த உலகத்திலிருந்து விடுதலை அளிக்கத் தயங்க மாட்டேன்'' என்று கூறினான். அவன் குரலில் நிச்சயம் இருந்தது அதிகாரம்; இருந்தது. நன்றாக விரிந்த அவன் கண்களில் பரிதாபமும் இருந்தது.

இந்தச் சொற்களையும் அவற்றின் உறுதியையும் கண்ட மற்றவர்கள் அவன் நிதானத்தைக் கண்டு வியந்தார்கள். அவன் சுடும் திறமையைக் கண்டு வியந்தார்கள். அவன் தங்களைப் பரிதாபத்துடன் பார்த்ததைக் கண்டும் வியந்தார்கள். இதனால் ஊமைகளாகிவிட்ட அத்தனை பேரில் டெய்லரே முதலில் பேசினான். ''அனந்த்! நீ துப்பாக்கி சுடும் வேகத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், இப்பொழுது நிகழ்ந்ததை என்னால்கூட நம்பமுடியவில்லை!'' என்று மராட்டியில் பேசிய டெய்லர் உணர்ச்சி மிகுதியால் சுய பாஷைக்குத் திரும்பி, ''மை

காட்! அனந்த்! யூ ஆர் டூஃபாஸ்ட் ஈவன் ஃபார் மீ (அனந்த்! என்னை விட உன் வேகம் மிக அதிகமாயிருக்கிறது)'' என்று பாராட்டிய டெய்லரின் சொற்கள் சத்தியத்துடன் ஒலித்தன. மேலும் அவனே சொன்னான்: ''அனந்த்! ஒன் கான் ஷுட் த ஹாண்ட், பட் டிப்ளெக்ட் எ பிஸ்டல் ஈஸ் த வொர்க் ஆப் அன் ஆர்ட்டிஸ்ட். (அனந்த்! கையில் யாரும் சுட்டு விடலாம். ஆனால், கையிலிருக்கும் துப்பாக்கியைச் சுட்டு அதைத் திசை திருப்பிவிடுவது ஒரு தனிக்கலை)'' என்று.

அந்தச் சமயத்தில் அங்கே வந்த- தமது படகிலிருந்த சங்கர் பந்த், ''இந்திரஜித்! மால்வான் தளபதியை, மகராஷ்டிர மன்னர் பிரதிநிதியை நோக்கி நீ துப்பாக்கியை நீட்டியிருக்கிறாய். இது மன்னருக்குச் செய்த அபராதம். இதற்கு நீ பதில் சொல்லும் படியாயிருக்கும்'' என்று துப்பாக்கி பறந்தும் துணிவை இழக்கா மலும் தமது அதிகாரத்தைக் குறிப்பிட்டும் பேசினார்.

பேசாதவர்கள் இருவர். துப்பாக்கி ரவை பாய்ந்த கையைக் கெட்டியாகப் பிடித்திருந்த ஸில்வர் ஒருவன்; காலடியில் கிடந்த துப்பாக்கியை நோக்கிக் கொண்டிருந்த ராணி ஒருத்தி. இருவர் உள்ளத்திலும் அச்சம் சிறிதும் இல்லை. வேதனை சூழ்ந்து நின்றது. தனது கைத்தடி வீச்சுக்குத் தப்பக்கூடியவன் யாரும் கிடையாதென்று இறுமாந்திருந்த ஸில்வர், அனந்த் எப்படித் தப்பினான் என்று வேதனைப்பட்டுக் கொண்டிருந்தான். தன்னிடம் மையல் கொண்டு தென்னஞ்சோலையில் தன் உணர்ச்சிகளையெல்லாம் கொள்ளை கொண்ட அனந்துக்குத் தன் கைத்துப்பாக்கியைச் சுடும் மனம் எப்படி வந்தது என்ற வேதனையால் ராணியின் மனம் நெகிழ்ந்து கொண்டிருந்தது.

அனந்த் மட்டும் எந்த உணர்ச்சியையும் காட்டவில்லை. ''ஸில்வர்! ஏதுமறியாத பூனை போல் நீ படகில் சாய்ந்தபோதே எந்த நிமிஷத்திலும் புலியாக மாறுவாய் என்பதை நான் எதிர்பார்த் திருந்தேன். அப்படி மாறும்போது உன் பெல்டில் உள்ள கைத் துப்பாக்கிகளை எடுக்க மாட்டாய் என்பதும் தெரியும். தவிர, இதே கைத்தடியை வீசிக் கார்வாரில் ஒரு காவலன் மண்டையைப் பிளந்ததை நானே பார்த்திருக்கிறேன். அது உனக்குத் தெரியும். ஆகையால் உன் பொய் அசதியை மற்றவர் நம்பலாம்; நான் நம்பவில்லை, நம்பமாட்டேன் என்பது உனக்குப் புரிந்திருக்க



வேண்டும். உன்னைக் கூரிய அறிவுள்ளவன் என்று நினைத்தேன். இக்கட்டில் சிக்கிக் கொள்ளும்போது எந்த ஒரு மேதாவியும் முட்டாளாகிறான் என்பதற்கு நீ ஒரு எடுத்துக்காட்டு'' என்று சற்று விளக்கமாகவே சொன்னான்.

ராணியை நோக்கித் திரும்பி, ''ராணி! நீ டெய்லரைச் சுட்டிருக் கலாம். ஆனால், டெய்லர் மிக வேகமாகச் சுடக்கூடியவன். அவன் துப்பாக்கி ஒரு விநாடி முன்னதாக இயங்கினாலும் உன்னை இழந்தி ருப்பேன். உன் துணிவு அதிகம் ராணி! ஆனால், அசந்தர்ப்பத் துணிவு ஆபத்தை விளைவிக்கும்'' என்று கூறினான் வருத்தம் தோய்ந்த குரலில்.

பிறகு மால்வான் தளபதியைப் பார்த்து, ''தளபதி! டெய் லருக்குச் செய்யப்படும் தீங்கு எனக்குச் செய்யப்படுவதாகும். ஆகையால் சற்று நிதானப்படுத்திக் கொள்ளுங்கள்'' என்று கூறி விட்டு, ''டெய்லர்! படகைச் செலுத்து. அலைகள் நிதானப்பட்டு விட்டன. சீக்கிரம் காஸண்ட்ராவை அடைவோம். இரவு பூராவை யும் இங்கேயே கழிப்பது உசிதமல்ல!'' என்றான்.

டெய்லர் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. உட்கார்ந்து துடுப்புகளைத் துழாவினான். அதைத் தொடர்ந்து அனந்த் காட்டிய சைகையால் மால்வான் படகுகளும் நகர்ந்தன. ''ராணி, ஸில்வர் கைக் காயத்துக்குக் கட்டுப்போடு. காஸண்ட்ராவில் அவன் கையில் இருக்கும் ரவையை எடுப்போம்'' என்றான். அவன் ஆணையை நிறைவேற்ற ராணி படகின் மறுபுறத்துக்குச் சென்றாள். ஸில்வரின் கையைச் சோதித்துத் தன் ஆடையின் நுனியைச் சிறிது கிழித்துக் கட்டுப்போடவும் முற்பட்டாள். படகுகள் விரைந்தன, காஸண்ட்ராவை நோக்கி. ஸில்வரின் காயத்துக்குக் கட்டுப்போட்டு நிமிர்ந்து நோக்கிய ராணிக்குப் பெருவியப்பும், அபரிதமான மதிப்பும், ஆசையும் ஏற்பட்டன.

அவள் கண்களுக்கு எதிரே கடலில் நிர்மாணிக்கப்பட்ட பெரு மாளிகை போல் எழுந்தது காஸண்ட்ரா. அதன் பரிமாணத்தை நோக்கி அவள் வியப்படைந்தாள். அதை நிர்மாணித்த கலை ஞனிடம் அவள் இதயத்தில் பெரு மதிப்பு உற்பத்தியாயிற்று. இப்பேர்ப்பட்ட ஒரு கப்பல் மட்டும் சிந்து துர்க்கத்தில் இருந்தால் அதன் மூலம் எத்தனை லாபம் ஏற்படும் என்ற சிந்தனை அவள் ஆசையைக் கிளறியது. இப்படி இணைந்த பல எண்ணங்களால் அவள் சித்தம் சுழன்றபோது மெள்ள அருகில் வந்தது காஸண்ட்ரா.

அடித்தளம் எங்கிலும் பல துவாரங்களிலிருந்து பீரங்கி வாய்கள் ஜல மட்டத்துக்குச் சிறிது மேலே விழித்துக் கொண் டிருந்தன- பயங்கரமாக. அதற்கும் மேலே இருந்த இரண்டாவது மட்டத்தில் இன்னொரு சுற்றுக்குப் பல பீரங்கித் துளைகள் இருந்தன. அவற்றின் வாய்களில் பீரங்கி முனைகள் இருட்டில் தெரியவில்லையென்றாலும் பல குகைகள் போலத் தெரிந்த அவற்றின் பயங்கரம் விவரணத்துக்கு அப்பாற்பட்டதாயிருந்தது. அதன் முப்பெரும் பாய்மரங்களும் பாய்மர உச்சிகளுக்குச் சற்றுக் கீழே தொங்கிய சிறு விளக்குகளின் மந்தமான ஒளியும் அந்தக் கப்பலின் திண்மைக்கும் அழகுக்கும் சான்றுகளாக விளங்கின. அந்தக் கப்பலின் முந்நூற்றுஎண்பது பீரங்கிகளில் சில வெளிப் பட்டாலும், வெளிப்படாத பெரும்பான்மையான பீரங்கிகள் இதயத்துக்குள் மறைந்து கிடக்கும் பீதியைப் போல் மறைந்தே கிடந்தன. ஆனால், ஒரு வித்தியாசம். பீதி அவற்றுக்கு இல்லை, அவற்றை எதிர் நோக்குவோருக்குத்தான்.

அது கிட்ட வர வர ராணி சிந்திக்கலானாள். எந்தத் தைரியத் தில் அனந்த் தன்னையும், தன் தந்தையின் படகுகளையும் அந்தக் கப்பலுக்கு அழைத்துச் செல்கிறான் என்று. 'இந்தப் பதினைந்து படகுகளைப் போல் மூன்று மடங்கு அதிகமான படகுகள் வந்தாலும் அந்தக் கப்பலிலுள்ள நாலைந்து பீரங்கிகளே அழித்து விட முடியும். அப்படியிருக்க எப்படி இவர் அந்தக் கப்பலுக்குள் ஏற முடியும்? ஏறினால், எப்படி உயிரோடு திரும்ப முடியும்?' என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டாள் ராணி.

அவள் அப்படித் தன்னை வினவிக் கொண்ட தருணத்தில் காஸண்ட்ராவின் மேல் தளத்தில் நாலைந்து விளக்குகள் திடீரெனத் தோன்றின. அந்த விளக்குகளின் நடுவில் துப்பாக்கிகளை ஏந்திய நான்கு கொள்ளைக்காரர்களுடன் காப்டன் இங்க்லண்ட் நின்று கொண்டிருந்தான். முதன் முதலாக காஸண்ட்ராவை நெருங்க முற்பட்ட டெய்லரின் படகைப் பார்த்ததும் உற்சாகத்துடன் மேலிருந்தே கூவினான் இங்க்லண்ட்: ''டெய்லர், எதிர்பார்த்தேன் இதை உன்னிடம்! ராணி, அனந்த் இருவரையுமே கொண்டு வந்துவிட்டாய். சரி, அனந்த் மேலே வரட்டும். அவன் வீரம் எத்தன்மையது என்பதை நாம் ஆராய்வோம்'' என்று.



அத்துடன், ''யாரங்கே? காப்டன் மேலே ஏறி வர நூலேணி யைத் தொங்க விடுங்கள்'' என்றும் கூவினான் அதிகாரத் தோரணையில் - பின்புறமிருந்த மாலுமிகளை நோக்கி. அவன் உத்தரவுகளைத் தொடர்ந்து பெருத்த நூலேணி ஒன்று விசிறப் பட்டது காஸண்ட்ராவிலிருந்து. அதை நோக்கிப் படகைச் செலுத்திய டெய்லர் ஏதும் பேசாமல் அதில் ஏறத் தொடங்கினான். அவனைத் தொடர்ந்து ஏறிய அனந்த், ''ராணி! எனக்குப் பிறகு ஸில்வர் ஏறட்டும். அவனை பின்பற்றி நீ வா'' என்று கூறிவிட்டு மளமள வென்று ஏணியில் ஏறலானான்.

இந்த ஏற்பாட்டின் காரணம் தெளிவாகப் புரிந்தது டெய் லருக்கு. தனக்குப் பின்னால் வரும் அனந்தின் கைத் துப்பாக்கி தன்னைத் தீர்த்துக் கட்ட அரை விநாடி கூட ஆகாது என்பதையும் ஸில்வருக்குப் பின்னால் வரும் ராணியும் கைத்துப்பாக்கி சுடுவதில் சப்பையில்லை யென்பதையும் உணர்ந்திருந்த டெய்லர் சர்வ சாதாரணமாக நிதானத்தைச் சிறிதும் இழக்காமல் நூலேணிப் படிகளில் ஏறிச் சென்றான். நூலேணியில் ஒருவர் பின்னால் இன்னொருவராக ஏறிய நால்வரும் மேல் தளத்தை அடைந்ததும், ''டெய்லர்! கன்கிராஜு'லேஷன்ஸ்'' என்று பாராட்டுக் கூறி கை குலுக்கத் தன் கையை நீட்டினான் இங்க்லண்ட்.

டெய்லர் கையை நீட்டவில்லை. ''இங்க்லண்ட்! நீ கை குலுக்க வேண்டியது அனந்துடன்'' என்று வெறுப்புடன் கூறித் தன் பின்னால் வந்து நின்ற அனந்தைக் காட்டினான்.

இங்க்லண்டுக்குச் சந்தேகமறப் புரிந்தது, நிலைமை தனது ஊகப்படி இல்லையென்பது. தவிர கப்பலின் மேல்தளத்தில் நின்ற அனந்த், அந்தக் கப்பலுக்குத் தான்தான் தலைவன்போல ''மால்வான் தளபதி! உங்கள் படகுகளில் நான்கு படகுகள் தவிர மற்றவற்றைத் துறைக்கு அனுப்பிவிடுங்கள். நீங்களும் நான்கு படகிலுள்ள உங்கள் பதினைந்து வீரரும் மேலே வந்தால் போதும்'' என்று இரைந்து கூவினான்.

அப்படி அவன் கூவிய சமயத்தில் அவன் பக்கத்தில் நின்ற ராணியோ எட்ட நின்ற ஸில்வரோ ஏதும் பேசவில்லை. அவன்

கட்டளையை எதிர்த்து இங்க்லண்ட்கூட வாயைத் திறக்கவில்லை. சங்கர் பந்த்கூட மறுக்காமல் அவன் சொற்படி நடந்துகொண்டார். மற்ற படகுகள் திரும்ப, நான்கு படகுகள் மட்டும் கப்பலில் இணைக்கப்பட்டதும் மேல்தளத்துக்கு வந்த சங்கர் பந்தையும் அவர் வீரர்களையும், ''வரவேண்டும் மால்வான் தளபதி!'' என்று அனந்த் உபசாரமாகப் பேசினான். அவர் அந்த உபசாரத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. வெறுப்பு கலந்த பார்வையைச் சுற்றுமுற்றும் வீசினார். ''அனந்த்! உன்னைப் போன்ற முட்டாளை இதுவரை நான் பார்த்ததில்லை!'' என்றார்.

''இப்பொழுதாவது உமக்கு அத்தகைய பரிச்சயம் ஏற்பட்டதற்கு நீங்கள் சந்தோஷப்படவேண்டும்'' என்று பதில் சொன்ன அனந்த், தங்களைச் சுற்றிலும் தளத்தின் ஓரங்களிலிருந்து நெருங்க முற்பட்ட கொள்ளைக்காரர்களைக் கவனிக்கவே செய்தான். சுமார் நூறு கொள்ளைக்காரர்கள் சூழ்ந்து நெருங்க முற்பட்டார்கள், அனந்தையும் ராணியையும்.

அரவம் ஏதுமின்றி மெள்ள மெள்ளப் பிசாசுகள் போல் நெருங்கிய அந்தக் கொள்ளைக்காரர்களை டெய்லரோ இங்க்லண்டோ தடுக்கவோ அடக்கவோ முன்வரவில்லை. சங்கர் பந்தும் அவர் வீரர்களும் கடைசியாக ஏறி முடித்ததும் சரேலென்று டெய்லரை நோக்கித் திரும்பி, ''தளபதிக்கும் எனக்கும் ராணிக்கும் தனி அறை ஒன்றை ஏற்பாடு செய்யுங்கள்'' என்று கூறினான் அனந்த். ''தளபதியின் மற்ற வீரர்கள் தளத்திலேயே தங்கட்டும்'' என்றும் சொன்னான். டெய்லர் மற்ற கொள்ளைக்கார்களைப் பார்த்தான்: ''ஹி வாண்ட்ஸ் எ ரூம்'' என்று கொள்ளைக்கார மாலுமிகளிடம் கூறினான்.

அதில் ஒருவன் 'ஷ்யூர், ஹி வாண்ட்ஸ் எ ரூம்'' என்று கூறி நகைத்தான் பெரிதாக.

அனந்தின் கண்கள், குடிவெறியுடன் கண்ணெதிரே வந்து நின்று நகைத்த அந்தக் கொள்ளைக்காரனைக் கூர்ந்து நோக்கின.

''நீ நகைப்பது எனக்குப் பிடிக்கவில்லை'' என்று சொற்களை உதிர்த்தன அவன் உதடுகள்.



''பிடிக்காவிட்டால் என்ன செய்வாய்?'' என்று கூறி நெருங்கினான் மாலுமி.

அடுத்த விநாடி அந்தப் பெரிய மாலுமி அனந்தின் கைகளில் உயரக் கிளம்பி, அவன் தலைக்கு மேலே இரு முறை சுழன்றான் குயவன் கைச்சக்கரம் போல. திடீரெனத் தான் பட்சி என்ற நினைப்பில் ஆகாயத்தில் பறந்தான். இல்லை... பட்சி இல்லை, தான் மீனாகத்தான் இருக்க வேண்டும் என்ற மெய்ஞானம் ஏற்படவே அலைகளை நோக்கி விரைந்தான் தலைகீழாக. அனந்த், டெய்லரை நோக்கித் திரும்பி ''ஹி வில் மேக் எ குட் டைவிங் சாம்பியன் (தலை குப்புறக் குதித்து நீந்தும் வல்லமை இருக்கிறது இவனுக்கு)'' என்று நகைச்சுவையை மேலும் காட்டினான்.

டெய்லர் ஏதும் பதில் சொல்லவில்லை. அவன் பழுப்பு நிறக் கண்களில் பயங்கரச் சாயை மட்டும் படர்ந்து கிடந்தது. மேலும் அனந்தை நெருங்க முயன்ற மாலுமிகளைத் தடை செய்த டெய்லர், ''அனந்த்! நிரம்ப விளையாடிவிட்டோம். இனி இதை நிறுத்திக் கொள்வோம். நீ இங்கு வந்த காரணம் என்ன?'' என்று வினவினான்.

''நாளைக் காலையில் அதைப் பற்றிப் பேசுவோம். என் அறையைக் காட்டினால் நான் படுக்கப் போவேன். நீயும் உறங்கு டெய்லர். இதுவரை விழித்து விட்டாய்!'' என்று டெய்லரிடமும் அனுதாபம் காட்டினான்.

டெய்லரின் கண்களும் இங்க்லண்டின் கண்களும் சந்தித்தன ஒரு விநாடி. அடுத்து டெய்லர் இரு மாலுமிகளை அழைத்து, ''இவர்கள் மூவரும் காப்டன் இங்க்லண்டின் அறையில் தங்கட்டும் !'' என்று உத்தரவிட்டான்.

அந்தக் கொள்ளைக்கார மாலுமி ஒரு விநாடி ஆச்சரியம் ததும்பும் கண்களுடன் டெய்லரைப் பார்த்தான். மறு விநாடி அம்மூவரையும் அழைத்துக் கொண்டு காப்டன் இங்க்லண்டின் அறைக்குச் சென்று கதவைத் திறந்து விட்டான். உள்ளே சென்ற மூவரில் அனந்த் மிக்க மகிழ்ச்சியைக் காட்டினான். ''என்ன வசதியான அறை!'' என்று சொல்லிக்கொண்டு அங்கிருந்த ஒரு நாற்காலியில் சாய்ந்து எதிரே இருந்த மேஜை மீது கால்களைப் போட்டுக்

கொண்டு உட்கார்ந்தான். ''தளபதி! ராணி! நீங்கள் கதவைச் சாத்திவிட்டுச் சிறிது நேரம் அந்தக் கட்டிலில் ஒருவரும் கீழே ஒருவருமாகப் படுத்து உறங்குங்கள். காலையில் வேலை நிரம்ப இருக்கிறது'' என்று தூரத்திலிருந்து ஒரு கயிற்றுக் கட்டிலைக் காட்டிவிட்டுச் சிறிது நேரத்தில் கண்களை மூடி நித்திரையில் ஆழ்ந்து விட்டான்.

சிறிதும் சஞ்சலமின்றி உறங்கிய அவனைத் தளபதி எரிச்சலுடன் பார்த்தார். அவன் துணிவை நினைத்து ராணி அவனை வியப்புடன் நோக்கினாள். இப்படி அவ்விருவரும் அனந்தைப் பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில் நான்காவது ஓர் உருவம் மூடாத அந்தக் கதவை எந்தவித அரவமுமின்றித் திறந்து உள் புகுந்து சாத்தியது. சாத்திவிட்டுத் திரும்பி எதிரே இருந்த மூவரையும் ஆராய்ந்தது. அதன் இதழ்களில் மெள்ள ஒரு புன்முறுவலும் அரும்பலாயிற்று.

## அத்தியாயம் - 15

## கூனன்...

**கா**ப்டன் இங்க்லண்டின் அறையில் நாற்காலியில் சாய்ந்து, கால்கள் இரண்டையும் மேஜைமீது தூக்கிப் போட்டுக் கொண்டு உறங்கிவிட்ட அனந்தைத் தளபதி ஒரு புறமும் ராணி ஒரு புறமும் நின்று நோக்கிக் கொண்டிருந்ததால் அறைக் கதவு திறக்கப் பட்டதையோ,நாலாவதாக ஓர் உருவம் உட்புகுந்து கதவைச் சாத்தியதையோ கவனிக்கவில்லை. அவ்விருவரையும் படுக்கும்படி உத்தரவிட்டுக் காட்டிய கயிற்றுக் கட்டிலையோ, தரையையோ கூடக் கவனிக்கும் பொறுமை தளபதிக்கு இல்லாததால் அவர் மிகுந்த எரிச்சலுடன் அனந்தின் உறக்கத்தைக் கண்டு வெகுண்டு, ''ராணி! இவன் என்ன பைத்தியமா, வீரனா?'' என்றும் வினவினார்.

ராணி அதற்குப் பதில் சொல்லவில்லை உடனடியாக. ஆனால், அனந்தின் இதழ்கள் அத்தனை உறக்கத்திலும் இலேசாக அசைந்தன. ''நீ வரலாம் உள்ளே'' என்று அவன் உதடுகளிலிருந்து உதிர்ந்த சொற்களைக் கேட்டுத் தளபதி சொன்னார் ராணியிடம், ''தூக்கத்தில் உளறல் வேறா? மிக நேர்த்தி!'' என்று அவர் குரலில் தட்டிய அலுப்பைக் கண்ட ராணிக்கும் அவன் உறக்கத்தில் ஏதோ பேசுவதாகத் தோன்றவே, ''எழுந்திருங்கள், யாரை அழைக்கிறீர் கள்?'' என்று கேட்டாள் அனந்தை நோக்கி.

அனந்தின் கண்கள் கால்வாசி திறந்தன. அவற்றில் சீற்றம் மிதமிஞ்சி இருந்ததை ராணி, சங்கர் பந்த் இருவருமே கவனித்தார் கள். அந்தக் கால்வாசி விழிப்பில் அவன் சொற்கள் முழுமையாக, நிதானமாக உறுதியாக வெளிவந்தன. ''உங்களைப் படுக்கச் சொல்லிப் பல விநாடிகள் ஆகிவிட்டன. இந்தக் கப்பலில் இருக்கும் வரையில் உங்கள் சுயயோசனையை உபயோகப்படுத்தாமல் இருப்பது நல்லது'' என்று சொன்ன அனந்தை வியப்புடன் நோக்கினாள் ராணி. ''நீங்கள் உறங்கிவிட்டதாக நினைத்தோம்'' என்றாள் ராணி, ஏதோ சாக்குச் சொல்ல வேண்டுமென்பதற்காக.

''உறங்காமல் இருந்தால் எதற்காக உளற வேண்டும்? உளற வில்லையானால் யாரை அழைத்தாய்?'' என்று சற்று மரியாதை யைக் கைவிட்டே கேட்ட்ார் தளபதி.

சில விநாடிகள் பேசவில்லை அனந்த். பேசியபோது அவன் குரலில் ஒரு தீர்மானம் இருந்தது. ''இந்தக் கப்பலில் உங்கள் சுயயோசனையை உபயோகப்படுத்த வேண்டாம் என்று சொன்னேன். என் உறக்கத்தையோ உறக்கத்தில் உதிரும் சொற்களையோ நீங்கள் லட்சியம் செய்யாமலிருப்பது கூட நல்லது. நீங்கள் பயங்கரமான எதிரிகளிடம் பலமான கப்பலுக்குள் சிக்கியிருப்பதைப் புரிந்து கொள்ளுங்கள். சரி, போய்ப் படுத்துக் கொள்ளுங்கள். விடிய கால் ஜாமம்தான் இருக்கிறது. எனக்கும் அவனுக்கும் குறுக்கே சுவர் போல் நிற்காதீர்கள்'' என்று அனந்த் அவர்களை மேஜையின் எதிர்ப்புறத்திலிருந்து விலகுமாறு கைகளால் ஜாடை காட்டினான்.

இப்படிப் பேசிய பிறகுதான் நான்காவது நபரும் அந்த அறையில் இருக்கிறார் என்பதை உணர்ந்த தளபதியும் ராணியும் சரேலெனத் திரும்பி, கதவைச் சாத்தி அதன் மேல் சாய்ந்து கொண்டிருந்த மனிதனைக் கண்டார்கள். அவனைக் கண்டதும் தனது கைத் துப்பாக்கியை எடுக்கப் போன தளபதியை, ''தளபதி, அந்தக் கைத்துப்பாக்கியை உறையில் போடுங்கள்'' என்ற அனந்தின் சாவதானக் குரல் அவர் கையைத் தேக்கியது.

''தளபதியாக இருந்தால் முட்டாளாகத்தான் இருக்க வேண்டும் என்ற நியதியில்லை. உம்முடைய துப்பாக்கியின் ஒரே ஒலி நம் மூவரையும் விநாடியில் அழித்து விடும். அந்த ஒலியைக் கேட்டு டெய்லர், இங்க்லண்ட் இவ்விருவரில் யாராவது ஒருவர் உட்புகுந்து துப்பாக்கி ஒலியைச் சாக்காக வைத்து நம்மைத் தீர்த்துக் கட்டிவிடலாம்'' என்று சுட்டிக் காட்டிய அனந்த், ''வழி விடுங்கள். அவன் வரட்டும்'' என்று கூறினான்.

அவன் குரலின் கடுமையையும், அவன் சொற்களிலிருந்த உண்மையையும் கவனித்த தளபதி அறையின் ஒரு மூலையில் இருந்த கட்டிலை நோக்கிச் சென்றார். ராணி ஏதும் பேசாமல் அவரைத் தொடர்ந்தாள். அவர்கள் இருவரும் அறை மூலைக்குச்



சென்றதும் அந்த நாலாவது மனிதன் இந்திரஜித்தை நோக்கி மெதுவாக நடக்கத் தொடங்கினான். அவன் நடை பூனை நடையாக இருந்தது. துளி கூடச் சத்தமின்றி நடந்தான் அந்த மனிதன். அவன் உடை வெள்ளைக்காரர் உடையாயிருந்தது. ஒரு கிழிந்த ஷர்ட்டை யும், நிஜாரையும் போட்டிருந்தான். கழுத்தில் மட்டும் ஒரு சிவப்பு கர்ச்சீப் கட்டப்பட்டிருந்தது. அவனைக் கண்ட ராணிக்கு மட்டும் அவனை எங்கோ பார்த்திருப்பதாகத் தோன்றியது. அந்த மனிதன் நல்ல உயரமாக இருந்தும் முதுகுக் கூனலால் அவன் உயரம் அளவுக்கதிகமாகக் குறைந்தே தெரிந்தது. அவன் முகம் மிக அழகாயிருந்தாலும் அவன் நெற்றியின் குறுக்கே விழுந்திருந்த ஒரு கத்தி வெட்டு அதன் வசீகரத்தைக் குறைப்பது போல் முதல் பார்வைக்குத் தோன்றினாலும், அந்த முகத்தில் விரிந்த மகிழ்ச்சிச் சாயை அந்த வெட்டுகூட முகத்துக்கு ஒரு தனி அழகைக் கொடுத் திருந்தது, இரண்டாவது பார்வையில் புலனாயிற்று.

அந்த மனிதன் ஏதோ பலநாள் பட்டினி கிடந்தவன் போல இளைத்துக் கிடந்தாலும் அவன் நடையிலிருந்த உறுதி அந்த இளைப்பு உண்மையான இளைப்பில்லை என்பதைப் பறை சாற்றிற்று. அந்தக் கூன் ஒன்றுதான் அவன் உடல் அழகைச் சிறிது கெடுத்தது. கூன் அத்தனை அதிகமில்லை என்றாலும் அவன் நடந்த போது அசைந்த விலாப்புறங்கள் அவனுடைய துரிதத்தை அந்த ஊனம் பெரிதும் கெடுத்தது போல் தோன்றியது. இத்தனையையும் கவனித்த ராணி, 'இவனை எங்கே பார்த்திருக்கிறோம்'' என்ற யோசனையில் ஆழ்ந்து கிடந்தாள்.

அனந்தின் அழைப்பின் மேல் அவனை நோக்கி நடக்க முற்பட்ட அந்த மனிதன் மிக நிதானமாக அனந்த் கால்களைப் போட்டிருந்த மேஜையை அணுகி வெகு லாகவமாகத் தாவி அந்த மேஜையின் முனையில் ஒருபுறமாக உட்கார்ந்து கீழே ஒரு காலை ஊன்றி இன்னொரு காலை ஆட்டிக்கொண்டே பேச முற்பட்டான்: ''அனந்த்! நீ சொன்னபடி வரவில்லை. மூன்று நாள் கழித்து வந்திருக்கிறாய்!'' என்று குற்றம் சாட்டினான் அந்த மனிதன்.

அனந்த் அரைவாசிக் கண்களை விழித்து மேஜை மீது உட்கார்ந்த அந்தக் கூனனை மகிழ்ச்சியுடன் நோக்கிக் கொண்டே

சொன்னான்: ''எதிர்பாராத காரணங்கள் என்னைப் பாண்டவ கட்டில் தேக்கி விட்டன'' என்று.

அந்த மனிதன் அறை மூலையிலிருந்த ராணியையும் தளபதியையும் நோக்கிவிட்டு அனந்தின் மீது பார்வையைத் திருப்பினான். ''ஒரு காரணம் தெரிகிறது. இரண்டாவது காரணத்தை எதற்காக அழைத்து வந்தாய்?'' என்று கேட்டான்.

அவன் தன்னைப் பற்றியும் தன் தந்தையைப் பற்றியும்தான் பேசுகிறான் என்பதைப் புரிந்து கொண்டதால் ராணியின் முகத்தில் வெட்கத்தின் ரேகை சினத்துடன் கலந்து படர்ந்தது ஒரு விநாடி. மறு விநாடி ராணி, பழைய ராணியானாள். எந்த வித உணர்ச்சியையும் காட்டாமல் அவ்விருவரையும் உற்று நோக்கினாள். அந்தச் சமயத்தில் அனந்தின் இதழ்களில் புன்முறுவல் அரும்பியது. அந்தப் புன்முறுவல் அவன் உதடுகளிலிருந்து முகம் பூராவுக்கும் பரவி எத்தனை அழகைக் கொடுக்கிறது என்று நினைத்தாள் ராணி. ராணி என்ற அந்தஸ்தைவிடப் பெண் என்ற அந்தஸ்து அவளை ஆட்கொண்டதால் அவன் புன்சிரிப்பைக் கண்டு ராணி பெருமூச்செறிந்தாள்.

அனந்தின் புன்சிரிப்பு மேஜை மீது உட்கார்ந்திருந்த மனிதனையும் கவர்ந்திருக்க வேண்டும். அவன் சொன்னான்: ''அனந்த்! இந்தச் சிரிப்பினால் எல்லோரையும் ஏமாற்றலாம். என்னை ஏமாற்ற முடியாது'' என்று.

அனந்தின் புன்முறுவல் அதிகமாக விரிந்து லேசான சிரிப்புக்கு இடம் கொடுத்தது. ''உண்மை. சிரிப்பினால் யாரை ஏமாற்றினாலும் உன்னை ஏமாற்ற முடியாது'' என்று நகைப்பைத் தொடர்ந்து பேசிய அனந்த், ''திட்டமிட்டபடி இந்த காஸண்ட்ராவுக்கு நீ வந்துவிட்டாயல்லவா?'' என்று வினவினான்.

''ஆம். வந்து விட்டேன்'' என்றான் அந்தக் கூனன்.

''எத்தனை பேரை அழைத்து வந்திருக்கிறாய் உன்னுடன்?'' என்று வினவினான் அனந்த்.

''பதினைந்து பேர். நீ சொன்னது அப்படித்தானே...?'' என்று கூனன் வினவினான்.

''ஆம். அந்தப் பதினைந்து பேர்...?'' அனந்த் கேள்வியை முடிக்காமல் விட்டான்.



''இங்கிலண்டிடம் மாலுமிகளாகச் சேவை புரிகிறார்கள்'' என்றான் கூனன்.

''நல்லது. மிக நல்லது'' என்று பாராட்டினான் அனந்த்.

''நீ எவ்வளவு பேரை அழைத்து வந்திருக்கிறாய்?'' என்று கூனன் கேட்டான்.

''நானும் பதினைந்து பேரை அழைத்து வந்திருக்கிறேன்'' என்ற அனந்தின் பதிலைக் கேட்டதும் அறை மூலையிலிருந்த தளபதி, ''அவர்கள் என் வீரர்கள், கொள்ளைக்காரர்கள் அல்ல'' என்றார் எரிச்சலுடன், சற்றுக் கனத்த குரலில்.

அந்த மனிதன் தளபதியை ஒரு முறை கடுமையாகப் பார்த்தான்: ''உங்களைக் கேட்கும்போது பதில் சொல்லலாம்'' என்று அதட்டிவிட்டு அனந்தைப் பார்த்து, ''அவர்கள் கொள்ளைக்காரர்கள் இல்லையாமே? அவர்களை அழைத்து வந்து என்ன பயன்?'' என்று வினவினான்.

அனந்த் நகைத்தான் மெள்ள. ''மால்வானிகள் எல்லோரும் கொள்ளைக்காரர்கள். இந்தத் தளபதியும் கொள்ளைக்காரன்தான். இந்த ராணி இருக்கிறாளே, கொள்ளையடிப்பதில் எல்லோரையும்விட அதிகப் பெயர் வாங்கியிருக்கிறாள்'' என்றான் நகைப்பின் ஊடே.

இந்த விவரத்தைக் கேட்ட சங்கர் பந்த் அசந்து போனார். இருப்பினும் ஏதும் பேசாமல் என்னதான் நடக்கிறது பார்ப்போமென்று மௌனமாக இருந்துவிட்டார்.

அனந்தின் பதில் கூனனுக்கு அதிகத் திருப்தி அளித்திருக்க வேண்டும் என்பதை அவன் முக விலாசத்திலிருந்து புரிந்து கொண்டாள் ராணி. அப்படிப் புரிந்து கொண்டும் கூட 'இவனை எங்கே பார்த்திருக்கிறேன்?' என்று சிந்தித்து அந்தச் சிந்தனையில் ஆழ்ந்து விட்டாள்.

ஆனால், கூனனோ இந்திரஜித்தோ மற்ற இருவரையும் கவனிக்காமலே தங்கள் சம்பாஷணையைத் தொடர்ந்தார்கள். ''ராணியைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். இந்தத்

தளபதியைப் பற்றியும் அவர் வீரர்களைப் பற்றியும்தான் சந்தேக மாக இருக்கிறது. சமயத்தில் இவர்கள் கை கொடுப் பார்களா?'' என்று விசாரித்தான் கூனன்.

''கை கொடுப்பார்கள். இருப்பினும் நம் வழியில் அவர் களுக்குச் சிறிது பயிற்சி தேவை'' என்றான் அனந்த்.

''அப்படியானால் நாளை முதல் அவர்களை என் தலைமைக்கு இழுத்துக் கொள்கிறேன்.'' கூனன் முடிவு திட்டமாக இருந்தது.

''அப்படியே செய்.'' அனந்தின் பதிலில் சந்துஷ்டி ஒலித்தது.

''இனிமேல் நீ யார்? நான் யார்?'' என்று வினவினான், கூனன் அனந்தை நோக்கி.

''இருவரும் எதிரிகள்.'' அனந்தின் பதில் சட்டென்று வந்தது.

''அதுதான் சரி!''

''வேறு வழியில்லை.''

''ஆம்.''

''அடுத்து என்ன செய்யப் போகிறாய்?''

''தளபதியை என்னுடன் அழைத்துச் சென்று விடுகிறேன்.''

''அது அவசியமா?''

''நமது விரோதத்தை ஊர்ஜிதப்படுத்த அது அவசியம்.''

''அப்படியானால் ராணி என்னுடன் இந்த அறையில் தனித் திருக்க வேண்டுமே?''

''உனக்கு நல்லதுதானே?''

அந்த இருவரின் உரையாடலையும் அதுவரை கேட்டுக் கொண்டிருந்த சங்கர் பந்தின் பொறுமை காற்றில் பறந்துவிடவே, அவர் ராணியைத் தம்மிடம் இழுத்துப் பிடித்துக் கொண்டு, ''எங்கள் இருவரையும் பிரிக்க முயலுபவர் யாராயிருந்தாலும் அவர் உயிர் உடலைவிட்டுப் பிரிந்துவிடும்'' என்று சீறினார்.



கூனன் தளபதியை இகழ்ச்சியுடன் பார்த்தான். ''அனந்த்! இந்தப் பைத்தியத்தை அழைத்துக் கொண்டு போய் நான் என்ன செய்வது?'' என்று வினவினான்.

''அது உன் இஷ்டம்'' என்றான் இந்திரஜித்.

அதைக் கேட்ட தளபதி தாம் இருக்கிற இடம், நிலை எல்லாவற்றையுமே மறந்து கைத்துப்பாக்கியை நீட்டிக் கொண்டு கூனனை நோக்கி வந்தார். முன் யோசனையின்றி, துப்பாக்கியின் குதிரையையும் வெகுவேகமாக இழுக்க முற்பட்டார்.

கூனன் இருந்த இடத்திலிருந்து அசையவில்லை. ''சுட்டால் அடுத்த கணம் நீ நிற்கும் இடத்தில் பிணமாகி விடுவாய்'' என்ற கூனன் குரல் ரகசியமாகவும் அதே சமயத்தில் பயங்கரமாகவும் ஒலித்தது.

அதன் விளைவாக அவனைக் கவனித்த தளபதி மட்டுமல்ல ராணியும் அதிர்ச்சி வசப்பட்டார்கள். தளபதி சுடவில்லை. ராணி செயலிழந்த நிலையில் சிலையென நின்றாள். கூனன் யாரென்பது இருவருக்கும் புரிந்துவிட்டது!

## அத்தியாயம் - 16

# துலாஜி ஆங்கரே!

கூனனைச் சுட்டுவிடும் நோக்கத்துடன் கட்டிலிருந்த இடத்திலிருந்து நான்கைந்து அடிகள் முன்னேறி வந்து, கூனனின் உதடுகளிலிருந்து உதிர்ந்த கடும் சொற்களால் சட்டென்று நீட்டிய கைத்துப்பாக்கியை நீட்டியபடி நின்றுவிட்ட தளபதியும், சற்று எட்டக் கட்டிலுக்கருகிலேயே ஒரு புறமாகத் தலை சாய்த்து இடையில் கையைக் கொடுத்துக் கொண்டு நின்ற ராணியும், கூனனை உற்று நோக்கி அவன் யாரென்பதைப் புரிந்துகொண்டதன் விளைவாகச் செயலற்று நின்று விட்டார்களென்றால், இந்திரஜித் அனந்த் அந்த அறைக்குள் மட்டும் ஒலிக்கும்படியாக மிக லேசாக நகைத்தான். கூனன் மேஜைமீது உடகார்ந்த நிலையிலிருந்து சற்றும் அசையாமலும், தான் மிரட்டியபடி தளபதியைச் சுட இடையிலிருந்த கைத்துப்பாக்கியைக்கூட எடுக்காமலும் அனந்தின் நகைப்பை ஆமோதிப்பது போல் புன்முறுவல் செய்தான்.

இந்திரஜித்தின் நகைப்பும் கூனனின் புன்சிரிப்பும் தளபதியின் ஆத்திரத்தை அதிகமாகக் கிளறிவிட்டாலும், கூனன் யார் என்பதை உணர்ந்து கொண்டதால் அந்த ஆத்திரத்தை எவ்விதத்திலும் செயல்படுத்த முடியாமல் திண்டாடினார். தந்தையின் திண்டாட்டம் மகளுக்குப் புரிந்ததால் தான் இருந்த இடத்திலிருந்து அறையின் நடுவுக்கு அதிகார தோரணையில் நடந்து வந்து கூனனை நோக்கினாள் ராணி- நடையிலிருந்த அதிகாரம் கண்களிலும் விரிய. அதைக் கவனித்த இந்திரஜித் ராணியை நோக்கி, ''ராணி! புலி என்னதான் பசுத் தோலைப் போர்த்திக் கொண்டாலும் அது தன் சுபாவத்தை மறைக்க முடிவதில்லையல்லவா?'' என்று கேட்டான்.

அவன் கேள்வியின் பொருள் அவளுக்கு நன்றாகப் புரிந்திருந்தாலும் அவள் உடனடியாகப் பதில் சொல்லாமல் கூனனையும் இந்திரஜித்தையும் மாறிமாறி நோக்கினாள். இரு



வரும் கிட்டதட்ட சம வயதுள்ளவர்கள் என்பதையும், இருவரும் தந்திரத்திலும் துணிவிலும் ஒருவரையொருவர் மீறி நிற்க முடியுமே தவிர, மூன்றாமவர் யாரும் அவர்களுக்கு இணை இல்லை யென்பதையும் புரிந்து கொண்டாள்.

தனது தந்தை கைத்துப்பாக்கியின் குதிரையை இழுக்க முற்பட்ட பின்புகூட, இடையிலிருந்த கைத்துப்பாக்கியிடம் கையைக் கூடக் கொண்டு செல்லாமல் கூனன் காட்டிய துணிவை நினைத்து, அவனுக்குச் சுயநம்பிக்கை அளவுக்கு மீறி இருக்க வேண்டுமென்று தீர்மானித்தாள். அவன் மேஜை மீது உட்கார்ந்திருந்த அலட்சிய பாவமே அதற்கு அத்தாட்சி என்றும் உள்ளூறச் சொல்லிக் கொண்டாள் ராணி. 'ஆனால், இவருக்குக் கூன் எப்பொழுது ஏற்பட்டது?' என்ற கேள்வியையும் எழுப்பிக் கொண்ட ராணி அதைக் கேட்க உதடுகளைச் சற்று அசைக்கத் தொடங்கியதுமே அனந்த் முந்திக் கொண்டு, ''ராணி! இந்தக் கூன் இவனுக்குச் சமீபத்தில்தான் ஏற்பட்டது!'' என்று விளக்கினான் மெதுவாக.

'இவனுக்கு' என்று சர்வ சகஜமாகத் தோழனை அழைப்பது போல் கூனனை அனந்த் அழைத்ததை ராணி கவனித்தாளானாலும் அதை ஒரு பெரிய விஷயமாக ராணி நினைக்கவில்லை. தளபதியின் கூரிய அறிவுக்குக் கூட அதில் எந்தப் புதுமையும் இருப்பதாகப் படவில்லை. ஆகவே அவர் சொன்னார்: ''மகாராஷ்டிரக் கடற்படைத் தலைவரின் புதல்வருக்கும் அனந்துக்கும் நெருங்கிய நட்பு உண்டென்று மேலைக் கடலோரப் பகுதியில் உள்ள அனைவருமே அறிவார்கள்'' என்று.

''தளபதிக்கும் அந்த அறிவு இருப்பதைப் பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். எங்கள் நட்பில் ரத்னாவுக்கும் ஆட்சேபணை இருக்காதென்று நினைக்கிறேன்!'' என்று கூறிய கூனன் தளபதியை விட ராணியையே அதிகமாக உற்று நோக்கினான்.

தன் சொந்தப் பெயரைச் சொல்லிக் கூனன் அழைத்ததைக் கேட்டதும் ராணியின் முகத்தில் மகிழ்ச்சியின் சாயை நன்றாகவே படர்ந்தது. அந்தப் பெயரை அதுவரை அறியாத அனந்தும் தனது நண்பனை வியப்பு நிரம்பிய விழிகளால் நோக்கினான். ''உங்கள் இருவருக்கும் ஏற்கெனவே பரிச்சயம் உண்டு போல் தெரிகிறது'' என்று சொல்லவும் செய்தான். அந்தச் சொற்களில் மகிழச்சி

அதிகமில்லை. அவன் வேண்டா வெறுப்பாகப் பேசுவதாகத் தோன்றியது குரலிருந்த நிலை.

இம்முறை கூனன் நகைத்தான் மெள்ள. ''அனந்த்! பொறாமைக்குக் காரணம் ஏதும் இல்லை. உன் சொத்தை நான் திருட மாட்டேன். தவிர ராணியும் நானும் ஒரே ஒரு முறைதான் சந்தித்திருக்கிறோம். ஆகையால் பயப்படாதே!'' என்று கூறவும் செய்தான் நகைப்பின் ஊடே.

''ஒரு முறைதான் சந்தித்திருக்கிறாய். ஆனால், இவள் இயற்பெயர் உனக்குத் தெரிந்திருக்கிறது. இப்பொழுது ஒரே நாளில் பல முறை நாங்கள் சந்தித்திருக்கிறோம். ஆனால், எனக்கு அவள் பெயர் தெரியாது. தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணங் கூட என் மனத்தில் எழவில்லை!'' என்று சுட்டிக் காட்டினான் அனந்த்.

''எனக்குப் பெயர் மட்டும்தான் கிடைத்தது. உனக்கு அவள் இதயமே கிடைத்திருக்கிறதே'' என்று பதில் கூறிய கூனன் இரண்டாவது முறை நகைத்தான் மெதுவாக. அந்த இருவரும் தன்னைப் பற்றி விவாதிக்கத் தொடங்கி விட்டதால், ராணியின் முகத்தில் சினம் அதிகமாயிற்று. பேசத் தொடங்கிய அவள் அழகிய உதடுகள் மிகக் கடுமையாக ஒருமுறை உட்புறம் மடிந்தன. பிறகு மலர்ந்த உதடுகள் உதிர்த்தன சொற்களை உஷ்ணத்துடன்:

''துலாஜி ஆங்கரே! நான் யாருடைய சொத்துமல்ல. யாரும் என் இதயத்தைக் கவரவும் இல்லை. இந்த மாதிரிப் பேச்சு இன்னொரு முறை வெளிவந்தால் நீங்கள் கனோஜி ஆங்கரேயின் மகன் என்பதையும் பாராமல் சுடத் தயங்க மாட்டேன். நீங்கள் என்னை விட வேகமாகச் சுடலாம். ஆனால், என் ரவை உங்கள் உடலின் பாயுமுன்பு நான் இறக்க மாட்டேன்'' என்று சீறினாள் ராணி.

அந்தச் சீற்றத்திலும் அவள் முகம் மிக அழகாயிருப்பதை அனந்த் கண்டான். அழகுடன் அதில் வீரமும் இருப்பதையும், அவள் ஏதோ பெண் சிங்கம் போல் கம்பீரத்துடன் அறையின் நடுவில் நிற்பதையும் பார்த்த அனந்த், பாரதத்தின் கௌரவத்தைக் காத்த பல வீரப் பெண்மணிகளைத் தன் நினைவில் இருத்திய தன்றி, அவர்களோடு ராணியையும் ஒப்பிட்டு, அதனால் திருப்தியும்



பெருமையும் அடைந்தான். அந்தப் பெருமை குரலில் துலங்க துலாஜியை நோக்கிச் சொன்னான். ''துலாஜி, ராணி- சொன்ன வார்த்தை தவறுபவளல்ல'' என்று.

அதை ஒப்புக்கொண்டதற்கு அடையாளமாகத் துலாஜியும் தலையை அசைத்தான். ''எனக்கு முன்பே தெரியும்- ராணியுடன் விளையாடுவது ஆபத்து என்று. தெரியும் என்று சொல்வதை விடப் பார்த்தேன் என்று சொல்வது பொருந்தும்'' என்றான் துலாஜி.

''பார்த்தாயா?'' அனந்தின் கேள்வியில் வியப்பு இருந்தது.

''ஆம்.'' துலாஜியின் பதில் திட்டமாயிருந்தது.

''எங்கே?''

''பரசுராமபுரத்தில்.''

''என்ன நடந்தது?''

''ஸித்தியின் வீரனொருவன் துணிவுடன் அணுகிவிட்டான் ராணியை... நடந்ததை நீ ஊகித்துக் கொள்.''

''பரசுராமபுரத்தில் யாரும் ஆயுதம் எடுக்கக் கூடாதென்ற விதி இருக்கிறதே!''

''இருக்கிறது.''

''அப்படியிருக்க பிரும்மேந்திரஸ்வாமி சும்மா இருந்தாரா?''

''இல்லை. ராணியைத் தண்டித்தார்'' என்று கூறினான் துலாஜி. ''இரண்டு நாட்கள் உபவாசம் இருக்கச் செய்தார்'' என்று தண்டனையையும் விளக்கினான்.

இதைக் கேட்ட இந்திரஜித் அனந்தின் முகத்தில் சிறிது சந்தேகச் சாயை படர்ந்தது. ''அஞ்சன் வேல் தளபதி ஸாத்ஸித்தி அங்கிருந்தாரா?'' என்று வினவினான் அனந்த்.

''ஸாத்ஸித்தி இருந்தார். சுவாமியிடம் புகாரும் செய்தார். ராணியைத் தண்டித்து விட்டதாக சுவாமி கூறினார். ஸாத்ஸித்தி அந்தத் தண்டனையை ஒப்பவில்லை. வெகு கோபத்துடன் அஞ்சன் வேலுக்குப் புறப்பட்டுச் சென்றார்'' என்றான் துலாஜி.

ராணியின் கண்களும் அனந்தின் கண்களும் ஒரு விநாடி சந்தித்து அகன்றன. ''இன்றுகூட ராணியைக் கொல்ல பாண்டவ கட் தென்னஞ்சோலையில் முயற்சி நடந்தது. கொல்ல முயன்றவன் ஸாத் ஸித்தியின் படைத்தலைவன் யாகூப்'' என்று விளக்கினான் அனந்த்.

துலாஜியின் விழிகளில் சிரிப்பு உதிர்ந்தது. ''புரிகிறது எனக்கு. ராணியைக் கொலை செய்ய ஸாத் ஸித்தி ஒருவனை அனுப்புகிறான். அவனை அழிக்க அரபிக்கடலின் மகாவீரன் ஒருவன் உதவுகிறான் ராணிக்கு. வந்தவனைச் சுட்டுவிடுகிறான். உடனே கதாநாயகி தன்னை மீட்ட அந்த வீரனைக் காதலிக்கிறாள்...'' என்றான் துலாஜி.

அனந்தின் உதடுகளில் புன்னகை விரிந்தது. ''நன்றாகக் கதை சொல்கிறாய் துலாஜி. ஆனால், உன் கதையில் குறை இருக்கிறது. கதாநாயகன் சுடவில்லை. கொலை செய்ய வந்தவனைச் சுட்டவள் ராணி'' என்று திருத்தினான் அனந்த்.

துலாஜி விடவில்லை. அந்தச் சம்பவத்தைப் பற்றி அனந்த் குறிப்பிட்டதுமே ராணியின் முகத்தில் வெட்கச் சிவப்பேறி விட்டதைக் கவனித்த துலாஜி, ''ராணி சுட்டாலென்ன? கதாநாயகன் சுடாவிட்டாலும் ஏதாவது ஒரு வழியில் உதவியிருப்பான் ராணிக்கு'' என்று கூறினான்.

'ஏதாவது ஒரு வழியில்' என்று துலாஜி சொன்னதைக் கேட்ட ராணியின் முகம் மிக அதிகமாகச் சிவந்தது. இந்திரஜித் அனந்த் கூடச் சிறிது சங்கடத்துக்கு இலக்கானான். அந்த வழி என்ன என்பதை உணர்ந்த இருவர் உள்ளத்திலும் தென்னஞ்சோலையும், அங்கு மணலில் இருவரும் புரண்ட காட்சியும் எழுந்து அவர்களை நிலைகுலையச் செய்யவே, இருவரில் ராணி பேசாவிட்டாலும் அனந்த் சீற்றத்துடன் பேசினான். ''துலாஜி, வர வர உன் கற்பனை அளவுக்கு மீறிப் போகிறது. இந்தக் கற்பனையே ஒரு காலத்தில் உனக்கு யமனாக வரும்'' என்று கூறிய அனந்தை நோக்கி மீண்டும் நகைத்த துலாஜி, ''நான் நினைத்தது சரியாகப் போய்விட்டது'' என்றான்.

''எது சரியாகப் போய்விட்டது?'' ராணி சீறினாள்.



''தென்னஞ் சோலையில் இவன் செய்த உதவி...'' சொற்களை இழுத்தான் துலாஜி.

அதற்கு மேல் பொறுக்காத தளபதி குறுக்கிட்டு, ''என் மகளைப் பற்றி அதிகமாகப் பேசுகிறீர்கள்'' என்றார். அவர் குரல் நடுங்கியது கோபத்தால்

அவரை துலாஜி நோக்கினான், பரிதாபத்துடன். ''தளபதி கோபிக் கிறார் அனந்த்'' என்று சொன்னான், இகழ்ச்சி குரலில் தாண்டவமாட.

அனந்த் தன் கையசைப்பினால் அவர்கள் விவாதத்தை நிறுத்தினான். ''நாம் நேரத்தை வீணாக்குகிறோம் துலாஜி. தள பதியை அழைத்துச் செல். அதை என்னிடம் கொடுத்துவிடு'' என்று கூறித் தனது இடது கையை நீட்டினான்.

துலாஜியின் இதழ்களில் அழகிய புன்முறுவல் அரும்பிற்று. அந்தப் புன்முறுவலுடன் தனது கிழிந்த சட்டையின் உட்புறத்தில் கையைவிட்டு ஒரு கசங்கிய காகிதத்தை எடுத்து அனந்தின் கையில் கொடுத்துவிட்டு மேஜையிலிருந்து வெகு லாகவமாகக் கீழே குதித்தான். ''தளபதி வாருங்கள்'' என்று கூறிவிட்டுக் கதவை நோக்கி நடந்தான்.

தளபதி இருந்த இடத்தைவிட்டு நகரவில்லை. அவர் முகத்தில் கவலை மிதமிஞ்சிப் படர்ந்தது. அதை நோக்கிய துலாஜி, ''சங்கர் பந்த்! மகளைப் பற்றிக் கவலை வேண்டாம். இந்திரஜித் அனந்தின் எதிரிகள்கூட அவன் மாசில்லாத நடத்தையைப் பற்றிப் புகழ்கிறார்கள். அவன் பாதுகாப்பைவிட இந்தக் கப்பலில் சிறந்த பாதுகாப்பு அவளுக்குக் கிடையாது. வாருங்கள்'' என்று கூறி நடந்தான்.

தளபதி ராணியை நோக்கினார். ''போய் வாருங்கள் அப்பா'' என்று திடமாக ராணியும் சொல்லவே, வழி ஏதுமின்றித் தளபதி யும் நடந்தார்- கூனனைத் தொடர்ந்து.

அவர்கள் கதவைச் சாத்திக்கொண்டு சென்றதும் ராணியை நோக்கிய அனந்த், அந்த முகத்தில் வெட்கச் சிவப்பைக் கண்டு அசந்து போனான். அந்தச் சிவப்பு அந்த அறையின் மூலையிலிருந்த விளக்கொளியில் அதிகச் சிவப்பாகத் தெரிந்தது. ''ராணி, அந்த

விளக்கை எடுத்து வா'' என்று அனந்த் சொல்லவே, ராணி மூலைக்குச் சென்று விளக்கை எடுத்து வந்து மேஜைமீது வைத்தாள்.

வைத்துவிட்டுத் திரும்பிச் செல்ல முயன்ற ராணியைக் கையைப் பிடித்து நிறுத்தினான் அனந்த். ராணியின் முகம் கோபத்தாலும் நாணத்தாலும் விளக்கொளியில் செக்கச் செவேலென்று பளபளத்தது. அவள் சிவந்த இதழ்களில் இருந்த நீரோட்டம் சிறந்த ரத்தினத்தின் சிவப்பையும் நீரோட்டத்தையும் பரிகசிக்கும்படியாக இருந்தது. அவள் கையைப் பிடித்ததால் அவள் அதரங்கள் ஈரத்துடன் அசைந்தபோது இந்திரஜித் தனது அறிவை இழந்தான். அந்த அதரங்களில் தனது இடது ஆள்காட்டி விரலை வைத்து லேசாகத் தடவினான். ''ரத்னா! என்ன அழகான, பொருத்தமான பெயர்!'' என்று அவன் உதடுகள் முணுமுணுத்தன. அவள் உணர்ச்சிகள் வேகமாகச் சுழன்றன. விழிகள் தாழ்ந்தன, நிலத்தை நோக்கி!

அத்தியாயம் – 17

# குழல் திரை! குமுறிய உணர்ச்சிகள்!

இந்திரஜித் அனந்த், ராணியின் கையொன்றைத் தனது வலது கையால் பிடித்து அவளைப் போகவொட்டாமல் நிறுத்தி, இடது கை ஆள்காட்டி விரலால் அவள் இரத்தின இதழ்களைத் தடவிய போது, ராணியின் விழிகள் நிலத்தை நோக்கித் தாழ்ந்தனவேயொழிய அவள் உணர்ச்சிகள் தாழவில்லை. தென்னஞ்சோலையில் அபாயத்திலிருந்து தன்னை மீட்க, அவன் தன்னை மணலில் தள்ளிக் கட்டிப் புரண்ட நேரத்தில் கூட அளவு மீறிக் கொந்தளிக்காத தனது உணர்ச்சிகள், அந்த அறையில், அந்நிலையில் கட்டுத்தறிகளையெல்லாம் மீறி ஆகாயத்தை நோக்கிப் பறப்பதை உணர்ந்தாள் ராணி.

இத்தனைக்கும் தென்னஞ் சோலையிலிருந்த நெருக்கம் அனந்துக்கும் தனக்கும் அந்த அறையில் அந்தச் சமயத்தில் இல்லையென்பதையும், இடையின் சேலையைச் சோலையில் துழாவிய அவன் கை தனது கையைச் சாதாரணமாகவே அப்போது பிடித்துக் கொண்டிருந்ததையும் எண்ணி, 'எட்ட இருக்கும்போது ஏன் இந்த நெகிழ்ச்சி, புரட்சி' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள். விடையேதும் கிடைக்காததால் இதழ்களை மட்டும் மெள்ள அசைத்தாள். அந்த இதழ்கள் இந்திரஜித் அனந்தின் முரட்டு விரலைச் சற்று அதிகமாகவே ஸ்பரிசித்து விட்டதால் அவன் அடியோடு நிலைகுலைந்து போனான்.

அவள் செவ்விய கொவ்வை இதழ்கள் தனது விரலில் புரண்டதை உணர்ந்ததால் அவள் நிலையை ஓரளவு புரிந்து கொண்ட இந்திரஜித் அனந்த், தனது மனநிலையும் அப்படி ஒன்றும் அதிகத் திடமாக இல்லை என்பதை உணர்ந்துகொண்டான். அவள் இடது கையைப் பிடித்திருந்த தனது வலது கையில் ஓரளவு வலு இருந்தாலும் அந்த வலுகூடத் தன்னைத் திடப்படுத்திக் கொள்ளப் போதாதென்ற எண்ணத்தாலோ என்னவோ தன்னையும் மீறி அந்த வலது கை அவள் இடது கையை அளவுக்கு அதிகமாகவே பற்றி

நெரித்ததையும், வலு இழந்த இடது கைகூட தனது ஆள்காட்டி விரலை அவள் இதழ்களில் சற்று அதிகமாகவே பதிந்து விட்டதையும் கண்ட இந்திரஜித், எதற்கும் அசையாத தனது அவயவங்களைத் தன்னையும் மீறி அசையவைக்கும் சக்தி உலகில் உண்டு என்பதைச் சந்தேகமறப் புரிந்து கொண்டான். இப்படி மீறிவிட்ட தனது உணர்ச்சிகளுக்கு ஊன்றுகோல் ராணியின் அழகிய உடலாய்த்தான் இருக்க முடியும் என்ற நினைப்பினால் அவள் இடது கைக்கு விடுதலை அளித்து, தனது வலது கையை அவள் தோள்மீது வைத்து அவளைத் தன்னை நோக்கி இழுத்தான் மெதுவாக.

அதை மறுக்கும் நிலையில் இல்லை ராணியின் மனம். இடது கையை அவன் வலது கை நெரித்தபோது அதனால் ஏற்பட்ட வலி தனக்கு இம்சையை அளிப்பதற்குப் பதில் இன்பத்தை அளித்ததை எண்ணிப் பார்த்து வியந்தாள் ராணி. இம்சையே இன்பமாகும் நிலை பெண்கள் வாழ்வில் உண்டு என்பதை அந்தச் சில நிமிடங்களில் சந்தேகமற உணர்ந்தாள் அவள். அதை மாற்றி இன்பமே இம்சையாகலாம் என்று வைத்துக் கொள்வதும் தவறா காது என்றும் அவள் நினைத்தாள். அவன் கை தோளைப்பற்றி இழுத்தபோதும், கையைவிடத் தோளை அவன் வலது கை முரட்டுத்தனமாகப் பற்றி இழுத்தபோதும், அந்த இழுப்புக்கு உட்பட்டுத் தான் அவனை நெருங்கியபோதும் ஏற்பட்ட இன்பம், பூர்த்தி பெறாத காரணத்தால் - பூர்த்தி பெற முடியாத காரணத்தால் தன்னை எத்தனை இம்சைப்படுத்துகிறது என்று நினைத்தாள்.

இப்படி இன்பத்தில் இம்சையையும், இம்சையில் இன்பத்தை யும் இணைத்து வைத்திருக்கும் இயற்கையின் விசித்திரத்தையும் எண்ணியதால் மனிதர்களை மீறிய சக்தி ஒன்று அவர்களை இயக்கு வதைப் புரிந்து கொண்டாள். இந்த எண்ணம் எழுந்ததால் உள்ளூரச் சிரித்துக் கொண்டாள் ராணி. 'எந்த நிலையில் தத்துவத்தை எண்ணுகிறேன்! என்று தன்னைத் தானே கேட்டுக் கொள்ளவும் செய்தாள். சிற்றின்பத்துக்கும் பேரின் பத்துக்கும் உள்ள இந்த உறவையொட்டித்தான் சிற்றின்பத்தின் அஸ்திவாரத்தில் பேரின் பத்தைப் பெரியவர்கள் எழுப்பினார்கள் என்ற உண்மையை அவள் புரிந்து கொள்ளவில்லை - உணர்ச்சிகள், அவள் புத்தியைத் தடு மாறச் செய்துவிட்ட காரணத்தால்.



இந்திரஜித் அனந்தின் புத்தியும் அப்படியொன்றும் திடமா யிருந்து விடவில்லை. தோளைப்பற்றி இழுத்ததால் அருகில் வந்து விட்ட ராணியின் திண்ணிய இடது புறப் பரிமாணம் மேஜைமீது போடப்பட்டிருந்த வலது காலின் இறக்கத்தில் பதிந்ததாலும், தோளின் கூடவே நகர்ந்து அவள் அருகில் வந்ததால் மடிந்து விட்ட முழங்கையில் அதற்கு மேலும் அவள் மார்பின் மீது பதிந்ததாலும், ஊடுருவிய உணர்ச்சிகளைத் திடப்படுத்த அனந்த் அவள் உதடுகளி லிருந்த விரலை எடுத்து இடது கையிலிருந்த காகிதச்சுருளை மேஜைமீது போட்டுவிட்டு, அந்த இடக் கையால் மேஜையைப் பிடித்துக்கொண்டான். அவன் கை நடுங்கவில்லை. மனம் என்ன காரணத்தாலோ நடுங்கிக்கொண்டிருந்தது. ஆனால், அத்தனை நடுக்கத்தையும் மீறி எழுந்த இச்சை அவன் இடது கையை அவள்மீது நன்றாக அழுத்திப் புரட்டவே செய்தது. புரண்ட அந்தக் கையில் பட்டு, உருண்டெழுந்து கடினப்பட்டுவிட்ட அவள் எழில் அவனுக் குப் பெரும் சங்கடத்தை விளைவித்ததென்றால் ராணியின் நிலை விவரிக்க இயலாததாயிற்று!

அவன் கை தோளிலிருந்து மார்புவரை மடிந்து புரண்டதால் அவள் உடலெங்கும் உணர்ச்சிகள் பயங்கரமாக ஊடுருவின. அதைச் சமாளித்துக் கொள்ள அவன் அமர்ந்திருந்த நாற்காலியில் சாய முயன்றாள். அந்த முயற்சி அவள் உடலை அனந்தின் கால்மீது அழுத்திவிடவே, காட்டுத் தீக்குத் தப்பியவன் மடுவில் விழுந்த கதையாக அவள் அதிக ஆழத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள். அந்தச் சமயத்தில் இந்திரஜித்தின் வலது கையைத் தேடி இடையைச் சுற்றிச் சென்ற இடக் கைக்கு ஆதரவளிக்கத் தோளிலிருந்த வலக் கையும் இறங்கிவிடவே, இரு கைகளின் வளையத்தில் சிக்கிக் கொண்டாள் ராணி. அப்படித் தன்னைச் சுற்றிவிட்ட கைகள் திடீரென்று தன்னைக் குழந்தைபோல் தூக்கி விட்டதையும், மேஜை மீது அவனுக்கு எதிர்ப்புறமாக உட்கார வைத்துவிட்டதையும், அந்த எதிர்ப்புறமும் முழுவதுமாக இல்லாமல் அரைவாசியா யிருந்தபடியால் தனது ஒரு கால் மேஜையின் மீது மடிந்தும் இன்னொரு கால் பக்கவாட்டில் ஊசலாடும் நிலையில் தொங்கி யதையும் பார்த்த ராணி, பக்கத்திலிருந்த விளக்குச் சுட்டுவிடுமோ என்ற நினைப்பால் அதைச் சிறிது நகர்த்தினாள் அப்புறம்.

ராணியை மேஜைமீது தனக்கு எதிரே உட்கார வைத்துக் கொண்ட அனந்த் நாற்காலியில் மீண்டும் சாய்ந்து அவளை நோக்கினான். விளக்கு மேஜையின் நடுவில் அவளுக்கு ஒருபுறத்தில் இருந்ததால் அதன் ஒளி அவளது உடலின் ஒரு பாதியில் மட்டும் பட்டு அதற்கு அதிக மெருகைக் கொடுத்ததென்றால் இன்னொரு பாதியில் படாமலே இருட்டடித்த நிலையில் அவள் இருண்ட பாகத்தை அரையும் குறையுமாகக் காட்டிப் பிரமிக்கும் ஊகங்களுக்கு இடம் கொடுத்தது. விளக்கொளி அவள்மீது பட்டு, எதிர்ப்புறம் வீசிவிட்ட நீண்ட நிழல்கூடத் தரையில் மிக மனோகரமாகக் காட்சியளித்தது. அந்த நிழலில் தெரிந்தது ஒரு புறந்தான். ஆனால், ஆண் மகன் மதியை மயக்க ஒரு பாதிகூடத் தேவையில்லை என்பதையும், எழிலின் ஏதாவது ஒரு பகுதியே போதுமென்பதையும் அனந்த் உணர்ந்து கொண்டான், நிழலைக் கவனித்தபோது.

'நிஜமிருக்க நிழலெதற்கு?' என்ற சிந்தனையால் மீண்டும் எதிரே இருந்த அவள் உடல்மீது கண்களைத் திருப்பினான். இடது காலை மடித்து அவள் உட்கார்ந்திருந்ததால் உருண்ட கால் மிக உருண்டையாகி அவள் சேலையைச் சற்றே நெகிழ்த்தியிருந்தது. தோளை அவன் விட்டதால் நெகிழ்ந்துவிட்ட மேலாடை, அரைவாசி இறங்கி அவள் அழகு முழுதும் அவன் கண்ணில் படக் கூடாது என்பதற்காக அவள் மடியை மறைத்துக் கிடந்தது. கீழே தொங்கிய அவள் கால் மட்டும் சும்மாயிராமல் லேசாக அசைந்தும் ஆடியும் மறைத்த அந்த ஆடைப் பகுதியை அசைத்து அனந்தின் ஊகத்தை உச்சநிலைக்குக் கொண்டு சென்றது. அதன் விளைவாக அவன் சற்று நிமிர்ந்து உட்கார்ந்தான். ஒரு முறை பெருமூச்சும் விட்டான்.

அவன் பெருமூச்சுக்குக் காரணம் ராணிக்கும் தெரிந்திருந்ததால் அவள் பெரும் சங்கடத்தில் இருந்தாள். அந்தச் சங்கடத்தை அதிகப்படுத்த அவளை வளைத்த கைகள் பிரிந்தன. இடதுகை அவள் இடது முழங்காலுக்குச் சற்றுமேலே பதிந்தது. உணர்ச்சிகளைக் கட்டி நிறுத்த அந்தக் கையின் விரல்கள் மாறி மாறி எழுந்து எழுந்து வழுவழுத்த அவள் காலில் பதிந்தன. ஒரு முறை மடிந்து அழுத்திப் பிடிக்கவும் செய்தன.

ராணி குனிந்த தலை நிமிராமல் உட்கார்ந்திருந்தாள். இத்தனைக்குப் பிறகும் அவன் ஏன் ஆலோசிக்கிறான், என்ன



ஆலோசிக்கிறான் என்று சிந்தித்துப் பார்த்தாள். அதுவரை பல சண்டைகளில் ஆண் மக்கள் கரங்கள் பட்டபோதெல்லாம் அசட்டையாக, அவர்களைத் தூக்கியடித்த, ஏன் ஓரிருவரைக் கொன்றுவிட்ட தன் கரங்கள், அனந்தின் ஸ்பரிசத்தினால் இப்படித் திண்டாட வேண்டிய அவசியம் என்ன என்றும் எண்ணிப் பார்த்தாள்.

வாழ்க்கையில் ஒவ்வொரு பெண்ணும் ஏராளமான ஆண்களைப் பார்த்தாலும், அவள் நாணப்படுவதும், இன்பத்துக்கு ஏங்குவதும் ஒரே ஒரு ஆண்மகனிடம்தான் என்பதைப் புரிந்து கொண்டாள். காதல் என்பது உடலைப் பொறுத்ததல்ல கண் பார்வையையும் பொறுத்ததல்லவென்பதை காஸண்டராவின் அந்த அறையில் சந்தேகமற உணர்ந்து கொண்டாள் ராணி. சாதாரணக் கண்களைவிட உணர்ச்சியின் கண்களுக்குத் தனிப்பார்வை உண்டு என்பதும் மேஜைமீது உட்கார்ந்திருந்த அந்தச் சமயத்தில் மிகத் தெளிவாகப் புலனாயிற்று அந்த ஏந்திழைக்கு.

ராணியின் மனத்தில் எழுந்த எண்ணங்களோ, சர்ச்சைகளோ, சித்தாந்தங்களோ எதுவுமே எழவில்லை இந்திரஜித் அனந்துக்கு. சிற்பி செதுக்கிய சிலையென மேஜைமீது உட்கார்ந்திருந்த ராணியை ஏதோ வெறி பிடித்தவன்போல் நோக்கிக் கொண்டிருந்தான் அனந்த். அவளின் உடற்கூறு பரிமாணங்கள் அவன் கண்களில் வெறியை அதிகப்படுத்திக் கொண்டிருந்தன. அவள் காலின் திண்ணிய மேற்புறத்தில் பதிந்த கை, இருந்த இடத்தில் நிற்காமல் தவித்தது. சரேலென்று மேஜை மீதிருந்த தனது கால்களை இழுத்துத் தரையில் விட்டுக்கொண்ட அனந்த் சற்றுக் குனிந்து முகத்தை அவள் மடியில் புதைத்துக்கொண்டான். அதன் விளைவாகத் தன் கண்ணெதிரே கலைந்து கிடந்த அவன் முரட்டுக் குழல்களை இடது கையால் தடவிச் சீர்ப்படுத்த முயன்றாள் ராணி. மகாவீரனான இந்திரஜித் அனந்த்,அந்தச் சமயத்தில் ஒரு துஷ்டக் குழந்தைபோல் தெரிந்தான் ராணியின் கண்களுக்கு. இதன் காரணமாகப் பக்கவாட்டில் தொங்கிய அவன் வலது கையை எடுத்துத் தனது இடுப்பைச் சுற்றி வைத்துக்கொண்டாள்.

அனந்த் அவள் மடியில் மெள்ளத் தனது தலையைப் புரட்டினான் ,ஏதோ ஆதரவைத் தேடுபவனைப்போல். பிறகு அரைவாசித் தலையைத் திருப்பி மெதுவாக ''ராணி'' என்று அழைத்தான்.

ராணி தலையை நன்றாகக் குனிந்தாள். அரைகுறையாக முடிந்திருந்த அவள் குழல்கள் சிதறிக் கிடந்ததால் முடிப்பை முழுதும் பிரித்த ராணி, அக்குழலின் பெரும் பகுதியை முன்னுக்குக் கொண்டு வந்து அவன் முகத்துக்கும் தன் முகத்துக்குமாகச் சேர்த்துத் திரையிட்டாள். குழலிட்ட திரைக்குள் சிக்கிய இரு முகங்களும் ஒன்றையொன்று நோக்கின. ராணியின் ஈர உதடுகள் பிரிந்து ''ஏன்?'' என்று மிக மெதுவாகக் கேட்டன.

''ஒரு ரகசியம்'' என்றான் அனந்த் மெதுவாக.

''என்ன!'' ஆவலுடன் எழுந்தது அவள் கேள்வி.

''உன்னை என் மனம்....''

''உம்...''

''தழுவி விட்டது...''

இதைக் கேட்ட ராணியின் இதழ்கள் விரிந்தன புன்முறுவலால். ''அது...'' என்று துவங்கிய ராணி சட்டென்று பேச்சை நிறுத்தினாள். பாக்கிப் பேச்சைக் கண்கள் பேசின.

புரிந்தது இந்திரஜித்துக்கு. இருப்பினும் மெள்ளக் கேட்டான், ''அது...?'' என்று.

''போதுமா?'' என்று சொல்ல அசைந்தன இதழ்கள். ஆனால், சொல் வரவில்லை வெளியே.

இதழ்கள் அசைந்த விதத்திலேயே சொல்லையும் புரிந்து கொண்டான் இந்திரஜித். ஆகையால் மிக மெதுவாகச் சொன்னான் : ''ஆத்திரப்பட இது சமயமில்லை!'' என்று.

இந்தக் கேள்வி அவள் இதழ்களைச் சிறிது துடிக்க வைத்தன. ''அப்படியானால்...'' என்று ஏதோ சொல்ல முயன்றாள்.

''என்ன அப்படியானால்?'' இந்திரஜித்தின் கேள்வியில் அசடு தட்டியது.

''ஆத்திரம் இருக்கிறதா?'' துணிவுடன் கேட்டாள் ராணி.

அனந்த் பதில் சொல்லவில்லை. தலையை மட்டும் அசைத்தான். அவள் தலையை அசைக்கவில்லை. அவன் தலை கிடந்த மடியை லேசாக அசைத்தாள் ஒருமுறை. ''ஒரு பழமொழி இருக்கிறது'' என்று மட்டும் சொன்னாள்.



''என்ன பழமொழி?''

''காற்றுள்ள போதே தூற்றிக்கொள்!''

இதை அவள் சொன்ன முறை, சொன்னபோது குரல் ஒலித்த விதம், விழிகள் வீசிய பார்வை, இதழ்கள் அசைந்த விதம், இவற்றிலிருந்து அவள் உணர்ச்சிக் காற்று பெரிதாக அடிப்பதை அவன் புரிந்து கொண்டான். அந்தக் காற்று அவன் காமாக்கினியை நன்றாக விசிறிவிட்டதால் ''ரத்னா!'' என்று அவள் பெயரைச் சொல்லி அழைத்தான் மெதுவாக. பதிலை எதிர்பார்க்கவில்லை அவன். சற்றுத் தலையைத் தூக்கி அருகே இருந்த இரத்தின இதழ்களை வசப்படுத்திக் கொண்டான்.

அதற்குப் பிறகு அவள் தலைக்குழல் திரும்பத் திரும்ப அசைந்ததிலிருந்துதான் அவசியமா என்பதைச் சிந்தித்ததால், படபடவெனச் சுடரை அடித்து அடித்து அழிக்கப் பார்த்தது- சற்று எட்ட மேஜைமீது இருந்த விளக்கு. சிறிது நேரத்தில் அழித்தும் கொண்டது- எண்ணெய் ஆகிவிட்டதால். அந்தகாரம் சூழ்ந்தது அறையில். அந்தகாரத்தை இருவரும் கவனிக்கவில்லை. எண்ணங்களின் எழுச்சியே எண்ணெயாகி, இச்சையே காற்றாகி, உணர்ச்சிகளின் புரட்சியே சுடராகி, அந்தகாரத்தை அர்த்தமற்றதாகச் செய்துவிட்டன!

ராணியை மேஜைமீது தனக்கு எதிரே உட்கார வைத்துக் கொண்ட அனந்த் நாற்காலியில் மீண்டும் சாய்ந்து அவளை நோக்கினான். விளக்கு மேஜையின் நடுவில் அவளுக்கு ஒருபுறத்தில் இருந்ததால் அதன் ஒளி அவளது உடலின் ஒரு பாதியில் மட்டும் பட்டு அதற்கு அதிக மெருகைக் கொடுத்ததென்றால் இன்னொரு பாதியில் படாமலே இருட்டடித்த நிலையில் அவள் இருண்ட பாகத்தை அரையும் குறையுமாகக் காட்டிப் பிரமிக்கும் ஊகங்களுக்கு இடம் கொடுத்தது. விளக்கொளி அவள்மீது பட்டு, எதிர்ப்புறம் வீசிவிட்ட நீண்ட நிழல்கூடத் தரையில் மிக மனோகரமாகக் காட்சியளித்தது. அந்த நிழலில் தெரிந்தது ஒரு புறந்தான். ஆனால், ஆண் மகன் மதியை மயக்க ஒரு பாதிகூடத் தேவையில்லை என்பதையும், எழிலின் ஏதாவது ஒரு பகுதியே போதுமென்பதையும் அனந்த் உணர்ந்து கொண்டான், நிழலைக் கவனித்தபோது.

'நிஜமிருக்க நிழலெதற்கு?' என்ற சிந்தனையால் மீண்டும் எதிரே இருந்த அவள் உடல்மீது கண்களைத் திருப்பினான். இடது காலை மடித்து அவள் உட்கார்ந்திருந்ததால் உருண்ட கால் மிக உருண்டையாகி அவள் சேலையைச் சற்றே நெகிழ்த்தியிருந்தது. தோளை அவன் விட்டதால் நெகிழ்ந்துவிட்ட மேலாடை, அரைவாசி இறங்கி அவள் அழகு முழுதும் அவன் கண்ணில் படக் கூடாது என்பதற்காக அவள் மடியை மறைத்துக் கிடந்தது. கீழே தொங்கிய அவள் கால் மட்டும் சும்மாயிராமல் லேசாக அசைந்தும் ஆடியும் மறைத்த அந்த ஆடைப் பகுதியை அசைத்து அனந்தின் ஊகத்தை உச்சநிலைக்குக் கொண்டு சென்றது. அதன் விளைவாக அவன் சற்று நிமிர்ந்து உட்கார்ந்தான். ஒரு முறை பெருமூச்சும் விட்டான்.

அவன் பெருமூச்சுக்குக் காரணம் ராணிக்கும் தெரிந்திருந்ததால் அவள் பெரும் சங்கடத்தில் இருந்தாள். அந்தச் சங்கடத்தை அதிகப்படுத்த அவளை வளைத்த கைகள் பிரிந்தன. இடதுகை அவள் இடது முழங்காலுக்குச் சற்றுமேலே பதிந்தது. உணர்ச்சிகளைக் கட்டி நிறுத்த அந்தக் கையின் விரல்கள் மாறி மாறி எழுந்து எழுந்து வழுவழுத்த அவள் காலில் பதிந்தன. ஒரு முறை மடிந்து அழுத்திப் பிடிக்கவும் செய்தன.

ராணி குனிந்த தலை நிமிராமல் உட்கார்ந்திருந்தாள். இத்தனைக்குப் பிறகும் அவன் ஏன் ஆலோசிக்கிறான், என்ன



ஆலோசிக்கிறான் என்று சிந்தித்துப் பார்த்தாள். அதுவரை பல சண்டைகளில் ஆண் மக்கள் கரங்கள் பட்டபோதெல்லாம் அசட்டையாக, அவர்களைத் தூக்கியடித்த, ஏன் ஓரிருவரைக் கொன்றுவிட்ட தன் கரங்கள், அனந்தின் ஸ்பரிசத்தினால் இப்படித் திண்டாட வேண்டிய அவசியம் என்ன என்றும் எண்ணிப் பார்த்தாள்.

வாழ்க்கையில் ஒவ்வொரு பெண்ணும் ஏராளமான ஆண்களைப் பார்த்தாலும், அவள் நாணப்படுவதும், இன்பத்துக்கு ஏங்குவதும் ஒரே ஒரு ஆண்மகனிடம்தான் என்பதைப் புரிந்து கொண்டாள். காதல் என்பது உடலைப் பொறுத்ததல்ல கண் பார்வையையும் பொறுத்ததல்லவென்பதை காஸண்டராவின் அந்த அறையில் சந்தேகமற உணர்ந்து கொண்டாள் ராணி. சாதாரணக் கண்களைவிட உணர்ச்சியின் கண்களுக்குத் தனிப்பார்வை உண்டு என்பதும் மேஜைமீது உட்கார்ந்திருந்த அந்தச் சமயத்தில் மிகத் தெளிவாகப் புலனாயிற்று அந்த ஏந்திழைக்கு.

ராணியின் மனத்தில் எழுந்த எண்ணங்களோ, சர்ச்சைகளோ, சித்தாந்தங்களோ எதுவுமே எழவில்லை இந்திரஜித் அனந்துக்கு. சிற்பி செதுக்கிய சிலையென மேஜைமீது உட்கார்ந்திருந்த ராணியை ஏதோ வெறி பிடித்தவன்போல் நோக்கிக் கொண்டிருந்தான் அனந்த். அவளின் உடற்கூறு பரிமாணங்கள் அவன் கண்களில் வெறியை அதிகப்படுத்திக் கொண்டிருந்தன. அவள் காலின் திண்ணிய மேற்புறத்தில் பதிந்த கை, இருந்த இடத்தில் நிற்காமல் தவித்தது. சரேலென்று மேஜை மீதிருந்த தனது கால்களை இழுத்துத் தரையில் விட்டுக்கொண்ட அனந்த் சற்றுக் குனிந்து முகத்தை அவள் மடியில் புதைத்துக்கொண்டான். அதன் விளைவாகத் தன் கண்ணெதிரே கலைந்து கிடந்த அவன் முரட்டுக் குழல்களை இடது கையால் தடவிச் சீர்ப்படுத்த முயன்றாள் ராணி. மகாவீரனான இந்திரஜித் அனந்த்,அந்தச் சமயத்தில் ஒரு துஷ்டக் குழந்தைபோல் தெரிந்தான் ராணியின் கண்களுக்கு. இதன் காரணமாகப் பக்கவாட்டில் தொங்கிய அவன் வலது கையை எடுத்துத் தனது இடுப்பைச் சுற்றி வைத்துக்கொண்டாள்.

அனந்த் அவள் மடியில் மெள்ளத் தனது தலையைப் புரட்டினான் ,ஏதோ ஆதரவைத் தேடுபவனைப்போல். பிறகு அரைவாசித் தலையைத் திருப்பி மெதுவாக ''ராணி'' என்று அழைத்தான்.

ராணி தலையை நன்றாகக் குனிந்தாள். அரைகுறையாக முடிந்திருந்த அவள் குழல்கள் சிதறிக் கிடந்ததால் முடிப்பை முழுதும் பிரித்த ராணி, அக்குழலின் பெரும் பகுதியை முன்னுக்குக் கொண்டு வந்து அவன் முகத்துக்கும் தன் முகத்துக்குமாகச் சேர்த்துத் திரையிட்டாள். குழலிட்ட திரைக்குள் சிக்கிய இரு முகங்களும் ஒன்றையொன்று நோக்கின. ராணியின் ஈர உதடுகள் பிரிந்து ''ஏன்?'' என்று மிக மெதுவாகக் கேட்டன.

''ஒரு ரகசியம்'' என்றான் அனந்த் மெதுவாக.

''என்ன!'' ஆவலுடன் எழுந்தது அவள் கேள்வி.

''உன்னை என் மனம்....''

''உம்...''

''தழுவி விட்டது...''

இதைக் கேட்ட ராணியின் இதழ்கள் விரிந்தன புன்முறுவலால். ''அது...'' என்று துவங்கிய ராணி சட்டென்று பேச்சை நிறுத்தினாள். பாக்கிப் பேச்சைக் கண்கள் பேசின.

புரிந்தது இந்திரஜித்துக்கு. இருப்பினும் மெள்ளக் கேட்டான், ''அது...?'' என்று.

''போதுமா?'' என்று சொல்ல அசைந்தன இதழ்கள். ஆனால், சொல் வரவில்லை வெளியே.

இதழ்கள் அசைந்த விதத்திலேயே சொல்லையும் புரிந்து கொண்டான் இந்திரஜித். ஆகையால் மிக மெதுவாகச் சொன்னான் : ''ஆத்திரப்பட இது சமயமில்லை!'' என்று.

இந்தக் கேள்வி அவள் இதழ்களைச் சிறிது துடிக்க வைத்தன. ''அப்படியானால்...'' என்று ஏதோ சொல்ல முயன்றாள்.

''என்ன அப்படியானால்?'' இந்திரஜித்தின் கேள்வியில் அசடு தட்டியது.

''ஆத்திரம் இருக்கிறதா?'' துணிவுடன் கேட்டாள் ராணி.

அனந்த் பதில் சொல்லவில்லை. தலையை மட்டும் அசைத்தான். அவள் தலையை அசைக்கவில்லை. அவன் தலை கிடந்த மடியை லேசாக அசைத்தாள் ஒருமுறை. ''ஒரு பழமொழி இருக்கிறது'' என்று மட்டும் சொன்னாள்.



''என்ன பழமொழி?''

''காற்றுள்ள போதே தூற்றிக்கொள்!''

இதை அவள் சொன்ன முறை, சொன்னபோது குரல் ஒலித்த விதம், விழிகள் வீசிய பார்வை, இதழ்கள் அசைந்த விதம், இவற்றிலிருந்து அவள் உணர்ச்சிக் காற்று பெரிதாக அடிப்பதை அவன் புரிந்து கொண்டான். அந்தக் காற்று அவன் காமாக்கினியை நன்றாக விசிறிவிட்டதால் ''ரத்னா!'' என்று அவள் பெயரைச் சொல்லி அழைத்தான் மெதுவாக. பதிலை எதிர்பார்க்கவில்லை அவன். சற்றுத் தலையைத் தூக்கி அருகே இருந்த இரத்தின இதழ்களை வசப்படுத்திக் கொண்டான்.

அதற்குப் பிறகு அவள் தலைக்குழல் திரும்பத் திரும்ப அசைந்ததிலிருந்துதான் அவசியமா என்பதைச் சிந்தித்ததால், படபடவெனச் சுடரை அடித்து அடித்து அழிக்கப் பார்த்தது- சற்று எட்ட மேஜைமீது இருந்த விளக்கு. சிறிது நேரத்தில் அழிந்தும் கொண்டது- எண்ணெய் ஆகிவிட்டதால். அந்தகாரம் சூழ்ந்தது அறையில். அந்தகாரத்தை இருவரும் கவனிக்கவில்லை. எண்ணங்களின் எழுச்சியே எண்ணெயாகி, இச்சையே காற்றாகி, உணர்ச்சிகளின் புரட்சியே சுடராகி, அந்தகாரத்தை அர்த்தமற்றதாகச் செய்துவிட்டன!

## அத்தியாம் - 18

# ‘நீயும் ஒரு கப்பல்!’

**கா**மத்தின் வலிய கயிற்றால் பிணைக்கப்படும் உள்ளங்களுக்கு இருட்டு வெளிச்சமாகிறது; வெளிச்சம் இருட்டாகிறது. இச்சை விளைவிக்கும் மாற்றம் இது. ஆகவே, காஸண்டரா கப்பலில் காப்டன் இங்க்லண்டின் அறையில் பரஸ்பர உணர்ச்சி வேகத்தில் பின்னிக் கிடந்த இருவரும் விளக்கு அணைந்ததையோ அந்தகாரம் சூழ்ந்துவிட்டதையோ அடியோடு கவனிக்கவில்லையென்றால், அதில் வியப்பதற்கு என்ன இருக்கிறது!

'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்!' என்று ராணி மெதுவாக அவனுக்கு மந்திரம் ஓதியபோதே உணர்ச்சிக் காற்றினால் அலைக்கழிக்கப்பட்ட அனந்த், அவள் இதழ்களை வசப்படுத்திக் கொண்டதுடன் இடையைச் சுற்றியிருந்த இரு கைகளில் இடதுகையைத் தூக்கி அவள் கழுத்தையும் வளைத்தான்.

ராணி பேச்சை இழந்தாள். அத்துமீறும் முன்பாகத் திமிறிக் கொள்ளும் சக்தியையும் இழந்தாள். கழுத்தை வளைத்த இடது கை அவளை, அவன் முகத்தை நோக்கி இழுத்ததும், அவள் அழகிய கபோலம் அந்த ஆண்மகனின் முரட்டுக் கன்னத்துடன் இழைந்ததும், அவன் வலது கரம் அவள் இடையின் பின்புறத்தை இறுக்கிப் பிடித்ததும், எல்லாமே அவள் சுதந்திரத்தைப் பறித்துக் கொண்டதால் அவள் பெருமூச்சுவிட்டாள்.

அந்தப் பெருமூச்சு பெரும் புயலாக அவன் உள்ளத்தை உலுக்கிவிடவே, அவன் செயலிழந்து கிடந்தான், அவள் மடியில் சில விநாடிகள். இயற்கையின் மற்றொரு புயல் அந்த உணர்ச்சிப் புயலுடன் போட்டி போடாதிருந்தால்... அவர்கள் உணர்ச்சிகளின் முடிவு என்னவாக இருக்குமென்பதைச் சொல்ல முடியாது.

திடீரென்று வெளியே 'ஹோ' என்று எழுந்த பெரும் சப்தம், கப்பல் எதிர்பார்க்காமல் ஆடிய வேகம், இரண்டும் சட்டென அவர்களைப் பிரித்ததால், முதலில் சுரணை அடைந்த அனந்த்,



அவள் மடியிலிருந்து துள்ளி எழுந்து மேஜைமீதிருந்த அவளைக் கீழே விழாதபடி தாங்கிப் பிடித்தான். அப்படிப் பிடிக்கவேண்டிய அவசியமில்லை என்பதை அவனுக்கு உணர்த்த அவளும் தனது இரு கால்களையும் தரையில் ஊன்றி மேஜையை உறுதியாக ஒரு கையால் பிடித்துக்கொண்டாள்.

அறை இருபுறமும் மாறிமாறி எழுந்து தாழ்ந்து கொண்டிருந்தது. வெளியே காற்றின் வேகம் ஏறிக் கொண்டிருந்ததால் ஆட்டம் அதிகமாகி, மேஜை மீதிருந்த மண்ணெண்ணெய் விளக்கு சட்டென்று சாய்ந்து மேஜைமீது உருண்டது. அதை வேகமாக இடது கையால் பற்றிக்கொண்ட அனந்த், ''ராணி! மெள்ளக் கட்டிலுக்குச் சென்றுவிடு. இந்த விளக்கைக் கொளுத்திக்கொண்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டு, அவள் தோளை ஆதரவாக வலது கையால் ஒருமுறை அழுத்திவிட்டு,இடது கையால் அணைந்த விளக்குடன் அறை ஆட்டத்தைச் சமாளித்துக்கொண்டு வெளியே சென்றான்.

மாலுமிகள் தளத்தில் அங்குமிங்கும் தள்ளாடியும், விழுந்தும் எழுந்தும் திரிந்து கொண்டிருந்தார்கள். மும்முரமாய்ச் சூழ்ந்திருந்த பனியின் விளைவாக அவர்களைச் சரியாகப் பார்க்க முடியவில்லையென்றாலும், பாயின் கயிறுகள் அவிழாமல் இருக்கின்றனவா என்பதைச் அவர்கள் பரிசோதித்துக்கொண்டிருந் த தையும், காற்றின் விளைவாகப் பயங்கரமாகச் சுற்றிலும் எழுந்த அலைகள் தளத்தில் வாரிக் கொட்டிய நீர், பக்கத் துளைகள் வழியாக வெளியே செல்ல, அந்தத் துவாரங்களிலிருந்த அடைப்புகளை நீக்கிக் கொண்டிருந்ததையும் கவனித்த இந்திரஜித் அனந்த், காப்டன் இங்க்லண்டும் டெய்லரும் திறமைசாலிகளான மாலுமிகளைத்தான் வைத்திருக்கிறார்கள் என்று சிலாகித்தான் உள்ளூர.

அவனுக்கு இருந்த கடல் ஆசையில், கையில் மட்டும் அந்த விளக்கு இல்லாதிருந்தால் அவனும் அந்த மாலுமிகளில் ஒருவனாக அவர்களுடன் சேர்ந்து கப்பல் காப்புப் பணியில் இறங்கியிருப்பான். ஆனால், விளக்கை ஏற்ற அவசியமிருந்ததாலும், அவன் எண்ணங்கள் இங்க்லண்டின் அறையில் குழல் விரித்து நின்று கொண்டிருந்த ராணியையும், மேஜைமீது விட்டுவந்த துலாஜியின் கசங்கிய காகிதத்தையும் வட்டமிட்டுக்கொண்டிருந்ததாலும், கையில் விளக்குடன் சற்று வேகமாகவே கால்களை வைத்து

எதிரேயிருந்த டெய்லரின் அறையை நோக்கி நடந்தான். அறை தாழிடப்பட்டிருந்ததால் இருமுறை பலமாகத் தட்டவும் செய்தான்.

சிறிது நேரத்தில் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்த டெய்லர், ''ஹூ த டெவில் ஆர் யூ?'' என்று அதட்டவே ''யுவர் ப்ரெண்ட்'' என்று அறிவித்துவிட்டு டெய்லரையும் உள்ளே தள்ளித் தானும் உள்ளே சென்று கதவைச் சாத்தினான்.

உள்ளேயிருந்த விளக்கு, கூரையிலிருந்து ஆடிக்கொண்டிருந்தாலும் அது விழமுடியாதபடி சங்கிலி கொண்டு பிணைக்கப் பட்டிருப்பதைக் கண்ட இந்திரஜித் அங்கு இங்கலண்டும் இருந்ததைக் கவனித்தான். விளக்கு பெரிதும் ஆடியதால் அதன் வெளிச்சம் இங்கலண்டின் முகத்திலும் டெய்லரின் முகத்திலும் மாறி மாறி இடது பக்கமும் வலதுபக்கமுமாகப் போய்க் கொண்டிருந்ததைப் பார்த்த அனந்த், நீண்ட விவாதத்துக்கோ விளக்கத் துக்கோ அது சமயம் இல்லையென்பதை உணர்ந்து, ''இந்த விளக்கைக் கொளுத்தவேண்டும்'' என்று கூறினான் டெய்லரிடம்.

''தீப்பெட்டி இங்கிருக்கிறது'' என்று மேஜையின் டிராயரைக் காட்டினான் டெய்லர்.

மேஜையிடம் தள்ளாடிச் சென்று டிராயரைத் திறந்து தீப்பெட்டியை எடுத்து அதைக் கொண்டு மிகுந்த எச்சரிக்கையுடன் விளக்கைக் கொளுத்திக் கொண்ட அனந்த், ''காலையில் சந்திக் கிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றான் தனது அறைக்கு.

அறைக்குள் வந்ததும் கதவை ஒரு காலால் உதைத்துவிட்டு கூரையைப் பார்த்தான். விளக்கைத் தொங்கவிட அங்கு வளையமும் கட்ட இரும்புச் சங்கிலியும் இருந்ததால் மேஜைமீது ஏறி விளக்கைக் கூரைமீது தொங்கவிட்டுப் பிணைத்துவிட்டு இறங்கிய பின்பு, மேஜை நடுவிலிருந்து ஓரத்துக்குப் போய்க் கிடந்த காகிதச் சுருளை எடுத்துத் தனது மடியில் செருகிக்கொண்டான்.

விளக்கை ஏற்றிக்கொண்டு திரும்பியதிலிருந்து அவன் செய்த ஏற்பாடுகளையெல்லாம் கவனித்துக்கொண்டே நின்று கொண்டிருந்தாள் ராணி. அப்பொழுதும் விரிந்த குழலை முடிக்க வில்லை அவள். 'விரிகுழல் பைந்தொடி நாணி வேத்தவையில் முறையிடு நாள்' என்று வில்லிபுத்தூரார் வர்ணித்த பாஞ்சாலியைப் போலக் காட்சி தந்தாள். இருவருக்கும் ஒரே வித்தியாசந்தான். பாஞ்சாலி நாணத்துடன் கோபமும் கொண்டிருந்தாள் அன்று. இன்று இவளுக்கு, நாணம் மட்டுமே மிகுந்திருந்தது- ஏற்கெனவே ஏற்பட்டுவிட்ட நிகழ்ச்சிகளால். அன்று அவள் உறுதியான நிலத்தில் நின்றிருந்தாள். இன்று அவள் ஆடும் மரக்கலத்தில் அத்துடன் தன் அழகிய உலலும் ஆட நின்றிருந்தாள். அன்று அவள் மனத்தில் சலனமில்லை. சினம் இருந்தது. இன்று அவள் மனத்திலும் சலனமில்லை. ஆனால், சபலம் இருந்தது. அந்தச் சபலம் மந்தகாசத்தைப் படரவிட்டது அவள் எழில் வதனத்தில்.



இப்படிக் குழல் அவிழ்ந்த பின்பும் தோளின் இருபுறத்திலும் அது பிரிந்து தொங்க இதழில் இளநகையுடன் நின்ற ராணியை உற்று நோக்கிய இந்திரஜித் அனந்த், ''ராணி! விடியும் நேரம் நெருங்கி விட்டது. வெளியே பெரும் பனியிலும் சிறிதளவு வெளிச்சமும் தெரிகிறது. நீ கொஞ்ச நேரம் படுத்து உறங்கு'' என்று கூறினான்.

இதைச் சொன்ன அனந்த் அவளருகில் வந்து குழல்களைச் சீராக எடுத்து இடதுகையை வைத்து வளைத்து முடிந்தும் விட்டான். அவன், குழலை மிக அழகாக முடிந்துவிட்டதைக் கண்ட ராணி பின்புறமாக அவன்மீது சாய்ந்துகொண்டு சொன்னாள்: ''இதில் ஏற்கெனவே பரிச்சயமுண்டு போல் இருக்கிறது!'' என்று.

இந்திரஜித் அனந்த் அவள் கேள்வியைப் புரிந்துகொள்ளாதது போல் ''எதில்?'' என்று வினவினான்.

''குழலை முடிவதில்!'' என்ற ராணி நகைத்தாள் மெதுவாக.

அனந்தும் நகைத்தான். ''இந்தச் சிறு அலுவலுக்கு முன் பரிச்சயம் வேண்டுமா?'' என்றும் வினவினான்.

''வேண்டாமா?''

''வேண்டாம். கப்பல்களில் பாய்க்கயிறுகளை எத்தனையோ முறை சுற்றிப் பந்தாகக் கட்டியிருக்கிறேன் இப்படி?''

''நான் என்ன கப்பலா?''

''அப்படித்தான் இருக்க வேண்டும்.''

''புரியவில்லை நீங்கள் சொல்வது!''

''உன் பெயரே கப்பல் பெயரைப் போல்தானிருக்கிறது. ஆகவே உன்னையே நான் கப்பலாக்கிக் கொண்டால் என்ன?''

இதைக் கேட்டதும் ராணி, கப்பலின் அத்தனை ஆட்டத்திலும் அவன்மீது பலமாகச் சாய்ந்தாள். அவன் தன் கைகளால் அவள் தோள்களைப் பிடித்துத் திடப்படுத்தினான். திடப்படுத்தினானே தவிர, பின்புறமாகச் சாய்ந்து நின்ற அவளை அகற்றமுடியவில்லை. அவன் உணர்ச்சிகள், அவள் காலழகால்- அழகின் எழுச்சிகளின் இணைப்பால் பெரிதும் கிளறப்பட்டன. அந்தச் சமயத்தில் அவள் கேட்டாள்: ''அந்தக் கப்பலுக்குத் தலைவன் வேண்டுமே, அதைச் செலுத்த மாலுமிகள் வேண்டுமே துணைபுரிய'' என்று.

''தலைவன் இருக்கிறான். மாலுமிகள் தேவையில்லை'' என்று கூறிய அனந்த் சட்டென்று என்ன காரணத்தாலோ நிமிர்ந்து நின்றான். தன்னிடமிருந்து அவளை விலக்கவும் செய்தான்.

அவள், அவனிடமிருந்து நகர்ந்து பிரிந்து திரும்பி அவன் எதிரில் நின்று நோக்கினாள்- ஏமாற்றப் பார்வையுடன், ''ஏன்? என்ன?'' என்றும் வினவினாள்.

''நான் ஒரு முட்டாள்'' என்றான் அனந்த்.

''நானும்தான். இந்தச் சமயத்தில் எல்லோருமே அப்படித் தான்'' என்றாள் ராணி.

''இல்லை... இல்லை. நான் அடிமுட்டாள். உன்னிடம், சொல்லவில்லை'' என்றான் வருத்தம் தொனித்த குரலில்.

அவன் சொன்னதை அவள் தவறாகப் புரிந்துகொண்டதால் சிறிது பலமாகவே நகைத்தாள். ''இன்னும் சொல்ல வேண்டியது ஏதாவது பாக்கி இருக்கிறதா?,'' என்று கேட்டாள் நகைப்பின் ஊடே, நாணம் மிகுந்த குரலில்.

அவள் பேச்சின் அர்த்தத்தை புரிந்து கொண்டான் அனந்த். ஆகவே, அவளைத் திருத்த முற்பட்டு, ''அதைச் சொல்லவில்லை நான்'' என்றான்.

''எதைச் சொல்கிறீர்களாம்?'' என்று கேட்டாள் ராணி.

''இப்படி வா!'' என்று அவளைப் பிடித்து அழைத்து நாற் காலியில் உட்கார வைத்தான். பின் சட்டையிலிருந்த காகிதச்



சுருளை எடுத்து அவளிடம் கொடுத்து, ''இதைச் சொன்னேன். உன்னால் துலாஜி கொடுத்த காகிதத்தை மறந்தேன். முக்கிய அலுவலை மறந்தேன்!' என்று கூறினான்.

''என்னாலா?''

''ஆம்.''

''நான் வெறும் கப்பல்தானே?''

''இதுவும் கப்பலைப் பற்றியதுதான்''

''அப்படியானால் இந்தக் கப்பலை மறந்துவிட்டீர்கள்?''

''இல்லை.காகிதச் சுருளைப் பிரித்துப் பார்'' என்ற இந்திரஜித் அவளுக்குப் பக்கத்தில் வந்து நின்று காகிதச் சுருளை அவளிட மிருந்து வாங்கி மேஜைமீது வைத்துப் பிரித்தான். ''காற்றில் பறக்கப் போகிறது. ஜாக்கிரதையாகப் பிடித்துக்கொள்'' என்று கூறி, அவள் இருகைகளையும் பிடித்துக் காகிதத்தின் இருபக்கங்களிலும் வைத்தான். ''இப்பொழுது பார்'' என்றும் சொன்னான்.

ராணி காகிதத்தை ஊன்றிப் பார்த்தாள். பார்த்துப் பிரமித்தாள். அதுவரை புரியாத பல மர்மங்கள் அவளுக்குப் புரிந்தன.

அவளுடன் குனிந்து காகிதத்தை நோக்கிய அனந்த், ''ராணி இப்போது புரிகிறதா? நீயும் ஒரு கப்பல். உன்னைச் சுற்றிக் கட்டப்பட்டிருக்கிறது இந்தத் திட்டம்!'' என்று அவள் காதில் முணுமுணுத்தான். ராணி அவன் சொற்களைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அவள் அழகிய விழிகள், உணர்ச்சிகள் எல்லாமே எதிரே விரிந்து கிடந்த காகிதத்தில் புதைந்து கிடந்தன.

## அத்தியாயம் - 19

# புதுப் புயல்!

**கா**ற்றின் வேகத்தில் பலமாக அசைந்த கப்பலின் ஆட்டத்தில் கூரையில் அனந்த் பிணைத்த பவர் விளக்கு தலைக்குமேல் இருபுறமும் வெகுவேகமாக ஆட, அவர்கள் இருவரும் அறியாமலே லேசாகத் திறந்த கதவின் மேலிருந்த இடுக்கின் வழியாக உஸ்ஸென்று நேராக வீசிய காற்று சுள்ளென்று அவளது அழகிய வதனத்தில் தைக்க, அதே காற்றினால் அலைக்கழிக்கப்பட்ட முன்னுச்சி மயிர்கள் நான்கைந்து முடிப்பிலிருந்து பிரிந்து அவள் நுதலில் அலைய, இரு கைகளையும் அனந்த் வைத்துக் கொடுத்த படி காகிதத்தின் இருமூலைகளிலும் பதித்த வண்ணம் காகிதத்தில் தீட்டப்பட்டிருந்த படத்தையும் குறிப்புகளையும் பார்த்த கடல் ராணியின் கண்கள் மட்டுமின்றி உள்ளமும் அவற்றில் ஈடுபட்டு விட்டதால், அனந்த் முணுமுணுத்த தகவலை அவள் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. கசங்கிய நிலையிலும் அந்தக் காகிதம் சொன்ன கதை மிகப் பிரமிப்பாயிருந்தது அவள் சித்தத்துக்கு.

காகிதத்தில் மேலைக் கடலோரத்தின் படம் நல்ல கறுத்த மையைக்கொண்டு மிகத் தெளிவாக, வடக்கே தப்தி நதியின் முகத்துவாரத்திலிருந்து தெற்கே கார்வார் துறைமுகம் வரையில் தீட்டப்பட்டிருந்தது. அந்தப் பகுதியில் உள்ள ஒவ்வொரு துறைமுகமும், கோட்டையும் மேற்குத் தொடர்ச்சி மலையைக் குடைந்து கொண்டு கடல் உட்புகுந்துவிட்ட இடங்களும், சின்னஞ்சிறு கோடுகள் மூலமும் சித்திரங்கள் மூலமும் விவரமாகக் குறிப்பிடப்பட்டிருந்தன. எந்தெந்த இடத்தில் எந்தெந்த அரசின் ஆதிக்கம் ஓங்கியிருக்கிறது என்பதை வலியுறுத்த அந்தந்த நாட்டுக் கொடிகள் இரண்டொரு கோடுகளால் காட்டப்பட்டிருந்தன. போர்க் கப்பல்களின் எண்ணிக்கையைக் குறிக்க அந்த அந்தத் துறைமுகத்துக்கு எதிரே ஒரு சிறு கப்பலைப் போட்டு, அதில் நான்கு, ஐந்து என்று எண்கள் எழுதப்பட்டிருந்தன. அந்தப்



படத்தை ஒரு முறை பார்த்ததுமே மேலைக் கடலோரச் சக்தியின் விவரத்தை முழுவதும் புரிந்து கொண்டாள் ராணி. அவளுக்கு அதில் முக்கால்வாசிக்கு மேல் தெரிந்திருந்தாலும் தெரியாத பல விவரங்களும் படத்தில் அடங்கி யிருந்ததால் நீண்ட நேரம் ஆராய்ந்தாள்.

அவள் ஆராய்ச்சியைக் கவனித்த அனந்தின் முகத்தில் திருப்தியின் சாயை பெரிதும் பரவியது. அவள் பக்கத்திலிருந்த அவன், அந்த இடத்திலிருந்து விலகி அந்த நாற்காலியின் பின்புறம் வந்து குனிந்து அவள் கைகளின் இடத்தில் தனது கைகளை வைத்துக் காகிதத்தை அழுத்தி, ''இனி நீ கைகளை எடுத்துவிடு. உன் ஆராய்ச்சிகளை நன்றாகச் செய்யலாம்'' என்றான்.

அவன் நாற்காலிக்குப் பின்னால் வந்தது, குனிந்தது, ஒரு தோளின் மீது தன் கன்னத்துடன் அவன் கன்னம் இழையும்படியாக முகத்தை வைத்துக் கொண்டது, தன் கை மீது அவன் கைகளை நீட்டிக் காகிதத்தைப் பற்றியது, இந்தச் செயல்களால் சற்று முன்பு நெகிழ்ந்துவிடக் கூடிய நிலையிலிருந்த ராணி, அப்பொழுது எந்த வித உணர்ச்சியுமில்லாத மரக்கட்டையாக இருந்தாள். அவள் தலை திரும்பவில்லை. அவனை நோக்கவில்லை. கண்கள் மயக்கமாகப் பார்க்கவுமில்லை. ஈட்டிக் கண்கள் காகித்தை ஆராய்ந்தன. அவன் உராய்ந்த கன்னத்தை அவள் விலக்கவில்லை தான். ஆனால் அந்தக் கன்னத்தில் பழைய உணர்ச்சி, பழைய துடிப்பு அப்பொழுது இல்லை. கடல்ராணி மீண்டும் பழைய கொள்ளைக்காரியானாள். மேலைக் கடலோரக் கோட்டைகள், பிரிட்டிஷ் கப்பல்களின் தொகை- இவற்றில் லயித்திருந்தது அவள் புத்தி.

அந்த வெறியில் அவள் தன் வலது கை ஆள்காட்டி விரலால் அந்தப் படத்தின் ஒவ்வொரு இடத்திலும் எதையோ கண்டு பிடிக்கமுயல்வது போல் தடவினாள். சில இடங்களில் விரலின் அசைவைத் தேக்கினாள். இன்னும் சில இடங்களில் விரலை நெட்டுக் குத்தாக நிறுத்தி அழுத்தினாள். கொலாபா கோட்டையிலிருந்தும் அதற்குக் கீழே தொலை தூரத்திலிருந்த விஜயதுர்க்கத்திலிருந்தும் கடலில் மேற்கு நோக்கி இழுக்கப்பட்ட இரண்டு நீண்ட கோடுகளையும் தடவினாள் ஒரு முறை. பிறகு கடைசியாகச் சிந்து துர்க்கத்திலிருந்து மேல் திசையில் இழுக்கப்

பட்ட இன்னொரு கோட்டையும் ஒரு சதுரத்தையும் விரலால் குறித்தாள். புரிந்ததற்கு அறிகுறியாகத் தலையைத் திருப்தியுடன் அசைத்தாள்.

அவள் கையசைவு, விரலசைவு இரண்டையும் அவள் தோளில் பதிந்த முகத்துடன் கவனித்த அனந்த், அவள் தலையசைப்பைத் தன் கன்னத்துடன் உராய்ந்த அவள் வழுவழுத்த கன்னத்தால் புரிந்து கொண்டதால் அந்த நிலையிலிருந்தே கேட்டான், ''ராணி! உனக்குத் திட்டம் புரிகிறதல்லவா?'' என்று.

ராணி காகிதத்திலிருந்து கண்களை நீக்காமலே சொன்னாள்: ''ஓரளவு புரிகிறது. திட்டத்தைவிட வேறொன்று நன்றாகப் புரிகிறது?'' என்று.

அனந்த் வியந்தான் அவள் பதிலைக் கேட்டு: ''எது நன்றாகப் புரிகிறது?'' என்று வினவினான்.

''உங்கள் நண்பர்....'' வாசகத்தை முடிக்கவில்லை அவள்.

''துலாஜி ஆங்கரே! ஆம், அவனுக்கென்ன?'' என்று வினவினான் அனந்த்.

''ஒன்று பைத்தியமாக இருக்கவேண்டும் அல்லது மூர்க்கராயிருக்கவேண்டும்'' என்றாள் ராணி.

''இரண்டுமில்லை ராணி. துலாஜியை விட நிதானமுள்ளவன் மேலைக் கடலோர மாலுமிகளில் யாருமில்லை! அவனைவிடத் தெளிவான சிந்தனையும் யாருக்கும் கிடையாது'' என்று திட்டமாகச் சொன்னான் அனந்த்.

''அப்படியானால் இந்தப் படத்தின் திட்டம் எப்படி வந்தது? யாரால் வந்தது? யார் மூளையில் இது உருவாயிற்று?'' என்று வினவினாள் ராணி.

''இன்றைய மகாராஷ்டிரத்தின் இணையற்ற வீரனிடமிருந்து, மகாமேதையிடமிருந்து...'' அனந்த் பெருமையுடன் சொன்னான் இதை.

''இத்தனை அடைமொழிகளா உங்கள் நண்பருக்கு?'' ராணியின் கேள்வியில் இகழ்ச்சி இருந்தது.

''ஆம்!''

''இதுவரை அவர் என்ன சாதித்திருக்கிறார்?''



''எதுவும் சாதிக்கவில்லை.''

''ஏன்?''

''சாதிக்க அனுமதிக்கப்படுவதில்லை.''

''யாரால்?''

''அவர் தந்தையால்- பேஷ்வா பாஜிராவால்'' என்ற அனந்த், ''ராணி! மகாராஷ்டிர ஸார்கேல் கனோஜி ஆங்கரே இணையற்ற கடல் வீரர். சாதிக்கமுடியாத காரியங்களைச் சாதித்திருக்கிறார். இன்றும் இந்த அரபிக் கடலை ஆள்வது அவரது படைதான். ஆனால், வயது அவரது துணிவைக் குறைத்திருக்கிறது. அவர் மனம் இப்பொழுது சமாதானத்தையும் சாந்தியையும் நாடுகிறது'' என்றும் கூறினான்.

கடல் ராணியின் இதழ்கள் மிகுந்த இகழ்ச்சியுடன் மடிந்தன ஒரு முறை. பிறகு அவள் அனந்தை நோக்கித் தனது தோளிலிருந்த அவன் தலையை அகற்றித் திரும்பி உட்கார்ந்து நோக்கினாள். ''இந்த துலாஜி ஆங்கரே- கனோஜி திருமணம் புரிந்துகொள்ளாத காதலி மகன். கனோஜியைவிடக் காரியங்களைச் சாதிக்கமுடியுமென்பது உங்கள் நினைப்பா?'' என்று கேட்டாள் இகழ்ச்சி குரலில் துலங்க.

அனந்த் அவள் இகழ்ச்சியைக் கவனித்தாலும் அதைப் பொருட்படுத்தவில்லை. அவன் கண்கள் துலாஜியைப் பற்றி அவள் கேட்ட கேள்வியால் உக்கிரமாகப் பளிச்சிட்டன. ''நினைப்பல்ல ராணி, நம்பிக்கை, முழு நம்பிக்கை! இப்பொழுது மகாராஷ்டிரத்தைக் காப்பாற்றக்கூடியவர் இருவர். ஒருவர் பேஷ்வா பாஜிராவ்- நிலத்தில். இன்னொருவர் துலாஜி- நீரில். ஆனால், இருவரும் நேர் எதிராக நிற்கிறார்கள். கனோஜியிடம் பேஷ்வாவுக்குள்ள மதிப்பு துலாஜியிடம் உள்ள அன்பைவிட, நம்பிக்கையை விட, பலமடங்கு சிறந்தது. அதனால் துலாஜியைச் சுதந்திரமாக உலாவ விட பேஷ்வா மறுக்கிறார். ஆகையினால்தான் துலாஜி தானாகவே முயற்சி எடுக்கிறான்...'' என்று சொல்லிக்கொண்டு போன அனந்தின் சொற்களை இடையில் வெட்டிய ராணி, ''பிரிட்டிஷ் கடல் பலத்தை ஒடுக்க'' என்று முடித்தாள்.

அவள் அதை இகழ்ச்சியுடன் சொன்னாலும் அதைப்பற்றி அனந்த் சிறிதும் கவலைப்படவில்லை. ''ராணி! முயற்சிகள்

பயனளிக்கும்வரை எந்த மனிதனையும் உலகம் ஒப்புக்கொள்வதில்லை. துலாஜியைவிடச் சிறந்தவர்களையெல்லாம் பார்த்து உலகம் நகைத்திருக்கிறது. அதே உலகம், சிலரை அவர்கள் இருக்கும்போதும், சிலரை இழந்த பின்பும் உச்சாணிக் கொம்பில் ஏற்றிவைத்துக்கொண்டே இருக்கிறது. துலாஜியை உலகம் புரிந்து கொள்ளும் காலம் வரும்!'' என்று கூறிய அனந்த், ''துலாஜியைப் பற்றிய சர்ச்சை கிடக்கட்டும். உன் உதவி எங்களுக்கு உண்டா இல்லையா?'' என்று வினவினான்.

ராணி பதில் சொல்லவில்லை. மீண்டும் காகிதத்தை நோக்கினாள். சில நிமிட மௌனத்துக்குப் பிறகு, ''கொலாபாவி லிருந்தும் விஜய துர்க்கத்திலிருந்தும் மேற்கே இழுக்கப்பட்ட கோடுகளிலிருந்து இந்த இரண்டுக்கும் இடையில் உள்ள கடல் பகுதியில் நீங்கள் பிரிட்டிஷ் கப்பல்களை மடக்கப் பார்க்கிறீர்கள் என்று புரிகிறது. அதற்கு உங்களுக்கு ஒரு தளம் வேண்டும். அது சிந்து துர்க்கம். அதற்காகத்தான் சிந்து துர்க்கத்திற்கு எதிராக ஒரு சதுரம் போட்டிருக்கிறீர்கள். அந்த மாதிரி சதுரம் வேறெங்கும் இல்லை'' என்று கூறினாள் ராணி.

கூறிய அவள் அறிவைக் கண்டு வியந்தான் அனந்த். அவள் கப்பலோட்டுவதில் திறமைசாலியென்று கேள்விப்பட்டிருக்கிறான் அவன். அவள் கப்பல் போரிலும் சாமானியப்பட்டவள் அல்ல வென்பதும் பிரசித்தம்.

சிந்து துர்க்கத்தைத் தாக்க வந்த இரண்டு வெள்ளைக் கொள்கை கப்பல்களை அவளே தனது கப்பலைக் கொண்டு தாக்கி, அவற்றைச் சூறையாடிக் கொளுத்தியிருக்கிறாள் என்றும் அனந்த் கேள்விப்பட்டிருக்கிறான். ஆனால், அவள் துணிவுள்ள கொள்ளைக்காரியே தவிர, பெரிய கடற்போர் மர்மங்களை உணரக்கூடிய, பெரும் திட்டங்களைப் புரிந்து கொள்ளக் கூடிய ஒரு தலைவி என்று அவன் அன்றுவரை நினைக்கவில்லையாகையால் அவளைப் பெருமதிப்புடன் நோக்கினான்.

''ராணி! உன் துணிவைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஸ்டாண்டனும், ஸ்மித்தும் உன்னைப் பிடித்துச் செல்ல வந்தபோது நீ காட்டிய அலட்சியத்திலிருந்து உன் துணிவைப் புரிந்து கொண்டேன். நீ இந்த காஸண்ட்ராவுக்குவர ஒப்புக் கொண்டதும், உனக்கும் அச்சத்துக்கும் நெடுந்தூரம் என்பதைச் சந்தேகமற



உணர்ந்துகொண்டேன் ஆனால், உனக்குப் பெரும் ராணுவப் படங்களை ஆராய முடியும் என்பதையும் அதன் நுட்பங்களைப் புரிந்துகொள்ள முடியும் என்பதையும் இப்பொழுதுதான் தெரிந்து கொண்டேன். நீ பெண், அதுவும் சிறியவள், அப்படியிருந்தும் உன் அறிவும் துணிவும் மகத்தானவை. துலாஜிக்கு நீ சரியான ஜோடி'' என்று பாராட்டினான் அனந்த்.

இதைக் கேட்ட ராணியின் முகம் சிவந்தது கோபத்தில். அவனைப் பார்த்த விழிகள் நெருப்பைக் கக்கின.

''ஏன் ராணி என்ன?'' என்று அச்சத்துடன் வினவினான் அனந்த்.

''என்ன சொன்னீர்கள்? துலாஜிக்கு நான் சரியான ஜோடியா?'' என்று சீறினாள் ராணி.

அவள் சினத்துக்குக் காரணம் புரிந்ததால் சங்கடத்துக்குள்ளான அனந்த், 'சேச்சே! ராணி! தப்பாக நினைக்காதே.. நான்...'' என்று இழுத்தான்.

''உளறிவிட்டீர்கள்'' என்று ராணி அவன் வார்த்தையை முடித்தாள். ''எந்த அறிவாளியும் சில சமயங்களில் அசட்டுத் தனத்தைக் காட்டுகிறான்!'' என்று கூறினாள்.

''ஆம் ஆம்'' என்று தனது அசட்டுத் தனத்தை இரு முறை ஆமோதித்த அனந்த், ''ராணி! இது சாதாரணப் போர்த் திட்டமல்ல. துலாஜி இட்டிருக்கும் இந்தத் திட்டம் நிறைவேறினால்... உன் பெயர் சரித்திரத்தில் நிலைக்கும். நீ உண்மையாகவே கடல் ராணியாவாய்'' என்று உற்சாகத்துடன் கூறினான்

''நான் சரித்திரப் பாத்திரமாக இஷ்டப்படாவிட்டால்...?'' என்று ராணி வினவினாள்.

''நான் வருத்தமடைவேன்'' என்றான் அனந்த்.

''நீங்கள் எதற்காக வருந்த வேண்டும்? என் பெயரை அழித்துவிட்டு நீங்கள் கடல் ராஜாவாகலாம். சரித்திரத்தில் பாதி பொய். எல்லாம் புருஷர்களால் எழுதப்பட்டது. ஒரு பெண்ணின் துணையின்றி, அவள் தரும் ஊக்கமின்றி எந்த ஆடவனும் பெருஞ்செயல்களைச் செய்தது கிடையாது. ஆனால், நூற்றுக்கு ஒரு பெண் கூடச் சரித்திரத்தில் இடம் பெறுவதில்லை. புருஷர்களுடைய அசாதாரணச் செயல்கள்தாம் எழுதப்பட்டிருக்கின்றன.

காரியம் ஆக வேண்டும் என்றால் எந்த ஆண்மகனும் பெண்ணின் காலைப் பிடிக்கிறான்'' என்றாள் ராணி வெறுப்புடன்.

''சரி, ராணி! நான் உன் காலைப் பிடிக்கிறேன்'' என்று சொன்ன அனந்த் அவள் பாதங்களை நோக்கிக் கையைத் தொங்க விட்டான். அவன் கையை இடையிலேயே தன் கையால் பிடித்து நிறுத்திய ராணி, ''இந்த ஏமாற்று வித்தையெல்லாம் என்னிடம் வேண்டாம். நீங்கள் என்னிடம் என்ன எதிர்பார்க்கிறீர்கள்? திட்டமாகச் சொல்லுங்கள்'' என்றாள்.

அனந்த் அவளுக்குப் பின்புறத்திலிருந்து நீங்கி எதிரே வந்து நின்று அவளை நோக்கினான். ஊசலாடிய விளக்கின் ஒளி அவன் முகத்தின் கம்பீரத்தைப் பன்மடங்கு அதிகப்படுத்திக் காட்டியது. விளக்கின் ஆட்டத்தில் மாறி மாறி வந்து அவள் முகத்தைத் தாக்கிய வெளிச்சம் அவன் உள்ளத்திலும் வேகமாக ஆடும் எண்ணங் களுக்குச் சான்று கூறியது. ஆடிய அறையில் கால்களைத் திடமாக ஊன்றிய வண்ணம் இந்திரஜித் அனந்த் கேட்டான்: ''கவர்னர் சார்லஸ் பூன் என்பவரை உனக்குத் தெரியுமா?'' என்று.

ராணி பெரிதாக நகைத்தாள். ''அந்த முட்டாளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்றாள் நகைப்பின் ஊடே.

அனந்த் அவள் நகைப்பையும் ரசிக்கவில்லை, பேச்சையும் ரசிக்கவில்லை. ''யாரைப் பற்றியும் மட்டமாகப் பேசாதே ராணி. பூன் முட்டாளல்ல. அவர் திட்டம் சரிதான்'' என்று கூறினான் அனந்த்.

''தவறாகச் சொல்கிறீர்கள். கவர்னர் அதிகப்படுத்தியது ஆங்கிலேயர் கடல் பலத்தை அல்ல. கப்பல் பலத்தை கப்பல்களைக் கட்டுவது வேறு, அவற்றை இயக்குவது வேறு'' என்று அனந்தைத் திருத்திய ராணி, கண்ணை மூடிக்கொண்டு மேலும் பேசினாள்-கனவில் பேசுவதுபோல்: ''பழைய கவர்னர் ஜஸ்லாபி மகாராஷ்டி ரருடன் சமாதானத்தை விரும்பினார். அதில் ஓரளவு வெற்றியும் அடைந்தார். ஆனால், அது போதவில்லை அந்த வர்த்தக நாட்டுக்கு. இந்தப் பைத்தியம் பூனை அனுப்பிவைத் தார்கள். பூன் தனியாக வரவில்லை. தன்னுடன் இங்கிலாந்திலிருந்தே ஆலோசகர் களையும் அழைத்து வந்தார். வந்ததும் கப்பல்களைக் கட்ட ஆரம்பித்தார். இப்போதுகூட நினைத்துப் பார்க்கிறேன். மொத்தம் இருபத்தோரு கப்பல்கள், *என்ன பெயர்கள்! அப்பப்பா! விக்டரி,

* Kanhoji Angrey - Maratha Admiral - By Manohar Malgonkar P.206.



பிரிட்டானியா. ரிவெஞ்ஜ், பேம், ஹாக், ஈகிள், பிரின்ஸெஸ் அமீலியா, டிபயன்ஸ், டிரேக், ஸல்மாண்டர், ஹண்டர், ஆண்டி லோப், ஹௌண்ட், டைகர், ப்ளை ஸ்விப்ட்,பெரட், வீஸஸ், ஸ்குவிரல், லெபேர்ட், டெரிபிள் பாம்... இந்தப் பெயர்களில் அடங்காதது கிடையாது. புலியிலிருந்து கழுகுவரை அணிலிலிருந்து பழிவாங்குதல் (ரிவெஞ்ஜ்) வரை, ஈயிலிருந்து பயங்கர வெடிகுண்டு வரை எல்லாம் இருக்கின்றன. பெயர்கள் ஜெயிக்குமானால் பிரிட்டிஷ் ஆட்சியை இங்கு நிறுவியிருப்பார் பூன். அது முடிய வில்லை. பதிலுக்கு பிரிட்டிஷாருக்கு அவமானத்தைத்தான் நிறுவினார்.''

இப்படிப் பேசிய ராணி சிறிது நிதானித்தாள்.''ஆனால், ஒரு நல்லதும் செய்தார் இந்த நாட்டுக்கு. இதன் சக்தியை, மகாராஷ் டிரத்தின் வலுவை, கனோஜியின் பலத்தைத் தெரியப்படுத்தினார். அது மட்டுமல்ல, எட்டு ஆண்டுகளுக்கு முன்பு- அதாவது 1918 ஆம் ஆங்கில ஆண்டில் காண்டேரித் தீவில் நடந்த அதிசயம்! காண்டேரிக் கோட்டையில் மங்கோஜி சூர்யவம்சியின் தலைமை யில், ஆண்களோடு பெண்களும் துப்பாக்கி தாங்கி, பீரங்கி இயக்கிச் சரிசமமாகப் போரிட்ட விந்தையை யார் மறக்கமுடியும்? மகாராஷ்டிர மங்கையர் அன்று காட்டிய வீரம் கவர்னர் பூனையும் அவர் பெரும் படையையும் விரட்டி விட்டது, இந்நாட்டின் மறக்கமுடியாத சரித்திரம்'' என்று சொன்ன ராணியின் முகத்தில் வீரக் களை சொட்டியது. முகம் பெருமிதத்தால் மலர்ந்தது.

அவள் சொன்னபடிதான் சகலமும் நடந்திருந்தது. ஆனால், மேலைக் கடற்பகுதியின் தெற்கு ஓரத்தில் இருக்கும் ராணி, பெரிய தளபதிகளே முற்றும் அறியாத தகவல்களைத் தெரிந்து வைத் திருந்ததைப்பற்றி வியப்படைந்தான் அனந்த். ஆகவே, தலையை அசைத்தான் ஆமோதிக்கும் வகையில், அப்படி ஆமோதித்து விட்டுச் சொன்னான்: ''ராணி! நீ சொன்னபடிதான் சகலமும் நடந்திருக்கிறது. ஆனால், முற்றும் கவர்னர் பூனின் தவறல்ல. நீ குறிப்பிட்ட போரில் உன்னிடம் சிறைப்பட்டுள்ள மேஜர் ஸ்டாண் டனும் இருந்திருக்கிறான். அவனைப் போன்ற உதவாக்கரைகள் பலர் இருந்தார்கள். ஆகையால் திறமையற்ற கடற்படைத் தலைவர்களும் பூனின் தோல்விக்குக் காரணம்'' என்று கூறினான்.

அத்துடன் சொன்னான்: ''உனக்கு இன்னொரு செய்தியும் இருக்கிறது ராணி'' என்று.

''என்ன?'' என்று ராணி வினவினாள்.

''கவர்னர் பூன், சென்ற ஜனவரி கடைசியில் இங்கிலாந்துக்குச் சென்று விட்டார்'' என்று அறிவித்தான் அனந்த்.

இந்தச் செய்தி ராணிக்குப் புதிதானதால், ''அப்படியா? நம் வேலை குறைகிறது'' என்றாள்.

''இல்லை ராணி, அதிகமாகிறது, கடுமையாகிறது. கவர்னர் பூன் சென்றுவிட்டாரே தவிர, கப்பல்கள் அப்படியே இருக்கின்றன. வந்திருக்கிற புதிய கவர்னர் வில்லியம் பிப்ஸ் மிக நிதான முடையவர்'' என்றான் அனந்த்.

''அப்படியா!''

''ஆம். வந்திருக்கும் கவர்னர் மகாராஷ்டிரர் பாணியில் செயல்பட முயற்சி செய்கிறார். கனோஜியை மகாராஷ்டிர அரசு தன் பக்கம் இழுத்துக்கொண்டதுபோல் பிரிட்டிஷ் கொள்ளைக் காரர்களைத் தமது பக்கம் இழுக்கப் பார்க்கிறார். அவர் பக்கம் கொள்ளைக்காரர்கள் போய்விட்டால்... பிரிட்டிஷார் வலுத்து விடுவார்கள். அதை நாம் தடை செய்யவேண்டும்!''

''எப்படிச் செய்வதாக உத்தேசம்?''

''இந்த காஸண்ட்ராவிலிருப்பது டெய்லர், இங்க்லண்ட், ஸில்வர் மூவரும்தான். இவர்களை நாம் நமது பக்கம் இழுத்துக் கொண்டால் மற்றவர்கள் கவர்னர் பக்கம் போகமாட்டார்கள்'' என்ற அனந்த் ராணியை உற்று நோக்கினான்.

ராணி புரிந்துகொண்டாள். ''நீங்கள் சிந்து துர்க்கம் வந்த காரணம் புரிகிறது. கொள்ளைக்காரியைக் கொண்டு கொள்ளைக் காரர்களை இழுக்கப் பார்க்கிறீர்கள். ஆனால்... ஆனால்..'' என்று சந்தேகத்துடன் பேசினாள் ராணி.

''சந்தேகத்துக்கு இடமில்லை. நீ சரியென்று சொன்னால் நான் அவர்களைச் சரிப்படுத்திவிடமுடியும்'' என்றான் அனந்த்.



''எதற்குச் சரியென்று சொல்லவேண்டும்? என்னிடம் எதை எதிர்பார்க்கிறீர்கள்?'' என்று ராணி கேட்டாள்.

வெளியே காற்று சிறிது குறைந்தது. முன்னைவிடத் திடமாக நின்றான் அனந்த். ''ராணி! சிந்து துர்க்கத்தைக் காத்து நிற்க காஸண்ட்ராவுக்கு அனுமதி கொடு'' என்று கேட்டான் முடிவில்.

அதுவரை நாற்காலியில் உட்கார்ந்திருந்த ராணி மிகுந்த கோபத்துடன் எழுந்தாள்- நாற்காலியைவிட்டு. ''என்ன கேட்டீர் கள்?'' என்று சீற்றம் மிகுந்த குரலில் வினவினாள்.

''காஸண்ட்ரா, சிந்து துர்க்கத்தைப் பாதுகாக்கட்டும் என்று சொன்னேன்.'' அனந்தின் சொற்கள் சர்வ சகஜமாக உதிர்ந்தன.

''உங்களுக்கும் துலாஜியைப் போல் பைத்தியம்தான். என் கோட்டையை அணுக யாரையும் அனுமதிக்கமாட்டேன்'' என்றாள் ராணி.

''வருந்துகிறேன்'' என்றான் அனந்த்.

''எதற்கு?''

''உன் போக்குக்கு...!''

''அதில் வருந்த என்ன இருக்கிறது?''

''அனுமதியுடனோ அனுமதியில்லாமலோ கோட்டையை அணுக அவசியம் இருக்கிறது'' என்றான் அனந்த்.

''பலவந்தமாகவா?'' ராணியின் குரல் கடுமையாக ஒலித்தது.

''ஆம்.'' சாந்தமாயிருந்தது அனந்தின் குரல். ஆனால், அதில் நிர்ணயம் பரிபூர்ணமாயிருந்தது.

அப்பொழுது யாரோ நகைத்தார்கள் கதவருகில். ராணியும் அனந்தும் ஏககாலத்தில் கதவை நோக்கினார்கள். ஸில்வர் நின்றிருந்தான் ஒரு கதவின்மேல் சாய்ந்துகொண்டு. அவன் தோளில் அந்த ராட்சதக் கிளி உட்கார்ந்திருந்தது.

''அனந்த் மை பாய்! ஐ ஆம் ப்ரௌட் ஆஃப் யூ'' என்றான் ஸில்வர்.

"எதற்கு?" என்று கேட்டான் அனந்த்.

"சொன்னதைச் செய்ததற்கு" என்றான் ஸில்வர். அவன் சொல்லில் விஷமம் இருந்தது. உதட்டில் புன்முறுவல் இருந்தது.

"எதைச் செய்தேன்?" என்று கேட்டான் அனந்த்.

"ராணியை மயக்கி நமது பக்கம் திருப்பியதற்கு?" என்றான் ஸில்வர்.

ராணி திகைத்தாள். ராணி என்ன, அனந்தும் திகைத்தான்!

எரிகிற கொள்ளியை ஏறத் தள்ள ஸில்வர் சொன்னான்: "நீ செய்ததில் தவறுஏதுமில்லை. எவ்ரிதிங் ஈஸ் பேர் இன் லவ் அண்ட் வார்" என்று சொல்லி மீண்டும் நகைத்தான் பெரிதாக

ஸில்வரின் அயோக்கியத்தனம் தன்னை எங்கோ கொண்டு அழுத்திவிட்டதை அனந்த் உணர்ந்தான். இதுவரை ராணியிடம் தான் காட்டிய காதலைப் போலி என்று வெகு சாமர்த்தியமாக ஸில்வர் திருப்பிவிட்டதை எண்ணி இடிந்துபோனான் அனந்த். வேறு இடமாக இருந்தால் ஸில்வரைச் சுட்டுப் பொசுக்கியிருப்பான் அவன். ஆனால், அந்தக் கப்பலில் அந்த நிலையில் ஏதும் செய்ய வகையின்றி நின்றான். ஸில்வர் உற்பத்தி செய்த புதுப் புயல், வெளியே வீசிய புயலைவிடப் பன்மடங்கு வலுவுடன் அவனைத் தூக்கி எறிந்தது பலவாறாக:

## அத்தியாயம் - 20

# சித்தப்பா ஸில்வர்!

எப்பொழுது வீசும் எப்பொழுது அடங்கும் என்று திட்டமாகச் சொல்லமுடியாதபடி திடீரென தோன்றித் திடீரென்று அடங்கிவிடும். அரபிக்கடலின் புயல் வெளியே வெகு வேகமாக மந்தப்பட்டுக் கொண்டிருந்தாலும், ஸில்வரின் வருகையாலும் மித்ரபேதப் பேச்சினாலும் அனந்தின் இதயத்தில் எழுந்த புயல் மிக வேகமாகவே வீசத் தொடங்கியது. அவன் மனஅலைகள் ஸில்வரின் கபடத்தினால், கபடம் விளைவித்த புதுநிலையால் பெரிதாக எழுந்து அனந்தின் சித்தத்தைப் புரட்டியது நூற்றுக்கு நூறு உண்மையென்றாலும், அந்த உண்மை அவன் முகத்தில் இம்மிகூடத் தெரியவில்லை!

முதலில் முகத்தில் விரிந்த வியப்பு கலந்த சினம் திடீரென்று மறைந்து அவன் முகத்தை உணர்ச்சியற்ற கல்லாக்கிவிட்டது. வெளியே புயல் பெரிதும் அடங்கிவிட்டதன் விளைவாகக் கப்பலின் ஆட்டமும் அடங்கிவிட்டதால், அகற்றி வைத்திருந்த கால்களை ஒன்று சேர்த்துக்கொண்டு திடமாக நின்ற அனந்த் இரண்டடி பின்னுக்கு நகர்ந்து மேஜையின் மீது சாய்ந்தவண்ணம் கதவுக்கருகே நின்ற ஸில்வரை நோக்கினான் பல விநாடிகள். நோக்கினானே தவிர உதட்டை அசைக்கவில்லை. சொற்களை உதிர்க்கவுமில்லை. ஆனால், அவன் கண்கள் ஏதோ பேசியிருக்க வேண்டும். ஆகவே ஸில்வரே பேசமுற்பட்டு, "அனந்த்! நான் வெளிப்படையாகப் பேசியிருக்கக்கூடாது. ஐ ஆம் எ ஃபூல். மன்னித்துவிடு" என்று கூறினான்.

ஸில்வரின் பேச்சு மீண்டும் தனக்கும் ராணிக்கும் ஏற்பட்டுவிட்ட பிளவை இன்னும் அதிகப்படுத்துவதை உணர்ந்த பின்பும் அனந்த் பேசவில்லை. பின்புறமாகக் கைகளைச் செலுத்தி வலதுகையால் மேஜையின் மீதிருந்த காகிதப் படத்தை மடித்துக் கசக்கி ஒரு கையில் வைத்து மூடிக்கொண்டான். பிறகு அதை

ராணியிடம் நீட்ட அவள் அதை வாங்கித் தனது இடையில் செருகி மறைத்துக்கொண்டாள்.

ஸில்வர் கதவைத் திறந்துகொண்டு வந்தபோது அவனுக்கு முதுகைக் காட்டி மேஜையை மறைத்து ராணிக்கு எதிராக அனந்த் நின்றுகொண்டிருந்ததாலும், ஸில்வர் வருகையை உணர்ந்த பின்பு அவன் சரேலெனத் திரும்பி மேஜைமீதிருந்த காகிதத்தையும் ராணியையும் மறைத்து விட்டதாலும், அனந்தின் கைகள் காகிதத்தைச் சுருட்டியதையோ ராணி அதை இடையில் பத்திரப்படுத்தி விட்டதையோ ஸில்வர் கவனிக்கவில்லைதான். ஆனால், அனந்தின் சிந்தனை எங்கோ ஓடுகிறதென்பதையும் அதனால் தனக்கு ஆபத்து இருக்கிறதென்பதையும் புரிந்து கொண்டதால் கெஞ்சினான் ஸில்வர். ''அனந்த்! நான் அநாவசியமாக வரவில்லை. உன்மீது வேவு பார்ப்பதும் என் எண்ணமல்ல. இங்க்லண்ட் உன்னிடம் ஒரு விஷயம் சொல்லச் சொன்னான். அதற்காக வந்தேன்!'' என்று.

இதற்கும் பதில் சொல்லவில்லை அனந்த். அவனுக்குப் பின்னால் நாற்காலியில் சாய்ந்துகொண்டிருந்த ராணி மட்டும், ஸில்வர் மேலும் என்ன சொல்கிறானென்பதை அறியக் காதைத் தீட்டிக் கொண்டாள். இந்திரஜித் அனந்த் தன்மீது காட்டிய காதலெல்லாம் வெறும் நாடகம் என்று ஸில்வர் சொன்னதை அவள் நம்பவில்லை.

ராணி மற்ற பெண்களைப் போல் சாதாரணப் பெண்ணாயிருந்தால் ஸில்வரின் வார்த்தைகள் அவள் மனத்தைச் சுக்குநூறாக உடைத்திருக்கும். ஆனால், ராணியின் இரும்பு மனம் ஆரம்பத்தில் ஸில்வர் திடீரென வீசிய வெடியில் சில விநாடிகள் திகைத்தாலும், 'சட்'டென்று திரும்பிச் சுயநிலை அடைந்தது. சுயநிலை என்றால் பழைய நிலையை அல்ல- காமத்தால் செயலிழந்த நிலையை அல்ல, இயற்கையாக மனிதர்களை ஊடுருவிப் பார்க்கும், பார்த்து இயந்திரம் போல் இயங்கும் திடநிலையை அடைந்தது.

ஆகவே ராணியின் குரல் அசரீரியைப் போல் ஸில்வரை நோக்கி ஒலித்தது. ''ஸில்வர்! உங்கள் ஒப்பந்தம் நன்றாகஇருக்கிறது. ஆனால், பயன் அளிக்குமென்று நீங்கள் நினைப்பதுதான் முட்டாள்தனம். ராணியை நீங்கள் இருவருமே புரிந்துகொள்ளவில்லை!'' என்று கூறினாள்.



ராணியின் சொற்களைக் கேட்ட ஸில்வர், அனந்த் இருவருமே திகைத்தார்கள். ராணி மேலும் சொன்னாள்: ''ஸில்வர்! இந்த அனந்தை நான் பார்த்ததும் மயங்கி விடுவேனென்று நீ நினைத்திருந்தால், மயங்கியதாகப் பாசாங்கு செய்வதை உண்மையென்று உன் சகோதரக் கொள்ளைக்காரரான இவர் நம்பியிருந்தால், ராணியை நீங்கள் மிகச் சொற்பமாக எடைபோட்டிருக்க வேண்டும். ஐ ஆம் நாட் எ ஃபூல் லைக் யூ ஆர் ஹிம்'' என்று சொன்ன ராணி, ''அனந்த்! என்னை மறைக்காதீர்கள். விலகி நில்லுங்கள். அந்த நொண்டியை நான் பார்க்கவேண்டும்'' என்றும் அறிவித்தாள். அந்த அறிவிப்பு உத்தரவைப் போல் ஒலித்தது.

அனந்த் மேஜையின் முன்னிருந்து சிலைபோல் மெதுவாக நகர்ந்தான். அடுத்த விநாடி ராணியும் ஸில்வரும் ஒருவரையொருவர் நோக்கினார்கள். எதற்கும் குழம்பாத ஸில்வரே குழம்பி நின்றான். ராணியின் முகத்தில் எந்தவித வெறுப்போ, சினமோ, குழப்பமோ இல்லாதிருந்ததையும் அவள் இதழ்களில் ஒரு புன்முறுவல் மட்டும் தவழ்ந்து கிடந்ததையும் கண்ட ஸில்வர், தன்னைவிட -அனந்தைவிட மிக அபாயமான ஒரு பெண்ணிடம் தான் சிக்கிவிட்டதை உணர்ந்தான்.

''ராணி! நான் உளறிவிட்டதற்கு மன்னிக்கவேண்டும்'' என்று கேட்டுத் தனது பழைய கதையை ஊர்ஜிதப்படுத்தினான்.

அடுத்து ராணியின் இதழ்களில் புன்முறுவல் மிக அதிகமாக விரிந்தது. ஸில்வரின் சங்கடமும் சங்கடத்திலும் விஷமத்தை ஊர்ஜிதம் செய்ய அவன் செய்த முயற்சியும் அவளுக்குத் தெள்ளெனப் புரிந்தது. அதனால் அவள் முகமும் மலர்ந்தது, பார்வை குழைந்தது. குரலும் மிக மதுரமாகக் குழைய ராணி பேசினாள்: ''ஸில்வர்! மை டியர் ஸில்வர்!'' என்று மிக மதுரமாக அழைத்தாள்.

ஸில்வர் முகத்தில் விவரிக்க இயலாத சாயையொன்று படர்ந்து மறைந்தது. ''ராணி!...'' என்று ஏதோ பேச ஆரம்பித்தான் ஸில்வர். அதே சமயத்தில் தோளில் உட்கார்ந்து, அறையிலிருந்த அனந்தையும் ராணியையும் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்த அசுரக் கிளியைத் தனது வலதுகையால் தடவிக் கொடுத்தான்.

ஸில்வரின் செய்கை ஒவ்வொன்றையும் ராணியின் கண்கள் கவனித்தன. இதழ்கள் குவிந்தன ஒருமுறை. பிறகு விரிந்து: ''நோ

ஸில்வர்,நாட் தட் வே ( இல்லை ஸில்வர், முறை அதுவல்ல)'' என்று சொற்களை அளவுடன் உதிர்த்தன.

''என்ன ராணி?'' என்று ஸில்வர் ஆங்கிலத்தை அறவே துறந்து மராட்டியில் பேசினான்.

''ராணியென்று அழைக்காதே!'' இன்பமாகச் சொன்னாள் ராணி.

''என்னவென்று அழைப்பது?''

''நான் கிளியல்லவா?''

''எஸ்.யூ ஆர் ப்யூடிஃபுல். ஆஸ் ப்யூடிஃபுல் ஆஸ் மை ப்ளிண்ட், ஐ மீன் காப்டன் ப்ளிண்ட். (ஆம், நீ மிக அழகி, என் ப்ளிண்டைப் போல், காப்டன் ப்ளிண்டைப் போல் மிக அழகி)'' என்றான் ஸில்வர், சுபாவம் போகாததால் தாய் மொழிக்குத் திரும்பி.

''கிளியின் பெயர் காப்டன் ப்ளிண்டா?''

''ஆம்.''

''அதை எப்படி அழைப்பாய்?''

''மை டியர் ப்ளிண்ட் என்று.''

''நானும் உன் கிளியைப் போல் இன்னொரு கிளிதானே?''

''ஆம்.''

''ஆகவே எப்படி அழைக்கவேண்டும்?''

இந்தக் கேள்வியைக் காதில் வாங்கிய ஸில்வர் பெரிதாக நகைத்தான்: ''மை டியர்! மை டியர் கேர்ள்'' என்று கூவினான் நகைப்பின் ஊடே.

ராணி நாற்காலியில் நன்றாக நிமிர்ந்து உட்கார்ந்தாள்: ''தட் ஈஸ் பெட்டர்(இது பரவாயில்லை)'' என்று சிலாகித்தாள் ஸில்வரை. மேலும் அழைத்தாள்,''ஸில்வர்!'' என்று.

''வாட் மை டியர்?'' என்றான் ஸில்வர் குழப்பத்துடன்.

''உனக்கும் என் தந்தைக்கும் வயது அதிக வித்தியாசமில்லை. நீ என் சித்தப்பாவாக இருக்கலாம்'' என்று குழைந்தாள் ராணி.

''அதற்குக் கொடுத்து வைத்திருக்கவேண்டும்!'' என்றான் ஸில்வர்.



''கொடுத்து வைத்துவிட்டீர்கள் அங்கிள்'' என்று ராணி மேலும் குழைந்து சொற்களை உதிர்த்தாள்.

''அங்கிள்! அங்கிள்! அங்கிள் டு ராணி! வெரிகுட்! வெரிகுட்!'' என்றான் ஸில்வர்.

இப்படி அவன் குதூகலித்தானே தவிர, உள்ளூர விவரிக்க முடியாத சந்தேகமும் தலை காட்டியது. திடீரென ராணி காட்டிய அன்பை அவனால் நம்பமுடியவில்லை. அதனால் சிறிது சிந்தனையில் இறங்கினான். அந்தச் சமயத்தில் ராணி, ''அங்கிள் ஸில்வர்! அந்தக் கிளியை இங்கே கொண்டுவா'' என்று கேட்டுத் தனது இடது கையையும் நீட்டினாள், மேஜைக்குக் குறுக்கே.

ஸில்வர் அவளை உற்று நோக்கினான். கிளியைத் தடவிய தனது வலது கையை எடுக்காமல் அதன் மீதே வைத்திருந்தான். ''இது நல்ல கிளியல்ல. பொல்லாதது'' என்று கூறினான் சந்தேகம் தொனித்த குரலில்.

''சித்தப்பா! உன் பெண்ணை அது என்ன செய்துவிடும்? உனக்கு அடங்காத கிளியா அது?'' என்று வினவினாள் ராணி.

அவள் எதற்காகக் கிளியைக் கேட்கிறாள் என்பது புரியாததால் சிறிது தயங்கினான். பிறகு தனது கைத்தடியைப் பக்கத்தில் தாங்கிக்கொண்டு மரத் தரையில் டக்டக் என்று ஒலிக்க நடந்து ராணியின் மேஜையை அணுகினான். கிளியை அவளிடம் கொடுக்கவில்லை அவன்.''மைடியர் கேர்ள்! இந்தக் கிளியைத் தொடாதே. இது உனக்குக் கேடு விளைவிக்கும். மிகப் பொல்லாதது'' என்று மற்றுமொரு முறை எச்சரித்தான்.

ராணி அதற்கு மசியவில்லை. அவன் தோளிலிருந்த கிளியை வலுக்கட்டாயமாகத் தனது வலது கையால் பற்றிக்கொண்டாள். அதைத் தடுக்க முயன்ற ஸில்வரை நோக்கி நகைத்தாள். ''சித்தப்பா! உங்களுக்கு உங்கள் கிளியைப் புரிந்துகொள்ளமுடியவில்லை. என்ன சாதுவாயிருக்கிறது பாருங்கள்!'' என்று கூறினாள். அவள் சொற்களில் நகைப்பைத் தொடர்ந்து இகழ்ச்சி தாண்டவமாடியது.

ஸில்வரின் கண்களில் அச்சம் துளிர்த்தது. கிளியை ராணி மிக அழுத்திப் பிடித்திருந்ததையும் அவள் விரல்களில் இரண்டு அதன் கழுத்தை நெரிக்க முற்பட்டவை போல் அழுந்தியிருந்ததையும்

கவனித்தான். ஆகையால் நிதானமிழந்து, ''ராணி! அதைக் கொல்லாதே. அதைப் போல் வேறு கிளி உலகத்தில் கிடையாது!'' என்று கெஞ்சினான்.

''இதை நான் ஏன் கொல்லவேண்டும் சித்தப்பா? நான் என்ன ராட்சஸியா?'' என்று கேட்டாள் ராணி.

''இல்லை. நீ மிகவும் நல்லவள். கிளியை என்னிடம் கொடுத்து விடு. எனக்கு அது ஒன்றுதான் துணை'' என்று மன்றாடினான் ஸில்வர்.

ராணி மசியவில்லை. ''இதை நான் வைத்துக்கொள்ளப் போகிறேன். நாங்கள் இருவருமே உனக்குத் துணை அங்கிள்! ஒரு கிளிக்கு இரண்டு கிளிகள் இருந்தால் உனக்கு நல்லதல்லவா?'' என்றாள்.

ஸில்வர் நிதானம் இழந்தான். ''ராணி, விளையாடாதே! என்னிடம் கிளியைக் கொடுத்துவிடு'' என்று கூறிக்கொண்டே அதை அவளிடமிருந்து பறிக்கக் கையைக் கொண்டு போனான்.

ராணி, ஸில்வரைப் பரிதாபத்துடன் நோக்கினாள். ''ஸில்வர்! உன்னைப் புத்திசாலி என்று நினைத்தேன்'' என்றாள். அவள் பேச்சும் குரல் ஒலியும் மாறிவிட்டதைக் கவனித்தான் ஸில்வர். சித்தப்பா உறவு அவள் பேச்சில் அகன்று விட்டதை உணர்ந்தான். சொற்களில் கேலி இருப்பதும் புரிந்தது ஸில்வருக்கு.

ஸில்வரின் கண்களில் மிகப் பயங்கரப் பார்வை விரிந்தது. ''ராணி, என்னுடன் விளையாடாதே'' என்று சீறினான்.

ராணி கிளியைச் சிறிதுஅழுத்திப் பிடித்தாள். அது, ''ராணி! ராணி!'' என்று இரண்டு முறை கூவியது.

ஸில்வர் அடியோடு நிதானத்தை இழந்தான். ராணியின் இட கையையும் கிளியையும் சேர்த்துப் பிடித்தான். ''யூ ஸ்லட்! ஐ வில் டீச் யூ டு பிஹேவ்'' என்று கூறிய வண்ணம் அவள் கையை நெரித்தான் வலுவாக.

ராணியின் கை வலித்தாலும், எலும்புகள் முறியும்படி ஸில்வர் அவளைப் பிடித்தாலும் அவள் கிளியை விடவில்லை. ''ஸில்வர்! விடு கையை!'' என்று மட்டும் கூறினாள்.



''உன் கையை முறித்து விடுவேன். அப்புறம் உன் கை எதற்கும் பயன்படாது. உன் ஆயுள் உள்ளவரை நீ செயலற்ற கையுடன் முடமாகத் திரிவதைக் கண்டு களிக்கப் போகிறேன்'' என்று தைரியமாகப் பேசிப் பலமாக இறுக்கினான் அவள் கையை.

கடல்ராணி முகத்தைச் சிறிதளவும் சுளிக்கவில்லை. இலேசாக நகைத்தாள் ஒரு முறை. அந்த நகைப்பைத் தொடர்ந்து ஸில்வர் முகம் அதிர்ச்சியைக் காட்டியது. கண்களில் அச்சம் நிலவியது. ''நோ நோ, டோண்ட்'' என்று அலறினான் ஸில்வர்.

அவன் அலறலுக்குக் காரணம் அனந்துக்குப் புரியவில்லை. ராணி அனந்தையும் கவனிக்கவில்லை. ஸில்வரையும் கவனிக்க வில்லை. அலட்சியமாக நாற்காலியில் உட்கார்ந்த வண்ணம் சிறிது குனிந்து கிளியை முத்தமிட்டாள்! ''ஸில்வர்! ஐ கிஸ் திஸ் பேர்ட், எ கிஸ் கான் பி எ கிஸ் ஆஃப் லவ், ஆர் எ கிஸ் ஆஃப் டெத் (ஸில்வர்! இந்தக் கிளியை நான் முத்தமிடுகிறேன். முத்தம் அன்பு முத்தமாகவும் இருக்கலாம் மரண முத்தமாகவும் இருக்கலாம்)'' என்ற ராணி, ''ஸில்வர், இரண்டில் எதுவாயிருக்கலாம் என்பதை நீதான் சொல்லவேண்டும். நீயே அதை முடிவு செய்'' என்றும் சொன்னாள்.

அதைக் கேட்ட ஸில்வரின் முகத்தில் பெரும் பீதி விரிந்தது. அந்தச் சமயத்தில்தான் காப்டன் இங்க்லண்டும் அந்த அறைக்குள் நுழைந்தான். அறையைச் சுற்றிலும் தனது கண்களை ஓடவிட்டான். ஏதோ விபரீத நிலை அங்கே ஏற்பட்டிருப்பதை உணர்ந்து, ''இங்கு என்ன நடக்கிறது?'' என்று வினவினான் அதிகாரத்துடன்

''ஆஸ்க் அங்கிள்'' என்றாள் ராணி.

''அங்கிள்! ஹூ ஈஸ் அங்கிள்!'' என்று வினவினான் இங்க்லண்ட். ஏதும் புரியாமல் ஒரு விநாடி குழம்பவும் செய்தான். அடுத்த விநாடி, ''ஸில்வர்! யூ கம் ஹியர்'' என்று இரைந்தான்!

ஸில்வர் இருந்த இடத்தைவிட்டு நகரவில்லை; நகர முடிய வில்லை. அத்தகைய விபரீத நிலையில் சிக்கியிருந்தான்.

## அத்தியாயம் - 21

# அக்கினிப் பரீட்சை!

**வா**ழ்க்கையை ஊன்றிப் பார்க்கும் பட்சத்தில் மனிதனுடைய சின்னஞ்சிறு செய்கைகள் பெரிய விபரீதத்தில் கொண்டுபோய் விடுகின்றன. அதற்கு ஏதாவது உதாரணம் தேவையென்றால் காஸண்டரா கப்பலில் காப்டன் இங்க்லண்டின் அறையிலிருந்த ஸில்வரைச் சுட்டிக் காட்டலாம். ஸில்வர் செய்த முதல் தவறு, அவன் தனது கிளியின்மீது வைத்த அத்துமீறிய ஆசை. இரண்டாவது தவறு, ராணியின் மேஜைக்கருகே சென்றது. மூன்றாவது தவறு, கிளியை ராணி கைப்பற்றும்படி விட்டது. நான்காவது தவறு, மேஜையின் குறுக்கே சாய்ந்து ராணியின் கையை முறிக்கத் தீர் மானித்து அவள் கையை இறுகப் பிடித்தது. இந்த நான்கும் சிறிய தவறுகள்தான் யாரும் செய்யக் கூடியதுதான் ஆனால், அந்தச் சிறிய தவறுகள் ஸில்வரை எத்தனை ஆபத்தில் கொண்டு போய்விட்டன! மரணத்தின் வாயிலுக்கல்லவா அழைத்துச் சென்று விட்டன?

ஸில்வர் தனக்கெதிரே மேஜைமீது சாய்ந்ததும் அவனுடன் சித்தப்பா உறவை அளவுக்கு மீறிக்கொண்டாடிய ராணி, அவன் சற்று அசரட்டும் என்பதற்காகவே, ''அங்கிள் அங்கிள்'' என்று பேச்சுக் கொடுத்தாள். முகத்தில் பாசத்தைக் காட்டினாள். உதடுகளில் புன்சிரிப்பைத் தவழவிட்டாள். உள்ளுக்குள்ளே விஷத்தை வளர்த்துக்கொண்டாள். ஸில்வர் அவள் சொற்களில் மயங்கி, தனது சக்தியைப் பெரிதாக மதித்து மேஜைமீது நன்றாகச் சாய்ந்தவரை பொறுத்துக்கொண்டு அன்பு நாடகமாடிய ராணி, மேஜைக்கும் கீழிருந்த தனது வலக்கையில் தன் இடைமுகப்பில் செருகியிருந்த சிறு கைத்துப்பாக்கியை எடுத்துக் கைக்கு எதிரேயிருந்த ஸில்வரின் குடல் பகுதியில் அதன் வாயைச் சற்றே அழுத்தினாள்.

முதலில் அதை என்னவென்று உணராத ஸில்வர் அது தனது வயிற்றுக்குக் கீழே குடல் இருந்த இடத்தில் அதிகமாக அழுந்திய வுடன் மிகத் தந்திரமாகத் தன்னை ராணி மடக்கிவிட்டதையும், எந்த நிமிடத்திலும் அவள் இஷ்டப்படும் பட்சத்தில் தனது உயிர்



ஆகாயத்தில் சிட்டுக்குருவி போல் பறந்துவிடும் என்பதையும் உணர்ந்ததால், ''வேண்டாம் ராணி வேண்டாம்'' என்று கூவினான்.

அவள் கிளியை முத்தமிட்டு அது மரண முத்தமாகவும் இருக்கக்கூடும் என்று கூறியதும், மரணம் கிளிக்கு மாத்திரமில் லாமல் தனக்கும் ஏற்படக்கூடும் என்ற கிலியால் இங்க்லண்ட் அழைத்த அழைப்புக்கு அவன் இணங்கவில்லை. மேஜையின் குறுக்கே சாய்ந்தது சாய்ந்தபடி நின்றான். அந்தச் சமயத்தில் ''ஹூ இஸ் அங்கிள்?'' என்று காப்டன் இங்க்லண்ட் கேட்டதும், ''ஹூ எல்ஸ் பட் மை ஸில்வர்? (என் ஸில்வரைத் தவிர வேறு யார் இருக்க முடியும்?)'' என்று கூறினாள் ராணி.

இங்க்லண்டுக்கு ஸில்வர் ஏதோ ஆபத்தில் சிக்கிவிட்டான் என்பது தெரிந்ததேயொழிய திட்டவட்டமாக அது என்ன வென்பது தெரியாததால், ''அப்படியானால் அங்கிளை இங்கு அனுப்பு'' என்றான் வாயிற்படிக்கு அருகில் நின்ற வண்ணம்.

''அங்கிள் என்னை விட்டுப் பிரிய மறுக்கிறார்'' என்றாள் ராணி குழைந்த குரலில்.

அந்தக் குரலில் ஏளனம் ஒலிப்பதைக் கவனித்தான் இங்க்லண்ட். ஆகவே சிறிது சினத்தின் வசப்பட்டுச் சொன்னான்: ''எங்களுடன் விளையாடுவது ஆபத்து ராணி'' என்று.

''அப்படியானால் ஸில்வர் என்னுடன் விளையாடுவது ஆபத்து அல்லவா?'' என்று பதிலுக்கு வினவினாள் ராணி.

''ஸில்வர் என்ன விளையாடினான்?'' என்று இங்க்லண்ட் கேட்டான்.

''கிளியைப் பிடுங்க வருகிறார். என் கையை முறிப்பதாகக் கூறிக் கையைப் பிடித்து நெரிக்கிறார்'' என்று புகார் செய்தாள் ராணி.

ராணி தன்னைப் பார்த்து நகைக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டான் இங்க்லண்ட். ஆகவே ஸில்வர் மீது எரிந்து விழுந்தான், ''உனக்கு எதற்காக அந்தக் கிளி?'' என்று.

''ப்ளிண்ட்? காப்டன் ப்ளிண்ட்? இட் ஈஸ் மை லைஃப் (ப்ளிண்டா! காப்டன் ப்ளிண்டா? அது என் உயிர்)'' என்றான் ஸில்வர்.

இந்த இடத்தில் ராணி புகுந்து, ''உண்மைதான் காப்டன். அதற்காகத் தனது உயிரையும் கொடுக்கத் தயாராக இருக்கிறார்''

என்று கூறிய ராணி, ''ஈஸ் இட் நாட் ஸோ அங்கிள்? (அப்படித் தானே சித்தப்பா?)'' என்று ஸில்வரையும் கேட்டாள்.

ஸில்வரின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. ''இந்த விளையாட்டை நிறுத்துவோம்'' என்ற ஸில்வர், ''சரி ராணி! என் உயிர் உன் கையில் இருக்கிறது. என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று வினவினான்.

ஸில்வரின் இந்தப் பேச்சுக்குக் காரணம் புரியாததால், ''உன் உயிர் அவளிடம் இருக்கிறதா?''என்று வினவினான் இங்க்லண்ட் வியப்புடன்.

''ஆம், அவள் கைத்துப்பாக்கி என் குடல் பகுதியில் அழுத்தப்பட்டிருக்கிறது. குதிரையை இழுத்தால் அடுத்த விநாடி மரணம் நிச்சயம்!'' என்றான் ஸில்வர்.

அப்பொழுதுதான் இங்க்லண்டுக்கு உண்மை நிலை புரிந்தது. அனந்துக்கு அது முன்பே புரிந்துவிட்டதால், அவன் உரையாடலில் கலந்து கொள்ளாமல் பேசாமல் நின்றிருந்தான். ஸில்வர், ராணியின் மேஜை மீது குனிந்தபோதே கீழிருந்த அவள் கை அசைந்ததை அவள் அழகிய தோளின் அசைவிலிருந்து புரிந்துகொண்டான் அனந்த். அடுத்து ஸில்வர் அலறியபோது மீதி விஷயமும் புரிந்துவிட்ட தால் அவன் ஏதும் செய்யமுடியாமல் சிலையென நின்றுவிட்டான்.

ஸில்வர் அகப்பட்டுக் கொண்டதோ ஆபத்தில் சிக்கி அலறியதோ அனந்துக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. இந்த ஒரு நிகழ்ச்சி பல சங்கடங்களை விளைவிக்கலாம் என்பதை அவன் உணர்ந்திருந்தான். பதினைந்து மாலுமிகளுடன் துலாஜி வந்திருந் தாலும் காப்டன் இங்க்லண்டும் டெய்லரும் வைத்திருந்த பெரிய கொள்ளைக் கூட்டம் சீறி எழுமானால் ஆபத்து மிகப் பெரியது என்பதை உணர்ந்திருந்தான் அனந்த். பெரிய சாதனைகளை முன் னிட்டுத் தானும் துலாஜியும் ஏதேதோ திட்டங்களை வகுத்திருக்க, குறுக்கே ராணி புகுந்து நிலைமையைக் குழப்புகிறாளே என்று மனத்துக்குள் அலுத்துக்கொண்டான் அவன்.

இத்தகைய நினைப்புகளால் மெள்ள அந்த அறையில் நிலவிய விபரீத நிலையின் உஷ்ணத்தைச் சிறிது தணிக்க முயன்று, ''ஸில்வர்! உன்னை அறிவாளி என்று நம்பினேன், இங்கு எதற்காக வந்தாய்? இங்க்லண்ட் என்னிடம் ஏதோ சொல்லச் சொன்னதாகச் சொன்னாயே, அது என்ன?'' என்று வினவினான்.



''இங்க்லண்ட் உன் அடுத்த திட்டம் என்ன என்று கேட்டு வரச் சொன்னான். இப்பொழுது இங்க்லண்டே வந்துவிட்டதால் நீங்கள் நேரடியாகவே பேசிக்கொள்ளலாம்!'' என்றான் ஸில்வர்.

அனந்த், இங்க்லண்டை நோக்கினான். இங்க்லண்ட் பதில் ஏதும் சொல்லவில்லை. ராணியையே உற்றுநோக்கிக் கொண் டிந்தான். ''ராணி! நீ ஸில்வரைக் கொல்லலாம். அதற்குப் பிறகு உன் கதி என்ன ஆகும் என்று யோசித்தாயா?'' என்று வினவினான் சில விநாடிகளுக்குப் பிறகு.

ராணி இங்க்லண்டை நோக்கி நகைத்தாள். ''கொள்ளைக் காரர்கள் என்ன செய்வார்கள் என்பதைக் கொள்ளைக்காரி அறியமாட்டாளா? பாம்பின் கால் பாம்புக்குத் தெரியாதா?'' என்று வினவினாள் அலட்சியமாக, நிர்ப்பயமாக.

''மரணத்தைப் பற்றிச் சொல்லவில்லை. அதற்குத் தயாராகவே இந்தத் தொழிலுக்கு வருகிறோம். ஆண்கள் நிலைமை வேறு. பெண்களுக்கு மரணத்தைவிட அபாயமானது இருக்கிறது'' என்று சுட்டிக் காட்டினான் இங்க்லண்ட்.

அவன் சொற்களின் பொருள் மிக நன்றாகப் புரிந்தது ராணிக்கு. அதற்காக அவள் சிறிதும் நாணப்படவில்லை. ''பெண் களைக் கெடுக்கமுடியும் என்று சொல்கிறாய்'' என்றாள் சர்வ சாதாரணமாக. ''ஆனால், இங்க்லண்ட், ராணி மீது யாராவது கையை வைக்கமுடியும் என்று நீ கருதினால் அதைவிட முட்டாள் தனம் இருக்கமுடியாது. கிட்டே நெருங்கும் யாரையும் சித்ரவதை செய்து கொல்ல என்னிடம் மருந்து இருக்கிறது. தவிர, நான் இஷ்டப்பட்டால் இந்தக் கப்பலை எப்பொழுது வேண்டுமானாலும் கொளுத்திவிடுவேன். இங்குள்ள விளக்கும் அதில் இப்போதுள்ள மண்ணெண்ணெயும் அதற்குப் போதும்'' என்று சொன்ன ராணி, ''டோண்ட் த்ரெடன் மி இங்க்லண்ட் அண்ட் டோண்ட் பிளே வித் மி. தட் ஹோல்ட்ஸ் குட் டு எவ்ரி ஒன் ஆஃப் யூ ஆன் போர்ட் திஸ் ஷிப் (என்னை அச்சுறுத்தாதே இங்க்லண்ட். என்னுடன் விளையாட வும் வேண்டாம். நான் சொல்வது இந்தக் கப்பலிலுள்ள உங்கள் அனைவருக்கும் பொருந்தும்)'' என்று ராணி ஆத்திரம் ஏதுமில்லா மல் சொன்னாள். ஆனால், அவள் குரலில் உறுதி இருந்தது. சொன்னதைச் செய்யக்கூடியவள் என்ற நிர்ணயமும் இருந்தது.

அந்தச் சமயத்தில் அனந்தும் குறுக்கிட்டு, ''இங்க்லண்ட்! ராணியை விரோதித்துக் கொள்வதால் லாபமில்லை. மிரட்டுவதால் பயனில்லை. அவளது நட்பும் உதவியும் நமக்கு அவசியம். நமக்கு என்பதைவிட உனக்கும் டெய்லருக்கும் என்பது பொருந்தும்!'' என்று கூறினான்.

''உன்னையும் டெய்லரையும் நம்பி, உங்களைக் காப்பாற்றி, உங்களை வழியில் சுட்டுவிட இருந்த ராணியையும் எதிர்த்து காஸண்ட்ராவுக்கு அழைத்து வந்திருக்கிறேன். சிந்து துர்க்கத்தில் காஸண்ட்ரா தங்கவும் ராணியிடம் அனுமதி பெற்றிருக்கிறேன். அவள் இசையும் சமயத்தில் ஸில்வர் தோன்றினான். ராணியின் மனத்தைக் கெடுத்தான்'' என்ற அனந்த்,''ஆமாம், நீ எதற்காக இங்கு வந்தாய்?'' என்றும் வினவினான்.

''ஸில்வர் உடனடியாகத் திரும்பாததால் வந்தேன். அது கிடக்கட்டும். நாம் அடுத்தபடி செய்ய வேண்டியது என்ன? நீ ஏதோ திட்டமிட்டிருப்பதாகச் சொன்னாயே அது என்ன?'' என்று இங்க்லண்ட் கேட்டான்.

அனந்தின் முகத்தில் இகழ்ச்சிக் குறி படர்ந்தது. ''பெரிய திட்டங்கள் இஷ்டப்படி விவாதிக்கப்படுவதில்லை. பகல் நன்றாகப் புலர்ந்ததும் டெய்லரையும் அழைத்து வா. துலாஜி, டெய்லர், ஸில்வர், ராணி எல்லோருமாகச் சேர்ந்து அதைப்பற்றி விவாதிப் போம்'' என்று கூறிய அனந்த், ராணியை நோக்கி, ''ராணி, ஸில்வரை விட்டுவிடு. அந்தக் கிளியையும் கொடுத்து விடு. அடுத்த முறை ஸில்வர் விளையாடினால் அவனையும் கிளியையும் சேர்த்து நானே சுட்டுவிடுகிறேன்!'' என்றான்.

ராணி தனது துப்பாக்கியைப் பின்னுக்கு இழுத்து இடையில் செருகிக்கொண்டாள். கிளி மீதிருந்த பிடியையும் தளர்த்தினாள். ''அங்கிள், நீ போ. சிறிது நேரத்தில் சந்திப்போம். அனந்துக்குச் சொல்லவேண்டியது பல இருக்கும். விளக்கவேண்டியதும் அதிகம் இருக்கும்'' என்றாள் ராணி. ஸில்வர் பின்னடைந்தான். கிளி தாவி அவன் தோளில் மீண்டும் அமர்ந்தது. ராணியை உற்றுப் பார்த்தது. ஸில்வரின் கொடிய பார்வை அந்தக் கிளிக்கும் இருந்ததாகத் தோன்றியது ராணிக்கு.

அவளால் விடுவிக்கப்பட்ட ஸில்வர் அகன்றதும் இங்க்லண்டும் அந்த அறையை விட்டு வெளியேறினான். அவர்கள் சென்ற பின்பு



அனந்த் ராணியை நோக்கி வந்து அவள் தோள்களின் மீது கையை வைத்தான். ராணி வெகுளவில்லை. அவன் கையை எடுத்துத் தள்ளவும் இல்லை. ஸில்வரின் மித்ரபேதம் பலிக்கவில்லை என்பதை அனந்த் உணர்ந்ததால் ஆசுவாசப் பெருமூச்சுவிட்டான்.

''ராணி! இனிமேல்தான் நமது ஆபத்து உண்மையில் துவங்குகிறது!'' என்று சொன்னான். அனந்தின் ஒருகை அவள் கழுத்தைச் சுற்றி வளைத்தது.

''என்ன ஆபத்து?'' என்று வினவினாள் ராணி.

''துலாஜி ஒரு திட்டம் வைத்திருக்கிறான். அதை அவர்கள் ஒப்புக்கொண்டால் ஆபத்தில்லை. அதன் உண்மையை ஊகித்து விட்டால் நான், நீ, துலாஜி, உன் தகப்பனார் அனைவரும் கண்டதுண்டமாக இவர்களால் வெட்டப்படுவோம்'' என்றான் அனந்த் சர்வசாதாரணமான குரலில்.

''திட்டம் இதுதானா? என்று தன்னிடமிருந்த கசங்கிய காகிதத்தைச் சுட்டிக் காட்டிக் கேட்டாள் ராணி.

''ஆம்.''

''நீங்கள் சிந்து துர்க்கம் வந்ததற்கும் இந்தக் காகிதத்துக்கும் சம்பந்தம் உண்டா?''

''முழு சம்பந்தம் உண்டு.''

''அதை விவரித்தால் கேட்பேன்.''

''பிறகு சொல்கிறேன். இன்றைய அக்னிப்பரீட்சை முடியட்டும்'' என்றான் அனந்த்.

சரியாக விடிந்து கதிரவன் எழுந்த ஐந்தாவது நாழிகையில் அந்தப் பரீட்சை துவங்கியது.

''இப்படி உட்கார் அனந்த்''என்று ஒரு நாற்காலியைக் காட்டினான் தளத்திலிருந்த டெய்லர்.

அந்த நாற்காலியை இமை கொட்டாமல் பார்த்தான் அனந்த். அதற்குச் சரித்திரம் இருந்தது. அது நாச சரித்திரம்!

அத்தியாயம் - 22

# எதிர்பாராத விந்தை!

முந்திய இரவு திடீரென உருவான பயங்கரப் புயல் தோன்றிய வேகத்தில் தணிந்து விட்டாலும், ஒருவர் முகத்தை இன்னொருவர் பார்க்கவிடாமல் திரையிட்டுப் பிராணனை வாங்கும் அரபிக் கடலின் மூடுபனியும் அன்று கதிரவனுக்கோ அல்லது கொள்ளைக் காரர்களுக்கோ பயந்து விலகிவிட்டதாலும், காஸண்ட்ராவின் விசாலமான தளத்தில் கதிரவன் தனது காலைக் கிரணங்களைப் பரிபூரணமாக வீசியிருந்தானாதலாலும், கொள்ளைக்காரர்கள் கூடவும், பேசவும் தளம் மிக வசதியுடன் இருந்தது.

டெய்லர் முதலிய கொள்ளைத் தலைவர்களும் ராணி, அனந்த், மால்வான் தளபதி இவர்களும் உட்கார மாலுமிகள் அறைகளிலிருந்து கொண்டு வந்து போட்டிருந்த மூன்று நாற்காலிகளும், தட்டையான சின்னஞ்சிறு ஆசனங்களும் காலை வெயிலில் குளிர் காய்ந்ததால் அதிகச் சில்லிப்பு அவற்றை பாதிக் காமல் உட்கார மிகவும் சுகமான உஷ்ண ஸ்திதியை அடைந்திருந்தன. அவற்றைவிட அதிக உஷ்ண நிலையை டெய்லர், இங்க்லண்ட் முதலானவர் அடைந்திருந்தாலும் அதை வெளிக்குக் காட்டாமல் இரண்டு நாற்காலியில் அமர்ந்திருந்தனர். அவர்களைச் சூழ்ந்து நின்ற கப்பலின் மாலுமிகள் அத்தனை பேரும் தங்கள் தலைவர் களைவிட அனந்தையும் ராணியையுமே அதிகமாக எதிர்பார்த் திருந்ததாலும், அவர்கள் வரத் தாமதப்பட்டதாலும் அவர்களுக்குள் ஏதோ சிறிது 'கசமுசா' என்ற பேச்சும் சலசலப்பும் இருந்து வந்தன.

காப்டன் டெய்லரும் காப்டன் இங்க்லண்டும் நாற்காலி களில் அமர்ந்திருந்தபோதிலும் ஸில்வர் மட்டும் எந்த ஆசனத்திலும் அமராமல் எட்ட இருந்த பாய்மரமொன்றில் சாய்ந்து நின்று தனது கையிலிருந்த அசுரக் கிளியைத் தடவிக்கொண்டிருந்தான்.

சற்று நேரத்துக்கெல்லாம் அழைத்து வரப்பட்ட மால்வான் தளபதி சங்கர் பந்த் ஒரு சிறு ஆசனத்தில் அமரும்படி இங்க்லண்டால்



நியமிக்கப்பட்டதால், தமக்கு உரிய மரியாதை கொடுக்கப் படவில்லை என்ற காரணத்தால் அவர் மிகுந்த வெறுப்பையும் சினத்தையும் முகத்தில் படரவிட்டுக் கொண்டு உட்கார்ந்தார். அவரை அழைத்து வந்த இரு கொள்ளைக்காரர்கள் அவர் உட்கார்ந்ததும் விலகிவிட்டாலும், அடுத்து வந்த துலாஜி ஆங்கரே மட்டும் அவருக்குப் பின்னரல் வந்து, முதல் நாளைவிடகூன் அதிகமாக வளைய முகம் தாழ்ந்து முகவாய்க்கட்டை தளபதியின் தலையைத் தொட்டுவிடுவது போல் வெகு அருகில் நின்றான்- கால்களை அகல விரித்துத் தன்னைத் திடப்படுத்திக்கொண்டு.

இத்தனை பேரும் வந்ததும் ராணியோ, அனந்தோ தலை காட்டாததால் மாலுமிகளில் ஒருவன் கூட்டத்தின் ஒரு கோடியி லிருந்து, ''ராணி எங்கே?'' என்று சற்று இரைந்தே கேட்டான்.

''ஆம் எங்கே?'' இன்னொருவன் குரல் மிகக் கரகரப்பாகவும் கொடுமையாகவும் எழுந்தது.

''நடை பாவாடை விரிக்காவிட்டால் மகாராணி வரமாட் டார்கள்'' என்று மற்றொருவன் கேலியாக நகைத்தான். அதைத் தொடர்ந்து கூட்டமே நகைத்தது மிகக் கேவலமாக.

கொஞ்சம் கொஞ்சமாகக் கொள்ளைக்காரர் அமைதி இழப்பதைக் கண்ட இங்க்லண்ட் முகத்தைச் சுளித்தான். டெய்லர், ''யாராவது இருவர் சென்று அவளை இழுத்து வாருங்கள்'' என்று கூறினான்.

அதற்கு அவசியமில்லாமல் காப்டன் இங்க்லண்டின் அறைக் கதவைத் திறந்துகொண்டு ராணி வெளியே வந்தாள். வந்தவள் கதவின் பக்கத்திலேயே சிறிது நேரம் நின்றாள். அன்று அவள் அலங்காரமும் மிக மனோகரமாக இருந்ததால் அதுவரை கூச்சலிட்ட மாலுமிகள் சட்டென்று அடங்கி வாயைப் பிளந்து அவளைப்-பார்த்தார்கள்.

இயற்கையாகவே பளபளப்புள்ள அவள் அழகிய மேனிக்குக் கதிரவன் காலைக் கிரணங்களால் சிறிது செஞ்சாந்து பூசியிருந்தான். குவளை மலரைப் போன்ற அவள் அழகிய முகம்

கதிரவன் கிரணங்களால் மலர்ந்தும் சிவந்தும் இருந்ததன்றிக் குவளையிலே நீலோத்பலங்களும் விளையலாம் என்பதற்கு இரு நயனங்களும் சான்று கூறின. அவள் செம்பவள உதடுகள் காலைக் கிரணங்களில் பளபளத்ததால் ஏதோ நீரோட்டமுள்ள கெம்பு ஒளிவிடும் நிலையை அடைந்திருந்தன.

''அந்தப் பவள உதடுகளில் அன்று காலையில் சிறிது புன்முறுவலும் தவழ்ந்து இருந்ததை இரு காப்டன்களும் பார்த்தார்கள். அதுவரை அவள் மீதிருந்த கோபமெல்லாம் ஏற்கெனவே மறைந்துவிட்ட பனியைப் போல் விலகி விடவே, காப்டன் இங்க்லண்ட் தனது நாற்காலியிலிருந்து எழுந்திருந்து ஹாட்டைக் கையிலெடுத்துக் கொண்டு தலை தாழ்த்தினான். டெய்லர் மட்டும் அசையவில்லை. உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து கழுத்தை லேசாகத் திருப்பி அவளைப் பார்த்ததோடு நிறுத்திக்கொண்டான்.

அவள் மாலுமிகள் இருந்த இடத்தை நோக்கி நடந்து வந்தபோது மாலுமிகள் கூட்டம் இரண்டாகப் பிளந்து அவளுக்கு வழி விட்டது. அவள் நடக்கத் தொடங்கிய உடனேயே அறையி லிருந்து வெளிவந்த அனந்த் அவளை மிக நெருங்கி அவளுக்குப் பின்னால் நடந்து வந்தான். இருவரும் டெய்லரும் இங்க்லண்டும் இருக்கும் இடத்துக்கு வந்ததும் இங்க்லண்ட் தனது நாற்காலியை ராணிக்கு அளித்து, ''இப்படி உட்காரலாம்'' என்றான். நாற்காலி யைச் சிறிது இழுத்து ராணி உட்கார வசதியும் அளித்தான்.

ராணி சுற்றும்முற்றும் ஒருமுறை தனது கண்களை ஓட்டி னாள். பிறகு ராணி போலவே கம்பீரமாக அமர்ந்தாள், இங்க்லண் டின் நாற்காலியில். அந்தச் சமயத்தில்தான் வாயைத் திறந்து பேசினான் டெய்லர். ''அனந்த்! இந்த நாற்காலியில் நீ உட்கார லாம்'' என்று ஆரம்ப முதல் காலியாக வைக்கப்பட்ட நாற்காலி யைக் காட்டினான். அதைச் சொன்ன அவன் குரல் விபரீதமாக ஒலித்தது.

அனந்த் உடனடியாக அதில் உட்காரவில்லை. ''காப்டன் இங்க்லண்ட் நிற்கும்போது நான் உட்காருவது முறையல்ல'' என்று கூறி மறுத்தவன், ''காப்டன்! யூ ப்ளீஸ் டேக் த சேர்'' என்று ஆங்கிலத்திலும் சொன்னான்.



காப்டன் இங்க்லண்ட் பதில் சொல்லவில்லை. டெய்லர் இதழில் குரூரமான புன்னகை ஒன்று விரிந்தது. ''இட் ஈஸ் இன்டென்டட் ஃபார் யூ ( இது உனக்காக ஏற்பட்டது)'' என்று அந்த நாற்காலியைக் கையால் தட்டியும் காட்டினான்.

அனந்தின் இதழ்களில் புன்முறுவல் தவழ்ந்தது. அத்துடன் அந்த நாற்காலியை உற்று நோக்கினான். அப்படியொன்றும் அந்த நாற்காலி பிரமாதமான வேலைப்பாடு உடையதல்ல. நல்ல அகலமான தட்டையான நான்கு கால்கள், பின்னால் சாய்ந்து கொள்ளப் பாசி பிடித்த அழுக்கேறிவிட்ட இரண்டு சட்டங்கள், முரடான, பட்டையான இரண்டு கைகள் இவற்றின் ஒரு தொகுப்புதான் அந்த நாற்காலி. நாசூக்கான வாழ்க்கைக்கு உதவாதது. ஆனால், கடலோடும் கப்பல்களுக்குச் சீதோஷ்ண ஸ்திதியின் மாறாட்டங்களுக்கு ஈடு கொடுக்கும் உரம் வாய்ந்தது. அந்த நாற்காலியில் பார்க்கும்படியானது எதுவும் இல்லா விட்டாலும் அனந்த் அதை உற்றுப் பார்த்தான்.

அனந்தின் பார்வையையும், நாற்காலியின் ஆராய்ச்சியையும் டெய்லர் கவனிக்கவே செய்தான். ஆகையால் மீண்டும் சொன் னான். ''இந்த நாற்காலி உனக்காகவே போடப்பட்டிருக்கிறது'' என்று.

அதுவரை மௌனமாக இருந்த அனந்த், இங்க்லண்டை நோக்கி வினவினான்: ''இந்த நாற்காலியைக் கொண்டுவந்து போடும் யோசனை யாருடையது, உன்னுடையதா?'' என்று.

இங்க்லண்ட் பதில் சொல்லவில்லை. இல்லையென்பதற்கு அடையாளமாகத் தலையை மட்டும் அசைத்தான். ''ஐ தாட் ஸோ (அப்படித்தான் நினைத்தேன்)'' என்ற அனந்த், டெய்லரை நோக்கி- ''டெய்லர்! பர்ஹாப்ஸ் இட் ஈஸ் யுவர் ஐடியா? (டெய்லர் ஒருவேளை இது உன் யோசனையோ?)'' என்று வினவினான்.

டெய்லர் உடனடியாகப் பதில் கூறவில்லை. சில விநாடிகளுக்குப் பிறகு, ''ஸப்போஸிங் இட் ஈஸ், வாட் ஈஸ் தேர் இன் தட் சேர்? (அப்படியே இருந்தாலும் இந்த நாற்காலியில் என்ன தான் இருக்கிறது?)'' என்று வினவினான்.

அனந்த் சொன்னான்: ''அதோ அந்த இரண்டு எழுத்துகள் இருக்கின்றன.''

''இருந்தால் என்ன?'' காப்டன் டெய்லர் இறுமாப்புடன் கேட்டான்.

''அந்த இரண்டு எழுத்துகளும் இந்தக் கப்பலின் ஆரம்ப காப்டனுக்கு உரியவை. தோஸ் டு லெட்டர்ஸ் ஜே அண்ட் எம் டெல் எ ஸ்டோரி (அந்த இரண்டு எழுத்துகள் - ஜே.எம். ஒரு கதையைச் சொல்கின்றன.)'' என்றான் அனந்த். அவன் குரல் சிறிது கடுமைப்பட்டிருந்தது.

அந்தக் கடுமையை டெய்லர் கவனித்தாலும் கவலைப் படவில்லை. ''வாட் ஸ்டோரி? (என்ன கதை?)'' என்று கேட்டான்.

''ஸ்டோரி ஆஃப் யுவர் இன்டென்ஷன்ஸ் தென் அண்ட் யுவர் இன்டென்ஷன்ஸ் நௌ (உன் எண்ணத்தைப் பற்றிய கதை அன்றும் இன்றும்)'' என்றான் அனந்த். அப்படிச் சொன்ன பிறகு அவன் அந்த நாற்காலியை நோக்கி நடந்து அதில் உட்கார்ந்து கொண்டான் திடமாக. உட்கார்ந்துகொண்டு கேட்டான் இங்கலண்டை, ''இங்கலண்ட்! இந்த நாற்காலியின் சரித்திரத்தைச் சொல் லட்டுமா?'' என்று.

அவன் பதிலுக்குக் காத்திராமல் இந்திரஜித் தானாகவே பேச ஆரம்பித்தான். அவன் சிந்தனை பின்னோக்கி ஓடியதால் கண்களில் கனவுச் சாயை படர்ந்தது. அவன் கைகள் அந்த நாற்காலியின் இரு கைகளையும் ஒரு முறை ஓங்கிக் கடுமையாகத் தட்டின.

''இதே நாற்காலியில் நான்கு வருஷங்களுக்கு முன்பு இந்த நாற்காலிக்கு உடையவன் காப்டன் ஜேம்ஸ் மாக்ரே பிணைக்கப் பட்டிருந்தான். கவர்னர் பூன், கனோஜி ஆங்கரேயை அழிக்கத் தீட்டிய பைத்தியக்காரத் திட்டத்தின் விளைவாக உபயோகப் படுத்தப்பட்ட மிகப் பெரிய கப்பல் இந்த காஸண்ட்ரா. இந்தக் கப்பலின் தலைவன்தான் ஜேம்ஸ் மாக்ரே. அவன் எதற்காகத் தனது பெயரின் முதல் எழுத்துக்களை ஜே.எம் என்று இந்த நாற்காலியில் வெட்டினான் என்பது எனக்கே புரியவில்லை.



இதென்ன பெரிய அதிர்ஷ்டம் வாய்ந்ததா? வேலைப்பாடு உள்ளதா? இரண்டும் இல்லை. இருப்பினும் இதைப் பெரிதாக மதித்திருக் கிறான் காப்டன் மாக்ரே. அவன் மதிப்பில் மண்ணைப்போட முயன்றான் டெய்லர். அவன் கப்பலையும் பிடித்துக்கொண்டு, அவன் நாற்காலியிலேயே அவனைப் பிணைத்து இதே தளத்தில் உட்கார வைத்தான்! அவனைத் தூக்கிலிடவும் தீர்மானித்தான். இத்தனைக்கும் டெய்லர், காப்டன் மாக்ரே மீது அடைந்தது பெருமைக்குரிய வெற்றியல்ல...'' என்று பேசிக்கொண்டு போன அனந்த் சிறிது நிறுத்தினான்.

அந்தச் சமயத்தில் இடை புகுந்தான் டெய்லர். ''அந்தப் போரைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?'' என்று சீறினான்.

''அந்தப் போர் சரித்திரப் பிரசித்தி பெற்றுவிட்டது. சமீப காலத்தில் அத்தகைய பேடித்தனத்தைக் கவர்னர் பூனின் மாலுமி களைவிட வேறு யாரும் காட்டியதில்லை. டெய்லர்! ஐ நோ எவ்ரிதிங் அபௌட் தட் ஆக்ஷன். அண்டு ஐ நோ இட் ஈஸ் ஜஸ்ட் பை லக் யூ காட் மாக்ரே (டெய்லர் அந்தச் சண்டை பற்றி எனக்குச் சகலமும் தெரியும். வெறும் அதிர்ஷ்டத்தால் நீ மாக்ரேயைப் பிடித்தாய் என்பதும் தெரியும்)'' என்றான் அனந்த்.

அனந்த் மேலும் சொன்னான். ''க்ரீன்விச் என்ற கப்பலின் காப்டன் கிர்பியும், காஸண்ட்ரா காப்டன் ஜேம்ஸ் மாக்ரேயும் ஜோஹன்னா ரோட்ஸ் என்ற துறைமுகத்தில் தங்கள் கப்பல் களுக்குக் குடிநீர் நிரப்பிக் கொண்டிருந்தார்கள். பிரெஞ்சு நாட்டில் கட்டப்பட்ட 46 பீரங்கிகள் உள்ள விக்டரி என்ற கப்பல் எட்வர்ட் இங்கலண்ட் என்ற கொள்ளைக்காரன் தலைமையிலும், டச்சுக் காரர் கட்டிய பான்ஸி என்ற 24 பீரங்கிக் கப்பல் டெய்லர் என்ற கொள்ளைக்காரன் தலைமையிலும் வழியில் இருப்பதாக மாக்ரேக்கு அங்கு தெரிய வரவே, அவன் அவ்விருவரையும் பிடிக்கத் தீர்மானித்தான். அதற்காக கிரீன்விச்சையும் அருகே இருந்த இன்னொரு ஆஸ்டெண்டர் என்ற கப்பலையும் துணைக் கொண்டு இரு கொள்ளைக்காரர்களையும் நாடி வந்தான்.

கொள்ளைக்காரர்கள் கப்பலைக் கண்டதும் கிரீன்விச் காப்டனும் ஆஸ்டெண்டர் காப்டனும் ஓடிவிட்டார்கள். தனியாக

மாட்டிக் கொண்டாலும் மாக்ரேயின் தலைமையில் காஸண்ட்ரா திறமையுடன் போரிட்டது. ஆனால், பிரிட்டிஷ் மாலுமிகள் உதறலெடுத்து ஒத்துழைக்காததால் கொள்ளைக்கார மாலுமிகள் தங்கள் கப்பல்களின் குண்டுவீச்சின் பாதுகாப்பில் விரைந்து படகுகளில் வந்து, காஸண்ட்ரா மீது தொத்திக் கொண்டார்கள்! காஸண்ட்ரா மாலுமிகள் பலர் கண்டதுண்டமாக வெட்டப் பட்டார்கள். காப்டன் மாக்ரே தனது கப்பலிலேயே சிறை செய்யப் பட்டு இதே நாற்காலியில் கட்டப்பட்டான்..."

''அடுத்து நடந்தது என்ன?'' தூரத்திலிருந்து வந்தது ஸில்வரின் குரல்.

''டெய்லர், மாக்ரேயைக் தூக்கிலிட வேண்டும் என்றான். இங்க்லண்ட் ஆட்சேபித்தும் கேட்கவில்லை. ஸில்வர்! நீ வந்து உன் கைத்துப்பாக்கிகளைக் காட்டி மிரட்டியிருக்காவிட்டால் மாக்ரே தூக்கிலாடியிருப்பான். டெய்லர் மிகக் குரூரமானவன். அதனால்தான்...'' என்ற அனந்த், இங்க்லண்டை நோக்கினான்.

இங்க்லண்டின் முகம் கல்லாயிருந்தது. டெய்லர் நகைத் தான். ''யூ ஹாவ் நாட் கம்ப்ளீட்டட் த ஸெண்டன்ஸ் (நீ வாசகத்தைப் பூர்த்தி செய்யவில்லை)'' என்றான் நகைப்பின் ஊடே.

''பூர்த்தி செய்கிறேன். அதனால்தான் இந்த நாற்காலியில் என்னை உட்கார வைத்திருக்கிறாய். மாக்ரேயைப் போல் என்னையும் பிணைத்து மிரட்டவும், தூக்கில் தொங்கலாட வைக்கவும் எண்ணுகிறாய். பட் யூ ஹாவ் மேட் ஒன் மிஸ்டேக் (ஆனால், நீ ஒரு தவறு மட்டும் செய்திருக்கிறாய்)'' என்று கூறிய அனந்த் உக்கிரமாக நகைத்தான்.

''வாட் ஈஸ் இட்? (என்ன அது?)'' டெய்லரின் குரலில் நகைப்பு மறைந்து உக்கிரம் நிலவியது.

''நான் மாக்ரேயல்ல என்பதை நீ உணரவில்லை. நானும் உன்னைப் போல் ஒரு கொள்ளைக்காரன். அது மட்டுமல்ல. நான் இஷ்டப்பட்டால் இந்தக் கப்பலில் உன்னைத் தூக்குப் போட்டு விட முடியும்'' என்ற அனந்த் மீண்டும் நகைத்தான்.



அவன் நகைப்பு விபரீதமாகத் தோன்றியது ராணிக்கு. இங்க்லண்டின் நிலை விவரிக்க இயலாததாயிருந்தது. அவன் சொன்னான் : ''இம்முறை உன் உதவிக்கு ஸில்வர் வர மாட்டான்'' என்று.

''யார் உதவியையும் நான் எதிர்பார்க்கவில்லை. என் உதவி உங்கள் எல்லோருக்கும் தேவை'' என்று சொன்ன அனந்த் நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான். ''இஃப் எனி ஆஃப் யூ டச் மி ஐ வில் பர்ன் திஸ் ஷிப் அண்ட் ஆல் ஆஃப் யூ வித் இட் (உங்களில் யாராவது என்னைத் தொட முயன்றால் இந்தக் கப்பலை உங்களுடன் சேர்த்துக் கொளுத்தி விடுவேன்.)'' என்று மிரட்டினான். ''என்னால் முடியுமா முடியாதா என்பதை அறிய விரும்பினால் அவனைக் கேளுங்கள்'' என்று எதிரே கையை நீட்டினான்.

அவன் கை நீட்டிய திசையை அனைவரும் கவனித்தார்கள். கவனித்ததும் பிரமித்தார்கள். அவர்கள் முற்றும் எதிர்பாராத விந்தை நிகழ்ந்திருந்தது!

## அத்தியாயம் - 23

# திட்டமும் கொண்டாட்டமும்!

முந்நூற்று எண்பது பீரங்கிகளை உடையதும், ஏக காலத்தில் ஐந்நூறு பேராவது போராடக்கூடிய வசதியுள்ள விசாலமான தளத்தை உடையதும், காப்டன் இங்க்லண்ட், டெய்லர் ஆகிய இரு பெரும் கடலோடிகளின் தலைமையில் இயங்கியதும், எந்தக் கடுமையான கடற்போருக்கும் தயாராயிருப்பதுமான காஸண்ட்ரா வின் தளத்தின் நடுவில் நாற்காலியில் அமர்ந்து, தன்னை யாராவது தொடும் பட்சத்தில் காப்டன்கள் மாலுமிகளுடன் சேர்த்துக் கப்பலைக் கொளுத்திவிடுவதாகக் கூறிய இந்திரஜித் அனந்தின் துணிவைக் கண்ட இங்க்லண்டும் டெய்லரும் பிரமித்தனர்.

தளபதி சங்கர் பந்த், அபாய நிலையால் அவனுக்கு மூளைக் கோளாறு ஏற்பட்டிருக்கிறதென நினைத்து அசந்து நின்றார். பக்கத்தில் அமர்ந்திருந்த ராணியின் மனம் கூட அவன் துணிவைக் கண்டு குழம்பியது அந்த நிலையில். ''நான் சொல்வதில் சந்தேகம் இருந்தால் அவனைக் கேளுங்கள்'' என்று சுட்டிக் காட்டியபோது அனைவரும் அதிர்ச்சியடைந்தார்களென்றால், எதிர்பாராத விந்தையைக் கண்டு பிரமித்தார்களென்றால் அதற்குக் காரணம் இருக்கவே செய்தது!

அவன் காட்டிய திசையில் கண்களைச் செலுத்திய அனைவரும் அங்கு நெட்டையான மெல்லிய உருவத்துடன், கூன் கடுகளவுமின்றி அந்தக் கப்பலின் பாய்மரம்போல் மிகக் கம்பீரமாக நின்றிருந்த துலாஜியைக் கண்டனர். அவன் பிரிட்டிஷ்காரர்களைப் போலவே நல்ல மாலுமி உடைகளை அணிந்திருந்தான். அவன் இடையிலிருந்த கச்சையில் காணப்பட்ட இரு கைத்துப்பாக்கிகளும் மற்ற கைத்துப்பாக்கிகளைவிட ஓரளவு பெரியதாகவும் பயங்கர மாகவும் இருந்தன. அவற்றுக்கு நடுவில் கச்சையில் செருகப் பட்டிருந்த ஒரு குறுவாளும், ஒரு மூலையில் அவன் மெல்லிய தொடையைத் தொட்டுத் தொங்கிக் கொண்டிருந்த மகாராஷ்



டிரரின் பெரிய வளைவு வாளும், அவன் கனோஜியின் புதல்வன் என்பதையும் எதற்கும் துணிந்தவன் என்பதையும் பறைசாற்றின. இத்தனைக்கும் துலாஜி புன்முறுவலுடன் நின்றிருந்தான். அவன் நின்ற தோரணையில் போரின் எச்சரிப்போ ஆயத்தமோ எதையும் காணோம். அழகிய முகத்திலிருந்த கண்கள் மட்டும் சிறிது அதிக மாகப் பளிச்சிட்டன. முகத்தில் தொங்கிய இரு முரட்டுக் குழல்கள், முக அழகை அதிகப்படுத்தினவா, மற்றவரை அச்சுறுத்த அப்படி வளைந்து கிடந்தனவா என்பது புரியவில்லை.

காப்டன் இங்க்லண்ட், டெய்லர் இருவருமே புரிந்து கொண்டார்கள், ஏதோ ஒருவிதமாகத் தங்களை அனந்த் மடக்கிவிட்டான் என்பதை. ஆனால், எப்படி மடக்கினான்? தன்னந்தனியாகத் துலாஜி ஆங்கரே மட்டும் தங்களை என்ன செய்துவிட முடியும்? கப்பலிலுள்ள தங்களிடம் சேர்ந்திருக்கும் நானூறுக்கும் மேற்பட்ட மாலுமிகளை எப்படி அழித்துவிட முடியும்! என்ற கேள்விகள் அவர்கள் மனத்தில் எழுந்தன. தவிர துலாஜி ஆங்கரேயின் கூன் என்ன ஆயிற்று என்பதும் விளங்காததால் இங்க்லண்ட் கேட்டான்: ''அனந்த்! இந்தக் கப்பலின் மாலுமிகளின் தொகை உனக்குத் தெரியுமா?'' என்று.

இதற்கு அனந்துக்குப் பதில் துலாஜியே பதில் சொன்னான்: ''தெரியாத எந்த விஷயத்திலும் அனந்த் காலெடுத்து வைக்க மாட்டான். உங்கள் பலம் தெரியும். போரிடும் திறமையும் தெரியும். தெரிந்துதான் காஸண்ட்ராவுக்கு வந்திருக்கிறான். அனந்தை உங்களுக்குச் சரியாகத் தெரியாது. இந்தக் கப்பலைக் கொளுத்தி விடுவேன் என்று அவன் சொன்னால் அதைச் செய்வான். அவன் சொல்லைநிலை நிறுத்தக் கூடியவன்'' என்று தெளிவுபடுத்தினான் துலாஜி.

அதுவரை பொறுமையாயிருந்த காப்டன் டெய்லர், ''உன் கூன் என்ன ஆயிற்று?'' என்று வினவினான் கடும் கோபத்துடன்.

இதற்கு அனந்த் பதில் சொன்னான்: ''அவசியம் இருந்த வரையில் இருந்தது; அவசியம் தீர்ந்தது, போய்விட்டது'' என்றான்.

டெய்லர் அனந்தை நோக்கித் திரும்பினான். ''கூனுக்கு அவசியம் என்ன?'' என்று வினவினான்.

''உங்களுக்கும் அங்கஹீனத்துக்கும் ரொம்பப் பொருத்த முண்டு. ஸில்வருக்கு ஒரு கால் கிடையாது. அவன் உங்கள் நண்பன். அவனைக் கண்டு அஞ்சுகிறீர்கள். ஒரு கூனனும் கிடைத்தால் உங்களுக்குத் திருப்தி அதிகமாயிருக்கும் என்று துலாஜி நினைத்திருக்கலாம். பதினைந்து மாலுமிகள் அதிகப்படியாகக் கிடைக்கிறார்கள். அவர்கள் தலைவனோ ஒரு கொள்ளைக்காரன் மகன். அதுவும் கூனன். அவர்களைச் சேர்த்துக் கொள்வதால் காஸண்ட்ரா பலப்படுகிறது. ஆள் பலம் அதிகமாகிறது. தவிர உங்கள் வேலைக்கு மற்றவர்களைவிட மேலைக் கடலோரத் துறை முகங்களையும் அவற்றின் சூட்சுமங்களையும் நன்கறிந்த துலாஜி உபயோகப்படலாம். இந்தக் காரணங்களால்தான் அவனையும் பதினைந்து மாலுமிகளையும் நீங்கள் சேர்த்துக் கொண்டிருக் கிறீர்கள்'' என்று விளக்கினான் அனந்த்.

இம்முறை இங்க்லண்ட் கேட்டான், ''எங்கள் வேலையா? அதென்ன?'' என்று.

அனந்த் லேசாகப் புன்முறுவல் கொண்டான், ''மாக்ரேயைப் பிடிப்பது'' என்று பதில் சொன்னான்.

''மாக்ரேயை நாங்கள் விடுதலை செய்தோம். பான்ஸி என்ற கப்பலைக் கூடக் கொடுத்து அனுப்பினோம். அப்படியிருக்க நாங்கள் ஏன் மறுபடியும் அவனைப் பிடிக்க வேண்டும்?'' என்று டெய்லர் கேட்டான் உக்கிரமாக.

இந்திரஜித் அனந்த் நாற்காலியின் கைகளை அழுத்திக் கொண்டிருந்த தன் கைகளை எடுக்காமலே சொன்னான். ''நீங்கள் அவனைக் கண்டு அஞ்சுகிறீர்கள். உங்களைப் பிடிக்கவும், இந்தக் காஸண்ட்ராவை முடியுமானால் திரும்பப் பிடிக்கவும், முடியா விட்டால் அழிக்கவும் நான்கு புதிய போர்க் கப்பல்களுடன் மாக்ரே கிளம்பியிருக்கிறான். அவனை அழிக்க நீங்கள் முயலு கிறீர்கள்'' என்று.

டெய்லரும் இங்க்லண்டும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். தூர இருந்த ஸில்வரின் முகத்தில் விவரிக்க இயலாத விபரீதச் சாயை ஒன்று படர்ந்தது. ''அனந்த்! அரபிக் கடலில் நடக்கும் சகல விஷயங்களையும், எல்லோர் நோக்கத்தை யும் நீ அறிந்திருக்கிறாய் என்பது தெரிகிறது. ஆனால், இந்தக்



கப்பலைக் கொளுத்திவிடுவேன் என்று சொன்னாயே அது எப்படி முடியும்?'' என்று வினவினான்.

பேச்சை என்ன காரணத்தாலோ ஸில்வர் அசல் பாதையி லிருந்து மாற்றுகிறான் என்பதை அனந்த் புரிந்துகொண்டான். இருப்பினும் அதைப்பற்றி ஏதும் குறிப்பிடாமல் அந்தப் பாதையிலேயே சென்றான். ''ஸில்வர்! முடியாத எதையும் நான் சொல்வதில்லை. நான் சொல்வதைப் புரிந்துகொள்ளக் கண்தான் வேண்டும். சிறிதளவு அறிவு இருந்தாலும் நல்லது. அதோ நிற்கும் துலாஜியின் கச்சையில் உள்ள கைத்துப்பாக்கிகள் இரண்டும் அவன் தந்தையால் கொடுக்கப்பட்டவை. என்னைவிடப் பன் மடங்கு துரிதமாகச் சுடக்கூடியவன் துலாஜி. எந்த விநாடியிலும் இமையைக் கூட அசைக்காமல் மற்றவர் இமைக்கும் நேரத்துக் குள்ளாகவே அந்தத் துப்பாக்கிகளை இயக்கக் கூடியவன். இந்த டெய்லரும் இங்க்லண்டும், அதோ தொலைவில் நிற்கும் நீ கூடத்தான் பிணமாகிவிடுவீர்கள்'' என்று சொல்லிக்கொண்டு போனவன் சட்டென்று ஆகாயத்தை நோக்கினான். அங்கு ஒரு பறவைக் கூட்டம் சென்று கொண்டிருந்தது. ''இரண்டு போதும்'' என்று அனந்த் சொல்வதற்கும் பறவைகளில் இரண்டு காப்டன் டெய்லரின் இரு கால்களுக்கும் இடையில் விழுவதற்கும் சரியாக இருந்தது.

இந்த அசுர சாதகத்தை, அசுர வேகத்தை கண்ட அனைவருமே எல்லையில்லாப் பிரமிப்பை அடைந்தார்கள். துலாஜியின் துப்பாக்கி எழுந்ததையோ இயங்கியதையோ யாரும் பார்க்க வில்லை. பறவைகள் விழுந்ததைத்தான் பார்த்தார்கள். திரும்ப அந்தக் கைத்துப்பாக்கி துலாஜியின் உறையில் எப்பொழுது சென்றது என்பதும் புலப்படவில்லை, யார் கண்களுக்கும். காப்டன் இங்க்லண்ட், டெய்லர், மாலுமிகள் அனைவருமே புரிந்து கொண்டார்கள், இரண்டு பயங்கர வீரர்களிடம் தாங்கள் சிக்கிக் கொண்டிருப்பதை. அதனால் பேச்சை இழந்தார்கள்.

சங்கர் பந்த் வாயைப் பிளந்துகொண்டு ஆகாயத்தைப் பார்த்தார். தளத்தில் ஊன்றியிருந்த டெய்லரின் கால்களைப் பார்த்தார். அவற்றின் நடுவே ஓடிக்கொண்டிருந்த பறவைகளின் குருதி அருவியையும் பார்த்தார். அந்த அருவி மனித ரத்த நதியாவது மிகச் சுலபமென்பதை உணர்ந்துகொண்டார். ஆகவே சிறிது

பயத்துடன் சொன்னார்: ''மனிதர் பறவைகளல்ல, திரும்பச் சுடமுடியும்'' என்று.

''முடியும், அவகாசம் இருந்தால்!'' என்றான் அனந்த்.

''ஏன் அவகாசம் இருக்காது? நீயும் இந்தத் துலாஜியும் மட்டும் எங்கள் அனைவரையும் சுட்டுவிட முடியுமா? மற்ற மாலுமிகள் கையைக் கட்டிக் கொண்டு நின்றிருப்பார்களா?'' என்று கேட்டு மற்றவர்களை விடத் தமக்குத் தைரியம் அதிகம் என்பதைக் காட்டினார் பந்த்.

''முடிந்தால் மாலுமிகள் எங்களைச் சுடலாம். அதுவும் அவர்கள் தலைவர்கள் இறந்த பின்பு சுடலாம். சிறிது கண்களைத் திறந்து பாருங்கள்- பார்வை ஒழுங்காயிருந்தால். அறிவைத் திறந்து நோக்குங்கள்- அறிவில் கூர்மையிருந்தால்'' என்றான் அனந்த். இதை சொல்லிக் கால்களை நன்றாக நீட்டிக் கொண்டு கையைச் சிறிது சோம்பல் முறித்து நாற்காலியில் சாய்ந்து கொண்டான். அந்தச் சமயத்தில் தூரத்திலிருந்த ஸில்வர் மெள்ளத் தனது பெல்ட்டி லிருந்து கைத்துப்பாக்கியை எடுக்க முயன்றான்.

''அதைத் தொடாதே!'' துலாஜியின் குரல் இரும்புச் சலாகைகள் இரண்டு உராய்ந்த ஒலியில் ஒலித்தது. இத்தனைக்கும் துலாஜி தனது கைத்துப்பாக்கியிடம் கையைக் கூடக் கொண்டு போகவில்லை. அந்த எச்சரிக்கையுடன் மேலும் சொன்னான்: ''நீங்கள் அனந்த் சொல்வதைப் புரிந்து கொள்வது உங்கள் உடலுக்கும் நல்லது, உயிருக்கும் நல்லது. டெய்லர், இங்க்லண்ட்! உங்களுக்கு வெகு அருகில் சூழ்ந்து நிற்பது உங்கள் மாலுமிகள் அல்ல. என்னுடன் வந்த பதினைந்து பேரும் சங்கர் பந்துடன் வந்த பதினைந்து பேரில் பதிமூன்று பேரும் ஆக இருபத்தெட்டு வீரர் களின் பார்வையில் நீங்கள் இருக்கிறீர்கள். அவர்களும் நம்மைப் போலக் கொள்ளைக்காரர்கள். போருக்கு அஞ்சாதவர்கள். ஆகையால், நீங்கள் நாலு பேர் இயங்கும் முன்பு உங்கள் வேலை முடிந்துவிடும் இந்த உலகத்தில். அதுமட்டுமல்ல. கப்பலைக் கொளுத்தவும் அனந்த் ஏற்பாடு செய்திருப்பான். இதில் சந்தேகமே வேண்டாம்!''

துலாஜியின் சொற்கள் எந்தவிதப் பதற்றமுமின்றி வெளி வந்தன. அதைத் தொடர்ந்து கேட்டான் துலாஜி: ''அனந்த்! கப்பலைக் கொளுத்த என்ன ஏற்பாடு?'' என்று.



''நேற்று விளக்குக்கு வாங்கி வந்த கிரஸின் விளக்கில் இருக்கிறது. அதை என் அறையில் ஊற்றித் தீவைக்க சங்கர் பந்தின் மாலுமிகள் இருவரை நிறுத்தியிருக்கிறேன். அவர்கள் பொறுமை அதிக நேரம் நீடிக்காது'' என்று சொன்ன அனந்த், ''துலாஜி! கொள்ளைக்காரர் ஒருவரை யொருவர் அழித்துக்கொள்வதில் பயனில்லை. தவிர டெய்லர், இங்க்லண்ட் இவர்கள் யோசனையும் நமது யோசனைக்கு மாறுபட்டதல்ல. இவர்கள் மாக்ரேயின் பலத்தை உடைக்கப் பார்க்கிறார்கள். நாம் பிரிட்டிஷ் கடற்படை பலத்தை உடைக்கப் பார்க்கிறோம். இரண்டும் ஒன்று தான்'' என்று கூறினான். அடுத்தும் ஒரு கேள்வியை வீசினான். ''இப்பொழுது மாக்ரே கொண்டு வருகிறானே இரண்டு லட்சம் பவுன். அதை எப்படிப் பங்கு போடுவது?'' என்று.

இதைக் கேட்டதும் தளத்தில் பரபரப்பு அதிகமாயிற்று. ''இரண்டு லட்சமா!'' என்று வியப்பு நிரம்பிய குரலில் கேட்ட டெய்லர் சரேலென நாற்காலியிலிருந்து எழுந்தான். இங்க்லண்ட் மிதமிஞ்சிய பிரமிப்பால், ''அதற்குத்தான் நீ இங்கு வந்தாயா?'' என்று வினவினான், பிரமிப்பு குரலில் மிதமிஞ்சி ஒலிக்க.

கொள்ளைக்கார மாலுமிகள் அனைவரும் சுயநிலை இழந்து ''ஹீ!'' என்று கூவினார்கள், தங்கள் குதூகலத்தைத் தெரிவிக்க.

அதுவரை சும்மாயிருந்த ராணி கேட்டாள் அனந்தை நோக்கி: ''பவுன்களை மட்டும் சொன்னீர்கள். அதில் வரும் நகைகளையும் மொகலாய மோஹராக்களையும் வைரங்களையும் ஏன் சொல்ல வில்லை?'' என்று.

ராணியின் பேச்சு அனைவர் கூக்குரலையும் அடக்கியது. களத்தில் பேரமைதி நிலவியது. அனந்தும் துலாஜியுங்கூட ராணியை உற்றுப் பார்த்தார்கள், குழப்பமடைந்த பார்வையுடன். ''ஆம். ஏன் சொல்லவில்லை? கொள்ளைக்காரர்களுக்குள் எதற்கு ஒளிவு மறைவு?'' என்று இரண்டாம் முறையும் கேட்டாள் ராணி.

''மற்றதை இவன் விழுங்கப் பார்க்கிறான்'' என்றான் டெய்லர்.

''அதிலும் நமக்குப் பங்கு வேண்டும்'' என்றான் இங்க்லண்ட்.

எதற்கும் பதில் சொல்ல முடியாத அனந்த் தனது பரிதாப விழிகளை ராணியின் மீது திருப்பினான். துலாஜியின் பார்வையில்

கெஞ்சல் தெரிந்தது. இப்படி இரு மகாவீரர்களையும் அடக்கித் திணற விட்ட கடல்ராணி சிறிது இரைந்தே நகைத்தாள்: ''மாக்ரே பிடிபட்டால் அவன் கப்பல்களில் கிடைக்கும் அனைத்திலும் காஸண்ட்ராவிலுள்ள அனைவருக்கும் பங்கு உண்டு. ரத்னா இதுவரை பேச்சு தவறியதில்லை'' என்று கூறினாள் ராணி.

டெய்லர் ராணியைத் தலை தாழ்த்தி வணங்கினான். ''ராணி, யூ ஆர் கிரேட்'' என்று கூறியதன்றி, ''திஸ், கால்ஸ் ஃபார் ஸெலிப்ரேஷன். பிரிங் த ட்ரிங்ஸ் (இது கொண்டாட்டத்துக்குரியது. கொண்டு வாருங்கள் குடி வகையறாக்களை)'' என்று கூவினான் டெய்லர்.

மாலுமிகள் விரைந்து புட்டிகளைக் கொண்டு வந்தனர். மது காஸண்ட்ராவின் மாலுமிகளை ஆட்கொண்டது. ராணி மட்டும் மதுவை அருந்தவில்லை. கையில் குப்பியைப் பிடித்த வண்ணம் புன்முறுவல் கொண்டு அந்தக் காட்சியை அனுபவித்துக் கொண்டிருந்தாள். அந்தச் சமயத்தில் இரு குடிகாரர்கள் தள்ளாடிக் கொண்டு வந்து ராணியின் இரு கன்னங்களிலும் முத்தமிட்டார்கள்!

## அத்தியாயம் - 24

# பீஷ்ம வாக்கியம்!

கனவிலும் தாங்கள் கருத முடியாத கணக்கற்ற பவுன்களும் நகைகளும் வைரங்களும் கிட்டப் போகிறதென்ற குதூகலத்தால் தங்கள் கருத்தை மது அரக்கனுக்குப் பணயம் வைத்துவிட்ட காஸண்ட்ராவின் மாலுமிகளின் களியாட்டத்தால் அந்தப் பெரும் தளமே அமர்க்களப்பட்டதை ராணி புன்முறுவலுடன் நோக்கிக் கொண்டிருந்தாள்.

அந்த மாலுமிகள் எத்தனை துஷ்டர்களானாலும் கொடியவர்களானாலும், பணம் என்ற ஒரு பலவீனம் அவர்களைக் குழந்தைகளாக்கிவிடுகிற உண்மையை அறிந்திருந்த காரணத்தால், இரு மாலுமிகள் தள்ளாடி வந்து தன் கன்னத்தில் முத்தமிட்டபோதும் சிறிதும் சினம் கொள்ளவில்லை, சிந்து துர்க்கத்தின் சித்தினி.

ஒரு மாலுமியின் முரட்டு மீசை கன்னத்தில் துழாவி அது நீண்டிருந்ததால் உதட்டிலும் பட்டபோது கூட அவள் நாற்காலியை விட்டு எழுந்திருக்காமலும் அவனை லேசாகத் தள்ளினாள் சிறிது நேரத்துக்குப் பிறகு. அந்த இரு மாலுமிகளில் ஒருவன் தள்ளப்பட்டவுடன் சற்று அத்துமீறி அவள் கழுத்தில் கையைப் போட்டு வளைத்தும் கடல்ராணி வேடிக்கையாகக் கையிலிருந்த மதுக்குப்பியை அவன் மண்டையில் உடைத்தாள். அதிலிருந்து கொட்டிய மதுவை நாக்கைத் துருத்தித் தடவிக் கொண்டே அவன் அகன்றான். மற்றொரு மாலுமி அத்தனை குடிவெறியிலும் தனது நண்பனுக்கு நடந்த உபசாரத்தைக் கவனித்து மேற்கொண்டு சேஷ்டைகள் எதிலும் ஈடுபடாமல் தானாகவே நகர்ந்தான் அப்புறம்.

அவன் நகர்ந்த சமயத்தில் டெய்லர் மூன்றாம் முறையாக விஸ்கியைக் கடகடவென்று அருந்தி 'ப்ரத்ரென் ஆஃப் த கோஸ்ட் வீ மஸ்ட் நௌ டான்ஸ் (கடல்துறைத் தோழர்களே, நாம் இப்போது நடனமாட வேண்டும்.)'' என்று அறிவிக்கவே, மாலுமிகள் ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு நானாவிதக் கூச்சல்களை

நடனகீதமாக எழுப்பிக் கொண்டு தளத்தில் வலம் வரத் துவங்கினார்கள். அப்பொழுது இங்க்லண்ட், ''ராணி! நீ ஏன் ஆடவில்லை? நடனம் உனக்குப் பிடிக்காதா? நீ எங்களில் ஒருத்தியல்லவா?'' என்றான் தள்ளாடி நின்று.

ராணி அவனை ஏறிட்டு நோக்கினாள். அவன் விழிகள் குடியால் சிவந்திருந்தாலும் கால்கள் சிறிது தள்ளாடினாலும், அவன் அதிகமாகச் சித்தத்தை இழக்கவில்லை என்பதைப் புரிந்துகொண்டாள் ராணி. அதன் விளைவாகப் பக்கத்தில் நாச நாற்காலியில் அமர்ந்திருந்த அனந்தைப் பார்த்தாள். எட்ட நின்றிருந்த துலாஜியையும் பார்த்தாள். துலாஜி தனது மதுக்குப்பியிலிருந்து லேசாக மதுவை அருந்தியிருந்தான். ஆனால், முதன்முதலில் நின்றபடி திடமாகவே நின்றிருந்தான், எந்த நிலைக்கும் தயாராக. இருவரையும் பார்த்த ராணி மீண்டும் இங்க்லண்டை நோக்கி, ''இங்க்லண்ட்! ஐ லைக் டு சூஸ் மை பார்ட்னர் மைசெல்ஃப் (இங்க்லண்ட்! நடனமாட எனக்கு வேண்டிய ஜோடியை நானே தேர்ந்தெடுத்துக் கொள்கிறேன்)'' என்று கூறினாள்.

''எனக்கென்ன?'' என்று கேட்டான் இங்க்லண்ட்.

''நீ அதிகமாகக் குடித்திருக்கிறாய்'' என்றாள் ராணி.

''டெய்லர்?''

''உன்னைக் கேட்கவில்லை.''

''துலாஜி?''

''நடனம் அவருக்கு எவ்வளவு தெரியும் என்பது எனக்குத் தெரியாது.''

இதைக் கேட்ட இங்க்லண்ட் குடிநகை நகைத்தான் பெரிதாக. ''ஐ நோ, ஐ டு நோ, யூ வாண்ட் டு டான்ஸ் வித் யுவர் லவர் (தெரியும் எனக்கு. நன்றாகத் தெரியும். நீ உன் காதலனுடன் நடனமாட விரும்புகிறாய்.)'' என்றான் இங்க்லண்ட் நகைப்பின் ஊடே.

''ஐ ஹாவ் நோ லவர் (எனக்குக் காதலன் யாருமில்லை.)'' என்றாள் ராணி சிறிது கோபத்துடன்.

''ஹூ தென் ஈஸ் அனந்த்( அப்படியானால் அனந்த் யார்?)'' என்று வினவினான் இங்க்லண்ட்ச் ஏதோ பெரிய நகைச்சுவையைச் சிருஷ்டித்ததாக நினைத்துப் பெரிதாகச், சிரித்தான்.



ராணி நகைக்கவில்லை. புருவத்தைக்கூட அசைக்கவில்லை. ''அனந்த்? அவரும் உங்களைப் போல் ஒரு கொள்ளைக்காரர்'' என்று சர்வ சாதாரணமாகக் கூறினாள்.

அந்த உரையாடல் மேலும் தொடர்ந்திருக்கும். அப்படித் தொடராமல் அதைத் தடுத்தான் டெய்லர். விஸ்கி போதை தலைக்கு ஏறி அவனைப் பைத்தியமாக அடித்திருந்ததால், துலாஜியால் சுடப்பட்டுக் காலடியில் விழுந்திருந்த இரு பறவைகளையும் கழுத்தில் பற்றித் தூக்கிக் கையில் பிடித்துக்கொண்டு, ''லுக் ஹியர் ஐ வாண்ட் டு பாத் மை ஃப்ரண்ட்ஸ் (இங்கு பாருங்கள் என் நண்பர்களுக்குக் குளிப்பாட்டப் போகிறேன்)'' என்று கூறி, இன்னொரு கையிலிருந்த குப்பியிலிருந்த மதுவை அந்தப் பறவைகளின் தலைகளில் அபிஷேகம் செய்தான். இரண்டுக்கும் உயிர் இல்லாததால் அவை அந்த அபிஷேகத்தை அலட்சியம் செய்தாலும் அவற்றிலிருந்து பிரவகித்து உறைந்துவிட்ட குருதி பட்டை பட்டையாக மதுவின் சிவப்பு நிறத்துடன் சேர்ந்து கீழிறங்கிப் பறவைகள் இன்னும் சாகவில்லை என்ற பிரமையைச் சிருஷ்டித்தன.

அந்த வேடிக்கையைக் கவனித்த ராணி சிரித்தாள் மீண்டும். அந்தச் சிரிப்பைக் கேட்ட டெய்லர், ''ராணி! நீயும் அழகான பறவைதானே? உன்னையும் குளிப்பாட்டட்டுமா?'' என்று வினவிக்கொண்டு குப்பியையும் பறவைகளையும் தூக்கிக்கொண்டு அவள் அருகில் வந்தான். அவன் அதிகமாக நெருங்கியிருந்தால் அவள் ஆடையில் மது பட்டு ஆடை சிவந்திருக்கும். ஆனால், அதே சமயத்தில் அவனை இங்க்லண்ட் தடுத்தான். ''நோபடி கோஸ் நியர் ராணி! ( யாரும் ராணியை அணுகக்கூடாது)'' என்று.

ராணி மேற்கொண்டு அவ்விருவவருக்கும் பேச இடம் கொடுக்க வில்லை. ''நானும் ஆடப்போகிறேன்'' என்று தெரிவித்தாள். அதைக் கேட்ட அனந்த் சரேலென எழுந்தான் நாற்காலியை விட்டு. ''இல்லை, உங்களுடன் இல்லை'' என்றாள் ராணி.

''வேறு யாருடன்?'' என்று வினவினான் அனந்த், சிறிது கோபத்துடனும், ஏற்கெனவே விளைந்த நிகழ்ச்சிகளால் குழப்பத்துடனும்.

துலாஜி தூரத்திலிருந்தே கேட்டான் ''என்னுடனா?'' என்று.

அதற்கும் ''இல்லை'' என்று பதிலளித்த ராணி தூரத்தில் பாய் மரத்தின்மீது சாய்ந்து நின்ற ஸில்வரிடம் சென்று, ''ஸில்வர்! பெண்கள் ஆண்களை நாட்டியமாடக் கேட்பதில்லை. ஆனால், நான் விதிவிலக்காக இருக்கிறேன். என்னுடன் ஆட வருகிறாயா?'' என்று வினவினாள்.

அத்தனை கொள்ளைக்காரர்களில் அதிகமாகக் குடிக்காமல், கையிலிருந்த குப்பியிலிருந்த ரம்மில் பாதி மட்டுமே அருந்தியிருந்த ஸில்வர், ''ராணி! எனக்கு இரண்டு கால்கள் இல்லையே, ஒன்றுதானே இருக்கிறது'' என்றான்.

''ஆனால், எனக்கு இரு கால்கள் இருக்கின்றன'' என்ற ராணி அவன் தோளிலிருந்த கிளியைத் தன் கையில் எடுத்துக்கொண்டு அவன் கையைத் தானே எடுத்துத் தனது இடையைச் சுற்றினாள். ஸில்வர் பெண்களிடம் மயங்காதவன். ஆகவே ராணியின் செய்கையில் ஏதோ சூது இருப்பதாக நினைத்துச் சொன்னான்,'' ஐ ஆம் நாட் எ லேடீஸ் மான் மை டியர் (நான் பெண்களை விரும்புபவனல்ல)'' என்று.

''பட் யூ ஆர் எ ஸெய்லர் அண்ட் எ கிரேட் பைரேட். பைரேட்ஸ் ஸெலிபரேட் அண்ட் டெய்லர் ஹாஸ் ஆர்டர்ட் இட் (ஆனால், நீ ஒரு மாலுமி. அதுவும் சிறந்த கடற்கொள்ளைக்காரன். கொள்ளைக்காரர்களுக்குக் கொண்டாட்டம் சகஜம். அதுவும் டெய்லர் உத்தரவிட்டிருக்கிறான்)'' என்று ராணி விளக்கினாள்.

அதற்கு மேல் ஆட்சேபிக்கவில்லை ஸில்வர். ராணி ஏதோ ஆழ்ந்த திட்டமிடுகிறாள் என்பதை உணர்ந்து கொண்டாலும் அதை வெளிக்காட்டாமல் அவளது இடையில் ஏற்கெனவே இருந்த கையைச் சிறிதளவு இறுக்கி ஒற்றைக் காலாலும் ஒற்றை ஊன்று கோலாலும் நடந்து ராணியைக் கொள்ளைக்காரர் மத்தியில் சுழற்றிச் சென்றான். அப்படிச் சுழன்றபோது ராணி சொன்னாள்: ''உன் கால் பாவும் முறை நன்றாக இருக்கிறது. தாளம் தவறவில்லை. ஸிங் யுவர் ஸாங்'' என்றாள் மராட்டியையும் ஆங்கிலத்தையும் கலந்து.

ஸில்வர் பெருங்குரலில் ஆரம்பித்தான் தனது பழைய பாட்டை. புட்டியிலிருந்த மீதி ரம்மை உறிஞ்சிப் புட்டியை எறிந்துவிட்டு 'Fifteen men and the Dead man's chest, Yo ho and a bottle of rum' என்ற பல்லவியைப் பெரிதாகப் பாடினான். அந்தப்



பல்லவியில் ராணியும் கலந்து கொண்டாள். அவள் குயில் குரலும் ஸில்வரின் கரகரத்த- ஆனால், கடுமை கலந்த ரம்மியமான குரலும், சேர்ந்து ஏதோ கடுமையான மந்திர ஸ்தாயிக் கம்பியும், ஸாரணை-அனுஸாரணை ஆகிய கம்பிகளும் கலந்து ஒலிப்பதைப் போல் கப்பல் தளத்தில் கேட்டது. இதை ஒட்டி மற்ற மாலுமிகளும் பாடினர்கள் அதே பல்லவியை. அப்படிப் பாடிக்கொண்டே ராணியை நோக்கிக் குனிந்த ஸில்வர், ''ராணி! ஐ ஆம் நாட் எ ஃபூல் ( நான் முட்டாளல்ல)'' என்றான் மெதுவாக.

''ஹூ ஸெட் யூ ஆர் (நீ முட்டாளென்று யார் சொன்னது?)'' என்று கேட்டாள் ராணி.

''யாரும் சொல்லவில்லை. ஆனால், லக்ஷக்கணக்கான பவுன்களையும் நகைகளையும் வைரங்களையும் நான் நம்பவில்லை. இந்தக் கொள்ளைக்காரர்களின் புத்தியைத் திசை திருப்ப நீ சொன்ன பொய் அது!'' என்றான் ஸில்வர்.

ராணி பதில் சொல்லவில்லை. ''நீ யார் பக்கம்?'' என்று வினவினாள் மெதுவாக.

''உன் பக்கம்'' என்றான் ஸில்வர்.

''ஏன்?''

''இங்க்லண்டையும் டெய்லரையும் நான் நம்பவில்லை.''

''யாரை நம்புகிறாய்?''

''உன்னையும் அனந்தையும்.''

''ஏன்?''

''இந்த டெய்லரும் இங்க்லண்டும் முட்டாள்கள். நீங்கள் இருவரும் புத்திசாலிகள். முட்டாள்களை நான் நம்புவதில்லை. நம்புவது அபாயம்'' என்ற ஸில்வர், ''இதை மாத்திரம் சொல். மாக்ரே வருவது உண்மையா?'' என்று கேட்டான்.

''உண்மை'' என்றாள் ராணி.

''அவனை நீங்கள் அழிக்க முற்படுவதும் உண்மையா?''

''உண்மை.''

''அவனை மாத்திரம் அழிக்கக்கூடாது. வேண்டுமானால் அவன் கப்பல் பலத்தை உடைக்கலாம்.''

## அத்தியாயம் - 25

# ஈடு!

அழையா வீட்டில் நுழையும் சம்பந்தியாக காப்டன் இங்க்லண்ட் அந்த அறைக்குள் நுழைந்ததும், மகாநாட்டில் கலந்து கொள்வதாக அறிவித்ததும், மேஜைமீது தானாகவே ஏறி உட்கார்ந்து கால்களை மட்டும் கீழே தொங்கவிட்டு அலட்சியமாக ஆட்டியதும் யாருக்கும் வியப்பாயில்லை.

அந்த அறையிலிருந்த மற்ற ஐவருக்கும் காப்டன் இங்க்லண்ட் எப்படியும் தங்கள் நடவடிக்கைகள் மீது ஒரு கண்ணை வைத்திருக்கத் தவறமாட்டான் என்பதிலோ, அவசியமானால் தங்கள் யோசனைகளில் தலையிடுவான் என்பதிலோ சிறிதளவும் சந்தேகமில்லாததால், அவன் வந்ததையோ, வந்ததும் பேசியதையோ, பேசிய தோரணையையோ கண்டு கலங்கினார் களில்லை. ஓரளவு அவன் வரவை ராணி எதிர்பார்த்திருந்தாள் என்பதை அவள் முகம் மிகத் தெளிவாகக் காட்டியது.

மேஜையைச் சுற்றிலும் போடப்பட்ட மூன்று நாற்காலிகளுக்குள் பிரதான நாற்காலியில் அமர்ந்திருந்த ராணி, தனது முன்பாக மேஜையில் ஏறி உட்கார்ந்த இங்க்லண்டைப் புன்முறுவலுடன் நோக்கினாள். ''காப்டன் இங்க்லண்ட்! இந்த மகாநாடு உங்களையும் டெய்லரையும்கூடப் பற்றியதுதான். பூர்வாங்க யோசனையை முடித்துக்கொண்டு உங்கள் இருவரையும் கலக்கலாமென்றுதான் தீர்மானித்தேன். நீங்கள் முன்னதாக வந்துவிட்டீர்கள். அதுவும் ஒருவிதத்தில் நல்லதுதான்'' என்றும் கூறினாள், மிக மதுரமான குரலில்.

இங்க்லண்ட் தனது கண்களை ஒருமுறை மற்றவர்மீது சுழல விட்டான். ராணி அமர்ந்திருந்த நாற்காலிக்குச் சற்றுத் தூரத்தில் மேஜையின் ஒரு முனையில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்திருந்தார் சங்கர் பந்த். இன்னொரு மூலையின் முனையில் தனது அசுரக் கிளியை மேஜைமீது நிற்க வைத்துப் பக்கத்திலிருந்த



நாற்காலியில் தனது தடியுடன் சாய்ந்து கொண்டிருந்தான் ஸில்வர். ராணிக்கு நேர் எதிரிலிருந்த நாற்காலியில் அனந்த் ஏதோ சிந்தித்த வண்ணம் உட்கார்ந்திருந்தான். மேஜையிலிருந்து நன்றாகத் தள்ளிச் சற்று எட்ட நின்றிருந்தாலும் துலாஜி மேஜை மீது தன் கண்களை நாட்டியிருந்தான். இங்க்லண்ட் வந்ததும் அவன்மீது தனது கண்களைத் திருப்பினான். இருவர் கண்களும் ஒருமுறை சந்தித்து விலகின.

இவையனைத்தையும் ராணி கவனிக்கவே செய்தாளாயினும், எதைப்பற்றியும் பிரஸ்தாபிக்காமல் நேரடியாகவே விஷயத்துக்கு வந்து, ''அனந்த்! நாம் இனி அடுத்தபடியாகத் திட்டத்தைப் பற்றி விவாதிக்கலாம். இங்க்லண்ட் வந்தது இன்னொரு கட்சியையும் இதில் ஈடுபடுத்துகிறது'' என்று கூறினாள்.

இங்க்லண்ட் மேஜை மீது உட்கார்ந்த நிலையில் சிறிது திரும்பி ராணியை நோக்கினான். ''இன்னொரு கட்சியா?'' என்று வியப்புடன் வினவவும் செய்தான்.

ராணி சிறிதளவும் முகத்தில் வியப்பையோ வேறெந்த உணர்ச்சிகளையோ காட்டவில்லை. ''ஆம்'' என்ற ஒரு சொல்லை மட்டும் சொன்னாள்.

''இங்கு கட்சிகள் ஏது?'' என்று வினவினான் இங்க்லண்ட்.

''எந்த விஷயத்திலும் உண்மையைப் புரிந்துகொண்டு இறங்குவது நல்லது'' என்று கூறிய ராணி, ''இங்க்லண்ட்! இங்கு நீங்களும் டெய்லரும் சேர்ந்த கட்சி இருக்கிறது. நீங்கள் அனந்தைப் பிடிக்கும் நோக்கத்துடன் சிந்து துர்க்கம் வந்தீர்கள். அவர் உங்களை அழிக்க வந்திருப்பதாக முன்னமே கூறியிருக்கிறீர்கள். ஆக உங்கள் கட்சி, உங்கள் நோக்கம் ஒன்று. அனந்த் சிந்து துர்க்கம் வந்த காரணம் எனக்குத் தெரியாது. ஆனால், அவர் சமீபத்தில் கூறிய விஷயங்களிலிருந்து துலாஜி ஆங்கரேயை இதே கப்பலில் சந்திக்க ஏற்பாடு செய்திருப்பதாகவும், பிரிட்டிஷ் கடற்படை பலத்தை உடைப்பது அவர் நோக்கம் என்பதும் தெரிந்தது. கட்சி இரண்டு ஆயிற்றா?

அடுத்தபடி நான், என் தந்தை, இந்தக் கப்பலில் உள்ள எங்கள் வீரர்கள் மூன்றாவது கட்சி.. உங்கள் சண்டைகளில் எங்களுக்குச் சம்பந்தமில்லை. இருப்பினும் முற்றும் எதிர்பாராத

''தே ஹேவ் எ ப்ளான் (இவர்களுக்கு ஒரு திட்டம் இருக்கிறதாம்)'' என்று இங்க்லண்ட் சொன்னான்.

டெய்லரின் இதழ்களில் மிகக் கொடிய புன்முறுவல் ஒன்று படர்ந்தது. ''எஸ்.எஸ். காப்டன் மாக்ரே அண்ட் தி மில்லியன்ஸ் கோல்ட், ஜுவல்ஸ் (ஆம் ஆம், காப்டன் மாக்ரேயும் லட்சக் கணக்கான பவுன்கள், மோஹராக்கள், நகைகள் முதலியன)'' என்று கூறினான், இகழ்ச்சி நிரம்பிய குரலில். லேசாகக் கொடிய நகை நகைத்தான். ''அந்தப் பொய்யைக் கேட்டோம் ஏற்கெனவே. அடுத்தது என்ன?'' என்று வினவினான்.

முதன் முதலாக அனந்த் அந்த விவாதத்தில் கலந்து கொண்டான். ''அது முழுவதும் பொய்யல்ல. ராணி கடைசியில் சிறிது அதிகப்படுத்தினாள் காரணமாக'' என்றான்.

''எது பொய்யல்ல? எதை அதிகப்படுத்தினாள் ராணி?'' டெய்லரின் குரலில் வெறுப்பு இருந்தது.

''மாக்ரே, உன்னையும் டெய்லரையும் தேடி வருவது பொய்யல்ல. மாக்ரேயின் கப்பல்களில் பணம் வருவதும் பொய்யல்ல. நகைகள் வைடூரியங்கள்தான் அதிகப்படி'' என்று அனந்த் கூறினான்.

டெய்லர் தனது கண்களை ராணி மீது திருப்பினான். ''எதற்காகப் பொய் சொன்னாய் ராணி?'' என்று வினவினான்.

ராணியும் டெய்லரைக் கூர்ந்து நோக்கினாள். ''கொள்ளைக் காரர்களைப் பணத்தைத் தவிர எதுவும் நிலை தவறச் செய்யாது. தவிர, காலையில் நான் அந்த வெறியை உருவாக்கியிராவிட்டால் பல கொலைகள் நடந்திருக்கும்! ஆனால், டெய்லர், உன் புத்திக் கூர்மை, சமயோசிதம், விஷயத்தை அடியோடு வேறு திசையில் திருப்பி விட்டது'' என்று ராணி கூறினாள்.

''என் புத்திக்கூர்மையா, சமயோசிதமா?'' என்று வினவினான் டெய்லர்.

''ஆம் டெய்லர். உன்னைச் சுற்றிச் சங்கர் பந்தின் மாலுமிகளும் துலாஜியின் மாலுமிகளும் நிற்பதைக் கண்டாய். எந்தச் சமயத்தில் எது நேர்ந்தாலும் வீண் ரத்தக் களறி என்பதைப் புரிந்து கொண்டாய். ஆகையால்தான் அந்தக் குடிவெறிக் கொண்டாட்டத்திற்கு ஏற்பாடு



செய்தாய். டெய்லர் ,ஐ அட்மையர் யூ (டெய்லர், உன்னைக் கண்டு என் மனம் வியக்கிறது) என்ற ராணி, தான் நிலையைச் சரியாகப் புரிந்து கொண்டு விட்டதைத் தெளிவாக்கினாள்.

டெய்லரின் முகத்தில் பெருமையும் மகிழ்ச்சியும் நிலவின. ''ராணி, ஐ ஹாவ் நெவர் மெட் எ கேர்ள் லைக் யூ. இஃப் எனிடே ஐ டிஸைட் டு மாரி இட் பி யூ (ராணி! உன்னைப் போன்ற ஒரு பெண்ணை இதுவரை நான் கண்டதில்லை. என்றாவது ஒரு நாள் நான் மணக்கத் தீர்மானித்தால் உன்னைத்தான் மணப்பேன்)'' என்றான்.

ராணி வாய் திறந்து நகைத்தாள். ''அந்தச் சமயம் வரும் போது பார்ப்போம். என் திருமணத்தைவிட முக்கிய விஷயங்கள் இப்பொழுது இருக்கின்றன நாம் கவனிப்பதற்கு'' என்று கூறி அனந்தை நோக்கினாள்.

அனந்தின் முகம் கல்லாயிருந்தது. அவன் ஏதும் பேச வில்லை. கையை மட்டும் நீட்டினான் ராணியை நோக்கி.

ராணி தனது ரவிக்கைக்குள் கையை விட்டு அந்தப் பழைய கசங்கிய காகிதத்தை எடுத்து நீட்டினாள் அனந்திடம். அவன், அதை வாங்கிப் பிரித்துக் கசங்கிய பகுதிகளை நன்றாகச் சரிப்படுத்தி மேஜை மீது வைத்தான். ''ஸில்வர்! இங்க்லண்ட்! டெய்லர்! இதைச் சிறிது பாருங்கள்'' என்றான்.

அவன் சொன்னதும் நாற்காலியில் இருந்தபடியே மேஜை மீது சாய்ந்தான் டெய்லர். ஸில்வர் தடியைப் பிடித்துக் கொண்டு எழுந்திருந்து அந்தக் காகிதத்தில் கண்களை ஓட்டினான். மேஜை மீது உட்கார்ந்திருந்த இங்க்லண்ட் கூடக் கீழே இறங்கித் திரும்பி மேஜை மீது பார்த்தான். பிரிந்து கிடந்த அந்தக் காகிதத்தில் மூவர் கண்களும் பதிந்தன, ஆராய்ந்தன. திரும்பத் திரும்ப அதன் மீதே ஓடின. மூவர் உணர்ச்சிகளையும் அந்தக் காகிதம் ஆட்கொண்டிருக்க வேண்டும். மூவரும் நீண்ட நேரம் மௌனம் சாதித்தார்கள்.

முன்பு துலாஜி கொடுத்த அதே அரபிக் கடலோர நிலப்படம் அது. துறைமுகங்களும், அந்தந்த இடத்திலிருந்த ராஜ்ய சக்திகளின் கப்பல் பலமும் காட்டப்பட்ட அதே படம்தான் அது. ஆனால், சில மாற்றங்கள் இருந்தன. மாற்றங்கள் மாற்றங்களாகத் தெரிய வில்லை, மிகச் சாமர்த்தியத்துடன் செய்யப்பட்டிருந்த காரணத்

தால். ஆனால், அந்தப் படம் அந்த மூன்று கொள்ளைக்காரர் களையும் கவர்ந்திருக்க வேண்டும்.

''இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்பது உன் நினைப்பா?'' இந்தக் கேள்வி இங்க்லண்டால் கேட்கப்பட்டது அனந்தை நோக்கி.

''நினைப்பல்ல, நிச்சயம்!'' என்றான் அனந்த்.

''சரி. நாங்கள் இதில் கலந்து கொள்கிறோமென்று வைத்துக் கொள்வோம். எங்களை நீங்கள் ஏமாற்ற மாட்டீர்கள், எதிரிகளிடம் காட்டிக் கொடுக்க மாட்டீர்கள் என்பது என்ன நிச்சயம்? அதற்கு என்ன உறுதி கூற முடியும் உங்களால்?'' என்று டெய்லர் கேட்டான், அனந்தையும் ராணியையும் மாறி மாறி நோக்கி.

பதில் அந்த இருவரிடமிருந்தும் வரவில்லை. தூர நின்றிருந்த துலாஜியிடமிருந்து வந்தது. ''இந்த நடவடிக்கைக்குத் தலைமை வகிக்கப் போவது காப்டன் இங்க்லண்டும், காப்டன் டெய்லரும்'' என்றான் துலாஜி.

இதனால் டெய்லருக்கு ஓரளவு திருப்தி ஏற்பட்டாலும் ஸில்வரின் முகத்தில் சந்தேகம் நிலவியது. ''முதலில் தலைமை வகிக்க இவர்களை விட்டு, நேற்று மாறியதைப் போல் திடீரென்று நீங்கள் மாறினால்....'' என்று வினவினான் ஸில்வர்.

துலாஜியே இதற்கும் பதில் சொன்னான், ''முதலில் இந்த நடவடிக்கைக்கு ஈடு காட்டுகிறோம்'' என்று.

''என்ன ஈடு?'' இரண்டாம் முறை வெளிவந்தது ஸில்வரின் கேள்வி.

ஸில்வர் என்ன, ராணியும் மற்ற எல்லாரும் தன்னை நோக்கித் திரும்பும்படி பேசினான் துலாஜி. ''சிந்து துர்க்கம், காப்டன் இங்க்லண்டின் வசம் ஒப்புவிக்கப்படும். இதைவிட வேறு என்ன வேண்டும்?'' என்று கேட்கவும் செய்தான்.

துலாஜியின் பேச்சைக் கேட்ட எல்லோருமே திக்பிரமைக்கு உள்ளானார்கள். 'இந்தக் கொடியவர்களிடம் சிந்து துர்க்கத்தை ஒப்படைப்பதாவது?' என்று எண்ணி அதிர்ச்சியடைந்த சங்கர் பந்த் நாற்காலியில் சாய்ந்து விட்டார். அதைவிட அதிர்ச்சி தரும் பயங்கரத் திட்டத்தை அடுத்தபடி விவரிக்கத் துவங்கினான் துலாஜி!

அத்தியாயம் - 26

# வெள்ளிக் கிரீடம்!

வடக்கே நானூற்று முப்பத்தாறு மைல் தூரம் கிழக்கிலிருந்து மேற்கே ஓடி காம்பே வளைகுடாவில் கடலுடன் கலக்கும் தப்தி நதியின் முகத்துவாரத்திலிருந்து தெற்கே கார்வார் துறைமுகம் வரை நெடுக உள்ள ஒவ்வொரு துறைமுகத்தையும் தெளிவாகக் காட்டி, அவற்றின் பலம், எதிர்ப்புச் சக்தி, அணுகும் விதம் அத்தனைக்கும் குறிகளைப் போட்டிருந்த அந்த அரபிக் கடலோரப் படத்தை ஆராய்ந்த காப்டன் டெய்லர், இங்க்லண்ட், ஸில்வர் எல்லோருடைய முகத்திலும் ஓரளவு திருப்தி நிலவினாலும், உள்ளூரச் சந்தேகம் இருந்ததால் அதைப் போக்க துலாஜி சிந்து துர்க்கத்தை ஈடுகாட்டிய பின்பும், சிறிது ஐயத்துடனேயே அவர்கள் மறுபடியும் அப்படத்தை ஆராய்ந்தார்கள். அந்த ஐயத்தைப் போக்கவும் மேற்கொண்டு திட்டத்தைத் தெளிவாக்கவும் சீரிய குரலில் பேசலானான் துலாஜி.

''ஜென்டில்மென்! யூ ஆர் லுக்கிங் அட் எ மாப் விச் டுக் டு இயர்ஸ் ஃபார் மி டு பிரிப்பேர் (கனவான்களே! நீங்கள் பார்க்கும் படத்தைத் தயாரிக்க எனக்கு இரண்டு வருஷங்களாயின)'' என்று துவங்கினான் துலாஜி.

''இதில் காட்டியுள்ள ஒவ்வொரு துறைமுகத்தையம் நான் நேரே சென்று பார்த்தேன். சில சமயங்களில் மாறுவேடத்துடனும் சென்றேன். சில துறைமுகங்களில் வேலைக்குச் சேர்ந்து அவற்றின் மர்மங்களை அறிந்தேன். அது மிகவும் கஷ்டமான பணியென்பது படத்தைப் பார்க்கும் உங்களுக்கே தெரியும்'' என்று கூறினான்.

அவன் சொன்னது முற்றிலும் உண்மையென்பது அந்த வெள்ளைக் கொள்ளைக்காரர்களுக்கு நன்றாகப் புரிந்திருந்தது. ஏதாவது ஓரிடத்தைக் கொள்ளையடிக்க வேண்டுமென்றால் அதற்குப் பிடிக்கும் நாட்களே அதிகம் என்பதையும், இந்தியாவின் மேற்குக் கரையோரம் முழுவதையும் படமாகத் தீட்ட வேண்டு

மென்றால், துறைமுக நுணுக்கங்களைக் குறிப்பிட வேண்டுமென் றால், அதற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய அவகாசமும் கஷ்டமும் மிக அதிகம் என்பதையும், வெள்ளையர் மூவரும் சந்தேகமற உணர்ந்தனர்.

இருப்பினும் கேட்டான் இங்கலண்ட்: ''இந்தப் படத்தில் கண்ட நுணுக்கங்கள் உங்களுக்குத் தெரிந்திருக்கும்போது, உங்கள் தந்தையிடம் பெரிய மரக்கலங்கள் இருக்கும்போது, நீங்கள் ஏன் மாக்ரேயின் பலத்தை உடைக்கக் கூடாது? எங்களை இதில் ஏன் சம்பந்தப்படுத்த வேண்டும்?'' என்று

''என் தந்தை இப்பொழுது பிரிட்டிஷாரிடம் விரோதம் வைத்துக்கொள்ள விரும்பவில்லை. ஏன், அபிஸீனிய ஸித்திகளின் விரோதத்தைக்கூட விரும்பவில்லை. அவர் தற்சமயம் விரும்புவது அமைதி'' என்றான் துலாஜி.

''கடற்கொள்ளைக்காரர்களுக்கு அமைதி ஏது? எ பைரேட் ஜஸ்ட் லிவ்ஸ் ஃபார் த டே? கொள்ளைக்காரன் அன்றாட சுகத்துக்கே வாழ்கிறான்)'' என்ற உண்மையை எடுத்துச் சொன்னான் டெய்லர்.

''மை ஃபாதர் ஈஸ் ஆஃப் எ டிஃபரண்ட் கைண்ட்(என் தந்தை வேறு விதம்)'' என்ற துலாஜி, ''டெய்லர்! இங்கு நாம் வந்திருப்பது ஒழுக்க நியதிகளை விவாதிப்பதற்கு அல்ல. உங்கள் மேஜை முன்பு தெளிவான திட்டம் இருக்கிறது. அது லாபகரமான திட்டம். ஏராளமான பணத்துடன் மாக்ரே வருவான் வெகு சீக்கிரம் பம்பாயிலிருந்து. அவனை மடக்கி அவன் கப்பல்களைச் சூறையாடினால் எல்லோருக்கும் கிடைக்கும் பணம் மிக அதிகம். ஆனால், அதை மாக்ரேயிடமிருந்து பறிப்பதற்கு இந்த காஸண்ட்ரா போன்ற சிறந்த கப்பல் அவசியம்! அதனால்தான் உங்கள் உதவியை நாடுகிறோம்'' என்றான் துலாஜி.

அதுவரை சும்மாயிருந்த சங்கர் பந்த் சொன்னார்: ''கேவலம் சில பிரிட்டிஷ் கப்பல்களைப் பிடிக்க சிந்து துர்க்கத்தை இவர்களிடம் ஒப்படைக்க வேண்டுமா?'' என்று.

அனந்த் தனது மௌனத்தை உடைத்தான். ''சங்கர் பந்த், சிந்து துர்க்கத்தை நாம் கொடுத்துவிடவில்லை இவர்களிடம். தற்காலிகமாக இவர்கள் வசம் ஒப்படைக்கிறோம், அவர்களுக்கு நம்மீது நம்பிக்கை வர. டெய்லரும் இங்கலண்டும் அவர்களை நான் பிடிக்க வருவதாகக் கேள்விப்பட்டிருக்கிறார்கள். ஆனால், ராணியை பிரிட்டிஷ் காப்டன் ஸ்டாண்டனும் லெப்டினன்ட் ஸ்மித்தும் ஏன் பிடித்துப் போக வந்தார்கள் என்பதை இவர்கள் எண்ணிப் பார்க்க வில்லை. இவர்கள் நம்மை நம்பவில்லை. நம்ப வைக்க முயலு கிறோம். கொள்ளைக்காரர்களுக்குள் அவநம்பிக்கை ஏற்பட்டால் பெரிய காரியங்களை நாம் சாதிக்க முடியாது!'' என்றான் அனந்த்.



''சரி, உங்கள் திட்டத்தைக் கேட்போம்'' என்று ஸில்வர் அந்த விவாதத்துக்கு முடிவு கட்டினான்.

''இட் ஈஸ் ப்ளெய்ன் ஆன் த மாப் (அது படத்தில் தெளிவாயிருக்கிறது)'' என்றான் டெய்லர்.

''அவர்களே சொல்லட்டும்'' என்றான் ஸில்வர்.

துலாஜி மேஜையை நோக்கி சற்று நெருங்கி வந்தான் ''இந்த இடத்தில் இப்பொழுது காப்டன் மாக்ரே இருக்கிறான். அவனிடம் நீங்கள் கொடுத்த பான்ஸி என்ற கப்பல் நன்றாகச் செப்பனிடப் பட்டு, சுமார் ஐம்பது பீரங்கிகளுடனும் வேண்டிய மருந்துகளுட னும் புறப்படத் தயாராயிருக்கிறது.

அதைத் தவிர நான்கு போர்க் கப்பல்களும் சித்தமாய் இருக் கின்றன, புறப்பட. மாலுமிகளையும் முன்போல் இல்லாமல் இம் முறை பார்த்துப் பொறுக்கியிருக்கிறான் மாக்ரே'' என்ற துலாஜி படத்தில் கையை வைத்து மாக்ரே வரக்கூடிய கடல் மார்க்கத்தைக் காட்டினான்.

ஸில்வர், டெய்லர், இங்கலண்ட், மூவரும் அதை ஆமோதிப் பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தனர்.துலாஜி மேலும் சொன்னான்: ''டெய்லர், இங்கலண்ட்! இப்பொழுது உங்களை நோக்கி வருவது தனிக் கப்பலல்ல. பலஹீனமான இதயமுடைய ஓடும் காப்டன்களைக் கொண்ட இரு கப்பல்களுமல்ல. ஆர்மடா (போர்க்கப்பல் கூட்டம்) வருகிறது திறமையுடன். அதை நீங்கள் சமாளிக்கும்படியிருக்கும்'' என்று.

ஆர்மடா என்ற சொல் டெய்லர், இங்கலண்ட், ஸில்வர் மூவரிடமுமே உற்சாகத்தைக் கிளப்பிவிட்டதால் மூவரும் மகிழ்ச்சி யுடன் நகைத்தார்கள். ''யூ ஸீம் டு நோ பிரிட்டிஷ் நேவல் ஹிஸ்ட்ரி (உனக்குப் பிரிட்டிஷ் கடற்படை வரலாறு தெரியும் போலிருக் கிறது)'' என்றான் டெய்லர்.

''நோ. ஹீ நோஸ் (எனக்குத் தெரியாது. அவனுக்குத் தெரியும்)'' என்று அனந்தைக் காட்டினான் துலாஜி.

அனந்த் அந்தப் பாராட்டுதலைத் தனது தலையசைப்பினால் ஏற்றுக் கொண்டான். ''ஓரளவு தெரியும்'' என்று வாயாலும் சொன்ன அனந்த், ''யூ மஸ்ட் டீச் திஸ் ஆர்மடா த ஸேம் லெஸன் அஸ் த பிரிட்டிஷ் டிட் டு த ஸ்பானிஷ் ஆர்மடா (இந்த ஆர்மடாவிற்கும் பிரிட்டிஷ், ஸ்பெயின் நாட்டுக் கப்பல் கூட்டத்துக்கு அளித்த படிப்பினையை நீங்கள் அளிக்கவேண்டும்)'' என்று அவர்கள் வெறியைக் கிளறி விட்டான்.

எந்த பிரிட்டிஷ் மாலுமிக்கும் ஸ்பெயின்மீது பிரிட்டன் அடைந்த அந்தப் பெருவெற்றி அளவிடமுடியாத பெருமையையும் உணர்ச்சியையும் அளிக்கவல்லது. அந்த ஆர்மடாவை அழிப்பதில் சம்பந்தப்பட்டவர்களும் ஸீ டாக்ஸ் ஆஃப் எலிஸபெத் (எலிஸபெத் மகாராணியின் கடல் நாய்கள்) பிரசித்தி பெற்ற வால்டர் ராலே போன்ற பிரசித்தி பெற்ற கொள்ளைக்காரர்கள். ஆகவே அந்த நிகழ்ச்சியைச் சம்பந்தப்படுத்திக் காட்டியதும் குரூர மனமுள்ள டெய்லர்கூட மகிழ்ச்சியடைந்தான். எதற்கும் மசியாத ஸில்வரும் மசிந்தான். இங்க்லண்ட் கொள்ளைக்காரனாக இருந்தாலும் கண்ணியமுள்ளவன், நாட்டுப் பற்றுள்ளவன். ஆகவே அவனைப் பற்றி என்ன சொல்ல? இங்க்லண்ட்டே முடிவில் மற்ற இருவருக் காகவும் பேசினான்:''இந்த ஏற்பாட்டுக்கு ஒப்புக் கொள்கிறோம். மாக்ரே எவ்வளவு பணம் கொண்டு வருகிறான்? எதற்காகக் கொண்டு வருகிறான்? எங்கே போகிறான்?'' என்று வினவினான்.

அனந்தின் இதழ்களில் புன்முறுவல் விரிந்தது. இங்க்லண்ட்! எ பைரேட் ஈஸ் எ பைரேட். ஹீ நீட்ஸ் மணி (இங்க்லண்ட், கொள்ளைக்காரன் கொள்ளைக்காரன்தான். அவனுக்குப் பணத்தில் தான் குறி.)'' என்று கூறி நகைத்துவிட்டு மேலும் சொன்னான்: ''நான் முதலில் சொன்னதில் பொய்யில்லை. இரண்டு லட்சம் பவுன்களுக்கு மேல் கொண்டு வருகிறான். கார்வாரிலுள்ள பிரிட்டிஷ் தொழிற்சாலை அபிவிருத்திக்கும், அங்கு தொழிலாள ருக்குச் சம்பளம் கொடுக்கவும், வேறு சாமான்கள் தொழிற்சாலைக்கு உள்நாட்டிலிருந்து வாங்கவும் அந்தப் பணம் வருகிறது.''



பணத்தைப் பற்றிக் கேட்டதும் டெய்லர் நாக்கை ஒருமுறை வெளியே நீட்டி உதடுகளை அதில் தடவிக் கொண்டான். ஸில்வரின் கண்கள் பளபளத்தன. இங்க்லண்டின் விழிகளில்கூடப் பணவெறி துளிர்த்தது. அனந்தும் துலாஜியும் அவர்கள் மனத்தில் ஏற்பட்ட பணவெறியைக் கவனிக்கவே செய்தார்கள். ஆகையால் எட்ட இருந்த துலாஜி அவர்களை மேலும் வலையில் இழுக்க, ''மாக் ரேயின் பணத்தில் எங்கள் பங்கு என்ன?'' என்று வினவினான்.

''ஹௌ மச் டூ யூ வாண்ட் ஸன்னி (மகனே! உனக்கு எவ்வளவு வேண்டும்?)'' என்று குழைந்தான் டெய்லர்.

''வீ ஆர் கிவிங் ஆல் த ஹெல்ப் (நாங்கள்தான் சகல உதவிகளையும் தருகிறோம்)'' என்றான் இங்க்லண்ட்.

''ஷ்யூர்லி யூ டோண்ட் வாண்ட் மச் மணி. யூ ஆர் எ பேட்ரியட் யூ வாண்ட் டு ப்ரேக் மாக்ரே. அண்ட் வி ஹெல்ப் யூ (உங்களுக்கு அதிகப் பணம் வேண்டாம். நீங்கள் தேசபக்தர்கள். மாக்ரேயை முறியடிப்பது உங்கள் லக்ஷியம். அதற்கு நாங்கள் உதவுகிறோம்)'' என்று நரிப் பார்வை பார்த்துக் கபடமாகப் பேசினான் ஸில்வர்.

பணம் அவர்களைப் பிசாசுகளாக அடித்துவிட்டதை உணர்ந் தான் அனந்த்.அதனால் உள்ளூரப் பெருமகிழ்ச்சியும் கொண்டான். இருந்தாலும் அதை வெளிக்குக் காட்டாமல், ''நாங்கள் தேசபக்தர் களாக இருக்கலாம். இருப்பினும் கொள்ளைக்காரர்கள். தேச பக்தர்கள் கொள்ளைக்காரர்களாக இருப்பதில் தவறில்லை. போயும் போயும் எதிரியைத்தானே கொள்ளையடிக் கிறோம்?'' என்று சொன்னான். ஆகவே, டெய்லர், ஸில்வர், இங்க்லண்ட்! எங்களுக்குச் சரிபாதி வேண்டும்'' என்றான்.

இங்க்லண்ட், டெய்லர் இருவரும் சட்டென்று எழுந்தார்கள். ஸில்வர் விறைத்து நின்றான். ''ஒரு லக்ஷமா! கொள்ளை!'' என்று கூவினான் டெய்லர் கடுங்கோபத்துடன்.

அதற்குப் பிறகு அந்த அறையில் அநாவசியக் கூச்சல்தான் இருந்தது. கொள்ளையடிக்கும் பணத்தைப் பங்கிடும் முறை பற்றி விவாதம் பலமாக நடந்தது. துலாஜி, அனந்த் இருவரும் சரிபாதிக்குக் குறைய மறுத்தார்கள். பேருக்குத் தளபதியாவும் உண்மையில் கொள்ளைக்காரராயும் இருந்த சங்கர் பந்த் நாக்கில்

கூட ஜலம் கொட்டியது. ''அனந்த்! சொல்வதில் தவறில்லை'' என்றும் அவரும் கலந்து கொண்டார் பேரத்தில்.

''என்ன தவறில்லை?'' சீறினான் டெய்லர்.

''எங்களிடம் மாலுமிகள் அதிகம்; காஸண்ட்ரா வலுவுள்ளது. நாங்கள்தான் போரிடப் போகிறோம்!'' என்றான் இங்க்லண்ட்.

இந்தச் சமயத்தில் ராணியும் பேசினாள். ''யாரும் புகமுடியாத சிந்து துர்க்கத்தில் உங்களை அனுமதிக்கிறேன். அரபிக் கடலில் ஜன்ஜீராவைவிட பலமான கடல்கோட்டை சிந்து துர்க்கம். அத்தகைய தளத்தைத் தருகிறேன். அதற்கே ஒரு லக்ஷம் கொடுக்க லாம்'' என்றாள் ராணி.

''எ போர்ட் காண்ட் ஃபைட் (கோட்டை சண்டை போடாது)'' என்று கூவினான் இங்க்லண்ட்.

''ஓ எஸ் இட் கேன் (சண்டை போடும்)'' என்றான் அனந்த்

''இட் ஹாஸ் பிஃப்டி டூ டவர்ஸ் (அதில் 52 ஸ்தூபிகள் இருக்கின்றன)'' என்றான் துலாஜி.

''அவற்றில் 52 பீரங்கிகளும் இருக்கின்றன'' என்றாள் ராணி.

''காஸண்ட்ரா ஹாவ் த்ரீ ஹண்ட்ரட் அண்ட் எய்ட்டி (காஸண்ட்ராவில் 380 பீரங்கிகள் இருக்கின்றன)'' என்றான் இங்க்லண்ட்.

''ஆனால், காஸண்ட்ரா கோட்டையல்ல'' என்று சுட்டிக் காட்டினான் துலாஜி. அடுத்துக் காஸண்ட்ரா பெருமையும் சிந்து துர்க்கப் பெருமையும் விவாதிக்கப்பட்டன. முடிவில் அனந்த் விட்டுக் கொடுத்தான் டெய்லருக்கு. ''ஆல்ரைட் டெய்லர்; வீ வில் டேக் ஒன் தேர்ட். பட் மாக்ரே வில் பி மை பிரிஸனர் (சரி டெய்லர், மூன்றிலொரு பாகம் வாங்கிக் கொள்கிறேன். ஆனால், மாக்ரே என் கைதி)'' என்றான்.

''ஐ வாண்ட் டு ஹாங் மாக்ரே (நான் மாக்ரேயைத் தூக்கிலிட வேண்டும்'') என்று மிகுந்த ஆவேசத்துடன் கூவினான் டெய்லர்.

அப்பொழுது ஸில்வர் குறுக்கே புகுந்து, ''டெய்லர், நீ எப்பொழுதும் கொலைவெறியன். அனந்த் பணத்தை விட்டுக் கொடுத்திருக்கிறான். அவனுக்கு நீ விட்டுக் கொடுப்பது நல்லது''



என்று அறிவித்தான். அவன் குரலில் அளவுக்கு மீறிய கண்டிப்பு இருந்தது.

என்ன காரணத்தாலோ ஸில்வருக்குப் பணிந்தான் டெய்லர். அன்று மாலை ராணி முன்னதாக ஒரு படகில் சிந்து துர்க்கம் சென்றாள். மறுநாள் காலையில் காஸண்ட்ரா நங்கூரம் எடுக்கப்பட்டு சிந்துதுர்க்கத்தை நோக்கி நகர்ந்தது. வடமேற்கிலிருந்த மலை பிளந்த வழியில் கடல் அலைகளில் கொந்தளித்துச் சீரிய நிலையில் காஸண்ட்ரா சிந்து துர்க்கக் கோட்டைக்குள் நுழைந்து நங்கூரம் பாய்ச்சியது. அங்கு அவர்களுக்கு ராணி சகல வசதிகளையும் செய்திருந்தாள்.

கொள்ளைக்கார மாலுமிகள் சிந்து துர்க்கத்தின் அமைப்பைப் பார்த்துப் பிரமித்தார்கள். இருமுறை டெய்லரும் இங்க்லண்டும் அந்தக் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தார்கள். திடீரென ஓரிடத்தில் இங்க்லண்ட் நின்றான். ''அது யார்?'' என்று ஒரு உருவத்தைக் காட்டிக் கேட்டான்.

''தெரியாது'' என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான் டெய்லர்.

''அது விநோதமாயிருக்கிறது'' என்று கூறி அந்தச் சிலையின் தலையில் இருந்த வண்ணக் கிரீடத்தைத் தொட்டு அசக்கினான் இங்க்லண்ட்.

மெள்ள அசைந்தது அந்தக் கிரீடம். அந்தச் சமயத்தில் எச்சரிக்கைக் குரலொன்று இங்க்லண்டின் முயற்சியைத் தேக்கியது. ''அதைத் தொடாதே!'' என்று ராணியின் அதிகாரக் குரலைக் கேட்டு டெய்லர், இங்க்லண்ட் இருவருமே திரும்பினார்கள். ராணியின் விழிகள் நெருப்பைக் கக்கின!

## அத்தியாயம் - 27

# பெண் சுதந்திரம்!

சிந்து துர்க்கத்தின் கருங்கல் சுவரில் கோயில் போல் சுற்றிலும் வெட்டப்பட்டு, அதன் நடுவே இருந்த அந்தச் சிலையைத் தொட்டதும், தலையிலிருந்த வெள்ளிக் கிரீடத்தை அசைத்ததும் ராணி ஏன் அத்தனை தூரம் சினத்தின் வசப்பட்டாள் என்பதை உணராத டெய்லரும் இங்க்லண்டும், அவளை வியப்புடன் நோக்கினார்கள். வியப்பைச் சிறிது அடக்கிக் கொண்டு, இங்க்லண்ட் கேட்டான்: ''ராணி! ஒரு சிலையைத் தொட்டதற்கு ஏன் இத்தனை கோபம் உனக்கு?''

ராணியின் கண்களில் முதலில் துளிர்த்த கோபம் சிறிதும் அடங்கவில்லையென்பதை அவள் சொன்ன பதிலும் நிரூபித்தது: ''இங்க்லண்ட்! நீ அந்தத் தெய்வத்தைத் தொட்டதையோ கிரீடத்தை அசைத்ததையோ என்னைத் தவிர வேறு யார் பார்த்திருந்தாலும் இத்தனை நேரம் நீ எமலோகத்தில் இருப்பாய். நல்ல வேளை, நான் பார்த்தேன்'' என்ற அவள் சொற்களிலும் கடுமை மிக அதிகமாக இருந்தது.

டெய்லர், ராணியின் சினத்துக்குக் காரணம் புரியாமல் விழித்தான். ''உங்கள் நாட்டில் சிலையைத் தொடுவது அத்தனை குற்றமா?'' என்று வினவவும் செய்தான்.

ராணியின் பதில் ரத்தினச் சுருக்கமாய் இருந்தது. ''தொடும் சிலையைப் பொறுத்தது'' என்று.

''இது என்ன அப்பேர்ப்பட்ட சிலை? விச் காட் ஈஸ் இட்? (இது எந்தத் தெய்வம்?)'' என்று வினவினான் இங்க்லண்ட்.

''சிவாஜி மகாராஜா!'' என்றாள் ராணி அவன் அறியாமையை உணர்ந்ததால் சிறிது சினம் தணிந்து.

''சிவாஜி ஈஸ் நாட் காட் (சிவாஜி கடவுள் இல்லை)'' என்றான் இங்க்லண்ட்.



''நாட் டு யூ. பட் டு அஸ் ஹி ஈஸ் எ காட் (உங்களுக்கல்ல; ஆனால், எங்களுக்கு அவர் கடவுள்)'' என்ற ராணி மேலும் சொன்னாள்: ''ஹிந்து மதம் அழிய இருந்த காலத்தில் தோன்றிய தெய்வம் அவர். அவர் இல்லாவிட்டால் மகாராஷ்டிரர்களுக்கு இன்றுள்ள சாம்ராஜ்யம் கிடைத்திராது. இந்துக்கள் கதி அதோ கதி ஆகியிருக்கும். ஹி ஈஸ் அவர் ஸேவியர் (அவர் எங்களைக் காப்பாற்றியவர்)'' என்றும் விளக்கினாள்.

அதற்குப் பிறகு மூவருமே சிறிது மௌனம் சாதித்தார்கள். இங்க்லண்டே அந்த மௌனத்தைக் கலைத்து, ''ஸிஸ்டர்! வி ஆர் ஸாரி டு ஹாவ் அபெண்டட் யுவர் ஸென்டிமெண்ட். பட் திஸ் ஹியர் ஐடல் லுக்ஸ் லைக் எ ஸெய்லர் அண்ட் சிவாஜி வாஸ் நாட் ஒன் (சகோதரி! உங்கள் தெய்வீக நம்பிக்கைக்கு அபசாரம் விளைவித்ததற்கு வருந்துகிறோம். ஆனால், இங்குள்ள இந்தச் சிலை ஒரு மாலுமி மாதிரி இருக்கிறது. சிவாஜி மாலுமி இல்லையே)'' என்றான்.

ராணியின் முகத்தில் கோபம் மறைந்தது. பெருமை அதில் நிலவியது. ''யூ ஆர் ராங் இங்க்லண்ட்! சிவாஜி வாஸ் தி கிரேட் டெஸ்ட் செய்லர் ஆஃப் அவர் டைம் (தவறு இங்க்ண்ட். சிவாஜி நமது காலத்திய சிறந்த மாலுமி)'' என்று கூறிய ராணி மேலும் தொடர்ந்து, ''இங்க்லண்ட், டெய்லர்! யாரும் அசைக்க முடியாத மொகலாய சாம்ராஜ்யத்தை அசைத்தபோதே கடலால்தான் கரையைக் காப்பாற்ற வேண்டும் என்று சிவாஜி தீர்மானித்தார். அதனால்தான் கடற்கரை ஓரமாக இருந்த பல கோட்டைகளைப் பிடித்தார். இந்தக் கோட்டையை அதனால்தான் கட்டினார். அவர் கைகளைக் கொண்டே கட்டினார். கூலிகளோடு சரியாக அவரும் கற்களையும், கட்டுச் சோற்றையும் தலையில் சுமந்து சென்றார்.''

இதைச் சொன்ன ராணியின் கண்களில் கனவு படர்ந்தது:

''இங்க்லண்ட்! தமிழில் கதை ஒன்றிருக்கிறது. உனக்குத் தெரியுமா?'' என்று கனவில் பேசுவது போல் கேட்ட ராணி, அவன் பதிலுக்குக் காத்திராமல், ''சிவபிரான் கூலிக்காகப் பிட்டுக்கு மண் சுமந்தாராம். இங்கு பிட்டுகூடக் கொடுப்பார் இல்லை. சிவாஜி மகாராஜர் கல் சுமந்தார். கடவுள் உட்பட பெரிய காரியங்களைச்

சாதிப்பவர்கள் எந்தப் பணியையும் மரியாதைக் குறைவாக நினைப்பதில்லை. இட் ஈஸ் கிவன் டு த பெட்டி டு திங்க் இன் டர்ம்ஸ் அப் எ கிரேட் ஜாப் அண்ட் எ ஸ்மால் ஜாப் (சின்ன மனிதர்கள் சில பணிகளைப் பெரிதாகவும் சிலவற்றைச் சிறியதாகவும் நினைக்கிறார்கள்.) ஆகையால் சிவாஜி மகாராஜா தமது புத்தியால் திட்டமிட்டுக் கையால் கட்டியது இந்தக் கோட்டை. ஆகவே அவருக்கு இதில் ஒரு கோயில் அமைத்தோம். மாலுமி போன்ற உடையும் அளித்தோம். இந்தக் கோயிலைக் கட்டியது அவரது மகன் ராஜாராம்'' என்று விளக்கினாள்.

ராணியின் கனவுரை மேலும் தொடர்ந்தது: ''இங்கலண்ட்! *''இந்தக் கோட்டை உங்கள் கணக்கில் 48 ஏக்கர் விஸ்தீரண முள்ளது. இரண்டு மைல் சுற்றளவுள்ளது. இங்குள்ள ஸ்தூபிகள் மீது ஏற 45 சுழற்படிகள் இருக்கின்றன. இப்பேர்ப்பட்ட கோட்டை யில் பவானி, மஹாதேவ், ஜரிமாயி, மகாபுருஷர் இவர்கள் கோயில்களும் இருந்தாலும் சிவாஜி மகாராஜாவின் சிலை மட்டுமே சாளக்கிராமக் கல்லால் கட்டப்பட்டது. நீ தொட்ட வெள்ளிக் கிரீடம் ராஜாராமே செய்தது. அதுவும் கிட்டத்தட்ட மாலுமிகளின் குல்லாய் மாதிரி இருக்கிறதைக் கவனியுங்கள். இந்தக் கோட்டையின் வெளிச்சுவரில் சிவாஜி மகாராஜா வழிபட்டு வந்த மாருதி சிலை இருக்கிறது. இத்தனை கோயில்களில் சிவாஜி மகாராஜாவை மாத்திரம் யாரும் தொடக்கூடாது என்ற நிபந்தனை இருக்கிறது. நேபாளம் முதலிய வடநாடுகளிலிருந்து வருகிறவர்கள் அவர்கள் தேச வழக்கப்படி மற்ற தெய்வங்களைக் கையால் தொட்டும் அணைத்தும் வழிபடலாம். ஆனால், சிவாஜி மகாராஜாவை யாரும் தொடமுடியாது. அப்பேர்பட்ட சிலையைத் தொட்டாய். கிரீடத்தை அசக்கினாய். மகா அபசாரம்!''

இதற்குப் பிறகு உணர்ச்சிகளை ஓரளவு அடக்கிக் கொண்ட ராணி, ''தெரியாமற் செய்த குற்றம், மன்னிக்கத் தகுந்தது. இன்றிரவு மகாராஜாவுக்கு அபிஷேகம் நடக்கும். நீங்களும் வந்து பாருங்கள்'' என்று கூறினாள்.

''எதற்கு அபிஷேகம்?'' என்று கேட்டான் டெய்லர்.

* Maharashtra State Gazetteer-Ratnagiri Dt. Page.770 - subhead, 'Malavan Sindhudurg.'



''டு த ஸக்ஸஸ் ஆஃப் அவர் எண்ட்ரப்ரைஸ் (நமது திட்டத்தின் வெற்றிக்கு)'' என்றாள் ராணி. ''நமக்கு வெற்றி நிச்சயம். பிரிட்டிஷ் கம்பெனிக் கப்பல்கள் இனி நமது வசம்'' என்றும் சொன்னாள் ராணி.

அவள் குரலிலிருந்த உறுதியைக் கவனித்த இங்க்லண்டும் டெய்லரும் பிரமித்தார்கள். ''ராணி! இனி நாங்கள் எந்தச் சிலையையும் தொடுவதில்லை'' என்று உறுதியும் கூறிவிட்டுக் கோட்டையைச் சுற்றிப் பார்க்கச் சென்றார்கள். ராணி, மகாராஜா வின் கிரீடத்தைச் சரிப்படுத்தி அவர் கால்களில் தலையை வைத்து வணங்கிவிட்டுச் சிந்து துர்க்கத்தின் வாயிலை நோக்கிச் சென்றாள்.

அன்று காலை மிகவும் ரமணீயமாயிருந்தது. சூரியன் நன்றாகவே எழுந்துவிட்டதால் பனிகூட நன்றாக விலகி இதமான உஷ்ணம் அவள் கன்னங்களுக்குப் புது மெருகைக் கொடுத்தது. கடல் காட்டிய விந்தைகளைப் பார்த்துக் கொண்டே கோட்டை வாசலுக்கு வந்த ராணி, அதன் பக்கவாட்டில் சென்று அங்கிருந்த ஒரு சிறு படகில் ஏறிக் கோட்டையின் மறுபக்கம் சென்று அங்கிருந்த பழைய அறை ஒன்றுக்குள் நுழைந்தாள்.

அங்கு எப்பொழுதும் போல் இருந்த தனது குளிக்கும் சீலையைக் கண்டு மகிழ்ந்து இடைச் சீலையைக் களைந்து அந்த நீராட்டக் குட்டைச் சீலையை மகாராஷ்டிரப் பெண்களின் பாணியில் மூலக்கச்சமாக அணிந்து மார்பை மறைத்துக் கழுத்தில் இறுகச் சுற்றிக் கொண்டாள். பிறகு வெளியே வந்து பாறைகளில் இறங்கி அலைகளில் மூழ்கி எழுந்து கடலில் கைமார் போட்டு நீந்திச் சென்றாள்.

அவளுக்கு முன்பே கொள்ளைக் கப்பலின் வெள்ளை மாலுமிகள் பலரும் கடலில் நீந்திக்கொண்டிருந்தார்கள். அந்தப் பலிஷ்டர்களுக்கு இணையாக ராணியும் நீந்தினாள். சில வேளை களில் அவள் வேகத்தைப் பிடிக்கமுடியாத வெள்ளைக்கார மாலுமிகள் வியப்பின் வசப்பட்டார்கள். சில சமயங்களில் நீருக்குள் மறைந்து நீந்தினாள் ராணி. சில சமயங்களில் திடீரென வெளியே வந்து மல்லாந்து வாயிலிருந்து நீரை வாணம்போல் ஊதினாள். கால்களை உதைத்து வேகமாக மல்லாந்த நிலையிலும் நீந்தினாள்.

அவள் நீந்தியதைக் கண்டு சில மாலுமிகள் மலைத்தார்கள். சிலர் அழகைக் கண்டு மலைத்தார்கள். சிலர் அவள் நீச்சல்

லாகவத்தைக் கண்டு மலைத்தார்கள். இவர்கள் மட்டுமல்ல மலைத்தது. சிந்து துர்க்கத்தின் சுழற்படிகளில் ஏறிக் கோட்டை மதிலின் மீது ஏறிய மற்றும் சில மாலுமிகளும் அவள் நீச்சலைக் கண்டு வியந்து, வாயைப் பிளந்துகொண்டு நின்றார்கள்.

அவர்களில் ஒரு மாலுமி சொன்னான்: ''ஷீ ஈஸ் எ ஃபிஷ் (அவள் ஒரு மீன்)'' என்று.

இன்னொருவன் ஆட்சேபித்தான். ''நோ! ஷீ ஈஸ் எ ஷார்க் (இல்லை. அவள் ஒரு சுறா)'' என்று கூறினான்.

''ஷார்க் ஆல்ஸோ ஈஸ் எ ஃபிஷ் (சுறாவும் மீன்தான்)'' என்று இடைபுகுந்தான் இன்னொருவன்.

''வாட்எவர் ஷீ ஈஸ் ப்யூடிஃபுல் (அவள் எதுவாயிருந்தாலும் அழகாயிருக்கிறாள்)'' என்றான் மற்றொருவன்.

இப்படிப் பலரும் தன்னைப் பார்த்ததையோ பார்த்து விமரிசித்ததையோ பற்றி சிறிதளவும் கவலைப் படாமல் நீந்திய ராணி, சூரியன் உச்சிக்கு வந்துவிட்டதைக் கவனித்து மீண்டும் சிந்து துர்க்கத்தின் பெரும் சுவர்களை நோக்கிச் சென்றாள். அவளைத் தொடர்ந்து நீந்த முற்பட்டவர்களைத் தனது கையசைப்பினால் எச்சரித்து நிறுத்திவிட்ட ராணி திடீரென நீரில் மூழ்கிவிட்டாள். அவள் எங்கு கிளம்புகிறாள் என்பதைக் கொள்ளைக்கார மாலுமிகள் பார்த்துக் கொண்டு நீந்தினார்கள், அவளுடன் போட்டி போட. ஆனால், மூழ்கிய ராணி கிளம்பவில்லை. அடியோடு நீரில் மறைந்துவிட்டாள். இதனால் திகைத்த கொள்ளையர்கள் தங்கள் வெள்ளைச் சடலங்களைக் கோட்டையின் வாயிலை நோக்கிச் செலுத்தினார்கள்.

எல்லாரையும் ஏமாற்றிவிட்ட உற்சாகத்துடன் கோட்டை மதிலுக்கு வெளியிலிருந்த அறைக்கு அருகிலிருந்த பகுதியில் நீரிலிருந்து வெளியே தலையைக் கிளப்பிய ராணி நகைத்தாள் மிக இன்பமாக. பிறகு துரிதமாகப் பாறையில் தொத்தி ஏறி வந்து அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டாள். சாத்திக் கொண்டு ஈர ஆடையைக் களைந்த ராணி, யாரும் இல்லையென்ற தைரியத்தில் உடலை நன்றாகத் துடைத்துக் கொண்டு பிறந்த மேனியில் அந்த அறையில் உலாவினாள். பிறகு ஏற்கெனவே



களைந்து வைத்த உலர்ந்த உடையைத் தரித்துக் கொண்டாள். தலையை நன்றாகத் துவட்டிக் கொண்டாள். பிறகு வெளியே வந்து கதிரவன் உஷ்ணத்தில் தனது கூந்தலை ஆற்றினாள். இடம் ஏகாந்தமாகையால் தனது மேலாடையையும் சிறிது நீக்கி மார்புக்கும் சிறிது உஷ்ணத்தைக் கொடுத்தாள். ''நல்லவேளை, இங்கு யாரும் இல்லை. இன்றாவது நான் சுதந்திரமாக இருக்க முடிகிறது'' என்று கூறிக்கொண்டு திறந்த அறைக் கதவை மூட முயன்றாள். முயன்றவள் சீற்றத்துக்கு இலக்கானாள். அவள் நினைத்தபடி ஏகாந்தம் இல்லை அங்கு. அந்தப் பழைய சோம்பேறி கதவின் மறுபுறமிருந்த பாறையில் ஒருக்களித்துச் சாய்ந்து நன்றாக உறங்கிக் கொண்டிருந்தான்.

'அவன் எப்பொழுது வந்தான்? எப்படி வந்தான்? தான் மார்பைக் கதிரவனிடம் உஷ்ணப்படுத்திக் கொண்டிருந்ததைப் பார்த்திருப்பானோ?' என்று பல யோசனைகள் அவள் இதயத்தை ஊடுருவிச் சென்றதால் அவனை அணுகிப் பார்த்தாள் அவள். உண்மையாகவே தூங்குகிறான் என்பது அவன் ஒரே சீராக விட்டுக் கொண்டிருந்த பெருமூச்சால் தெரியவே, அவனிடம் பரிதாபப்பட்டு, ''பாவம் அலுத்திருக்கிறார்'' என்று கூறிக்கொண்டு அவன் தலைமாட்டில் உட்கார்ந்து கொண்டாள். ஆனால், என்ன ஓர் ஏமாற்றம்! அவள் நினைத்தபடி அவன் உறக்கம் உண்மை உறக்கமல்ல. அதற்குச் சான்றாக அவன் கை அத்தனை தூக்கத்திலும் அவள் இடையை நாடி வளைத்தது. ''பெண்களுக்குச் சுதந்திரம் என்பது கிடையாது போல் இருக்கிறது'' என்று சொல்லிக் கொண்டே ராணி பெருமூச்செறிந்தாள்.

## அத்தியாயம் - 28

# ஆகாய ராணி!

சுதந்திரம் என்பது சுகம். முட்களிடை மலரும் ரோஜா புஷ்பம். இறுதியில் கிடைப்பது சுகமானால், மணம் வீசும் மலரானால், இடையில் ஏற்படும் இம்சைகளை ஏற்கலாம். விளைவு விபரீதமானால், மலரில்லாத வெறும் முட்கள் கொண்ட கட்டையானால், அது சுதந்திரமாகாது. சுதந்திரம் என்ற பெயரில் கிடைக்கும் புதுத் தளை அது. அது விரும்பத் தக்கதல்ல. அதில் சுகம் இல்லை, சுகத்துக்கான பாதையுமில்லை. நல்லதுகூட அளவுடன் இருக்கவேண்டும். சுதந்திரத்துக்கும் இது பொருந்தும். ''அதிஸர்வத்ர வர்ஜயேத்''- அதிகப்படியான எதுவும் கைவிடத் தகுந்தது- என்பது சாஸ்திரம்.

மலைப்பாறையில் - சிந்து துர்க்கத்தின் வெளிப்புற அறையின் பக்கத்தில் சாய்ந்து பொய்த் துயில் கொண்ட இந்திரஜித் அனந்தின் மனத்திலும் இத்தகைய எண்ணங்களே ஓடின. அவன் தனது கையால் ராணியின் இடையைச் சுற்றியபோது அவள் ''பெண்களுக்குச் சுதந்திரம் என்பது கிடையாது போல் இருக்கிறது'' என்று சொல்லிப் பெருமூச்செறிந்ததையும் அந்தப் பெரு மூச்சிலும் இன்பச் சாயை இருந்ததையும் கவனித்த இந்திரஜித் அனந்த், ராணியின் சுதந்திரத்தை மேலும் பறிக்க எண்ணி வளைந்த கையை அதிகமாக இடையில் ஒட்டி அவளை அதிகமாகச் சிறைப்படுத்தினான்.

அவன் சேஷ்டையைக் கவனித்த ராணி உட்கார்ந்த இடத்திலிருந்து விலகவில்லை. ''கையை எடுக்கிறீர்களா இல்லையா?'' என்று கடுமையுடன் கேட்டாள்.

''எடுக்காவிட்டால்?'' கண்களைத் திறக்காமலே கேட்டான் இந்திரஜித்.

''கையை உடைத்துவிடுவேன்!'' ராணியின் குரலில் கடுமை அதிகமாகியது.



இந்திரஜித் அனந்த் கண்களை விழிக்காமலே அவளை நன்றாக நெருங்கி அவள் மடியில் தலையை வைத்துக் கொண்டான். ''இப்போது என்ன செய்வாய்?'' என்று வினவினான்.

அவள் பதில் சொல்லவில்லை. குனிந்து அந்தத் துஷ்டனை நோக்கி இதழ்களை விரித்துப் புன்னகை கொண்டாள். ''என்ன கேள்வி இது?'' என்றும் கேட்டாள்.

''ஏன், கேள்விக்கென்ன?''

''அர்த்தமற்ற கேள்வி.''

''இல்லை, கை வளைந்தது; அதை உடைப்பதாய்ச் சொன்னாய். தலை படுத்தது. அதையும் உடைத்துவிடுவாயா என்பதற்காகக் கேட்டேன்!''

இதைக் கேட்ட ராணி அவன் தலைக் குழல்களைக் கோதிவிட்டு, ''உங்களுக்கு அதிக சுதந்திரம் இல்லைபோல் தெரிகிறது'' என்றாள் லேசாக நகைத்து.

''இல்லையென்று யார் சொன்னது?'' என்று கேட்டான், இந்திரஜித் படுத்தபடி.

ராணி குனிந்த தலையைச் சிறிது நிமிர்த்தி முகத்தில் விழுந்த குழல்களை விலக்கிக் கொண்டாள். அதைத் தொடர்ந்து, ''கை வளைந்தது என்கிறீர்கள். தலை படுத்தது என்கிறீர்கள். உங்கள் இஷ்டப்படி எதுவும் நடக்காது போல் இருக்கிறது?'' என்று வினவினாள்.

இந்திரஜித் அனந்த் கண்களை இறுக மூடிக் கொண்டான் பதிலுக்கு.

''ஏன் கண்களை அப்படி இறுக மூடுகிறீர்கள்?'' என்று ராணி கேட்டாள்.

''சுதந்திரம் அடைய...'' இந்திரஜித் பதில் சொன்னான் திடமாக.

''சுதந்திரத்துக்கும் நீங்கள் கண்ணை இறுக மூடிக்கொள்வதற்கும் என்ன சம்பந்தம்?''

''உன்னைப் பார்க்காமல் இருக்கும்போதே கையும் தலையும் இஷ்டப்படி நடக்கின்றன. உன்னைப் பார்த்துவிட்டால் என் கதி அதோ கதிதான்.''

ராணியின் கண்கள் பொய்க் கோபத்தைக் கக்கின. அவள் இரண்டு கைகளின் விரல்களும் அவன் முகத்தில் பதிந்து அவன் கண்களைப் பலவந்தமாகத் திறந்தன.

''இப்பொழுது என்ன செய்வீர்கள்?'' என்ற ராணியின் கண்கள், வலுக்கட்டாயமாகத் திறக்கப்பட்ட அவன் கண்களை நோக்கின, நகைத்தன.

இந்திரஜித்தின் வலிய உதடுகளில் புன்னகை விரிந்தது.

''ஒன்றும் செய்ய மாட்டேன்!'' என்று அவன் உதடுகளும் முணுமுணுத்தன.

''ஏன்?'' ராணி கேட்டாள் குனிந்த வண்ணம்.

''கண்களின் சுதந்திரமும் போய்விட்டது.''

''ரொம்பக் கெட்டிக்காரர் என்று உங்களுக்கு நினைப்பு?''

''கிடையாது. அது போய்ப் பல நாட்களாயிற்று!''

''சரி, எழுந்திருங்கள்.''

''முடியாது.''

''மடியில் படுத்திருக்கிறீர்கள்.''

''தெரியும்.''

''இது பட்டப் பகல்.''

''அப்படியா?''

''ஆம். வெளிச்சம் கூடத் தெரியவில்லையா?''

இந்திரஜித் அனந்த், ''சிறிது தெரிகிறது'' என்றான் மெதுவாக.

''சிறிது என்றால்?'' ராணியும் மெதுவாக வினவினாள் அக்கம் பக்கத்தில் யாரும் இல்லாதிருந்தும்.

''சாதாரண விளக்கின் வெளிச்சம் தெரிகிறது'' என்றான் இந்திரஜித்.

''உளறாதீர்கள். சூரிய வெளிச்சம் பலமாயிருக்கிறது.''

''தெரியவில்லை.''

''குருடா நீங்கள்?''

''இப்பொழுது குருடுதான். அதைப் பெரியவர்களே சொல்லியிருக்கிறார்கள்.''



''பெரியவர்களை எதற்காக இழுக்கிறீர்கள்?'' என்று ராணி சினத்தை வரவழைத்துக் கொண்டாள் குரலில்.

''இந்த மாதிரி நிலைக்கு அவர்கள் பெரிதும் உதவுவார்கள்'' என்றான் அனந்த்.

''எப்படி?''

''காதலுக்குக் கண்ணில்லை என்று அவர்கள்தான் சொல்லியிருக்கிறார்கள்'' என்ற இந்திரஜித் அனந்த் தலையைச் சிறிது புரட்டினான் அவள் மடியில்.

''உம்!'' என்று எச்சரித்தாள் ராணி.

''என்ன உம்?'' என்றான் அனந்த்.

''வெளிச்சம் இருக்கிறது என்றேன்'' என்று ராணி எச்சரித்தாள் மீண்டும்.

''அன்றுபோல் செய்துவிடு''

''என்றுபோல்?''

''அன்று விளக்கு வெளிச்சத்தை மறைக்க உன் குழல்களை இருபக்கமும் திரையாக விடவில்லை?''

அந்த இரவை நினைத்துப் பார்த்தாள் ராணி. அதே நிலை தான் இன்றும். ஆனால், விளக்கு வெளிச்சத்துக்கும் பகலவன் கிரணங்களுக்கும் வித்தியாசமில்லையா என்று நினைத்தாள். ''இது பகல் என்பதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள்'' என்று சொன்னாள்.

''அதனால் என்ன?'' என்று கேட்டான் இந்திரஜித் அனந்த்.

''இரவல்ல'' என்று அழுத்திச் சொன்னாள் ராணி.

''இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?'' என்று வினவினான் இந்திரஜித்.

''அதுகூடத் தெரியாதா?''

''எப்படித் தெரியும்?''

''ஏன்? அதிலென்ன கஷ்டம்?''

''குருடனுக்குப் பகல், இரவு இரண்டும் ஒன்றுதானே?''

இதைக் கேட்ட ராணியின் கோபம் முன்னைவிட அதிகமாயிற்று. ''பலே பேர்வழி நீங்கள்! இங்கு யாரும் இல்லை என்ற துணிச்சல்'' என்று கூறி அவன் தலையைத் தூக்கி அவனை உட்காரவும் வைத்தாள். திரும்பி அவள்மீது விழுந்துவிடும் நிலையில், அரைகுறையாகப் பாறைச் சரிவில் உட்கார்ந்தான் அனந்த் - கண்களைக் கசக்கிக் கொண்டு. ''இருக்கிறார்கள்'' என்ற ஒரு வார்த்தையை மட்டும் உதிர்த்தான், தலையை ஒருமுறை உலுப்பிவிட்டு.

ராணியின் கண்களில் கேள்விக் குறி எழுந்தது. அடர்ந்த கறுத்த புருவங்கள் சிறிது மேலே ஏறின. அவற்றின் இடையில் இருந்த சிறு இடத்தில் மூன்று சுருக்கங்கள் மிக அழகாக உருவெடுத்தன. ''இருக்கிறார்களா?'' என்றும் கேட்டாள் ராணி.

''ஆம்'' என்றான் இந்திரஜித்.

''யார்?'' ராணியின் கேள்வியில் உஷ்ணம் இருந்தது.

''நமது நண்பர்கள். ஆனால், உன்னைப் பார்த்திருக்க மாட்டார்கள்.

ஏன்?''

''பாறையின் அப்பால் இருக்கும் குழியில் படுத்திருக்கிறார்கள்.''

இதைக் கேட்ட ராணி சட்டென்று எழுந்திருந்து அறையைச் சுற்றிச் சென்றாள். அறைக்குப் பின்பு இருந்த இரு மலைப்பாறைகளுக்கும் இடையிலிருந்த பள்ளத்தில் காப்டன் ஸ்டாண்டனும் லெப்டினண்ட் ஸ்மித்தும் கைகால் கட்டப்பட்டு உருண்டு கிடந்தார்கள். அவர்களைக் கண்ட ராணி பல விநாடிகள் பிரமித்து நின்றாள். ''இப்படி வாருங்கள்... உங்களைத்தான்'' என்று பெரிதாகக் குரல் கொடுத்தாள்.

அந்த அழைப்பு தனக்குத்தான் என்பதை உணர்ந்த அனந்த் எழுந்து அவள் இருக்குமிடத்தை அடைந்தான். ''இவர்கள் கட்டுகளை அவிழ்த்து விடுங்கள்'' என்று ராணி உத்தரவிட, அதை அனந்த் நிறைவேற்றியதும் ஸ்டாண்டனும் ஸ்மித்தும் மெள்ள எழுந்து நின்றார்கள். ஆனால், இருவரும் பேசவில்லை. ''இவர்கள் எப்படி இங்கு வந்தார்கள்? ஏன் வந்தார்கள்? சிறையிலிருந்து எப்படித் தப்பினார்கள்?'' என்று சரமாரியாகக் கேள்விகளைத் தொடுத்தாள் ராணி.



இந்திரஜித் அனந்த், ''ரத்னா!'' என்று ராணியின் பெயரைச் சொல்லிப் பேச்சைத் துவக்கியதும் இரு வெள்ளையரும் சுற்றுமுற்றும் பார்த்தார்கள்.

''என்ன பார்க்கிறீர்கள்?'' என்று கேட்டான் இந்திரஜித்.

''ரத்னா யார்? எங்கே?'' என்றான் ஸ்மித்.

''அதைப் பற்றிக் கவலையில்லை. இங்கு எப்படி வந்தீர்கள்?'' என்று வினவினாள், ராணி.

''படகில் வந்தோம்'' என்றான் ஸ்டாண்டன்.

''ஏது படகு?''

''பாண்டவ கட் கரையில் இருந்தது'' என்றான் ஸ்டாண்டன்.

''உங்களை யார் விடுதலை செய்தது?''

''சிறை என்று ஏதுமில்லை. எங்கள் காயம் ஆறிவிட்டதால் டாக்டர் நடக்கச் சொன்னார்'' என்றான் ஸ்மித்.

''அது தான் தவறு'' என்றான் இந்திரஜித்.

''எது?'' ஸ்டாண்டனின் குரலில் எரிச்சல் இருந்தது.

''காயத்தை டாக்டர் ஆற்றியது, கட்டைப் பிரித்தது, நடக்கச் சொன்னது'' என்று விளக்கினான் இந்திரஜித்.

''சரி, பிறகு என்ன நடந்தது?'' என்று ராணி கேட்டாள்

''இங்கு நீங்கள் வருவீர்கள் என்று நினைத்தோம்'' என்று ஸ்டாண்டன் சொன்னான்.

''ஆம். வந்தேன்'' என்றாள் ராணி. அவள் குரலில் உக்கிரம் அதிகமாக இருந்தது.

அந்தச் சமயத்தில் இடை புகுந்த இந்திரஜித், ''கவலைப்பட வேண்டாம். உன்னை இவர்கள் பார்க்கவில்லை'' என்றான்.

''எப்படித் தெரியும் உங்களுக்கு?'' என்று வினவினாள் ராணி.

''நீ நீந்தப் போனதும் இவர்கள் இங்கே படகில் வந்தார்கள். அதற்குச் சற்று முன்பு நான் வந்தேன், நிம்மதியாக உறங்கலாமென்று. இவர்கள் முதல் தடவை போல் நிம்மதியைக் குலைக்கப் போகிறார்கள் என்று எண்ணி, கட்டி இந்தப் பள்ளத்தில் உருட்டி வைத்தேன்'' என்று விளக்கினான் இந்திரஜித்.

இந்திரஜித்தை ஏதோ கேட்க வாயெடுத்த ராணி சட்டென்று அடக்கிக் கொண்டாள். அனந்த் அவர்களை நோக்கி, ''இனி நீங்கள் பாண்டவ கட் போகலாம். இல்லையேல் இன்றிரவு சிவாஜி மகாராஜாவுக்கு அபிஷேகம் இருக்கிறது. அதைப் பார்க்க சிந்து துர்க்கத்தில் தங்கலாம்'' என்று கூறினான்.

''வீ டோண்ட் ரிகெக்னைஸ் சிவாஜி அஸ் எ மகாராஜா (நாங்கள் சிவாஜியை மகாராஜாவாக ஒப்புக்கொள்ளவில்லை)'' என்ற ஸ்டாண்டன் தனது லெப்டினன்டைப் பார்த்தான்.

''இல்லை'' என்பதற்கு அடையாளமாக ஸ்மித்தும் தலையை விடுவிடுவென்று ஆட்டினான்.

''சரி, அப்படியானால் பாண்டவ கட்டுக்குப் போங்கள்'' என்றான் அனந்த்.

இரு வெள்ளையர்களும் முனகிக் கொண்டு கோட்டைச் சுவரின் ஒரு பக்கத்தை நோக்கி நடந்து மறைந்தார்கள். சில விநாடிகளில் மீண்டும் ஓடி வந்து, ''எங்கள் படகைக் காணோம்'' என்று கூறி அனந்தைச் சுடும் விழிகளால் நோக்கினார்கள்.

''ஐ ஆம் ஸாரி'' என்றான் அனந்த்.

''வாட் டிட் யூ டு வித் தட் போட் (அந்தப் படகை என்ன செய்தாய்?)'' என்று வினவினான் ஸ்டாண்டன்.

''அனுப்பி விட்டேன்'' என்றான் அனந்த்.

''எங்கே?''

''பாண்டவ கட் கரைக்கு.''

''இப்பொழுது நாங்கள் எப்படிப் போவது?'' என்று வினவினான் ஸ்மித்.

இந்திரஜித் தீர்க்காலோசனையுடன் தனது முகவாய்க் கட்டையைத் தடவிக் கொண்டான். ''ஆல் ரைட் கம்'' என்று இருவரையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு மலைச்சரிவில் இறங்கினான். சட்டென்று திரும்பி ஒவ்வொருவராகத் தூக்கிக் கடலில் விட்டெறிந்தான். அந்த அசுரச் செயலைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்த ராணியிடம் வந்து, ''டோண்ட் ஓர்ரி. ஸீ 'தே



ஸ்விம் லைக் ஃபிஷ் (கவலைப்படாதே. பார், அதோ அவர்கள் மீனைப் போல் நீந்துகிறார்கள்)'' என்று கடலில் நீந்திச் சென்ற காப்டனையும் ஸ்மித்தையும் காட்டினான்.

ராணியின் முகத்தில் விவரிக்க இயலாத பிரமை இருந்தது. ''அந்த இருவரையும் அத்தனை லாகவமாக எப்படித் தூக்கி னீர்கள்?'' என்று வினவினாள், பிரமை குரலிலும் ஒலிக்க.

''இப்படித்தான்'' என்றான் அனந்த். அடுத்த விநாடி ராணி அவன் இரு கைகளில் சிக்குண்டு உயர்ந்தாள். ஏதோ இரண்டு இரும்புத் தூண்கள் தன்னை அந்தரத்தில் தாங்குவது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது ராணிக்கு. அவளைத் தலை நிமிர்ந்து நோக்கிய அனந்த், ''இப்பொழுது நீ கடல் ராணி அல்ல'' என்றான்.

அந்தரத்தில் இருந்து அவனை நோக்கிய ராணி ''அப்படி யானால் நான் யார்?'' என்று வினவினாள்.

''ஆகாய ராணி'' என்றான் அனந்த்.

அது உண்மை என்பதையும் நிரூபித்தான். நிரூபணத்தின் முறை படு பயங்கரமாக இருந்தது!

## அத்தியாயம் - 29

# புதிர்கள்!

ஏதோ குழந்தையைத் தூக்குவது போல் அலட்சியமாக ராணியைத் தனது இரு கைகளாலும் தலைக்கு மேல் தூக்கி அவளுக்கு ஆகாய ராணி என்ற பட்டத்தையும் சூட்டிய அனந்த் தனது வர்ணனையை நிரூபிக்க அவளை அப்படியே ஆகாய மார்க்கத்தில் கடலை நோக்கி விட்டெறிந்தான்.

உச்சி வேளை சூரியனின் கதிர்களில் பளபளத்துத் தேவ லோகத்திலிருந்து வேகமாக இறங்கி வரும் அப்ஸரஸ் போல் மின்னிக் கொண்டு கடலுக்குள் இறங்கிவிட்ட ராணியை நோக்கிய அனந்த், பாறையின் முகப்புக்கு வந்து தானும் கடலுக்குள் தலை கீழாகப் பாய்ந்தான். அப்படிப் பாய்ந்தவன் மறு விநாடி நீர் மட்டத்துக்கு மேல் வந்து தன்னருகில் நீரில் கால்களை உதைத்து ஆரம்ப நாள் போலவே அலைகடல் தாமரையாக நின்றிருந்த ராணியை நோக்கி, ''ராணி! நீந்திச் செல். நானும் உடன் வருகிறேன்'' என்று கூறி நீரில் சரேலென்று மூழ்கினான்.

அவன் எதற்காகக் கடல் நீரில் விட்டெறிந்தான், எதற்காக எங்கு நீந்தி விரையச் சொல்கிறான் என்பதை அறியாத ராணி, ஓரளவு அவன் எண்ணத்தை ஊகித்துக் கொண்டு பதிலேதும் சொல்லாமலும் கேள்வி ஏதும் கேட்காமலும் நீருக்குள் மூழ்கி பாண்டவக் கோட்டையை நோக்கி நீந்தினாள். அவள் நீருக்குள் வந்ததும் அனந்த் ஒரு கையால் அவள் இடையை இழுத்து அணைத்துக் கொண்டு ஒரு கையையும் கால்களையும் மட்டும் உபயோகித்து நீந்தினான். நீச்சலில் யாருக்கும் சளைக்காத கடல் ராணியும் அவனுடன் இணைந்து நீந்தினாள் நீருக்குள்.

இணைந்த சமயத்தில் அவன் கை தனது உடலில் செய்த சேஷ்டைகளையெல்லாம் சகித்துக் கொண்டாள். சகித்துக் கொண்டாளா, விரும்பி ஏற்றுக் கொண்டாளா என்பது அவளுக்கே புரிய வில்லையானாலும் அனந்த் தன்னை அனாயாசமாகத் தூக்கி



வெள்ளையர் இருவரையும் எறிந்தது போலவே நீரில் எறிந்து விட்டானே என்ற கோபம் மட்டும் அவளையும் மீறி உள்ளத்தே எழுந்ததால், சில சமயங்களில் அவன் கையைப் பிடித்துத் தள்ளினாள்.

ஆனால், அந்த முரட்டுக் கை விலகுவதாகக் காணோம். திரும்பத் திரும்ப அவளுக்கு இன்ப இம்சைகளைக் கொடுத்துக் கொண்டிருந்தது. சிற்சில வேளைகளில் ஒற்றைக் கை நீச்சலின் கஷ்டத்தின் காரணமாக அது விலகவும் செய்தது. அப்படி அகன்ற சமயத்தில் ராணி கடல் மட்டத்துக்கு கிளம்பி இரு கைகளையும் மாறி மாறிப் போட்டு நீந்தி வெகு வேகமாகச் சென்றாள். ராணி விடுபட்டுப் போனதை உணர்ந்த இந்திரஜித்தும் கடல் மட்டத் துக்கு வந்து அவளைப் பிடிக்க விரைந்தான்.

ஆனால், ராணியைப் பிடிக்க அவனால் முடியவில்லை. முன்னே சென்ற ஸ்டாண்டனையும் ஸ்மித்தையும் தாண்டிச் சென்று விட்ட ராணியின் வேகத்தைத் தவிர, இடையே தாறு மாறாக நீந்திக் குறுக்கே வந்து தன் வேகத்தைத் தடுத்துவிட்ட அந்த இரு வெள்ளைக்காரர்களாலும் வேகம் தடைப்பட்டதால், ராணிக்கு மிகவும் பின்பாகவே அவனால் நீந்த முடிந்தது.

இந்த நீச்சல் போட்டியைக் கோட்டைச் சுவர் மீதிருந்து ரசித்த காஸண்ட்ரா மாலுமிகளும் மால்வான் வீரர்களும் அனந்த் தோல்வியடையத் தொடங்கியதுமே பெரிதும் கரகோஷம் செய்தார்கள். ஆரவாரித்தார்கள். முன்னே சென்று கொண்டிருந்த ராணிகூட அனந்தைப் பார்த்து நகைத்துவிட்டு வேகமாக நீந்திச் சென்று வெகு சீக்கிரம் கரையேறிவிட்டாள். அவள் கரையில் காலை வைத்த சில நிமிடங்களுக்குள்ளாகவே அனந்தும் தரையை அடைந்தானாயினும் அவன் தோல்வியைக் கண்டு சிந்து துர்க்க மாலுமிகள் மட்டுமன்றி பாண்டவர் கோட்டையின் கரையோரத்தி லிருந்த படகோட்டிகளும்கூடச் சிரித்தார்கள்.

ஆனால், அனந்த் யார் சிரிப்பையும் லட்சியம் செய்யாமல் கரையேறியதும் ராணி எங்கே என்று சுற்றுமுற்றும் நோக்கினான். ராணியை எங்கும் காணாததால் எப்படியும் அவள் தென்னஞ் சோலையை அடைந்திருப்பாள் என்ற நினைப்பில் அதை நோக்கி நடந்து அதற்குள் நுழைந்தான். அங்கும் ராணியைக் காணாததால் தனது சட்டையைக் கழற்றிப் பிழிந்து , அதனாலேயே தலையைத்

துவட்டிக் கொண்டான். பிறகு அதைச் சற்று எட்ட இருந்த முந்திரிச் செடி மீது விட்டெறிந்து விட்டு நின்ற வண்ணமே தனது சராய்களைப் பிழிந்து விட்டுக் கொண்டு தென்னஞ்சோலைக்குள் மேலும் நுழைந்தான். சோலையின் பல இடங்களில் திரும்பியும் ஆராய்ந்தும் ராணி சென்ற சுவடு அடியோடு தெரியவில்லை. மணலில் இரண்டொரு இடங்களில் அவள் காலடிகளும் சேலையி லிருந்து சொட்டிய நீரை உறிஞ்சிய திட்டுகளும் தெரிந்தாலும் அவை திடீரென்று மறைந்து விட்டன.

ராணி அத்தனை பட்டப் பகலில் எப்படி அந்தச் சோலையி லிருந்து மறைந்திருப்பாள் என்பதை எண்ணிப் பார்த்தும் விடை காணாததால், அவன் வந்த வழியை நோக்கித் திரும்பிய சமயத்தில்தான் அந்தக் கலுக்கென்ற சிரிப்பு அவன் காதில் விழுந்தது. சிரிப்பொலி கேட்டுத் திடீரென்று திரும்பியவன் கண்களுக்கு அக்கம்பக்கத்தில் இரண்டு முந்திரி மரங்களும் அவற்றை அடுத்து அடர்ந்த தென்னை மரங்களும் தெரிந்தனவே யொழிய ராணி கண்ணுக்குத் தெரியாததால், ''ராணி எங்கிருக் கிறாய்?'' என்று இரைந்து கேட்டான்.

பதில் ஏதும் கிடைக்காவிட்டாலும் பக்கத்திலிருந்து குயிலின் ஒலி ஒன்று கேட்டதல்லாமல் சிவந்த முந்திரிப் பழமொன்றும் அவன் மார்பைத் தாக்கவே, ''அப்படியா சமாசாரம்?'' என்று உரக்கக் கேட்டுக் கொண்டே தாழ இருந்த முந்திரிக் கிளையில் பாய்ந்து அடர்த்தியான இலைகளைப் பிரித்தான். "அவற்றின் மறைவில் ராணி நின்றுகொண்டிருந்தாள். அந்தக் காட்சியில் அனந்த் மெய்மறந்து சிலையென நின்றுவிட்டான்.

ராணி தனது நனைந்த சேலையில் ஒரு பகுதியைக் கட்டிக் கொண்டு மீதி முக்கால் பகுதியைப் பிழிந்து உதறிப் பக்கத்துக் கிளையில் உலர்த்தியிருந்தாள். சேலையின் சின்னஞ்சிறு பகுதி மட்டும் இடையிலும் மார்பிலும் சுற்றப்பட்டு மார்பில் செருகப் பட்டிருந்ததால் அவள் அழகிய மார்பின் எழுச்சி மறைக்கப் பட்டிருந்தாலும், அதன் மேல்பகுதி கழுத்து வரையில் மிக வெண்மையாகக் காட்சியளித்தது. மார்பை மறைக்கச் சேலை இறுக்கப்பட்டிருந்தாலும் இரட்டை அழகுகளின் மேல்புறம் மூன்றாம் பிறைச் சந்திரனைப் போல் அழகாக அவற்றுக்கு விளிம்பு களை அமைத்துத்தானிருந்தது.



சேலை மறைத்திருந்த முக்காலே அரைக்கால் பகுதியும் அந்த விளிம்புகளும் ராகு-கேதுக்கள் சந்திரனின் பெரும் பாகத்தை விழுங்கிய நிலையை நினைவூட்டின. விஷமத்தால் மின்னிய கருவிழிகள் இந்திரஜித்தின் இதயத்தில் உண்டுபண்ணியது கோபமா, இன்பமா? அவனுக்கே புரியவில்லை அது.

இடையில் சுற்றியிருந்த சேலையின் அகலத்தில் பாதி மார்பில் ஏறியிருந்ததால் வெண்ணிறக் கால்கள் முழந்தாளுக்கு மேலும் அரைவாசி தெரிந்ததால் கடல் ராணியின் மெல்லிய கைகளை முழங்காலுக்கு மேலிருந்த இரண்டு வாழைத் தண்டுகள் சரிப்படுத்தி விட்டதையும், அந்தத் தண்டுகளில் தட்டிய சிறிது சிவப்பு, வெட்கத்தால் சிவக்கக்கூடியது, கன்னம் மட்டுமல்ல என்பதையும் நிரூபித்ததால் அவை இரண்டையும் தழுவிவிட அனந்தின் கைகள் துடித்தன. கண்ட கண்கள் இதய வேகத்தை அதிகப்படுத்தின.

அப்படி அவன் தனது அங்கங்களை, முக்கியபப் பகுதிகளை ஊன்றிப் பார்ப்பதை ராணியும் கவனித்து இருக்க வேண்டும். ஆகவே கால்களை ஒன்றின் மீது ஒன்றாக மாற்றிப் போட்டுக் கொண்டு நடன பாணியில் நின்றாள். அதனால் அனந்தின் இதய வேகம் குறைவதற்குப் பதில் அதிகப்படவே செய்தது. கால்களை மாற்றி இணைத்ததால் ஒரு காலின் மேற்பகுதியை மறைத்த சேலை சிறிது அகலவே இந்திரஜித் சுயநிலை, பண்பாடு எல்லாவற்றையும் காற்றில் பறக்க விட்டு ராணியை அணுகி அவள் தோள்களின் மீது கையை வைத்தான். அவள் உலர்த்திக் கொண்டிருந்த சேலையின் முந்தானையால் அவள் முகத்தைத் துடைத்தான். அவள் குழலைப் பிழிந்து முந்தானையைத் தலையில் சுற்றிக் கட்டினான். அந்த நிலையில் அவளைப் பார்த்து, ''ராணி! இப்பொழுது எத்தனை அழகாய் இருக்கிறாய் தெரியுமா!'' என்று கேட்டான்.

ராணி புன்முறுவல் கொண்டாள் ஒரு விநாடி. பிறகு இதழ்களை மறைத்துச் சிரித்தாள் கேலியாக.

''ஏன் சிரிக்கிறாய் ராணி?'' என்று வினவினான் அனந்த்.

''பெண்களைப் பக்குவப்படுத்தப் பலவித வித்தைகளைக் கற்றுக் கொண்டிருக்கிறீர்கள்'' என்ற ராணி முந்திரிக் கிளையில் உட்கார்ந்தாள்.

இந்திரஜித் அவள் எதிரிலிருந்த கிளையில் உட்கார்ந்தான். ''ராணி...'' என்று துவங்கியவன், ஏதும் சொல்லாமல் மௌனியானான்.

''சொல்லுங்கள்!'' ராணி ஊக்கினாள் அவனை.

அவன் பேசவில்லை. எதிரே முந்திரிக் கிளையில் ஆடிக் கொண்டும், தரையை அவ்வப்போது தொட்டுக் கொண்டுமிருந்த ஒரு காலின் தொடையில் கையை வைத்தான். அவள் காலை இழுத்துக் கொள்வுமில்லை, அவன் கையை எடுத்து எறியவும் இல்லை. வாயைத் திறக்கவுமில்லை. ஆகவே அனந்தே அழைத் தான் ராணியை ''ராணி'' என்று.

''என்ன?'' தைரியமாக எழுந்தது அவள் கேள்வி.

''உன்னை ஏன் இங்கே கொண்டு வந்தேன் தெரியுமா?'' என்று வினவினான் இந்திரஜித்.

பதிலுக்குச் சிரித்தாள் ராணி. ''நீங்கள் கொண்டு வந்தீர்களா?'' என்றும் வினவினாள்.

''வேறு யார் கொண்டு வந்தார்கள்?'' குழப்பமிருந்தது அனந்தின் கேள்வியில்.

''நானாக வந்தேன். என் இஷ்டத்தை மீறி யாரும் என்னை எங்கும் கொண்டு செல்ல முடியாது'' என்று ராணி மிக உறுதியுடன் கூறினாள்.

இந்திரஜித் அனந்தின் கண்களில் வியப்பின் சாயை விரிந்தது. ''உன்னைக் கடலில் தூக்கிப் போட்டது யார்?'' என்று கேட்டான் அனந்த்.

''நீங்கள்'' என்றாள் அலட்சியத்துடன்.

''அதனால் தானே நீ இங்கு வர முடிந்தது?'' வினவினான் இந்திரஜித்.

''இல்லை!''

''என்ன இல்லை?''

''நீங்கள் கடலில்தான் தூக்கிப் போட்டீர்கள். நான் இஷ்டப்பட்டிருந்தால் சிந்து துர்க்கத்தைச் சுற்றி நீந்தி அங்கு கரையேறிக் கோட்டைக்குள் போயிருக்க முடியும்!''



இதைக் கேட்ட அனந்த் மலைத்தான். ''ஆம். அப்படி நீ செய்திருக்க முடியும்'' என்று ஒப்புக் கொள்ளவும் செய்தான்.

''அப்படிச் செய்யவில்லை'' என்பதை அவள் சுட்டிக் காட்டினாள்.

''ஆம். ஆனால்...ஏன்?''

''நீங்கள் என்னுடன் தனித்துப் பேச இஷ்டப்பட்டீர்கள்'' என்று அறிவித்தாள் ராணி.

அனந்துக்குத் தூக்கி வாரிப்போட்டது. 'என் எண்ணம் இவளுக்கு எப்படித் தெரிந்தது?' என்று தனக்குள் கேட்டுக் கொண்டான்.

அவன் மனத்தில் ஓடிய எண்ணத்தை அவள் புரிந்து கொண்டிருக்க வேண்டும். ''நீங்கள் பழையபடி சிந்து துர்க்கத்தின் வெளி அறையில் தூங்கிக் கொண்டிருக்கும்போதே அதை உணர்ந்து கொண்டேன்'' என்று கூறிய ராணி மேலும் தொடர்ந்து, ''சிந்து துர்க்கத்தில் காஸண்ட்ராவை நங்கூரம் பாய்ச்சி அந்தக் கொள்ளைக் காரர்களைக் கோட்டையில் உலாவ விட்டதிலிருந்து தனித்துப் பேச நீங்கள் முயன்றிருக்கிறீர்கள். முடியவில்லை. ஆகவே நான் நீராடச் சென்றதும் தொடர்ந்து வந்திருக்கிறீர்கள் நீண்ட நேரம் நான் நீந்தி விட்டதால் அங்கு வந்த ஸ்டாண்டனும் ஸ்மித்தும் உங்கள் தனிமையைக் கெடுத்தார்கள். அதனால் சினந்து அவர்களைக் கட்டி உருட்டினீர்கள், பிறகு கடலில் எறிந்தீர்கள்'' என்று முடித்தாள்.

இங்கு இந்திரஜித் தனது சாமர்த்தியத்தைக் காட்டினான். ''ஸ்டாண்டனையும் ஸ்மித்தையும் அகற்றிய பிறகு உன்னுடன் நான் பேசியிருக்கலாமே?'' என்று வினவினான்.

''அவர்களைக் கடலில் எறிந்ததை எல்லோரும் பார்த்திருக் கிறார்கள். ஆகவே அதற்குப் பிறகு நாம் அங்கே தங்கினால் டெய்லரும் இங்க்லண்டும் சந்தேகப்பட்டு நம்மைத் தேடி வருவார் கள்'' என்று பதில் சொன்னாள், ராணி.

ராணியின் புத்திக் கூர்மையை உள்ளூர வியந்த இந்திரஜித் ''ஏன்? அவர்கள் இங்கு வரமாட்டார்களா?'' என்று வினவினான்.

''வரமாட்டார்கள். வந்தால் அவர்கள் கப்பலிலிருந்து நீண்ட தூரம் வர வேண்டும். அங்கு கப்பலைத் தனியாக விட்டால்

ஏற்படக்கூடிய விளைவுகளை அவர்கள் அறியாதவர்களல்ல. காப்டன்கள் இங்கு வந்ததும் சிந்து துர்க்கத்தின் பீரங்கிகளை நமது காவலர்கள் கப்பலை நோக்கித் திருப்பினால் காஸண்ட்ரா நமது கைவசப்படும். அப்புறம் அவர்கள் கதி அதோ கதி. இதனால்தான் காஸண்ட்ரா மாலுமிகள் பலரைச் சிந்து துர்க்கத்தின் கோட்டைச் சுவர்கள் மீது இங்க்லண்ட் உலாவ விட்டிருக்கிறான். அவனும் டெய்லரும், ஸில்வரும் கூடச் சிந்து துர்க்கத்துக்குள் உலாவி வருவதும் காஸண்ட்ராவைப் பாதுகாக்கத்தான்'' என்று விளக்கினாள்.

இந்திரஜித் அவள் சொல்வதையெல்லாம் தலை குனிந்து கேட்டுக் கொண்டிருந்தான். அவள் தொடையில் வைத்த கையைக் கூட எடுத்துத் தனது தொடையில் வைத்துக் கொண்டான். இரு கைகளும் தனது தொடைகளில் கடுமையாக ஊன்றிக் கிடக்க, முரட்டுக் குழல்கள், ராணியின் விழிகள் முன்பு அலங்கோலமாகக் காட்சியளிக்கக் குனிந்த தலை நிமிராமல் நீண்ட நேரம் சிந்தனை வசப்பட்டிருந்த இந்திரஜித் முடிவில் தலையை நிமிர்த்தி, ''ஆம் ராணி! நீ சொன்னது முற்றிலும் சரி. இதையெல்லாம் நானும் யோசித்தேன். அதனால்தான் இங்கே பேசலாம் என்று முடிவு செய்தேன்'' என்று கூறினான்.

''என்ன பேச நினைத்தீர்கள் சொல்லுங்கள்'' என்றாள் ராணி.

''இந்த இடத்தைவிட்டு நான் போய்விட வேண்டும்'' என்று ஓர் அதிர்ச்சி வெடியை வீசினான் அனந்த்.

சட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்த ராணி தனது கண்களால் வினாக்களைத் தொடுத்தாள். அவள் கண்களின் வினாக்களுக்குப் பதில் கூறினான் அனந்த். ''என் முதல் வேலை முடிந்தது'' என்று சொன்னான்.

ராணியின் முகத்தில் சிந்தனை விரிந்தது. ''என்ன வேலை அது?'' என்று வினவினாள்.

''காஸண்ட்ராவைச் சிந்து துர்க்கத்துக்குள் இழுப்பது'' என்றான் அனந்த்.

''அதற்காகத்தான் இங்கு வந்தீர்களா?'' என்று வினவினாள் ராணி.

''என் வேலையின் முதல்படிதான் அது'' என்றான் இந்திரஜித்.



''பெரிய திட்டமிட்டு வந்திருக்கிறீர்களா?'' ராணியின் குரலில் கடுமை இருந்தது.

''திட்டமிடாமல் எதையும் செய்வதில்லை.''

''புரிகிறது.''

''என்ன புரிகிறது?''

''திட்டமிட்டு வேலை செய்வது.''

''எப்படிப் புரிகிறது?''

''திட்டமிட்டு என்னைக் கடலில் தூக்கிப் போட்டதிலிருந்து.''

''புரிந்து என்ன செய்யப் போகிறாய்?''

''முழுத் திட்டத்தையும் புரிந்துகொள்ளப் போகிறேன்.''

''அதை இப்பொழுது சொல்வதற்கில்லை.''

''என்னிடம் நம்பிக்கை இல்லையா?''

இந்திரஜித் சில விநாடிகள் மௌனம் சாதித்தான். பிறகு சொன்னான்: ''நம்பிக்கை இல்லாமல் இல்லை ராணி. ஆனால், முழுத் திட்டம் என் மனத்துக்கே திட்டமாகப் புலப்படவில்லை. ஆகையால், உனக்குச் சில விஷயங்களைச் சொல்ல இங்கு அழைத்து வந்தேன்.''

ராணி அவனை வேறு புறம் திரும்பச் சொல்லிவிட்டுச் சரேலென்று சேலையை உடலில் வெகு வேகமாகச் சுற்றிக் கொண்டாள். ஒருமுறை சுழன்று அரை குறையாகச் சுற்றினாலும் சேலை முழுதும் உடலை மறைத்தது. மறைத்தவுடன் ''திரும்புங்கள்'' என்று ராணி பணிக்கத் திரும்பினான் இந்திரஜித். ''இப்போது சொல்லுங்கள்'' என்றாள்.

அனந்த் சிறிது யோசித்துவிட்டு, ''இன்றிரவு சிவாஜி மகாராஜாவுக்கு அபிஷேகம் அல்லவா?'' என்று கேட்டான்.

''ஆம்'' என்றாள் ராணி.

''அதற்குப் பிறகு சிந்து துர்க்கத்தில் கோட்டைக்குள் இருக்கும் மகாராஜா, உயிரோடிருந்த காலத்தில் இங்கு வரும்போதெல்லாம் தங்கிய சிறிய அறை இருக்கிறதல்லவா?''

''ஆம்.''

''அந்த அறைக்கு வந்து சேர்.''

''வந்தால்?''

''நான் மட்டும் இருப்பேன்.''

''இருந்தால்?''

''உன்னையும் என்னையும் உள்ளே விட்டு வெளியே பூட்டிவிடச் சொல்வேன்'' என்றான் அனந்த்.

தீப்பொறி பறந்தது ராணியின் கண்களில். ''என்ன விளையாடு கிறீர்கள்? என் தந்தை இருக்கிறார் அங்கே'' என்று ராணி சீறினாள்.

''தந்தையே அந்த அறைப் பூட்டைப் பூட்டுவார்'' என்றான் இந்திரஜித்.

''உங்களுக்குப் பைத்திமில்லையே?'' என்று வினவினாள் ராணி.

''இன்றிரவு புரிந்து கொள்வாய்'' என்றான் அனந்த். ''வந்த விஷயத்தைச் சொல்ல மறந்துவிட்டேனே. அந்த அறைக்குச் செல்லும் நான் அன்றிரவே மறைந்து விடுவேன்'' என்றும் கூறினான்.

அவன் சொன்னதெல்லாம் பெரும் புதிராக இருந்தது ராணிக்கு. ஆனால், அந்தப் புதிரையெல்லாம் தூக்கியடித்தன, அந்த இரவின் விசித்திர நிகழ்ச்சிகள்!

அத்தியாயம் – 30

# இரவில் சில நிகழ்ச்சிகள்!

இந்திரஜித் அனந்த் போட்ட புதிர்களுக்கெல்லாம் விடை காண முடியாவிட்டாலும் அவற்றைப்பற்றித் திரும்பத் திரும்பக் கேள்விகளை எழுப்பிக்கொள்வதை மட்டும் கடல் ராணி விடவில்லை.

'சிவாஜி மகாராஜாவின் அறையில் இவரும் நானும் எதற்காகத் தனியாகத் தங்க வேண்டும்? தங்கியபின் இவர் மட்டும் ஏன் மறையவேண்டும்? இவர் மறைவதற்கு எனது தந்தை ஏன் அறைக் கதவைப் பூட்டவேண்டும்!' என்றெல்லாம் தன்னைக் கேட்டுக் கொண்டாள் ராணி.

அதுவும் தனது பெண்ணையும் அந்நிய புருஷனையும் தனியாக அறைக்குள் அனுப்பி வெளியே பூட்ட எந்தத் தந்தை யாவது இசைவானா என்றும் வினவிக்கொண்ட ராணி, அன்றிரவு ஏதோ அனர்த்தம் விளையப் போகிறது என்று மட்டும் தீர்மானித்துக் கொண்டாள். அதைப் பற்றி அனந்தைக் கேட்பதால் பயனில்லை என்பதும் புரிந்திருந்ததால் தனது ஆடையை நன்றாகச் சுற்றிக் கட்டிக்கொண்டதும் ''வாருங்கள் போவோம்'' என்று கூறிவிட்டு முந்திரி மரத்திலிருந்து கீழிறங்கித் தென்னஞ்சோலை மணலில் நடக்கத் தொடங்கினாள்.

அனந்தும் அதற்கு மேல் ஏதும் பேசாமலும் தீவிர சிந்தனையில் ஆழ்ந்தும் அவளைப் பின்பற்றிச் சென்றான். போகும் வழியில் தான் உலர்த்தியிருந்த தனது சட்டையையும் முந்திரி மரத்திலிருந்து எடுத்துக் கொண்டு ராணியைத் தொடர்ந்தான்.

ராணி அங்கிருந்து நேராகத் தன் மாளிகையை நோக்கிச் செல்லவே, ''ராணி! மாலுமிகள் இல்லத்தில் எனது மற்ற ஆடைகளை வைத்திருக்கிறேன். நான் அங்கு சென்று வருகிறேன்'' என்று கூறிவிட்டு அவள் பதிலுக்குக் காத்திராமல், சரேலென்று நேர்

எதிர்த் திசையில் திரும்பிச் சென்றான் அனந்த். அவன் சென்றதைத் தலையைத் திருப்பி ஒரே ஒரு முறை பார்த்த ராணியும் தலையை அசைத்துவிட்டு மாளிகைப் பாதையில் நடந்து விட்டாள்.

அனந்தும் ராணியும் தென்னஞ் சோலைக்குள் நுழைந்ததையும் நீண்ட நேரத்துக்குப் பிறகு வெளியே வந்து வெவ்வேறு பாதைகளில் சென்றதையும் சிந்து துர்க்கத்திலிருந்து தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலம் பார்த்துக் கொண்டிருந்த இங்க்லண்ட் கண்ணாடியைப் பக்கத்திலிருந்த டெய்லரிடம் கொடுத்தான். அதை வாங்கிப் பாண்டவ கட்டை நோக்கிய டெய்லர் பெரிதாக நகைத்தான். ''தே ஹாவ் நோ ப்ளேஸ் ஹியர் (இங்கு அவர்களுக்கு இடமில்லை)'' என்று கூறவும் செய்தான் நகைப்பின் ஊடே.

''ஃபார் வாட் (எதற்கு)'' என்று கேட்டான் இங்க்லண்ட்.

''ஃபார் லவ் (காதலுக்கு)'' என்ற டெய்லர் மீண்டும் நகைத்தான்.

இங்க்லண்ட் நகைக்கவில்லை. தீவிர சிந்தனையில் இறங்கினான். அந்த இருவரும் தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலம் பார்த்ததையும், டெய்லர் சிரித்ததையும் தூரத்திலிருந்து கவனித்துக் கொண்டிருந்த ஸில்வரும் அவர்கள் அருகில் நொண்டிக்கொண்டு வந்து ''என்ன பார்க்கிறீர்கள்?'' என்று வினவினான்.

''டு லவ் பேர்ட்ஸ் (இரண்டு காதற் பறவைகள்)'' என்றான் டெய்லர்.

''யூ மீன் அனந்த் அண்ட் ராணி? (அனந்தையும் ராணியையும் சொல்கிறீர்களா?)'' என்று வினவினான் ஸில்வர்.

''வேறு யாரைச் சொல்லுவேன்?'' என்ற டெய்லர் அந்த இடத்தைவிட்டு அகன்றான்.

விஷயத்தை இங்க்லண்டிடமிருந்து அறிந்த ஸில்வர், ''ஐ திங் இட் ஈஸ் நாட் அஸ் ஸிம்பிள் அஸ் தட் (அது அத்தனை சுலபமாகத் தள்ளிவிடக்கூடிய விஷயமல்ல)'' என்று தனது கருத்தைச் சொன்னான்.

''இல்லை'' என்று இங்க்லண்டும் ஒப்புக் கொண்டான்.



''அந்த இருவரையும் நாம் எச்சரிக்கையுடன் கண்காணிக்க வேண்டும்'' என்றான் ஸில்வர்.

''கண்காணிப்பது அத்தனை சுலபமல்ல. நாம் சிந்து துர்க்கத்தை விட்டுச் சென்றால் காஸண்ட்ராவுக்கு ஆபத்து. ஆகவே, அவர்கள் இங்கு வந்த பின்புதான் கவனிக்க வேண்டும். அவசியமானால் இன்னொரு முறை சிந்து துர்க்கத்தை விட்டு அவர்கள் அசையாமல் செய்யவேண்டும்'' என்று இங்க்லண்ட் கூறினான்.

இங்க்லண்டின் கணக்கு முற்றிலும் சரி என்று பட்டதால் ஸில்வரும் அதை ஆமோதித்தான். இருப்பினும் தங்கள் மாலுமிகளை எச்சரிக்கை செய்யும் அவசியத்தையும் எடுத்துச் சொன்னான் இங்க்லண்டுக்கு. இங்க்லண்டுக்கும் அந்த அபிப்ராயம் இருந்ததால் முக்கியமான சில மாலுமிகளை அழைத்து அனந்தையும் ராணியும் தீவிரமாகக் கண்காணிக்குமாறு ரகசிய உத்தரவுகளைப் பிறப்பித்தான். ஆனால், இங்க்லண்டோ ஸில்வரோ எதிர்பார்த்தபடி எதுவும் நடக்கவில்லை. பிற்பகல் திரும்பி வந்த ராணி அனந்த் இருவர் நடத்தையிலும் பார்வையிலும் காதல் அளித்த வேதனையும் விஷமமும் தென்பட்டனவே ஒழிய, புதிதாக எதுவும் தென்படததால் தன் சந்தேகம் வீணானதாக இருக்குமோ என்று இங்க்லண்ட் கூட எண்ணினான்.

ஆங்கிலக் கணக்குப்படி சுமார் பிற்பகல் ஐந்து மணிக்கு முதலில் ஒரு படகில் அனந்த் வந்து சேர்ந்தான் நாலைந்து பணிமக்களுடன். பணிமக்கள், பால் நிறைந்த இரண்டு குடங்களையும் அபிஷேக சாமக்கிரியைகளையும் கொண்டு வந்திருந்தார்கள். படகிலிருந்து முதலில் குதித்துத் தானே படகை இறங்கு துறையில் பிணைத்த அனந்த், ''பால் குடங்கள் ஜாக்கிரதை. சாமக்கிரியைகளையும் எச்சரிக்கையுடன் எடுத்துச் செல்லுங்கள்'' என்று பணிமக்களுக்கு உத்தரவிட்டான். அந்தச் சமயத்தில் பல கேள்விக் குறிகளை முகத்தில் எழுப்பிக் கொண்டும் சினத்தின் சாயையுடனும் வந்த மால்வான் தளபதி சங்கர் பந்திடமும் சொன்னான், ''ராணி அடுத்த படகில் வந்துவிடுவாள்''என்று.

சங்கர் பந்தின் உள்ளம் எரிமலையாக இருந்தாலும், அவர் அதை அதிகமாக முகத்தில் காட்டாவிட்டாலும், முகம் இருந்த நிலை அவர் உள்ளத்தை ஓரளவு எடுத்துக் காட்டவே செய்ததால்,

''சிந்து துர்க்கத்தில் அபிஷேக வசதிகள் இல்லாததால் பாண்டவ கட்டுக்குப் போக வேண்டியிருந்தது'' என்று சமாதானம் சொன்னான் அனந்த்.

''அதற்கு நீ போவானேன்?'' என்று வினவினார் பந்த்.

''எனக்கும் அங்கு சிறிது வேலை இருந்தது'' என்று துவங்கிய அனந்தை எரிக்கும் விழிகளுடன் சங்கர் பந்த் பார்த்த சமயத்தில் ஸில்வரும் அங்கு வரவே, ''ஸில்வர்! மாலுமி விடுதியில் நமது அறையில் நான் வைத்த மூட்டையைக் காணோம். ஆகவே வேறு புது உடை வாங்கி அணிந்து வந்தேன்'' என்று அவனிடம் தனது வேலையைக் கூறினான்.

ஸில்வர் புன்முறுவல் கொண்டான்.

''ஓகோ! அதற்குத்தான் போனாயா?'' என்று வினவினான்.

''முக்கியமாக அதற்குத்தான்'' என்று இழுத்தான் அனந்த்.

''வேறு அலுவலும் இருந்ததோ?'' என்று இடைமறித்துக் கேட்டான் ஸில்வர்.

''இருந்தது. இந்தப் பால்குடங்கள், சாமக்கிரியைகள் இவற்றைக் கொண்டு வரும் பணி. இதற்காக ராணி வரச் சொன்னாள்.''

''அதற்கு நீங்கள் இருவரும் படகில் போயிருக்கலாமே?'' என்று கேட்டான் ஸில்வர்.

''போயிருக்கலாம். ஆனால் ராணிதான் நீச்சலில் புலி என்று நினைத்துக்கொண்டு திடீரெனக் கடலில் பாய்ந்தாள். ஒரு பெண்ணுக்கு அத்தனை திமிர் இருக்கும்போது நான் எப்படிப் பின்வாங்க முடியும்? ஆகையால் நானும் நீந்தினேன். குறுக்கே அந்த இரண்டு சனியன்கள் ஸ்டாண்டனும் ஸ்மித்தும் வராதிருந்தால் அவளைக் கண்டிப்பாய் வெற்றி கொண்டிருப்பேன். எனக்கும் ராணிக்கும் இடையில் எப்பொழுதும் யாராவது வெள்ளைக்காரர் வந்து காரியத்தைக் கெடுக்கிறார்கள்'' என்று அலுத்துப் பேசிய அனந்த், ''தளபதி! தாங்கள் அபிஷேகத்தைக் கவனியுங்கள். நான் ஸில்வருடன் சென்று வருகிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றான், ஸில்வர் பின்தொடர.



சங்கர் பந்த் தீவிர சிந்தனையுடன் ஸில்வரையும் அனந்தையும் நோக்கினார் சில விநாடிகள். பிறகு அபிஷேக சாமான்களையும் குடங்களையும் தாங்கிய பணிமக்களுடன் சென்றார். கோட்டைக்குள் நேராக சிவாஜியின் சிலை இருந்த இடத்துக் கருகிலுள்ள ஒரு சிறு அறையில் பாற்குடங்களை வைத்து மற்ற அபிஷேக ஏற்பாடுகளையும் செய்யலானார். அவற்றை முடித்ததும் ராணியும் ஒரு படகில் வந்து சேரவே அவளுடன் தாம் தங்கிருந்த சிந்து துர்க்கத்தின் தளபதி விடுதிக்குச் சென்றார். அங்கு சென்றதும், ராணியை ஏதும் கேட்க இயலாததால், ஏதேதோ சிந்தனையில் ஆழ்ந்துவிட்டதால், அபிஷேக காரியங்களை ராணியே கவனிக்கலானாள். இரண்டு மாலுமிகளை விட்டு அபிஷேகம் இரவு எட்டு மணிக்குத் துவங்குமென்றும் தவறாமல் வருமாறு இங்க்லண்டுக்கும் டெய்லருக்கும் அழைப்பு அனுப்பினாள். பிறகு தளபதி விடுதியிலிருந்து வெளியே சென்று கோட்டைப் பாதுகாப்பு இடங்களைப் பார்வையிட்டாள்.

கதிரவன் மலைவாசலில் விழுந்து விளக்குகள் ஏற்றப்பட்ட சமயத்தில் மீண்டும் தளபதி விடுதிக்கு வந்த ராணி, தளபதியின் அந்தரங்க அறை சாத்தப்பட்டிருப்பதையும் வெளியே ஒரு காவலன் வாளேந்திக் காவல் புரிவதையும் கண்டு வியந்து, ''யார் உள்ளே இருக்கிறார்கள்?'' என்று விசாரித்தாள்.

''தளபதியாரும் நம் ஐயாவும்தான் இருக்கிறார்கள்'' என்றான் காவலன் பணிவுடன்.

''யார் நம் ஐயா?'' என்று வினவினாள் ராணி.

காவலன் விழித்தான் திருதிருவென்று. ''அவர்தான் தங்களுடன் நீந்தித் தோற்றுப் போனாரே'' என்று விளக்கினான் காவலன்.

''ஓ!அவரா!'' என்று வெளியில் அலட்சியத்தைக் காட்டினாள் ராணி.

''ஆம்'' என்று காவலன் புன்சிரிப்புக் கொண்டான்.

அவன் புன்சிரிப்பைக் கண்டு வெகுண்டு ஏதோ சொல்லப் போன சமயத்தில் சங்கர் பந்தும் அனந்தும் மிகுந்த மகிழ்ச்சியுடன்

வெளிவந்ததைக் கண்ட ராணியின் இதயத்தில் எழுந்த கோபம் வியப்பாக மாறவே, ''இத்தனை நேரம் என்ன பேசிக் கொண் டிருந்தீர்கள்!'' என்று வினவினாள் ராணி.

சங்கர் பந்த் அவளை நோக்கியபோது புன்னகை, அவர் முகம் பூராவையும் ஆட்கொண்டது. ''அனந்தைக் கேட்டுத் தெரிந்து கொள்'' என்று கூறிவிட்டு வெளியே சென்றார். அவர் சென்றதும் ஒரே பார்வையில் காவலனை விரட்டிவிட்ட இந்திரஜித், ''ராணி! தந்தை சம்மதித்துவிட்டார்'' என்று கூறினான்.

''எதற்கு?'' ராணி சீற்றத்துடன் கேட்டாள்.

''நீயும் நானும் சிவாஜி மகாராஜாவின் அறையில் தங்க'' என்றான் அனந்த்.

''விளையாடுகிறீர்களா?'' என்றாள் ராணி மிதமிஞ்சிய கோபத்துடன்.

அனந்த் சிந்தனை வசப்பட்டான்.'' விளையாடும் விஷயம் இது அல்ல'' என்றும் கூறினான்.

''இல்லை'' என்றாள் ராணி.

''இது ஒரு சந்தர்ப்பம் உனக்கு'' என்றான் அனந்த்.

''எனக்கா உங்களுக்கா?''

''முக்கியமாக உனக்கு.''

''என்ன சந்தர்ப்பம்?''

''புரிந்து கொள்வாய் இன்றிரவு. மீதியைத் தந்தையைக் கேட்டுத் தெரிந்துகொள். அவர் சொற்படி நட.'' இதைச் சொன்ன அனந்தும் வெளியேறினான் அந்த இடத்தை விட்டு.

மிகக் கூரிய அறிவுள்ள ராணிக்குத் தந்தையின் நடவடிக்கை யிலும் அனந்தின் நடவடிக்கையிலும் ஏதோ பெரிய மர்மம் இருப்பது மட்டும் தெரிந்தது. அதைப் பற்றிய சிந்தனையிலேயே காலம் கழித்த அவள் அபிஷேக நேரத்தில் கிளம்பினாள், தளபதி விடுதியை விட்டு. அவள் வாயிலில் வந்ததும் அவளுடன் சேர்ந்து கொண்ட சங்கர் பந்த் அவளுடன் ஏதோ மெள்ளப் பேசிய வண்ணம் சென்றார். அதே சமயத்தில் மற்றொரு திசையிலிருந்து



அனந்தும் துலாஜி ஆங்கரேயும் பேசிக்கொண்டே அபிஷேக ஸ்தலத்துக்கு வந்தார்கள்

அந்த இரண்டு ஜோடிகள் போவதைத் தூரத்திலிருந்து கவனித்த டெய்லரும் இங்க்லண்டும் மற்றொரு திசையிலிருந்து சிவாஜி சிலையருகில் வந்தார்கள். அந்த மூன்று ஜோடிகளும் வந்ததும் பூஜை செய்பவர் அபிஷேகத்தைத் தொடங்கினார். இரண்டு பாற்குடங்களிலிருந்த பாலை ஒரு பெரும் பாத்திரத்தில் கொட்டி, சிறு குவளையால் மொண்டு மொண்டு அபிஷேகம் செய்தார், சக்ரவர்த்தியின் சிலைக்கு. பிறகு நன்னீரால் நீராட்டி நல்ல பட்டுத் துணியால் துடைத்தார். பிறகு புஷ்பாலங்காரம் நடந்தது. சந்தனம் மூன்று கீற்றுகளாகத் தீட்டப்பட்டது சிவாஜியின் முகத்தில் அர்ச்சனை ஆரம்பிக்கப்பட்டது. முதலில் வேதங்களை இரு மகாராஷ்டிரர்கள் ஓதிக்கொண்டிருந்தார்கள். அர்ச்சனை முடிந்ததும் பழம் முதலிய பிரசாதங்கள் எல்லாருக்கும் அளிக்கப்பட்டதும் அர்ச்சகர் சொன்னார்:

''இன்று மகாராஜாவின் பிறந்த நாள். இன்றைய அபிஷேகம் முடிந்ததும் யாராவது ஒரு வீரன் அவரது வாளை அணிந்து அவர் தங்கியிருந்த பக்கத்துச் சிறு அறையில் படுக்க வேண்டும். இது சம்பிரதாயம்'' என்று அறிவித்தார். ''யார் படுக்கப் போகிறார்கள்?'' என்றும் வினவினார்.

இதற்குச் சங்கர் பந்த் பதிலளித்தார். ''இந்திரஜித் அனந்த் அந்த மரியாதையைப் பெறுவார். என் மகளை முதல் நாள் காப்பாற்றியது அவர்தான்'' என்றார் தளபதி.

இதை எல்லோரும் கைதட்டி ஆரவாரித்து ஒப்புக் கொள்ளவே, அதுவரை சிவாஜி சிலையின் இடையில் கட்டப்பட்டிருந்த வளைந்த வாள் அனந்தின் இடுப்பில் கட்டப்பட்டது அர்ச்சகரால். அவன் தலையில் புஷ்பங்களையும் போட்டார் அர்ச்சகர்.

அனந்த் தலை வணங்கி அந்த மரியாதையை ஏற்றுக் கொண்டான். அபிஷேக ஆராதனைகள் முடியவே நீண்டநேரம் ஆகிவிட்டதால் சீக்கிரம் உணவருந்தி மகாராஜாவின் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக்கொண்டு படுத்தான் இந்திரஜித். அவன் படுத்த இரண்டு நாழிகை கழித்து, ராணி தளபதியின் மாளிகையி

லிருந்து வெளியே வந்து ஆகாயத்திலிருந்த நட்சத்திரங்களைப் பார்த்தாள். ''நள்ளிரவு தாண்டிவிட்டது'' என்று கூறிவிட்டு, மெள்ள நடந்து அனந்த் படுத்திருந்த அறைக்கு வந்து கதவை மெள்ளத் திறந்தாள். உள்ளே சென்று கதவை மூடியும் கொண்டாள்.

சிந்து துர்க்கம் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தது. காவல் புரிந்த மாலுமிகளைத் தவிர மற்றவர் உறங்கிக் கொண்டிருந்தார்கள். அபிஷேகத்தை முன்னிட்டுக் கொளுத்தப்பட்ட பெரும்பந்தங்களும், விளக்குகளும் அணைக்கப்பட்டுவிடவே சின்னஞ்சிறு விளக்குகள் ஏதோ நாலைந்து இடங்களில் எரிந்து கொண்டிருந்தன. அந்தச் சமயத்தில் தளபதி சங்கர் பந்த் தமது மாளிகையிலிருந்து வெளி வந்தார். அக்கம் பக்கம் பார்த்துக்கொண்டு அனந்தும் ராணியும் இருந்த அறைக்குச் சென்று அதன் கதவை இழுத்து வெளியே பூட்டினார்.

பிறகு அங்கிருந்து வேகமாக நடந்து ஸில்வர் இருந்த இடத்தை அடைந்து உறங்கிக் கொண்டிருந்த ஸில்வரை எழுப்பி, ''ஸில்வர்! இந்தச் சாவியை வைத்துக்கொள். யாரிடமும் கொடுக்காதே'' என்றார்.

''என்ன சாவி இது?'' என்று விவரம் புரியாததால் விசாரித்தான் ஸில்வர்.

''என் மகளும் அனந்தும் படுத்திருக்கும் அறையின் சாவி'' என்றார் பந்த்,கொந்தளித்த உணர்ச்சிகளால் சொற்களில் நெருப்புப் பறக்க

''அப்படியா!'' என்றான் ஸில்வர்.

''ஆம். சிவாஜி சிலையின் அடுத்த அறையில் படுத்திருக்கிறார்கள். நாளைக் காலையில் ஒன்று அந்த அயோக்கியன் என் மகளை மணக்க வேண்டும் அல்லது தூக்கில் ஆட வேண்டும்'' என்று சாவியை ஸில்வரிடம் திணித்துவிட்டு வேகமாக நடந்தார், தளபதி தமது விடுதியை நோக்கி.

கையில் சாவியுடன் தரையில் உட்கார்ந்திருந்த ஸில்வர் தீர்க்க சிந்தனையில் இறங்கினான். பிறகு தனக்குள் சிரித்துக் கொண்டான். இரண்டு நாழிகைகள் தாமதித்தான். அடுத்துத் தனது ஊன்று



கோலை எடுத்துக் கொண்டு சிந்து துர்க்கத்தின் நடுவே நடந்து சென்றான் அதன் பிரதான வாசலை நோக்கி. சிந்து துர்க்கத்தின் நிசப்தத்தில் ஸில்வரின் ஊன்றுகோல் மெள்ள ஆனால் பயங்கரமாகச் சப்தித்தது.

ஸில்வர் சற்று நின்றான் ஓரிடத்தில். பிறகு தனது ஊன்று கோலை இருமுறை தட்டினான். அங்கிருந்த கோட்டைப் பாறைகளின் ஏதோ ஒரு மறைவிலிருந்து அவன் அசுரக் கிளி பறந்து வந்து அவன் தோளில் உட்கார்ந்து கொண்டது. அத்துடன் சிந்து துர்க்கத்தின் வாயிலுக்கு வந்த ஸில்வர் அதை மேலே எடுத்துப் பறக்கவிட்டான். அந்த அசுரக் கிளி வேகமாகப் பறந்தது காஸண்ட்ராவை நோக்கி!

திருப்தியடைந்த முகத்துடன் ஸில்வர் சிந்து துர்க்கத்தின் பிரதான வாயிலில் உட்கார்ந்து கொண்டான். மிகக் கூரிய அவன் மூளை வெகு வேகமாக வேலை செய்து கொண்டிருந்தது.''ஐ நோ த கேம். மை ஃப்ரண்ட் யூ கான் பூல் அதர்ஸ், நாட் மி(நண்பனே! உன் விஷயம் எனக்குத் தெரியும். மற்றவர்களை ஏமாற்றலாம். என்னை ஏமாற்ற முடியாது)'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். அடுத்து ஒரு நாழிகை சென்றது. காஸண்ட்ராவிலிருந்து ஒரு படகு இறக்கப்பட்டது. அது விரைந்து வந்தது, சிந்து துர்க்கத்தின் பிரதான வாயிலை நோக்கி!

## அத்தியாயம் - 31

# மலை உச்சி விளக்கு!

சிந்து துர்க்கத்தின் பிரதான வாயிலில் படகுகள் இணைக்கப் படும் இரும்புத் தளைகளை அடுத்து, கோட்டைக்குள் செல்வதற் காகக் கட்டப்பட்டிருந்த உயர்ந்த படிகள் நான்கில் உச்சிப் படியில் உட்கார்ந்திருந்த ஸில்வர், காஸண்ட்ராவிலிருந்து படகு இறக்கப் பட்டதையும் பார்த்தான். படகு தன்னை நோக்கி விரைந்து வந்ததையும் பார்த்தான். அதனால் பெரு மகிழ்ச்சி அவன் முகத்தில் உலாவிய தருணத்தில் அவன் அகரக் கிளியான காப்டன் ப்ளிண்டும் படகுக்கு முன்பாகப் பறந்து வந்து அவன் தோளில் உட்கார்ந்து, அவன் காதுக்கருகில் இருமுறை லேசாகக் கத்தியது. புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலையையும் அசைத்துப் ப்ளிண்டையும் தடவிக் கொடுத்த ஸில்வர் படகின் வருகையை நோக்கி உட்கார்ந்திருந்தான், உச்சிப் படியிலேயே.

கிருஷ்ணபட்சத்தின் அந்தப் பின்னணி நிலவில் சிந்துதுர்க்க மும் அதன் சுற்றுப்புறமும் மிகப் பயங்கரமாகக் காட்சியளித்தன. ஆங்காங்கு பெரிதாகக் கடலில் எழுந்த பாறைகளும், தூரத்தி லிருந்த பாண்டவ கட், மால்வான் கோட்டைகளும் பெரும் கடற்பிசாசுகளைப் போல் காட்சியளித்தன.

அன்று மும்முரமாகக் காற்றும் இருந்தபடியால் அலைகள் மிகப் பெரிதாக எழுந்து சிந்து துர்க்கத்தின் படிகளையும் சுவர்களையும் தாக்கிக் கொண்டிருந்ததல்லாமல் கோட்டையை நோக்கி வந்து கொண்டிருந்த படகையும் தூக்கித் தூக்கி எறிந்து கொண்டிருந்ததால் படகு அதிக விரைவில் உந்தப்பட்டு வந்தது. அந்த அலைகளில், அவற்றின் உயரத்தில், அவை மடிந்த வேகத்தில், உந்திய திரைகளில், எந்தப் படகும் கவிழ்ந்திருக்கு மானாலும் காஸண்ட்ராவிலிருந்து வந்த படகு ஒரு முறை கூடக் கவிழாமல், அலைகளில் ஏறி விழுந்தும், மிதந்தும் வந்தது அதைச் செலுத்தியவன் திறமையால்.



கடலில் எத்தனையோ சூறாவளிகளைப் பார்த்திருந்த டெய்லருக்கு அந்த அலைகளில் படகைச் செலுத்துவது ஒரு பெரிய காரியமாக இல்லாததால் அவன் வெகு அலட்சியமாகத் துடுப்புகளைத் துழாவினான். எங்கும் கிளம்பிய 'ஹோ' என்ற இரைச்சல் மற்றவர்கள் காதுகளுக்குப் பயங்கரமென்றாலும் டெய்லரின் காதுகளுக்கு அது இணையிலா சங்கீதமாயிருந்ததால் அவன் மிகுந்த உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் படகைச் செலுத்தி வந்தான். அப்படி வந்தவன் இணைப்புத் தளைகளிடம் வந்ததும் படகிலிருந்து லேசாகத் தரையில் குதித்துத் தளை யொன்றில் படகின் முகப்புச் சங்கிலியைப் பிணைத்துவிட்டு, உச்சிப் படியிலிருந்த ஸில்வரை நோக்கி வந்தான். ''எதற்கு என்னை இங்கிருந்து காஸண்ட்ராவுக்கு அனுப்பினாய்? திரும்ப எதற்காக அழைத்தாய்?'' என்று வினவினான் எரிச்சலுடன்.

டெய்லர் அன்று அளவுக்கு மீறிக் குடித்திருந்தாலும் அவன் சிறிதும் நிதானம் தவறவில்லை. ஆனால், நல்ல தூக்கத்தில் ஸில்வர் தன்னைக் கிளப்பிவிட்டதை அவன் ரசிக்கவில்லை என்பதை அவன் முகம் காட்டியது. ஸில்வர் படியிலிருந்து எழுந்திருக்காமலே தனது தோளிலிருந்த அரக்கக் கிளியைத் தடவினான் ஒரு முறை. ''ப்ளிண்ட் இருப்பது எத்தனை உதவி என்று உனக்குப் புரிகிறதா!'' என்று வினவினான், கிளியைத் தடவிய வண்ணம் டெய்லரை நோக்கி.

டெய்லர் அப்போது ப்ளிண்டையும் அதன் உபயோகத்தை யும் ரசிக்கும் நிலையில் இல்லை. ''நான் கேட்ட கேள்வி வேறு'' என்றான் மூர்க்கத்தனமாக.

''புரிகிறது'' என்ற ஸில்வர் தன் பக்கத்தில் உட்காருமாறு சைகை காட்டினான் டெய்லருக்கு.

''இங்கு உட்கார நான் வரவில்லை. எதற்கு அழைத்தாய் சொல்'' என்று வினவினான் டெய்லர், இரண்டாம் முறை மிகக் கடுமையான குரலில்.

ஸில்வர், டெய்லரை ஏறெடுத்து நோக்கினான். அவன் இதழ்களில் இகழ்ச்சியும் குரூரமும் கலந்து புன்னகை விரிந்தது. ''இன்றைய நிகழ்ச்சிகளைப் பற்றி என்ன நினைக்கிறாய்?'' என்று வினவினான் ஸில்வர் சர்வ சாதாரணமாக.

''என்ன நிகழ்ச்சிகள்?'' டெய்லர் பொறுமையை இழக்க முற்பட்டான்.

''சிவாஜிக்கு அபிஷேகம்.''

''அது மகாராஷ்டிரச் சடங்கு.''

''பிறகு அனந்துக்கு மரியாதை''

''அது தளபதி இஷ்டம்!''

''அனந்த் சிவாஜி சிலைக்கு அருகில் உள்ள அறையில் படுத்திருக்கிறான், சக்ரவர்த்தியின் வாளுடன்.''

''அர்ச்சகர் காரணத்தை விளக்கிவிட்டார்.'' இதைக் கேட்ட ஸில்வர் சிறியெழுந்தான் படியிலிருந்து, ''யூ ஆர் எ ஃபூல் ;யூ ஆர் ஆல் ஃபூல்ஸ்'' என்று கூவிக்கொண்டே.

ஸில்வரின் சீற்றத்தைக் கண்ட டெய்லர் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. ''வாட் ஹாஸ் யுவர் இண்டலிஜண்ட் ப்ரெய்ன் டிஸ்கவர்ட்? (உன் புத்திசாலி மூளை என்ன கண்டு பிடித்திருக்கிறது?)'' என்று வினவினான் டெய்லர் பதிலுக்கு.

''இன்று நடந்ததெல்லாம் நாடகம், (த ஹோல் அஃபேர் ஈஸ் எ டிராமா)'' என்ற ஸில்வர் மடியிலிருந்து சாவியை எடுத்து டெய்லரிடம் காட்டினான்.

அந்தச் சாவியைக் கண்ட டெய்லர், ''இதென்ன?'' என்று வினவினான்.

''இந்திரஜித்தும் கடல் ராணியும் படுத்திருக்கும் அறையின் சாவி'' என்று ஸில்வர் கூறியதும், பெரிதாக நகைத்தான் டெய்லர். ''யூ ஹாவ் த கீ டு எ நப்ஷல் ரூம் (சாந்தி அறையின் சாவியைக் கொண்டு வந்து விட்டாய்)'' என்று கூறியதன்றி, ''ஹொய் நாட் ஓப்பன் த ரூம் அண்ட் ஸீ வாட் ஈஸ் கோயிங் ஆன் (அறையைத் திறந்து நடப்பது என்னவென்று பார்ப்பதுதானே?)'' என்றும் கொள்ளைக்காரர்களின் இயற்கையான விரசத்தைக் காட்டிப் பெரிதாக மீண்டும் நகைத்தான். டெய்லர் மேலும் நகைத்திருப் பான், அப்போது துப்பாக்கி வெடித்த பயங்கர சப்தம் அவனை அசரச் செய்யாதிருந்தால்.



அந்த வெடி யோசையைக் கேட்டதும் அவசரமாக எழுந்து ஸில்வர் தன் தடியை ஊன்றிக் கொண்டு துரிதமாக ஓடலானான் கோட்டைக்குள்ளே. டெய்லரும் அவனைத் தொடர்ந்தான். எதையும் அலட்சியமாகப் பாவிக்கும் டெய்லரின் மூளைக்கு ஏதோ தான் நிர்ணயிக்க முடியாத விபரீதம் கோட்டைக்குள் நிகழ்ந்திருக்கிறது என்பது புரிந்தது. அதனால் வேகமாக நடந்த டெய்லரும், தனது ஒற்றைக் காலாலும் தடியினாலும் அதிக வேகத்தைக் காட்டிய ஸில்வரும் சிவாஜி சிலைக்கு அருகில் வந்ததும், பக்கத்து அறையில் பூட்டு துப்பாக்கியால் சுடப்பட்டுத் தொங்கிக் கொண்டிருந்ததைக் கண்டனர். துப்பாக்கிச் சத்தம் கேட்டதால் ஓடி வந்த மாலுமிகள் சிலரும், அவர்களைத் தொடர்ந்து வந்த தளபதி சங்கர் பெந்த், துலாஜி ஆகியவர்களும் உடைக்கப் பட்ட பூட்டைப் பார்த்து பெரு வியப்படைந்தனர். ''யார் செய்தது இதை?'' என்று சீறினான் கடைசியாக வந்த இங்கலண்ட்.

''அதைத்தான் நானும் அறிந்து கொள்ள விரும்புகிறேன்'' என்றார் சங்கர் பந்த் கொந்தளித்த குரலில்.

''ஓப்பன் த டோர் (கதவைத் திறவுங்கள்)'' என்றான் டெய்லர்.

துலாஜி கதவண்டை சென்று உடைக்கப்பட்ட பூட்டை எடுத்துவிட்டுத் தாழ்ப்பாளை நீக்கிக் கதவை உதைத்தான், தனது வலது காலால். படீரென்று திறந்த கதவு ஒரு விசித்திரக் காட்சியை விரித்தது. அறையில் காலைப் பிடித்துக் கொண்டு ராணி உட்கார்ந் திருந்ததையும், அவள் காலில் துப்பாக்கி ரவை பாய்ந்திருந்ததால் ரத்தம் வந்து கொண்டிருந்ததையும், அதற்கு அவள் தன் சேலையைக் கிழித்து இறுகக் கட்டுப்போட்டிருந்ததையும் பார்த்த அனைவரும் பிரமித்தார்கள்.

சங்கர் பந்த் பிரமிக்கவில்லை. மிகுந்த கோபத்தின் வசப் பட்டு ''நீ இங்கு எப்படி வந்தாய்?'' என்று வினவினார்.

''அனந்தைத் தேடி வந்தேன்'' என்றாள் ராணி தலையைக் குனிந்த வண்ணம்.

''இரவில் எதற்காக அவனைத் தேட வேண்டும்?'' தளபதி யின் குரல் அக்னி ஜ்வாலையாயிருந்தது.

இந்தச் சமயத்தில் டெய்லர் தன்னையும் மீறிச் சிரித்தான். ''வாட் எ ஸ்டுப்பிட் கொஸ்சன் என்ன முட்டாள் தனமான கேள்வி)'' என்றும் கூறினான் நகைப்பை அடுத்து.

''ஷட் டப் (மூடு வாயை)'' என்று சீறிய சங்கர் பந்த், ''ராணி! சொல். நடந்ததென்ன?'' என்று வினவினார்.

ராணி சொன்னாள் நடந்த கதையை:

''பூஜை முடிந்து நீங்கள் சென்றதும் என் அறைக்கு வெளியே யாரோ நடமாடும் சத்தம் கேட்டது. ஆகவே நான் கிளம்பி வெளியே வந்தேன். என் அறைப்பக்கம் வந்தவன் ஓடினான், அனந்த் இருந்த அறையை நோக்கித் துப்பாக்கியுடன். நான் தொடருவதைக் கவனித்ததும் அவன் மறைந்து விட்டான், சிவாஜி சிலை இருக்கும் இடத்துக்குப் பின்புறத்தில். பிறகு அனந்தைக் கதவைத் தட்டி எழுப்பினேன். அனந்த் வந்து கதவைத் திறந்ததும் இருவரும் அவனைத் தேடினோம். கிடைக்கவில்லை. ஆகவே இந்த அறைக்குள் வந்து கதவைச் சாத்திக்கொண்டு கதவிடுக்கு வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தோம், எங்கிருந்தாவது வெளியில் வருவானா என்று. இந்தச் சமயத்தில் யாரோ வந்து சட்டென்று கதவை இழுத்து வெளியே தாளிட்டுப் பூட்டினார்கள். இருவர்பாடும் திண்டாட்ட மாகிவிட்டது. மணிக்கணக்கில் உட்கார்ந்திருந்தோம் அறைக்குள். திடீரென்று துப்பாக்கி வெடிச் சத்தம் கேட்டது. முகத்தை கறுப்புத் துணியால் மூடியிருந்த ஒரு மனிதன் இரு கைகளிலும் துப்பாக்கி ஏந்திக் கதவைத் திறந்து அனந்தை உடன் வரும்படி மிரட்டினான். அனந்த் தனது துப்பாக்கியை எடுக்கும் முன்பு அவர் கை சுடப் பட்டது. நான் சற்றுக் காலை எடுத்து வைத்தேன். என் காலும் சுடப் பட்டது. பிறகு அவன் அனந்தின் நெற்றிக்கு நேரே துப்பாக்கியைக் காட்டி அவரை அழைத்துக் கொண்டு வெளியே சென்று கதவை மூடினான். நேரம் ஓடியது. பிறகுதான் உங்களைக் கண்டேன்.''

அவள் சொன்ன கதையை யாரும் நம்பவில்லை என்றாலும், நம்பாமலும் இருக்க முடியவில்லை. பூட்டுக்குள் துப்பாக்கி ரவை இருந்தது. மற்றும் இரண்டு ரவைகள் அறைக்கு வெளியே கிடந்தன. துலாஜி தரையைக் கவனித்தான். தரை நெடுகிலும் ரத்தத் துளிகள் வரிசையாய்த் தெரிந்தன. பந்தத்தின் உதவி கொண்டு அவற்றைத் தொடர்ந்தான் துலாஜி. ஸில்வரும் இங்க்லண்டும் அவனைத் தொடர்ந்தனர். பத்தடி தூரத்துக்குப் பிறகு ரத்தத்துளிகள் மாயமாய்



மறைந்தன. துலாஜியின் முகத்தில் கவலை தெரிந்தது. ''வந்தவன் யாராயிருந்தாலும் மிகுந்த அறிவுள்ளவன். அனந்த் கை ரத்தத்தை மிகத் துரிதமாகக் கட்டி நிறுத்தியிருக்கிறான், நமக்குச் சுவடு தெரியாதிருக்க'' என்றான் துலாஜி, ஸில்வரை நோக்கி.

ஸில்வர் அதை ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான். அவர்களுக்குப் பின்னால் வந்த சங்கர் பந்த், ''அவன் யாராயிருந்தாலும் கோட்டைக் இள்ளிருப்பவர்களில் ஒருவன் தான்'' என்று கூறினார். ''நாம் அவனைக் கண்டுபிடித்தாக வேண்டும்'' என்றும் சொன்னார். அத்துடன் வருத்தம் தோய்ந்த குரலில் மகளைப் பார்த்து, ''ராணி! இத்தனைக்கும் என் மடத்தனம் தான் காரணம்'' என்றும் கூறினார்.

எல்லோரும் ராணியையும் சங்கர் பந்தையும் நோக்கினார்கள். பந்த் சொன்னார்: ''என் மகள் நள்ளிரவில் அனந்த் இருந்த அறையை நோக்கிச் சென்றதைப் பார்த்தேன். நான் அவளைத் தொடர்ந்து வெளிக் கதவைத் தாளிட்டுப் பூட்டினேன், இருவரையும் மணக்கச் சொல்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற காரணத்தால். அப்படிச் செய்து சாவியை ஸில்வரின் கையில் கொடுத்துப் போனேன்!'' என்று.

எல்லோர் கண்களும் ஸில்வரை நோக்கின சந்தேகத்துடன். ''ஈஸ் இட் ட்ரூ? (இது உண்மையா?)'' என்று வினவினான் இங்க்லண்ட்.

'ஷ்யூர்'' என்றான் டெய்லர்.

எல்லோரும் டெய்லரைப் பார்த்தார்கள். ''ஹீ ஷோட்வட் மீ த கீ, (அவன் சாவியை என்னிடம் காட்டினான்) பட் த கீ, இட் ஈஸ் யூஸ்லெஸ் நௌ (ஆனால், அந்தச் சாவி இப்பொழுது உபயோக மில்லை)'' என்று கூறி இடிஇடி என்று நகைத்தான்.

அப்பொழுது இங்க்லண்ட் ஒரு சந்தேகம் கேட்டான் டெய்லரை நோக்கி, ''ஹொய் டிட் யூ கம் ஹியர் (நீ ஏன் இங்கு வந்தாய்)'' என்று.

''ஹீ ஸெண்ட் ஃபார் மீ (இவன் எனக்குச் செய்தி அனுப்பி னான்), அப்கோர்ஸ் பை ஹிஸ் ஃப்ரண்ட் (அவன் நண்பன் மூலம்)'' என்று ஸில்வரையும் காட்டிக் கிளியையும் காட்டினான் டெய்லர்.

எல்லோரும் ஸில்வரைச் சந்தேகத்தோடு பார்த்தார்கள். ஸில்வரும் அனந்தும் நண்பர்கள் என்பது அனைவரும் அறிந்த விஷயம். ஸில்வர் உயிரை அனந்த் காப்பாற்றினான் என்பதை ஸில்வரே சொல்லியிருக்கிறான். ஆகவே கொள்ளைக்காரர்கள் ஸில்வர் மீது சந்தேகக் கண்களை ஓட்டினார்கள். சங்கர் பந்தும், துலாஜியும் அவனை எரித்து விடுவது போல் பார்த்தார்கள்.

ஸில்வர் அத்தனை பேர் பார்வையையோ கோபத்தையோ லட்சியம் செய்யவில்லை. தீவிர சிந்தனையில் இறங்கினான். யாருக்கும் எந்தப் பதிலையும் சொல்லாமல் தனது இடுப்பிலிருந்த கைத்துப்பாக்கியைத் தட்டிக் காட்டினான். ''இந்த நிகழ்ச்சி எதற்கும் நான் பொறுப்பாளி அல்ல. ஏதோ விசித்திரம் இந்தக் கோட்டையில் நடக்கிறது. ஐ வில் ஸூன் ஃபைன்ட் அவுட் (வெகு சீக்கிரத்தில் கண்டுபிடிக்கிறேன்)'' என்று கூறிய ஸில்வர் நடக்கத் தொடங்கினான், தான் இருந்த அறையை நோக்கி. அவனை நிறுத்த மாலுமியொருவன் தன் பெல்ட்டிலிருந்து கைத்துப்பாக்கியை எடுக்க முயன்றான்.

''ஹூ எவர் ட்ரைஸ் டு ஸ்டாப் மி எ டெட் மான் (யார் என்னைத் தடுக்க முயன்றாலும் சரி, அவன் அடுத்த கணம் பிணம்)'' என்று கூறி ஒரு முறை முறைத்துவிட்டு அவ்விடத்திலிருந்து வெளியேறினான் ஸில்வர். யாரும் அவனைத் தடுக்க முயலவில்லை.

இந்தச் சம்பவம் நடந்து ஒரு வாரம் கழித்து இந்திரஜித் அனந்த் சிந்து துர்க்கத்துக்கு வடக்கே இருந்த விஜய துர்க்கத்துக்கு அருகிலிருந்த மலை மீது ஏறிக் கொண்டிருந்தான். அப்பொழுதும் நள்ளிரவுதான். மலையில் ஒரு பகுதியை அடைந்ததும் கச்சையிலிருந்த துப்பாக்கியை எடுத்து ஆகாயத்தில் இரு முறை சுட்டான் இந்திரஜித். அதை அடுத்து மலை உச்சியிலிருந்த ஒரு குடிசையின் கதவு திறந்தது. தீபம் ஒன்று அவன் இருந்த திசையை நோக்கி அசைந்தது.

## அத்தியாயம் - 32

## சாரு !

மேற்கு மலைத் தொடர்ச்சி மலைப்பகுதியில் ஏறுவது மிகக் கடினமென்றாலும், அதிகச் சிரமப்படாமலே ஏறினான் இந்திரஜித் அனந்த். அடர்ந்த காடுகளுடன் அமைந்திருந்த அந்த மலை உச்சியை நோக்கி. காடுகளில் ஏதோ சில இடங்களிலிருந்து எழுந்து கொண்டிருந்த கொடிய விலங்குகளின் பயங்கர உறுமலும், நள்ளிரவானதால் அடவியின் ஆழ்ந்த அந்தகாரம் விளைவித்த அச்சமும், ஆங்காங்கு கேட்டுக் கொண்டிருந்த வண்டுகள் முதலியவற்றின் ரீங்காரமும், பாம்பு போன்ற தரையில் ஊர்ந்து செல்லும் ஜந்துக்கள் மரச்சருகுகளில் விளைவித்த சலசலப்பும், ஏதோ ஓரிடத்திலிருந்து ஆந்தை அலறிய அபசப்தமும், எல்லாமாகச் சேர்ந்து இதயத்தைக் கிடுகிடுக்க வைக்கும் சூழ்நிலையைச் சிருஷ்டித்தும் இந்திரஜித் அனந்த் எதைப்பற்றியும் கவலைப்படாமல் காடுதான் தனக்கு வீடு என்பது போல் சர்வ சாதாரணமாக ஏறிச் சென்றான் அடவியின் ஊடே. இப்படி நீண்ட நேரம் பயணம் செய்து காடு சற்று இடைவெளி கொடுத்த இடமொன்றில் வந்து நின்றுகொண்டு மலையின் உச்சியையும் நோக்கி கீழேயும் நோக்கினான்.

கீழே பெரும் பாதாளத்தில் அலைகடல் முப்புறம் தாக்க நிலத்துடன் இணையும் பக்கம் அடவிகளால் அணுகமுடியாதிருக்க பெரும் பிசாசு போல் நின்று கொண்டிருந்தது கனோஜி ஆங்கரேயின் பிரசித்தி பெற்ற கடற்கோட்டையான விஜய துர்க்கம்.

இந்திரஜித் இருந்த இடத்துக்கும் விஜய துர்க்கம் இருந்த இடத்துக்கும் தூரம் அதிகமென்றாலும், அந்தக் கோட்டை பயங்கரமான அந்த இரவிலும் அழகாகவே தெரிந்தது. அந்த நள்ளிரவிலும் கூட விஜய துர்க்கத் துறைமுகத்தைக் காத்து நின்ற நாலைந்து போர்க் கப்பல்கள் ஒன்றில் தெரிந்த பாய்மர விளக்கு அனந்தை நோக்கிப் பரிகசிப்பது போல் கண்ணைச் சிமிட்டியது.

கடலுக்கு அழகையும், கனோஜி ஆங்கரேயின் கடலாதிக்கத் துக்கு தனி முத்திரையையும், விரிவடைந்து கொண்டிருந்த மகாராஷ்டிர சாம்ராஜ்யத்துக்குக் கடல் வழியில் பெரும் பாது காப்பையும் அளித்த விஜய துர்க்கத்தின் பிரதான வாயிலை அலங்கரித்த இரண்டு விளக்குகள் கூடச் சிறிது மங்கலான ஒளியை வீசிக் கொண்டிருந்தன தூரத்தின் காரணமாக.

அந்தக் கோட்டையைக் கண்டதும் இந்திரஜித்தின் மனத்தில் விவரிக்க இயலாத பெருமிதமும் மகிழ்ச்சியும் ஏற்படவே செய்தன.

'அதோ அந்தக் கோட்டையில் உறைகிறது ஒரு சிங்கம். அது எழுந்தால் நடுங்குகின்றன பல சாம்ராஜ்யங்களின் கடற்படைகள். ஆனால், யார் செய்த பாவமோ, அந்தச் சிங்கம் இப்பொழுது அசைய மறுக்கிறது. வயதின் கோளாறோ, வியாதியளித்த பல வீனமோ தெரியாது, சிங்கம் நகருவதைக் காணோம்' என்று கனோஜி ஆங்கரேயை பற்றி எண்ணி, பெருமூச்சு விட்ட இந்திரஜித் மலை உச்சியை நோக்கினான் சில விநாடிகள்.

பிறகு தன் கைத்துப்பாக்கியை எடுத்து இருமுறை சுட்டான் ஆகாயத்தில். சுட்டுச் சிறிது நேரம் நின்றான். விநாடிகள் ஓடின. மலை உச்சியில் ஒரு தீபம் தோன்றியது. அந்தத் தீபத்தில் ஒரு குடிசையும் அதன் திறந்த கதவும் கண்ணுக்குத் தெரிந்தன. குடிசைக் கதவைத் திறந்துகொண்டு வந்தது யாரென்பதை உணர்ந்ததால் அனந்த் மிகுந்த குதூகலத்திற்குள்ளானாலும், உடனடியாக மலை உச்சியை நோக்கி விரைய இஷ்டப்பட்டாலும் தன் ஆவலை அடக்கிக் கொண்டு நிற்கவே செய்தான். தீபம் அவன் இருந்த திசையை நோக்கி இருமுறை ஆடிய பிறகுதான் அவன் உற்சாகத் துடன் உச்சியை நோக்கி ஏறத் தொடங்கினான்.

அவன் ஏறத் தொடங்கிய சில நிமிஷங்களுக்கெல்லாம் அந்த விளக்கும் மறைந்தது குடிசைக்குள்ளே. குடிசையை அடைய இந்திரஜித்துக்கு இருந்த ஆர்வம் அவனைத் துரிதமாக மலை உச்சியை நோக்கி ஏற வைத்தது. மலைமீது செல்லச் செல்ல அடவியும் அடர்ந்து கொண்டே சென்றது. மிகவும் அடர்த்தியான ஒரு பாகத்துக்கு வந்ததும் தனது யாத்திரை முடிந்துவிட்ட தென்பதை உணர்ந்த அனந்த் சிறிது காட்டு முகப்பில் நின்றான்.



எதிரே மரங்கள் சுற்றிலும் வெட்டி ஒதுக்கப்பட்டதால் தன்னந் தனியாக மலையின் உச்சிச் சரிவில் தெரிந்த அந்தக் குடிசையின் உள்ளே விளக்கு எரிந்து கொண்டிருந்ததைக் கதவிடுக்கின் மூலம் கண்டான் இந்திரஜித். ஆகவே மரங்களின் மறைவிலிருந்து வெளிவந்து குடிசையை அணுகி உள்ளே செல்லாமல் அதன் வாயிலிலேயே உட்கார்ந்து நன்றாகக் காலை நீட்டிச் சிரமப்பரி காரம் செய்து கொண்டான். சில விநாடிகள் கதவும் திறக்கவில்லை. அனந்தும் குரல் கொடுத்து அழைக்கவில்லை. திடீரென்று உள்ளிருந்த விளக்கு அணைக்கப்பட்டது. எங்கும் இருள் மூண்டது. அதனால் அனந்த் மிரளவில்லை. ஆகாயத்தை நோக்கி நட்சத்திரங் களை ஏதோ கணக்கெடுத்தான். ''சந்திரோதயத்துக்கு நேரம் இருக்கிறது'' என்று சற்று இரைந்து கூறினான் வாய் விட்டு.

அப்பொழுது குடிசைக்குள்ளிருந்து வெளிவந்த உருவம் அனந்த் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு, ''சந்திரோதயத்தைப் பற்றி என்ன கவலை இப்பொழுது?'' என்று கேட்கவும் செய்தது.

அனந்த் அந்தக் கேள்விக்குப் பதில் ஏதும் சொல்லாது போகவே அந்த உருவம் அவனை நன்றாக நெருங்கி அவன் தோளின் மீது தனது கையையும் போட்டது. அனந்த் அந்தக் கையை எடுத்து அப்புறம் போட்டான். ''பெண்ணே! இது சரியல்ல...'' என்று சிறிது கடுமையுடனும் சொன்னான்.

அந்த பெண் கேட்டாள், ''எது சரியல்ல?'' என்று.

''உன் செய்கை.'' திட்டமாக இருந்தது அனந்தின் பதில்.

''என் செய்கைக்கு என்ன?'' என்று வினவினாள் அந்தப் பெண்.

''என்னை நீ தொடுவது தவறு!''

''ஏன்''

''நான் பரபுருஷன்.''

''நான் அப்படி நினைக்காவிட்டால்?''

''உன் நினைப்பு மட்டும் இதில் முக்கியமல்ல.''

''வேறு யார் நினைப்பு? உங்கள் நினைப்பா?''

''அதைப்பற்றிக் கவலை இல்லை. சமூகத்தின் நினைப்பு.'' இதைக் கேட்ட அவள் மிக மெதுவாக நகைத்தாள். அவன் கழுத்தைச் சுற்றி தனது இரு கைகளையும் போட்டுக் கட்டினாள். ''இப்பொழுது சமூகம் என்ன சொல்கிறது பார்ப்போம்'' என்று சொன்னாள் சிரித்த வண்ணம்.

என்னதான் திட சித்தமுடையவனாக இருந்தாலும் அனந்தின் உணர்ச்சிகள் கலங்கவே செய்தன, அந்தக் காரிகையின் துணிகர அணைப்பால். அடுத்த கணம் அவள் கைகள் அவன் முகத்தைக் கீழே இழுத்துத் தலையைத் தனது மடியில் படுக்கவைத்துப் பிடித்தன. அந்த நிலையில் அவள் கால்களின் திண்மை இணைப்பு அளித்த சுகத்தில் அவன் அசையாமல் கிடந்தான். அவனை நோக்கிக் குனிந்து ''கண்ணை மூடிக்கொள்ளுங்கள்'' என்று கூறினாள் அந்தப் பெண்.

''எதற்கு?''

''சமூகத்தைப் பார்த்துப் பயப்படாமல் இருக்க.''

''விளையாடும் விஷயமல்ல இது.''

''வேறு என்ன விஷயம்?''

''உன் கௌரவத்தைப் பற்றிய விஷயம்.''

''அதற்குப் புதிதாக என்ன குறைவு வந்து விட்டது இப்போது?'' என்று வினவிய அந்தப் பெண் அனந்தின் நெற்றியில் தன் இதழ் களைப் புதைத்து மீண்டாள்.

''எந்தக் குறையும் வரவில்லை சாரு. நீ தூய்மையானவள். ஆனால்...'' என்ற அனந்தை அவள் இடை மறித்தாள்.

''இந்திரஜித்! என் தூய்மையை நீங்கள் ஒப்புக்கொள்ளலாம். நீங்கள் சொல்லும் சமூகம் ஒப்புக்கொள்ளாது. இந்த மலைக் குடிசையில் தனியாக வசிக்கிறேன். மாதத்துக்கு ஒரு முறையாவது நீங்கள் இங்கு வந்து போகிறீர்கள். இருமுறை உங்கள் நண்பர் வந்து போகிறார். இது ரொம்ப கௌரவத்தை எனக்கு அளிக்கும் என்று நினைக்கிறீர்களா? இல்லை, உங்கள் இருவர் எதிரிகளும் கண்ணை மூடிக்கொள்வார்கள் என்று நினைக் கிறீர்களா? விஜய துர்க்கவாசி களுக்கு நான் ஒரு வேசி. ஒழுக்கம் கெட்டவள். அந்த நினைப்பில் இந்தக் குடிசைக்கெதிரே இரண்டு மூன்று வாலிபர்கள் நடமாடியது



உண்டு. ஆனால், அவர்கள் என்னை அணுக முயன்ற நேரத்தில் உங்கள் நண்பர் வந்தார். அவர் வந்ததும், அவர்கள் மறைந்து விட்டார்கள். அப்புறம் யாரும் வரவில்லை, பயத்தால். உங்கள் நண்பரை நினைத்தால் மொகலாய சாம் ராஜ்யமே நடுங்குகிறதே, சாதாரண மக்கள் நடுங்க மாட்டார்களா? அதற்குப் பிறகு யாரும் இங்கு வருவதில்லை. தூரத்திலிருந்து கையைக் காட்டி ஏதோ சொல்கிறார்கள். நான் திரும்பிப் பார்த்தால் ஓடிவிடுகிறார்கள். என் கௌரவம் என்றோ மலையேறி விட்டது. அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால், ஒரு கவலை இருக்கிறது எனக்கு'' என்று கூறினாள் அந்தப் பெண்.

''என்ன கவலை சாரு?'' என்று வினவினான், அனந்த் துக்கம் துளிர்த்த குரலில்,

''நீங்கள் இருவரும் என்னை என்றாவது ஒரு நாள் கைவிட லாம் என்ற கவலை'' என்றாள் சாரு.

''அந்தக் கவலை அர்த்தமற்றது. அதை அகற்றிவிடு உன் உள்ளத்திலிருந்து'' என்றான் அனந்த்.

''அப்படியா? அர்த்தமற்றதா?'' என்று வினவிய சாரு, ''வாருங்கள் உள்ளே போகலாம். பனி விழ ஆரம்பித்து விட்டது'' என்று கூறிக்கொண்டே அவனைத் தன் மடியிலிருந்து எழுப்பி உட்கார வைத்துவிட்டுத் தானும் எழுந்திருந்தது குடிசைக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றாள். உள்ளே சென்ற சாரு, அனந்த் உள்ளே வந்ததும் குடிசைக் கதவை மூடி விளக்கை ஏற்றினாள்.

அந்தச் சிறு விளக்கிலும் சாரு அப்ஸரஸ் போல் நின்றாள். அவள் சந்திர முகத்தின் இரு கருவிழிகளும் சிறு விளக்கொளியிலும் ஆசையைக் கொட்டின, அனந்தை நோக்கி. சீறி நின்ற மார்பகம் உடலின் அமைப்புக்குச் சிறிது அதிகமாயிருந்தது. அப்படி அதிகமாயிருந்ததாலேயே அதன் அழைப்பும் அதிகமாயிருந்தது. சிம்மாதனத்தில் ஏறி உட்காரக் கூடிய தோரணை அவளிடம் இருந்தது. கால்களின் திண்மையும் அவை இணைந்த இடங்கள் இடம் கொடுத்த ஊகங்களும் யாரையும் சீரழித்து நிலைகுலையச் செய்யும் தன்மையைக் கொண்டிருந்தன.

அந்த அழகைக் கண்ட அனந்த் பெருமூச்செறிந்தான். ''இத்தனை அழகுக்கு அநாவசியமான அவமானமா? இவள்

கண்ணியத்தை இவள் கண்களே பறை சாற்றுமே. அந்தக் கண்களை ஏன் பார்க்கவில்லை சமுதாயம்?'' என்று கேட்டுக் கொண்டான் இந்திரஜித்.

அவன் முகத்தில் துளிர்த்த ஆவலையும் அதை அவன் அடக்கிக்கொண்டதையும் கவனித்த சாரு சிறிது நகைத்தாள்.

''ஏன் நகைக்கிறாய் சாரு?'' என்று வினவினான் அனந்த்.

''கிட்டே இருப்பவர் என்னை அணுக அஞ்சுகிறார். தூர இருப்பவர்கள் என்னை அணுக இஷ்டப்படுகிறார்கள். ஆனால், அவர்களும் உங்களிடமுள்ள அச்சத்தால் விலகி நிற்கிறார்கள். இப்படி வேறுபட்ட அச்சத்தின் அம்சங்களால் எனக்கு இந்தக் குடிசையில் நிரந்தரத் துறவறம்'' என்று கூறினாள் சாரு.

பிறகு குடிசையின் மூலைக்குச் சென்று ஒரு பாயை எடுத்து வந்து விரித்துப் போட்டாள். ''படுத்துக் கொள்ளுங்கள், விடிவதற்கு முன்பு நான்கு நாழிகையாவது உறங்கலாம்'' என்றும் சொன்னாள்.

''நீ?'' என்று கேட்டான் அனந்த்.

''நான் வெளியே உட்கார்ந்திருக்கிறேன்'' என்ற சாரு வெளியே செல்ல முற்பட்டாள்.

அவளைக் கையைப் பிடித்து இழுத்து நிறுத்தினான் இந்திரஜித். ''நீ படுத்துக்கொள்'' என்று பாயைக் காட்டினான்.

முடியாது என்பதைக் குறிக்கத் தலையை அசைத்தாள் அவள். உள்ளே உடைந்து கொண்டிருந்த அவள் இதயத்தைக் கவனித்தான் அனந்த். சட்டென்று அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

அந்த அணைப்பு கடுமையாயிருந்தது. ஆனால், அதில் ஒரு வித்தியாசமும் இருந்தது. அதை சாரு உணர்ந்து கொண்டாள்.

அத்தியாயம் – 33

# ஆயிரம் கண்கள்!

பெண்களின் இதய ஆழத்தைத்தான் ஆண்களால் கண்டு பிடிக்க முடிவதில்லையே தவிர, ஆண்களின் மன ஓட்டத்தை அரை விநாடியில் பெண்கள் புரிந்துகொள்கிறார்கள். தான் விரும்பும் புருஷன் தனக்கு எப்பொழுது முழுதும் சொந்தம், எப்பொழுது அடியோடு சொந்தமில்லை, எப்பொழுது அவன் மனம் அரை குறையாகத் தன்னிடம் ஈடுபட்டிருக்கிறது என்ற விஷயங்களைப் பெண் வெகு எளிதில் உணர்ந்து கொள்கிறாள்.

அனந்த் அந்த இரவில் சாருவை அணைத்தபோது, அணைப்பு கடுமையாய் இருந்தாலும், அந்தக் கடுமையில் உடல் வலு இருந்ததேயொழிய, உள்ளத்தின் ஈடுபாடு அதிகம் இல்லை யென்பதை அவள் சந்தேகமறப் புரிந்துகொண்டாள். அவன் மனத்தில் இன்னொரு பெண்ணும் குடிபுகுந்திருக்கவேண்டும் என்பது சந்தேகத்துக்கு இடமின்றி அவள் கூரிய அறிவுக்குத் தெள்ளெனத் தெரிந்தது.

இத்தனைக்கும் இந்திரஜித் அவளை அன்றிரவுதான் மும்முர மாக அணைத்தான். எத்தனையோ நாட்கள் அவளிடம் பழகியிருந்தும் அவன் இத்தனை கடுமையாக அவளை அணைத்ததில்லை. அவன் சொற்கேட்டு, அவனுக்கு உதவுவதற்காகவே அவள் மகாராஷ்டிர சாம்ராஜ்யத்துக்குப் பணிபுரியும் அலுவலில் ஈடுபட்டு, அதற்காக அந்தக் குடிசைக்கும் வந்து விஜய துர்க்க விட புருடர்களின் பார்வைக்கும் பரிகாசத்துக்கும் இலக்காகியிருந்தாள். மகாராஷ்டிரர் களின் பெரிய வம்சங்களில் ஒன்றும், மகாராஷ்டிர மன்னர்கள் சேவையில் முதல் அணியில் நின்றதுமான கோர்படே வம்சத்தவளும், மகாராஷ்டிரப் பணிக்காகவும், முக்கியமாக அனந்தின் விருப்பத்தை நிறைவேற்றவும் தன் பெயரைக் கெடுத்துக் கொண்டவளுமான சாரு, அன்றிரவு தனக்கு அனந்த் பூரண சொந்தமில்லை என்பதை

அறிந்து கொண்டதால் துன்பப் பெருமூச்சொன்று அவள் இதயத்திலிருந்து கிளம்பி நாசி மூலம் வெளி வந்தது.

'இதற்கு முன்பு இவர் என்னை லேசாகத் தொட்டாலே நடுங்குவார். இவர் கைகள் லேசாக என்னைச் சுற்றுமே தவிர உடலை இறுக்காது. இவர் பார்க்கும் பார்வையும் காட்டும் பயமும் இவர் அன்பை வெளிப்படுத்தும். அப்படி இருக்க இன்று இந்த திடீர் மாறுதல் ஏன் ஏற்பட்டது? இவர் கொள்ளைக்காரராக இருக்கலாம். ஆனால், பண்பு கெட்டவரல்லவே? வேறு யாரோ ஒருத்தியை மறக்க முயலுகிறார். முடியாததால் திண்டாடுகிறார். அவளிடம் காட்ட வேண்டிய வேகத்தை என்னிடம் காட்டுகிறார்' என்று தீர்மானமாக எண்ணிக் கொண்டே சாருபாய் வெறும் மரக் கட்டைபோல் நின்றாள்.

சாருவின் பூவுடல் தனது அணைப்பினால், அணைப்பு மூட்டி விட்ட உணர்ச்சிகளால் சிறிது கடினப்பட்டு விட்டதையும் தனது மார்பில் இழைந்த அழகுகள் அணைத்த இரு விநாடிகளில் உணர்ச்சியால் சலித்தனவென்றாலும், அந்தச் சலனமும், சலனம் துலங்க வைத்த வேட்கையும் சட்டென்று விலகிவிட்டதையும் இந்திரஜித் கவனிக்கவே செய்தான். மகாபுத்திசாலியான சாரு தனது உள்ளத்தை அளந்து விட்டாள் என்பதையும் புரிந்து கொண்டான் இந்திரஜித். இருப்பினும் அவளைத் தேற்றவும் திரும்பவும் அவளிடம் தனக்குள்ள அன்பை வெளிப்படுத்தவும் எண்ணி, ''சாரு!'' என்று மெதுவாக அவளை அழைத்தான்.

''என்ன!'' சாருவின் குரலில் குழைவு ஏதுமில்லை. சொல் சர்வ சாதாரணமாக வெளிவந்தது.

''நீ மாறிவிட்டாய்'' என்றான் அனந்த்.

சாரு பதில் சொல்லவில்லை. இரைந்து நகைக்கவும் இல்லை. துன்பப் புன்முறுவல் செய்து கொண்டாள். அவள் முகம் அவன் மார்பில் புதைந்து கிடந்ததால், அனந்த் அவள் புன்முறுவலைக் காணமுடியவில்லையென்றாலும் புரிந்து கொண்டான்.

''சாரு!'' மீண்டும் அழைத்தான் இந்திரஜித்.

''உம்'' இம்முறை ஒரு உம் பதிலாக வெளிவந்தது.

''நீ மாறிவிட்டாய் என்று சொன்னேன்'' என்று சுட்டிக் காட்டினான் இந்திரஜித்.



''ஆம், சொன்னீர்கள்?''

''நீ பதில் சொல்லவில்லை.''

''நீங்கள் கேட்டது கேள்வி அல்லவே.''

''நன்றாகப் பேசக் கற்றுக்கொண்டிருக்கிறாய்.''

''வேவு பார்ப்பவளுக்கு வாய் சாதுரியம் முக்கியம்.''

''என்னையும் வேவு பார்க்கிறாய் போலிருக்கிறது?''

''எதைப் பற்றி?''

இதற்குப் பதில் சொல்லத் தெரியவில்லை இந்திரஜித்துக்கு. ஆகையால் அவளை மேலும் இறுக்கினான் தனது கைகளால்.

அப்பொழுதும் அவள் எந்த உணர்ச்சியையும் காட்டவில்லை. ''அனந்த்'' என்று மட்டும் அழைத்தாள்.

''ஏன் சாரு?'' அவன் பதிலில் சிறிது பயம் இருந்தது.

''நான் உங்களுக்கு முறைப் பெண்.''

''ஆம்.''

''அதனால் நாம் ஒருவரையொருவர் ஏமாற்ற அவசியமில்லை.''

''அவசியம் இருப்பதாக யார் சொன்னது?''

''எது சொன்னது என்று கேளுங்கள்.''

''எது?''

''உங்கள் அணைப்பு. இது ஒரு பாசாங்கு. நீங்கள் பழைய அனந்த் இல்லை.'' இதைத் திட்டமாகச் சொன்னாள் அவள்.

அனந்த் சிறிது குழப்பத்துக்கு உள்ளானான். அவன் உள்ளத்தே கடல்ராணியின் கட்டழகு முகத்தின் கனிவாயிதழ்கள் திறந்தன, நகைத்தன. கண்கள் சிரிப்பைக் கொட்டின. அதனால் அவன் உடல்ஒருமுறை நடுங்கியது. சாருவை அணைத்த கைகள் தாமாக விலகின. தனது இரு கைகளால் அவள் இருதோள்களைப் பிடித்துச் சற்று எட்ட அவளை நகர்த்தி அவள் முகத்தை ஆராய்ந்தான்.

குடிசையின் சிறு விளக்கில் அந்த முகம் உள்ளிருந்த துன்பத்திலும் மிக அழகாக இருந்தது. அதில் விரிந்து கிடந்த சோகம் அதற்குத் தனி மெருகைக் கொடுத்திருந்தது. கடல்ராணியின்

வெடிக்கும் துணிவு அதில் இல்லைதான். ஆனால், ஆழ்ந்த சித்தமும், அழுத்தமான எண்ணமும், எதையும் வெளிக்கு உடனடியாகக் காட்டாத திறனும் அந்த முகத்தில் எழுதி ஒட்டியிருந்தன. சாருவை ஏமாற்றக்கூடியவன் இனிமேல் உலகத்தில் பிறக்கவேண்டும் என்பதை உணர்ந்த இந்திரஜித், அவளைத் தன் பிடியிலிருந்து அடியோடு அகற்றி அறையில் சிறிதுநேரம் அர்த்தமின்றி உலாவி னான். குடிசையின் பக்க ஓலைகளையும் காட்டு மரக்கொம்பு களையும் தட்டிக் கொடுத்துக்கொண்டு குடிசையைச் சுற்றிவந்தான். பிறகு குடிசையின் ஓலைச் சுவரைப் பார்த்தவண்ணம் நின்று கொண்டு சொன்னான்: ''நான் உன்னை அணைத்தது பாசாங்கல்ல'' என்று.

அவள் அதை மறுத்து ஏதும் சொல்லவில்லை. அவனே பேசினான்: ''சாரு! மனித வாழ்வில் பல விசித்திரங்கள், பல திருப்பங்கள் ஏற்படுகின்றன. அவை ஏன் ஏற்படுகின்றன என் பதை மனிதனால் நிர்ணயிக்க முடியவில்லை. மனிதன் விதியின் கைப்பாவை. அது இயக்குகிறபடி இயங்குகிறான். அத்தகைய ஒரு விதிதான் என்னை கார்வாருக்கு அனுப்பியது, வெள்ளையர் படையை முறியடிக்க. அதுதான் ஸில்வரை நண்பனாக்கியது. அதுதான் என்னை சிந்துதுர்க்கத்துக்கு அனுப்பியது. அதுதான்...''

பேச்சை முடிக்கவில்லை இந்திரஜித். அவன் மனக்கண்ணில் கடல்ராணி நீந்தி எழுந்து அந்த அறைக்கு வந்தது, தன்னை வெளியே அனுப்பி ஆடை புனைந்தது, ஸ்டாண்டனும், ஸ்மித்தும் அவளைக் கவர முயன்றது அனைத்தும் எழுந்தன. அதனால் சொப்பனத்தில் பேசுவதுபோல் பேசினான்:

''பாஜிராவின் உத்தரவுப்படி நானும் துலாஜியும் திட்ட மிட்டுத்தான் சகலத்தையும் செய்தோம். முதலில் பிரிட்டிஷ் வர்த்தக கம்பெனிக்குச் சொந்தமாக இருந்து பிறகு கொள்ளைக் காரர் கைக்கு மாறிய காஸண்ட்ரா என்னும் மகத்தான கப்பலும் எங்கள் கைகளில் சிக்கியிருக்கிறது. இன்னும் ஒரே மாதம்தான், அதற்குள் நானும் துலாஜியும் எண்ணியதை முடிக்கவேண்டும். இடையில்தான் இந்த எதிர்பாராத சிக்கல்'' என்று.

அதுவரையில் குடிசையின் கீற்றுப்பகுதியைப் பார்த்துக் கொண்டிருந்த அனந்த் பெருமூச்சு விடுவதையும் பேசத் தயங்கு வதையும் ஏறி இறங்கிய அவன் தோள்கள் வலியுறுத்தின . அதைக்



கண்ட சாருவின் இதயத்தில் அனுதாபம் பொங்கி வழிந்தது. ''யாரிடம் சிக்கிக்கொண்டீர்கள்?'' என்று அவள் வினவினாள்.

''விதியிடம்?'' என்றான் அனந்த் திரும்பி அவளைப் பார்க்காமலே.

''விதியின் பெயர் என்ன?'' என்று கேட்டாள் சாரு. அவள் குரல் மிகவும் திடமாக இருந்தது. உணர்ச்சிப் புரவிக்கு முழுக் கடிவாளத்தையும் போட்டுவிட்டாள் சாரு. அதனால் சர்வ சாதாரண மாகச் சொன்னாள்: ''சிந்துதுர்க்கத்தின் தலைவி ஒரு கடற்கொள்ளைக் காரி. அவள் தரையிலும் கடலிலும் இணையற்ற ஒரு வீரனைச் சிறைப்படுத்திவிட்டாள்'' என்று.

இதைக் கேட்ட இந்திரஜித் ஏதோ விசையால் திருப்பப்பட்ட பதுமையென திடீரெனத் திரும்பினான். ''சாரு! சொல்வதைத் திட்டமாகச் சொல்'' என்று பேச்சில் உஷ்ணத்தையும் காட்டினான்.

சாரு அவனை நன்றாக ஏறெடுத்து நோக்கினாள். சற்று நிமிர்ந்தும் நின்றாள். அவள் பார்வையுடன் தன் பார்வையை இணைக்க இந்திரஜித்தால் முடியாததால் வேறுபக்கம் பார்த்தான். அவன் பலவீனத்தையும் பயத்தையும் உணர்ந்து கொண்டாள் சாரு. பாரதத்தின் நாரீமணிகள் சமயத்தில் எத்தனை தூரம் உயரமுடியும் என்பதற்கு அத்தாட்சியாக அன்று அவள் விளங்கினாள். அவள் கண்களில் ஓர் அமைதி குடிகொண்டிருந்தது. நின்றதில், கோர்படே வம்சத்தின் பெரும் தோரணையும் துணிவும் காணப்பட்டன. ''துலாஜி, கனோஜி ஆங்கரேயின் புதல்வர். நீங்கள் அவர் சீடர்.'' இதை மிக நிதானமாகவும் அழுத்தியும் சொன்னாள்.

''அதனால்?''

''கனோஜியின் உபதேசத்தைப் பின்பற்றுகிறீர்கள்.''

''எனக்கு ஒரு உபதேசமும் செய்யவில்லை அவர்.''

''தனியாக உபதேசம் செய்யவில்லை.அவர் கோட்பாடுகள் உலகம் அறிந்தவை. கடலோடும் மாலுமி கிடைத்த இடங்களில் சுகத்தை அனுபவிக்கவேண்டும் என்று பறைசாற்றியிருக்கிறார். தஞ்சையிலிருந்து சில ஆண்டுகளுக்கு முன்பு கொங்கணியின் கடற்கரையில் கிடந்து கனோஜியிடம் சேர்ந்து கொண்டானாமே ஒரு

தமிழன் *இதயசந்திரன், அவனுக்கும் நமது +ஸார்கேல், இதே உபதேசத்தைத்தான் செய்தாராம். அந்த வழியில் நீங்களும் செல்கிறீர்கள்'' என்ற சாருதேவி அவன் பதிலை எதிர்பார்த்து நின்றாள்.

''கனோஜியின் தத்துவத்தை நான் ஒப்பவில்லை.'' இதைக் கடுமையாகச் சொன்னான் இந்திரஜித்.

''தத்துவம் உங்களை ஒப்புக்கொள்கிறது'' என்று கூறிய சாரு சிறிது தாமதித்துவிட்டு ''கடல்ராணியைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்றும் சொன்னாள்.

''அவளைப் பற்றிக் கேள்விப்படாதவர்கள் யார்?'' என்றான் இந்திரஜித் ஏதோ சொல்லவேண்டுமென்பதற்காக.

''கேள்விப்படுவது வேறு, நேரில் பார்ப்பது வேறு. நேரில் பார்ப்பது வேறு, ஈடுபடுவது வேறு'' என்ற சாரு, ''எனக்குப் புரிகிறது உங்கள் நிலை'' என்றும் கூறினாள்.

''புரியவில்லை உனக்கு?'' என்ற அனந்த் சீற்றத்துடன் சாருவை நோக்கினான். ''உன் நிலைக்குத்தான் அவளும் வந்துவிட்டாள்'' என்றான். மேலும் தொடர்ந்தான்: ''சாரு! நான் சொல்வது உனக்கு விளங்காது. விளங்கினாலும் ஒப்புக் கொள்ளமாட்டாய். நான் மட்டுமல்ல, கடல் ராணியும் எதிர்பாராத நிகழ்ச்சிகளுக்குப் பலியானாள். மகாராஷ்டிர சாம்ராஜ்ய நன்மையை முன்னிட்டு அவளுடன் நான் தனித்திருக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் பல ஏற்பட்டன. அவள் பெயரும் என்னால் கெட்டுப் போகும் நிகழ்ச்சிகளை நானும் துலாஜியுமே சிருஷ்டித்தோம். எனக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. சாரு எதைச் சொன்னாலும் நீ நம்பப் போவதில்லை. ஆனால், ஒன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உன்னை நாடரியக் கைப்பிடித்த பின்புதான் இன்னொருத்தியைப் பற்றி யோசிப்பேன்...''

அவன் சொற்களில் உணர்ச்சி இருந்தது, சத்தியம் இருந்தது. அதை சாரு கவனித்தாலும் அவள் பெண் உள்ளத்திலிருந்த அமைதி கலந்த சீற்றம் குறையவில்லை. சீற்றத்தைச் சிறிதளவும் வெளியே காட்டாமலே சாரு கூறினாள்: ''எந்தக் கட்டாயத்துக்கும் உங்களை ஈடுபடுத்த நான் விரும்பவில்லை'' என்று

* இந்த விவரங்கள் 'ஜலதீபம்' என்ற நூலில் காணப்படும்.

+ ஸார்கேல்- மகாராஷ்டிர கடற்படைத் தலைவர்.



அனந்துக்குப் புரிந்துவிட்டது அவள் மனநிலை. இனி சாரு தன் கைப்பாவையில்லை என்று தீர்மானித்துக்கொண்டான். அவளுக்கும் தனக்கும் இடையே பெரும் அகழியொன்று சிருஷ்டிக்கப்பட்டதை உணர்ந்துகொண்டான். ஆகவே மேலும் தங்கள் பரஸ்பர உறவை வலியுறுத்துவதில் அர்த்தமில்லை என்பதால் வருத்தத்துடன் பெருமூச்செறிந்தான்.

''சரி சாரு! நீ படுத்துக்கொள். நான் வெளியே போகிறேன்'' என்று குடிசைக் கதவை நோக்கிக் காலை எடுத்துவைத்தான். அப்போது கேட்டது ஒரு புரவியின் குளம்படிகள். புரவி ஒரே சீராக நடை போடவில்லை. சில சமயங்களில் சருகுகள் சத்தமிட்டன. சில சமயங்களில் மலைச்சரிவில் அது கால்களை மாற்றி வைத்துச் சறுக்கும் சப்தமும் கேட்டது.

''நான் இங்கு வந்திருப்பது அவருக்குத் தெரியுமா?'' என்று வினவினான் இந்திரஜித்.

''வரப்போவது தெரியும்'' என்று திருத்தினாள் சாரு.

''திட்டமாக இன்றுதான் வருவேனென்பது...?''

''தெரியும்.''

''எப்படி?''

இதைக் கேட்ட சாரு மெள்ள நகைத்தாள். ''இந்த வேலைக்கு நீங்கள் சாருவை நியமித்தபோது சிறிது யோசித்திருக்கவேண்டும். எனக்கு ஆயிரம் கண்கள் இருக்கின்றன. எங்கும் எதையும் ஏககாலத்தில் பார்க்கமுடியும்'' என்றாள் சாரு நகைப்பின் ஊடே. அதே சமயத்தில் வாயிலில் வந்து நின்றது ஒரு புரவி. அதிலிருந்து இறங்கிய மனிதர் குடிசைக் கதவைத் திறக்கவில்லை, தட்டினார் மெதுவாக.

சாருவே கதவைத் திறந்தாள். மொகலாய சாம்ராஜ்யத்தின் அஸ்திவாரத்தை ஆட்டிய பேஷ்வா பாஜிராவ் உள்ளே நுழைந்தார். தீட்சண்யமான கண்களை இருவர் மீதும் ஓடவிட்டார். ''புரிகிறது'' என்றார். புன்முறுவல் கொண்டார். இந்திரஜித் அனந்த் அவருக்குத் தலை வணங்கினான்.

''ஆயிரம் கண்ணி என்ன சொல்கிறாள்?'' என்று வேடிக்கையாகக் கேட்கவும் செய்தார் பேஷ்வா பாஜிராவ்.

## அத்தியாயம் - 34

# காமுகர் மூவர்!

பதினாறு வயது பால பருவத்திலேயே யாரும் எட்டுதற்கரிய பேஷ்வா பதவியை அடைந்து மகாராஷ்டிரத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவரும், பாதி வாழ்நாட்களைப் படைகளின் முகாம்களிலேயே கழித்துவிட்டவரும், சிறு பொறியாயினும் வைக்கோல் போரை அழிப்பதுபோல் சிறு வயதாயினும் பெரிய மொகலாய சாம்ராஜ்யத்தைப் பெரிதும் அழித்துவிட்டவரும், போர்க்களத்தில் மட்டுமின்றிக் காமக் களத்திலும் வீரனென்று பெயர் பெற்று ஸ்திரீலோலனென்று அழைக்கப்பட்டவருமான பாஜிராவ், சாருபாயின் குடிசை அளித்த சிறு விளக்கின் மங்கலான ஒளியிலும் மிகக் கம்பீரமாக நின்றார்.

அவரது நீண்ட கூர்மையான நாசியும், அரும்பாகக் கத்திரிக்கப் பட்டிருந்த மீசையும், ஒல்லியான உயர்ந்த சரீரமும், கருடனுடைய கண்களைப் போல் சலனமற்ற கூரிய பார்வையுடைய கண்களும், அவர் உலகத்தையே ஆளப்பிறந்தவர் என்பதை நிரூபித்தன. உதட்டிலிருந்த ஒருதனிப்பட்ட உரமும் லேசான புன்முறுவலுங்கூட அவர் திடமனத்தையும் உறுதியையும் எடுத்துக்காட்டின. மெல்லிய கால்களும், அவர் அணிந்திருந்த மொகலாயச் செருப்பும் பாதங் களை ஊன்றியிருந்த திடமும் பார்ப்பவர் யாருக்கும் அச்சத்தை விளைவிப்பதாக அமைந்திருந்தன. அவர் இடைக்கச்சையில் கட்டியிருந்த வளைந்த மகாராஷ்டிர வாளின் பிடியில் எந்தவித வேலைப்பாடும் இல்லாமலிருந்தாலும், அது பெரிய வீரனுடைய வாளென்பதற்கு அதன் பிடி அன்றாடம் துடைக்கப்பட்டதால் பளிச்சென்றிருந்ததே அத்தாட்சியாயிற்று.

பாஜிராவ் தமது வாளையும், பிற ஆயுதங்களையும் பிரதி தினம் தாமே துடைத்துச் சரிபார்ப்பவர் என்பதும், அவரது மாட்ச்லாக் துப்பாக்கியின் குதிரைகூட அன்றாடம் அவராலேயே பரிசோதிக்கப்பட்டு எந்த அவசரத்துக்கும் தயாராக வைக்கப்



பட்டிருந்ததென்பதும் மகாராஷ்டிரத்தில் சாதாரணமாகத் தெரிந்த விஷயம்.

சில வேளைகளில் பாஜிராவ் இரண்டே இரண்டு வீரர்களுடன் பூனாவின் வீதிகளில் வருவார். அப்பொழுதெல்லாம் அவர் புரவியில் செங்குத்தாக உட்கார்ந்த முறையும், கையில் பிடித்த கடிவாளத்தை ஒரு பொருட்டாகக் கருதாமல், அதைத் தளரவிட்டே பவனிவரும் அழகும் மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண் டிருந்தன. பேஷ்வாவாக அவர் பதவி ஏற்ற நாள் முதலே துவங்கி விட்ட ராணுவ நடவடிக்கைகளும், துரிதமாக அடைந்த வெற்றி களும் 'இனிமேல் யாராலும் மகாராஷ்டிரத்துக்குப் பயமில்லை' என்ற உறுதியை மக்களிடையே ஏற்படுத்தியிருந்தது. மக்கள் பாஜிராவைத் தெய்வமாகப் பாவித்து வந்தார்கள்.

அப்படி மகாராஷ்டிர மக்களின் அன்புக்கும் மொகலாயரின் திகிலுக்கும் பாத்திரமான பேஷ்வா அந்தக் குடிசையில் அந்த இரவில் சாதாரணப் பிரஜைபோல் நின்றிருந்தார். ''நான் வருவதற்குச் சிறிது நேரமாகிவிட்டது சாரு'' என்று மன்னிப்புக் கேட்டுக்கொண்ட பாஜிராவ், ''சாரு! தாகமாயிருக்கிறது, அருந்துவதற்கு ஏதாவது வைத்திருக்கிறாயா?'' என்றும் கேட்டார்.

''தங்களுக்குத் தனியாக வாங்கி வைத்த மதுக் குப்பி இருக் கிறது'' என்று கூறிய சாரு, ''பேஷ்வா! வரவர நீங்கள் அளவுக்கு மீறிக் குடிக்கிறீர்கள். இது நல்லதல்ல'' என்றும் சொன்னாள் வருத்தம் கலந்த குரலில்.

''சாரு....'' அன்புடனும் குழைந்த குரலிலும் அழைத்தார் பாஜிராவ்.

''என்ன?'' என்று சற்றுக் கடுமையுடன் கேட்டாள் சாரு.

''இந்த ஒருமுறை மட்டும் சிறிதளவு...'' என்று கெஞ்சினார் பேஷ்வா.

''இப்படித்தான் ஒவ்வொரு முறையும் சொல்கிறீர்கள்....'' என்று கடிந்துகொண்ட சாரு, ''பேஷ்வா! நீங்கள் தனி மனிதனல்ல'' என்றும் கூறினாள்.

பேஷ்வா தமது கண்களாலேயே அவளைப் பார்த்து நகைத் தார். ''சாரு! தனியாகத்தானே வந்திருக்கிறேன்'' என்று சொல்லவும் செய்தார்.

''எப்படி வந்தாலும் நீங்கள் உங்கள் சொத்தல்ல....''

''வேறு யார் சொத்து?''

''மகாராஷ்டிர மக்களின் சொத்து! லட்சக்கணக்கான மக்களின் பாதுகாப்பு, மானம் எல்லாம் உங்கள் கையில் இருக்கின்றன...''

''இல்லை சாரு! மனிதர்கள் எல்லோரும் தாங்கள்தான் சாதனை புரிவதாக நினைக்கிறார்கள். ஆனால், உண்மை அதுவல்ல. சர்வ வல்லமையுள்ள மகாசக்தி காப்பாற்றுகிறாள். பவானி மாதாவின் கருணையால் மகாராஷ்டிரம் காப்பாற்றப்படுகிறது'' என்ற பேஷ்வா, ''சாரு! இங்கே இந்தக் குடிசைக்குள் பேசுவானேன்? குப்பியையும் அந்த மரக் குவளையையும் எடுத்துக்கொண்டு வெளியில் வா. இயற்கைச் சூழ்நிலையில், ஸஹ்யாத்ரி மலைத் தொடரின் உச்சியும் கடலும் அளிக்கும் குளிர்ந்த காற்றில் பேசுவோம்'' என்று கூறிவிட்டு, கீழே விரிக்கப்பட்டிருந்த பாயைக் கவனித்தார் பேஷ்வா. ''ஒருவேளை நான் அசந்தர்ப்பமாக வந்துவிட்டேனோ?'' என்று கேட்டார், மௌனமாகவே நின்று கொண் டிருந்த இந்திரஜித் அனந்தை நோக்கி.

அனந்தின் இதழ்களில் துன்பப் புன்முறுவல் ஒன்று உதயமாயிற்று. ''இல்லை பேஷ்வா! எந்த அசந்தர்ப்பத்துக்கும் இங்கு இடமில்லை'' என்று வெடுக்கென்று கூறிவிட்டுக் குடிசைக் கதவைத் திறந்துகொண்டு வெளியே சென்றான்.

பேஷ்வாவும் அவனைப் பின்தொடர்ந்தார். இருவரும் குடிசை வாயிலில் உட்கார்ந்ததும் பேஷ்வா தமது கண்களைச் சுற்று முற்றும் ஓடவிட்டார். ''என்ன அழகான இடம்! ஸஹ்யாத்ரி மலைத் தொடரின் கவர்ச்சிமிக்க உச்சி, சுற்றிலும் காடு, அதோ கீழே விஜயதுர்க்கம். அனந்த்! நமது சாரு மிகவும் அதிர்ஷ்டசாலி'' என்று கூறினார்.

அப்பொழுது கிருஷ்ணபக்ஷத்துச் சந்திரன் நன்றாகப் பிரகாசிக்கத் தொடங்கிவிட்டதால் எங்கும் மோகனாகரமான சூழ்நிலை நிலவலாயிற்று. பாதாளத்தில் தெரிந்த விஜயதுர்க்கத்தின் கோட்டைச் சுவர்களும், அவற்றை மோதிய கடலலைகளுங்கூட சந்திர வெளிச்சத்தில் பளிச்சிட்டன.

பேஷ்வா ரசித்துக்கொண்டிருந்த சமயத்தில் சாரு உள்ளிருந்து மதுக் குப்பியுடனும் மரக் குவளையுடனும் வெளியே வந்தாள்.



அவள் உட்கார மத்தியில் இடம்விட்டு இருவரும் சிறிது நகர்ந்து கொள்ளவே, அவர்களுக்கு நடுவில் உட்கார்ந்துகொண்ட சாருபாய் மரக்குவளையில் சிறிது மதுவை ஊற்றி பாஜிராவுக்குக் கொடுத்து விட்டு அனந்தை நோக்கினாள். வேண்டாம் என்பதற்கு அடையாளமாக அனந்த் தலையசைத்ததால் குப்பியைத் தனக்குப் பின்னாலிருந்த குடிசைக் கதவுக்கருகில் வைத்தாள் சாரு.

பல விநாடிகள் மூவரில் ஒருவரும் பேசவில்லை. மௌனமே சாதித்தார்கள். அந்த மௌனத்தில் காட்டு ஜந்துக்களின் அரவமும் பாஜிராவ் மதுவைக் குவளையிலிருந்து சிறிது சிறிதாக உறிஞ்சி நாக்கை நொட்டைவிட்டு ரசித்த சப்தத்தையும் தவிர வேறு எந்தச் சப்தமும் இல்லை. இப்படிச் சிறிது சிறிதாக மூன்று முறை மதுவை உறிஞ்சிய பாஜிராவ், ''பேஷ்! சாரு! இதை எங்கிருந்து வாங்கினாய்?'' என்று விசாரித்தார்.

''வாங்கவில்லை'' என்றாள் சாரு.

''யாராவது கொடுத்தார்களா?'' பாஜிராவின் கேள்வியில் சிறிது எச்சரிக்கை இருந்தது.

''ஆம்.''

''யார்?''

''தெரியாது!''

''தெரியாதா?''

''அடியோடு தெரியாது.''

''பின் எப்படி வந்தது இது?''

''நீங்கள் இங்கு வரும் ஒவ்வொரு நாளும் விடியற்காலையில் நான் கதவைத் திறக்கும்போது கதவுக்கு முன்னால் ஒரு குப்பியிருக்கும். அன்றிரவு நீங்கள் வருகிறீர்கள்.''

இதைக் கேட்ட அனந்த் அதிர்ச்சியடைந்தான். ''இதில் ஏதோ ஆபத்து இருக்கிறது'' என்றான்.

''மகாராஷ்டிரத்தில் எனக்கெப்படி ஆபத்து இருக்கமுடியும்?'' என்று கேட்டார் பாஜிராவ். மீண்டும் குவளையிலிருந்து சிறிது மதுவை உறிஞ்சினார்.

''பேஷ்வாவின் பதவி பெரிது'' என்று சுட்டிக் காட்டினான் அனந்த்.

''ஆம்.''

''அதைப் பெற உங்கள் தாயாதிகள் முயல்வார்கள்.''

''அதை நாம் தடுக்கமுடியாது!''

''அதற்காக எதையும் செய்வார்கள்.''

''அதையும் தடுக்க முடியாது.''

பேஷ்வாவின் அலட்சியமான பதில்களைக் கேட்ட அனந்த் சிறிது கோபம் கொண்டான். ''பேஷ்வா! உலகத்தில் தடுக்கக்கூடியது எதுவும் இல்லை. ஆனால், எச்சரிக்கையாக இருப்பதால் தவறில்லை. நீங்கள் தனியாக வெளியில் வருவதை நிறுத்துவது நல்லது'' என்றும் கூறினான்.

சாருவும் அனந்துடன் கலந்து கொண்டாள், பேஷ்வாவை எச்சரிப்பதில், ''பேஷ்வா! அனந்த் சொல்வதில் அர்த்தம் இருக்கிறது'' என்று கூறினாள்.

பேஷ்வா, சாருவின் முதுகைச் செல்லமாகத் தட்டிக் கொடுத்தார், தமது இடக்கையால். ''சகோதரி! எந்த வீரனுக்கும் உறுதுணை எது தெரியுமா?'' என்று வினவினார்.

''எது பேஷ்வா?'' என்று கேட்டாள் சாரு.

''அவன் உணர்ச்சிகள், இந்திரியங்கள், அவை எப்பொழுதும் எச்சரிக்கையாயிருக்கும் வரையில் ஆபத்தில்லை. சிறிது ஏமாந்தாலோ, உணர்ச்சிகள் உறங்கினாலோ, மன மயக்கம் கொண்டாலோ ஆபத்து நம்மை ஆட்கொள்ளும்'' என்ற பேஷ்வா, ''சாரு! இந்தத் தூங்குமூஞ்சி ஏன் இன்னும் உயிருடன் இருக்கிறான் தெரியுமா?'' என்று வினவினார் அனந்தைச் சுட்டிக் காட்டி.

சாரு பதில் சொல்லவில்லை, அவள் உள்ளத்தில் அனந்தின் இன்னொரு காதல் எழுந்து விளைவித்த சஞ்சலத்தால். அவள் சஞ்சலத்தை, பாஜிராவ் உடனடியாகப் புரிந்து கொண்டார். ஆனால், புரியாதது போலவே பேசினார். ''இவன் இன்று உயிருடன் இருக்கிறானென்றால் அதற்குக் காரணம் இவன் உறங்கும்போதும் உணர்ச்சிகள் துடிப்புடன் இருக்கின்றன. இவன் இயங்கும்போசு அசுர வேகத்தில் இயங்குகிறான்'' என்றும் விளக்கினார்.

அந்த விளக்கம் சாருவுக்குத் தேவையில்லாதது. அனந்தை அவள் மிக நன்றாகப் புரிந்து கொண்டிருந்தாள். ஆகையால் ''ஆம்' என்று மட்டும் சொன்னாள்.



''என்ன ஆம்?'' என்று கேட்டார் பேஷ்வா.

''எதிலும் வேகந்தான் இவர். சிந்து துர்க்கத்திலும் அப்படித் தான்'' என்றாள் சாரு.

பாஜிராவ் மிகுந்த உற்சாகத்துடன் திரும்பினார் அனந்தை நோக்கி. ''அனந்த், நானும் கேள்விப்பட்டேன். யார் அவள் கடல் ராணி?'' என்று கேட்கவும் செய்தார்.

''கடற் கொள்ளைக்காரி!'' என்றான் அனந்த்.

''இல்லை. மனக் கொள்ளைக்காரி'' என்று சாரு இடையில் புகுந்து பேசினாள்.

''என்ன சாரு?'' என்று பேஷ்வா கேட்டார் உற்சாகத்துடன்.

''இவர் மனத்தையும் கொள்ளை கொண்டிருக்கிறாள்'' என்றாள் சாரு.

அதை ஒரு பெரிய விஷயமாக நினைக்கவில்லை பாஜிராவ். ''அனந்த்! அவள் மிகவும் அழகா?'' என்று விசாரித்தார் ஆர்வத்துடன்.

''துஷ்டை!'' என்றான் அனந்த்.

''பிரமாதம்! பிரமாதம்!'' என்று குதூகலித்தார் பாஜிராவ். அதை விளக்கியும் சொன்னார். ''அழகுடன் துஷ்டத்தனம் கலக்கும்போது பெண்களின் கவர்ச்சி ஆயிரம் மடங்கு அதிகமாகிறது'' என்று பேஷ்வா, ''அனந்த்! நீ அவளை வளைத்துப் போட்டாயா இல்லையா?'' என்று விசாரித்தார் ஆர்வத்துடன்.

''நான் வளைக்கவும் இல்லை, ஒரு மண்ணாங்கட்டியும் இல்லை'' என்று அனந்த் எரிச்சலுடன் பதில் சொன்னான்.

''அப்படியானால் அவள் உன்னை வளைத்திருக்க வேண்டும்'' என்ற பேஷ்வா, ''அனந்த்! இந்தப் பெண்களுக்குத்தான் என்ன சக்தி பார்த்தாயா? நம்மைப் பொம்மைபோல் ஆட்டுகிறார்கள்'' என்றார்.

அனந்தின் சீற்றம் அதிகமாயிற்று. 'இந்தப் பைத்தியக்காரப் பேஷ்வா ஏற்கனெவே சாருவுக்கு இருக்கும் கோபத்தை எதற்காகக் கிளறுகிறார்?' என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டான். ஆகையால் கடிந்து சொன்னான், ''நம்மிடையே சாரு இருக்கிறாள்'' என்று.

''இருந்தால் என்ன? ஆண் மகன் குணம் அவளுக்குப் புரியாதா என்ன? எனக்கு என்ன ஒருத்திதான் மனைவியா? இல்லை, அதோ விஜயதுர்க்கத்திலிருக்கும் கிழக்கோட்டானுக்குத்தான் ஒரு மனைவியா? ஆண்பிள்ளைகளின் குணத்தைத் தெரிந்துதான் ஹிந்து மதம் பல மனைவிகளை அனுமதித்திருக்கிறது'' என்று ஹிந்து மதத்தின் உயர்வை எடுத்துச் சொன்ன பேஷ்வா, பக்கவாட்டில் சாருமீது கண்களை ஓட்டினார். சாருவின் கோபம் அத்துமீறியதால் அவள் பேசவில்லை.

அனந்துக்கு அவள் நிலை நன்றாகப் புரிந்தது. ஆகவே பேஷ்வாவை அடக்கத் தீர்மானித்து, ''பேஷ்வா!'' என்று அழைத்தான் ஆத்திரத்துடன்.

''என்ன அனந்த்?'' என்று கேட்ட பேஷ்வா குவளையிலிருந்த மதுவை ஒரேவாயாகக் குடித்துவிட்டுத் திரும்பினார் அனந்தை நோக்கி.

''நாம் இங்கு வந்திருப்பது ஹிந்து மதத்தைப் பற்றித் தர்க்கிப்பதற்கு அல்ல'' என்றான் அனந்த்.

''அல்ல. அதைக் காப்பாற்ற.''

''அதையும் மகாராஷ்டிரத்தையும் காப்பாற்ற!''

''ஆம்.''

''அதனால் நாம் பேச வேண்டியது...'' வாசகத்தை அனந்த் முடிக்கவில்லை. பேஷ்வா இடைமறித்து, ''கடல் ராணியைப் பற்றி'' என்றார்.

''மீண்டும் அவளை இழுப்பானேன்?'' என்று எரிந்து விழுந்தான் அனந்த்.

அந்தச் சமயத்தில் அவர்கள் இருக்கும் இடத்தை நோக்கி அடவி மூலம் வந்த மனிதர், ''அவளை இழுக்காமல் என்ன செய்வது? சூத்திரக்கயிறு அவளிடம்தானே இருக்கிறது'' என்றார்.

அந்த மனிதரைப் பார்த்த மூவருமே அதிர்ச்சியடைந்தார்கள். அவரும் நன்றாகக் குடித்திருந்தார். கடல் ராணியைப் பற்றிப் பேசியதும் பயங்கரமாகச் சிரித்தார். ''இன்னும் பத்து வருஷத்துக்கு முந்தியிருந்தால் அவளை நான் தூக்கி வந்திருப்பேன்'' என்று கூறி மறுபடியும் இடியிடியென நகைத்தார். அப்படி நகைத்தவர் திடீரென்று ஸ்மரணை இழந்து தொப்பென்று தரையில் விழுந்தார்!

## அத்தியாயம் - 35

# கனோஜியின் தத்துவம்!

அடவி மூலம் அரவம் செய்யாமல்வந்து அசுரச் சிரிப்புச் சிரித்து மயக்கம் போட்டுத் தொப்பென்று விழுந்த அந்த மனிதரின் உதவிக்கு மூவருமே விரைந்தார்கள். அவர் யாரென்பதில் அவர்கள் மூவருக்குமே சந்தேகம் இல்லாததால் அவர் விழுந்த இடத்தை அடைந்ததும் மூவருமே மூச்சைப் பிடித்துக் கொண்டு அவரை தூக்கினார்கள். ஸஹ்யாத்ரி பர்வதத்தின் இன்னொரு பகுதிபோல் பர்வதாகாரமாக விழுந்து கிடந்த கனோஜி ஆங்கரேயைத் தூக்குவதோ உட்காரவைப்பதோ அவ்வளவு எளிய பணியில்லை என்றாலும், மூவரின் ஒன்றுபட்ட முயற்சி அதைச் சாத்தியமாக்கவே, அவரை மெள்ள உட்கார வைத்து பாஜிராவும் அனந்தும் பிடித்துக்கொள்ள, உள்ளே சென்று ஒரு குவளையில் நீர் கொண்டு வந்து அவர் முகத்தில் அடித்தாள் சாரு. அதனால் கண்ணை விழித்த கனோஜி ஆங்கரே எழுந்திருக்க முயலவே, ''ஸார்கேல்! வேண்டாம், அப்படியே இருங்கள்'' என்று கூறிய பாஜிராவ் ஒரு கையையும் அனந்த் ஒரு கையையும் பற்றி அவரைத் தரதரவென்று இழுத்து வந்து குடிசையின் ஓலைச் சுவரில் சாத்தி உட்கார வைத்தார்கள்.

அப்படி அநாகரிகமாகத் தம்மை இழுத்ததைப் பற்றி ஆட்சேபித்தார் கனோஜி ஆங்கரே. 'பேஷ்வா! அனந்த்! மகா ராஷ்டிர ஸார்கேலை இப்படி இழுப்பது அவரை அவமதிப்பதாகும்!'' என்று கூறினார், தமது ராட்சஸக் கண்களை உருட்டி இருவரையும் பார்த்து.

மிகவும் உயர்ந்தும் பருத்துமிருந்த சரீரத்துடனும், ஒற்றைக் காதில் விலை உயர்ந்த பச்சைக் கல் பதித்த குண்டலத்துடனும் கடற்கொள்ளைக்காரர்களுக்கே ஓர் இலக்கணம்போல் விளங்கிய கனோஜி ஆங்கரே, அன்று இடுப்பு வரையில் சராயும் மேலே மார்பை அரைகுறையாக மறைத்த ஒரு பட்டுச் சட்டையை மட்டும் அணிந்திருந்ததால் அவர் கழுத்தில் கெட்டித் தங்க வீரச் சங்கிலியில் பதித்த நவரத்தினங்கள் சந்திர வெளிச்சத்தில் பிரமாதமாகப் பளிச்சிட்டன.

''ஸார்கேல்! இந்தச் சங்கிலி ஒன்றைக் கொண்டே மகாராஷ்டிரத்தை வாங்கலாமே! இதை எங்கே வாங்கினீர்கள்?'' என்று விசாரித்தார் பேஷ்வா.

பதிலுக்கு ஸார்கேல் இடியிடியென நகைத்தார். ''பேஷ்வா! உமக்குப் புத்தி சரியில்லை'' என்றும் கூறினார் நகைப்பின் ஊடே.

''ஏன் ஸார்கேல்?'' என்று வினவினார் பேஷ்வா.

''கனோஜி எதையாவது வாங்கினதாகக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா, பேஷ்வா? யாரிடம் கைப்பற்றினாய், எந்தக் கப்பலிலிருந்து கொள்ளையடித்தாய் என்று கேட்டால் அர்த்தமிருக்கும் கேள்வியில். 'எங்கு வாங்கினாய்?' ஆஹா! என்ன கேள்வி!'' என்று மீண்டும் நகைத்தார் ஸார்கேல்.

அவர் போதை இன்னும் முழுவதும் தெளியவில்லை என்பதைப் புரிந்து கொண்ட பேஷ்வா, ''கனோஜி! நீங்கள் மகாராஷ்டிர ஸார்கேல், கடற்படைத் தலைவர். கொள்ளைக்காரரல்ல'' என்று கடுமையுடன் சொன்னார்.

''அது உங்கள் தந்தையும், அந்த ஷாஹுவும் கொடுத்த பெயர். வெள்ளைக்காரரைக் கேளுங்கள். வேறு பெயர் கொடுத்திருக்கிறார்கள். பைரேட், பைரேட்'' என்றார் கனோஜி. இம்முறை நகைக்கவில்லை அவர், இகழ்ச்சிப் புன்முறுவல் மட்டும் கொண்டார்.

அவர் ஷாஹு மன்னரை மகாராஜா என்று கூட அழைக்காமல் வெறும் ஷாஹு என்று அழைத்ததைக் கண்ட அனந்த் அவரைப் பேஷ்வாவின் முன்னால் அதிகமாகப் பேசவிடுவது தவறு என்பதைப் புரிந்து கொண்டதால் உரையாடலை வேறு மார்க்கத்தில் திருப்பி, ''ஸார்கேல், இங்கு எதற்குத் தனியாக வந்தீர்கள்? அதுவும் உங்களுக்கு உடல்நிலை சரியாயில்லை...'' என்று தொடங்கினான்.

பிரிட்டிஷாரும், போர்ச்சுக்கீஸியரும், மொகலாயரும் யார் பெயரைக் கேட்ட மாத்திரத்தில், நடுங்கினார்களோ, யாரால் பிரிட்டிஷ் கடலாதிக்கம் அரபிக்கடலில் அழிக்கப்பட்டதோ, அப்பேர்பட்ட கனோஜி ஆங்கரே, இந்திரஜித் அனந்தை நோக்கித் திரும்பி, தனது ராட்சஸ விழிகளை அவன் மீது நாட்டினார், ஒரு



விநாடி. ''ஆம் அனந்த்! என் உடல் நிலை சரியாகத்தான் இல்லை. இல்லாவிட்டால் இந்த மலையேறி வந்து நான் விழுந்திருக்க மாட்டேன். இதைவிடப் பெரிய மலைகளை அநாயாசமாக ஏறியிருக்கிறேன்...'' என்று கூறினார்.

''ஸார்கேல்! நீங்கள் விழுந்தது உடல் நலக்குறைவால் அல்ல'' என்றான் அனந்த்.

''வேறு எதனால்?'' கனோஜி கேட்டார். கரகரத்த குரலில்

''அதிகமாகக் குடித்துவிட்டீர்களா?'' என்றான் அனந்த்.

''இதைவிட இரண்டு மடங்கு குடித்தபோதெல்லாம் விழுந்ததில்லை. வரவர இந்த உடல் அதிகக் குடியைத் தாங்கமாட்டேன் என்கிறது. கொஞ்சம் பலவீனத்தைக் காட்டுகிறது'' என்று அலுத்துக் கொண்ட கனோஜி, ''அனந்த்! வெள்ளைக்காரன் குதிரை விஸ்கியை நாலு குப்பி குடித்தாலும் கனோஜி திடமாக நிற்பான். இப்பொழுது மூன்றாவது குப்பியிலேயே வேகம் ஏறி விடுகிறது'' என்றும் வருத்தத்துடன் குடி குறைந்து விட்டதை விளக்கினார்.

''அப்படியானால் பலவீனந்தான்'' என்று அனந்த் ஒப்புக்கொண்டான்.

''நீ எப்படி அனந்த்?'' கனோஜி ஆவலுடன் கேட்டார்.

''நான் அதிகமாகக் குடிப்பதில்லை ஸார்கேல்.''

''குடிப்பதில்லையா?''

''இல்லை.''

''பூ! இத்தனைதானா நீ? உன் நண்பன்...?''

''உங்களைப் போல் சில சமயங்களில் குடிக்கிறான். ஆனால், துளிக்கூட நிதானம் தப்புவதில்லை.''

''பலே! துலாஜி என் மகனல்லவா? வேறு எப்படி இருப்பான்?'' என்ற கனோஜி சிறிது சிந்தனையில் இறங்கினார். ''அது கிடக்கட்டும் அனந்த், அந்த சோடி (குட்டி) எப்படி இருப்பாள்? நல்ல அழகா?'' என்று வினவினார் அக்கறையுடன்.

அனந்தின் முகத்தில் சிறிது கோபம் துளிர்த்தது. ''எப்படி இருந்தால் உங்களுக்கென்ன?'' என்று வினவினான்.

பதிலுக்கு இடிஇடியென நகைத்த கனோஜி, ''அனந்த்! நீ யோக்கியன் என்று நினைத்தேன். நீயும் என்னைப் போலத்தான்'' என்றார்.

''என்ன உங்களைப் போல்?'' சீற்றத்துடன் வந்தது அனந்த் கேள்வி.

''ஒன்றுக்கு இரண்டாகப் பிடித்திருக்கிறாய். இந்தச் சாரு ஒன்று...'' என்று கூறி மீண்டும் நகைத்தார் கனோஜி.

அவர் சொற்களைக் கேட்ட அனந்த் திகைப்படைந்தான். ''அவள் பெயர் உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று வினவினான் திகைப்பின் சாயை குரலிலும் படிய.

''யாராவது அழகி என்று பெயரெடுத்தால் அவர்கள் ஜாதகத்தைக் கணிப்பதைத் தவிர வேறு வேலை ஏது கனோஜிக்கு? கனோஜி லவ்ஸ் த ஸீ, த ஷிப், த உமன், யூ நோ ஹொய்?'' என்று ஆங்கிலத்திலும் இறங்கினார்.

''ஹொய்?'' எரிச்சலுடன் கேட்டான் அனந்த்.

''மூன்றும் ஒரே விதம்.''

''த ஸீ ஈஸ் டேஞ்சரஸ் பட் ஈல்ட்ஸ் டு எ குட் ஸெய்லர் (சமுத்திரம் அபாயமானது. ஆனால், நல்ல மாலுமியிடம் அடங்குகிறது); த ஷிப் ஈஸ் பியூட்டிஃபுல் பட் கான் பி நாவிகேடட் ஒன்லி பை ஆன் எக்ஸலண்ட் காப்டன் (கப்பல் அழகு வாய்ந்தது, ஆனால் அதை நல்ல தலைவன் தான் இயக்க முடியும்), எ உமன் ஈஸ் போத் பியூட்டிஃபுல் அண்ட் டேஞ்சரஸ், ஒன்லி எ ஸ்டாராங் மான் கான் கண்ட்ரோல் ஹர் (ஸ்திரீ அழகும் ஆபத்தும் கலந்தவள். சக்தி வாய்ந்த ஆடவன்தான் தன் இஷ்டத்துக்கு அவளை வளைக்க முடியும்)'' என்ற கனோஜி, ''நீ அந்த கடல் ராணியை வளைத்து விட்டாய் இல்லையா?'' என்றும் வினவினார்.

அவர் பெண்ணைப் பற்றியும் குடியைப் பற்றியுமே பேசியதைப் பொறுக்காத சாரு உள்ளே செல்ல எழுந்திருந்தாள். அவளை கையைப் பிடித்துப் பலவந்தமாக உட்கார வைத்தார் கனோஜி. ''சாரு! நீ அழகான பெண். தைரியசாலி. உன்னை அடைந்துள்ள இந்த அனந்த் அதிர்ஷ்டசாலி'' என்றார்.



''என்னை யாரும் அடையவில்லை. அடைய முடியாது. ஸார்கேல்! உங்கள் நாவை நீங்கள் அடக்காவிட்டால் உங்களை இங்கிருந்து மலைச்சரிவில் உருட்டி விடுவேன்'' என்று கடுங் கோபத்துடன் சொற்களைக் கொட்டினாள் சாரு.

''சாரு! ஸார்கேலை உனக்குத் தெரியாதா? அவர் நோய்வாய்ப் பட்டிருக்கிறார். சுய புத்தியில் பேசவில்லை'' என்றார் பேஷ்வா.

இதைக் கேட்ட கனோஜி நகைத்தார் மீண்டும். ''பேஷ்வா! சுயபுத்தி உமக்குத்தான் இல்லை. நான் அனுப்பிய மதுவைக் குடித்திருக்கிறீர்?'' என்று கூறினார்.

சாரு வியப்புடன் நோக்கினாள் கனோஜியை. ''நீங்கள் அனுப்பிய மதுவா?'' என்றும் கேட்டாள்.

''வேறு யாருக்குத் தெரியும், பேஷ்வா தன்னந்தனியாக வருவது?'' என்று வினவினார் கனோஜி.

''அப்படியானால் மதுக் குப்பி...? என்றாள் சாரு.

''பேஷ்வா வரும் நாள் பார்த்துக் குடிசை வாசலுக்கு ஆகாசத்திலிருந்தா குதிக்கும்?'' என்று கேட்டார் கனோஜி.

பேஷ்வா பாஜிராவ் உண்மையைப் புரிந்து கொண்டார். அது அத்தனை வியப்பாகவும் இல்லை அவருக்கு. பூரணமாகக் குடித்த நிலையிலும் கனோஜியின் கண்களிலிருந்து எதுவும் தப்புவதில்லை என்றும், அப்படியிருக்க மலைமீது திடீரென்று தோன்றிய குடிசை மீது ஒரு கண்ணை அவர் வைத்திருந்ததில் ஆச்சரியம் இல்லை என்பதையும் உணர்ந்து கொண்டார். தன்னந்தனியே இருந்த சாருபாயிடம் விஜயதுர்க்க வாலிபர்கள் அதிகமாகச் சேஷ்டை செய்யாததற்கு தம் வருகையைத் தவிர கனோஜியின் சிரத்தையும் காரணமாக இருக்க வேண்டுமென்பதும் தெளிவாகத் தெரிந்தது பாஜிராவுக்கு. ஆகவே பாஜிராவ் கேட்டார். ''நான் இத்தனை நாள் இங்கு வந்து போவதை அறிந்த நீங்கள், ஏன் இன்று வரை வந்து காணவில்லை?''என்று.

''தேவையில்லை, காணவில்லை'' என்றார் கனோஜி.

''இப்பொழுது தேவையிருக்கிறதா?'' பாஜிராவ் கேட்டார், சந்தேகம் ஒலித்த குரலில்.

''ஆம்.''

''என்ன தேவை?''

''நாளைக்கு என் மாளிகையில் விருந்துண்ண வரும்போது தெரிந்து கொள்வீர்கள்.''

''நான் விருந்துண்ண வருவேன் என்பது என்ன நிச்சயம்?''

''அதில் அனுகூலம் இருக்கிறது. அனுகூலத்தை பாஜிராவ் புறக்கணித்ததாகக் கேள்வியில்லை.''

''என்ன அனுகூலம்? பெண்ணா?'' என்று எரிச்சலுடன் கேட்டார் பேஷ்வா.

''இல்லை'' என்றார் கனோஜி.

''மதுவா?''

''இல்லை. அதை வழக்கம் போல் நான் அனுப்பியிருப்பேன்.''

''வேறு என்ன?''

''இப்பொழுது சொல்லமுடியாது திடமாக.''

''ஏன்?''

''நீங்கள் சந்திக்கவிருக்கும் மனிதன் என் வலையில் விழுகிறான் என்பது சந்தேகம்.''

''மனிதனா?'' என்றார் பேஷ்வா வியப்புடன்.

''ஆம். நம்மைப் போல் ஓர் ஆண் மகன்.''

''பெயர்?''

''நாளை நீங்களே தெரிந்து கொள்ளலாம்''.

இதைக் கேட்ட பேஷ்வா சிந்தனை வயப்பட்டார். ''இங்கு நான் வந்து போவது மிகுந்த ரகசியம். உங்களுக்குத் தெரிந்தால் பாதகமில்லை. ஆனால், விஜயதுர்க்க விஜயம் பகிரங்கமாக நடக்க முடியாது. அதற்கு முன்பாக அரசாங்க ஏற்பாடுகள், விஜயத்துக்கான முறைகள் உண்டு'' என்று விளக்கினார் பேஷ்வா.

''அந்த விஷயங்களை நான் கவனித்துவிட்டேன்'' என்றார் ஸார்கேல்.



''எப்படி?''

''பேஷ்வா முக்கிய அரசாங்க அலுவல் சம்பந்தமாக அந்தரங்கமாகப் பேச வருவதாக நானே அறிவித்துவிட்டேன். உங்களுக்காகத் தனி இடம் எனது மாளிகையில் ஒழித்து விடப் பட்டிருக்கின்றது. நீங்கள் வரும் போது எந்த வரவேற்போ வாத்திய கோஷமோ கூடாதென்று உத்தரவிட்டிருக்கிறேன். நாளை இரவு விளக்கு வைத்ததும் உங்கள் மூவரையும் அழைத்து வர எனது மாலுமிகள் இருவர் வருவார்கள்'' என்று அறிவித்த கனோஜி எழுந்தார் திரும்பிச் செல்ல.

''ஸார்கேல்! நான் கூட வரட்டுமா?'' என்று கேட்டான் அனந்த்.

''யாரும் தேவையில்லை. இப்பொழுது தெளிந்துவிட்டது'' என்று கூறிவிட்டுக் கனோஜி சற்றுத் திடமாகவே மலைச்சரிவில் இறங்கி அடவிக்குள் மறைந்துவிட்டார்.

திடகாத்திரமான அவரது சரீரம் எத்தனையோ சமாளித்தும் கூடச் சற்றுத் தடுமாற்றம் கொடுப்பதைக் கவனித்த மூவர் முகத்திலும் சிறிது துன்பச் சாயை படர்ந்தது. ''கடலை ஆட்டிப் படைத்தவர், மகாராஷ்டிரத்தின் கடல் காவலர், ஏன் இப்படித் தள்ளாடி விட்டார்?'' என்று பாஜிராவ் வருத்தத்துடன் கூறினார்.

அனந்தும் சாருவும் பதில் சொல்லவில்லை. சிறிது நேரம் மூவரும் மௌனமாகவே இருந்தனர். ''இன்னும் ஒரு நாள் தங்க வேண்டும். நாளைக் காலையில் போய்விடலாம் என்று வந்தேன்'' என்று பாஜிராவ் அலுப்புடன் கூறினார்.

''ஸார்கேல் விஷயம் இல்லாமல் நம்மை அழைக்கமாட்டார்'' என்று கூறினான் அனந்த்.

அத்துடன் சாருவை உள்ளே உறங்கச் சொல்லிவிட்டு, மற்ற இருவரும் வெளியிலேயே படுத்துக் கொண்டார்கள். ''பேஷ்வா! மஞ்சத்தில் படுத்த நீங்கள் தரையில் படுக்க வேண்டியிருக்கிறதே'' என்று அனந்த் வருத்தத்துடன் கூறினான்.

''மகாராஷ்டிர மண் தரையை விட மஞ்சத்தில் சுகம் அதிகமா?'' என்று கேட்டார். அதைச் சொல்லி நன்றாகப் புரண்டு படுத்தார்.

மறுநாள் பகல் ஓடியது. இரவு நெருங்கியதும் இரு மாலுமிகள் வந்தனர். மூவரையும் விஜயதுர்க்கத்துக்கு அடவியின் மூலமே

அழைத்துச் சென்றனர். யார் கண்ணில் படாமல் அழைத்து வரப்பட்ட அம்மூவரையும் கனோஜி மாளிகை வாசலிலேயே சந்தித்து விருந்து மண்டபத்துக்கு அழைத்துச் சென்றார்.

விருந்து மண்டபத்தின் முகப்பு அறையில் அமர்ந்திருந்த ஒரு மனிதர் எழுந்திருந்தார், வந்தவர்களைக் கண்டதும். அவரை அறிமுகப்படுத்தினார் கனோஜி. ''பேஷ்வா! அனந்த்! சாரு! எனது அந்தரங்க நண்பரைச் சந்தியுங்கள், ஹி ஈஸ் அன் இங்கிலீஷ்மேன் பட் எ வெரி ஃபைன் ஜென்டில்மேன் (இவர் ஆங்கிலேயர்தான். இருப்பினும் மிக்கக் கண்யமானவர்)'' என்று அவர் பெயரையும் நிதானமாக உச்சரித்தார். அந்தப் பெயரைக் கேட்டதும் மிதமிஞ்சிய ஆச்சரியமடைந்தான் அனந்த். அவன் வாயிலிருந்து சொற்கள் வரவில்லை. பேஷ்வாவின் கண்களில் சீற்றம் மெள்ள உதயமாயிற்று.

அத்தியாயம் - 36

# கனோஜியின் தந்திரமும் திகைப்பும்!

விருந்து மண்டபத்தின் முகப்பு அறையில் காத்திருந்த ஆங்கிலேயரைக் கனோஜி ஆங்கரே அறிமுகப்படுத்தியதும், அனந்துக்கு அதிர்ச்சியும், பேஷ்வாவின் கண்களில் சீற்றமும் ஏற்பட்டதை சாருவும் கவனித்தாளானாலும் அதற்கு அவளுக்குக் காரணம் ஏதும் புரியாததால் தனது அழகிய கண்களால் மிரண்டு விழிக்கவே செய்தாள். அவள் விழித்ததைப் பார்த்த கனோஜி ஆங்கரே சிறிது புன்முறுவல் கொண்டு அந்த வெள்ளைக்கார விருந்தினரை நோக்கி, ''இவளைப் போன்ற அழகி இந்த மேற்குக் கடற்கரைப் பகுதியில் யாரும் கிடையாது!'' என்று மராத்தி மொழியில் பேச ஆரம்பித்தவர் சட்டென்று தமது தவறைத் திருத்திக் கொண்டு ''ஷீ ஈஸ் ரத்னா! யூ மஸ்ட் ஹாவ் ஹேர்ட் அபௌட் ஹர் (இவள் ரத்னா! இவளைப் பற்றி நீங்கள் கண்டிப்பாய்க் கேள்விப் பட்டிருப்பீர்கள்)'' என்று கோட்டைப் புளுகு ஒன்றையும் வீசினார்.

இந்தப் பொய்யைக் கேட்டதும் அங்கு வரும் வரை பேஷ்வாவுக்கும் சாருவுக்கும் அனந்துக்கும் இருந்த ஆனந்தமெல்லாம் எங்கோ பறந்துவிட்டது. அவர்கள் மூவரும் மலைக்குடிசையை விட்டு வந்தபோது விஜய துர்க்கத்தின் அழகையும் பலத்தையும் பாதுகாப்பையும் ரசித்துக் கொண்டும் விவாதித்துக் கொண்டும் வந்திருந்தார்கள். ஏனென்றால் விஜயதுர்க்கம் அத்தனை அழகு வாய்ந்த துறைமுகக் கோட்டை. கனோஜியின் தலைமைத் தளம் அது. அதை வைத்துக் கொண்டுதான் அவர் பிரிட்டிஷாரையும் ஜன்ஜீரா ஸித்திகளையும் ஒருங்கே அச்சுறுத்தி வந்தார்.

பம்பாயிலிருந்து தெற்கே நூற்று எழுபது மைல் தூரத்தில் சின்னஞ்சிறிய துறைமுகமாயிருந்த விஜயதுர்க்கத்தை இணையற்ற கோட்டையாகவும், பலமான கடற்படைத் தளமாகவும் அமைத்தார்

கனோஜி ஆங்கரே. விஜயதுர்க்கம் வாகோத்தம் நதியின் முகத் துவாரத்தின் தென்கரையில் இருந்தமையால் வடபுறத்தில் அதற்கு நதியின் பாதுகாப்பு இருந்தது. அதன் வடகிழக்கிலும் நேர்கிழக்கிலும் இருந்த மேற்குத் தொடர்ச்சி மலையின் பெரிய உச்சிகளும் காடு களும் அதை நிலத்திலிருந்து யாரும் அணுக முடியாமல் செய்திருந்தன. நதியின் தென்புற முகத்துவாரத்தில் நூறு அடி உயரத்துக்கு மேல் மலை மீது கிளம்பியிருந்த அந்தக் கோட்டையின் மீது சமுத்திரத்தின் அலைகள் மோதிக்கொண்டிருந்தன.

துறைமுகத்தின் ஆழம் காரணமாக அங்கு மஞ்சூரா என்ற சின்னஞ்சிறிய பீரங்கிப் படகிலிருந்து, காலிவாத், குராப் முதலிய பெரிய கப்பல் வரை பலதரப்பட்ட நாவாய்கள் அன்றும் ஆடிக் கொண்டு நின்றதால் எந்தத் தாக்குதலுக்கும் விஜயதுர்க்கம் தயாராக இருந்ததென்பது சந்தேகமறத் தெரிந்தது. தவிர மூவகை அரண் களையும் 27 வட்டமான பீரங்கி நிலையங்களையும் கொண்ட விஜயதுர்க்கம் பார்ப்பதற்கு அழகையும் பயங்கரத்தையும் ஒருங்கே இணைத்துக் கொண்டிருந்தது.

இந்த அழகையெல்லாம் ரசித்துக் கொண்டும் மகிழ்ந்து பேசிக் கொண்டும் வந்த பேஷ்வாவுக்கும் சரி, அனந்துக்கும் சரி, விருந்து மண்டபத்தின் முகப்பு அறையில் கனோஜி செய்த அறிமுகம் மிகவும் அதிருப்தி அளித்ததென்றால் அடுத்தபடி அவர் சிறிதும் முன் யோசனையின்றி எடுத்து விசிறிய பொய் அவர்கள் கோபத்தை அளவுக்கு அதிகமாக்கவும் செய்தது.

இத்தனைக்கும் கனோஜியின் முகத்தில் எந்தவித மாறுதலும் இல்லை. அந்த ஆங்கிலேயர் எழுந்ததும், "பேஷ்வா! அனந்த்! திஸ் ஈஸ் காப்டன் ஜேம்ஸ் மாக்ரே, தி ஸெலிப்ரேட் ஸெய்லர்" என்று அவர் பெயரையும் மிகச் சாதாரணமாகவே உச்சரித்தார். அதனால் அதிர்ச்சியடைந்தாலும் அதை உதறிக் கொண்டு "ப்ளீஸ்ட் டு மீட் யூ (உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்)" என்று அனந்த் அந்த மனிதருடன் கைகுலுக்கினான். பேஷ்வா பாஜிராவையும் நோக்கி மாக்ரே கை குலுக்க முயன்றதும் பேஷ்வா ஏதோ காரண மாகச் சாளரத்தண்டை சென்று கடலின் அழகையும் வாகோத்தம் நதியின் வசீகரத்தையும் ரசிக்கலானார்.



பேஷ்வா தன்னுடன் கைகுலுக்க இஷ்டப்படாததால் சாளரத்தின் மூலம் வெளியே பார்க்கிறார் என்பதைப் புரிந்து கொண்ட மாக்ரேயின் வெள்ளை முகம் குங்குமச் சிவப்பாகச் சிவந்தது. அந்தச் சமயத்தில்தான், கனோஜி அந்த இன்னொரு வெடிகுண்டையும் வீசினார். "ஷீ ஈஸ் ரத்னா. யூ மஸ்ட் ஹாவ் ஹேர்ட் அபௌட் ஹர்" என்று. அதே சமயத்தில் பாஜிராவிடமும் சென்று அவர் காதில் ஏதோ முணுமுணுத்தார். அதற்குப் பிறகு பாஜிராவின் போக்கு முற்றும் மாறாக இருந்தது. சரேலென்று திரும்பிய பாஜிராவ், "ஸார்கேல்! யூ ஹாவ் நாட் மேட் ப்ராப்பர் இன்ட்ரொடக்ஷன்ஸ் (ஸார்கேல், எங்களை நீங்கள் சரிவர அறிமுகப்படுத்தவில்லை)" என்று கூறினார்.

"ஐ ஆம் ஸாரி" என்று வருத்தம் தெரிவித்த கனோஜி, "காப்டன் மாக்ரே! ப்ளீஸ் மீட் அவர் பேஷ்வா, அவர் எம்பரர்ஸ் ரெப்ரஸண்டேட்டிவ் (காப்டன் மாக்ரே! எங்கள் சக்கரவர்த்தியின் பிரதிநிதி பேஷ்வாவைச் சந்தியுங்கள்)" என்றார்.

பேஷ்வாவின் முகத்தில் புன்முறுவல் விரிந்தது. பாஜிராவ் தமது மெல்லிய கையை நீட்டினார் மாக்ரேயை நோக்கி. மாக்ரே அதைப் பிடித்துப் பலமாகக் குலுக்கினான். பிறகு சாருவை நோக்கித் தலை வணங்கினார். "மிஸ் யூ ஆர் ரத்னா! ரத்னா! ஐ ஹாவ் ஹேர்ட் த நேம் ஸம்வேர் (மிஸ்! நீங்கள்தான் ரத்னாவா? ரத்னா! இந்த பெயரை எங்கோ கேட்டிருக்கிறேன்)" என்று குழம்பினான்.

இங்கே கனோஜி தமது கொள்ளைக்கார சுபாவத்தைக் காட்டினார். மாக்ரேயின் முதுகில் தட்டுவது போல் அறைந்து, "யூ ஃபூல் மாக்ரே! இட் ஈஸ் த நேம் ஆப் ஸீ க்வீன் (முட்டாள் மாக்ரே! அதுதான் கடல் ராணியின் பெயர்)" என்றார்.

ஜேம்ஸ் மாக்ரே ஏதோ தேவ சாபத்தால் சிலையாக மாறி விட்டவன் போல் நின்றான். "புரிகிறது! கடல் ராணி! ஸீ க்வீன்! ஸாகர் கி ராணி" என்று இரு மொழிகளில் முணுமுணுத்தான். இந்தக் காலத்தில் அவன் உளறியதை யாராவது கேட்டிருந்தால் அவனைப் பன்மொழி வல்லுனர் என்று பாராட்டியிருப்பார்கள். நூற்றாண்டு மிகவும் முன்னதாக இருந்ததால் அத்தகைய பட்டம் எதுவும் பிரிட்டிஷ் காப்டனுக்குக் கிடைக்காவிட்டாலும் ஸார்கேல்

அவனைப் பாராட்ட முற்பட்டு, ''மாக்ரே! உனக்கு நாலைந்து மொழிகள் தெரியும் என்பதை மறந்துவிட்டேன்'' என்று கூறினார். பிறகு, ''இங்கு அநாவசியமாகப் பேசிக் கொண்டிருந்தால் விருந்தை யார் சாப்பிடுவது?'' என்று கூறிக்கொண்டு மண்டபத்துக்குள் நுழைந்தார் முகப்பு அறையிலிருந்து.

ஆங்கரேயின் விருந்து மண்டபம் பெரிய மகாராஜாக்கள் மண்டபத்தையும் தோற்கடித்தது. பெரிய மேஜையில் பிரிட்டிஷார் விருந்து போல் வெள்ளைத் துணி விரிக்கப்பட்டு, பிளேட்டு களும், ஸ்பூன் ஃபோர்க் முதலிய உணவருந்தும் கருவிகளும் வைக்கப்பட்டிருந்தன. மேலிருந்து ஷாண்டிலியர் விளக்கு ஜாஜ் வல்யமாகப் பிரகாசித்தது. விருந்து மண்டபத்தின் ஒரு மூலையில் விளக்கேந்தி நின்ற நிர்வாண வீனஸ் சிலையும் சரி, மற்றும் ஆங்காங்கு இருந்த அழகுப் பொருள்களும் சரி, எதுவுமே விலை கொடுத்து வாங்கப்படாதவை என்பதற்குச் சான்று கூறின. அவற்றை யெல்லாம் பிரமையுடன் பார்த்த சாருவை நோக்கி கனோஜி, ''ரத்னா! இவையெல்லாம் நமது வியாபாரத்தில் கிடைத்தவை!'' என்று கூறி இடிஇடியென நகைத்தார்.

அதைக் கேட்ட மாக்ரேயும் நகைத்தான். ''உங்கள் வியாபாரம்! அது என்னவென்பதை உலகம் அறியும். பை த க்ரேஸ் ஆஃப் ஹிஸ் மெஜஸ்டி கிங் ஜார்ஜ், ஐ வில் புட் ஆன் எண்ட் டு திஸ் (மேன்மை தங்கிய எங்கள் மன்னர் ஜார்ஜின் பெயரால் இதற்கு நான் முடிவு கட்டுகிறேன்)'' என்றும் கூறினான் மாக்ரே நகைப்பின் ஊடே.

''நீ செய்வாய். நீ பெரிய கடல் வீரன்'' என்று சிலாகித்த கனோஜி அனைவரையும் நாற்காலியில் உட்காரச் சொல்லித் தானும் உட்கார்ந்தார். தமக்கு இருபுறத்திலும் சாருவையும் அனந்தையும் உட்கார வைத்துக் கொண்டார். ''தாங்கள் மேஜையின் தலைப்பில் உட்காரவேண்டும்'' என்று பேஷ்வாவிடம் கூறி, அவர் கையில் மெள்ள ஒரு காகிதத்தையும் திணித்தார் யாரும் பார்க்காமல்.

பேஷ்வா பாஜிராவ் மேஜையின் முகப்பில் தலைமை வகித்து உட்கார்ந்ததும் கனோஜி கண்ணைக் காட்ட அவர் பணியாட்கள் உணவு பரிமாறத் தொடங்கினார்கள். விருந்தின் முதல் பரிமாறல் முடிந்ததும் சாப்பிட முற்பட்ட மாக்ரேயைத் தடுத்த கனோஜி,



''மாக்ரே! ஸ்டாப் இட்! யூ ஆர் எ கிறிஸ்டியன், ஸே த ப்ரேயர் (மாக்ரே! நீ கிறிஸ்தவன். முதலில் பிரார்த்தனை செய்)'' என்றார்.

அவர் கட்டளையை அடுத்து மாக்ரே கண்ணை மூடியதும் கனோஜியின் கண்கள் பேஷ்வாவின் கண்களைச் சந்தித்தன. பேஷ்வா தமது கையில் திணிக்கப்பட்ட காகிதத்தைப் பிரித்துப் படித்துவிட்டு மடியில் செருகிக் கொண்டார். இருவர் கண்களும் ஏதோ பேசிக் கொண்டதைச் சாரு, அனந்த் இருவருமே கவனித்த தால், ஏதோ பெரிய நாடகம் நடத்தப்படுகிறது என்பதை உணர்ந் தார்கள். ஆகையால் ஏதும் பேசாமல் மாக்ரே கண்ணைத் திறக்கும் வரையில் பேசாமலேயே இருந்தார்கள். மாக்ரே பிரார்த்தனையை முடித்ததும் விருந்தை உண்ணலாம் என்று சைகை காட்டிய கனோஜி அசுரன் போல் சாப்பிடத் தொடங்கினார்.

விருந்து ராஜபோகமாயிருந்தாலும் அங்கேகனோஜி விளைத்து விட்ட சூழ்நிலை காரணமாக அனந்தோ, சாருவோ அதிகம் உண்ணவில்லை. பாஜிராவ் மிக நிதானமாகவும் கண்ணியமாகவும் சாப்பிட்டார். மது பரிமாறப்பட்டபோது கூடக் கண்ணாடி டம்ளரிலிருந்து சிறிது சிறிதாக மதுவை உறிஞ்சினார் பேஷ்வா.

அதற்கு நேர்மாறாக மதுவைப் பெரிய குப்பியிலிருந்து கடகடவென்று நேர்முகமாகவே குடித்தார் கனோஜி. ''கோப்பை, டம்ளர் எல்லாமே நமக்கும் மதுக் குப்பிக்கும் இடையில் நிற்கும் எதிரிகள்'' என்று உற்சாகத்துடன் கூவினார். ஒரு குப்பியைக் குடித்து முடித்ததும் பணிமகன் ஒருவன் கொண்டு வந்த பாத்திரத்தில் கை கழுவியதும் நன்றாக நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்து இரைந்து பேச ஆரம்பித்தார். ''மாக்ரே, நான் சொன்னபடி உங்களுக்கு உதவ பேஷ்வா வந்திருக்கிறார், அனந்த் வந்திருக்கிறார். வந்த அனந்த் தனியாக வரவில்லை. கடல் ராணியையும் அழைத்து வந்திருக் கிறார். காஸண்ட்ராவையும் உன் எதிரிகளான டெய்லர், இங்க்லண்ட் இவர்களையும் அழித்து விட இவர்கள் உதவுவார்கள்'' என்றார்.

இந்தக் கோட்டைப் புளுகு அனந்தையும் சாருவையும் திகிலடையச் செய்தாலும் பாஜிராவ் எவ்விதச் சலனமும் அடையாமல் உட்கார்ந்திருந்தார். கனோஜிக்கு அனுகூலமாகப் பேசவும் தொடங்கினார். ''காப்டன்! அவர் ஸார்கேல் ஹாஸ்

டோல்ட் அஸ் அபௌட் யூ. வி ஆர் பிரிபேர்ட் டு ஹெல்ப் யூ (காப்டன் எங்கள் கடற்படைத் தளபதி உங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். உங்களுக்கு உதவ நாங்கள் தயாராக இருக்கிறோம்)'' என்றார் பேஷ்வா.

பேஷ்வாவின் பேச்சு இன்னும் அதிசயமாயிருக்கவே அனந்த் நகைத்தான் மெள்ள.

''ஹொய் டு யூ லாஃப்(ஏன் சிரிக்கிறாய்?)'' என்று வினவினான் மாக்ரே.

''பிகாஸ் டு எனிமீஸ் ஜாயின் டு கெதர் (இரண்டு எதிரிகள் ஒன்றுபடுவதால்)'' என்ற அனந்த், ''பிரிட்டிஷ்காரர்கள் மகாராஷ்டிரத்தின் பலத்தை உடைக்கப் பார்க்கிறார்கள். மகாராஷ்டிரர்கள் பிரிட்டிஷாரை இந்த நாட்டில் காலூன்ற விட இஷ்டப் படவில்லை. இப்பொழுது நீங்கள் இருவரும் இழைகிறீர்கள்'' என்றும் விளக்கினான்.

இதற்கு மாக்ரே பதில் சொல்லு முன்பு பாஜிராவே பேசினார்: ''மகாராஷ்டிரமும் பிரிட்டனும் பெரிய அரசுகள்; இரண்டும் போரிடலாம். ஆனால், இரண்டும் கடற்கொள்ளைக்காரர்களை அனுமதிக்க முடியாது'' என்று.

அனந்தின் உதடுகளில் இகழ்ச்சிப் புன்னகை உதயமாயிற்று. ''கடற்கொள்ளைக்காரர்களை அனுமதிக்க முடியாதா?'' என்ற அவன் கேள்வியிலும் இகழ்ச்சி ஒலித்தது.

''முடியாது.'' பாஜிராவ் மெதுவாகவும் திட்டமாகவும் பேசினார்.

''அப்படியானால் கனோஜி யார்? கடல் ராணி யார்?'' என்று அனந்த் வினவினான்.

இந்தக் கேள்வி பேஷ்வாவின் அழகிய வதனத்தில் எந்தவித மாறுதலையும் விளைவிக்கவில்லை. ''கனோஜி இப்போது கொள்ளைக்காரர் அல்ல. மகாராஷ்டிரத்தின் ஸார்கேல். கடல் ராணி இப்பொழுது கொள்ளைக்காரியல்ல. நமது மால்வான் கோட்டையின் தளபதி சங்கர் பந்தின் மகள்'' என்றார் நிதானமாக.



''மால்வான் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் ஆனால், ஷாஹு மன்னருக்கு அடங்கியதல்ல. சுந்தா சம்ஸ்தான ராஜாவின் ஆட்சிக்கு உட்பட்டது'' என்றான் அனந்த்.

''அந்த ராஜா நமது ஆட்சிக்குட்பட்ட சிற்றரசர். அவருக்கு நாம் அபயமளிப்பதாக உறுதி கூறியிருக்கிறோம்'' என்று அதற்கும் பதில் சொன்னார் பேஷ்வா.

பேஷ்வாவின் திடீர் மாறுதல் அனந்துக்குப் புரியவில்லையானாலும் ஏதோ மாக்ரேயின் தலைக்குப் பெரிய குல்லாய் தைக்கப்படுகிறதென்பதைப் புரிந்து கொண்டான்.

அந்தச் சமயத்தில் ஸார்கேல் தமது ராட்சஷக் கண்களை மாக்ரே மீது பதிய விட்டார். ''மாக்ரே! இப்பொழுது உங்களுக்குத் திருப்தியாகிவிட்டால் நீங்கள் சிந்து துர்க்கத்தில் இருக்கும் காஸண்ட்ராவைக் கைப்பற்ற என்ன திட்டமிட்டிருக்கிறீர்கள் என்பதைச் சொல்லலாம்'' என்றார்.

ஜேம்ஸ் மாக்ரே அப்பொழுது சிந்தித்தான். அவன் மனத்தில் ஏதோ ஒரு சந்தேகம் எழுந்து கொண்டிருந்தது. அந்தச் சந்தேகக் குரலிலேயே, ''நான் ஐந்து போர்க் கப்பல்களுடன் வருகிறேன், இன்னும் பத்து நாட்களுக்குள். ஆனால், நீங்கள் எந்த விதத்தில் உதவுவீர்கள்?'' என்று விசாரித்தான். அத்துடன் அவன் சும்மாயிருந்திருக்கலாம். ''கடல் ராணி! முக்கியமாக உங்கள் உதவி தேவை. நீங்கள் என்ன செய்யக்கூடும்?'' என்றும் வினவினான் சாருவை நோக்கி.

அவன் கேள்வி கேட்ட அந்த நேரத்தில்தான் அந்த விபரீதம் ஏற்பட்டது. அதை கனோஜிகூட எதிர்பார்க்கவில்லை. விருந்து மண்டபத்தின் முகப்பு அறை வாசலை நோக்கிய அவரது ராட்சஷ விழிகளில் மிதமிஞ்சிய திகைப்பு விரிந்தது. அனந்தின் கண்களில் கூட அச்சம் நிலவியது, அளவுக்கு அதிகமாக. முகப்பு அறையின் வாசற்படியில் கடல் ராணி நின்றிருந்தாள்.

## அத்தியாயம் - 37

# விஜயதுர்க்க நாடகம்!

கனவிலும் அச்சமென்பதை அறியாத கடல் தீரனான கனோஜி ஆங்கரேயே கடல்ராணியின் திடீர் வரவால் திகைப் படைந்து விட்டாரென்றால், அடுத்து ஏதும் பேச இயலாது விழித்தா ரென்றால், அனந்தைப் பற்றியோ சாருவைப் பற்றியோ என்ன சொல்ல? அனந்தின் கண்களில் அச்சம் விரிந்தது அளவுக்கு மீறி. சாருவின் கண்களில் அச்சம் இல்லையென்றாலும் வெறுப்பும் இகழ்ச்சியும் அத்துமீறிப் பிரதிபலித்தன.

அத்தனை திகைப்பிலும் கனோஜி ஆங்கரேக்குச் சில விஷயங்கள் புரியவில்லை. யாரும் உத்தரவின்றிப் புகமுடியாத விஜயதுர்க்கத்துக்குள் கடல்ராணி எப்படி வந்தாள்? அப்படியே வந்தாலும் பலமான கட்டுக் காவலுள்ள தனது மாளிகையில் எப்படி நுழைந்தாள்? அப்படியே மாளிகைக்குள் நுழைந்தாலும் விருந்து மண்டபத்து முகப்பு, அறைக்குள் காவலர் முன்னறிவிப்பில்லாமல் எப்படிப் புகுந்தாள்?- என்ற கேள்விகளைத் தாமே கேட்டுக் கொண்டு விடையேதும் கிடைக்காததால் பரிமாறும் பணியாளை ஜாடை காட்டி அழைத்து, இன்னொரு மதுக்குப்பியைக் கொண்டுவரச் சொல்லிக் காலி செய்துவிட்டுத் தமது முரட்டு மயிர்களைக் கோதியும் விட்டுக் கொண்டார்.

அனந்த் உட்கார்ந்த நிலையில் தலையைக் குனிந்து கொண்டான். 'தலைக்கு மேல் போனது சாண் போனால் என்ன, முழம் போனால் என்ன?' என்ற நினைப்பில். சாரு சிறிதும் லட்சிய மின்றி அனந்தின் இதயத்தில் நுழைந்துவிட்ட அந்தக் கடல்ராணியை உற்று நோக்கினாள். கடல்ராணியின் கண்களும் கலந்தன அவளுடைய கண்களுடன். ஆனால், ஏதும் பேசவில்லை, சிந்து துர்க்கத்தின் தலைவி. இந்த மாதிரி ஒரு நிலையில் காப்டன் மாக்ரேயால் சும்மாயிருக்க முடியவில்லை. ''ஹூ ஈஸ் திஸ் இன்ட்ரூடர்? (இடையில் நுழைந்த இவள் யார்?)'' என்று வினவினான்.



பேஷ்வா பாஜிராவ் மட்டும் எந்தவிதக் கலக்கமோ குழப்பமோ இல்லாமல் மதுவைச் சிறிது சிறிதாக உறிஞ்சினார் தமது கண்ணாடி டம்ளரிலிருந்து. அப்படி உறிஞ்சிக் கொண்டே பாதி டம்ளரிலும் பாதி முகப்பு அறையின் வாசற்படியிலும் கண்களைச் செலுத்தினார். கடல்ராணி பார்க்காததால் அவரே பேசத் தொடங் கினார்: ''சாரு! இங்கு உன்னை யார் வரச்சொன்னது எனது அனுமதி யின்றி?'' என்று சற்றுக் கண்டிப்புடன் சொற்களை உதிர்த்தார்.

இதைக் கேட்டதும் கடல்ராணி, சாருவைப் பார்ப்பதை விட்டு, பேஷ்வாவின் கண்களைக் கவனித்தாள். பேஷ்வாவின் கண்களில் என்ன செய்தியிருந்ததோ தெரியாது. கடல்ராணியின் கடை இதழ் களில் புன்சிரிப்பு விரிந்தது முதல் முதலாக. ''விஜயதுர்க்கத்துக்கு அழைத்துப் போவதாகப் பலமுறை சொன்னீர்கள், அழைத்துப் போகவில்லை. ஆகையால் நானே வந்தேன்'' என்றாள் கடல்ராணி புன்சிரிப்பின் சாயை முகத்திலும் பரவ.

பாஜிராவின் முகத்தில் துன்பச் சாயை விரிந்தது. ''அதற்காக இப்படித் திடீரென்று வரலாமா? அதுவும் காப்டன் மாக்ரே நமது பழக்க வழக்கங்களுக்குப் புதியவர்...'' என்று மெள்ள வாசகத்தை முடிக்காமல் விட்டார் பேஷ்வா.

இதைக் கேட்டதும் கடல்ராணி முகத்தில் பெருவியப்பைக் காட்டினாள். ''ஸோ திஸ் ஈஸ் த ஃபேமஸ் காப்டன் ஜேம்ஸ் மாக்ரே. த ஹீரோ ஆஃப் ஸெவரல் ஸீ ஃபைட்ஸ் (அப்படியனால் பல கடற்போர்களின் வெற்றி வீரனாகப் புகழ் வாய்ந்த ஜேம்ஸ் மாக்ரே இவர்தானா?)'' என்று கேள்வி கேட்டுக் குரலில் பேராவலையும் காட்டினாள்.

இதைக் கேட்ட ஜேம்ஸ் மாக்ரே தனது ஆசனத்தைவிட்டு எழுந்து கடல் ராணிக்குத் தலை வணங்கி, ''காப்டன் மாக்ரே அட் யுவர் ஸர்வீஸ் மேடம் (அம்மணி! தங்கள் சேவகன் மாக்ரே)'' என்று பிரிட்டிஷ் மரியாதையுடன் கூறினான்.

அவன் அப்படிச் சொன்னதும் வாசற்படியிலிருந்து நடந்து உள்ளே வந்துவிட்ட கடல்ராணியிடம் கைகுலுக்கத் தனது கையை யும் நீட்டினான்.

கடல் ராணி கலகலவென நகைத்தாள் காப்டனை நோக்கி. 'காப்டன்! நான் ஹிந்துப் பெண். பரபுருஷர்களைத் தீண்ட மாட்டேன்'' என்று மராத்தியில் கூறினாள். இப்படி அவள் மராத்தியில் கூறியதிலிருந்தே மாக்ரேயைப் பற்றிய முழுவிவரங்களும் அவளுக்குத் தெரியுமென்பதைக் கனோஜி ஊகித்துக் கொண்டார். அதை ஊர்ஜிதப்படுத்த கடல்ராணி, மாக்ரேயை நோக்கி, ''காப்டன்! உங்களுக்குப் பல மொழிகள் தெரியுமென்று கேள்வி. மராத்தியும் தெரியுமல்லவா?'' என்று வினவினாள்.

''தெரியும். உங்கள் பெயர் ...?'' என்று திணறினான் மாக்ரே.

''சாரு. பேஷ்வாவின் மருமகள்'' என்றாள் கடல்ராணி.

அனந்த் திருடன் போல் விழித்தான். அப்பொழுதுதான் கடல் ராணி தனது கைவரிசையைக் காட்டினாள். அனந்தைச் சுட்டிக் காட்டி, ''இவருக்கும் எனக்கும் திருமணம் நிச்சயமாகி இருக்கிறது. ஆனால் அவர் திருட்டுத்தனமாகக் கடல் ராணியை அழைத்து வந்து இருக்கிறார்'' என்று குற்றம் சாட்டி மேஜையைச் சுற்றி வந்து சாருவின் நாற்காலியின் பின்புறத்தில் நின்று கொண்டாள். ''கடல் ராணி! எழுந்திரு, இந்த இடத்திலிருந்து'' என்று மிரட்டினாள்.

சாரு தலையைத் திருப்பிக் கடல்ராணியை நோக்கினாள் சுடு விழிகளால். ''உன் மாமா பக்கத்தில் போய் உட்கார்ந்து கொள்'' என்று சுடுசொற்களைக் கொட்டி, பாஜிராவ் உட்கார்ந்திருந்த இடத்தைச் சுட்டிக் காட்டினாள்.

''முடியாது. இது என் இடம். என் கணவர் பக்கத்தில் என்னைத் தவிர வேறு யாரும் உட்கார முடியாது'' என்று கூறி, சாருவை நாற்காலியோடு தூக்க முயன்றாள்.

கனோஜி ஆங்கரேயின் பாடு பரம திண்டாட்டத்தில் இருந்தபடியால் அவர் தமது ஆசனத்தை விட்டு எழுந்து, ''சாரு! நீ இங்கு வந்து உட்கார்'' என்று தமது ஆசனத்தைக் காட்டினார்.

''முடியாது. நான் அனந்தின் பக்கத்தில்தான் உட்காருவேன்'' என்றாள் கடல் ராணி.

''சரி! சரி'' என்ற கனோஜி தமது நாற்காலியை எடுத்து அனந்துக்கு அப்புறத்தில் போட்டுக் கடல்ராணியை உட்கார



வைத்தார். ''இப்பொழுது சரியாகப் போய்விட்டது'' என்று சொல்லி, தாம் மேஜையின் மற்றொரு முகப்புக்குச் சென்று பாஜிராவுக்கு நேர் எதிரில் உட்கார்ந்து கொண்டார்.

கடல்ராணி, கனோஜியை நோக்கிச் சீறினாள். ''எது சரியாகப் போய்விட்டது?'' என்று.

''அனந்துக்கு இரு புறத்திலும் உட்கார்ந்திருக்கிறீர்கள். அனந்த் சாட்சாத் கிருஷ்ண பரமாத்மா மாதிரி இருக்கிறார்'' என்று கூறித் தமது ஹாஸ்யத்தை நினைத்து இடியிடியென ராட்சதன் போல் நகைத்தார் கனோஜி.

இத்தனைக்கும் பாஜிராவ் இமையைக்கூட அசைக்கவில்லை. மெள்ள மெள்ளக் கண்ணாடி டம்ளரிலிருந்து மதுவை உறிஞ்சி முடித்தார். பிறகு மல்லாந்து நாற்காலியில் சாய்ந்து மடியிலிருந்த சிறு வெள்ளைத் துணியால் வாயைத் துடைத்துக் கொண்டார். பிறகு கம்பீரமான குரலில், ''இப்பொழுது விருந்து முடிந்துவிட்டபடியால் நாம் இங்கு வந்த காரணத்தை விவாதிக்கலாம்'' என்று அறிவித்தார் அதிகாரக் குரலில்.

''ஆம். ஆம். அதுதான் முக்கியம்'' என்றார் கனோஜி, ஏதாவது பேச வேண்டுமென்பதற்காக.

''சாரு புதிதாக வந்திருக்கிறாள். அவளுக்கும் விஷயத்தை விளக்கி விடுவது நல்லது'' என்றார் பேஷ்வா.

கடல்ராணி புன்முறுவல் காட்டினாள் பேஷ்வாவை நோக்கி. ''கனோஜி என்னைப் பார்ப்பதற்கு முன்பே நான் இங்கு வந்து விட்டேன். நடந்த உரையாடலை எல்லாம் கேட்டேன்'' என்று கூறினாள் புன்முறுவலின் ஊடே.

இங்கு கனோஜி அசம்பாவிதமாகப் பேச முற்பட்டு ''அப்படியானால் மாக்ரே கேட்ட கேள்விக்கு என்ன பதில்?'' என்று கடல் ராணியைக் கேட்டார்.

இதனால் திகைப்படைந்த அனந்த் அவரை நோக்கித் தீவிழி விழித்து, ''அதைப் பற்றிச் சாருவைக் கேட்டு என்ன பயன்? ராணி யல்லவா பதில் சொல்ல வேண்டும்?'' என்று எரிந்து விழுந்தான்.

கனோஜி சில சமயங்களில் பிடிவாதம் பிடிக்க ஆரம்பித்தால் அதை அடக்குவது கஷ்டம். ''சாருவைக் கேட்டாலென்ன, கடல் ராணியைக் கேட்டால் என்ன? இருவரும் உனக்கு வேண்டியவர்கள் தானே?...'' என்று ஆரம்பித்தார்.

''இது போரைப் பற்றிய விஷயம்'' என்றான் அனந்த்.

''எந்தப் போரைப் பற்றி?'' கனோஜி நகைத்தார் ராட்சஸ நகைப்பாக.

''நீங்கள் கேட்பது புரியவில்லை.'' கண்டிப்பு இருந்தது அனந்தின் பேச்சில்.

''கடற்போரா? காதல் போரா?'' என்று விசாரித்த கனோஜி ஆங்கரே பெரிதும் உற்சாகத்தைக் காட்டினார்.

அப்பொழுது தான் கடல்ராணி தனது சாமர்த்தியத்தைக் காட்டினாள். ''கடல்ராணிக்குத் தெரிந்ததெல்லாம் எனக்கும் தெரியும். மாமா அனைத்தும் சொல்லியிருக்கிறார். என்னையே கேளுங்கள்'' என்ற கடல்ராணி மாக்ரேயை நோக்கி, ''காப்டன்! பேருக்கு என்னைக் கடல்ராணியாக வைத்துக் கொள்ளுங்கள். தங்களுக்கு எந்தவித உதவி தேவை?'' என்று வினவினாள்.

காப்டன் மாக்ரே சிறிது நேரம் சிந்தித்தான். ''இன்னும் பத்து நாட்களில் நான் ஐந்து போர்க் கப்பல்களுடன் சிந்து துர்க்கம் வரமுடியும். அப்படி வரும் பட்சத்தில் சிந்து துர்க்கத்தில் தற்சமயம் இருக்கும் காஸண்ட்ராவை எப்படிக் கைப்பற்ற முடியும்? அதற்கு நீங்கள் எப்படி உதவி செய்ய முடியும்? எனக்கு எப்படியும் அந்தக் கப்பல் தேவை, இங்க்லண்டும் டெய்லரும் கூடத் தேவை'' என்றான் கேப்டன் மாக்ரே.

கடல் ராணியும் சில விநாடிகள் சிந்தித்தாள். ''காப்டன் மாக்ரே! கான் யூ ட்ரஸ்ட் மி? (காப்டன் மாக்ரே! என்னை நீங்கள் நம்புவீர்களா)'' என்று ஆங்கிலத்தில் வினவினாள்.

''தட் டிபெண்ட்ஸ் ஆன் வாட் யூ ப்ரபோஸ்டு டூ (அது நீங்கள் என்ன செய்ய உத்தேசிக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது)'' என்றான் காப்டன் மாக்ரே.



கடல் ராணி ஆசனத்திலிருந்து எழுந்தாள். கைகளை மேஜை மீது ஊன்றிக் கொண்டு தலை குனிந்து சிறிது நேரம் சிந்தனை வசப்பட்டாள். பிறகு சொன்னாள் சீரிய குரலில்: ''காஸண்ட்ராவை உங்களிடம் ஒப்படைக்க என்னால் முடியும். ஆனால், இங்க்லண்ட், டெய்லர் இருவரும் என் வசத்தில் இருப்பார்கள்'' என்று.

''ஏன்?'' என்று கேட்டான் மாக்ரே.

''அவர்கள் சிந்து துர்க்கத்திற்கு வந்து என்னைச் சிறை செய்தார்கள். காஸண்ட்ராவுக்குக் கொண்டு போனார்கள். அதற்கு அவர்களுக்குத் தண்டனை கொடுக்கப்படும்'' என்றாள் கடல் ராணி.

புரிந்ததற்கு அடையாளமாகத் தலையை அசைத்தான் மாக்ரே. ''நிச்சயமாக அவர்களைத் தண்டிப்பீர்களா?'' என்று கேட்கவும் செய்தான்.

''நிச்சயமாக!'' என்றாள் கடல் ராணி.

கனோஜிக்கு உற்சாகம் தாங்க முடியவில்லை. ''நல்லது! கடல் ராணியே வந்து விட்டது நல்லதாகப் போய்விட்டது'' என்று பெரிதாகச் சத்தம் போட்டுக் கடல்ராணியை நோக்கினார்.

''கனோஜி! தவறு செய்கிறீர்கள். கடல் ராணியாக நான் நடித்தேன் ஏற்கனவே சொன்னபடி. எதற்கும் கடல் ராணியைக் கேட்டுவிடுவோம்'' என்ற கடல் ராணி சாருவை நோக்கினாள். ''ராணி! நான் சொன்னதெல்லாம் சரிதானே?'' என்று வினவினாள்.

அதுவரை தலையைக் குனிந்து உணர்ச்சி வெள்ளத்தில் உட்கார்ந்திருந்த சாரு தலையை நிமிர்த்திக் கடல்ராணியின் கண்களோடு தனது கண்களைக் கலந்தாள். பிறகு சொன்னாள்: ''முற்றிலும் சரி'' என்று அத்துடன் நிற்காமல், ''சாரு! நீ எதைச் சொன்னாலும் நான் மறுக்க மாட்டேன். நமது ஆசை அலைகள் ஒரே துறையில்தான் சென்று மோதுகின்றன'' என்றும் கூறினாள்.

கடல் ராணியின் முகத்தில் ஒரே ஒரு விநாடி சினத்தின் சாயை தோன்றி மறைந்தது. ''ஆம் ஆம்'' என்ற கடல்ராணி பேஷ்வாவை நோக்கி, ''இனி கனோஜியும் பிரிட்டிஷ் காப்டனும் ஒப்பந்தத்தை எழுதட்டும்; கடல்ராணியிடம் அனுப்பிக் கையெழுத்து வாங்கலாம். இனி நாம் போகலாம்'' என்று கூறினாள்.

இதைக் கேட்ட பேஷ்வா புன்முறுவல் செய்தார். கனோஜி விழித்தார். அனந்த் பெரிதும் அலுத்துக் கொண்டான். சாருவின் விழிகளில் சினத்தின் சாயை உதயமாயிற்று. நிலைமை எல்லாருக்குமே உபத்திரவமாக இருந்தது. ஆனால், மாக்ரே இதைக் கேட்டதும் எழுந்திருந்து பேஷ்வாவை நோக்கி, ''என் கடமையை நான் செய்கிறேன். கடல்ராணி கூறிய உறுதியைக் காப்பாற்றட்டும்!'' என்றான்.

''இனி நாம் போகலாம்'' என்று கடல் ராணி கூறினாள்.

''எங்கே?'' என்று வினவினான் அனந்த் குழப்பத்துடன்.

''மலைக்குடிசைக்கு'' என்றாள் கடல் ராணி.

''மலைக் குடிசைக்கா?'' வியப்பும் சங்கடமும் ஒலித்தது அனந்தின் கேள்வியில்.

''ஏன் சாருவுடன் வரக் கசக்கிறதா? அந்தக் கள்ளி கடல் ராணி மயக்கிவிட்டாளா உங்களை?'' என்று சாருவையும் சுட்டிக் காட்டிய கடல் ராணி அனந்தின் கையைப் பிடித்து, ''வாருங்கள் போவோம்'' என்று இழுத்தாள்.

''விடு அவரை!'' சாருவின் குரல் கடுங்கோபத்துடன் எழுந்தது.

கடல்ராணி அனந்தின் கையை விடவில்லை. மாக்ரே அந்தக் காட்சியைக் கண்டு நகைத்தான். ''டு கேர்ள்ஸ் அண்ட் ஒன் மேன்! இட் ஈஸ் ஜஸ்ட் எ ஹெல் (ஒரு புருஷன் இரண்டு மீடந்தையர். அதைவிட நரகம் ஏது?)'' என்று கூறினான் நகைப்பின் ஊடே.

அதைக் கேட்ட கனோஜியும் நகைத்து, ''காப்டன்! நீங்கள் உங்கள் அறைக்குச் சென்று படுத்துக் கொள்ளுங்கள். காலையில் ஒப்பந்தத்தை எழுதுவோம்'' என்று கூறி அவரை அழைத்துக் கொண்டு வெளியே சென்றார்.

அறையில் விடப்பட்ட மற்றவர் ஒருவரையொருவர் நோக்கினர். பேஷ்வாவின் ஒரு பார்வையால் பணியாளர் வெளியேறினர்.

கடல் ராணி, பேஷ்வாவை நோக்கிச் சாருவையும் நோக்கினாள். ''இந்த நாடகத்தின் காரணம் என்ன?'' என்று வினவினாள்.

அனந்தும் சாருவும் பதில் சொல்லவில்லை. பேஷ்வாவே விவரிக்கத் தொடங்கினார்.

அத்தியாயம் – 38

# கடல் நாயகியும் மலை நாயகியும்!

விஜய துர்க்கத்தின் விருந்து மண்டபத்தில் நடந்த நாடகத்துக்குக் காரணத்தைக் கடல்ராணி கேட்டதும் பேஷ்வா பாஜிராவ் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. தமது நாற்காலியில் நன்றாகச் சாய்ந்துகொண்டு சில விநாடிகள் சிந்தனையில் இறங்கினார். பிறகு பேச முற்பட்டபோது எந்தவிதமான உணர்ச்சிக்கும் இடம் கொடாமல் சர்வ சகஜமாகப் பேசத் தொடங்கினார். ''ரத்னா!'' என்று கடல்ராணியைப் பெயர் கொண்டு அழைத்தார் பாஜிராவ்:

''அரசுகள் மோதும்போது நாம் ரகசியம் என்று நினைக்கும் எதுவும் ரகசியமாக இருப்பதில்லை. இப்பொழுது அரபிக்கடல் பகுதியில் மூன்று ராஜ்யங்கள், மகாராஷ்டிர சாம்ராஜ்யம், மொகலாய சாம்ராஜ்யம், வணிகர்கள் என்று சொல்லிக் கொண்டு பாரதத்தைக் கைப்பற்றப் பார்க்கும் பிரிட்டிஷ் அரசாங்கம் ஆகிய மூன்றும் மோதுகின்றன. அரபிக்கடல் யார் வசம் இருக்கிறதோ அவர்கள் வசம் பாரதமும் இருக்கும் என்று மூன்று அரசுகளும் நம்புகின்றன. ஆகவே மூன்று ராஜ்யங்களும் அரபிக்கடல் துறை முகங்களில் என்ன நடக்கின்றன என்பதை ஊன்றிக் கவனிக்கின்றன. கவனிப்பதோடு நிற்கவில்லை. அவற்றைக் கைப்பற்றவும் முயலுகின்றன.

மொகலாய சாம்ராஜ்யம் ஜன்ஜிரா ஸித்திகள் மூலம் மேலைக் கடலோரத் துறைமுகங்களைக் கைப்பற்றவும் தனது கடலாதிக்கத்தை நிறைவேற்றவும் முயலுகின்றது. பிரிட்டிஷ் வணிகர்களுக்கு அவ்வப்போது போர்க்கப்பல்கள், வணிகக் கப்பல்களாக இங்கிலாந்திலிருந்து வந்து கொண்டிருக்கின்றன. கார்வார் துறைமுகத்திலும் சூரத்திலும் சில கட்டப்படுகின்றன. மகாராஷ்டிர சாம்ராஜ்யம் கனோஜி ஆங்கரேயை ஸார்கேல் ஆக்கியது. அவரது முக்கிய நோக்கம் கொள்ளை என்பதை அறிந்தும்,

அவரது கடல் போர்களை நாம் ஆதரித்தோம். ஸித்திகளின் கொள்ளைகளை மொகலாயர்களும் ஆதரித்தனர். ஆனால், பிரிட்டிஷ் கொள்ளைக்காரர்களின் கதை வேறு.

தங்கள் சொந்த லாபத்துக்காகக் கொள்ளையடித்தார்கள். அவர்களை நசுக்க பிரிட்டிஷ் கவர்னர், மாக்ரேயைத் தேர்ந்தெடுக் கிறார். மாக்ரே முன்பே காஸண்ட்ரா கப்பலின் காப்டனாக இருந் தவர். அவரைக் கொள்ளைக்காரக் காப்டன்களான இங்க்லண்டும் டெய்லரும் முறியடித்து அவர் கப்பலையும் கைப்பற்றிக் கொண் டிருக்கிறார்கள். ஆகையால் மாக்ரே அவர்களை முறியடிக்கவும் தனது தோல்விக்குப் பழிவாங்கவும் முனைந்து நிற்கிறார். அவரை நமக்குப் பயன்படுத்திக் கொள்ள கனோஜி முடிவு செய்திருக்கிறார்...'' என்று விவரித்துச் சிறிது பேச்சை நிறுத்தினர்.

''நீங்கள் பிரிட்டிஷ் கடல் பலத்தை அழிக்கப் பார்க்கிறீர்கள். இரண்டும் முரண்பாடான விஷயங்கள் அல்லவா?'' என்று வினவினாள் ராணி.

''முரண்பாடு இல்லை. காஸண்ட்ராவைத் தாக்க மாக்ரேக்கு அனுமதி அளிப்போம். காஸண்ட்ரா வெற்றி கொண்டால் மாக்ரேயின் ஐந்து போர்க் கப்பல்களும் அழிந்து விடும். அப்பொழுது மாக்ரே நம் வசப்படுவான். மாக்ரே வெற்றி கொண்டால் காஸண்ட்ரா நம் கைவசமாகிவிடும். எப்படியானாலும் பிரிட்டிஷ் கடற்படையின் முதுகெலும்பு முறிக்கப்படும். அதை அனந்தும் துலாஜியும் கவனித்துக் கொள்வார்கள்'' என்று பேஷ்வா பதில் கூறினார்.

கடல்ராணியின் விழிகளில் வியப்பு விரிந்தது. ''துலாஜி சிந்து துர்க்கத்தில் இருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று வினவினாள் கடல் ராணி.

''அனந்த் இருப்பது எப்படித் தெரியுமோ அப்படித்தான். அரபிக் கடலில் பிரிட்டிஷ் பலத்தை முறியடிக்க இந்த இரண்டு அயோக்கியர்களைத்தான் நான் நம்பியிருக்கிறேன்'' என்ற பேஷ்வா மெள்ள நகைத்தார்.

ராணியும் சிந்தனையில் இறங்கினாள். எதிலும் பேஷ்வாவின் கரம் மறைவிலிருக்கிறது என்பது ஐயமறத் தெரிந்தது அவளுக்கு.



''அப்படியானால் இவர் சிந்து துர்க்கத்துக்கு ரகசியமாக வர வேண்டிய காரணம் என்ன?'' என வினவினாள் சந்தேகக் குரலில்.

பேஷ்வா தமது முழங்கையை மேஜை மீது வைத்துக் கொண்டு கைகளின் விரல்களைப் பின்னிக் கொண்டார்: ''அதைப் பற்றி அனந்தைத்தான் கேட்க வேண்டும். அவனை நான் சிந்து துர்க்கத்துக்கு அனுப்பவில்லை. கார்வாருக்குத்தான் முதலில் அனுப்பினேன், சுந்தா ராஜாவுக்கு உதவ. அங்கு வந்த பிரிட்டிஷ் கடற்படையை முறியடித்தான் அனந்த், ராஜாவின் புரவிப்படை களுக்குத் தலைமை வகித்து. பிறகு சிந்து துர்க்கம் வந்திருக்கிறான் ஒரு கொள்ளைக் காரனுடன். அவன் பெயர்...'' என்று சிறிது சிந்தித்தார் பேஷ்வா.

அதுவரை மௌனமாக இருந்த அனந்த், ''காப்டன் ஸில்வர்'' என்று கூறினான். ''அவன் மூலந்தான் காஸண்ட்ரா அரபிக்கடலில் சஞ்சரிப்பது எனக்குத் தெரிய வந்தது. அவனைக் கொண்டுதான் நான் பிரிட்டிஷ் கடற்கொள்ளைக்காரர்களை அழிக்க வந்திருப்பதாக வதந்தியைப் பரவ விட்டேன். அந்த வதந்தி காஸண்ட்ராவுக்கு நான் விரித்த வலை. அதில் இங்க்லண்டும் டெய்லரும் விழுந்தார்கள். சிந்து துர்க்கத்துக்கு நான் போகப் போவதையும் பகிரங்கப் படுத்தினேன். இங்க்லண்டின் நண்பர்கள் இல்லாத துறைமுகம் மேலைக் கடலோரத்தில் கிடையாது. நான் அவர்களை அழிக்கும் முன்பு என்னை அவர்கள் அழித்து விடத்திட்டமிட்டார்கள். நான் கடல்ராணியைச் சந்தித்து அவள் உதவியைப் பெற விரும்பினேன். எதிர்பாராத முறையில் அவளைச் சந்தித்தேன்...'' என்று கூறிச் சிறிது தயங்கினான் அனந்த்.

''கதாநாயகன் கடலரசியைச் சந்தித்தான், காப்பாற்றினான், காதல் கொண்டான், களியாட்டம் நடத்தினான்'' என்று சுடச்சுட பேசிய சாரு கடல்ராணியை நோக்கினாள்.

கடல்ராணியின் கண்களில் சினத்தின் சாயை படர்ந்தது. ''பிறகு அவளை விட்டு ஓடினான், மலை நாயகியிடம் உறவாட, மலைக்குடிசையில் சரசமாடினான். பிறகு மலைநாயகி கடல் நாயகியாக வேஷம் போட்டாள். அனந்தைக் காக்க வந்தாள், அந்தக் கள்ளனிடம் ஏமாந்த அபலை'' என்று சீறினாள் ராணி.

''பேசுவதை யோசித்துப் பேசு. என்னிடம் சரசமாட வரவில்லை அனந்த். சரசமாடினாலும் தவறில்லை. நான் கோர்படே வம்சம்'' என்று சாரு எழுந்து நின்றாள் நாற்காலியை விட்டு.

''எந்தப் படே வம்சமாயிருந்தாலும் நீ ஒரு பெண். உன்னைப் பற்றி விஜய துர்க்கத்தில் என்ன பேசுகிறார்கள் என்பதைக் கேட்டேன். எனக்கு அந்த மாதிரி அவப்பெயர் கிடையாது. கொள்ளைக்காரி என்று பெயர் உண்டு. ஆனால், உன்னைப் போல்...'' வாசகத்தைக் கடல் ராணி முடிக்கவில்லை. அவளை நோக்கிப் பறந்து வந்தது ஒரு கண்ணாடி டம்ளர்.

கண்ணிமைக்கும் முன்பாகச் சாரு வீசிய அந்தக் கண்ணாடி டம்ளரைத் தன் இடது கையால் பிடித்தாள் ராணி. அடுத்து அவள் சினத்துடன் நகைத்தாள். அனந்தை நோக்கிக் கேட்டாள், ''மேலைக் கடல் மன்மதனே! உங்கள் ஆசை நாயகியை என்ன செய்யட்டும்?'' என்று. அப்படிக் கூறியபோது அவள் கை தனது இடையில் செருகப் பட்டிருந்த கைத்துப்பாக்கியைத் தடவியது.

சாரு எதுவும் பேசவில்லை. அனந்தின் கச்சையிலிருந்த கைத்துப்பாக்கிகளில் ஒன்றை எடுத்துக் கொண்டாள். ''சுடு சாமர்த்தியம் இருந்தால்'' என்று கூறிக் கைத்துப்பாக்கியைக் கடல் ராணியை நோக்கிக் குறி வைத்தாள் நின்ற நிலையிலேயே.

இந்தப் பொறாமை நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த பாஜிராவ் தமது ஆசனத்தைவிட்டு எழுந்திருந்தார். ''நீங்கள் பெண்கள் என்று நினைத்தேன், பிசாசுகள் என்று தெரியாது. சாரு! அனந்தின் கைத்துப்பாக்கியை அவன் கச்சையில் செருகிவிடு. ரத்னா! உன் கையைக் கச்சையிலிருந்து அகற்று. வாருங்கள் மலைக் குடிசைக்குப் போகலாம்'' என்று கூறிவிட்டு வாசற்படியை நோக்கி நடந்தார்.

அனந்தும் அவரைப் பின்பற்ற முயன்ற சமயத்தில் அவன் இரு புறத்திலும் இரு மங்கையரும் நின்று கொண்டார்கள். அவன் நடந்த போது இருவரும் நடந்தார்கள். இரு காவலரால் சிறைப்படுத்தப் பட்ட கைதியைப் போல் அவர்கள் இருவரிடையேயும் சென்றான் அனந்த். அவர்களை வாயிற்படிக்கு அருகில் சந்தித்த கனோஜி,



அனந்தின் நிலமையைக் கண்டு இடிஇடியென நகைத்தார். ''நல்ல வேளை! எனக்கு இந்தக் கதி வரவில்லை'' என்றும் கூறினார் நகைப்பின் ஊடே.

அவரைக் கண்டதும் பாஜிராவ் சொன்னார்: ''ஒப்பந்த விதிகளை எழுதிவிடுங்கள். நாளைக் காலையில் ராணியும் மாக்ரேயும் கையெழுத்திடுவார்கள்'' என்று.

கனோஜி தலையசைத்தார் ஆமோதிப்பதற்கு அறிகுறியாக. அடுத்தபடி அனந்துக்கு அருகில் வந்து, ''நீ போகும்போது துலாஜிக்கு ஒரு கடிதம் தருகிறேன். அதை எடுத்துக் கொண்டு போ'' என்றும் சொன்னார்.

அனந்தின் மனம் இருந்த நிலையில் எதற்கும் தலையாட்டுவதைப் போல அவர் கோரிக்கைக்கும் தலையாட்டினான். பேஷ்வா பாஜிராவ் பழைய குறுக்கு வழியிலேயே அவர்களை அழைத்துச் சென்றார். விஜய துர்க்கத்தை அடுத்த மலைக்காடு ஆங்காங்கு அடர்த்தியாக இருந்தாலும் பேஷ்வா நீண்டநாள் அதிலேயே நடந்தவர் போல் முன்னால் நடந்தார். பின்னால் வந்த அனந்தும், அவனுக்கு இருபுறத்திலும் துவாரபாலகிகளாக வந்த ராணியும் சாருவும் சிறிதும் சிரமமில்லாமலும் சர்வசகஜமாகவும் மலைமீது ஏறினார்கள். அந்தப் பயணத்தின்போது மூவரும் பேசவில்லை. காட்டு மிருகங்கள், பட்சிகளின் சப்தங்களைத் தவிர வேறு எந்தச் சப்தமும் இல்லை. இப்படி மௌனமாக நடந்த நால்வரும் மலை உச்சிக்கு வந்ததும், சாருவே முதலில் குடிசைக்குள் நுழைந்து விளக்கை ஏற்றினாள். பாஜிராவ் குடிசையின் முகப்பில் பழையபடி உட்கார்ந்து கொண்டார். அனந்த் உட்காராமலேயே நின்றான். அவன் பக்கத்தில் நின்ற கடல்ராணி சற்று எட்டச் சென்று மலைச் சரிவில் ஓரிடத்தில் அமர்ந்து முழந்தாள்களைக் கட்டிக் கொண்டாள்.

''ராணி! உள்ளே போய்ப் படுத்துக் கொள்'' என்றார் பாஜிராவ்.

''வேண்டாம். இவரே போகட்டும்'' என்றாள் ராணி.

அந்தச் சமயத்தில் வெளியே வந்த சாரு அனந்தை நோக்கி, ''நீங்களும் அவளும் படுத்துக் கொள்ளலாம். பாய் போட்டி ருக்கிறேன். மதுவும் குப்பியில் இருக்கிறது'' என்று கூறிவிட்டு ஒரு

புறமாக உட்கார்ந்து கொண்டாள். அனந்தும் குடிசை வாசலில் பேஷ்வாவின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். ''பேஷ்வா! நீங்கள் உள்ளே படுத்துக் கொள்ளுங்கள்'' என்றான்.

''உன் கடல் நாயகியும் மலை நாயகியும் எங்கே படுப்பார் கள்?'' என்று வினவினார் பேஷ்வா புன்சிரிப்பு உதடுகளில் விரிய.

''எங்கோ படுத்துத் தொலையட்டும்!'' என்ற அனந்த் தரையிலேயே படுத்தான்.

பேஷ்வா குடிசைக்குள் போகவில்லை. குடிசையின் ஓலைத் தட்டியில் சாய்ந்துகொண்டே கண்ணை மூடி உறங்கினார். அவர் உறங்கியதால் ஒரே சீராக வந்த மூச்சை இரு மங்கையரும் கவனித்தனர். இரவு ஏறியதும் இருவருக்கும் உறக்கம் வரவில்லை. எண்ணங்கள் எங்கெங்கோ ஓடின. கடல் ராணி மெள்ளக் கண் விழித்துப் பார்த்தாள். சாரு நன்றாக உறங்கிக் கொண்டிருந்ததைக் கவனித்ததும் அனந்தை நெருங்கி அவன் நெற்றியில் கையை வைத்தாள். அப்பொழுது சாரு நகைத்தாள். அனந்த் கண்ணை மூடிக் கொண்டு படுத்திருந்தான். ''பூனை கண்ணை மூடிக் கொண்டதால் பூலோகம் அஸ்தமித்து விடாது!'' என்று சாரு கூறினாள்.

''யார் பூனை?'' என்று சீறிக் கொண்டு அனந்த் எழுந்தான்.

அவன் எழுந்த வேகத்தில் கடல்ராணி மீது மோதியதால் அவள் விழ இருந்தாள் மல்லாந்து. விழாமல் தாங்கிப் பிடித்தான் அனந்த். அதைப் பார்த்த சாரு வேறு பக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

அத்தியாயம் - 39

# பதிபக்தி பதியுக்தி!

திடீரென தான் எழுந்து மோதிவிட்டதால் மல்லாந்து விழ இருந்த கடல்ராணியை அனந்த் தாங்கிப் பிடித்ததும், உள்ளத்தே எழுந்த கோபத்தாலும் வேகத்தாலும் வேறுபக்கம் திரும்பிப் படுத்துக் கொண்ட சாருவைக் கண்ட கடல்ராணியின் கண்களில் ஏற்பட்ட சினம் சொல்லத் தரமல்லாததாக இருந்தது.

''என்னடி பாசாங்கு செய்கிறாய்?'' என்று கேட்டுக் கொண்டே அனந்தின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட கடல்ராணி இரு கைகளையும் முஷ்டியாகப் பிடித்த வண்ணம் சாருவை நோக்கிச் சென்றாள். அவள் அருகில் வரும்வரை அசையாமலேயே படுத்திருந்த சாரு, அவள் அருகில் வந்து நின்றுகொண்டு முஷ்டியை ஓங்கியதும், சரேலென்று தன் கால்களில் ஒன்றை ராணியின் கால்களுக்கிடையில் கொடுத்து ஒரு மடக்கு மடக்கவே ராணி மலைச்சரிவில் புரண்டாள். அடுத்த விநாடி எழுந்து நின்று கொண்ட சாரு, சரிவில் புரண்டு எழுந்துவிட்ட ராணியை நோக்கி, ''நான் கோர்படே வம்சம் என்பதை நீ மறந்துவிட்டாய்'' என்று சுட்டிக் காட்டினாள் சுடு சொற்களால்.

ராணியும் சரிவில் நின்ற வண்ணமே சாருவை மிக அலட்சியமாக நோக்கினாள்.

''நான் கடல் ராணி என்பதை நீயும் மறந்து விட்டாய்'' என்று கூறி நகைத்தாள்.

அந்த நகைப்பை அடுத்து நிகழவிருந்த அனர்த்தத்தை அனந்தின் கடுமையான சொற்கள் தடை செய்தன. ''ரத்னா! எடு உன் கையை இடையிலிருந்து. அந்தக் கைத்துப்பாக்கியை இயக்கினால் ஆயுளுக்கும் நொண்டியாகக் காலம் கழிப்பாய்'' என்ற சொற்களைக் கடுமையாக உதிர்த்தன அனந்தின் உதடுகள். அவன் கையும் அவன் இடையிலிருந்த கைத்துப்பாக்கியில் பதிந்து ராணியின் முழங் காலுக்காகக் குறி வைத்திருந்தது.

இதைக் கேட்ட ராணி மீண்டும் நகைத்தாள். ''கடல் வீரரே! நொண்டிகளின் தயவு தங்களுக்கு எப்போதும் தேவையாயிருக்கிறது. நொண்டி ஸில்வரை அழைத்துக் கொண்டுதான் சிந்து தூர்க்கம் வந்தீர்கள். என்னையும் நொண்டியாக்கி விட்டால் உங்களுக்கு இரண்டு நொண்டிகளின் துணையிருக்கும். ஆகவே சுட்டுவிடுங்கள், ஏன் யோசிக்கிறீர்கள்?'' என்று சொன்னாள் நகைப்பின் ஊடே.

இந்தச் சச்சரவில் பேஷ்வா பாஜிராவும் விழித்துக் கொண்டு விட்டதால் அவரும் எழுந்து உட்கார்ந்து மூவரையும் நோக்கினார் மாறி மாறி.

சாரு ஸஹ்யாத்ரி மலையைப் போலவே குடிசைக்கருகில் அசையாமல் நின்றிருந்தாள். சரிவில் நின்ற ராணியும் சாருவின் பக்கத்திலிருந்த அனந்தும் கைகளைத் தங்கள் இடையில் வைத் திருந்தார்கள் கைத்துப்பாக்கிகளை நிமிர்த்திய வண்ணம்.

திடீரென்று பாஜிராவ் துள்ளி எழுந்து, ''ராணி, வேண்டாம் நிறுத்து'' என்று அதிகாரக் குரலில் கட்டளையிட்டார். பாஜிராவின் அந்தக் கூச்சலுக்குக் காரணம் புரியாத அனந்த் அவரை நோக்கினான். ''அனந்த்! முட்டாள்! அதோ பார் ராணி! தனது கைத்துப்பாக்கியை எடுத்துச் சாருவின் முழந்தாளுக்குத் திருப்பி விட்டாள். நீ ராணியை நொண்டியாக்கும் அதே தருணத்தில் சாருவும் நொண்டியாவாள். இரண்டு நொண்டிப் பெண்களைக் கட்டிக் கொண்டு நீ காலம் முழுவதும் திண்டாட வேண்டியிருக்கும்!'' என்று விளக்கினார்.

அப்பொழுதுதான் அனந்தும் கவனித்தான், கடல் ராணி கைத்துப்பாக்கியைத் திசை திருப்பிவிட்டதை. அதனால் பெரும் சங்கடத்துக்குள்ளான அனந்த், ''நீங்கள் இருவரும் ஒருவரை யொருவர் சுட்டுக் கொண்டு ஒழியுங்கள்'' என்று கூறி விட்டுத் தனது கையிலிருந்த துப்பாக்கியைச் சாருவின் கையில் திணித்துவிட்டு மலைச்சரிவில் சரசரவென இறங்கிக் காட்டின் முகப்பில் மறைந் தான். அவன் சென்றதும் இரண்டு பெண்களும் ஒருவரையொருவர் சீறிக் கொண்டு நின்றனர். இருவர் கைகளிலும் கைத்துப்பாக்கிகள் பயங்கரமாகக் காட்சி அளித்தன.

அந்தச் சமயத்தில் எங்கிருந்தோ வேகமாகச் சுடப்பட்ட ஒரு துப்பாக்கியின் இரு ரவைகள் இரு பெண்களின் கையிலுமிருந்த துப்பாக்கிகளைப் பறித்துச்சென்று விட்டதால் திகைப்பெய்திய இரு பெண்களையும் நோக்கிக் கடகடவென்று நகைத்தார் பேஷ்வா.



''என்ன நகைக்கிறீர்கள்?'' என்று கேட்டாள் பேஷ்வாவை நோக்கி ராணி.

''நகைக்க என்ன இருக்கிறது?'' என்று சாருவும் வினவினாள் கோபத்துடன்.

''கிழவரிடம் உங்கள் ஜம்பம் பலிக்கவில்லை என்பதற்காகச் சிரித்தேன்'' என்று பேஷ்வா கூறினார்.

அதைக் கேட்டதும் காட்டுக்குள் நுழைவதை விட்டுத் திரும்பிப் பாஜிராவை நோக்கிய அனந்த், ஏதோ கேள்வி கேட்க முற்பட்டபோது காட்டு முகப்பில் அவன் பக்கத்தில் தோன்றிய கனோஜி, ''யாரைப் பார்த்துக் கிழவனென்று சொல்கிறீர்கள் பேஷ்வா?'' என்று வினவிக் கொண்டே குடிசையை நோக்கி வந்தார்.

வந்ததும் எதிரும் புதிருமாக மலை உச்சியிலும் சரிவிலும் நின்ற இரு பெண்களையும் நோக்கினார். பிறகு பேஷ்வாவை நோக்கி, ''பேஷ்வா! பெண்களின் கைகளில் ஆயுதம் இருந்தால் எத்தனை உபத்திரவம் தெரியுமா?'' என்று கூறி, ''இவர்கள் கைகளில் ஏன் துப்பாக்கிகளைக் கொடுத்தீர்கள்?'' என்றும் கேட்டார்.

கனோஜி வந்ததும் பேஷ்வா எழுந்து நின்று கொண்டார். ''நான் கொடுக்கவில்லை. ராணியிடம் எப்போதும் துப்பாக்கி உண்டு. சாருவுக்கு அனந்த் கொடுத்துவிட்டான், தனது துப்பாக்கியை'' என்று விளக்கினார் பேஷ்வா நின்ற நிலையில்.

''அனந்த் எங்கே?'' என்று வினவினார் கனோஜி திரும்பிக் காட்டு முகப்பை நோக்கி. அனந்த் காணவில்லை பழைய இடத்தில்.

''காட்டுக்குள் ஓடிவிட்டான்!'' என்றார் பேஷ்வா.

''கெட்டிக்காரன்!'' என்று சிலாகித்தார் கனோஜி.

''எப்படி?''- பேஷ்வாவின் கேள்வியில் வியப்பு இருந்தது.

''என்னைப் பின்பற்றுகிறான் அனந்த். என் சீடனாகி விட்டான்'' என்று களிப்புடன் கூறினார் கனோஜி.

''உங்கள் சீடனாகிவிட்டானா?'' பேஷ்வா கேட்டார் வேண்டுமென்றே.

''விஜய துர்க்கத்தில் எனது இரண்டு மனைவிகளுக்கும் சண்டை. அதிலிருந்து தப்ப இங்கு வந்தேன். இங்கே தனது

மனைவிகளிடமிருந்து தப்ப அனந்த் ஓடிவிட்டான் காட்டுக்குள்'' என்றார் கனோஜி உற்சாகத்துடன்.

இதைக் கேட்டதும் பெண்கள் இருவரும் சீறினார்கள். ''நான் அவர் மனைவியல்ல'' என்றாள் ராணி.

''நானும் அல்ல'' என்றாள் சாரு ராணியின் வேகத்துடன்.

''அதனால் என்ன முழுகிப் போய்விட்டது?'' என்று கனோஜி கேட்டுக் குடிசை வாயிலில் உட்கார்ந்து கொண்டார். பேஷ்வாவை யும் உட்காரச் சைகை செய்தார்.

பேஷ்வா உட்கார்ந்ததும் ராணி கேட்டாள், ''நீங்கள் சொல்வது புரியவில்லை'' என்று.

''எது புரியவில்லை?''

''மனைவியாக இல்லாவிட்டால் என்ன முழுகிப் போய் விட்டது என்று கேட்டீர்களே.''

''கேட்டேன்.''

''அதற்கு என்ன பொருள்?''

''மனைவி போல் இருந்தாலும் போதுமல்லவா? தாலி ஒன்று தானே வித்தியாசம்'' என்றார் கனோஜி.

''ஸார்கேல்!...'' சூடாக எழுந்தது ராணியின் அச்சுறுத்தல்.

''ஸார்கேல்!'' சாவதானமாக ஆனால், பயங்கரமாக எழுந்தது சாருவின் குரல். அடுத்து இருவரும் கனோஜியை நோக்கி வந்தார்கள். ''அட உபத்திரவமே! என்னை ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்? நான் அனந்த் இல்லை'' என்று குடிசைத் தட்டி மேல் சாய்ந்து அஞ்சுவது போல் பாசாங்கு செய்தார் கனோஜி.

''உங்கள் மனைவிமார் எதற்காக உங்களிடம் சண்டை போட்டார்கள்?'' என்று அந்தச் சமயத்தில் அசம்பாவிதமாக பேஷ்வா வினவினார்.

கனோஜி தரையை நோக்கினார். ''அது ஒரு சின்ன விஷயம்'' என்றார்.

''விளக்கமாகத்தான் சொல்லுங்களேன்'' என்றார் பேஷ்வா.

''சில வருஷங்களுக்கு முன்பு ஒரு பெண்ணைச் சந்தித்தேன். அவள் திடீரென விஜய துர்க்கத்துக்கு வந்துவிட்டாள்'' என்று மென்று விழுங்கினார் கனோஜி.



கனோஜியின் திருவிளையாடல்களை பற்றிப் பாஜிராவ் நேரில் அறியவில்லையானாலும் அவர் பிரக்யாதி பெரிதும் மகாராஷ்டிரத்தில் பரவியிருந்ததால், ''பழைய வினையா?'' என்று வினவிப் புன்முறுவலும் பூத்தார்.

''அதில் வினை ஏதுமில்லை. ஏதோ வாலிப வயதின் விளையாட்டு. அது இத்தனை ஆண்டுகள் கழித்தும் பிராணனை வாங்குமென்று தெரியாது'' என்று கனோஜி அலுத்துக் கொண்டார். ''பெண்களின் சகவாசமே கூடாது'' என்று தத்துவமும் பேசினார்.

''காலம் கடந்த அறிவு'' என்று பேஷ்வாவும் உபதேசித்தார்.

இந்தச் சம்பாஷணையால் வெறுப்பும் சினமும் அடைந்த சாருவும் ராணியும் தங்கள் கைத்துப்பாக்கிகளை இடையில் செருகிக் கொண்டு குடிசைக்குள் சென்றுவிட்டனர்.

அவர்கள் சென்றதும் ஆசுவாசப் பெருமூச்சு விட்ட கனோஜி, ''இந்த அனந்த் எங்கே போய்விட்டான்?'' என்று கேட்டு, ''அனந்த்! அனந்த்!'' என்று கூவினார் இருமுறை.

அனந்த் மெள்ளத் தலையை நீட்டினான் காட்டு முகப்பி லிருந்து. ''பயப்படாதே வா!'' என்று அழைப்பு விடுத்தார் கனோஜி.

அனந்த் மெள்ள அவரை நோக்கி வந்தான். கனோஜி அவனைத் தமது பக்கத்தில் உட்காரச் சொல்லி மடியிலிருந்த நீண்ட கடிதமொன்றை எடுத்து பாஜிராவிடம் நீட்டினார். ''சாரு! உள்ளே இருக்கும் விளக்கைக் கொண்டுவா'' என்று குடிசைக்குள் கண்களை ஓட்டிக் கூப்பிட்டார். ''ராணி! நீயும் வா''என்று அவளையும் அழைத்தார்.

சாரு விளக்கைக் கொண்டுவந்து பொட்டென்று தரையில் வைத்தாள். அவளுக்கு பின் வந்த கடல் ராணி எதிரில் நின்று, ''என்ன விசேஷம்?'' என்று கேட்டு வலது காலைத் தரையில் உதைத்தாள்.

கனோஜி அந்த இருவர் காட்டிய அவமரியாதையையும் லட்சியம் செய்யாமல் பாஜிராவை நோக்கி, ''ஒப்பந்தம் சரியாயிருக் கிறதா என்று பாருங்கள். வீண் ஆலசியம் வேண்டாமென்று நீங்கள் போனவுடன் ஒப்பந்த ஷரத்துக்களை எழுதி மாக்ரேயிடம் கையெழுத்தும் வாங்கிவிட்டேன். இதோ நகலும் இருக்கிறது'' என்று கூறி நகலையும் எடுத்துக் கொடுத்தார் மடியின் இன்னொரு புறத்திலிருந்து.

பாஜிராவ் விளக்கில் படித்தார் ஒப்பந்தத்தை. ''சரியாக இருக்கிறது. நாம் பேசியதை அப்படியே ஒப்புக் கொண்டிருக்கிறான் மாக்ரே'' என்று உற்சாகத்தையும் காட்டினார் குரலில். ''ராணி! இதில் நீ கையெழுத்திட்டு விடு'' என்றும் உத்தரவிட்டார்.

கடல் ராணி தரையில் உட்கார்ந்தாள். அனந்தின் பக்கத்தில், ''நீங்கள் படித்துப் பாருங்கள். நீங்கள் கையெழுத்துப் போடச் சொன்னால் போடுகிறேன்'' என்றும் சொன்னாள்.

அந்தச் சமயத்தில் குடிசைக்குள்ளிருந்து தலை நீட்டிய சாரு, ''ராஜா சொன்னால் ராணி தட்டமாட்டாள். அடடா! என்ன பதிபக்தி!'' என்று கூறி இகழ்ச்சியாக நகைத்தாள்.

''எனக்குப் பதியுக்தி இல்லை'' என்றாள் ராணி,சாருவை நோக்கி.

''பதியுக்தியா?'' இகழ்ச்சியுடன் எழுந்தது சாருவின் கேள்வி.

''பதியைப் பிடிக்கும் யுக்தி. அதில் நீ வல்லவள்'' என்றாள் ராணி.

''நீயா, நானா?'' வாயிலை விட்டு இரண்டு அடி எடுத்து வைத்தாள் சாரு.

''சாரு! ராணி! உங்கள் சண்டையைப் பிறகு வைத்துக் கொள்ளுங்கள். முதலில் ஒப்பந்தம் கையெழுத்தாகட்டும்'' என்று இடை புகுந்த பாஜிராவ் இரு பெண்களையும் கடுமையாகப் பார்த்தார்.

அதற்குப் பிறகு யாரும் பேசவில்லை. ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. ராணி நகலைத் தான் வைத்துக் கொண்டாள். அசல் ஒப்பந்தக் காகிதத்தை எடுத்துக்கொண்டு கனோஜி கிளம்பினார், விஜய துர்க்கத்தை நோக்கி. ''பதிபக்தி! பதியுக்தி! வருகிறேன்'' என்று இரு பெண்களையும் நோக்கி நகைத்துவிட்டு மலைச் சரிவில் இறங்கிச் சென்றார்.

அவர் சென்றதும் பாஜிராவ் நகைத்தார். ஏன், அனந்த் கூட நகைத்தான். ஆனால், அதே சமயத்தில் நகைப்புக்குத் துளிக்கூட இடமில்லாத விபரீதம் சிந்து துர்க்கத்தில் நிகழ்ந்து கொண்டிருந்ததை அந்தக் குடிசை வாயிலிலிருந்த நால்வரும் உணரவில்லை!

### அத்தியாயம் - 40

# இயங்கிய சிலை

கிருஷ்ண பட்சம் முடிந்து சுக்ல பட்சம் துவங்கிய பிரதமை, பின்னிருட்டை மிகக் கருமையாக வீசியிருந்ததால் சிந்து துர்க்கமெனும் கற்கோட்டையும் அதன் கருங்கல் ஸ்தூபிகளும் பெரும் பிசாசுகளைப் போல காட்சியளித்ததல்லாமல், அந்தக் கற்கோட்டையின் துறைமுகங்களில் எட்ட காற்றில் ஆடி நின்ற காஸண்ட்ரா தனது இரண்டொரு விளக்குகளைக் காட்டி, கொள்ளிவாய்ப் பிசாசின் உருக் கொண்டு விட்டதால் மேலைக்கடலின் அந்தப் பகுதியில் பயங்கரமான சூழ்நிலை நிலவிக் கிடந்தது. அத்தகைய நிலையில் அவ்வப்பொழுது வீசிய கடலின் ஊதல் காற்றும் அதனால் உந்தப்பட்ட அலைகள் சிந்து துர்க்கத்தின் கோட்டை மீதும் காஸண்ட்ரா மீதும் மோதியதால் ஏற்பட்ட சரேல் சரேல் என்ற ஓசையும், எங்கும் எமதாண்டவம் நடப்பது போன்ற பிரமையை உருவாக்கியிருந்தன.

அத்தனை காற்றுக்கும் அணையாமல் லேசாக அசைந்த சிந்து துர்க்கத்தின் வட கிழக்கு வாயில் விளக்குகளும் சங்கர் பந்தின் மாளிகை விளக்குகளும் நமனை அஞ்சோம் என்று சிந்து துர்க்கவாசிகளின் அச்சமற்ற நெஞ்சங்களுக்கு அடையாளமாகத் திகழ்ந்தன.

இந்தச் சமயத்தில் பேரலைகள் எழுந்த நேரத்தில் காஸண்ட்ரா மிக மெதுவாகத் திரும்பியது சிந்து துர்க்கத்தின் கோட்டை வாயிலை நோக்கி. அதன் முகப்பு கோட்டை வாயிலை நோக்கியதால் அதன் வலதுபக்கம் பூராவும் கோட்டை மதிளை நோக்கலாயிற்று. அப்படி அந்தப் பெரும் இருளின் உதவி கொண்டு திரும்பி நின்றதால், அதன் பக்க பீரங்கிகள் சிந்து துர்க்கத்தின் மதிளைப் பார்த்து விழித்தன பயங்கரமாக. சிந்து துர்க்கம் நல்ல உறக்கத்தில் இருந்ததன் விளைவாக மூன்றாவது ஜாமத்தில் ஏற்பட்ட அந்த நிகழ்ச்சியைக் கவனிக்கவில்லையென்றாலும், அதிலிருந்த ஒரே ஒரு மனிதன் மட்டும் என்ன காரணத்தினாலோ உறங்காமல் மிக அமைதியாகவும்,

சாமர்த்தியமாகவும் ஏற்பட்ட அந்த நிகழ்ச்சியைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

சிந்து துர்க்கத்தின் வட்ட பீரங்கி நிலையம் ஒன்றில் ஒதுக்குப்புறமாக அமர்ந்திருந்த அந்த மனிதன் காஸண்ட்ரா நன்றாகத் திருப்பப்பட்டதும் பக்கத்திலிருந்த டெலஸ்கோப்பை எடுத்து அதைக் கவனித்தான். காஸண்ட்ரா திரும்பியதும், அதிலிருந்து ஒரு படகு இறக்கப்பட்டதையும், அலைகளின் உக்கிரத்தை அலட்சியம் செய்து இருவர் அந்தப் படகில் ஏறிக் கொண்டதையும் அவன் பார்த்தான். அந்த இருவரும் டெய்லரும் ஸில்வரும் என்பதையும் உணர்ந்ததால் அடுத்தபடி டெலஸ் கோப்பைக் கண்களிலிருந்து எடுத்துப் பழையபடி பக்கத்தில் வைத்துக்கொண்டு கருங்கல் சுவரில் மல்லாந்து கண்களை மூடிக் கொண்டான் சுமார் அரை ஜாம நேரம்.

பிறகு டெலஸ்கோப்பின் பக்கத்தில் வெளிப்பக்கம் நோக்கி வாயை நீட்டிக் கொண்டிருந்த பீரங்கிக்கு மருந்து திணிக்கும் இடத்தில் அதை வைத்து மறைத்துவிட்டு, தான் இருந்த இடத்தை விட்டு நேராக நடந்தான். சிந்து துர்க்கத்தின் வாயிலை நோக்கி அப்படி நடந்தவன் சிவாஜி சிலைக்கு அருகில் வந்ததும் சிலைக்குப் பின்னால் இன்னொரு சிலையாக மறைந்து நின்றான். அப்பொழுது படகை வாயிலின் தளையில் பிணைத்துவிட்டு இறங்கி உள்ளே வந்த டெய்லரும் ஸில்வரும் நேராக சங்கர் பந்தின் மாளிகையை நோக்கி நடப்பதையும் அவன் பார்த்தான். அவர்கள் மாளிகை வாயிலை அடைந்ததும் தானும் வெளிவந்து மறுபடியும் பழைய இடத்துக்குச் சென்று சிறுவிளக்கு ஒன்றைக் கொளுத்தி, காஸண்ட்ரா கப்பலை நோக்கி இருமுறை ஆட்டிவிட்டு விளக்கை அணைத்து இருளில் அமர்ந்திருந்தான். சுமார் பத்து நிமிடங்கள் ஓடியதும் காஸண்ட்ராவின் பீரங்கித் துளையில் ஒரு தீபம் இருமுறை கண்ணைச் சிமிட்டி மறைந்தது. அதனால் பெரிதும் திருப்தி அடைந்த அந்த மனிதன் மறுபடியும் வெளிவந்து இருந்த இடத்திலிருந்தே சங்கர் பந்தின் மாளிகையைக் கவனித்தான்.

அங்கு சென்று வாயிலில் நின்ற டெய்லரும் ஸில்வரும் சிறிது நேரம் ஏதோ தர்க்கத்தில் இருந்தார்கள். பிறகு ஸில்வர் மட்டும் தனது தடியை ஊன்றிப் படிகளில் ஏறிச் சென்று கதவைத் தட்டினான். கதவு திறக்கப்பட்டு வெளியே வந்த காவலன் மார்பை நோக்கிக் கைத்



துப்பாக்கியை நீட்டி, ''தளபதியை நாங்கள் உடனே பார்க்க வேண்டும். எழுப்பு!'' என்று உத்தரவிட்டான்.

காவலன்! ஸில்வரின் துப்பாக்கியை மிக அலட்சியமாகப் பார்த்தான். ''தளபதி உறங்குகிறார்!'' என்று அறிவித்தான்.

''அதனால்தான் எழுப்பச் சொல்கிறோம்'' என்று டெய்லர் படிகளுக்குக் கீழிருந்த வண்ணம் சீறினான்.

டெய்லரைப் பார்த்ததும் சிறிது சிந்தனை வசப்பட்ட காவலன், ''சரி வாருங்கள் உள்ளே'' என்று கூறிக் கதவை நன்றாகத் திறந்துவிட்டு ஸில்வரும் டெய்லரும் பின் தொடர மாளிகைக்குள் நடந்து, முன்கூடத்தில் அவ்விருவரையும் உட்காரச் சொல்லிவிட்டு உள்ளே சென்றான். சற்று நேரத்துக்கெல்லாம் உள்ளிருந்து நீளமான அங்கியொன்றை அரைகுறையாக அணிந்துகொண்டும் தூக்கம் முழுவதும் கலையாததால் கண்களைக் கசக்கிக்கொண்டும் கூடத்துக்கு வந்த சங்கர் பந்த் மஞ்சங்களில் அமர்ந்திருந்த இரு வெள்ளைக் கொள்ளையரையும் பார்த்து, ''எதற்காக இந்த நேரத்தில் என்னை எழுப்பினீர்கள்?'' என்று விசாரித்தார்.

''நீங்களும் உட்காருங்கள் பேசுவோம்'' என்றார் ஸில்வர்.

''அவசியமில்லை, சொல்லுங்கள்'' என்றார் சங்கர் பந்த்

''சொல்ல வரவில்லை நாங்கள்''- என்றான் டெய்லர் கடுமையான குரலில்.

அவன் குரலிலிருந்த கடுமையை பந்த் கவனிக்கவே செய்தார். அதனால் சினத்தின் வசப்பட்டாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் ''வேறு எதற்கு வந்தீர்கள்?'' என்று விசாரித்தார்.

டெய்லரும் தனது கைகளை ஒன்றுக்கொன்று தேய்த்துக் கொண்டு ஸில்வரைப் பார்த்தான். ஸில்வர் புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை ஆட்டிவிட்டு ''சில கேள்விகள் கேட்க வந்தோம்'' என்றான் பந்தை நோக்கி.

பந்த் மெள்ளச் சற்றுத் தள்ளியிருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டு காலையும் நீட்டிக்கொண்டார் அவர்களை நோக்கி. ''கேள்வி கேட்க விடியும்வரை பொறுத்திருக்க முடியாது போலிருக் கிறது'' என்று வினவி, இருவரையும் மாறி மாறிப் பார்த்தார் இகழ்ச்சியுடன்.

அவர் இகழ்ச்சியைக் கவனிக்கவே செய்தான் ஸில்வர். ஆகவே அவனும் லேசாக நகைத்து விட்டுத் தோளிலிருந்த கிளியைத் தடவிக் கொடுத்தான் ஒருமுறை: ''பொறுத்திருக்க முடியுமானால் இப்பொழுது வரமாட்டோம்'' என்று கூறினான். பையிலிருந்த குப்பியை எடுத்து ரம்மை ஒரு வாய் குடித்துவிட்டு மஞ்சத்தில் பந்த் போலவே சாய்ந்து கொண்டு காலை அவரை நோக்கி நீட்டினான்.

அவன் காட்டிய அலட்சியத்தையும், அவமரியாதையையும் பந்த் கவனித்தாரானாலும் அதைக் கவனிக்காதது போலவே நடந்துகொண்டார். ''ஆட்டுக்கு வாலை அளந்துதான் வைக்கிறான் ஆண்டவன்'' என்று சொன்னார் பந்த்.

''அதற்கு என்ன அர்த்தம்?'' என்று கேட்டான் டெய்லர்.

''இரண்டு கால்கள் இருந்தால் ஸில்வர் என்னை நோக்கி இரு கால்களையும் நீட்டலாம்'' என்றார் பந்த் சாதாரணமாக.

அவர் செய்த கேலியைப் பற்றி ஸில்வர் சிறிதும் கவலைப் படவில்லை. ''சிலர் இரண்டு கால்கள் இருந்தும் செய்ய முடியாத வேலையை ஒற்றைக் கால் இருப்பவனால் செய்ய முடிகிறது'' என்று கூறினான். தனது மரக் காலைச் சிறிது தரையில் நீட்டித் தட்டவும் செய்தான் இருமுறை.

''அப்படி ஒரு வேலை இப்பொழுது நடந்திருக்கிறதாக்கும்?'' என்றார் பந்த்.

''ஆம்.''

''அது என்னவென்பதை நான் அறியலாமா?''

''அறியலாம்.''

அதற்கு மேல் ஸில்வரை டெய்லர் பேச விடவில்லை.

''காஸண்ட்ராவின் பீரங்கிகள் இந்தக் கோட்டையை நோக்கிக் கொண்டிருக்கின்றன'' என்று மட்டும் சொன்னான்.

இதைக் கேட்ட பந்த் சிறிதும் பதற்றமடையவில்லை. ''அப்படியானால் இந்தக் கோட்டை உங்கள் வசத்திலிருக்கிறது'' என்று கேட்டார்.

''ஆம்'' என்று டெய்லர் பதில் சொன்னான்.

''நீங்கள் விடிவதற்குள் வந்த காரணம் தெரிகிறது'' என்றார் பந்த்.



''மகிழ்ச்சி. நீங்கள் எச்சரிக்கை அடையுமுன்பு நாங்கள் காஸண்ட்ராவைத் திருப்பிவிட்டோம். இனி எங்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்லலாம்'' என்றான் டெய்லர்.

பந்த் ஏதோ சிந்தித்தார் சில விநாடிகள். ''கேளுங்கள்'' என்ற ஒற்றைச் சொல்லை வீசினார் முடிவில்.

ஸில்வரே முதல் கேள்வியை வீசினான். ''உங்கள் பெண் சென்று இன்று பத்தாவது நாள். அவள் என்று வருவாள்?'' என்று கேட்டான்.

''இன்று அல்லது நாளை வரவேண்டும்'' என்று சொன்னார் பந்த்.

''நிச்சயமாகத் தெரியுமா?'' என்றான் டெய்லர்.

''தெரியாது.''

''நாளைக்குள் வராவிட்டால் என்ன ஆகும் தெரியுமா?''

''தெரியாது.''

''இந்தக் கோட்டையின் விதி?''

''தெரியாது!''

இதைக் கேட்ட டெய்லர் மிகவும் சீற்றமடைந்து, ''எதைக் கேட்டாலும் தெரியாது என்றால் என்ன அர்த்தம்?'' என்று கேட்டான்.

சங்கர் பந்த் நகைத்தார் பெரிதாக. ''தெரியாது என்பதற்கு அர்த்தம் தெரியாத அத்தனை முட்டாளா நீ?'' என்று கேட்கவும் செய்தார் நகைப்பின் ஊடே.

சாதாரணமாக எதற்கும் கோபமடையும் டெய்லர் இதைக் கேட்டும் பொறுமையைக் காட்டினான். ''முட்டாள் யாரென்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறாயா?'' என்று வினவினான் மிக நிதானமாக. அவன் கை அவன் இடையில் செருகப்பட்டிருந்த கைத் துப்பாக்கியை எடுத்தது நிதானமாக.

அதைக் கண்டு சங்கர் பந்த் அஞ்சியதாகத் தெரியவில்லை. ''டெய்லர்! அந்தக் கைத் துப்பாக்கியை இடுப்பில் செருகிக் கொள். கடல் ராணியை நீங்களெல்லாம் சம்மதித்துத்தான் அனுப்பினீர்கள். அவள் சென்றிருக்கும் பணியும் சுலபமானதல்ல'' என்று கூறினார்.

''அனந்தைக் கண்டுபிடித்து அழைத்து வருவதாகக் கூறினாள். அதனால் அனுப்பினோம். ஒரு வாரத்தில் வருவதாகச் சொன்னாள். ஆனால் நாள் பத்தாகிறது'' என்று சொன்னான் ஸில்வர்.

''ஆம்.'' பந்த் ஒப்புக்கொண்டார்.

''என்ன ஆம்?'' என்று கேட்டான் ஸில்வர்.

''நாள் பத்தாகிறது என்பது உண்மை'' என்றார் பந்த்.

டெய்லருக்கு அவர் பதில் திருப்தியாயிருந்தபடியால் ''பத்து நாட்களில் ஏன் வரவில்லை?'' என்று வினவினான்.

''அதை அவளைத்தான் கேட்கவேண்டும்'' என்றார் பந்த்.

''அவள்தான் வரவில்லையே?'' என்றான் டெய்லர்.

''ஆம்.''

''அப்படியிருக்க எப்படிக் கேட்பது?''

''முடியாதுதான்.''

''என்னுடன் விளையாடுகிறீர்களா?''

''என் தலையெழுத்து'' என்றார் பந்த்.

''என்ன உன் தலையெழுத்துக்கு?''

''உன்னோடு விளையாடும்படி எழுதியிருக்கிறதே!''

''அப்படியானால் இத்தனை நேரம் பேசியது விளையாட்டுப் பேச்சுத்தானா?''

''கேள்விக்குப் பதில் சொன்னேன்.''

''முட்டாள்தனமான பதில்.''

''முட்டாள்தனமான கேள்விகளுக்கு வேறு எப்படிப் பதில் கிடைக்கும்?''

இதைக் கேட்ட ஸில்வர் எழுந்தான் ஆசனத்தை விட்டு. கட்கத்தில் தடியையும் இடுக்கிக் கொண்டான். ''சங்கர் பந்த்! இந்தக் கோட்டைக்கு இனி நீ தளபதியல்ல'' என்றான்.

''என்றும் தளபதியாக இருந்ததில்லை'' என்ற பந்த், ''இந்தக் கோட்டையின் தலைவி எப்பொழுதும் கடல்ராணிதான். நான் மால்வானுக்குத்தான் தளபதி'' என்று சுட்டிக் காட்டினார்.



''நீர் எதற்குத் தளபதியானாலும் இப்பொழுது எங்கள் கைதி'' என்றான் ஸில்வர்.

''எப்படி?'' என்று வினவிய பந்த், டெய்லரும் ஆசனத்தை விட்டு எழுந்துவிட்டதையும் அவன் இரு கைத்துப்பாக்கிகளும் தம்மை நோக்குவதையும் கண்டார்.

''எழுந்திரு'' என்று உத்தரவிட்டான் டெய்லர், துப்பாக்கிகளை அவர் மார்புக்காகக் குறி வைத்த வண்ணம்.

அவன் சொன்னபடி எழுந்தார் பந்த். ''நட'' என்று வாயிலைச் சுட்டிக் காட்டினான் டெய்லர். அவன் காட்டியபடி வாயிலை நோக்கி நடந்தார் பந்த். முன்னால் பந்த் நடந்து செல்ல டெய்லரும் ஸில்வரும் அவரைத் தொடர, மூவரும் சிவாஜி சிலைக்கருகில் வந்ததும், முன்பு அனந்த் படுத்திருந்த அறைக்குள் தளபதியை வைத்து இருவரும் பூட்டினார்கள்.

''இப்போது நாம் கோட்டையை நமது வசமாக்கிக் கொள்ளத் தடையில்லை'' என்ற ஸில்வர் சட்டென்று சொற்களை நிறுத்தினான்.

''என்ன?'' என்று கேட்டான் டெய்லர் சிறிது சலனத்துடன்.

எட்ட இருந்த கோட்டைச் சுவரைக் காட்டினான் ஸில்வர். அங்கு பத்து மாலுமிகள் பதுங்கிப் பதுங்கிப் பீரங்கி அறைகளுக்குள் சென்று மறைந்து கொண்டிருந்தனர்.

அது என்னவென்று பார்க்க ஓர் அடி எடுத்து வைத்தான் டெய்லர். ''அப்படியே நில்'' என்ற அதிகாரக் குரல் அவன் நடையைத் தேக்கியது. யார் உத்தரவிடுவது அப்படி என்று திரும்பிப் பார்த்தான் ஸில்வர். பின்னாலிருந்தது சத்ரபதி சிவாஜியின் சிலை. அதன் கையில் ஒரு பெரிய கைத் துப்பாக்கி காட்சியளித்தது.

''சிவாஜியா பேசியது?'' என்றான் டெய்லர்.

''அப்படித்தான் தெரிகிறது'' என்றான் ஸில்வர். அவன் முகத்தில் மிதமிஞ்சிய குழப்பம் தெரிந்தது. அந்தக் குழப்பத்தைத் தவிர்க்கச் சிலையின் கையிலிருந்த துப்பாக்கியின் குதிரை சட்டென்று இழுக்கப்பட்ட சத்தம் கேட்டது. அடுத்த விநாடி டெய்லரின் காலுக்கடியில் ஒரு ரவை பூமியில் பட்டுத் துள்ளியது!

## அத்தியாயம் - 41

# கண்டதும் நடந்ததும்!

சத்ரபதி சிவாஜி கையில் ஒரு கைத்துப்பாக்கி தோன்றியதையும், அது சுடவும் செய்ததையும் அதன் ரவை பாய்ந்ததும் ஆங்கில நடன பாணியில் டெய்லர் துள்ளிக் குதித்ததையும் கண்ட ஸில்வர் மிதமிஞ்சிய வியப்படைந்தானென்றால், தளபதி அடைந்த வியப்புக்கு, அது மிகவும் சொற்பமென்பதை அவர் முகம் தெள்ளெனக் காட்டியது. கருங்கல் சுவரை அணைத்துச் செதுக்கப்பட்டிருந்த சத்ரபதியின் சிலைக்குப் பின்னால் ஒரு மனிதன் நிற்க வேண்டிய அளவுக்கு இடம் இல்லையென்பதையும் சிலைக்கு அபிஷேகம் செய்யும் குரு மகராஜ் கூட முன் பக்கத்திலிருந்தே கைகளைக் கொடுத்துச்சிலையைத் தேய்க்கும் வழக்க மென்பதையும் உணர்ந்திருந்த தளபதி, பின்னாலிருந்து குரல் எப்படி வந்தது, எப்படி கைத்துப்பாக்கியால் சுடப்பட்டது என்ற விவரங்களை அறிய முடியாததால் பெரிதும் திகைக்கவே செய்தார். ரவை காலுக்கு அருகில் பாய்ந்ததால் துள்ளிய டெய்லர், சிலையையும் பார்த்து ஸில்வரையும் பார்த்தான். ''சுட்டது யார்?'' என்று ஸில்வரைக் கேட்டான் சினத்துடன்.

அத்தனை அசந்தர்ப்பமான நிலையிலும் ஸில்வர் நகைத்து, ''நீ கேட்க வேண்டியது என்னையல்ல'' என்றான்.

''வேறு யாரை?'' டெய்லர் சீறி விழுந்தான்.

''சிவாஜி மகாராஜாவை'' என்றான் ஸில்வர் தான் பெரிய ரகசியத்தைக் கண்டு பிடித்துவிட்ட குரலில்.

''சிவாஜி எங்கிருக்கிறார்?'' டெய்லரின் அடுத்த கேள்வி முரட்டுத்தனமாக இருந்தது.

''சிலையில்.''

''சிலை சுட முடியுமா?''



''முடியாது என்றுதான் இன்று வரையில் நினைத்திருந்தேன்.''

''இப்பொழுது?''

''சுடும் என்று தெரிந்து கொண்டேன்.''

''என்னுடன் விளையாடுவது பிசாசுடன் விளையாடுவதற்குச் சமானம்.''

''நீண்ட நாட்களாகத் தெரியும் அது எனக்கு.''

ஸில்வரின் பதில்கள் டெய்லரின் கோபத்தைக் கிளறவே அவன் சட்டென்று திரும்பிச் சிலையை நோக்கிச் சென்றான் வேகமாக. அதன் கையிலிருந்த துப்பாக்கியை எடுத்தான் சரேலென்று. அதற்குப் பின்னால் அபிஷேகம் செய்யும் குருநாதரைப் போலவே கைகளைத் துழாவிப் பார்த்தான். யாரும் இல்லை பின்னால். ஆகவே சிலையின் பீடத்திலிருந்து இறங்கி வந்து, ''யாருமில்லை பின்னால், சுட்டவன் வேறிடத்திலிருந்து சுட்டிருக்கிறான்'' என்று ஸில்வரை நோக்கிக் கூறிவிட்டுத் தளபதியை நோக்கி, ''மிஸ்டர் பந்த்! வேறு எங்காவது ஆள் மறைய இடம் இருக்கிறதா?'' என்று வினவினான் கோபத்தால் முகம் சிவக்க.

''பல இடங்கள் இருக்கின்றன'' என்று சங்கர் பந்த் கோட்டை மதில்களைச் சுற்றிக் காட்டினார்.

டெய்லரின் சினம் அதிகமாயிற்று. ''அந்த இடங்களைக் கேட்கவில்லை. இங்கு ஏதாவது இடமிருக்கிறதா?'' என வினவினான்.

சங்கர் பந்த் முகத்தில் வெறுப்புச் சாயை மலர்ந்தது. ''இந்த முட்டாளை எதைச் சொல்லி நம்ப வைப்பது?'' என்று சற்று இரைந்து மற்ற இருவர் காதிலும் விழும்படியாகத் தம்மை வினவிக்கொண்டார்.

இதனால் கோபம் தலைக்கேறவே டெய்லர் தனது இடையிலிருந்த கைத்துப்பாக்கியை எடுத்தான், குறி வைத்தான், சங்கர் பந்தை நோக்கி. எங்கிருந்தோ வந்த இன்னொரு துப்பாக்கி ரவை அவன் கைத்துப்பாக்கியைப் பறித்துச் சென்றது. அப்பொழுது தான் ஸில்வர் சொன்னான், ''டெய்லர்! லெட் அஸ் நாட் டு எனிதிங் நௌ. லாக் பந்த் இன் தட் ரூம். வீ வில் ஸர்ச் ஃபார் த ஹிடன் கல்ப்ரிட் இன்

த மார்னிங் (டெய்லர்! இப்பொழுது நாம் எதுவும் செய்ய வேண்டாம். அந்த அறையில் பந்தை வைத்துப் பூட்டிவிடு. மறைந்திருக்கும் கள்வனைக் காலையில் தேடுவோம்)'' என்று கூறினான்.

அதற்குப் பிறகு டெய்லர் எதுவும் பேசவில்லை. பந்தை சிவாஜி சிலைக்குப் பக்கத்திலிருந்த அறைக்குள் போக உத்தர விட்டான். அவர் போனதும் தனது கோட்டில் வைத்திருந்த ஒரு பூட்டை எடுத்துப் பூட்டினான். பிறகு சிவாஜி சிலையைப் பார்த்து இரைந்து பேசினான். ''சுட்டது யாராக இருந்தாலும், எங்கிருந் தாலும் கேள். நாளைக் காலையில் பந்த் இங்கு இல்லாவிட்டால் இந்தச் சிந்து துர்க்கம் படுசூர்ணமாக்கப்படும் காஸண்ட்ராவின் பீரங்கிகளால்'' என்று.

பிறகு சரேலென்று திரும்பி ஸில்வருடன் சென்றான். போகும் போதே சிந்து துர்க்கத்திலிருந்த வெள்ளைக்கார மாலுமிகளில் நால்வரை அழைத்துக் கொண்டு தளபதி மாளிகையை அடைந்து அதற்குள் நுழைந்தான். அங்கிருந்த இரு காவலரையும் தனது மாலுமிகளைக் கொண்டு சிறைப்படுத்தினான். பிறகு மாலுமிகளை நோக்கி ''காலைவரையில் இங்கு யாரையும் நுழைய விடாதே'' என்று எச்சரித்துவிட்டு உள்ளே சென்றான்.

ஸில்வர் அவனைத் தொடரவில்லை. தோளிலிருந்த கிளியைத் தடவிக் கொடுத்துக்கொண்டு மாளிகை வாயிற்படியிலேயே உட்கார்ந்து கொண்டான். அவன் கூரிய கண்கள் சிவாஜி சிலை இருந்த இடத்தையே நோக்கிக் கொண்டிருந்தன. நேரம் ஓடியது. நான்காவது ஜாமம் முடியும் தறுவாயிலிருந்தது. அப்பொழுது திடீரென்று ஏற்பட்ட காரிருளில் ஒரு மனிதன் பந்த் சிறையிலிருந்த அறையை நோக்கி நடந்தான். அவன் எப்படி வந்தான், எங்கிருந்து வந்தான் என்பது ஸில்வருக்குப் புரியவில்லை. ஆகையால் ஸில்வர் எழுந்து நின்றுகொண்டு தடியையும் கட்கத்தில் அடக்கிக் கொண்டான். பிறகு எதையோ நினைத்துக்கொண்டு மெள்ளச் சிரித்தான். தனது தோளிலிருந்த கிளியிடம் ஏதோ கூறினான். அந்த அசுரக் கிளி பெரிதாகச் சிறகடித்து அதிவேகமாக பந்தின் அறையை அடைந்து கொண்டிருந்த மனிதனை நோக்கிச் சென்றது. அந்தக் கிளியிடமிருந்து யாரும் தப்பமுடியாதென்பது ஸில்வருக்கு



நன்றாகத் தெரியுமாதலால் அவன் சர்வ நிம்மதியாக நின்றிருந்தான், பந்த், மாளிகை வாயிற்படியில்.

ஆனால், ஸில்வர் எதிர்பார்த்தபடி காரியம் எதுவும் நடக்க வில்லை. அந்த மனிதனை வேகமாக நெருங்கிய கிளி முதலில் அவன் தலையில் பின்புறத்தில் சிறகால் வேகமாக அடித்தது. அந்த மனிதன் கிளிக்கு அஞ்சியதாகத் தெரியவில்லை. சரேலென்று பின்னால் தனது கையைக் கொண்டுவந்து அதைப் பிடித்தான் பலமாக. பிறகு மெள்ளத் திரும்பி அதன் வாயில் எதையோ திணித்தான். அடுத்தபடியாக அதைச் சிவாஜி மகாராஜாவின் சிலையின் காலடியில் வைத்துவிட்டு மீண்டும் பந்தின் அறையை நோக்கிச் சென்றான்.

ஸில்வர் பிரமிப்புடன் நிகழ்ச்சிகளை நோக்கிக் கொண் டிருந்தான். அவனுடைய அசுர க் கிளி சிவாஜியின் காலடியில் பேசாமல் படுத்துக்கிடந்தது. அந்த மனிதனும் பந்த் இருந்த அறைப் பூட்டை இரண்டு உலுக்கு உலுக்கித் திறந்தான். அதற்குப் பதில் வேறொரு பூட்டைப் பூட்டிவிட்டு வேகமாகக் கோட்டையின் தென்புறச் சுவரிலிருந்த பீரங்கிப் பீடங்களை நோக்கி நடந்து சென்று மறைந்து விட்டான் அவன் அந்தப் பீடங்களில் மறைவதற்குச் சற்று முன்பாக அவன் முகத்தில் கோட்டை விளக்கு ஒன்றின் வெளிச்சம் விழவே அவன் முகம் நன்றாகத் தெரிந்தது, தூரத்திலிருந்த ஸில்வருக்கு. அதனால் அதிர்ச்சியடைந்த ஸில்வர் தனது கைக் கோலை ஊன்றிக்கொண்டு வேகமாக நடந்தான் சிவாஜி சிலையை நோக்கி. சிலையின் காலடியிலிருந்த கிளியை எடுத்துப் பார்த்தான். அது உயிருடன் இருந்ததையும் அது கொல்லப்படவில்லை என்பதையும் உணர்ந்ததால் சற்றுப் பெருமூச்சு விட்டான். அடுத்துக் கிளியுடன் ஓடினான் ,பந்தின் மாளிகைக்கு. அங்கிருந்த காவலரைக் கதவைத் திறக்கச் சொல்லி உள்ளே போய் டெய்லரை எழுப்பினான்.

டெய்லர் அப்போதுதான் தூங்க ஆரம்பித்திருந்ததால் முனகினான். ஸில்வர் அவனை உலுக்கி, ''யூ ஃபூல் கெட் அப்'' என்று இரைந்தான், சீறினான்.

அதனால் கண் விழித்த டெய்லர், ''வாட் ஈஸ் த அர்ஜென்ஸி?'' என்று கேட்டுக் கொண்டே எழுந்திருந்தான்.

''ஐ ஃபௌண்ட் த மான் (நான் அந்த மனிதனைக் கண்டு பிடித்துவிட்டேன்)'' என்றான் ஸில்வர்.

''எந்த மனிதனை?'' தூக்கம் முழுவதும் கலையாததால் எரிந்து விழுந்தான் டெய்லர்.

''உன்னைச் சுட்டவனை!'' என்றான் ஸில்வர்.

''என்னைச் சுட்டவனையா?'' என்று சீறி எழுந்தான் டெய்லர்.

''ஆம்.''

''யாரது?''

''காப்டன் இங்க்லண்ட்.''

''நான்சென்ஸ். இட் கேனாட் பி. (அறிவீனம். அவனாயிருக்க முடியாது.)'' டெய்லர் மிகத் திட்டமாக இதைச் சொன்னான், ''வொய் ஷுட் இங்க்லண்ட் டபிள்கிராஸ்மி? ஹி இஸ் அஸ் மச் இன் திஸ் அஸ் வீ ஆர் (இங்க்லண்ட் நமக்கு எதற்காகத் துரோகம் செய்ய வேண்டும்? இந்த முயற்சியில் நாம் எத்தனை ஈடுபட்டிருக் கிறோமோ அத்தனை அவனும் ஈடுப்பட்டிருக்கிறான்)'' என்றும் பேசினான் டெய்லர்.

இதற்குச் சரியான பதிலெதுவும் இல்லையென்றாலும் டெய்லரின் வாதத்தில் நியாயமிருந்தாலும் ஸில்வர் சிறிது சிந்தித்தான். ''இங்க்லண்ட் எப்படியும் இங்கேதான் இருக்கிறான். ஆகையால் அவனைப் பார்த்தாலென்ன?'' என்று வினவினான்.

அதற்கு டெய்லர் உடன்படவே, இருவரும் இங்க்லண்ட் இருந்த இல்லத்தை நோக்கிச் சென்றார்கள். கதவை இடித்ததும் இங்க்லண்ட் வெளியே வந்தான் கதவைத் திறந்து கொண்டு. வாயிலில் நின்ற இருவரையும் மாறிமாறி நோக்கினான். ''எனிதிங் ஸ்பெஷல் ஹாப்பனிங் (ஏதாவது விசேஷமாக நடக்கிறதா?)'' என்று வினவவும் செய்தான்.

டெய்லர், ஸில்வரைப் பார்த்தான். ''டெல் ஹிம் (சொல் அவனிடம்)'' என்றான்.

ஸில்வர் மலைத்தான். ''யூ டெல் ஹிம் (நீ சொல்)'' என்று கூறினான்.



''ஐ நெவர் டௌடட் ஹிம் (அவனை நான் எப்பொழுதும் சந்தேகிக்கவில்லை)'' என்றான் டெய்லர்.

அவர்கள் பேசியதன் பொருளைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியாததால் இங்க்லண்ட் விழித்தான் சில விநாடிகள். பிறகு ''சொல்வதைத் தெளிவாகச் சொல்'' என்றான் டெய்லரை நோக்கி.

''சற்று முன்பு சிவாஜியின் சிலை என்னைச் சுட்டது'' என்று டெய்லர் மெள்ள பேச்சைத் துவக்கினான்.

''உண்மை'' என்றான் ஸில்வர்.

''ஆனால், நீ நம்புவது கடினம்'' என்றான் டெய்லர்.

''சாட்சிக்குத் தளபதி பந்த் இருக்கிறார்'' என்று ஸில்வர் சான்று காட்டினான்.

''பிறகு பந்தை பக்கத்து அறையில் பூட்டினோம்'' என்று கூறினான் டெய்லர்.

''பந்த் சுட்டாரா?'' இங்க்லண்ட் கேட்டான்.

''இல்லை!''

''பின் அவரை அறையில் வைத்துப் பூட்டுவானேன்?''

''அவரைக் கைது செய்து விட்டோம்.''

''ஓகோ.''

''அவரை அறையில் வைத்துப் பூட்டப் போனபோதுதான் சிவாஜி சுட்டார்.''

இங்க்லண்ட், டெய்லரையும் ஸில்வரையும் மாறி மாறிப் பார்த்தான். ''நீங்கள் அதிகமாகக் குடித்திருக்கிறீர்கள்'' என்றான்.

''இல்லை'' என்றான் ஸில்வர் திட்டமாக.

அந்தச் சமயத்தில்தான் ஸில்வர், கையிலிருந்த கிளியைப் பார்த்தான் இங்க்லண்ட். ''அது ஏன் அப்படிப் படுத்திருக்கிறது?''

''உனக்குத்தான் தெரிய வேண்டும்.'' இதைச் சொன்ன ஸில்வரின் குரலில் உக்கிரம் இருந்தது.

''எனக்கா?'' இங்க்லண்ட் குரலில் வியப்பு இருந்தது.

''ஆம். நீதான் இதற்கு மயக்க மருந்து புகட்டினாய்'' என்ற ஸில்வர், ''இது பிழைக்காவிட்டால் நீயும் பிழைக்க மாட்டாய்!'' என்று எச்சரித்தான்.

அந்தச் சமயத்தில் டெய்லர் சொன்னான், ''நீ எங்களை ஏமாற்றுவதாக ஸில்வர் அபிப்பிராயப்படுகிறான்'' என்று.

இங்க்லண்டின் முகத்தில் பயங்கரமான சாந்தி நிலவியது. ''அப்படியா சொன்னான்?'' என்று சாவதானமாகக் கேட்டான்.

''ஆம்.''

''காரணம்?''

''தெரியாது. ஆனால் நீ கோட்டைச் சுவருக்கருகில் சென்ற போது உன் முகத்தில் வெளிச்சம் விழுந்தது'' என்றான் ஸில்வர்.

''அதில் என் முகம் உனக்குத் தெரிந்தது?'' இங்க்லண்டின் குரலில் நிதானம் அதிகரித்தது.

''ஆம்'' என்றான் ஸில்வர்.

''என் முகத்தைத் தவிர வேறென்ன கண்டாய்?''

''நாங்கள் பூட்டிய பூட்டை எடுத்துவிட்டுப் பந்தின் அறைக்கு வேறு பூட்டைப் பூட்டினாய். அதையும் பார்த்தேன்.''

''அதனால் என்ன பயன்?''

''நாங்கள் பாராதபோது பந்தை விடுதலை செய்யலாம் நீ''

இங்க்லண்ட் இதற்குப் பதில் சொல்லவில்லை. ''ஸில்வர்! நீ பெரிய அறிவாளியென்று இன்றுவரை நினைத்திருந்தேன். என் கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கிறது. யூ ஆர் அன் இடியட்'' என்று கூறிவிட்டுச் சரேலெனத் திரும்பி இருவர் முகத் திலும் அறைவது போல் வாயில் கதவைச் சரேலெனச் சாத்தித் தாளிட்டுவிட்டான் இங்க்லண்ட்.

''சரி, வா! பந்த் இருக்கும் கதவைப் பார்ப்போம்'' என்று கூறிவிட்டு டெய்லர் அந்த அறையை நோக்கி நடந்தான். அந்தக் கதவு பலமாகப் பூட்டியிருந்தது.



''மெள்ள பொழுது புலர்ந்து கொண்டிருந்தால், கோட்டையில் நடமாட்டம் அதிகரித்துக் கொண்டிருந்தது. அதே சமயத்தில் பந்த் இருந்த அறையில் சிரிப்பு பலமாகக் கேட்டது. சிரித்தது ஒருவரல்ல. மூன்று நான்கு பேர் நகைக்கும் ஒலி திட்டமாகக் கேட்டது.

ஸில்வர் வியப்படைந்தான், டெய்லர் அதிர்ச்சி யடைந்தான்.

''நாம் ஒருவரைத்தானே பூட்டினோம்?'' என்று கேட்டான் ஸில்வரை நோக்கி.

''ஆம்'' என்றான் ஸில்வர்.

''அவர் எப்படி மூன்று நான்கு பேர்களாக ஆனார்?'' என்று கேட்டான் டெய்லர்.

அந்தச் சமயத்தில் இங்க்லண்டும் புத்துடை அணிந்து அங்கு வந்து சேர்ந்தான். ''என்ன விசேஷம்?'' என்று கேட்டான்.

''உள்ளே பலர் இருக்கிறார்கள். ஒருவரை வைத்துத்தான் பூட்டினோம்'' என்று டெய்லர் விளக்கினான்.

''அப்படியானால் கதவைத் திறந்து பார்ப்பதுதானே?'' என்றான் இங்க்லண்ட்.

''சாவி எங்களிடம் இல்லை'' என்றான் டெய்லர்.

''யூ ஃபூல்ஸ்'' என்று சீறி விழுந்த இங்க்லண்ட் தனது கைத்துப்பாக்கியை எடுத்துப் பூட்டில் வைத்துச் சுட்டான். பூட்டு உடைந்தது. கதவை உதைத்துத் திறந்தான் இங்க்லண்ட். உள்ளே தெரிந்த காட்சி இங்க்லண்டையும் டெய்லரையும் பிரமிக்க வைத்தது. ஸில்வரைச் சிந்தனையில் ஆழ்த்தியது. பெரிய சந்தேகம் உதயமாயிற்று ஸில்வரின் சிந்தனையில்.

''ஐ நௌ ஸீ த ட்ரூத்'' என்றான் ஸில்வர்.

''வாட் ட்ரூத்? (என்ன உண்மை)'' என்று கேட்டான் இங்க்லண்ட்.

''தட் யூ ஆர் எ ட்ரெய்டர், ( நீ ஒரு துரோகி என்பது?)'' என்ற ஸில்வர் தனது மடியிலிருந்து கைத்துப்பாக்கியை எடுத்தான் இங்க்லண்டைச் சுட!

## அத்தியாயம் - 42

# ஒருவருக்கு இருவர்!

பந்த் சிறை வைக்கப்பட்டிருந்த அறைக்கதவின் பூட்டை இங்கலண்ட் துப்பாக்கியால் சுட்டு, கதவைக் காலால் உதைத்துத் திறந்ததைப் பார்த்தபோதே ஸில்வரின் முகத்தில் பெரும் சந்தேகச் சாயை படர்ந்தது. கதவு திறந்ததும் உள்ளே பந்த் இன்னும் மூவருடன் பகடையாடி நகைத்துக்கொண்டிருந்ததைப் பார்த்தவுடன் ஸில்வரின் சந்தேகம் மட்டுமின்றிக் கோபமும் உச்ச நிலைக்குச் சென்றது.

ஸில்வரின் புத்தி ஏற்கெனவே நடந்த நிகழ்ச்சிகளைச் சம்பந்தப் படுத்திப் பார்த்து ஒரு முடிவுக்கு வந்ததுமே இங்கலண்டைச் சுட ஸில்வர் தனது கைத்துப்பாக்கியை எடுத்தான். ஆனால், இங்கலண்டும் ஸில்வரின் முகமாறுதலைப் பார்த்துக் கொண்டிருந்தானாதலால் ஸில்வரின் கையில் துப்பாக்கி தோன்றிய அதே விநாடியில் அவன் கைத்துப்பாக்கியும் ஸில்வரை நோக்கித் திரும்பியது. ''ஏன் தாமதிக்கிறாய் ஸில்வர்? சுடு'' என்று கூறி இகழ்ச்சிப் புன்முறுவலைக் காட்டினான் இங்கலண்ட்.

''யூ இடியட்ஸ்! வீ நீட் நாட் கில் அவர்ஸெல்வ்ஸ். தேர் ஆர் அதர்ஸ் டு டூ இட் (முட்டாள்களா! நம்மை நாமே கொன்று கொள்ள அவசியமில்லை. அதைச் செய்ய மற்றவர்கள் இருக்கிறார்கள்!)'' என்று டெய்லர் கூறவே, இங்கலண்ட் தனது கைத்துப்பாக்கியை இடை பெல்ட்டில் செருகிக்கொண்டான். ஆனால், ஸில்வர் கைத்துப்பாக்கியை அகற்றவில்லை. ''எனக்கு விஷயம் தெளிவாகத் தெரிகிறது'' என்றுகூறினான்.

டெய்லரின் முகத்தில் கடுமை வலுத்தது. அவன் கைகள் இரண்டிலும் கைத்துப்பாக்கிகள் தோன்றின. ''ஐ ஆர்டர்ட் யூ டு புட் யுவர் பிஸ்டல் இன் யுவர் பெல்ட். இஃப் யூ டிலே அனதர் மினிட் ஐ வில் ஷூட் யூ( உன்னைக் கைத்துப்பாக்கியை இடையில் செருகிக்கொள்ளச் சொன்னேன். இன்னொரு விநாடி தாமதித்தால் உன்னைச் சுட்டுவிடுவேன்)'' என்றான் டெய்லர்.



அதற்கு மேல் கைத்துப்பாக்கியை இடையில் செருகிக் கொண்ட ஸில்வர், ''டெய்லர்! ஐ வாண்டட் டு ஹெல்ப் யூ பட் யூ டோன்ட் ஹாவ் ஐஸ் டு ஸீ (டெய்லர், உனக்கு உதவ நினைத்தேன். ஆனால், உனக்குப் பார்க்கக் கண்கள் இல்லை)'' என்று கூறினான் எரிச்சலுடன்.

''நீ என்ன பார்த்துவிட்டாய்?'' என்று வினவினான் டெய்லர்.

''அனந்த் மறையுமுன்பாக இப்படித்தான் துப்பாக்கி வெடிச் சத்தம் கேட்டது. இப்படித்தான் பூட்டு உடைந்து கிடந்தது'' என்று சுட்டிக் காட்டினான் ஸில்வர்.

இதைக் கேட்ட டெய்லர் இங்கலண்டைப் பார்த்தான். இங்கலண்ட் விழித்தான். ஸில்வரின் பார்வையில் விஷம் இருந்தது. பரஸ்பரம் சந்தேகம் கொண்டதால் சில விநாடிகள் மூவரும் பேசவில்லை. பிறகு இங்கலண்ட் பேசினான்: ''நம் சண்டை இருக் கட்டும். தளபதியுடன் மற்றவர்கள் எப்படிச் சேர்ந்து கொண்டார்கள் என்று விசாரிப்போம்'' என்றான்.

டெய்லர் அதற்கு உடன்படவே இங்கலண்ட் அழைத்தான் தளபதி பந்தை, ''பந்த்! யூ பந்த்(பந்த்! உங்களைத்தான் பந்த்!)'' என்று.

பந்த் இங்கலண்டையோ மற்றவர்களையோ ஏறெடுத்துப் பார்க்கவில்லை. பகடைகளை உருட்டுவதில் மும்முரமாக இருந்தார்.

அதனால் வெகுண்ட டெய்லர் ''பந்த்! கம் அவுட்'' என்று சீறினான்.

பந்த், அவனை லட்சியமே செய்யவில்லை. தலையைச்சிறிது தூக்கி ''வரமாட்டேன்'' என்றார்.

''ஏன்?'' டெய்லர் குரல் மிகவும் கடுப்பாக இருந்தது.

''நேற்று என்னைச் சிறை செய்தாய். இன்று விடுதலை செய்கிறாய். எல்லாம் உன் இஷ்டமா?'' என்று வினவினார் பந்த்.

''ஆம். என் இஷ்டம்தான். இந்தக் கோட்டை என் கையில் இருக் கிறது. இதை நான் படுசூரணம் செய்யமுடியும்'' என்றான் டெய்லர்.

''கோ அஹெட் (சரி செய்)'' என்ற பந்த் மற்ற மூவரையும் நோக்கி' ''அந்தச் சனியன் நம் ஆட்டத்துக்கு இடையூறாக வந்து முளைத்திருக்கிறான்'' என்றும் கூறினார்.

''வாட் டு யூ மீன் பை சனியன்? (சனியன் என்றால் என்ன?)'' என்று வினவினான் டெய்லர்.

''மீன்ஸ் ஸாடர்ன் (ஸாடர்னுக்குப் பெயர்)'' என்றார் பந்த்.

''நான் ஸாடர்னா?''

''நோ.''

''அப்படியானால் ஏன் அப்படி அழைத்தாய்?''

''எரிச்சல் வரும்போது அப்படி அழைப்பது வழக்கம்.''

''ஐ ஸீ'' என்ற டெய்லர், ''சரி வெளியே வாருங்கள்'' என்றான்.

இம்முறை நால்வரும் ஒருவர் பின் ஒருவராக வெளியே வந்தார்கள், மெள்ளத் தனித் தனியாகத் திடீரெனப் பிரிந்து ஸில்வர், டெய்லர், இங்க்லண்ட் மூவரையும் சுற்றிக்கொண்டார்கள். அப்படிச் சுற்றிக்கொண்ட நால்வர் கைகளிலும் கைத்துப்பாக்கிகள் இருந்தன. நான்கு கைத்துப்பாக்கிகளும் மூன்று வெள்ளைக்காரர்களின் முகங்களை நோக்கின. அதே சமயத்தில் வடபுறத்திலிருந்து நால்வர் கைத்துப்பாக்கிகளுடன் வந்தனர். அவர்களும் கொள்ளைக்காரக் காப்டன்களைச் சுற்றிக்கொண்ட சமயத்தில் தளபதி மாளிகையி லிருந்து இங்க்லண்டைப் போலவே ஹாட் அணிந்த ஒருவன் அந்தக் கூட்டத்தை நோக்கி நிதானமாக நடந்து வந்தான். அவர்கள் இருந்த இடத்தை அணுகியதும் அவன் ஹாட்டை எடுத்துத் தலை தாழ்த்தி மூன்று வெள்ளையருக்கும் வணக்கம் செலுத்தினான். ''சிந்து துர்க்க காரிஸன் கமாண்டர் அட் யுவர் சர்விஸ் ஜெண்டில்மேன் (கனவான் களே! சிந்து துர்க்கத்தின் ராணுவத் தலைவன் வணங்குகிறேன்'') என்று கூறினான் துலாஜி.

இங்க்லண்டின் ஹாட்டைப் போல் ஹாட் அணிந்த துலாஜி யைக் கண்டதும் பெருவியப்படைந்த ஸில்வர், ''நௌ ஐ ஸீ த ட்ரூத் (இப்பொழுது உண்மை புலனாகிறது)'' என்றான்.

இதைக் கேட்ட டெய்லர், ''அடிக்கடி உனக்கு உண்மை புலனாகிறது. உன் முட்டாள்தனத்தால் இங்க்லண்டைக் கொல்லப் பார்த்தாய்'' என்று சீறினான்.

''டெய்லர்! ஐ ஆம் ஸாரி(டெய்லர்! வருந்துகிறேன்)'' என்று இங்க்லண்ட் வருத்தம் கலந்த குரலில் கூறினான்.

''எதற்கு?'' டெய்லரின் கேள்வியிலும் வருத்தம் இருந்தது.

''ஸில்வர் சொல்லைக் கேட்டுக் காப்டன் மாக்ரேயை முன்பு விடுதலை செய்தேன்'' என்றான் இங்க்லண்ட்.



''இப்பொழுது மாக்ரே நம்மைப் பிடிக்க அலைகிறான்'' என்றான் டெய்லர்.

''ஆம்!'' என்ற ஸில்வர் பெருமூச்சு விட்டான்.

இதற்கிடையே புகுந்த துலாஜி, ''இங்கு என்ன நடக்கிறது?'' என்று விசாரித்தான்.

''என்னை நேற்றிரவு சிறையில் அடைத்தார்கள்'' என்று துவங்கினார் பந்த்.

''தெரியும்.'' இதைச் சர்வ சாதாரணமாகச் சொன்னான் துலாஜி.

''தெரியுமா?'' பந்தின் கேள்வியில் வியப்பிருந்தது.

''தெரியும்.''

''தெரிந்துமா பேசாமலிருந்தாய்?''

''பேசாமலில்லை.''

''என்ன செய்தாய்?''

''சிந்து துர்க்கத்தின் பீரங்கிகளைக் காஸண்ட்ராமீது திருப்பி விட்டேன். நான் இங்கிருந்து சைகை செய்தாலே போதும், காஸண்ட்ரா தீக்கு இரையாகும். பிறகு மெள்ளக் கடலில் இறங்கும்.''

இதைக் கேட்டதும் பந்த் மட்டுமல்ல, பந்துடனிருந்த மற்ற மூவரும், ஸில்வர், இங்க்லண்ட் இவர்களும் பிரமித்தார்கள். அந்தப் பிரமையை முதலில் உதறிக்கொண்ட டெய்லர் சொன்னான்: ''காஸண்டராவின் பீரங்கிகளும் கோட்டையை நோக்கிக் கொண் டிருக்கின்றன'' என்று.

''காஸண்ட்ரா திசை திரும்பி அதன் பீரங்கித் துளைகள் சிந்து துர்க்கத்தை நோக்கித் திரும்புவதைக் காணும் குழந்தைகள் கூட அதைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால், ஒரு வித்தியாசம். காஸண்ட்ராவின் பீரங்கிகளில் மருந்து திணித்துப் பிறகு வெடிக்கத் தீ வைக்கவேண்டும்...'' என்று வார்த்தைகளை முடிக்காமல் விட்டான் துலாஜி.

''ஆம்'' என்றான் இங்க்லண்ட்.

''ஆனால், எனது பீரங்கிகளில் மருந்து திணிக்கப்பட்டு விட்டது. தீ வைக்கப் பீரங்கி வீரர்கள் தயாராக நிற்கிறார்கள்.

இங்கிருந்து இந்த ஹாட்டை நான் கையில் தூக்கி இருமுறை ஆட்டினால் காஸண்ட்ராவின் ஆயுள் முடிந்துவிடும். பட்...'' துலாஜி மீண்டும் வாசகத்தை முடிக்கவில்லை.

''பட் வாட்!'' என்று கேட்டான் டெய்லர்.

''காஸண்ட்ரா அழகான கப்பல்'' என்றான் துலாஜி.

''உண்மை'' என்றான் டெய்லர்.

''நான் ஒரு மாலுமி'' என்று துலாஜி கூறினான்.

''அண்ட் எ கிரேட் ஒன் அட் தட் (அதுவும் சிறந்த மாலுமி)'' என்று இங்க்லண்ட் சம்பாஷணையில் புகுந்தான்.

இங்க்லண்டைத் திரும்பி நோக்கினான் துலாஜி. ''ஐ லவ் த ஸீ, ஐ லவ் குட் ஷிப்ஸ், காஸண்ட்ரா இஸ் அன் ஆர்னமெண்ட் டு த ஸீ (நான் கடலைக் காதலிக்கிறேன். நல்ல கப்பல்களைக் காதலிக்கிறேன். காஸண்ட்ரா கடலுக்கே ஓர் அணிகலன்)'' என்றான் துலாஜி. அவன் குரல் பெரிதும் குழைந்து கிடந்தது. அவன் மேலும் சொன்னான்: ''நாம் அனைவரும் இணைந்தது, மாக்ரேயையும் பிரிட்டிஷ் கப்பல்களையும் முறியடிக்க. ஆனால், இப்பொழுது பரஸ்பரம் கொலைசெய்து கொள்ளவும், வெற்றி கொள்ளவும் பார்க்கிறோம். இதைவிட முட்டாள்தனம் வேறு கிடையாது. இதை முன்பே எதிர்பார்த்தான் அனந்த். ஆகவே இந்தக் கடிதத்தை என்னிடம் கொடுத்துப் போனான்.''

இதைச் சொல்லிக் கையிலிருந்த ஒரு கடிதத்தையும் எடுத்து இங்க்லண்டிடம் கொடுத்தான். அதைப் படித்த இங்க்லண்ட் வியப்பு நிரம்பிய விழிகளுடன் டெய்லரை நோக்கி அவனிடம் கடிதத்தைக் கொடுத்தான். அவன் படித்த பிறகு ஸில்வரும் அதைப் படித்தான்.

கடிதத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது. 'அன்புள்ள துலாஜி! என்ன நாம் கூட்டுச் சேர்ந்தாலும் வெள்ளையர் வெள்ளையர்தான். நான் இல்லாதபோது சிந்து துர்க்கத்தைக் கைப்பற்ற டெய்லரும் இங்க்லண்டும் முயலலாம். முயன்றால் அவர்கள் திட்டத்தை முறித்துவிடு. மீதியை நான் வந்து பார்த்துக் கொள்கிறேன்.'

இந்தக் கடிதத்தைப் படித்த பிறகு டெய்லர், ஸில்வரை நோக்கி, ''உன்னால்தான் நான் தளபதியைச் சிறை செய்தேன். கப்பலை இப்படித் திருப்பினேன்'' என்றான் உஷ்ணத்துடன்.



''நான் சொன்னால் உன் மூளை எங்கே போயிற்று?'' என்று கேட்டான் ஸில்வர்.

துலாஜி இந்தச் சமயத்தில் உட்புகுந்தான். ''நமக்குள் அநாவசியச் சண்டை வேண்டாம். நம் அலுவலாகத்தான் அனந்த் போயிருக்கிறான். நம் அலுவலாகத்தான் ராணியும் போயிருக்கிறாள். இருவரும் வரட்டும். பிறகு நமது அடுத்த நடவடிக்கையைத் தீர்மானிக்கலாம்'' என்று கூறினான்.

''அனந்த் எப்பொழுது வருவான்?'' என்று கேட்டான் இங்க்லண்ட்.

''இன்றிலிருந்து நான்காவது நாள்!'' என்று திட்டமாகச் சொன்னான் துலாஜி.

''ஹௌ ஆர் யூ ஸோ ஷ்யூர் (அதெப்படி அத்தனை திட்டமாகச் சொல்கிறீர்கள்)'' என்று வினவினான் ஸில்வர்.

''எனக்கு அனந்தைத் தெரியும், அவசியத்துக்கு மேல் ஒரு விநாடிகூட அவன் தாமதிக்கமாட்டான். அவனையும் கடல்ராணியையும் நான்காவது நாள் நிச்சயம் எதிர்பார்க்கலாம்'' என்று சொன்ன துலாஜி, ''ஜெண்டில்மேன்! வீ வில் டிஸ்பர்ஸ் நௌ'' என்று கூறினான். அத்துடன் தளபதியை நோக்கி, ''பந்த்! தாங்கள் தங்கள் மாளிகைக்குச் செல்லுங்கள்'' என்றான்.

''அது எங்கள் வசம் இருக்கிறது'' என்றான் டெய்லர்.

''இல்லை.'' துலாஜியின் பதில் சர்வசாதாரணமாக வந்தது.

''என் மாலுமிகள்?''

''அப்புறப்படுத்தப்பட்டார்கள். என் மாலுமிகள்தான் அங்கே இருக்கிறார்கள்.''

இந்தப் பதிலைச் சர்வசாதாரணமாக ஏற்றுக் கொண்டான் டெய்லர். துலாஜி தங்கள் திட்டத்தைத் தலைகீழாகத் திருப்பி விட்டதை உணர்ந்தான். ஆனால், போகும் முன்பு கேட்டான்: ''பந்த் ஒருவரைச் சிறையிலடைத்தோம். மற்ற மூவர் அங்கு எப்படி வந்தார்கள்?'' என்று.

''ஸம் டே ஐ வில் டெல் யூ, தட் இஸ், இஃப் யூ ஆர் ட்ரூ டு அஸ் (ஒரு நாள் அதைச் சொல்கிறேன், அதாவது நீங்கள் எங்களிடம் உண்மையாக நடந்து கொள்ளும் பட்சத்தில்)'' என்றான் துலாஜி.

பிறகு அனைவரும் பிரிந்து சென்றனர். இங்க்லண்ட், டெய்லர் இருவரும் காஸண்ட்ராவுக்குச் சென்றார்கள்.

ஸில்வர் தீர்க்க சிந்தனையுடன் சிவாஜியின் காலடியில் உட்கார்ந்தான். பிறகு தனது கிளியைப் பார்த்தான். அது மெள்ளக் கண் விழித்தது. அதைப் பார்த்துச் சொன்னான் ஸில்வர், ''காப்டன் ப்ளிண்ட்! இங்கு ஏதோ ஒரு பெரிய மர்மம் இருக்கிறது. இந்த ஆங்கில முட்டாள்களின் அறிவுக்கு மீறிய காரியங்கள் நடக்கின்றன. ஆனால், ஸில்வரை ஏமாற்றுபவன் இனிமேல்தான் பிறக்க வேண்டும்'' என்று. பிறகு அவனும் எழுந்து கொள்ளைக்கார மாலுமிகள் இருக்குமிடத்தை நோக்கி நடந்தான்.

நான்கு நாட்கள் ஓடின, எந்த வித நிகழ்ச்சியுமின்றி. நான்காவது நாள் மாலை அனந்த் வந்தான்.

அவன் வரவை அனைவருமே கண்டனர். துலாஜியும் தளபதியும் சிந்து துர்க்கத்தின் மதில் மீதிருந்து கண்டனர். டெய்லரும் இங்க்லண்டும் காஸண்ட்ராவிலிருந்து கண்டனர். அனந்தின் படகு பாண்டவ கட்டிலிருந்து வந்து கொண்டிருந்தது. அதைக் கண்ட இங்க்லண்டின் முகத்தில் வியப்பு விரிந்தது. ''அனந்த் இரண்டு பெண்களுடன் வருகிறான்'' என்றான் இங்க்லண்ட் வியப்பு குரலிலும் ஒலிக்க.

''த ஃபெலோ ஈஸ் எ உமனைஸர் (அந்தப் பயல் பெண்களைக் கெடுப்பவன்)'' என்று கூறினான் டெய்லர்.

சிந்து துர்க்கத்தின் மதில் மீதிருந்த தளபதி, ''அந்த இன்னொரு பெண் யார்?'' என்று வினவினார் எரிச்சலுடன்.

''சாரு'' என்றான் துலாஜி.

''யார் சாரு?''

''அனந்தைக் கேளுங்கள்.''

தளபதி பந்தின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. ''அவளை எதற்காக அழைத்து வருகிறான்?'' என்று வினவினார்.

''அதையும் அனந்தையே கேட்கலாம்'' என்றான் துலாஜி.

இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருக்கையில் அனந்தின் படகும் கோட்டைத் துறையை அடைந்தது.

### அத்தியாயம் - 43

# ஓவியம், காவியம், நாடகம், தத்துவம்!

சிந்து துர்க்கத்தின் துறையைப் படகு அடைந்ததும் அனந்த் படகிலிருந்து கருங்கல் படியில் குதித்துப் படகுக் கயிற்றை எடுத்து அங்கிருந்த இரும்புத் தளை ஒன்றில் படகைப் பிணைத்தான். பிறகு படகிலிருந்து சித்தினிகள் இருவரையும் கைலாகு கொடுத்து ஒவ்வொருவராகத் தரையில் இறக்கினான். ஆம்பலும் அம்புஜமும் போல இருவித அழகுள்ள அந்த இரு பெண்களையும் தரையில் இறக்கியதும், ''நமது கோட்டைக்கு வந்து விட்டோம். இனி இந்தக் கோட்டையை இரண்டு ராணிகளும் ஆளலாம்'' என்று கூறி இருவரையும் நோக்கிப் புன்முறுவல் செய்து கோட்டையை வலது கையை எழுப்பிக் காட்டவும் செய்தான் அனந்த்.

அவன் சொற்களை இரண்டு ராணிகளுமே ரசித்ததாகத் தெரியவில்லை. அந்தி வேளையாதலால் அலைகடல் தாமரையான ரத்னாவின் அம்புஜ வதனம் குவிந்தது திடீரென்று. அவள் கண்களில் சீற்றம் தெரிந்தது.

அந்தி வேளையாதலால் மலர்ந்திருந்த சாருவின் அல்லி வதனம் கூட இயற்கைக்கு விரோதமாகச் சரேலெனக் கூம்பியது. கண்கள் அனந்தைச் சுட்டுவிடுவன போல் பார்த்தன. அவர்கள் படகை தூரத்தில் வரும்போதே பார்த்த சிந்து துர்க்க மாலுமிகள் சிலர் படகுத் துறையை அடைந்திருந்ததால் அந்த இரு மாதர்களின் முகக்கடுப்பையும் அனந்த் அவர்களைச் சமாளிக்க வெளியிட்ட அசட்டுப் புன்முறுவலையும் காணவே செய்தனர்.

இருந்தாலும் அவர்களுக்கிடையே புகுவதோ வரவேற்பதோ உசிதமில்லை என்பதைப் புரிந்து கொண்டதன் விளைவாக, படகிலிருந்த சாருவின் சிறு துணி மூட்டையைக் கூட எடுக்க யாரும் முன் வரவில்லையாதலால் அந்தப் பணியை அனந்தே செய்தான்.

அவன் குனிந்து படகிலிருந்த மூட்டையை எடுத்ததும், கடல் ராணி இகழ்ச்சிப் புன்முறுவல் செய்து, ''வீரருக்கு மூட்டை தூக்கும் பழக்கம் நெடுநாளாக உண்டுபோல் இருக்கிறது'' என்று கூறினாள்.

இதைக் கேட்டதும் சாரு நகைக்கவே, ''என்ன நகைக்கிறாய்?'' என்று ராணி சீறினாள்.

''பெண்ணைத் தூக்குவதைவிடச் சிறு மூட்டையைத் தூக்குவது தவறாகிவிடுமா?'' என்று கேட்டாள் சாரு.

''எந்தப் பெண்ணைத் தூக்கினார்?'' என்று கேட்டு ஒரு அடி சாருவை நோக்கி எடுத்து வைத்தாள் ராணி.

''அதை விளக்க அவசியமில்லை!'' என்றாள் சாரு.

''ஏனோ?'' ராணியின் கேள்வியில் அனல் வீசியது.

''பெண்ணைத் தூக்கியதாகச் சொன்னதும் எனக்கா கோபம் வந்தது?'' என்று கூறிய சாரு நகைத்தாள்.

''என்னை அவர் தூக்கவில்லை'' என்றாள் ராணி கோபம் சிறிதும் தணியாமல்.

''சரி, தள்ளினார்'' என்றாள் சாரு.

''யார் சொன்னது?'' ராணியின் கோபம் கரை கடந்து கொண்டிருந்தது.

''நீ தானே சொன்னாய் வரும்போது?''

''அதுவா?''

''ஆம்.''

''அது ஸித்தியின் கொலைகாரனிடமிருந்து என்னைக் காக்க வேறு வழியில்லை.''

''வேறு வழி இருந்தாலும் அதைச் செய்திருக்க மாட்டார்.''

''சாரு!''

''ராணி!''

''இந்தக் கோட்டையில் என் ஆணை ஒன்றுதான் செல்லும்.''

''செல்லுமென்றால் என்ன செய்வாய்?''

''உன்னைச் சிறை செய்வேன்.''



''முடியுமானால் பார்!''

இந்த உரையாடல்களில் இரு பெண்களும் ஒருவரையொருவர் நெருங்க முயலவே அனந்த் இடையில் புகுந்து ''அட சனியன்களா! எல்லாரும் பார்க்கிறார்கள். சும்மா இருங்கள்.'' என்று இருவரையும் ஒருவரை ஒருவர் நெருங்க விடாமல் தடுத்து, இருவர் இடைகளிலும் இரு கைகளைக் கொடுத்து இறுக்கி அணைத்துக் கொண்டான்.

இந்தச் சச்சரவின் ஆரம்பத்திலேயே அவர்களைத் தூரத்திலிருந்து கவனித்து விட்ட துலாஜி கோட்டைத்தளத்திலிருந்து இறங்கி ஓடிவந்தான் அவர்கள் இருந்த இடத்துக்கு. அனந்தின் கடைசி நிலைமையைப் பார்த்ததும், ''கிருஷ்ண பரமாத்மா! வரவேண்டும் வரவேண்டும்'' என்று அனந்தைப் பார்த்து நகைத்தான்.

''என்ன மண்ணாங்கட்டி பரமாத்மா? பிராணன் போகிறது இவர்களுடன் மன்றாட'' என்றான் அனந்த் சலிப்புடன்.

''கிருஷ்ண பரமாத்மாவை அப்படிச் சொல்லக் கூடாது. மகா பாவம். இந்த மாதிரி இரண்டு பெண்களின் இடையைச் சுற்றிய கைகளுடன்தான் அவரை ஓவியத்தில் தீட்டுகிறார்கள்'' என்றான் துலாஜி.

''ஓவியத்தில் அப்படி'' என்றாள் சாரு, துலாஜியைப் பார்த்து.

''வேறு எதில் எப்படி?'' என்று துலாஜி கேட்டான்.

''காவியத்தில் இன்னொருத்தி உண்டு அவள் தனித்திருப்பவள் கிருஷ்ணனுடன்.''

''அவள் யார்?''

''ராதை.''

''ஐயோ! மூன்றாவதா!'' இதைக் கேட்ட துலாஜி பரிதாபத்துடன் பார்த்தான் அனந்தை. ''இந்திரஜித்!'' என்று மெள்ள அழைக்கவும் செய்தான் அனுதாபத்துடன்.

''இந்திரஜித்தா? இந்திரனை ஜெயிப்பது இத்தனை கஷ்டமில்லை. நான் இந்திரஜித்தாக மாறுவதைத் தவிர வேறு வழியில்லை'' என்ற இந்திரஜித் அனந்த் ''இந்த இரண்டு சனியன்களை

யும் எங்காவது கொண்டு தொலை'' என்று துலாஜியை நோக்கிக் கூறிவிட்டு, இருவர் இடைகளிலிருந்த தனது கைகளையும் நீக்கிக் கொண்டு, வலது கையால் தனது கச்சையிலிருந்த ஒரு கடிதத்தைச் சுருட்டி துலாஜியின் கையில் திணித்துவிட்டு, கோட்டைக்குள் வேகமாகச் சென்று விட்டான். கடிதத்தைக் கச்சையில் துரிதமாகப் பத்திரப்படுத்திக் கொண்ட துலாஜி இரு பெண்களையும் நோக்கி, ''ராணிகள் இருவரும் என்னுடன் வரலாம்!'' என்று கூறினான்.

அடுத்த விநாடி அந்த இருவரும் அவனை நோக்கி வந்த வேகத்தில் துலாஜி விலகி விடவே இரண்டு கட்டழகிகளும் கோட்டை வாயிலைத் தாண்டி அனந்தைத் தொடர்ந்து விரைந்தனர். இருவர் பின்னால் வருவதைக் கவனிக்காமலும், சிறிதும் அக்கம் பக்கம் தலையை அசைக்காமலும், பார்வையைத் திருப்பாமலும், தளபதி மாளிகையை அடைந்ததும், தளத்தை விட்டு இறங்கி அவனுக்காகக் காத்திருந்த சங்கர் பந்த் அவனை வரவேற்றார். அவர் ஏதோ கேட்கத் துவங்கு முன்பாகவே அந்த மாளிகையை அடைந்துவிட்ட இரு பெண்களும் துரிதமாக உட்புகவே தளபதி தேள் கொட்டியவர் போல் துள்ளிக் குதித்துப் பக்கவாட்டில் நகர்ந்து வழி விட்டார். அவர்கள் உள்ளே சென்றதும் காரணமில்லாமல் நகைத்தார்.

''என்னைப் பார்த்தால் சிரிப்பாக இருக்கிறது உங்களுக்கு?'' என்று கேட்டான் அனந்த், தளபதியை நோக்கிச் சினத்துடன்.

''சே, சே! அப்படியொன்றுமில்லை'' என்ற தளபதி அனந்தின் கையிலிருந்த மூட்டையைக் கண்டதும் வாயைப் பொத்திக் கொண்டார், மேலும் வந்த சிரிப்பை அடக்க.

அனந்த் அவரை முறைத்துப் பார்த்தான். ''இதுவா?'' என்று ஏதோ சொல்ல முற்பட்டு நிறுத்தினான்.

வாயைப் பொத்திய கையை நீக்கிவிட்டு, ''இது?'' என்று கேட்டார் தளபதி.

''சாரு கொண்டு வந்தாள்'' என்றான் அனந்த்.

''நல்லது.''

''எது நல்லது?''



''மூட்டையைக் கொண்டு வந்தது.''

''அவள் துணிகள் இதில் இருக்கின்றன.''

''நல்லது.''

''என்ன நல்லது?''

''துணி இருப்பது.''

''துணி இருப்பதில் என்ன நல்லது?''

''பெண்களுக்குத் துணி இருப்பது நல்லது. இல்லையென்றால் அநாவசியச் சர்ச்சை அடிக்கடி கிளம்புகிறது.''

''என்ன உளறுகிறீர்?''

''நான் உளறவில்லை.''

''வேறு யார் உளறுகிறார்கள்?''

''காவியகர்த்தாக்கள்.''

இதைக் கேட்ட அனந்த் பெரிய சங்கடத்துக்குள்ளானான். ''காவியம் நிரம்பப் படித்திருக்கிறீர்கள் போலிருக்கிறது!'' என்றும் வினவினான், கஷ்டத்தை மறைக்கக் கோபத்தை வரவழைத்துக் கொண்டு.

''படித்ததனால் ஏற்பட்ட தொல்லைதான் இது'' என்ற தளபதி, ''படிக்காதிருந்தால் எதையும் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளலாம். பிறருக்குப் புத்திகூடச் சொல்லலாம்'' என்றார்.

இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாததால், ''என்னுடன் விளையாடுகிறீரா?'' என்று சீறினான் அனந்த்.

''உம்முடன் நான் ஏன் விளையாடவேண்டும்? அதற்குத்தான் ஒருவருக்கு இருவராக வந்திருக்கிறார்களே?'' என்று கூறிய சங்கர் பந்த் கதவிலிருந்து நன்றாக வழிவிட்டு நின்றார்.

அனந்த். அதன் அர்த்தத்தைப் புரிந்துகொண்டான். ஆகவே மூட்டையை அவர் கையில் திணித்துவிட்டுத் திரும்பி வெளியே நடந்தான். சற்று எட்ட வந்து கொண்டிருந்த துலாஜியைச் சந்தித்து, ''வா! உன்னிருப்பிடம் போகலாம்'' என்றான்.

துலாஜி, அனந்தை நோக்கியதுடன் எட்ட கதவுக்கருகில் கையில் மூட்டையுடன் நின்றிருந்த தளபதியையும் நோக்கினான்.

அதனால் உள்ளே எழுந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு, ''வா, தளபதி மாளிகைக்கே போவோம்'' என்று கூறி அனந்தை அழைத்துக் கொண்டு தளபதி நின்று கொண்டிருந்த இடத்துக்கு வந்தான்.

தளபதி சட்டென்று தன் கையிலிருந்த மூட்டையை அனந்தின் கையில் திணித்துவிட்டுக் கனவேகமாக மாளிகைக்குள் சென்றார். மாளிகைக் கூடத்துக்கு வந்ததும் அங்கு நிலவிய நிலை கண்டு வியந்தார். கடல்ராணியும் சாருவும் வெவ்வேறு மஞ்சத்தில் உட்கார்ந்திருந்தாலும் ஒருவரையொருவர் பார்க்காமல் அவரவர் பக்கங்களிலிருந்த சுவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர். தான் வந்த காலடி ஓசை கேட்டும் அவர்கள் திரும்பாததைக் கண்ட தளபதி முதலில் தமது மகளைக் கண்டிக்க முற்பட்டு, ''ராணி! இது முறையல்ல'' என்றார் சற்றுக் குரலைக் கடுமையாக்கிக் கொண்டு.

''எது?'' ராணியின் அந்த ஒற்றைச் சொல் கேள்வி ஏதோ துப்பாக்கி ரவைபோல் வெளிவந்தது. அவள் சுவரைப் பார்த்துக் கொண்டே அந்தக் கேள்வியைக் கேட்டதால் அதன் உஷ்ணம் அதிகமாயிருந்தது.

''சிந்து துர்க்கத்தில் யாரும் விருந்தினர்களை அவமதிக்கும் வழக்கமில்லை'' என்றார் சங்கர் பந்த் சிறிது சீற்றத்தைக் குரலில் காட்டி.

''தாங்கள் விருந்தோம்பலைச் சிறப்பாக நடத்தலாமே...! யாரும் தடை செய்யவில்லையே?'' என்றாள் ராணி.

சங்கர் பந்த் விழித்தார், இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல். அந்தச் சமயத்தில் மூட்டை தூக்கியான அனந்தும் அவன் நண்பர் துலாஜியும் உள்ளே நுழைந்தனர். பெண்கள் இருவரும் உட்கார்ந்திருந்த நிலையில் அவர்கள் கோபத்தில், வக்கிரத்தில்கூட அழகு கொழித்திருந்தது. ''இவர்களை இப்படியே வைத்து இரு அழகிய ஓவியங்களைத் தீட்டலாம்'' என்றான் துலாஜி.-

''காவியமும் படைக்கலாம்'' என்றார் பந்த். அதைச் சொல்லி விட்டு, மூட்டையும் கையுமாக நின்றிருந்த அனந்தைச் சுட்டிக் காட்டி, ''இவர்...'' என்று ஏதோ கேட்க முற்பட்டார்.



துலாஜி இடைமறித்து ''நாடக பாத்திரம்'' என்றான்.

''நாடக பாத்திரமா?'' என்று வியப்புடன் வினவினார் பந்த்.

''ஆம். நாடகத்தில் விதூஷகன் முக்கிய அம்சம்'' என்று விளக்கினான் துலாஜி.

அந்தச் சமயத்தில் இரு பெண்களும் திரும்பி மஞ்சத்திலிருந்து எழுந்தனர். சங்கர் பந்தும் துலாஜியும் பின்வாங்கினர் கதவை நோக்கி.

அனந்த் நின்ற இடத்தில் நின்றான். கூடத்தில் கதவை யாரோ சாத்தினார்கள். இரு பெண்களும் அனந்தை நோக்கி வந்தனர். அனந்த் அசையவில்லை.

''நீங்கள் ஏன் ஓடவில்லை அவர்களைப் போல்?''என்று கேட்டாள் ராணி இகழ்ச்சியுடன்.

''ஆம். ஏன் ஓடவில்லை?'' என்று சாருவும் கேட்டாள்.

''நான் வீரன்'' என்றான் அனந்த்.

''அதனால்?'' என்று வினவினாள் ராணி.

''எந்த ஆபத்தையும் வரவேற்பவன்'' என்றான் அனந்த்.

''அப்படியா?'' என்று வினவினாள் சாரு இகழ்ச்சியுடன்.

''ஆம். மரணத்தைத் துச்சமாக மதிப்பவன்'' என்று விளக்கிய அனந்த், ''அது மட்டுமல்ல...'' என்று இழுத்தான்

''சொல்லுங்கள்'' என்றாள் ராணி.

''நரகத்திலிருந்து யாரும் ஓடிவிட முடியாது'' என்றான் அனந்த்.

'நாங்கள் நரகமா?'' என்று சீறி வந்தாள் சாரு.

''ஆம். தத்துவம் அப்படித்தான் சொல்கிறது'' என்று கூறினான் அனந்த் வெறுப்புடன்-

அடுத்து நடந்த விசித்திரத்தைக் கதவிடுக்கின் மூலம் பார்த்த துலாஜியும் தளபதியும் 'பாவம் அனந்த்' என்று பரிதாபப்பட்டார்கள். ''எதற்கும் சமயம் உண்டு'' என்றார் பந்த்.

''எதைச் சொல்கிறீர்கள்?'' என்று கேட்டான் துலாஜி.

''இந்தச் சமயத்தில் அனந்த் தத்துவத்தைக் கொண்டு வந்திருக்கக் கூடாது'' என்று கண்டித்துச் சொன்னார் பந்த்!

## அத்தியாயம் - 44

# தவமும் தருணிகளும்!

தமது மாளிகைக் கூடத்தின் கதவிடுக்கின் மூலம் உள்ளே நடந்த விந்தையைப் பார்த்த சங்கர்பந்தும் அவரை இடித்துக் கொண்டு கண்ணை உள்ளே ஒட்டிய துலாஜி ஆங்கரேயும் இந்திரஜித் அனந்தின் நிலையைக் கண்டதும் அவனைப் பற்றிப் பரிதாபப் பட்டார்களென்றால் அதற்குக் காரணம் இருக்கவே செய்தது. பெண்களை நரகம் என்று அனந்த் சொன்னதும் ''நாங்கள் நரகமா?'' என்று கேட்டுக்கொண்டு வந்த கடல் ராணி அனந்தின் மேலங்கியின் வலது பகுதியைப் பிடித்துக் கடுமையாக அவனை ஒருபுறமாக இழுத்தாள்.

''தத்துவம் அப்படித்தான் சொல்கிறது'' என்ற அனந்தின் பதிலைக் கேட்ட சாரு, அவனை மிக வேகமாக நெருங்கி அவனது அங்கியின் இடது பக்கத்தைப் பிடித்து இழுத்து, ''தத்துவமா பேசுகிறீர்கள்?'' என்று கூறிப் பல்லைக் கடித்தாள். அத்துடன், ''ரத்னா! விடு இவரை, நான் கவனித்துக் கொள்கிறேன்'' என்று சீறி அனந்தைப் பலமாகத் தன் பக்கம் இழுத்தாள்.

''உன்னிடந்தான் இருந்தாரே ஒரு வாரத்துக்குமேல்'' என்று இகழ்ச்சிக் குரலில் சீறிய கடல்ராணி, ''என்னிடம் விட்டு விடு. நான் இவருக்குப் பாடம் கற்பிக்கிறேன்'' என்று தனது பக்கத்துக்கு இழுத்தாள் இந்திரஜித்தை.

''உன்னிடம் பல வாரங்கள் இருந்திருக்கிறார். அப்பொழுது தான் பாடமும் சொல்லிக் கொடுத்தாயே, விடு என்னிடம்'' என்று கூறி மீண்டும் பலமாகச் சாரு இழுக்கவே அவள் பக்கத்திலிருந்த அவன் அங்கி சர்ரென்று கிழிந்தது.

சாருவின் சொற்களால் சீற்றமடைந்த கடல்ராணி, ''நான் சொல்லிக் கொடுத்தேனா பாடம், நீ சொல்லிக் கொடுத்தாயா குடிசை யில் இருந்தபோது? விடு இவரை'' என்று தன் பலத்தைக் காட்டவே அவள் பக்கமிருந்த அவன் அங்கியும் சர்ரென்று கிழிந்தது.



இருபுறமும் அங்கி கிழிந்துவிட்டதால் திறந்த மார்புடன் அந்தப் பெண்களின் துடுக்குத்தனத்தால் சினமும் அடைந்த இந்திரஜித் மிரள விழித்தான். அடுத்த வினாடி அங்கியை விட்டு ஆளுக்கொரு கையைப் பிடித்து இரு பெண்களும் இழுத்ததினால் அந்தப் பாவையரிடம் பட்ட இம்சையைத் தாளமுடியாமல் முகத்தைச் சுளித்தான் இந்திரஜித் அனந்த். அந்தச் சமயத்தில்தான் தளபதி பந்த் அவன் தத்துவத்தைக் கண்டித்தார்.

அவர் கண்டனத்தைக் கேட்டுக்கொண்டே உள்ளே நடந்த நாடகத்தையும் கவனித்த துலாஜி ஆங்கரே, ''ஆணென்றால் பேயும் இரங்கும் என்று பழமொழி உண்டு'' என்று அனுதாபக் குரலில் சொற்களை உதிர்த்தான்.

அதைச் சங்கர் பந்தால் பொறுக்க முடியாததலால் ''தமிழை நீ ஒழுங்காகப் படிக்கவில்லை'' என்று கூறினார் போலிச் சீற்றத்தைக் குரலில் காட்டினார்

''நான் மராட்டியன். எதற்காகத் தமிழைப் படிக்க வேண்டும்?'' என்று வினவினான் துலாஜி.

''மகாராஷ்டிர சாம்ராஜ்யம் தமிழ்நாடு வரையில் பரவி யிருப்பதால்...?'' இதைப் பெருமையுடன் சொன்னார் பந்த்.

துலாஜி கண்ணைக் கதவிடுக்கிலிருந்து எடுக்காமலே கேட்டான் ''தமிழில் நீங்கள் புலி போலிருக்கிறது?'' என்று.

''ஆம்.''

''அப்படியானால் நான்பேசியதில் என்னதவறு? சொல்லுங்கள்.''

''ஆணென்றால் பேயும் இரங்கும் என்றாய் அதல்ல பழமொழி.''

''வேறு எது?''

''பெண்ணென்றால் பேயும் இரங்கும் என்பதே பழமொழி.''

''அப்படியானால் பழமொழியே தவறு, தமிழே தவறு.''

''என்ன உளறுகிறாய்?''

''உளறுவது நானல்ல. உள்ளே பாருங்கள். திண்டாடுபவன் ஆண். இரு பேய்கள் அவன் சட்டையைப் பிய்த்துவிட்டன. இரு புறமும் இழுக்கின்றன. ஆகவே பழமொழியை மாற்ற வேண்டும்.''

துலாஜியின் விளக்கத்தைக் கேட்டதும் சங்கர்பந்த் புன்முறுவல் கொண்டார். உடனே பதிலேதும் சொல்லாமல் உள்ளே கவனித்தார். ''தமிழ்ப் பழமொழி தவறு தவறு. துலாஜி! தமிழ்ச் சீர்திருத்தம் நீதான் செய்யவேண்டும்'' என்று உவகை துள்ளப் பேசினார்.

அந்தச் சமயத்தில் கூடத்துக்குள்ளே இருபுறத்திலும் அனந்தை இழுத்த இரு அழகிகளும் அவனைத் தர தர என்று இழுத்துக் கொண்டு சென்று அவனைச் சற்று எட்ட இருந்த மஞ்சத்தில் தள்ளினார்கள். பிறகு அவன் கச்சையிலிருந்த இரு துப்பாக்கிகளையும் ஆளுக்கொன்றாக எடுத்துக் கையில் கொண்டார்கள். அவற்றை ஏற்கெனவே தங்கள் இடையிலிருந்த துப்பாக்கியுடன் ஆளுக்கொன்றாகச் செருகிக் கொள்ளவும் செய்தார்கள்.

கூடத்துக்கு வெளியே இருந்த சங்கர்பந்த், ''நிலைமை பயங்கரமாகிறது'' என்றார்.

''ஆம்'' என்று ஒத்துப் பாடினான் துலாஜி.

அப்பொழுது அவர்கள் இருவரையும் விலக்கியது ஒரு கரம். இடைவெளியில் புகுந்தது ஒரு முகம். அதுவும் உள்ளே கதவிடுக்கின் மூலம் கண்களைச் செலுத்தியது. அந்த முகத்துக்குடையவன் ஸில்வர் என்பதை அறிந்ததும், ''நீ எங்கு வந்தாய் இங்கே?'' என்று வினவினான் துலாஜி.

ஸில்வர் பதில் சொல்லவில்லை சில விநாடிகள். பிறகு சொன்னான்: ''உள்ளே நிலைமை சரியாயில்லை'' என்று.

''என்ன நடக்கிறது?'' என்று வினவினார் பந்த்.

''இரு பெண்களும் அனந்தைப் பிடித்து மஞ்சத்தில் சாய்த்து விட்டார்கள். திண்டாடுகிறான் அனந்த்'' என்றான் ஸில்வர்.

இந்தச் சமயத்தில் துலாஜிக்கு ஒரு யோசனை தோன்றியது. ''ஒன்று செய்'' என்றான், அவன் தன் யோசனையைச் சொல்லுவதற்குப் பூர்வாங்கமாக.

''என்ன ?'' என்று ஸில்வர் கேட்டான்.

''உன் தோளில் படுத்திருக்கும் கிளியை எடுத்து உள்ளே விட்டுவிடு'' என்று கூறினான் துலாஜி.

''உள்ளே இரு கிளிகள் இருக்கின்றன'' என்று நினைப்பூட்டினார் பந்த்.



''அவையும் அசுரக் கிளிகள்!'' என்றான் ஸில்வர்

''ஆம், ஆம். இந்தக் கிளியை அவை கொன்றுவிடும்.'' என்றார் பந்த்.

அதே சமயத்தில் உள்ளே கடல்ராணி அனந்தின் கழுத்தைப் பிடித்துக் கொண்டிருந்தாள். சாரு, அவள் கையை எடுக்க முயன்று கொண்டிருந்தாள். அந்தச் சச்சரவில் இருவருமே அனந்தின் மடியில் உட்கார்ந்து கொண்டு பரஸ்பரம் சண்டையைத் துவக்கி, அவனுக்கு இணையிலா இம்சையைச் செய்து கொண்டிருந்தார்கள். சாருவின் கடுமையான கைப்பிடியால் கடல்ராணியின் கை அனந்தின் கழுத்திலிருந்து அகற்றப்படவே, இருவரும் சட்டென்று அனந்தின் மடியிலிருந்து எழுந்து ஒருவரையொருவர் அச்சத்துடன் பார்த்துக் கொண்டார்கள்.

அனந்தின் இரு கண்களும் மூடிக் கிடந்தன. கைகள் துவண்டு கிடந்தன. இருபுறமும் தேகம் அசைவற்று இருந்தது. மூச்சு மட்டும் ஒரே நிதானமாக வருவதை மார்பின் எழுச்சியும் தாழ்வும் நிருபித்தன.

''இவர் மயக்கமடைந்து விட்டார்'' என்றாள் கடல்ராணி.

''உன்னைப் பார்த்தா?'' சாருவின் அனுதாபக் கேள்வியில் இகழ்ச்சியும் கலந்து கிடந்தது.

''இல்லை. உன் முகத்தைப் பார்த்துத்தான்'' என்றாள் கடல்ராணி.

அதற்கு மேலும் தாமதிப்பது உசிதமல்லவென்று நினைத்த சங்கர் பந்த் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தார் துலாஜியுடன். ''அனந்த்! அனந்த்!'' என்று இருமுறை அழைக்கவும் செய்தார்.

மூடிய கண்களைத் திறக்கவில்லை அனந்த் ''ஹர ஹர மஹாதேவ்'' என்ற சொற்கள் மட்டும் அவன் இதழ்களிலிருந்து உதிர்ந்தன.

''பார்த்தாயா அவன் வீரத்தை?'' என்று கேட்டார் பந்த், துலாஜியை நோக்கி.

''பிறவி வீரன்'' என்று பாராட்டினான் துலாஜி.

''இதில் வீரம் எங்கேயிருந்து வருகிறது?'' என்று கேட்டுக் கொண்டே ஸில்வர் உள்ளே நுழைந்தான்.

சங்கர் பந்த், ஸில்வரை மிக்க இகழ்ச்சியுடன் பார்த்தார். அதே இகழ்ச்சியுடன் அவன்மீது கண்களை ஓட்டிய துலாஜி, ''ஸில்வர்! அனந்தின் உதடுகளிலிருந்து உதிர்ந்த சொற்களைக் கேட்டாயா?'' என்று வினவினான்.

''இல்லை'' என்று ஸில்வர் பதிலைச் சொல்வதற்கும், ''ஹரஹர மஹாதேவ்'' என்று இரண்டாம் முறை அனந்தின் உதடுகளிலிருந்து சொற்கள் உதிருவதற்கும் சமயம் சரியாக இருக்கவே, ''இப்பொழுது என்ன சொல்கிறாய்?'' என்று துலாஜி பெருமையுடன் கேட்டான் ஸில்வரை.

''சொல்ல என்ன இருக்கிறது?'' என்று ஸில்வர் வினவினான் ஏதும் புரியாமல்.

''நீ வெள்ளைக்காரன்'' என்றான் துலாஜி.

''அதனால் என்ன?'' என்றான் ஸில்வர்.

''ஹர ஹர மஹாதேவின் பொருள் உனக்குப் புரிய நியாயமில்லை.''

''என்ன பொருளோ?''

''மஹாராஷ்டிர வீரர்கள் போருக்குள் புகும்போது வாளைத் தூக்கி ஹர ஹர மஹாதேவ் என்று வீர கோஷம் செய்து கொண்டுதான் புரவிகளுடன் எதிரிகள் மீது பாய்வார்கள். இது சிவாஜி மஹாராஜா, மஹாராஷ்டிரர்களுக்கு அளித்த தாரக மந்திரம்'' என்று துலாஜி விளக்கினான்.

''இங்கு என்ன போர் நடக்கிறது? புரவிகள் எங்கே?'' என்றான் ஸில்வர் இகழ்ச்சியுடன்.

துலாஜி பதில் சொல்லவில்லை. அனந்துக்கு எதிராக நின்றிருந்த இரு பெண்கள் மீதும் கண்களை ஓட்டினான். அதைக் கண்ட ஸில்வர் பலமாக நகைத்தான். சங்கர் பந்தும் நகைத்தார். அந்தச் சிரிப்பொலியால் கண்களை அகல விரித்த இந்திரஜித் அனந்த் ''இங்கென்ன வேடிக்கை பார்க்கவா வந்தீர்கள்?'' என்று எதிரே நின்ற பந்த், துலாஜி, ஸில்வர் மூவரையும் பார்த்து எரிந்து விழுந்து கொண்டே எழுந்திருந்தான் மஞ்சத்திலிருந்து.



அவன் எழுந்த வேகத்தைக் கண்ட ஸில்வர், ''அனந்த்! வென் வீ கேம் யூ அர் இன் மெடிடேஷன் (நாங்கள் வந்தபோது நீ தியானத்திலிருந்தாய்)'' என்று கூறினான்.

''வாட் டு யூ மீன் (என்ன சொல்கிறாய் நீ)'' என்றான் அனந்த், கடுமை தளராத குரலில்.

''உன் கண்கள் மூடியிருந்தன'' என்றான் துலாஜி.

''அதனால் தியானத்தில் இருப்பதாக ஸில்வர் நினைத்தான்'' என்றார் பந்த்.

''ஏன் தவம் செய்வதாக நினைக்கிறதுதானே?'' என்று மீண்டும் சீறினான் அனந்த்.

''அப்படியும் வைத்துக் கொள்ளலாம்'' என்றார் பந்த்.

''எப்படியும் வைத்துக் கொள்ளலாம்?''

''தவமாக.''

''வைத்துக் கொள்வதுதானே?''

''விசுவாமித்திரர் தவமாக வைத்துக்கொள்ளலாம். ஆனால், ஒரு வித்தியாசம் இருக்கிறது.''

''என்ன வித்தியாசம்?''

''விசுவாமித்திரர் தவத்தைக் கெடுக்க முதலில் மேனகை, அடுத்து ரம்பை, இப்படி ஒவ்வொருவராகத்தான் வந்தார்கள். இங்கு ஒரே சமயத்தில் மேனகை, ரம்பை இருவரும் வந்திருக்கிறார்கள்.'' இதைச் சொன்ன சங்கர்பந்த் தாம் ஏதோ பெரிய இதிகாச உண்மையைச் சொல்லி விட்டதாகப் பெருமிதத்தை முகத்தில் காட்டினார்.

இந்திரஜித் அனந்த் இளநகை கொண்டான். ''விசுவாமித்திர பங்கத்தில் தாடகைக்கும் பங்கு உண்டு'' என்றான்.

இதைக் கேட்டதும் வெகுண்ட இரு பெண்களும் அனந்தின் மீது அக்னி விழிகளைப் பதிய விட்டார்கள். அவற்றைக் கண்ட அனந்த், ''ஒரு வித்தியாசமிருக்கிறது'' என்றான்

''என்ன வித்தியாசம்?'' என்று கேட்டாள் ராணி.

''விளக்குங்கள்'' என்றாள் சாரு.

''விசுவாமித்திரருக்குச் சட்டை கிடையாது இப்படிக் கிழித்துத் தள்ள'' என்று பதில் சொன்ன இந்திரஜித், அப்பெண்கள் தன்னை மஞ்சத்திற்கு இழுத்துச் சென்றபோது கீழே விழுந்துவிட்ட துணி மூட்டையைக் காட்டி, ''சாரு! உன் மூட்டையை எடுத்துக்கொண்டு உள்ளே போ. ராணி! நீயும் உள்ளே செல்'' என்று அதிகாரக் குரலில் சொன்னான். பிறகு சங்கர் பந்த், துலாஜி, ஸில்வர் மூவரையும் நோக்கி, ''தளபதி! உங்கள் அறைக்குச் செல்லுங்கள். நான் துலாஜியுடன் சென்றுவிட்டுக் காலையில் வருகிறேன்'' என்று சொல்லித் திரும்ப முயன்றான். அந்தச் சமயத்தில் தன் இடையி லிருந்த அவனது கைத்துப்பாக்கியை எடுத்து அவன் இடையில் செருகினாள் ராணி. சாருவும் அவளைப் பின்பற்றித் தன்னிடமிருந்த அவனது இன்னொரு கைத்துப்பாக்கியை எடுத்து அவனிடையில் செருகினாள்.

''நன்றி'' என்று அவ்விரு பெண்களையும் நோக்கிக் கூறி விட்டு, ''வா துலாஜி'' என்று துலாஜியை அழைத்துக் கொண்டு வெளியே சென்றான் அனந்த். இரு பெண்களும் உள்ளே செல்ல சங்கர் பந்த் மஞ்சத்தில் உட்கார்ந்து கொண்டார்,

அவர் எதிரே சாருவின் துணிமூட்டை நடுக்கூடத்தில் கிடந்தது. அதன் பக்கத்தில் தனது அசுரக் கிளியுடன் நின்றிருந்த ஸில்வர், பந்துக்குத் தலை வணங்கி வெளியே சென்றான். அவன் முகத்தில் தீவிர சிந்தனை படர்ந்து கிடந்தது. அந்தச் சிந்தனையுடன் நேராகச் சிவாஜி சிலைக்கருகில் சென்று உட்கார்ந்து கொண்டான் கிளியுடன்.

அந்த இரு பெண்களையும் அழைத்துக் கொண்டு அனந்த் வந்தபோதும் அங்குதான் உட்கார்ந்திருந்தான் அவன். நடந்த வேடிக்கைகளையும் பார்த்துக்கொண்டுதான் இருந்தான். சங்கர் பந்தும் துலாஜியும் சென்று தளபதி மாளிகையில் நுழைந்த போதும் அங்குதான் இருந்தான். அவன் கூரிய அறிவில் ஏதேதோ எண்ணங்கள் புரண்டன. பிறகு என்ன நடக்கிறதென்பதை அறிய அவனும் மாளிகையை நோக்கிச் சென்றான். அங்கு நடந்த வேடிக்கை களில் அவனும் பங்கு கொண்டு திரும்பியதும் அவன் சிந்தனை



அதிகத் தீவிரத்தில் இயங்கியது. ''இதற்கு என்ன காரணம்? ப்ளிண்ட் கான் யூ டெல் மி த ரீஸன் ஃபார் திஸ் டிராமா (ப்ளிண்ட்! இந்த நாடகத்துக்கு என்ன காரணம் சொல்ல முடியுமா?)'' என்று தனது அசுரக் கிளியைக் கேட்டான் காப்டன். ப்ளிண்ட் தனது பெரிய விழிகளால் ஸில்வரை நோக்கியது. ஸில்வரின் கண்கள் கிளியின் கண்களுடன் கலந்தன விநாடிகள். பிறகு சொன்னான் கிளிக்கு, ''யூ ஆர் ரைட் ப்ளிண்ட்... இட் ஈஸ் நாட் அஸ் ஸிம்பிள் அஸ் இட் லுக்ஸ் (நீ சொல்வது சரி ப்ளிண்ட்! வெளிக்குத் தெரிவதைப் போல் இந்த நாடகம் அத்தனை சாதாரணமானதல்ல)'' என்று. இதைச் சற்று இரைந்தே சொன்னான் ஸில்வர்.

''எது?'' டெய்லரின் தடித்த குரல் ஸில்வரைத் திடுக்கிடச் செய்தது.

அனந்தும் இரு பெண்களும் படகில் வந்ததை காஸண்ட்ராவி லிருந்து கவனித்த டெய்லரும் இங்க்லண்டும் படகொன்றில் அங்கு வந்து சேர்ந்தனர். கோட்டைக்குள் நுழைந்ததும் ஸில்வர் தனது கிளியுடன் ஏதோ பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்ததும் அவன் எதிரில் நின்றனர். அவன் இரைந்து கேள்வியைக் கேட்டதும் டெய்லரும் தனது கேள்வியை வீசினான்.

டெய்லரையும் இங்லண்டையும் கவனித்த ஸில்வர் அவர் களைத் தனக்கு அருகில் உட்காரப் பணித்தான். அவர்கள் உட்கார்ந் ததும் நடந்ததையெல்லாம் சொன்னான். கதையைக் கேட்ட டெய்லர் நகைத்தான் பெரிதாக. ''இரு பெண்களிடையே ஒருவன் அகப்பட்டால் கதி இதுதான்!'' என்று கூறினான் நகைப்பின் ஊடே.

ஆனால், இங்க்லண்டின் முகத்தில் சிந்தனையும் கவலையும் படர்ந்து கிடந்தன ''வீ வில் ஹாவ் டு வாட்ச் தெம்'' என்றான் இங்க்லண்ட். ''ஐ திங் ஸில்வர் இஸ் ரைட்'' என்றும் சொன்னான்.

பிறகு இருவரும் அனந்தையும் பெண்களையும் மட்டுமின்றி துலாஜியையும் சங்கர் பந்தையும் கூடக் கவனிக்கும்படி ஸில்வரிடம் கூறிவிட்டு மீண்டும் காஸண்ட்ராவுக்குச் சென்றார்கள். ஆனால், மறுநாள் காலையில் அவர்கள் கண்ட காட்சி அவர்களைப் பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியது. ''ஐ டோல்ட் யூ ஸில்வர் ஈஸ் ஜஸ்ட் எ ஃபூல்'' என்று கூறினான் டெய்லர். சாட்சிக்குக் கடலையும் காட்டினான்.

அத்தியாயம் - 45

# பழைய அறை எதிரில்...

**கா**ஸண்ட்ராவின் தளத்திலிருந்து காப்டன் டெய்லர் இங்க்லண்டுக்குச் சுட்டிக் காட்டிய காட்சியைக் கண்டு ஸில்வரின் மதிப்பீடு தவறியிருக்குமோ என்று இங்க்லண்கூடச் சந்தேகித்தான். இந்திரஜித் அனந்த் கடல் ராணியுடனும், சாருவுடனும் நீச்சல் போட்டுக் கொண்டிருந்தான். வெகு வேகமாக நீந்தி ஒருமுறை கடல்ராணியின் இடையைக் கட்டி இழுத்தான். இன்னொரு முறை சாருவின் இடையைப் பிடித்து ஒரே அழுத்தாகக் கடலுக்குள் அழுத்தித் தானும் மூழ்கி மறைந்தான். சில விநாடிகளுக்குப் பிறகு கடல்ராணியும் நீருக்குள் மறைந்தாள். பிறகு மூவருமே சற்றுத் தூரத்தில் நீருக்கு வெளியே எழுந்தார்கள். மல்லாந்து சேர்ந்து நீந்தினார்கள்.

அன்று காலை பின்பனியின் உக்கிரம் அத்தனை அதிகம் இல்லாததாலும் நேரம் ஏறிவிட்டதாலும் அவர்கள் புனலாடு படலம் டெய்லருக்கும் இங்க்லண்டுக்கும் மட்டுமின்றி, சிந்துதுர்க்கக் கோட்டை மீதிருந்த காவல் வீரர்களுக்கும் நன்றாகவே தெரிந்ததால் அதைப் பலரும் ரசிக்கவே செய்தார்கள். இதனால் ஆங்காங்கு ஏற்பட்ட சிரிப்பும் கொம்மாளமும் டெய்லரின் கோபத்தைக் கிளறிவிடவே அவன் மீண்டும் கூறினான்: ''ஐ டோல்ட் யூ ஸில்வர் ஈஸ் எ ஃபூல், திஸ் ஃபெலோ அனந்த் ஈஸ் எ வுமன் ஹண்டர் அண்ட் நத்திங் மோர் ( ஸில்வர் முட்டாளென்று உன்னிடம் முன்னமே சொன்னேன், இந்த அனந்த் பெண் வேட்டை ஆடுபவன், வேறெந்த விசித்திரமும் இதில் இல்லை)'' என்று.

டெய்லரை விடக் கூரிய மூளையுள்ள இங்க்லண்டுக்கு அந்த மதிப்பீடு ஒப்புதலாயில்லை. ஸில்வர் அத்தனை முட்டாள் அல்ல என்பதும், அவனைவிட விஷயங்களை ஊன்றிப் பார்க்கும் சக்தி தனக்கோ, டெய்லருக்கோ கிடையாது என்பதும் இங்க்லண்டின் நீண்ட நாள் அனுபவமாதலால், ''சற்றுப் பொறுத்துப் பார்ப்போம்'' என்று மட்டும் சொன்னான் டெய்லரிடம்.



''எத்தனை நேரம் வேண்டுமானாலும் பொறுத்து பார்க்கலாம். அவர்கள் இப்போதைக்கு நீச்சலை முடிப்பதாகத் தெரியவில்லை'' என்று டெய்லர் கூறினான் , இகழ்ச்சி மிகுந்த குரலில்.

அவன் சொன்னது சரியாகக்கூட இருந்தது. நடுவில் அனந்தும் இருபுறமும் இரு பெண்களுமாக நீந்திக் கொண்டு சிந்து துர்க்கத்தின் கோட்டைச் சுவரை சுற்றிச் சென்றுகொண்டிருந்தார்கள். அப்படிச் சென்ற மூவரும் வடபுறம் நீந்தி, தென்புறத்தில் நின்றிருந்த காஸண்ட்ராவின் கண்களிலிருந்து மறைந்து விட்டதால் டெய்லர் பெரிதாக நகைத்தான் இங்க்லண்டை நோக்கி. அதே சமயத்தில் பெரிதாக நகைத்துக்கொண்டு அனந்தும் இரு பெண்களும் கோட்டைச் சுவரின் வெளிப்புறத்திலிருந்த பழைய அறைக்குச் சென்றுகொண்டிருந்தார்கள். அறை கட்டிய பாதை இருக்குமிடம் வந்ததும் அனந்த் முதலில் கரையேறித் தன் இரு கைகளையும் அவர்களை நோக்கி நீட்டி, கைகளை ஆளுக்கொன்றாகக் கொடுத்துப் பற்றிக் கொள்ளச் செய்து இருவரையும் கரையேற்றி விட்டான்.

கரையேறியதும் ராணி சொன்னாள் சாருவை நோக்கி, ''சாரு! நம்மை இவர் கரையேற்றி விட்டார்'' என்று.

சாரு புன்முறுவல் கொண்டாள். ''அடுத்து என்ன செய்யப் போகிறார்?'' என்று கேட்டாள்.

''வேறு என்ன செய்வார்? ஏதாவது வீண் சிக்கலில் மாட்டி வைப்பார்!'' என்றாள் ராணியும் புன்முறுவல் கொண்டு.

இதற்கு அனந்த் ஏதும் பதில் சொல்லவில்லை. நனைந்த சேலைகளுடன் நின்ற அந்த இரு பெண்களையும் நோக்கினான் மாறி மாறி. இரண்டும் இரண்டுவித மலர்களாக இருந்தன. மலர்களுக்குள் பூத்துக் குலுங்கிய இரு பூஞ்சோலைகள் போல இருந்தார்கள் அந்த இரு அழகிகளும்.

ராணியின் கறுத்த குழலும் கூர்மையான வீர நோக்கை வீசிய கருவண்டு விழிகளும் அனந்தின் மனத்தை அலட்டின. முதல் நாள் அவளை அதே இடத்தில்தான் அவன் சந்தித்தான். அப்பொழுதும் நீந்தி முடித்துத்தான் அவள் திரும்பினாள். அப்பொழுது சுடும் சொல்லுள்ள கடல்ராணியாக வந்தாள். தன்னை அந்தப் பழைய அறையைவிட்டு அகல உத்தரவிட்டாள். இன்று அவள் கடல்ராணி யாக வரவில்லை. காதல் ராணியாக வந்திருந்தாள்.

கடலுக்குள் நீந்திய போதிலும் தனது கைகளும் கால்களும் பட்டதால் உணர்ச்சியால் துடித்துப் போய், இன்ப இச்சைக்குள்ளான அவயவங்களுடன் வந்திருந்தாள். அவள் உடலில் ஒட்டிய சேலை அன்று காலைக் கதிரவன் வெயிலில் உள்ளிருக்கும் அழகுகளை ஆயிரம் மடங்கு அதிகப்படுத்திக் காட்டியது. கட்டுவிரியாத கனக சரீரத்துடன் காணப்பட்டாள் அவள். அவள் தனக்கெதிரில் அந்தப் பாறைமீது நின்றது, ஏதோ காட்டு மலர்ச்செடி ஒன்று பாறைமீது முளைத்து நின்றதாகத் தெரிந்தது அவனுக்கு. அவள் புஷ்டியான கன்னங்களில் வழிந்த நீர்கூட அவள் கன்னங்களுக்குப் புது மெருகைக் கொடுத்தது. அவள் தலைமயிரைப் பிழிந்தெடுத்துச் சுற்றிக் கொண்டதிலும் நாட்டிய பாணி இருந்தது. அவள் அழகிய கால்கள் இணைந்து நின்றதால் ஒட்டிய சேலைப்பகுதி சில இடங்களில் வரிகளாகவும், சில இடங்களில் அடியோடு ஒட்டித் தட்டையாகவும் தெரிந்ததால், அவள் வழுவழுத்த கால்களின் திண்ணிய பரிமாணமும் இணைந்த இடத்துச் சீர்மையும் புலனாகவே பெரிதும் தலைகுனிந்தான் அனந்த், அலைகடல் தாமரையை எண்ணி!

அடுத்து மலை மலரான சாருவின்மீது கண்களை ஓட்டினான். அவன், கடல் ராணியைத் துருவித்துருவிப் பார்த்ததால் சற்றுக் கடுத்த முகத்துடன் முதலில் காணப்பட்ட சாரு, அவன் பார்வை தன்மீது நிலைத்ததும் தனது அல்லி முகத்தில் மந்தகாசத்தைக் காட்டினாள். அதனால் சற்றே கோடிகளில் இழுபட்டு இன்பப் புன்முறுவலைக் காட்டிய செவ்விய உதடுகளும் அவற்றின் ஈரமும் அவனுக்கு மௌனமாக அழைப்பை விடுத்தன. அவளும் கடல்ராணியைப் போலவே தலைக் குழலைப் பிழிந்தது மட்டுமின்றிச் சிறிது குனிந்து, வளைந்து, மயிரை உதறியதால் குனிந்தபோது இடை வெளி கொடுத்த ஆடை, மார்பின் உச்சி விளிம்புகளைப் புலப் படுத்தியதை அவள் குழல்திரையிட்டு மறைத்தது. 'அவசரப்பட வேண்டாம்' என்று எச்சரிக்கையும் விடுத்தது. அவளுடைய நீண்ட கால்களில் ஒட்டிக் கிடந்த சேலையைவிட இடையில் சுற்றப்பட்ட சேலை சிறிது நெகிழ்ந்து புலப்படுத்திய பொன் தகடு போன்ற அழகிய வயிறும், குழலை உதறித் தட்ட அவள் திரும்பியபோது மறைவிலும் புலப்பட்ட பின்னெழிலின் அளவுடன் கூடிய பரிமாண மும், திரும்பிய சமயத்தில் அவள் கழுத்து அந்த நிலையிலும் குன்றாத அழகுடன் விளங்கிய விந்தையும் கழுத்தைத் தழுவிக்



கிடந்த சிறு சங்கிலி ஒளிந்த இடமும், அனந்தின் மனத்தை எங்கோ அள்ளிச் சென்றன.

அந்த இரு மாதர்களும் அடுத்துச் சேலையைப் பிழியவும் உலர்த்தவும் எடுத்த நடவடிக்கைகள் அவனை உன்மத்தம் கொள்ளும் நிலைக்குக் கொண்டுவரவே, ''அறைக்குள்ளே சென்று இதைச் செய்யலாமே'' என்று கடுப்புடன் சொன்னான் அனந்த், கடலில் நீராடிய சில மாலுமிகளும் அந்த இரு மடந்தையரைக் கண் குத்திப் பாம்புகளாகப் பார்த்த காரணத்தால். அவன் காட்டிய பொறாமை அவர்கள் இருவருக்குமே இன்பமாக இருந்ததால் பொருள் மிகுந்த பார்வையை இருவரும் பரிமாறிக் கொண்டனர், இன்பமாகப் புன்முறுவலும் செய்தனர். அத்துடன் நிற்கவுமில்லை அவர்கள். ''சாரு கவனித்தாயா இவரை?'' என்றாள் ராணி.

''கவனிக்காமல் இருப்பேனா?'' என்றாள் சாரு.

''மாலுமிகள் நம்மைப் பார்க்கக் கூடாதாம்'' என்றாள் ராணி மறுபடியும்.

''இத்தனை நேரம் நீந்தியதைப் பார்த்தார்களே, அது சரி போலிருக்கிறது?'' என்றாள் சாரு.

இந்தச் சமயத்தில் வாயை மூடிக் கொண்டிருக்கலாம் அனந்த். ஆனால், தன் சாமர்த்தியத்தைக் காட்டி, ''அப்பொழுது உங்கள் அழகில் முக்கால்வாசி நீரில் மறைந்திருந்தது'' என்று சொன்னான்.

சாரு நகைத்தாள். ''ஏன் முழு வாசியும் கூட மறைந்திருந்தது'' என்றாள் நகைப்பின் ஊடே.

''எப்பொழுது?'' அர்த்தம் புரியாமல் கேட்டான் அனந்த்.

''உள்ளே மூழ்கி நீந்தியபோது, சாருவை நீருக்குள் துரத்தி அவள்...'' என்ற ராணி வாசகத்தை முடிக்கவில்லை.

''ராணியும் மூழ்கி நீருக்குள் உங்களை நாடியதும் நீங்கள் என்னை விட்டுத் திரும்பி அவள்மீது...'' என்றாள் சாரு. அவளும் வாசகத்தை முடிக்கவில்லை.

அந்த இரு பெண்களும் முடிக்காமல் விட்ட பகுதிகளை மனத்தில் நிரப்பிக் கொண்ட அனந்த் பெரும் சங்கடத்துக்கு உள்ளானான். அவன் இதயத்துக்குள்ளே ஏற்பட்ட வெறி கண்களிலும் தெரியவே இரு பெண்களும் நகைத்தனர், அவனை

நோக்கி. ''இவருடன் மேலும் விளையாடுவது தவறு சாரு'' என்று போலி எச்சரிக்கை செய்தாள் ராணி.

''அபாயம்'' என்று திருத்தினாள் சாரு.

''யாருக்கு?'' என்று வினவினாள் ராணி, சாருவை நோக்கிக் கேலியாக.

''இந்த இடத்தில் முதலில் யாரைச் சந்தித்தாரோ அவர்களுக்குத்தான்'' என்று சாருவைக் கேலி செய்தாள் பதிலுக்கு.

''இது மலைப்பாறை'' என்றாள் ராணி.

''அதனால்?'' சாருவின் கேள்வியில் அர்த்தம் இருந்தது.

''அடர்ந்த காடு இல்லை, குடிசையில்லை.'' ராணி புகன்றாள் புன்முறுவலுடன்.

''குடிசையைவிட அறை விசேஷம். ராணிகள் அறைகளைத் தான் விரும்புவார்கள்.''

''நீ படே பேர்வழி!''

''எப்படி?''

''கோர்படே வம்சம்.''

''அதனால்?''

''மகாராஷ்டிர முதல்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவள்.''

''நீ மட்டும் என்ன? மகாராஷ்டிரத் தளபதியின் பெண். நீயே இந்தக் கோட்டையின் தலைவி. அதுவும்....''

''அதுவும்?''

''கொள்ளைக்காரி. அவரைக் கொள்ளை கொண்டு விட்டாய்.''

''நீ மட்டும் என்ன? வேவுகாரி, எந்த ரகசியத்தையும் அறியக் கூடியவள். அவர் மனத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறாய்.''

இரு பெண்களின் இடக்குப் பேச்சையும் தான் ஏதோ அதில் சம்பந்தப்படாதவன்போல் தன்னை அடியோடு ஒதுக்கி, அவர்கள் இருவருமே தன்னைப் பற்றிப் பல முடிவுகளைக் கட்டியதையும் கண்ட அனந்துக்கு உள்ளூரக் கோபம் ஏறவே, ''என்னை ஒரு பொருட்டாக நீங்கள் மதிக்கவில்லை'' என்று சீறினான்.



இதைக் கேட்ட இரு பெண்களும் தங்கள் கமல விழிகளால் அந்தக் காளையை நோக்கினார்கள் வியப்புடன். ''உங்களைப்பற்றித் தானே பேசுகிறோம்?'' என்று கேட்டாள் ராணி.

''நீங்கள் ஒருவருக்கொருவரே பேசிக்கொண்டிருக்கிறீர்கள்'' என்று குற்றம் சாட்டினான் அனந்த்.

''வேறு யாருடன் பேசவேண்டும்?'' என்று ராணி வினவினாள்.

''என்னைக் கலக்கவில்லை நீங்கள்'' என்றான் அனந்த் சிற்றத்துடன்.

''ஐயையோ!'' என்று சாரு கூறினாள்.

''கேவலம்'' என்று வாயைப் பொத்திக் கொண்டாள் ராணி.

''பேச்சிலாவது பண்பாடு வேண்டும்'' என்று சாரு இகழ்ச்சிப் புன்முறுவல் கோட்டினாள்.

''அது இங்கே பூஜ்யம்!'' என்ற ராணி, ''வா, சாரு, அறைக்குப் போய் உடை மாற்றிக் கொள்வோம்'' என்று அந்தப் பழைய அறையை நோக்கி நடந்தாள், குறுக்கே நின்ற அனந்தை இடித்துக் கொண்டு. சாருவும் தொடர்ந்தாள், கையால் பலவந்தமாக அனந்தை அகற்றிவிட்டு. அறையை அவர்கள் அடைந்து கதவையும் மூடிக் கொண்டார்கள்.

அனந்தின் சிந்தனை வேகமாக ஓடியது. அவன் அறையை நோக்கி நடக்க முற்பட்டான். அறைக் கதவை அவன் அடைந்து கதவை அசைத்தான். அப்பொழுது அறையின் வெளியிலிருந்த மறைவுப் பாறையிலிருந்து எழுந்த ஒருவன், ''அது முறையல்ல'' என்று குரல் கொடுக்கவே, சட்டென்று திரும்பிய அனந்த், அங்கு நின்றவனைக் கண்டதும் பெரும் பிரமிப்புக்குள்ளானான்.

சற்று எட்ட இருந்த பாறை மறைவிலிருந்து எழுந்த துலாஜி ''எதற்கும் காலம் நேரம் உண்டு'' என்றான்.

''நீ தவறாக நினைக்கிறாய்'' என்றான் அனந்த்.

''பொறுத்தார் பூமி ஆள்வார்'' என்றான் துலாஜி.

''பொறாதார்?'' - அனந்தின் கேள்வியில் எரிச்சல் இருந்தது.

''பெண்கள் ஆள்வார்'' என்று துலாஜி நகைத்தான்.

''நகைப்புக்கு இது நேரம் இல்லை!'' என்றான் அனந்த்.

''பெண்களுடன் விளையாடுவதற்கும் நேரமில்லை'' என்றான் துலாஜி.

''ஏன்?''

''செய்தி வந்திருக்கிறது.''

''எதைப் பற்றி?''

''யாரைப் பற்றி என்று கேள்!''

''யாரைப் பற்றி?''

''மாக்ரேயைப் பற்றி'' என்ற துலாஜி, ''நாம் போருக்குச் சித்தமாக வேண்டும்'' என்றும் சொன்னான்; மேலும் பயங்கர விவரங்களையும் கூறலானான்.

அத்தியாயம் - 46

# காம ஜோதி!

இரு பெண்களும் ஆடை அணியச் சென்று மூடிய அறைக் கதவைத் திறக்க முயன்ற இந்திரஜித் அனந்தின் கை, துலாஜியின் எச்சரிக்கையாலும், செய்கையாலும் சட்டென்று நின்றது. சபலப் பட்டிருந்த அவன் மனம் கூடத் துலாஜியின் சொற்களால் திசை திரும்பவே, அனந்த் கதவு மேலிருந்த கையை அகற்றிவிட்டு, துலாஜி இருந்த பாறையிடம் வந்து அதன்மீது உட்கார்ந்துகொள்ள, துலாஜியும் அவன் பக்கத்தில் அமர்ந்து தனது மடியிலிருந்த ஒரு கடிதத்தை எடுத்து அனந்திடம் கொடுத்தான். அந்தக் கடிதத்தைப் படித்த அனந்தின் முகத்தில் தீவிர சிந்தனை படர்ந்தது. ''இது எப்போது வந்தது?'' என்று வினவினான் தனது நண்பனை நோக்கி.

''இன்று விடியற்காலையில்'' என்றான் துலாஜி.

''கவலைக்கு இடமான செய்தி'' என்று கூறினான் அனந்த், அந்தக் கடிதத்தை இன்னொரு முறை படித்துப் பார்த்து.

''கவலைக்கு ஏதுமில்லை. கடிதம் விவரமாக இருப்பதால் நடந்தது தெளிவாகத் தெரிகிறது.'' என்று துலாஜி கூறினான்.

''உன் தகப்பனார் முதலில் கொடுத்த ஓலையில் இந்தத் தகவல்கள் ஏதுமில்லையே? வால்டர் ப்ரௌன் மறுபடியும் போருக்கு வருவதாகத்தானே எழுதியிருந்தது?'' என்று துலாஜியைக் கேட்டான் அனந்த்.

''இந்தச் சமயம் வால்டர் ப்ரௌனுடன் வருவது காப்டன் அப்டன் அல்ல, மாக்ரே வருகிறான்'' என்றான் துலாஜி.

இந்தச் சமயத்தில் இரு பெண்களும் ஆடைகளை அணிந்து அறைக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வரவே அவர்களையும் தங்கள் அருகில் வருமாறு அழைத்தான் துலாஜி. ''அவர்கள் எதற்கு?'' என்று அனந்த் அவர்கள் வருவதைத் தடை செய்யப் பார்த்ததும் துலாஜி பெரிதாக நகைத்தான்.

''எதற்கு நகைக்கிறாய்?'' என்று சீறினான் அனந்த்.

''காதல் உன் கண்ணை மறைப்பதைப் பார்த்தேன்.'' துலாஜியின் பதிலில் கேலி இருந்தது.

''எப்படிக் கண்டாய் அதை?'' அனந்தின் கேள்வியில் சீற்றம் முன்னைவிட அதிகமாகக் காணப்பட்டது.

''உன் கண்களை மட்டுமல்ல, உன் மூளையையும் பெண்ணாசை மறைத்திருக்கிறது'' என்ற துலாஜி, ''அனந்த்! இவர்கள் பெண்கள் மட்டுமல்ல'' என்று சுட்டிக் காட்டினான்.

''வேறு என்ன?''

''வீராங்கனைகள். ஒருத்தி கடற்போரில் நிகரற்றவள்; இன்னொருத்தி வேவுகாரி; தரைப்போரில் மிக வல்லவள். இவர்களும் நம் மந்திராலோசனையில் கலந்து கொள்வது நல்லது!''

''என்ன மந்திராலோசனை?''

''போரைப்பற்றி.''

''அதற்கு அவகாசம் இருக்கிறது.''

''இருக்கலாம். ஆனால், கடந்த கால விளைவுகளிலிருந்து நாம் படிப்பினை தெரிந்துகொள்ள வேண்டும். எதற்கும் தயாராக இருக்க வேண்டும்'' என்று துலாஜி சொல்லிக் கடைசி வார்த்தையை முடித்த சமயத்தில் இரு பெண்களும் அந்த இடத்துக்கு வரவே, இருவரையும் உட்காரும்படி சைகை காட்டினான் அனந்த்.

இரு பெண்களும் அவன் இரு புறத்திலும் உட்காரவே விஷயத்தை விவரிக்கத் துவங்கினான் துலாஜி. ''அதிகப்படியாகப் போனால் இன்னும் பத்து நாட்களுக்குள் சிந்து துர்க்கம் தாக்கப் படலாம். நம்மிடம் உறுதி கூறியபடி மாக்ரே, கவர்னரை அணுகி விட்டான். கவர்னரும் இதுவரை தோல்வியைச் சம்பாதித்துக் கொடுத்திருக்கும் காப்டன் அப்டனை நீக்கிவிட்டு, மாக்ரேயை அவன் ஸ்தானத்தில் நியமித்திருக்கிறார். அதைப்பற்றி விவரமாக எனக்குச் செய்தி வந்திருக்கிறது'' என்று கூறி அனந்தின் கையிலிருந்த கடிதத்தைச் சுட்டிக் காட்டினான்.

மேலும் சொன்னான்: ''அந்தக் கடிதம் என் தந்தையால் எழுதப்பட்டது. முதல் கடிதத்தை அனந்த் கொண்டு வந்தான். அதில்



மாக்ரே நம்முடன் சேருவானென்றும் கொங்கணி நாட்டின் கரைகளைக் கொள்ளையிடும் ஆங்கிலக் கொள்ளைக்காரர்களான இங்க்லண்டையும் டெய்லரையும் தீர்த்துக் கட்டுமாறும் எழுதி யிருந்தார். மாக்ரே எப்படி வருவான், எந்தக் கப்பல்களுடன் வருவான் என்பது இக்கடிதத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது'' என்று. அத்துடன், ''அனந்த்! அந்தக் கடிதத்தை அவர்களிடம் கொடு'' என்றும் கூறினான்.

அனந்த் கொடுத்த கடிதத்தை வாங்கிப் படித்த இரு பெண்களும் அதைத் துலாஜியிடம் கொடுத்தார்கள். ''அனந்தும் நானும் எந்தக் காரியத்தை முன்னிட்டுப் புறப்பட்டோமோ அந்தக் காரியம் முடியும் சமயம் நெருங்குகிறது. அதற்கு நம்மைத் தயார் செய்துகொள்ள வேண்டும்'' என்று கூறிய துலாஜி சிறிது நேரம் சிந்தனையிலிருந்துவிட்டு மீண்டும் பேசினான்.

''அனந்தும் நானும் நம் நாட்டின் மேலைக் கடற்கரையின் நிலையைச் சரிக்கட்டக் கிளம்பினோம் நீண்ட நாட்களுக்கு முன்பு. அதை எப்படிச் செய்வது என்ற ஒரு முடிவுக்கும் வந்திருந்தோம். அந்த ஒப்பந்தப்படி இருவரும் இரு திசைகளில் கிளம்பினோம். இருவரும் இரு விதமான அனுபவங்களைப் பெற்றோம். அனந்த் எதிர்பாராத விதமாகக் கார்வார் போரில் சிக்கிக் கொண்டு பிறகு இங்கு வந்து சேர்ந்தான். நான் கடற்போரில் சிக்கிக் கொண்டேன். அது ஒரு விநோதக் கதை'' என்று கூறிச் சிறிது நிதானித்தான்.

''அதையும் சொல்லுங்கள்'' என்று கேட்டாள் கடல்ராணி.

துலாஜி தலையை ஆட்டினான். சிறிது நேரம் மௌனத்தில் ஆழ்ந்தான். பிறகு சொன்னான்: ''கவர்னர் பூன் என்ற பைத்தியத்தை உங்களுக்குத் தெரியும் என நினைக்கிறேன்!'' என்று.

''பார்த்ததில்லை, கேள்விப்பட்டிருக்கிறோம்'' என்றாள் சாரு.

''ஆங்கிலேயரில் இத்தகைய மட சாம்பிராணியை நான் பார்த்ததில்லை!'' என்ற துலாஜி, ''அவனது சரித்திரமே தோல்வி களின் தொகுப்பு. இந்த நாட்டுக்கு வர்த்தகம் செய்ய வந்த ஆங்கிலேயருக்கு நாடாளும் ஆசை வந்தது. அந்த ஆசையைப் பூர்த்தி செய்ய கவர்னர் பூன் வந்தார். வந்ததும் பம்பாயைச் சுற்றிச் சுவர் எழுப்பினார். சுவர் நகரத்தைக் காத்துவிடும் என்ற நினைப்பில் புதுப்

புதுக் கப்பல்களைக் கட்டினார், கப்பல்கள் தாமாகவே போரிட்டு விடும் என்ற நம்பிக்கையில். கோட்டைச் சுவரோ, கப்பலோ வெறும் வசதிகளே தவிர, போர்கள் வீரர்களால், வீரர்களின் அறிவால், போர்த் தந்திரத்தால், போர்த் திறமையால் சாதிக்கப் படுகின்றன என்பதை கவர்னர் பூன் உணரவில்லை.

தம்மிடம் குமாஸ்தாவாக இருந்த வால்டர் ப்ரெளனைத் தமது கடற்படைத் தளபதி ஆக்கினார். என் தந்தை மீது பலமுறை படையெடுத்துத் தோல்வியடைந்த ப்ரெளனை இன்னும் விட வில்லை கவர்னர். காரணம், ஒவ்வொரு தோல்விக்கும் காரணத்தை ப்ரெளன் தனது உபதளபதிகள் மீது சுமத்தினார். அதை உண்மை யென்று நம்பினார், இன்னும் நம்புகிறார் கவர்னர். காண்டேரித் தீவில் அடைந்த தோல்வி, இருமுறை விஜய துர்க்கத்தில் அடைந்த தோல்வி, கார்வார் தோல்வி எதுவும் கவர்னர் பூனின் கண்களைத் திறக்கவில்லை. இத்தகைய ஒரு படையெடுப்பின்போது ஏற்பட்ட ஒரு தொந்தரவால் கடற்கொள்ளைக்காரர்களான டெய்லரையும், இங்க்லண்டையும் அழிக்கவும் காஸண்ட்ராவைக் கைப்பற்றவும் வால்டர் ப்ரெளனுக்கு உத்தரவளித்தார் கவர்னர்'' என்று கூறினான்.

''சுவாரஸ்யமாக இருக்கிறது, சொல்லுங்கள்'' என்றாள் கடல் ராணி.

சாரு ஏதும் கேட்கவில்லைதான்; இருப்பினும் அவள் மேலெழுந்த புருவங்களில் கேள்வி இருந்தது.

*துலாஜி சொன்னான்: ''காஸண்ட்ராவையும், விக்டரியையும் பார்த்தவுடன் ப்ரெளனுக்குக் குலை நடுக்கம் கண்டது. அப்பொழுது இங்க்லண்ட், காஸண்ட்ராவை இயக்கி வந்தான். டெய்லர், விக்டரி என்ற துணைக் கப்பலில் இருந்தான். விக்டரி என்ற பெயரைப் பார்த்ததும் அது தன்னுடைய கப்பல்தான் என்று ப்ரெளன் தீர்மானித்தான். ப்ரெளனின் கடற்படையிலும் விக்டரி என்ற பெயருடைய கப்பல் இருந்தது. அதனால் குதூகலித்த ப்ரெளனின் கப்பல் மீது தனது பீரங்கிகளை இயக்கி இங்க்லண்ட் சுடவே, ப்ரெளன் தனது கப்பலைத் திரும்பி ஓடுமாறு கட்டளை இட்டான்.

* For these Naval Actions Refer 'The Pirates or Malabar' - By Col. John Biddulph. P.P. 151 to 153



அவன் துணைத் தலைவன் காப்டன் அப்டனும் தாங்கள் விஜய துர்க்கத்தைத் தாக்குவதற்காகத்தான் அனுப்பப்பட்டிருப்பதாகக் கூறினான். இப்படி இரு கோழைகளும் முடிவுகட்டிக் கப்பலைத் திருப்பிய சமயத்தில் எதிரியைப் பற்றிச் சரியாக மதிப்பிட்ட இங்க்லண்ட், காஸண்ட்ராவைப் பிரிட்டிஷ் கடற்படைக்குள் செலுத்தி ஊடுருவி இருபுறமும் பீரங்கிகளை இயக்கித் தாக்கினான். விக்டரியிலிருந்து டெய்லரும் பிரிட்டிஷ் கடற்படையை மும் முரமாகத் தாக்கத் தொடங்கினான். இரு வேட்டை நாய்களால் துரத்தப்பட்ட ஆட்டுக்கூட்டம் போலப் பிரிட்டிஷ் கப்பல்கள் ஓடின.

'ப்ராம்' என்று கவர்னர் பூனால் கட்டப்பட்டு நாமகரணமும் செய்யப்பட்ட பெரும் கப்பல் தீப்பற்றி எரிந்தது. போதாக் குறைக்கு 'லண்டன்' என்ற கப்பலிலிருந்த பிரிட்டிஷ் மாலுமிகள் பக்கத்தில் வந்து கொண்டிருந்த 'லாஸரெட்டா' என்ற கப்பலுக்கு மாறி, அங்கு நன்றாகக் குடித்து விட்டுத் தளத்தின் மீது ஆடத் தொடங்கினார்கள். இந்தக் கேலிக்கூத்தின் விளைவாக அவர்களை விரட்டியடித்த இங்க்லண்டும் டெய்லரும் எதிரிக் கப்பல்களில் ஒன்றான எலிஸபெத் தையும் கைப்பற்றிக் கொண்டார்கள். இப்படி வெற்றி பெற்று அவர்கள் திரும்பிய சமயத்தில்தான் நானும் எனது மாலுமிகளும் காஸண்ட்ராவில் வேலைக்கு அமர்ந்தோம்.''

''விசித்திரம்!'' என்றாள் ராணி.

துலாஜி மேலும் பேசத் தொடங்கினான்:

''இத்தகைய தோல்விகளால் சீற்றத்துக்கும் அவமானத்துக்கும் உள்ளான கவர்னர் பூன், இப்போது வால்டர் ப்ரெளன் தலைமையில் கிரீன்விச் (42 பீரங்கிகள் உடையது), சான்டோஸ் (40 பீரங்கிகள்), விக்டரி (புதுக் கப்பல் 26 பீரங்கிகள்), பிரிட்டானியா (24 பீரங்கிகள்), ரிவென்ஜ் (16 பீரங்கிகள்) இவற்றைக் கொண்ட ஒரு படையை அனுப்ப இருக்கிறார். இந்தப் படையில் ஒரு மாற்றம் இருக்கிறது. காப்டன் அப்டனுக்குப் பதில், காப்டன் மாக்ரே காப்டனாக வருகிறான். மாக்ரேயின் துணிவும் போர்த் திறமையும் இங்க் லண்டுக்குக் கூடத் தெரியும். ஆகையால் இப்பொழுது வரும் கடற்படை பலம் உள்ளதாக இருக்கும். இதில் ஒரே ஒரு விஷயம் கவர்னருக்குத் தெரியாது...'' இங்கே கதையைச் சிறிது நிறுத்தினான் துலாஜி.

''எது?'' கடல்ராணி கேட்டாள்.

''காஸண்ட்ரா இங்கு இருப்பது'' என்றான் துலாஜி.

''ஏற்கெனவே அனந்துக்கும் மாக்ரேக்கும் ஒப்பந்தம் இருக்கிறதே'' என்றாள் சாரு.

''அது கவர்னருக்குத் தெரியும். ஆனால், அதனால் பயனில்லை. கவர்னர் நம் யாரையும் நம்பவில்லை. காஸண்ட்ராவைப் அனந்த் பிடித்து கொடுத்ததும், அனந்தையும் எங்களையும் சிறை செய்ய மாக்ரேக்கு உத்திரவிட்டிருக்கிறார் கவர்னர்'' என்று விளக்கிய துலாஜி குறுநகை கொண்டான்.

''அப்படியானால் நீங்கள் என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று வினவினாள் சாரு.

இதுவரை மௌனமாயிருந்த அனந்த் ''கவர்னர் முறையை நாமும் கடைப் பிடிப்போம்!'' என்றான்.

''என்ன முறை அது?'' என்று வினவினாள் கடல்ராணி.

அவளுக்கு உடனடியாகப் பதில் சொல்லவில்லை அனந்த். ''துலாஜி! நீ வந்த வழியே சிந்து துர்க்கத்துக்குள் சென்றுவிடு. நேற்றிரவு நீயும் நானும் இட்ட திட்டத்தை இவர்களுக்குச் சொல்லுகிறேன். இன்று மாலை உன்னைப் பழைய இடத்தில் சந்திக்கிறேன் என்று கூறவே, துலாஜி எழுந்து பழையபடி பாறைகளில் மறைந்து சென்றுவிட்டான் துரிதமாக. போகுமுன்பு ''இவர்களிடம் அடுத்து வரும் போரைப் பற்றி மட்டும் பேசினால் போதும்'' என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

அவன் சென்றதும் அனந்த் தனது பக்கத்தில் உட்கார்ந்திருந்த இரு பெண்களின் தோள்களைப் பிடித்துப் பாறையில் படுக்க வைத்தான். அவர்களுக்கு நடுவில் தானும் படுத்துக் கொண்டான். தனது இரு கைகளையும் இரு பெண்களின் உடல்களுக்கு குறுக்கேயும் போட்டான்.

''இதுதான் உங்கள் திட்டமா?'' என்று வினவிச் சிரித்தாள் கடல் ராணி.

''வேறென்ன இருக்கும்?'' என்றாள் சாரு.

''சாரு, ராணி'' என்று அழைத்தான் அனந்த்.



''உம்...!'' ஏக காலத்தில் பெண்களின் இரு 'உம்'கள் எழுந்தன, இணைந்தன.

''இருவரும் சிறிது ஒருக்களித்து என்னை அணைத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறித் தனது கைகளை எடுத்துக் கொண்டான் அனந்த்.

''நல்ல அழகு!'' என்றாள் கடல்ராணி.

''மிக நேர்த்தி!'' என்றாள் சாரு.

''சொன்னபடி செய்யுங்கள்.'' கடுமையுடன் ஒலித்தது அனந்தின் கட்டளை.

''இதில் மிரட்டல் வேறா?'' என்றாள் சாரு.

''எப்படியும் நம்மைக் கட்டிக்கொள்ளப் போகிறவர். கட்டளைதான் இடுவார்'' என்றாள் ராணி.

''ராணி! உனக்கு வெட்கமில்லை?'' என்று சீறினாள் சாரு.

''இருந்தால் இவர் பக்கத்தில் ஏன் படுத்திருக்கிறோம்?'' என்று கேட்டாள் ராணி.

அடுத்து எதுவும் இருவரும் கேட்கும் நிலையில் இல்லை. இருவரையும் தனது இரும்புக் கைகளால் பலவந்தமாகத் திருப்பி, அனந்த் அணைத்துக் கொண்டான். அப்பொழுது சூரிய ஒளியால் பிரதிபலிக்கப்பட்ட கண்ணாடி வெளிச்சம் அவர்கள்மீது விழுந்து உலாவியது.

''இது என்ன?'' என்று ராணி கேட்டாள், அவன் அணைப்பிலிருந்து விடுபடாமல்.

''காம ஜோதி!'' என்றான் அனந்த்.

''என்ன?'' என்று சாரு கேட்டாள்.

''நம்மீது காரணமாகத்தான் உலாவுகிறது'' என்ற அனந்த் பூர்ண திருப்தி நிலவிய புன்முறுவல் கொண்டான்.

### அத்தியாயம் - 47

# முத்திரைக் கடிதம்!

இரு அழகிகளையும் தனது இரும்புக் கரங்களால் இழுத்து ஒருக்களிக்கச் செய்து அணைத்துக் கொண்ட இந்திரஜித் அனந்த் சாதாரணமாக இந்திர லோகத்தில் இருந்திருக்கலாம் இரு அழகிகளின் கெட்டிப்பட்ட மார்பகங்கள் ஒவ்வொன்று ம் அவன் மீது பக்கங்களில் அழுந்தியதாலும் மற்ற அவயவச் சிறப்புத் திண்மைகளும் அவன் மீது கடுமையாக இடித்ததாலும் அவன் காமக் கடலில் மூழ்கியிருக்கலாம். ஆனால், முற்றும் மாறாக அவன் தன்மீதும் இருபெண்கள் மீதும் பட்டுப் பட்டு உலாவிய வட்டமான கண்ணாடி பிரதிபலித்த கதிரவன் ஜோதியையே கவனித்துக் கொண்டிருந்தான்.

இரு பெண்களின் நிலை மட்டும் அவன் நிலைக்கு முற்றும் மாறுபட்டு இருந்தது. வலதுகரத்தை இந்திரஜித் தனது இடைக்கும் பாறைக்கும் இடையில் கொடுத்துத் தனது உடலையே புரட்டி அணைத்ததால் பலமாக ஏற்பட்ட புருஷ ஸ்பரிசத்தில் அடியோடு சுயநிலை இழந்தாள் ரத்னா. 'அந்த முரட்டுக் கை தன் இடையை எத்தனை நசுக்கி விட்டது! உடலைப் புரட்டித் தனக்காக இழுத்த போது முதுகையும் எத்தனை வலிக்கச் செய்துவிட்டது என்பதை உணர்ந்த கடல்ராணி, 'வலியில் தான் எத்தனை சுகமிருக்கிறது?' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

'கடற்போர்களில் எத்தனையோ வீரர்களைப் புரட்டி அடித்திருக்கும் தனக்கு அப்பொழுதெல்லாம் ஏற்படாத மன நெகிழ்ச்சி அனந்தின் அணைப்பில்தான் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் எண்ணிப் பார்த்தாள். 'எப்பேர்ப்பட்ட முரட்டுப் பெண்ணுக்கும் எங்கோ ஒருவன் பிறந்திருக்கிறான்' என்று தனது தகப்பனார் அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்ததில் எத்தனை உண்மை இருக்கிறது என்றும் நினைத்தாள் அப்பொழுது. அவள் உடலின் பல பகுதிகள் கெட்டிப்பட்டன; சில பகுதிகள் பலவீனப்பட்டன. மாற்றம் எப்படி இருந்தாலும், எதிர்பார்ப்பும்



இம்சையும் ஒரே மாதிரிதான் இருக்கிறது என்பதை உணர்ந்த கடல் ராணி, தனக்குத் தானே வெட்க நகை கொண்டாள்.

சாருவின் நிலையோ கடல் ராணிக்கு எந்த விதத்திலும் குறைந்ததாக இல்லை. இடது கை அவள் இடைக்குக் கீழே வந்ததுமே அவள் சிறிது உருண்டதால் கை இடைக்குக் கீழேயும் சிறிது சென்று திரும்பியதால் அவள் உடல் லேசாக நடுங்கியது. அந்தக் கை அவளைத் திருப்ப அவசியம் இல்லாது போயிற்று. அது திருப்புவதாக நினைத்துக் கொண்டு அவளே திரும்பி அவன்மீது இணைந்து விட்டதால், 'நானே எதற்காக இவர்மீது விழுகிறேன்? எனக்கு வெட்கம் என்பதே கிடையாதா? இவர் என்னைப்பற்றி என்ன நினைப்பார்? என்ன நினைக்கமுடியும்? சாரு, ராணியை விட பலவீனமானவள். ஆகையால் சுலபமாகத் தூக்கி விட்டேன் என்று தானே நினைப்பார்? நினைத்துவிட்டுப் போகட்டுமே' என்று தனக்குள் சொல்லிக் கொண்ட சாரு, அவனிடம் சற்று அளவுக்கு அதிகமாகவே இணைந்தாள். தனது கையொன்றை அனந்தின் உடலுக்குக் குறுக்கே போட்டு ஏற்கெனவே அவன் உடலுக்குக் குறுக்கே கிடந்த ராணியின் கையைப் பற்றினாள். இருவர் கைகளும் இணைந்து அவனை இறுக்கின.

இந்த இன்பத்தையெல்லாம் ஓரளவு அனுபவித்தாலும் பூர்ண இச்சையைக் காட்டாத இந்திரஜித் அனந்த், தங்கள் மூவர் மீதும் ஓடிய வட்ட ஜோதியையே கவனித்துக் கொண்டிருந்தான். நாலைந்து தடவை உலாவியபின் அது மறைந்து விடவே ''அப்பாடி!'' என்று பெருமூச்சு விட்டான்.

''என்ன அப்பாடி?'' என்று கேட்டாள் சாரு, தனது தலையைச் சிறிது தூக்கி.

''ரொம்ப அலுப்போ?'' என்று வினவினாள், ராணியும் சிறிது தலை தூக்கிப் பங்கய விழிகளை அவன் மீது ஓட்டி.

''அலுப்பில்லாமல் எப்படி இருக்கும்? பெரிய காரியத்தைச் சாதித்திருக்கிறார்!'' என்றாள் சாரு புன்முறுவல் கொண்டு.

ராணி மெள்ள நகைத்தாள். ''என்ன அப்பேர்ப்பட்ட காரியம் நடந்துவிட்டது இப்பொழுது?'' என்று கேட்கவும் செய்தாள்.

சாரு தனது கருவிழிகளை ராணிமீது திருப்பினாள். ''சே! ராணி, இது என்ன பேச்சு?'' என்று கோபத்துடனும் நாணத்துடனும் சொன்னாள்.

ராணி மேலும் நகைத்தாள் கலகலவென்று. ''நாணமா சாரு?'' என்றும் வினவினாள்.

''பெண்களுக்கு அதுதானே முக்கிய ஆபரணம்?'' என்று சாரு கேட்டாள்.

''ஆம்'' ராணியின் ஒப்புதலில் கேலி இருந்தது.

''என்ன ஆம்?''

''முக்கிய ஆபரணம் என்று சொன்னாய்.''

''சொன்னேன்.''

''அதை ஒப்புக் கொண்டேன்.''

''ஏதோ உள்ளர்த்தம் வைத்துப் பேசுகிறாய் ராணி.''

''உள்ளர்த்தம் ஏதுமில்லை. உனக்குப் புரியாத அர்த்தமும் இல்லை.''

''என்ன புரிகிறது எனக்கு?''

''ஆபரணத்தைச் சில சமயங்களில் கழற்றி வைக்கிறோம் அல்லவா?''

ராணியின் கேள்வியின் பொருள் நன்றாகப் புரிந்ததால் சாருவும் நாணத்தை விட்டு நகைத்தாள். ''ராணி!'' என்று சிறிது கடுமையாகவும் குரல் கொடுத்தாள்.

''என்ன சாரு?'' ராணியின் குரலில் கேலி இருந்தது.

''ஆனாலும் நீ மோசம்!'' என்றாள் சாரு.

''எப்படி?'' என்று வினவினாள் ராணி.

''பட்டவர்த்தனமாகப் பேசுகிறாய்!''

''அது கூடாதாக்கும்?''

''கூடாது, எதிலும் ஒளிவு மறைவு வேண்டும்.''

ராணி கலகலவென நகைத்தாள்.

''ஏன் நகைக்கிறாய்?'' என்று சாரு கோபத்துடன் கேட்டாள்.

''நாம் இருப்பது மலைப்பாறை'' என்று ராணி சுட்டிக் காட்டினாள்.

''ஆம்'' என்றாள் சாரு.

''பகல் நன்றாக ஏறியிருக்கிறது.''



''ஆம், பாறைகூடச் சுடுகிறது.''

''அதைவிட உணர்ச்சிகள் சுடவில்லை?''

''ராணி!''

''அலட்டிக் கொள்ளாதே சாரு. கதிரவன் நன்றாக வலம் வரும் சமயத்தில் நம்மை அவர் கட்டி அணைத்துக் கொண்டு பாறைமேல் கிடக்கிறார்!''

''அதனால் என்ன?''

''அதைத்தான் அவனும் கேட்கிறான்.''

''யார்?''

''டெலஸ்கோப்பின் மூலம் நம்மைக் கவனிப்பவன்.''

''ஐயையோ!''

''என்ன ஐயையோ?''

''டெலஸ்கோப்பின் மூலம் நமது நிலையை இன்னொருவன் பார்க்கிறானா?''

''இல்லை, இருவர்.''

''இருவரா?''

''ஆம். காமஜோதி முதலில் உலாவிற்று சில தடவை. பிறகு மறைந்தது. இப்பொழுது மறுபடியும் உலாவுகிறது'' என்று விளக்கிய கடல்ராணி, ''சீ! கண்ணில் விழுகிறது ஒளி'' என்று முகத்தை அனந்தின் மார்பில் புதைத்துக் கொண்டாள்.

''என் கண்ணிலும் விழுகிறது'' என்று சாருவும் முகத்தை ராணியின் முகத்துக்குப் பக்கத்தில் பதிய வைத்தாள்.

அதுவரை மௌனமாயிருந்த அனந்த், இரு பெண்களின் ஆட்டத்துக்கும் ஆட்பட்ட அனந்த், ''இது மிக நேர்த்தி!'' என்று கூறிப் புன்முறுவல் கொண்டான்.

''எது நேர்த்தி?'' முகத்தைச் சிறிது நிமிர்த்திக் கேட்டாள் ராணி.

''சொல்லுங்கள்'' என்றாள் சாரு முகத்தை நிமிர்த்தாமலே.

''இன்னும் இருவர் நம்மைப் பார்க்கிறார்கள் என்பதை அறிந்த பின்பும் என் பிராணனை வாங்குகிறீர்களே அதுதான்!'' என்றான் அனந்த் நகைத்து.

''பிராணனை வாங்குகிறோமா?'' என்று சீறினாள் ராணி.

''இப்படி இழுத்துக் கட்டும்படி நாங்கள் கேட்டோமா?'' என்று பட்டவர்த்தனமாகச் சாரு கேட்டாள்.

''சாரு'' என்றாள் ராணி.

''உம்.''

''பட்டவர்த்தனமாகப் பேசாதே!''

''ஏன்?''

''எதிலும் ஒளிவு மறைவு வேண்டும்.''

இதை ராணி சொன்னதும் மூவரும் நகைத்தார்கள். அந்த நகைப்புக்குப் பிறகு அனந்த் எழுந்திருந்தான். அவ்விருவரையும் சிறிது நீக்கிக் கொண்டு எழுந்ததும் அவர்களைத் திரும்பிப் பாராமல் நேராக அறையை நோக்கிச் சென்றான்.

''அறைக்கா போகிறீர்கள்?'' என்று ராணி கேட்டாள், பாறைமீது உட்கார்ந்த நிலையில்.

''ஆம்'' என்றான் அனந்த் திரும்பிப் பார்த்து.

''எதற்காக?'' என்று கேட்டாள் சாரு.

''அங்கேதான் மறைவிருக்கிறது'' என்று கூறிவிட்டு அனந்த் நடந்தான் அறையை நோக்கி.

அவன் செல்வதைப் பார்த்த சாரு, ராணியைப் பார்த்து, ''ராணி! இவருக்கு அடியோடு வெட்கமில்லை!'' என்றாள்.

''துணிந்த கட்டை'' என்றாள் ராணி.

''நாம் என்ன செய்வது இப்போது?'' என்று சாரு கேட்டாள்.

''செய்வதற்கு என்ன இருக்கிறது?'' என்று ராணி வினவினாள் பதிலுக்கு.

''அவர் அறைக்குள் நுழைந்துவிட்டார் ராணி'' என்றாள் சாரு.

''நீ வேண்டுமானால் போ.''

''அத்தனை அல்பமாக என்னை நினைத்துவிட்டாயா ராணி?''

''இதில் அல்பம் என்ன இருக்கிறது?''



''நமக்கு இன்னும் திருமணமாகவில்லை!''

''அதனால்?''

''கட்டுப்பாடு வேண்டும்.''

''கட்டுப்பாடுதான் பகிரங்கமாகி விட்டதே?''

இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருந்த சமயத்தில் இன்னும் கேவலமாக நடந்து கொண்டான் அனந்த். அறைக்குள்ளேயிருந்த இரு பெண்களின் நீராடிய துணிகளை எடுத்து வந்து அறைக்கு வெளியே நன்றாகப் பிழிந்து, உதறி ஒவ்வொன்றாகப் பாறைமீது உலர்த்தினான்.

இதைக்கண்ட இரு பெண்களின் கண்களிலும் சீற்றம் மிதமிஞ்சித் தெரிந்தது. ''பார்த்தாயா ராணி?'' என்று சாரு வினவினாள்.

''பார்த்தேன்'' என்றாள் ராணி.

''நம்மை அவமானப்படுத்துகிறார்?''

''வேண்டுமென்றே செய்கிறார்!''

''பெருத்த போக்கிரி இவர்.''

''சந்தேகம் இல்லை.''

இப்படிச் சொல்லிக்கொண்டே இரு பெண்களும் அறையை நோக்கி விடுவிடு என நடந்தார்கள். அவன் முன்பு வந்து நின்றதும் தரையைத் தங்கள் கமலப் பாதங்களால் உதைத்தார்கள். ''உங்களுக்கு வெட்கமில்லை?'' என்று ராணி வினவினாள்.

''கிடையாது.'' சட்டென்று வந்தது அனந்தின் பதில்.

''எங்களுக்கு இருக்கிறது'' என்று சாரு சீறினாள்.

''எது?''

''வெட்கம்.''

''அப்படியா?'' இதை வெகு வேடிக்கையாகக் கேட்டான் அனந்த், புன்முறுவலும் கொண்டான். அவன் கண்கள் நகைத்தன அவ்விருவரையும் நோக்கி.

இதனால் வெகுண்ட ராணி, ''எங்கள் சேலைத் துண்டங்களை நீங்கள் உலர்த்துவதைப் பார்த்தால் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்?'' என்று கேட்டாள்.

''பெண்ணுக்கு அடிமை, இல்லை இல்லை..., பெண்களுக்கு அடிமை என்று நினைப்பார்கள். நீங்கள் இருவர் இருக்கிறீர்கள் அல்லவா?'' என்றான் அனந்த் சர்வ சாதாரணமாக.

''அப்படி நினைப்பதைப் பற்றி...'' சாரு பேசினாள், தயங்கினாள்.

''கவலை இல்லை!'' என்றான் அனந்த்.

''எங்களுக்குக் கவலை இருக்கிறது'' என்றாள் ராணி.

''என்ன கவலை?''

''எங்களைப் பற்றிக் கேவலமாகப் பேசுவார்கள்...'' என்ற சாரு சொற்களை முடிக்கு முன்பாக அவ்விருவரையும் தழுவி இழுத்துக் கொண்டு அறைக்குள் சென்றான் அனந்த். உள்ளே சென்றதும் அவன் நடவடிக்கை முற்றிலும் மாறியது. ''ராணி! நீ இன்றிரவு சுரங்க வழியில் பாண்டவ கட்டுக்குப் போகவேண்டும். இந்தக் கடிதம் கனோஜிக்கு உடனடியாகப் போய்ச் சேர ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்று கூறித் தன் மடியிலிருந்த கடிதத்தை எடுத்துக் கொடுத்தான். ''கடிதம் நனையவில்லை. இதைப் பாதுகாக்க உள்ளே பெல்ட் போட்டுக் கொண்டிருக்கிறேன்'' என்றும் விளக்கினான்.

கடிதம் முத்திரை வைக்கப்பட்டிருப்பதை ராணி கண்டாள். புரிந்துகொண்டதற்கு அடையாளமாகத் தலையையும் ஆட்டினாள். ''இதற்காகத்தான் இத்தனை நாடகமா?'' என்று சாருவும் வாயைப் பிளந்தாள்.

தூரத்தே காஸண்ட்ராவில் இருந்த ஸில்வரும் ''யூ ஆர் ரைட் டெய்லர். பட் ஐ நெவர் எக்ஸ்பெக்ட் திஸ் ஃப்ரம் அனந்த் (நீ சொன்னதும் உண்மை டெய்லர். இதை நான் அனந்திடம் எதிர்பார்க்கவில்லை)'' என்று கூறவும் செய்தான்.

டெய்லர் நகைத்தான். ''ஸில்வர்! எவ்ரி மான் ஈஸ் எ ஃபூல் வேர் எ உமன் ஈஸ் கன்ஸர்ன்ட். திஸ் ஃபெலோ ஹாஸ் டூ (ஸில்வர்! பெண் சம்பந்தப்படும்போது எந்தப் புருஷனும் முட்டாள். இவனுக்கோ இரு பெண்கள் இருக்கிறார்கள்)'' என்று சுட்டிக் காட்டினான்.

அத்தியாயம் - 48

# பெண் எனும் சுழல்!

பெண் சம்பந்தப்படும்போது எப்பேர்ப்பட்ட அறிவாளியான ஆண் மகனும் அடிமுட்டாளாகிறான் என்ற டெய்லரின் கருத்துக்குச் சான்று கூட்டுபவன்போல் அன்று முழுவதும் அனந்த் நடந்து கொண்டான். மலைப்பாறையில் படுத்துப் பேசி, கனோஜிக்கு அனுப்ப வேண்டிய முத்திரைக் கடிதத்தை அறைக்குள் சென்றதும் ராணியிடம் கொடுத்த பிறகு, முன்னைவிடக் கேவலமான இழிதொழில்களில் ஈடுபட்டான் இந்திரஜித்.

ராணியின் அந்தப் பிரத்தியேக அறையில் முதல் நாள் படுத்து ராணியால் வெளியே துரத்தப்பட்ட அந்த மகாராஷ்டிர வீரன், இன்று அந்த அறையிலிருந்து வெளியே வர நீண்ட நேரம் பிடித்ததை டெலஸ்கோப்பின் மூலம் கவனித்த டெய்லர் மேலும் பலமாக நகைத்து, ''தட் ஃபெலோ வில் நெவர் கம் அவுட் ஆஃப் தட் ரூம் (அவன் அந்த அறையை விட்டு வெளியே வரவே மாட்டான்)'' என்றும் கூறினான்.

அவன் அருகில் நின்றிருந்த ஸில்வர் மீண்டும் அவனிட மிருந்து டெலஸ்கோப்பை வாங்கி அறைமீது பார்வையை நிலைக்க விட்டான். அறைக் கதவு மூடிக் கிடந்தது. அதனால் வெகுண்ட முகத்துடன் ''வெளியே வராமல் இருக்கமாட்டான்'' என்று பதில் கூறினான் டெய்லருக்கு.

''ஏன்?'' என்று டெய்லர் வினவினான்.

''ஹீ மஸ்ட் ஈட், ஹீ மஸ்ட் ஹாவ் ஃபுட் (அவன் சாப்பிட வேண்டும், அவனுக்கு உணவு வேண்டும்)'' என்று ஸில்வர் பதில் கூறினான்.

''வாட் ஃபுட்? (என்ன உணவு)'' என்று டெய்லர் வினவினான்.

''த ஃபுட் யூ அண்ட் ஐ ஈட் (நீயும் நானும் சாப்பிடும் உணவு)'' ஸில்வரின் குரல் கடுமையாயிருந்தது.

''அது அனந்துக்கு அவசியமில்லை!'' டெய்லர் நகைத்தான் இதைச் சொல்லி.

''ஏன் அவசியமில்லை? அவனும் மனிதன் தானே?'' என்று ஸில்வர் வினவினான்.

''மனிதன்தான். ஆனால், நம்மைப்போல் இல்லை. இரு பெண்களுடன் இருக்கிறான்'' என்ற டெய்லர் மீண்டும் ஆங்கிலத்துக்குத் திரும்பி, ''ஹீ ஹாஸ் இனஃப் புட் இன்ஸைட் (உள்ளே போதிய அளவு அவனுக்கு உணவு இருக்கிறது)'' என்றும் கூறினான். அத்துடன் தொடர்ந்தான். ''யூ ஸீ ஸில்வர்! அனந்த் ஈஸ் ஆஃப்டர் ஆல் ஏ பைரேட் லைக் அஸ். என்ஜாய்ஸ் வென் தேர் ஈஸ் ஆப்பர்ச்சூனிடி (இதோ பார் ஸில்வர்! அனந்தும் நம்மைப் போல ஒரு கடற்கொள்ளைக்காரன். சந்தர்ப்பம் கிடைக்கும் போது அனுபவிக்கிறான்) என்று டெய்லர் சொன்னதை ஸில்வர் ஒப்புக் கொள்ளாவிட்டாலும், அடுத்து நிகழ்ந்த நிகழ்ச்சிகளால் அவன் சித்தம் பெரிதும் குலைந்தது.

நீண்டநேரம் கழித்துக் கலைந்த ஆடைகளுடனிருந்த இரு பெண்களையும் அழைத்துக் கொண்டு அனந்த் அறையிலிருந்து வெளியே வந்தான். வந்ததும் முன்பு பாறை மீது தான் உலர்த்திய அந்தப் பெண்களின் சேலைத் துண்டுகளை எடுத்து நன்றாக உதறி மடித்து எடுத்துக் கொண்டு உள்ளே சென்று அவற்றை வைத்து விட்டுத்திரும்பினான். அவன் செய்த ஏதோ சைகையைத் தொடர்ந்து இரு பெண்களும் தங்கள் தலைமயிரைக் கோதிவிட்டுக் கொண்டு சேலையையும் சரிப்படுத்திக் கொண்டார்கள். பிறகு மூவரும் பாறைகளில் இறங்கி மற்றொரு பாறையின் மறைவிலிருந்த ராணியின் படகில் ஏறிச் சிந்து துர்க்கத்தின் வாயிலுக்கு வந்தார்கள்.

அப்படி வந்தபோதும் கரையை அடைவதற்கு முன்பு காஸண்ட்ராவின் தளத்திலிருந்த டெய்லரையும், ஸில்வரையும் நோக்கி உற்சாகமாகக் கையை ஆட்டினான் அனந்த், துடுப்புகளி லிருந்து ஒரு கையை எடுத்து. அதற்கு ஸில்வர் எந்தவிதப் பதிலையும் சைகை மூலம் சொல்லாவிட்டாலும் டெய்லர் தனது இரு கைகளை யும் உயரத் தூக்கிக் குதூகலமாக ஆட்டி, ''குட்பாய்! வெல்டன்'' என்று கத்தினான்.

''இன்னொருவன் ஏன் கத்தவில்லை?'' என்று சாரு கேட்டாள்.



''நாடகத்தில் நம்பிக்கை இல்லாதவன். கப்பலில் உள்ள மூவரில் மிகக் கூரிய அறிவுள்ளவன்'' என்றான் அனந்த் பதிலுக்கு.

அதை ஆமோதித்த ராணி சொன்னாள்: ''ஸில்வர் உங்கள் நாடகத்தை நம்பவில்லை!'' என்று.

''ஆம்'' அனந்தின் குரல் சர்வ சாதாரணமாயிருந்தது.

''அப்படியானால் நாடகம் வீணா?'' என்று ராணி மறுபடியும் வினவினாள்.

''வீணல்ல. எந்த முடிவையும் காஸண்ட்ராவில் இங்க்லண்டும், டெய்லரும் தான் எடுக்க முடியும். டெய்லர் ஒருமுறை ஒரு விஷயத்தை நம்பிவிட்டால் அவனை அசைக்கப் பத்து ஸில்வர் களாலும் முடியாது.''

இந்தச் சமயத்தில் உரையாடலில் இடை புகுந்த சாரு, ''இனி நாம் என்ன செய்ய வேண்டும்?'' என்று வினவினாள்.

''இன்று காலை மாதிரியே நடந்து கொள்ள வேண்டும்!'' என்றான் அனந்த்.

சாருவின் முகத்தில் பொய்க் கோபம் துளிர்த்தது. ''ராணி! பார்த்தாயா?'' என்று வினவினாள் சாரு, கோபம் குரலிலும் லேசாக ஒலிக்க.

ராணி புன்னகை கொண்டாள். ''கவனித்தேன்'' என்றாள் புன்னகையின் ஊடே.

அனந்த் துடுப்புகளைத் துழாவுவதை நிறுத்தி, ''என்ன கண்டுவிட்டீர்கள்?'' என்று வினவினான்.

''உங்கள் கெட்ட எண்ணத்தை?' என்றாள் சாரு.

''எனக்கா கெட்ட எண்ணம்?'' என்றான் அனந்த் வியப்புடன்.

''ஆம்.'' ராணி திட்டமாகச் சொன்னாள்

''நீங்கள் ஆடியது நாடகமல்ல'' என்றாள் சாரு.

''நாடகம் என்பது ஒரு சாக்கு'' என்றாள் ராணி

''எதற்குச் சாக்கு?'' புரியாதது போல் கேட்டான் அனந்த்.

ராணி பதில் சொல்லமுடியாமல் திகைத்தாள். ''உங்களை...'' என்று ராணி ஆரம்பித்தவள், ''சொல்லேன் சாரு'' என்று சாருவுக்கு உத்தரவிட்டாள்.

''என்ன சொல்லச் சொல்கிறாய்?''

''இவரைப் பற்றிய உண்மையை.''

''நீ சொன்னால் என்ன?''

''கேவலமாயிருக்கிறது சாரு!''

''எனக்கு மட்டும் கேவலமில்லையா?''

இந்தச் சமயத்தில் குறுக்கிட்ட அனந்த், ''சொல்வதை வெளிப்படையாகத்தான் சொல்லேன்'' என்றான்.

''உங்களைப் போல் நாங்கள் வெட்கம் கெட்டவர்களல்ல'' என்றாள் ராணி.

''ஆம்.'' ஒத்துப் பாடினாள் சாரு.

''சந்தோஷம்'' என்றான் அனந்த்.

''எதற்குச் சந்தோஷம்?'' என்று வினவினாள் ராணி.

அனந்த் சிறிது சிந்தித்தான். ''என்ன சிந்திக்கிறீர்கள்? சொல்லிவிடுங்கள்'' என்ற ராணி அவனை நெருங்கினாள்.

''வாயைத் திறவுங்கள்'' என்றாள் சாரு.

''என்ன கொடுக்கப் போகிறீர்கள்?'' என்று வினவினான் அனந்த்.

''சாரு! இவர் அயோக்கியத்தனம் முற்றுகிறது!''

''ஆம்'' ராணி.''

''சந்தோஷம் என்கிறீர்களே அது எதற்காக? முதலில் அதைச் சொல்லுங்கள்'' என்று ராணி கேட்டாள்.

''நீங்கள் வெட்கம் கெட்டவர்களல்ல என்று சொல்ல வில்லையா?'' என்று அனந்த் வினவினான்.

''சொன்னோம்.'' இருவரும் ஏககாலத்தில் பேசினார்கள்.

''அதற்குத்தான் சந்தோஷம் தெரிவித்தேன். வெட்கம் பெண் களுக்கு அணிகலன்'' என்ற அனந்தை இரு பெண்களும் சுடச்சுடப் பார்த்தார்கள். ஆளுக்கொரு கையைப் பிடித்துக் கொண்டார்கள். ''உங்களை இப்படியே கடலில் எறிந்து விடுகிறேன்'' என்றாள் ராணி.

''இவர் துடுக்குத்தனத்துக்கு அதுதான் சரி'' என்றாள் சாரு.

''அப்படி எறிந்தால் சுழலில் சிக்கிவிடுவேன்'' என்றான் அனந்த்.



''சுழலா?'' இருவரும் வியப்புடன் கேட்டார்கள்.

''ஆம்'' என்று அனந்த் கூறினான். ''குலசேகர ஆழ்வார் சொன்னது சரிதான்'' என்றும் கூறினான்.

''ஆழ்வாரா?'' ராணி வினவினாள் வியப்புடன்.

''தமிழ் நாட்டில் அப்படியொரு பக்தர் கூட்டம் உண்டு. அவர் களில் குலசேகரர் ஒருவர்.'' அனந்த் சொன்னான் உணர்ச்சியுடன்.

''என்ன சொன்னார் அவர்?'' என்று சாரு கேட்டாள்.

''கடலில் சுழல் எப்படி இருக்கிறதோ அப்படிப் பெண் டாட்டியும் சுழல் என்றார் மகானுபாவன்!'' இதைச் சொல்லிக் கண்களை உயர்த்தினான் ஆகாசத்தை நோக்கி.

''உங்களுக்குப் பெண்டாட்டி ஏது?'' என்று சாரு கேட்டாள்.

''பின்னால் வருபவர்களுக்கு முன்னிலக்கணம்.''

''அதாவது?'' ராணி வினவினாள்.

''நீங்கள்!'' என்ற அனந்த் அந்தப் பெண்ணின் சீற்றத்தைக் கண்டு சரேலென்று துடுப்புகளை எடுத்து வேகமாகத் துழாவ, படகு துரிதமாகச் சிந்து துர்க்கத்தின் வாயிலை அடைந்தது. கரையை அடைந்ததும் இரு பெண்களும் முதலில் கரையில் தாவிக் குதித்துத் தளபதி மாளிகையை நோக்கி நடந்தார்கள். அவர்களுக்குப் பிறகு கரையில் இறங்கி இரும்புத் தளையில் படகைப் பிணைத்த அனந்தை வரவேற்க, அந்த இடத்திலேயே சங்கர் பந்த் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கக் காத்திருந்தார். அவன் கரையேறியதும் சங்கர் பந்த் வினவினார் வறண்ட குரலில், ''இது அத்துமீறிப் போகிறது'' என்று.

அனந்த் அவரை ஏறிட்டு நோக்கினான். குழப்பம் சிறிதும் இல்லாத பார்வையுடன், ''எது?'' என்றும் வினவினான் அதிகாரக் குரலில்.

''இரு பெண்களுடன் உனது சல்லாபம்'' என்றார் சங்கர்பந்த்.

''காரணம் உங்களுக்குத் தெரியும்'' என்றான் அனந்த்.

''மற்றவர்களுக்குத் தெரியாது. ஆனால், காரணம் நீங்கள் சொன்னதுதானா என்பதும் சந்தேகமாயிருக்கிறது'' என்றார் சங்கர் பந்த்.

''சந்தேகமாயிருந்தால் துலாஜியைக் கேட்பதுதானே?'' என்றான் அனந்த்.

''அவன் உனது நண்பன்'' என்று சங்கர் பந்த் அதற்கும் காரணம் காட்டினார்.

''இல்லாவிட்டால் ஸில்வரைக் கேளுங்கள்.''

''அவனையா?''

''ஆம்''

''அவன் விரோதி!''

''இருப்பினும் உங்களைவிட அறிவாளி.''

இதை ரசிக்கவில்லை சங்கர் பந்த். இருப்பினும் அதைப் பற்றிப் பொருட்படுத்தாமல் கேட்டார், ''அவனிடமிருந்து என்ன தெரிந்து கொள்ள வேண்டும்?'' என்று.

''நான் நடத்துவது காதல் நாடகம் என்பதை அவன் சொல்வான். லேசாக அவனை ஏமாற்ற முடியாது'' என்ற அனந்த் ''உங்களை இரவு சந்திக்கிறேன் '' என்று கூறிக் கோட்டைக்குள் சென்றுவிட்டான்.

சிந்து துர்க்கத்தின் வாயிலில் நுழைந்தவன் சங்கர் பந்தின் மாளிகைக்குச் செல்லவில்லை. பீரங்கி அறைக்குள் இருந்த கோட்டை மதிலை நோக்கிச் சென்றான். அன்று முழுவதும் கோட்டைத் தெருவிலோ சிவாஜி சிலை இருந்த இடத்திலோ அவன் தலைகாட்டவே இல்லை. பீரங்கி அறை ஒன்றில் உணவு வரவழைத்து உண்டு படுத்தவன், மாலையில் எழுந்து புத்தாடை அணிந்து இரு கைத்துப்பாக்கிகளையும் இடுப்பில் செருகி, நாலு அறைகள் தள்ளியிருந்த துலாஜியின் அறைக்குச் சென்றான்.

அவனுக்காகக் காத்திருந்த துலாஜி, ''கடிதம் என்ன ஆயிற்று?'' என்று வினவினான்.

''ராணியிடம் கொடுத்துவிட்டேன்'' என்றான் அனந்த்.

''நல்லது!''

''அடுத்த நடவடிக்கைக்குத் தயார் செய்ய வேண்டும்.''

''சரி வா. தளபதியைப் பார்ப்போம்'' என்ற துலாஜி அனந்தை அழைத்துக்கொண்டு சங்கர் பந்தின் மாளிகையை அடைந்தான்.

இருவரையும் கடுகடுப்பான முகத்துடன் வரவேற்றார் சங்கர் பந்த். ''அடுத்து என்ன நாடகம்?'' என்று கேட்டார்.

''இன்றிரவு...'' என்று துலாஜி தொடங்கினான்.



''சொல்லுங்கள்.''

''நடப்பதை நீங்கள் கண்டு கொள்ளக் கூடாது!''

''என்ன நடக்கும்?''

''நீங்களே பார்க்கலாம்.''

''பார்த்து?''

''உணர்ச்சி வசப்பட்டுக் காரியத்தைக் கெடுக்கக் கூடாது!''

''என்ன காரியம்?''

''நீங்கள் பார்க்க இருக்கும்போது நான் சொல்ல அவசியமில்லை'' என்று கூறிய துலாஜி, அனந்தை அழைத்துக் கொண்டு செல்லு முன்பு, ''எது நடந்தாலும் பதற்றப்படாதீர்கள்'' என்று எச்சரித்துச் சென்றான்.

நள்ளிரவும் வந்தது. மாளிகை உப்பரிகையில் நின்றிருந்தார் சங்கர் பந்த். அப்பொழுது மாளிகையிலிருந்து வெளியேறிய ராணி, சிவாஜி சிலையிருந்த இடத்தை நோக்கி நடந்தாள். அதன் பக்கத்து அறையில் நுழைந்தாள். அரை நாழிகை ஓடியது. அந்த அறையை நோக்கி அனந்த் நடந்து சென்றான். அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டான். கதவு சிறிது பலமாகவே தாளிடப்பட்டதால் அதன் ஒலி கோட்டையில் பலமாகவே கேட்டது.

உள்ளேயிருந்த ராணி கேட்டாள், ''பெண்டாட்டி எனும் சுழலில் சிக்கிவிட்டீர்களா?'' என்று புன்முறுவலும் கொண்டாள்.

''ஆம்'' என்றான்.

''மேலே என்ன?'' என்று ராணி வினவினாள்.

''நடக்க வேண்டியது நடக்கும்'' என்றான் அனந்த்.

நீண்ட நேரமாகியும் கதவு திறக்கப்படாததால் சங்கர் பந்த் சினந்து கிளம்ப முற்பட்டார் தமது மாளிகையிலிருந்து. அவர் மாளிகைக் கூடத்துக்கு வந்ததும் அங்கு உட்கார்ந்திருந்தான் துலாஜி கைத்துப்பாக்கியுடன். ''நீங்கள் மாளிகையை விட்டுக் கிளம்ப வேண்டாம்'' என்ற துலாஜி கைத்துப்பாக்கியை அவரை நோக்கி நீட்டவும் செய்தான்.

''ஏன்?''

இரண்டு காரணங்களைச் சொன்னான் துலாஜி. திகைப்பும் சீற்றமும் கலந்த உணர்ச்சிகள் சங்கர் பந்தின் முகத்தில் தோன்றின.

## அத்தியாயம் - 49

# துரித நிகழ்ச்சிகள்!

நடுக் கூடத்தில் கையில் துப்பாக்கியுடன் உட்கார்ந்திருந்த துலாஜி, மாளிகையை விட்டுத் தன்னைக் கிளம்ப வேண்டாம் என்று தடுத்ததே சங்கர் பந்துக்குச் சீற்றத்தை அளித்ததென்றால் அவன் சொன்ன காரணங்கள் அவர் சீற்றத்தை மட்டுமின்றித் திகைப்பையும் உச்சநிலைக்குக் கொண்டு சென்றன.

''ராணியும் அனந்தும் அதே அறையில் தனித்திருப்பது இது முதல் தடவையல்ல. தவிர நீங்கள் வெளியில் சென்று அவர்கள் இருக்கும் கதவைத் தட்டினால் அதை எதிரிகளும் கவனிப்பார்கள்'' என்று கூறினான். ''அவர்களுக்கு ஏற்கெனவே சில சந்தேகங்கள் இருக்கின்றன. அதை நாம் உறுதிப்படுத்த வேண்டாம்!'' என்றும் சுட்டிக் காட்டினான் துலாஜி.

எதிரிகள் என்று துலாஜி யாரைக் குறிப்பிடுகிறான் என்பது சங்கர் பந்துக்குத் தெரிந்திருந்தும் சீற்றம் சித்தத்தைச் சரியாக இயக்காததால், ''எதிரிகளா? யார் அவர்கள்?'' என்று விசாரித்தார் கடுமையான குரலில்.

''வேறு யார்? டெய்லர், இங்கலண்ட், ஸில்வர்'' என்று விடையளித்த துலாஜி, ''ராணியும் அனந்தும் ஆடும் காதல் நாடகத்தை அவர்கள் நம்பவில்லை!'' என்றும் தெரிவித்தான்.

சங்கர் பந்தின் முகம் மிகக் கடுமையாக மாறி அவர் கண்களில் நெருப்புப் பொறி பறந்தது. ''அப்படியானால் இது வெறும் நாடகமா?'' என்று நெருப்பென உதிர்ந்தன சொற்கள் அவர் உதடுகளிலிருந்து.

துலாஜி இதற்கு உடனடியாகப் பதில் சொல்லவில்லை. சிறிது சிந்தித்துவிட்டு, ''தளபதி! இது நாடகமாகத்தான் துவங்கியது. ஆனால், இப்பொழுது நான் நிச்சயமாகச் சொல்ல முடியாது'' என்று நிதானமாகப் பேசினான்.



''அப்படி என் பெண்ணும்...'' என்ற பந்த் சற்று நிதானித்து, ''அந்த...'' என்று துவங்கிப் பேச நா எழாமல் உணர்ச்சி வசப்பட்டு நின்றார்.

''அந்த அயோக்கியன் அனந்தும் என்று சொல்ல இருந்தீர்கள். நீங்கள் என்ன வசை பாடினாலும் அனந்த் எடுத்த காரியத்திலிருந்து விலக மாட்டான்'' என்றான் துலாஜி.

''எடுத்த காரியம் என்ன?'' பந்தின் கேள்வி முரட்டுத்தனமாக வந்தது.

''கடற்கொள்ளைக்காரர்களை அழிப்பது அல்லது செயலற்றுப் போகச் செய்து திரும்பத் தலைகாட்ட முடியாமல் அரபிக் கடலிலிருந்து துரத்திவிடுவது ஒன்று. பிரிட்டிஷாரின் கடல் பலத்தை முறிப்பது இரண்டு. இந்த இரண்டையும் நிறைவேற்றத்தான் நாங்கள் இங்கு வந்தோம். இது முடிந்ததும் இருவரும் இங்கிருந்து கடையைக் கட்டி விடுவோம்'' என்று துலாஜி விளக்கினாலும் சாந்தமடையவில்லை சங்கர் பந்த். ''நாம் மட்டும் கொள்ளைக்காரர்கள் அல்லவா?'' என்றார்.

''நாம் அடிக்கும் கொள்ளை நாட்டுக்குப் பலனை அளிக்கிறது; நாட்டை வலுப்படுத்துகிறது. நாம் மேல்நாட்டுக் கப்பல்களைக் கொள்ளையடிக்கிறோம். அதனால் நாடு பலவீனப்படாது. சேதப்படுவது வெள்ளையர் கப்பல்கள். இங்கலண்டும், டெய்லரும் கொள்ளையடிப்பது சுயநலத்துக்கு. பிரிட்டிஷ்காரர் கனோஜியை அழிக்கப் பார்ப்பது அவர் கொள்ளைக்காரர் என்பதாலல்ல. அவர் கடற்படை பலம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யக் கனவுக்குப் பெரும் இடைஞ்சலாக இருக்கிறது. ஆகையால் நமக்கும் மற்ற கொள்ளைக்காரர்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது'' துலாஜி இதை மிக நிதானமாகவும் சிறிது உணர்ச்சி வசப்பட்டும் சொன்னான்.

''இதற்கும், ராணியும் அனந்தும் அறைக்குள் தனித்துப் படுப்பதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?'' என்று கேட்டார். சங்கர் பந்த்.

''இருவரும் படுக்கவில்லை'' என்றான் துலாஜி. பிறகு ஏதோ சிரித்துவிட்டுத் தனது கைத் துப்பாக்கியை இடையில் செருகிக் கொண்டான். ''உங்களுக்கு இன்னும் சந்தேகமாயிருந்தால் நீங்கள்

அறையை நோக்கிப் போகலாம்'' என்று சொல்லிவிட்டு எழுந்திருந்தான்.

''இப்பொழுது நான் போய்க் கதவைத் தட்டுகிறேன். என்ன ஆகும்?'' என்று சீறினார் பந்த்.

''சிந்து துர்க்கத்தின் ரகசியம் வெளிப்படும்.'' துலாஜியின் குரலில் அலுப்பும் சங்கர் பந்தைப் பற்றிய எரிச்சலும் தெளிவாகவே தலை காட்டின.

வெளியே கிளம்பத் திரும்பிய சங்கர் பந்த் சட்டென்று திரும்பினார். ''ரகசியமா? என்ன ரகசியம்?'' என்று கேட்டார்.

''போய்த் தெரிந்துகொள்ளுங்கள்'' என்ற துலாஜி, தான் உட்கார்ந்திருந்த மஞ்சத்தில் நன்றாகச் சாய்ந்து கால்களையும் நீட்டிக் கொண்டான்.

சங்கர் பந்துக்கு அவன் அலட்சியமும் தனது மாளிகைக்குச் சொந்தக்காரன்போல் நடந்துகொண்டதும் அடியோடு பிடிக்கவில்லை என்றாலும், வேறு வழியின்றி வெளியே நடந்தார். சங்கர் பந்த் பெரிய வீரனானாலும் அந்த வீரத்தைப் பயனற்றதாகச் செய்ய அவரிடம் அனாவசியமான பிடிவாதம் இருந்ததால் அதை அன்று செயல்படுத்த முற்பட்டு மாளிகையை விட்டு வேகமாக வெளியே நடந்தார்.

தெருவில் பயங்கர அமைதி நிலவிக் கிடந்தது. கோட்டைச் சுவர்மீது உலாவிய பத்துக் காவலர் கூடக் கோஷம் ஏதும் போடாமல் மௌனமாக நடந்ததால் பிசாசுகள் உலாவுவது போன்ற பிரமை ஏற்பட்டது. கோட்டைச் சுவர்களையும் பார்த்து, தெருவின் கோடியில் சுவரை ஒட்டியிருந்த சிவாஜி சிலைக் கோவிலையும் ஒருமுறை பார்த்தார். பிறகு ஆகாயத்தில் கண்களை ஓட்டி நட்சத்திர மண்டலத்தைப் பார்த்தார். ''புஷ்பக்கொத்து போன்ற நட்சத்திரக்கூட்டம் சிறிது வடக்கே நகர்ந்திருக்கிறது. நள்ளிரவு தாண்டி அரை ஜாமம் முடிந்துவிட்டது'' என்று தமக்குள் சொல்லிக் கொண்ட பந்த், அடுத்தபடி தமது கண்களைச் சிவாஜி சிலைக் கோவிலுக்குப் பக்கத்து அறை மீது செலுத்தினார். அறைக் கதவு மூடியபடி இருந்தது. மூடப்பட்டிருந்ததைக் கண்டதும் மூட்டப்பட்ட சினத்துடன் வேகமாக நடந்தார் சங்கர் பந்த், அந்த அறையை நோக்கி. அறையை அடைந்ததும் சற்றுப் பலமாகவே கதவைத் தட்டினார்.



''யாரது?'' என்ற அனந்தின் குரல் உள்ளேயிருந்து ஒலித்தது. குரலின் தன்மையிலிருந்து அவன் உறக்கத்தில் இருப்பது புலனானதால் சங்கர் பந்த் நிதானம் இழந்தார்.

''ரத்னாவும் தூங்கிவிட்டாளா?'' என்று கேட்டார் பந்த் தமது மகளின் இயற்பெயரைச் சொல்லி.

''ரத்னாவா?'' அனந்தின் குரலில் அரைத் தூக்கத்தின் சாயை வழிந்து கிடந்தது.

''ஆம்.''

''யாரது?''

''என்னிடம் விளையாடாதே. நான் ராணியல்ல.''

''வேறு யார்?''

''அவள் அப்பன்.''

''அவள் அப்பனுக்கு இங்கு வேலை இல்லை?''

இதைக் கேட்டதும் சங்கர் பந்தின் நிதானம் அடியோடு காற்றில் பறக்கவே, ''ராணிக்குத்தான் வேலை இருக்கிறதோ?'' என்று கேட்டுக் கதவைக் காலால் உதைத்தார்.

அதை அடுத்து உள்ளே அனந்தின் முனகல் கேட்டது. சிறிது தள்ளாடி அவன் எழுந்திருக்கும் ஒலியும் கேட்டது. அப்படி எழுந்திருந்ததால் கீழே போடப்பட்டிருந்த ஒரு பாய் சற்றே நகரும் சப்தமும் கேட்டது. இந்த ஒலிகளையெல்லாம் தமது சந்தேகத்தின் அத்தாட்சிகளாக ஏற்று, இடையிலிருந்த கைத்துப்பாக்கியையும் கையில் எடுத்துக்கொண்டார் மால்வான் தளபதி. அந்தச் சமயத்தில் மெள்ளக் கதவு திறக்கப்பட்டது. கலைந்த குழலுடன், சற்றே கிழிந்த சட்டையுடனும், தளர்ந்த நிஜாருடனும் தலையை வெளியே நீட்டினான் அனந்த். அவன் கோலம் அவன் காம இச்சை பூர்த்தியானதற்கு அடையாளம் என்று முடிவு கட்டிய சங்கர் பந்த், ''எங்கே அவள்?'' என்று கேட்டுக்கொண்டு உள்ளே நுழைந்தார்.

நுழைந்ததும் பிரமையடைந்து நின்றார். ராணி அங்கு இல்லை. அறை மூலையில் என்றுமில்லாத திருநாளாக அன்று ஒரு சிறு விளக்கு மட்டும் காட்சியளித்தது. பாயும் ஒரு தலையணையும்

தரையில் கிடந்தன. தலையணையை அடுத்து அனந்தின் இரு கைத்துப்பாக்கிகளும் நித்திரை செய்து கொண்டிருந்தன.

சங்கர் பந்த் இவ்விதம் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்த சமயத்தில் தூக்கக் கலக்கத்தில் இருந்த அனந்த் மீண்டும் பாயில் படுத்துக் கொண்டான். தலையணையின் ஒரு பக்கத்தில் இருந்த இரண்டு துப்பாக்கிகளைப் பிரித்து இருபக்கத்திலும் வைத்து விட்டு ஒருக்களித்துப் படுத்துக்கொண்டான் அரைவாசி கண்களையும் மூடிக்கொண்டான். துயில் வந்ததால் முழுவதும் மூட முயன்ற சமயத்தில் சங்கர் பந்தின் குரல் எழுந்தது, ''எங்கே அவள்?'' என்று.

''தெரியாது!'' அரைத் தூக்கத்தில் வந்தது பதில்.

''நானே பார்த்தேன் அவளை'' என்றார் பந்த்.

''இருந்தால் அழைத்துப் போகலாம்!''

''என்னிடம் விளையாடுகிறாய்?''

''அந்தத் துர்ப்பாக்கிய நிலைக்கு நான் வரவில்லை. ராணியுடன் விளையாடினாலாவது பயனுண்டு.''

''அவளை என்ன செய்தாய்?''

''தந்தை கேட்கும் கேள்வியல்ல இது. பதில் சொல்வதும் விபரீதம்'' என்ற அனந்த் புரண்டு படுத்துக்கொண்டான்.

சங்கர் பந்த் திகைத்தார் சில விநாடிகள். அந்தச் சமயத்தில் மெள்ள அழைத்தான் அனந்த், தூங்கியபடி ''தளபதி'' என்று.

''என்ன?'' அதட்டலுடன் வந்தது பந்தின் கேள்வி.

''கதவை மூடிவிடுங்கள். என்னுடன் படுத்துக் கொள்ளுங்கள்!''

''எதற்கு?''

''சங்கர் பந்த்!''

''என்ன?''

''உமது கேள்விகள் வரவர விபரீதமாகத் திரும்புகின்றன.''

''என்ன விபரீதம்?'' என்று கேட்டுக்கொண்டே அனந்தை அணுகினார். அணுகி அவன் உண்மையில் உறங்குகிறானா, பாசாங்கு செய்கிறானா என்பதை அறியக் குனிந்து நோக்கினார். அனந்தின் கண்கள் நன்றாக மூடிக் கிடந்தன. அவன் சுவாசம் சீராக



வந்து கொண்டிருந்தது. அமைதியான அவனது நித்திரை அவன் பேச்சை விட அவருக்கு எரிச்சலை அளித்ததால் பாயோடு அவனை வாரி எறியத் திட்டமிட்டுப் பாயின் ஒரு புறத்தை எடுத்தார்.

''பாயைத் தொட வேண்டாம்!'' அனந்தின் எச்சரிக்கைக் குரல் மெதுவாக ஒலித்தாலும் அதில் பரம பயங்கரம் ஒலித்தது. அதே சமயத்தில் வெளியே யாரோ வரும் சத்தம் கேட்கவே, சட்டென்று கைத்துப்பாக்கியை எடுத்துக் குறிவைத்துக்கொண்டு குதிரையையும் இழுத்துச் சுடத் தயாராக வெகு வேகமாகத் திரும்பினார் பந்த்.

அவர் கண்களுக்குக் கு எதிரே ஸில்வரின் இடுப்பிலிருந்த பல கைத்துப்பாக்கிகளில் இரண்டு பயங்கரமாக விழித்துக் கொண் டிருந்தன. ''உன் கைத் துப்பாக்கியை அகற்று'' என்ற உத்தரவும் ஸில்வரிடமிருந்து வந்தது.

அவன் சொன்னதைத் தொடர்ந்து அவனுக்குப் பின்னால் நின்றிருந்த இங்கலண்டும் கூறினான்: ''பந்த்! ஸில்வர் சொன்னபடி செய்யுங்கள்'' என்று. அவன் கையிலும் ஒரு துப்பாக்கி இருந்தது. துப்பாக்கியை அவன் வெகு அலட்சியமாகப் பிடித்திருந்தாலும் அது உபயோகத்துக்குத் தயாராய் இருப்பதை உணர்ந்துகொண்ட சங்கர்பந்த் தமது கைத்துப்பாக்கியை இடைக் கச்சையில் செருகிக் கொண்டார்.

''தேர் ஈஸ் எ குட் பாய்'' என்று பந்தைப் பாராட்டிய ஸில்வர், ''கமாண்டர் டார்லிங்! டூ யூ மைண்ட் வேகிங் அப் தட்ஃபெலோ (தளபதிக் கண்மணியே! அதோ தூங்குபவனையும் எழுப்ப ஆட்சேபணையில்லையே?)'' என்று கெஞ்சிக் கேட்டான்.

''தூங்குபவரை நான் எழுப்பும் வழக்கம் இல்லை'' என்று பச்சைப் பொய்யைச் சொன்னார் பந்த்.

இதைக் கேட்டதும் ஸில்வர் ''ஹா ஹா'' என்று பெரிதாக நகைத்து, ''உன் பெண் எங்கே இவனுடன் இங்கே இருந்தவள்? கதவை யார் திறந்தது உனக்கு? அனந்த்தானே? அனைத்தையும் நாங்கள் கவனித்துக் கொண்டுதான் இருந்தோம். ஆகையால் எங்கள் கண்களில் மண்ணைத் தூவப் பார்க்காதே'' என்ற ஸில்வர், தனது ஒரு கையிலிருந்த கைத்துப்பாக்கியைப் பெல்ட்டில் செருகிக் கொண்டு,

அந்தக் கையால் தன் தோளில் இருந்த அசுரக் கிளியை எடுக்கப் போனான்.

அதே சமயத்தில் அரைத் தூக்கத்திலிருந்த அனந்தின் கைத்துப்பாக்கியொன்று வெகு துரிதமாக இயங்கி ஸில்வரின் வலது கையில் இருந்த துப்பாக்கியை மட்டுமின்றி, இங்க்லண்டின் கைத்துப்பாக்கியையும் பறித்துச் சென்றது. ''ஒன் மோர் ஸ்டுபிடிட்டி ஐ கில் தட் பர்ட் (இன்னொரு முறை முட்டாள்தனத்தைக் காட்டு, அந்தக் கிளியைக் கொன்றுவிடுகிறேன்,)'' என்ற எச்சரிக்கையும் அனந்திடமிருந்து வந்தது.

ஸில்வர் அனந்தை நோக்கினான், சினத்துடன். அனந்த் கண்களை அரைவாசி மூடி, கையில் புகைந்துகொண்டிருந்த துப்பாக்கியை அரையும் குறையுமாகப் பிடித்துக் கொண்டிருந்தான். அவன் ஒருக்களித்துப் படுத்திருந்த கோலமும், தலையணைமீது ஒருபுறம் திரும்பியிருந்த முகத்தின் தோரணையும், திடீரெனப் பளிச்சிட்ட கண்களும் ஏதோ சிறுத்தையொன்று பாயத் தயாராயிருக்கும் நிலையை நினைவூட்டவே, ''அனந்த்! யூ ஃபூல் யூ ஒண்ட் கெட் அவே வித் திஸ் (அனந்த் முட்டாள்! இத்துடன் நீ தப்ப முடியாது)'' என்று கூறினான் ஸில்வர்.

''ஸில்வர்! யூ ஆர் ரைட், ஐ வில் கில் திஸ் ஃபெலோ (ஸில்வர் நீ சொன்னது முற்றும் சரி. இவனை நான் ஒழித்து விடுகிறேன்)'' என்று கூறிக்கொண்டே மற்றொரு பக்கத்திலிருந்து வெளிவந்த டெய்லர் தனது இருகைகளிலும் இருந்த இரு கைத்துப்பாக்கிகளை 'கிளிக்' என்று இழுத்தான். அனந்த் தொலைந்தானென்று எல்லாருமே முடிவு கட்டினார்கள்!

அத்தியாயம் - 50

# சிந்து துர்க்கத்தின் ரகசியம்!

'ட்ராப் தோஸ் கன்ஸ்! (அந்தத் துப்பாக்கிகளைக் கீழே போடு!)'' - இதைச் சொன்னவன் குரலில் தீர்மானம் இருந்தது. கடுமை பலமாக இருந்தது. அனந்த் ஒழிந்தானென்று முடிவு கட்டியவர்கள்' அவன் முடிவுக்குக் காலம் வரவில்லை என்பதைச் சந்தேகமற உணர்ந்தார்கள். சொன்னவன் யாரென்பதைக் குரலிலிருந்தே புரிந்து கொண்டதால் டெய்லரின் இரு கைத்துப்பாக்கிகளும் தரையில் விழுந்தன. ஒன்றிலிருந்த குதிரை முக்கால்வாசி இழுக்கப்பட்டிருந்ததால் அது வெடித்து அதன் ரவையொன்று தரையில் கீறிச்சிட்டு ஓடியது.

டெய்லர் மிகுந்த சினத்துடன் பின்புறமாகத் திரும்பித் தனது எரி விழிகளை எதிரிமீது நாட்டினான். எந்தக் கைத்துப்பாக்கியைக் காட்டி முன்பு தளபதி சங்கர் பந்தை மாளிகையில் மறித்தானோ, அதே கைத்துப்பாக்கியை நேராக அனைவரையும் நோக்கிக் குறி வைத்தவண்ணம், கால்களை நிலத்தில் பரப்பிக்கொண்டு, மேலுக்குச் சாந்தமும், உள்ளுக்குள் சினமும் விரிந்த கண்களுடன் நின்றிருந்தான் துலாஜி ஆங்கரே. அவன் ஒல்லியான சரீரம்கூட அந்தச் சமயத்தில் பரம பயங்கரத்தை அளித்தது பார்ப்பவர்களுக்கு.

ஆதலால் செயலிழந்து மற்றவர்கள் நின்றாலும் மூர்க்கத்தனம் நிரம்பிய டெய்லர் மட்டும் கேட்டான், ''இதனால் என்ன சாதிக்கப் பார்க்கிறாய்?'' என்று.

துலாஜியின் கூரிய விழிகள் விஷம் தீட்டப்பட்ட அம்புகளைப் போல் டெய்லர்மீது நிலைத்தன. ''நம்மை நாமே ஒருவருக்கொருவர் கொன்று கொள்வதைத் தடுக்கப் பார்க்கிறேன். இம்முறை மாக்ரே வரும்போது அவனை எதிர்க்க நம் அனைவர் சக்தியும் வேண்டும். எல்லாவற்றையும் விட அனந்தின் யோசனை மிக முக்கியமாக வேண்டும். அவனை அழித்தால் நாம் அழிந்தோம்!'' என்று வெறுப்பும் இகழ்ச்சியும் கலந்த குரலில் கூறினான் துலாஜி.

துலாஜியின் சொற்கள் ஸில்வருக்கும் சினத்தை ஊட்டவே, ''அனந்த் இல்லாவிட்டால் நாம் அனைவரும் அழிக்கப்படுவோமா? ஏன்? நாம் மாலுமிகள் அல்லவா? கடற் போரில் நமக்கு அனுபவம் இல்லையா?'' என்று வினவினான்.

''இம்முறை நம் அனுபவம் மட்டும் போதாது. வருவது மாக்ரே. அதுவும் உங்களை ஒழிக்கும் உறுதியுடன் வருகிறான்!'' என்று துலாஜி சுட்டிக் காட்டினான்.

''ஏற்கெனவே அவன் இப்படித்தான் முயன்று என்னிடம் சிறைப்பட்டான். ஸில்வரின் தயவால் தப்பினான்!'' என்று இங்க்லண்ட் கூறினான்.

''அவன் சிறைப்பட்டது, துணைக் கப்பல்கள் துணிவின்றி ஓடிவிட்டதால்! இப்பொழுது மாக்ரே அப்படி வரவில்லை'' என்று பதில் சொன்னான் துலாஜி. அத்துடன் ''மாக்ரேயைப் பற்றி எண்ணவும் பேசவும் அவகாசம் இருக்கிறது. இங்கு எதற்காக நீங்கள் அனைவரும் வந்திருக்கிறீர்கள்? எதற்காக அனந்தைச் சுட முயற்சி செய்கிறீர்கள்?'' என்றும் வினவினான்.

இம்முறை டெய்லர் பதில் சொன்னான்: ''காலை முதலே அனந்தைக் கவனித்து வருகிறோம்'' என்று.

''கவனித்து என்ன தெரிந்து கொண்டீர்கள்?'' துலாஜியின் கேள்வி இகழ்ச்சியுடன் வெளிவந்தது.

''காலை முதல் இரண்டு பெண்களுடன் விளையாடுகிறான்'' என்று டெய்லர் உறுமினான்.

''அதனால் உங்களுக்கு என்ன?'' துலாஜியின் கேள்வியில் கேலி ஒலித்தது.

இந்தச் சமயத்தில் ஸில்வர் உரையாடலில் புகுந்து, ''அது உண்மை விளையாட்டல்ல. வெறும் நாடகம்'' என்று கூறினான்.

''இதைத்தான் சங்கர்பந்த் நம்ப மறுக்கிறார். நீங்களாவது அவருக்குப் புத்தி சொல்லுங்கள்!'' என்று கூறிக்கொண்டே அனந்த் எழுந்திருந்து நின்றான் தூக்கத்தை உதறிக்கொண்டு.

''நாடகமாவது மண்ணாங்கட்டியாவது... இவனுடன் ராணி இரவில் தனித்துப் படுப்பது நாடகமா?'' என்று எரிந்து விழுந்தார் சங்கர் பந்த்.



''யாரும் என்னுடன் படுக்கவில்லை இங்கு'' என்றான் அனந்த் மறுபடியும்.

அனந்தின் இந்தச் சொற்களைக் கேட்டதும், ''பொய். முழுப் பொய்! அவள் இங்கு வந்ததை நானே பார்த்தேன்'' என்று இரைந்தார் தளபதி பந்த்.

''நாங்களும் பார்த்தோம்'' என்று கலந்து கொண்டான் டெய்லர்.

''நாங்கள் என்றால்?'' அனந்தின் கேள்வி சர்வ சகஜமாக எழுந்தது.

''நான், ஸில்வர், இங்க்லண்ட்'' என்று பதில் சொன்னான் டெய்லர்.

''சாட்சிகள் பலமாக இருக்கின்றன அனந்த்'' என்று துலாஜி கூறினான் மெள்ள நகைத்து.

''உங்களுக்கெல்லாம் வேறு வேலையில்லையா?'' என்று வினவினான் அனந்த், அனைவரையும் நோக்கி. முக்கியமாக அவன் கண்கள் ஸில்வர் மீது நிலைத்தன. ''ஸில்வர்! உன்னை மரணத்திலிருந்து நான் காப்பாற்றினேன். நீ கூட என்னை நம்பவில்லையா? என்மீது வேவு பார்க்கிறாயா?'' என்று வருத்தத்துடன் கேட்ட அனந்த் மேலும் சொன்னான்:

''ராணி என்னுடன் வரவில்லை. நான் இங்கே வந்து படுத்ததற்குக் காரணமே நிம்மதியாக உறங்கத்தான். சத்ரபதி சிவாஜி சிலைக்கு அடுத்த அறை, மகாராஷ்டிரர்களால் புனிதமாகக் கருதப்படுகிறது. அங்கு யாரும் வரமாட்டார்கள் என்று நினைத்தேன். அந்தப் புனிதத் தன்மையையும் நீங்கள் கெடுத்து விட்டீர்கள்'' என்று குற்றம் சாட்டினான் அனந்த் கடுமையான குரலில்.

இதைக் கேட்டதும் சங்கர் பந்தின் சினம் கூரையைத் தொட்டது. ''புனிதத் தன்மையைக் கெடுத்தவன் நீ, ராணியுடன் இங்கே படுத்தாய்'' என்று இரைந்து பேசினார் சொற்களில் கனல் வீச.

''ஏற்கெனவே ஒரு முறை இப்படி நடந்திருக்கிறது'' என்று துலாஜி சுட்டிக் காட்டினான் விஷமத்துடன்.

துலாஜி தம் பக்கம் பேசியது சங்கர்பந்துக்கு உற்சாகத்தை அளிக்கவே, ''ஆம். இது இரண்டாவது முறை, இனி உன்னை மன்னிக்க முடியாது!'' என்று கூறினார் உற்சாகத்துடன், அனந்த் வகையாக மாட்டிக் கொண்டதை நினைத்ததால்.

அனந்தின் கண்களில் வருத்தத்தின் சாயை படர்ந்தது. ''எந்தக் குற்றவாளிக்கும் மும்முறை மன்னிப்பு உண்டு'' என்று அனந்த் கூறினான், குரலில் வருத்தம் ஒலிக்க.

சங்கர் பந்துக்கு உற்சாகத்துடன் கோபமும் மிகுந்திருந்ததால் ''என் மகளை மூன்றாவது தடவையும் கெடுக்க நினைக்கிறாயா?'' என்று சீறினார்.

இதைக் கேட்ட டெய்லர் தன்னையும் மீறி நகைத்தான். ''யூ ஸ்பாயில் எ கேர்ள் ஒன்லி ஒன்ஸ், யூ டோண்ட் ஸ்பாயில் ஹர் எ செகண்ட் டைம். (ஒரு பெண் கெடுவது ஒரு முறைதான். இரண்டாம் முறை அவள் கெடுவதில்லை)'' என்று கூறினான் நகைப்பின் ஊடே.

''பிகாஸ் ஷீ இஸ் ஆல்ரெடி ஸ்பாயில்ட் (அவள் ஏற்கெனவே கெட்டு விட்டதால்)'' என்று ஒத்துப் பாடினான் இங்க்லண்ட்.

அனந்தும் அவர்களுடன் சேர்ந்துகொண்டு ''யூ ஆர் போத் ரைட் (நீங்கள் இருவரும் சொல்வது சரி)'' என்று கூறினான்.

''எது ரைட்?'' என்று வெடித்தார் பந்த்.

''எந்தப் பெண்ணும் ஒரு முறைக்கு மேல் கெட முடியாது என்பது!'' என்றான் அனந்த்.

''என் பெண்ணைப் பற்றிப் பேசுகிறாய்.''

''துவங்கியது நீங்கள்.''

''அவள் இங்கு வந்ததால் நானும் வந்தேன்.''

''அதனால்?''

''வந்தும் காணவில்லை.''

''கண்டுபிடிப்பதை நானும் தடுக்கவில்லை.''

''முதலில் அறையைவிட்டு வெளியே வா.''

''நான் என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி யாரும் உத்தரவிட முடியாது!'' இதைச் சொன்ன அனந்த் தன் வலது கையிலிருந்த துப்பாக்கியை உற்றுப் பார்த்தான். அத்துடன் கடுமையான குரலில் பேசவும் முற்பட்டு, ''ராணி இங்கு இல்லை. அதைப் பார்த்தாகி விட்டது. என்னை நிம்மதியாக உறங்கவிடுங்கள். அல்லது...'' வாசகத்தை முடிக்காமலே விட்டான். மேலும் சொன்



னான்: ''யூ த்ரீ ஜெண்டில்மென்! பேக் டு யுவர் ஷிப் (கனவான்களே! நீங்கள் உங்கள் கப்பலுக்கு விரையுங்கள்)'' என்றான்.

அதற்குமேல் அங்கு தங்குவதில் பயனில்லை என்று உணர்ந்த டெய்லரும் இங்க்லண்டும் திரும்பிச் சென்றார்கள், சிந்து துர்க்கத்தின் வாயிலை நோக்கி. ஸில்வர் சிறிது தாமதித்தான். அவன் கண்கள் அனந்தின் இரு கரங்களுக்கும் கீழே விரிந்து கிடந்த பாயை உற்று நோக்கியது. பிறகு அவனும் திரும்பிச் சென்றான். சிந்து துர்க்கத்தின் துறையை வேகமாக அடைந்த ஸில்வர், படகில் ஏற இருந்த டெய்லரையும் இங்க்லண்டையும் சைகை காட்டி நிறுத்தினான். ''யூ ஆர் போத் ஃபூல்ஸ். எ உமன் கெனாட் வானிஷ் இன் டு தின் ஏர் (நீங்கள் இருவரும் முட்டாள்கள் எந்தப் பெண்ணும் அந்தர்த் தானமாக முடியாது)'' என்று எச்சரித்தான்.

டெய்லரின் கோபம் உச்ச நிலையை அடைந்தது. ''யூ கோ அண்ட் ஃபைண்ட் ஹர் (நீ போய் அவளைக் கண்டுபிடி)'' என்று கூறிவிட்டுப் படகில் ஏறி, ''இங்க்லண்ட்! யூ கம் வித் மீ...லெட் அவர் டிடெக்டிவ் ஃபைண்ட் த ஸீக்ரெட் (இங்க்லண்ட்! என்னுடன் வா. நமது துப்பறியும் நிபுணர் ரகசியத்தைக் கண்டுபிடிக்கட்டும்)'' என்றும் சொல்ல இங்க்லண்டும் படகில் ஏறிச் சென்று விட்டான். அவ்விருவரையும் தாங்கிய படகு காஸண்ட்ராவை நோக்கி விரைவதைக் கண்ட ஸில்வர், படித்துறையில் தீர்க்க சிந்தனையுடன் நின்றான் நீண்ட நேரம். அவன் திரும்பிப் பழையபடி சிவாஜி சிலையின் பக்கத்து அறைக்குத் திரும்பியபோது துலாஜி பத்தடி தூரத்தில் சென்று கொண்டிருந்தான். ''துலாஜி! தளபதி எங்கே?'' என்று வினவினான் ஸில்வர்.

''மாளிகைக்குப் போய்விட்டார்'' என்று கூறிய துலாஜி, ஸில்வரை லட்சியம் செய்யாமல் நடந்துவிட்டான்.

ஸில்வர் நின்ற இடத்தில் சிறிது நேரம் நின்றான். துலாஜியின் தலை மறைந்ததும் தனது தடியை ஓசைப்படாமல் ஊன்றிக் கொண்டு அறையை நோக்கி நடந்தான். அறையை அடைந்ததும் மெள்ள சாவித் துளை மூலம் எட்டிப் பார்த்தான். துளையில் ஒரு துணி நன்றாக அடைக்கப்பட்டிருந்ததால் ஏதும் கண்களுக்குத் தெரிய வில்லை. ஆகவே மெள்ளத் தனது தோளின் மீதிருந்த கிளியை

எடுத்துப் பூட்டின் துளை மீது விட்டு ஜாடை காட்டவே, அது தனது அலகைச் செலுத்தி ஒரு சிறு துணியை வெளியே இழுத்தது. ஸில்வர் மீண்டும் துவாரத்தில் ஒரு கண்ணை வைத்துப் பார்த்தான். அவன் முகத்தில் வியப்பு விரியவில்லை. உற்சாகத்தின் சாயையே மிகுந்திருந்தது.

அறைக்குள் சங்கர் பந்த் நின்றிருந்தார், அனந்துடன். அனந்த் அவரை நோக்கித் தரையைக் காட்டினான். பிறகு பாயைச் சுருட்டி ஒரு மூலையில் வைத்தான். பாயின் கீழே இரண்டு இரும்பு வளையங்கள் இருந்தன. அனந்த் தரையில் உட்கார்ந்து இரு வளையங்களையும் பிடித்துச் சுழற்றக் கீழே இருந்த வட்டமான பாறாங்கல்லும் திரும்பியது. மும்முறை அப்படிச் சுற்றியவுடன் பாறாங்கல் கையுடன் வந்துவிடவே, அதை எடுத்து அப்புறம் வைத்தான் அனந்த். பிறகு அவன் ஏதோ சொல்ல முற்பட்டதால் கண்ணை அகற்றித் துளையில் காதை வைத்துக் கொண்டான் ஸில்வர்.

அனந்த் மிக நிதானமாகப் பேசினான்: ''பந்த்! ஆத்திரக் காரனுக்குப் புத்தி மட்டு என்பதைக் காண்பித்து விட்டீர்கள். உமக்கு உமது மகளிடமும் நம்பிக்கையில்லை, என்னிடமும் நம்பிக்கை யில்லை. ஆகையால்தான் உமது துர்ப்புத்தியைப் போக்க, மீண்டும் எனது திட்டங்களில் தலையிடாதிருக்க சிந்து துர்க்கத்தின் ரகசியத்தை உமக்குக் காட்டுகிறேன். சிந்து துர்க்கத்திலிருந்து பாண்டவ கட்டுக்குச் சுரங்கவழி இருப்பதை *சிட்னிஸ் பகாரிலிருந்து அறிந் தேன். அதை வந்தவுடன் பல முறை தேடிப் பார்த்து வழி எங்கிருக் கிருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டேன். அது பல காரியங்களுக்கு உபயோகப்பட்டது. முதலில் நான் மறைய உபயோகப்பட்டது. இப்பொழுது ராணி மறைய உபயோகப்பட்டது.

இந்தச் சுரங்க வழியில்தான் முந்திய முறை நான் சென்றேன். இன்று ராணி சென்றிருக்கிறாள். இது மட்டுமல்ல, இந்தப் பக்கத்துச் சுவரில் உள்ள ஒரு கல்லை அகற்றினால் அடுத்து சிவாஜி சிலை இருக்கும் அறைக்குச் செல்லலாம். அப்படிச் சென்றுதான் ஒரு முறை சிவாஜிக்குப் பின்னால் மறைந்து நின்று சுட்டு, துலாஜி எதிரிகளைத் துரத்தினான். இதுதான் சிந்து துர்க்கத்தின் ரகசியம். இது நீண்ட

* சிட்னிஸ் பகார் என்பது மகாராஷ்டிர சரித்திரக் குறிப்புகள்.



நாளாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இன்று உமது சந்தேகத்தாலும் அவசரத்தாலும் அவநம்பிக்கையாலும் வெளிப்பட்டு விட்டது'' என்று விவரித்தான்.

சங்கர் பந்த் பதிலேதும் சொல்லவில்லை. கீழே தெரிந்த சுரங்கத்தைப் பார்த்துக் கொண்டு அச்சம் துலங்கிய கண்களுடன் நின்றார். ''தளபதியான எனக்கே இது தெரியாது!'' என்று வருத்தத் துடன் முணுமுணுத்தார். அந்தச் சமயத்தில் அனந்தின் புருவங்கள் திடீரென மேலே ஏறின. ''வெளியே யாரோ இருக்கிறார்கள்'' என்று கூறிக் கதவை நோக்கி வந்தான். ''இல்லை வெறும் பிரமை'' என்று கூறிக்கொண்டு திரும்பினான் சங்கர் பந்தை நோக்கி.

இதற்கு மேல் ஸில்வர் கதவருகே நிற்கவில்லை. மெதுவாகக் கைத்தடியை ஊன்றிச் சென்றான் சிந்துதுர்க்கத்தின் வாயிலை நோக்கி. அங்கிருந்த படகொன்றைத் தளையிலிருந்து அவிழ்த்து விட்டு அதில் ஏறித் துடுப்புகளைத் துழாவிப் பாண்டவ கட்டை நோக்கி மிக வேகமாகச் சென்றான். 'அனந்த்! ஸில்வருடன் விளையாடுவது ஆபத்து என்பதை விரைவில் புரிந்து கொள்வாய்' என்று குதூகலித்துத் தனக்குத் தானே பேசிக் கொண்டான். பாண்டவகட்டை அடைந்ததும் தரையில் குதித்து நேராகப் பழைய தென்னஞ்சோலையை நோக்கிச் சென்றான்.

கடல் இருந்த கொந்தளிப்பாலும் காற்றாலும் அதை அவன் அடைய சரியாக அரை ஜாம நேரம் பிடித்தது. மறுபடியும் விஷயம் கையைவிட்டு மீறவில்லையென்ற துணிவில் சோலைக்குள் நுழைந்தான் மிகுந்த எச்சரிக்கையுடன். அவன் முயற்சியும் எச்சரிக்கையும் வீண் போகவில்லை. அந்தப் பழைய முந்திரிக் கிளையில் ராணி உட்கார்ந்திருந்தாள், அடுத்து வரும் ஆபத்தை உணராமல்! அங்கு நுழைந்தது ஸில்வர் மட்டுமல்ல. வேறு பக்கத்திலிருந்து மற்றும் இருவரும் நுழைந்தார்கள். அப்பொழுது ராணி தனது இனிய குரலில் பாடவும் துவங்கினாள். என்ன காரணத்தாலோ அது சோக கீதமாக அமைந்தது!

## அத்தியாயம் - 51

# சோலையில் சொர்க்க கீதம்!

அமைதி மிகுந்த அந்த இரவில், பெருங்காற்று திடீரென்று அடங்கிச் சுகமான தென்றல் லேசாக வீசியதால் மரங்களில் இலைகள் அசைந்து உராய்ந்து கூட்டிய இன்ப சுருதியில், கடல் கூட ஓரளவு அடங்கி அலைகளைத் தரையில் மோதி சுகமாகத்தாளம் போட்ட சூழ்நிலையில், ரத்னாவின் ரமணீயமான குரல் அந்தச் சோலையையே இன்பமயமாக அடித்துக் கொண்டிருந்தது. இத்தனைக்கும் அவள் தன் உதடுகளை அதிகமாகத் திறந்தோ குரலை அதிகமாக உயர்த்தியோ பாடவில்லை. அளவுடன் அதரங்கள் திறந்தன. செண்பக மொட்டைப் பழிக்கும் ராசி சில சமயங்களில் எழுந்தும் தாழ்ந்தும் 'உம்'காரத்தை ஓங்காரம் போல் ஒலிக்கச்செய்தது. அதரங்களில் உதிர்ந்த சொற்கள் திட்டமாகத் துலங்கவில்லைதான். அப்படித் துலங்காமல் இருந்ததிலேயே அவள் கீதத்தில் ஒரு அழகு இருந்தது, அலங்காரம் இருந்தது, இதயத்தைத் தொடும் இன்பமும் வேகமும் இருந்தது.

அந்தக் கீதத்தைக் கேட்டவர்கள் இசை மேதைகளாயிருந்தால் ராணியின் இன்ப கானத்தைப் பருகியிருக்கமாட்டார்கள். அந்த அகாலத்தில் அவள் பாடியது கர்னாடக மோகனமா வடநாட்டு 'பூப்' பா, இரண்டும் கலந்த கதம்பமா என்ற ஆராய்ச்சியில் இறங்கியிருப்பார்கள். சில சமயங்களில் அதிக ஆராய்ச்சியும் சுகத்தைக் கெடுத்து விடுகிறது என்ற உண்மையை அறிந்திருக்கமாட் டார்கள். 'அதி ஸர்வக்ரவர்ஜயேத்' (அதிகப்படியை எல்லாவற்றிலும் கைவிடு)' என்ற சாஸ்திர வாக்கியத்தையும் லட்சியம் செய்திருக்க மாட்டார்கள்.

இசையின் நுணுக்கங்களை அறிந்தவன் அதை அனுபவிக்க வேண்டும் என்ற நியதி சிருஷ்டியில் கிடையாது. 'சிசுர் வேத்தி, பசுர் வேத்தி, வேத்தி கசன ரஸம் பணி' (குழந்தை அறியும், மிருகம் அறியும், நல்ல பாம்பறியும்) என சங்கீதத்தின் சிறப்பு கூறப்படுகிறது.



கேட்டவர்களுக்கு மட்டுமல்ல இந்த விதி, பாடுபவர்களுக்கும் உண்டு. குயில் தனது குரல் அறிந்து கூவவில்லை. சுழன்றடிக்கும் புயல் வேதத்தின் அஸ்திவாரமான பிரணவத்தை அறிந்து 'ஓம்' காரத்தைக் கிளப்பவில்லை. இயற்கை அளித்த சக்தி இவற்றை உருவாக்குகிறது. அதில் சுகமிருக்கிறது. அதை எல்லோருமே அனுபவிக்கிறார்கள்.

ஆகவே மிகக் குரூரமான ஸில்வர்கூட ராணியின் அந்த இன்ப கீதத்தில் கை கால்களில் விலங்கு போட்டவன் போல் நின்று விட்டதிலோ, இன்னொரு புறம் தோப்பில் நுழைந்த மற்ற இருவரும் கூடத் திடீரெனப் பக்கத்து மரங்களில் பதுங்கிப் பதுமைகளென ஸ்தம்பித்து விட்டதிலோ என்ன விந்தை இருக்கமுடியும்? அந்த மூவரில் ஸில்வரே அதிகமாக இசையில் திளைத்துத் தனது தடியைக் கட்கத்தில் நன்றாக அழுந்தவிட்டு ஒரு காலைத் திடமாக ஊன்றிக் கொண்டு பிரமை பிடித்து நின்றான்.

கொள்ளைக்காரனாக இருந்தாலும் ஸில்வரும் நன்றாகப் பாடக்கூடியவன். அவனது 'யோ ஹோ ஹோ அண்ட் எ பாட்டில் ஆஃப் ரம்'' என்ற உணர்ச்சிப் பாட்டு எத்தனையோ கொள்ளைக் காரர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டிருக்கிறது. அனந்த் கூட அதில் மயங்கியவன்தான். அவனே முதலில் காஸண்ட்ராவுக்குச் செல்லும்போது ஸில்வரைப் பாடத் தூண்டியிருக்கிறான். ஸில்வர் திரும்பத் திரும்ப அந்தப் பாட்டைப் பாடும்போது கொள்ளைக் காரர்கள் ஆடுவார்கள். உடன் பாடுவார்கள், உணர்ச்சி மிகுந்து சுயநிலை இழப்பார்கள். அத்தகைய வெறியூட்டும் பாட்டு ஸில்வரின் பாட்டு.

ஆனால், தன் சங்கீதத்தைவிட மிக இன்பமான சங்கீதம் உலகத்தில் உண்டு, கொள்ளைக்காரனான தன்னையும் ஈர்க்கும் சக்தி அதற்கு உண்டு என்பதை அன்று ஸில்வர் அறிந்தான், பாண்டவ கட்டின் தென்னஞ்சோலையில், 'இரக்கமற்ற இந்தக் கொள்ளைக் காரிக்கு இத்தகைய சங்கீதம் எப்படி வந்தது?' என்று தன்னைத் தானே வினவிக் கொண்டான் ஸில்வர், தான் இரக்கத்தின் அவதாரம் போல.

அவள் 'ஹூங்கார' கீதம் மெள்ள மெள்ள உச்சஸ்தாயியை எட்டிக் கொண்டிருந்தது. அவள் பங்கஜ முகத்திலிருந்து விழிவண்டு கள் கீழே இருந்த அதரத் தேனை அருந்தும் எண்ணத்துடன்

தாழ்ந்தன. ஆனால், அசைந்த இதழ்கள் நன்றாகத் திறக்கவே, திறந்த கண்டத்திலிருந்து அடக்கி வெளியே விடப்பட்ட நாதம் சோலையில் சுழலவே, விழி வண்டுகள் மேலே ஏறி அவளுக்கு மயக்கத்தை அளித்தன.

அவள் சாரீரத்திலிருந்து அடக்கத்துடன் வந்ததாலேயே, அடக்கமுள்ள பருவப் பெண்ணின் வசீகரம் போலவே அதிக வசீகரத்தைப் பெற்ற மோகன ராகம் சோலையைச் சுற்றிக் கொண்டது. அளவோடு கூடிய சஞ்சாரம், அளவை மீறாமலேயே மின்னல்போல் அவ்வப்போது வெளிப்பட்ட பிருகா, எல்லாம் பெரு மயக்கத்தை அளித்தன கேட்டவர்களுக்கு. அதை அவளும் அனுபவித்திருக்க வேண்டும். கண்களை அவள் மூடிக் கொண்டாள் பல விநாடிகள்.

கண்களை மூடுவதற்கு வேதாந்தம் சொல்லும் காரணம், பார்வையை உள்ளே திருப்பி ஆத்மாவையும் அந்தராத்மாவான பரமாத்மாவையும் பார்ப்பதற்கு என்பது. அது தெரிந்தோ தெரியாமலோ கண்களை மூடியதும் ரத்னாவின் ஆத்மாவிலிருந்து சங்கீதம் பிரவகித்தது. உலகை மயக்கும் உன்னத சாரீரம்; அது உன்மத்தத்தை அளிக்கவில்லை; ஏதோ பெரும் சாந்தியை அளித்தது.

அந்தச் சாந்தியே சங்கீதத்தை இயக்கியதால் சங்கீதம் சங்கீதமாகவே இருந்தது. அவள் ஆத்ம உணர்ச்சிகளைக் கீதத்தின் மூலம், இதய ஒலியின் மூலம் அவள் கொட்டினாள். சோகமான கீதம் தான்; சோகத்திலும் சுகம் இருக்க முடியும் என்பதற்குச் சான்றாக விளங்கியது அவள் கீதம். 'எல்லோருக்கும் விடிவுகாலம் உண்டு. விடிவு வராது போவதும் உண்டு' என்று பொருள்படும்படியாக சம்ஸ்கிருத சுலோகம் ஒன்றையும் ராகத்துடன் இணைத்து, ஓட்டினள் ரத்னா, தனது சுகபாவ சங்கீதத்தில். சோக முத்திரை பதியப் பதிய ராக வேகமும் அதிகமாகவே அவள் சுய உணர்வை இழந்தாள். ரதி விலாஸத்துக்கே ஏற்பட்டது போன்ற அவள் ரம்ய சரீரம் இசையுடன் இணைந்து, தென்றலால் அசங்கிய மரக்கிளை போலவே அப்படியும் இப்படியும் வெகு லேசாக ஆடியது.

காற்றில் கிளைகள் ஆடும்போது கிளைகள், இலைகள், புஷ்பங்கள், பழங்கள் அனைத்துமே ஆடுவதுண்டு. அப்படி ஆடும் போது பழுத்த இலைகளும் பழுங்களும் உதிர்ந்து விடுவதும் உண்டு.



ஆனால் இசைக் காற்று அந்த இயற்கை நியதிக்கு விலக்கு என்பதை ரத்னா நிரூபித்தாள். கொடி போன்ற அவள் மேனி இசையால் ஆடியபோது பழங்கள் ஆடவில்லை. அசைந்தன, மயக்கமூட்டும் வகையில். பங்கய வதன மலரின் இதழ்கள் உதிரவில்லை, அசைந்தன, திறந்தன. மூடிய கண்களைச் சற்று மேலே வளைந்த புருவ விற்கள் காத்து நின்றன. சுருதி மேலே ஏறியபோது அவையும் ஏறி வளைந்தன. வளைந்து வாளாவிருக்கவில்லை. ஐந்து பூங்கணைகளை வீசவும் செய்தன.

இப்படி அசைந்தாடி மேல் ஸ்தாயியில் பஞ்சமத்திலேயே நின்று சுழன்று ரீங்காரம் செய்த அவள் சாரீரம், அதிலிருந்து விரிந்த சோகம் இரண்டும், சோலையை அசைத்திருக்கவேண்டும். இலைகள் தங்கள்மீது உறைந்து கிடந்த பனித் துளிகளைக் கண்ணீர்த் துளிகளாக உதிர்த்தன. காற்றில் அவள் கீதத்துக்கு மரம் அசைந்ததால் சரேலென்று அவள் கன்னத்தில் விழுந்து மடியில் தஞ்சமடைந்த செக்கச் செவேலென்று கிடந்த முந்திரிப் பழமொன்று அவள் வெள்ளைச் சேலைக்குத் தனி அழகு கூட்டியது. அவள் மடியில் அது சிவந்து விழுந்து கிடந்ததால் விஷய வேட்கைக்கும் ஓரளவு இடம் கொடுத்தாலும், தெய்வீகமான ராக சஞ்சாரம் அதைத் திரையிட்டு மறைத்தது.

அந்த ராகத்தைக் கேட்டுக்கொண்டு ஸ்தம்பித்து நின்ற ஸில்வர் தனது தடியை மெள்ளக் கீழே வைத்துவிட்டுத் தரையில் உட்கார்ந்தான். தூரத்தே மரங்களில் பதுங்கியிருந்தவர்களும் அப்படியே மணலில் உட்கார்ந்தார்கள். சோலையின் மூன்றும் பக்கத்திலிருந்த புதரிலிருந்து வெளியே வந்த வேறு இருவரும் அங்கிருந்த முந்திரிக் கிளை ஒன்றில் அமர்ந்தார்கள். அவர்களில் ஒருவர் குரலும் மெள்ள அசைந்தது மந்தரத்தில், அந்த மந்தரம் ரத்னாவின் மேல் ஸ்தாயிக்கு அஸ்திவார பீடம் அளிக்கவே, இரண்டும் சேர்ந்து இழைந்தன. அந்த மற்றொரு சாரீரம் இணைந்ததை யாரும் கவனிக்கவில்லை. அத்தனை சாமர்த்திய மாகவும் படிப்படியாகவும் லகுவாகவும் அந்த ஆதார சுருதி கூட்டப்பட்டது. அது மிகுந்த எச்சரிக்கையுடன் எழுந்து ரத்னாவின் கண்டத்வனியுடன் கலந்து விட்டதால் கலந்தது தெரியவில்லை. சரியான வித்வான் மோகனத்தில் பூப் கலப்பதைப் போல, தெரிந்தால்தான் என்ன? சுகம்தானே முக்கியம்? 'ஸுகமூலேனி

ஸங்கீத மெந்துகு?' என்ற தெலுங்கு வாக்கியம் அர்த்தம் இல்லாமலா அமைந்தது?

சுகத்துடன் இணைத்த அந்த இரு சாரீரங்களும் இரண்டறக் கலந்ததால் ஒரே சாரீரம் மேல் ஸ்தாயியிலும் கீழ் ஸ்தாயியிலும் ஒரே காலத்தில் இயங்குவதைப் போன்ற பிரமை ஏற்பட்டது கேட்டவர்களுக்கு.

அந்தச் சங்கீத சுகத்தில் வந்த காரியத்தை மறந்தான் ஸில்வர். அவன் தோளிலிருந்த கிளிகூடச் சிறிதளவும் சத்தம் செய்யாமல் பதுமைக் கிளியென உட்கார்ந்திருந்தது. அதன் கண்கள்கூட மூடிக் கிடந்தன. அதன் அசுரத்தன்மை எங்கோ ஓடிவிட்டது. அதன் பஞ்சவர்ண இறக்கைகள் கெட்டியாக உடலில் ஒட்டிக் கிடந்தன. அசுரத் தன்மை சுஸ்வரத்துக்கு அடங்கிவிட்டதை மற்ற பட்சி ஜாலங்களும் உணர்ந்திருக்க வேண்டும். அந்தச் சோலையில் வழக்கமாக அலறும் ஆந்தைகூட அன்று அலறவில்லை. எங்கும் நிம்மதி. எங்கும் ஒரே சுகம். இயற்கை அளித்த இரு சுக சாரீரங்கள் இணைந்து சோலையில் சொர்க்கத்தைச் சிருஷ்டித்தன.

ஆனால் எந்தச் சுகத்துக்கும் ஓர் அளவும் முடிவும் உண்டல்லவா? அதற்குத் திருஷ்டாந்தம் போல் இன்னொரு படகும் வந்து அடைந்தது பாண்டவ கட்டை. அதிலிருந்து இறங்கினான் ஒரு புது மனிதன்.

சிறிது நேரம் கரையில் நின்று நாற்புறமும் நோக்கினான். பிறகு தலையை ஆட்டிக்கொண்டு சோலையை நோக்கி நடந்தான். அவனும் சங்கீதத்தைக் கேட்டான். ஆனால், அது அவனை இம்மியும் தொடவில்லை என்பதை அவன் முகம் நிரூபித்தது. பயங்கர முகம். கொலைக் குணம் அதில் குடிகொண் டிருந்தது!

அத்தியாயம் - 52

# மூன்றாவது சக்தி!

படகோட்டி கூட யாரும் இல்லாமல் தானே படகின் துடுப்புகளைத் துழாவித் தன்னந்தனியாகப் பாண்டவ கட்டின் கரையை அடைந்த அந்த மனிதன், ராக்ஷஸர்கள் கலியுகத்திலும் மறையவில்லையென்பதை ருசுப்படுத்தவே வந்தவன் போல் தோற்றமளித்தான். ஆறடிக்கும் அதிகமான உயரத்துடன் மூன்றரை அடிக்குக் குறையாத சுற்றளவுடன், பிரும்மாண்டமாக அசல் மாமிசப் பிண்டமாகக் காட்சியளித்தாலும் அவன் தரையில் குதித்த வேகத்திலிருந்தும், நின்று நாற்புறமும் உடலைத் திருப்பி வளைத்துப் பார்த்த நிலையிலிருந்தும் அவன் மாமிசம் வெறும் ஊளைச் சதையல்ல என்பதும் நன்றாகக் கெட்டிப்பட்ட, இரும்பை யொத்ததென்பதும் சந்தேகமறத் தெரிந்தது.

அப்படி நாற்புறமும் பார்த்த அவன் கண்களில், காதில் புகுந்த சங்கீதத்தின் விளைவாகச் சிறிது வெறுப்பும் தெரிந்தது. அவன் முகத்தில் வளர்ந்த முகவாய்க் கட்டையில் அடர்த்தி பெற்ற தாடி நறுக்கென்று கத்திரித்து விடப்பட்டிருந்தாலும், அதை அவன் ஒரு கையால் தடவியபோது அவன் மூளையில் முக்கால்வாசிப் பாகம் தாடியில் புதைந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு இடம் கொடுத்தது. அவன் தாடியை இடது கையால் தடவிக் கொண்டபோது சிந்தனை வசப்பட்ட கண்களும், இடையிலிருந்த இரு பெரும் கைத்துப்பாக்கிகளையும் நடுவிலிருந்த குத்துவாளையும் அவன் வலக் கையால் தடவிக் கொண்டபோதும் அவன் உதடுகள் அசைந்த விதத்திலிருந்தும், அவன் உள்ளத்தில் கொலை உணர்ச்சி பரவிக் கிடந்ததென்பது சந்தேகமறப் புலனாயிற்று.

இப்படிச் சில விநாடிகளே நின்றுவிட்டுச் சோலையை நோக்கி நடந்த அந்த மனிதன், அடிக்கடி முகத்தில் வெறுப்பைக் காட்டினான். ''இந்த இரவில் யார் இப்படிக் கத்துவது?'' என்றும் கேட்டுக் கொண்டான், தனக்குத் தானே சற்று இரைந்து. இத்தகைய

உணர்ச்சிகளுடன் சோலைக்குள் புகுந்தவன் சோலையின் முன் பகுதியில் கிளியுடன் உட்கார்ந்திருந்த ஸில்வரைக் கண்டான் முதலில். ராணியின் சங்கீதம் அப்போது ராகப் பிரஸ்தாரத்திலிருந்து ஏதோ ஒரு பஜன் கீதத்தில் ஈடுபட்டு லயத்துடன் அசையத் தொடங்கவே, ஸில்வரும் அதற்கேற்ப அசையத் தொடங்கியதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அந்தப் புது மனிதன் ஸில்வரைத் தனது கால் செருப்பால் உதைத்தான் ஒரு முறை. அந்த உதையையும் லட்சியம் செய்யாத ஸில்வர் அவன் காலைக் கையால் எடுத்து அப்புறம் தள்ளிவிட்டு மீண்டும் இசைக்கு அசையலானான். இதனால் வெகுண்ட அந்தப் பிரும்மாண்ட மனிதன் மறுபடியும் காலால் சற்றுப் பலமாக உதைத்தான் ஸில்வரை!

அப்பொழுதும் திரும்பாத ஸில்வர் தனது வலது கையால் அவன் கணுக்காலைப் பிடித்து ஒரு திருகுத் திருகித் தள்ளிவிடவே, அந்த மனிதன் தடாலென்று மணலில் விழுந்தான். விழுந்ததால் பெரிதும் வெகுண்டு எழுந்திருந்து கையிலிருந்த பிச்சுவாவை எடுத்து ஸில்வர் மீது வீச முயன்ற சமயத்திலும் ஸில்வர் எழுந்திருக்க வில்லை. அவனது வலது கை பின்னோக்கித் திரும்பியது. அதிலிருந்து ஒரு கைத்துப்பாக்கி மிகப் பயங்கரமாக விழித்தது. அந்தப் பயங்கர மனிதனை நோக்கி. எதிர்பாராத விதமாக ஏற்பட்ட இந்தத் திருப் பத்தால் வியப்பும் எரிச்சலும் கலந்த சாயையை முகத்தில் படர விட்டுக் கொண்ட அந்த மனிதனை நோக்கியிருந்த ஸில்வரின் கைத்துப்பாக்கி அவனை அருகில் வருமாறும் உட்காருமாறும் சைகை செய்தது.

சைகையில் இருந்த உறுதியைக் கண்ட அந்த மனிதன் வேறு வழியின்றி ஸில்வரின் பக்கத்தில் உட்கார்ந்தான். ''யூ மஸ்ட் பீ ஸில்வர்'' என்றான் ஆங்கிலத்தில். அவன் பேசியதால் சற்றே சங்கீத ஈடுபாடு குறையவே பக்கவாட்டில் திரும்பி அவனை நோக்கிய ஸில்வர், ஷ்யூர் ஐ ஆம் ஸில்வர் அண்ட் யூ மஸ்ட் பீ ஔரங்கசீப் (நான் ஸில்வர்தான், நீ ஔரங்கசீப்பாக இருக்கவேண்டும்)'' என்றான்.

''ஔரங்கசீப் ஈஸ் டெட் லாங் அகோ (ஔரங்கசீப் இறந்து வெகு நாளாகிறது)'' என்றான் அந்த மனிதன்.

''ஐ டோண்ட் திங்க் ஸோ ஸின்ஸ் யூ ஆர் ஹியர் (நான் அப்படி நினைக்கவில்லை. நீ இங்கு வந்திருப்பதால்)'' என்ற ஸில்வர்,



''நௌ கீப் கொய்ட் டில் தட் ம்யூஸிக் ஈஸ் ஓவர் (அந்தப் பாட்டு முடியும் வரை சும்மா இரு)'' என்றான் கண்டிப்பான குரலில்.

''ஐ டோண்ட் லைக் திஸ் நாய்ஸ் (இந்தச் சத்தம் எனக்குப் பிடிக்கவில்லை)'' என்றான் அந்த மனிதன்.

அவன் மேலும் பேசியிருப்பான். ஆனால் ஸில்வர் தனது விழிகளை ஒரு விநாடி திருப்பி, கைத்துப்பாக்கியையும் அவன் வயிற்றில் அழுத்தி, ''யூ ஸே அனதர் வேர்ட், ஐ வில் ஷூட் யூ லைக் எ டாக் (இன்னும் ஒரு வார்த்தை பேசு, நாயைச் சுடுவது போல் உன்னைச் சுட்டுவிடுவேன்)'' என்று கூறிவிட்டுக் கைத்துப் பாக்கியை மட்டும் அவன் வயிற்றிலேயே ஊன்றிக் கொண்டு சங்கீதம் வந்த திசையை நோக்கித் திரும்பினான். மீண்டும் அசையலானான்.

அப்படி அவன் அசைந்தபோதும் அவன் அழுத்திய கைத் துப்பாக்கி மட்டும் திடமாக இருக்கவே, வந்த மனிதன் ஸில்வரின் மூளை ஏக காலத்தில் பல இடங்களில் லயிக்க முடியும் என்பதை யும், எத்தனை இடங்களில் லயித்தாலும் ஒவ்வோர் இடத்திலும் அதன் முழு உணர்ச்சி விலகாதென்பதையும் சந்தேகமறப் புரிந்து கொண்டான்!

சுமார் இரண்டு நாழிகைகள் கழித்து ராணியின் சங்கீதம் படிப்படியாக இறங்கத் தொடங்கியது, அழகான யுவதி ஒருத்தி படிகளில் மெள்ள மெள்ள இறங்கி வருவதைப் போல. இறங்கிய ஒவ்வொரு படியிலும் மென்மை இருந்தது. சுகபாவம் இருந்தது, இப்படி மெதுவாக இறங்கி இயற்கையின் சுருதியுடன் கலந்து நின்றதும், இசையில் மயங்கியவர்கள் சுயநிலை அடையப் பல விநாடிகள் பிடிக்கத்தான் செய்தன.

முதலில் தூரத்தே மரத்தில் மறைந்த இருவர் எழுந்திருந்து தங்கள் கைகளில் துப்பாக்கிகளை ஏந்திகொண்டு ராணி இருந்த இடம் நோக்கி நடந்தார்கள், மெதுவாகவும் எச்சரிக்கையுடனும். ஸில்வரும் எழுந்திருந்தான் புதிதாக வந்திருந்தவனுடன். ''ஹூ த டெவில் ஆர் யூ? (நீ யார்)'' என்று கேட்டான், கைத்துப்பாக்கியை அந்தப் பெரும் தொந்தியிலிருந்து அகற்றி.

அவன் ஆங்கிலத்தில் பதில் சொல்லவில்லை. நல்ல அழகான உருதுவில் பேசினான். ''நான் ஸாத் ஸித்தியின் வலது கை''என்று.

''அப்படித்தான் இருக்க வேண்டும்'' என்றான் ஸில்வரும் நல்ல உருதுவில்.

''நீ நன்றாக உருது பேசுகிறாய்'' என்று குதூகலித்தான் புது மனிதன்.

''அது அழகான மொழி. எந்த அழகான மொழியும் எனக்குப் பிடிக்கும். அது கிடக்கட்டும், உன் பெயர் என்ன?'' என்று விசாரித்தான் ஸில்வர்.

''ஸித்தி அஹமத்'' என்றான் வந்தவன் பெருமையுடன். தொடர்ந்து ''இங்கு கடல் ராணி என்பது யார்?'' என்றும் கேட்டான் அவன்.

''அஹமத்!'' ஸில்வரின் குரலில் விஷமச் சாயை இருந்தது.

''ஏன்?''

''உனக்குச் சங்கீதம்...''

''பிடிக்காது.''

''அப்படியானால் கடல் ராணியையும் பிடிக்காது.''

''பிடிக்கும்.''

''ஏன்?''

''அவளைப் பிடித்துப் போக வந்திருக்கிறேன்.''

ஸில்வரின் கண்கள் அந்த மனிதனை வியப்புடன் நோக்கின. ''அது அத்தனை சுலபமென்று நினைக்கிறாயா?''என்று வினவின அவன் உதடுகள். அவற்றில் ஒரு விபரீத ஒலி இருந்தது.

''மற்றவர்களுக்குச் சுலபமில்லை. எனக்குச் சுலபம்.''

''எப்படி?''

''நான் பழிவாங்க வந்திருக்கிறேன்.''

''அவள் மீது உனக்கு ஏன் இத்தனை கோபம்?''

''நான்கு நாட்களுக்கு முன்பாக...'' என்று அஹமத் சிறிது நிதானித்தான்.

''சொல். பயப்படாதே... நான் உனக்கு உதவுகிறேன் ராணியைப் பிடிக்க'' என்றான்.



''நான்கு நாட்களுக்கு முன்பாக ஸாத் ஸித்தியின் கப்பல்களில் இரண்டை இவள் கொளுத்திவிட்டாள்'' என்றான் அஹமத். அவன் குரலில் பயங்கரம் பெரிதும் ஒலித்தது.

ஸில்வரின் முகத்தில் சிந்தனை படர்ந்தது ஒரு விநாடி. ''நிச்சயமாகவா?''என்றான்.

''நிச்சயமாக.''

''ஏன் கொளுத்தினாள்? எந்த இடத்தில்?''

''இங்கிருந்து ஒரு காத தூரத்தில், அவற்றிலிருந்து இரண்டு லட்சம் பெறுமான மோஹராக்கள் சூறையாடப்பட்டன.''

ஸில்வரின் விழிகள் நன்றாக மலர்ந்தன. ''கப்பல்கள் கொளுத் தப்பட்டால் மோஹராக்களை எப்படிச் சூறையாட முடியும்?'' என்று வினவினான்.

''முதலில் இரண்டு கப்பல்களும் வளைத்துக்கொள்ளப் பட்டன. பிறகு அவற்றின் பாய்மரங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன பீரங்கிகளால். அடுத்து அவற்றில் ராணியின் மாலுமிகள் ஏறினர். பலரை வெட்டினார்கள், அடித்தளத்திலிருந்த பணப் பெட்டிகளை எடுத்துச் சென்றார்கள்'' என்று விளக்கிச் சொன்னான் அஹமத்.

ஸில்வர் கேட்டான், ''அவர்கள் எல்லாம் மால்வானிகளா?'' என்று.

''சிலர் மால்வானிகள் அல்லது கொங்கணிகளாக இருக்க லாம். மற்றவர்கள் கொள்ளைக்காரர்கள்'' என்றான் அஹமத்.

ஸில்வரின் முகத்தில் தீர்க்காலோசனை படர்ந்தது. அவன் விழிகளில் வியப்புத் தாண்டவமாடியது. ''அஹமத்! உனக்கு உதவ நான் விரும்புகிறேன்'' என்று கூறிவிட்டு, ''உங்களை வளைத்த கப்பல்கள் எத்தனை?'' என்று வினவினான்.

''நான்கு'' என்றான் அஹமத்.

''உங்கள் கப்பல்களின் தலைவர் யார்?'' என்று ஸில்வர் கேட்டான்.

''நான் தான்.''

''நீ மட்டும் எப்படித் தப்பினாய்?''

''என் கப்பல்கள் தீப்பற்றியதும் கடலில் குதித்து நீந்திக் கரை சேர்ந்தேன். எனது மாலுமிகள் சிலரும் தப்பினார்கள்.''

''உங்களைத் தாக்கியது கடல் ராணிதான் என்பது எப்படித் தெரியும்?''என்று ஸில்வர் கேட்டான்.

அஹமத் சிறிதும் சிந்திக்காமல் ஆத்திரத்துடன் பதில் சொன்னான்,''எங்களைத் தாக்கிய கப்பல்களில் ஒன்று பெரிது. அதன் பக்கப் பலகையிலும்,பெரிதாக விரித்திருந்த பாய் ஒன்றிலும் 'கடல் ராணி' என்று எழுதியிருந்தது.''

ஸில்வரின் சந்தேகமெல்லாம் பறந்தது.''அஹமத்!கடல் ராணியைப் போரின்போது நீ பார்த்தாயா?''என்று வினவினான் நிதானமான குரலில்.

''இல்லை'' என்றான் அஹமத்; ஸில்வரின் கேள்விக்குக் காரணம் புரியாமல். அத்துடன் விளக்கினான். ''போருக்கு ராணி தான் வரவேண்டுமென்பதில்லை'' என்று.

''அவசியமில்லை'' என்பதை ஒப்புக் கொண்ட ஸில்வர், ''அந்தப் பெரிய கப்பலை நடத்திவந்த தலைவனைப் பார்க்க முடிந்ததா உன்னால்?'' என்று கேட்டான்.

''அந்த அயோக்கியனை எப்படிப் பார்க்காமல் இருக்க முடியும்? எங்கள் கப்பல்கள் எரிந்தபோது அவன் கப்பலில் நடுப் பாய்மரத்தில் சாய்ந்து நின்று சிரித்துக் கொண்டிருந்தான். அவன் வயதை நிர்ணயிக்க முடியவில்லை. வாலிபனைப் போல் இருந்தான். மிக அழகாகவும் இருந்தான்.பிரிட்டிஷ்காரர்களைப் போல், அதாவது உன்னைப் போல் குறுக்காக ஹாட் அணிந்திருந்தான். ஒரு கையிலிருந்த துப்பாக்கியைச் சதா காரணமின்றிச் சுழற்றிக்கொண் டிருந்தான்.''

''அவன் முகம் குழந்தை போல் இருந்திருக்க வேண்டும்'' என்றுன் ஸில்வர்.

''உண்மை!உண்மை! எப்படித் தெரிந்தது உனக்கு?''என்று அஹமத் கேட்டான்.

ஸில்வர் தனது கைத்துப்பாக்கியை இடையில் செருகிக் கொண்டு அஹமத்தின் தோளில் கையைப் போட்டுக் கொண்டு,



''அஹமத்! தட் மான் ஈஸ் த மோஸ்ட் டேன்ஜரஸ் ஃபெலோ அலைவ் (அவன் இப்பொழுதுள்ளவர்களில் மிக அபாயகரமானவன்)'' என்று கூறிவிட்டு ''வா! ராணியைச் சந்திப்போம்'' என்று உருதுவுக்குத் திரும்பினான்.

''நான் ஏன் சந்திக்க வேண்டும் அவளை?'' என்று அஹமத் கேட்டான்.

''அவளைத் தூக்கிப் போகத்தானே இங்கு வந்தாய்?''

''ஆம்.''

''சந்திக்காமல் எப்படித் தூக்கிப் போவது?''

''தூக்கிப் போக நேராகச் சந்திக்கலாமா?''

''சந்திக்கலாம். வா!''

''நீ சொல்வது புரியவில்லை!''

''புரியாதது ஏதுமில்லை. உங்கள் கப்பல்களைத் தாக்கியது ராணியின் கப்பல்கள் அல்ல.''

''வேறு யார்?''

''பிறகு சொல்கிறேன். வா என்னுடன்''என்ற ஸில்வர் அஹமதை அழைத்துக்கொண்டு ராணி இருந்த முந்திரி மரத்தை நோக்கிச் சென்றான்.

அங்கு ராணி உலகை மறந்து கண்களை மூடிக் கொண்டிருந் தாள். சற்று எட்ட முதலில் தோப்பில் புகுந்த இருவர் கைத்துப்பாக்கி களை அவள் மீது குறிவைத்து நின்றிருந்தார்கள்.

''அஹமத் ! உன் வீரர்களைத் துப்பாக்கிகளைக் கீழே போடச் சொல்'' என்றான் ஸில்வர்.

அஹமத் சைகை காட்ட அவ்விருவரும் துப்பாக்கிகளைக் கீழே போட்டார்கள். அந்தச் சமயத்தில் ஸில்வர் சற்று இரைந்து அழைத்தான்,''ராணி!''என்று. ராணி கண் விழித்தாள். ''இவர் உன்னைக் காண வந்திருக்கிறார்!'' என்றான் ஸில்வர் அஹமதைச் சுட்டிக் காட்டி.

ராணி காரணத்தைக் கேட்கவில்லை. கண்களை மட்டும் அஹமதை நோக்கி உயர்த்தினாள்.

''இவர் உனக்குச் செய்தி கொண்டு வந்திருக்கிறார்'' என்றான் ஸில்வர்.

''என்ன செய்தி?'' என்று மெள்ளக் கேட்டாள் ராணி.

''சிந்து துர்க்க நாடகத்தில் மூன்றாவது மனிதன் நுழைந்திருக்கிறான்.'' என்றான் ஸில்வர்.

''யாரது?'' என்று வினவினாள் ராணி.

பதில் அஹமதிடமிருந்து வரவில்லை; ராணிக்குப் பின்னால் சாருவுடன் நின்றிருந்த அனந்திடமிருந்து வந்தது.

அந்தப் பதிலில் ஒலித்த பெயர் அஞ்சா நெஞ்சனான ஸித்தி அஹமதையும் நடுங்க வைத்தது. சோலையிலிருந்த மற்றவர்களும் அதைக் கேட்டு நடுங்கவே செய்தார்கள்.

''உனக்கு எப்படித் தெரியும் அவன் கடலில் நடமாடுவது?'' என்று விசாரித்தான் ஸில்வர்.

அனந்த், ராணியை நோக்கி நடந்தான். அவள் மடியிலிருந்த முத்திரைக் கடிதத்தை எடுத்து நீட்டினான் ஸில்வரிடம். ''இதற்கு இனிமேல் அவசியம் இல்லை. முத்திரையை உடைத்துப் படித்துப் பார்'' என்றான்.

படித்தான் ஸில்வர். படித்து முடித்த அவன் முகத்தில் ஈயாடவில்லை. ''நாம் பெருத்த அபாயத்தில் இருக்கிறோம்,'' என்ற சொற்கள் அவன் இதழ்களிலிருந்து உதிர்ந்தன. ''இதைச் சமாளிப்பது எப்படி?'' என்றும் கேட்டான் அனந்தை நோக்கி.

''தந்திரத்துக்குப் பதில் தந்திரம் தான் வழி'' என்ற அனந்த், ''சிந்துதுர்க்க நாடகத்தில் மூன்றாவது சக்தி பிரவேசிக்கிறது!'' என்றும் கூறி அதைப்பற்றி விளக்கவும் முற்பட்டான்.

## அத்தியாயம் - 53

# லா பூஷே!

''ஆலிவர் லா பூஷே!'' என்ற அனந்தின் குரல் மிக நிதானமாகவும் அதே சமயத்தில் மிகவும் கடுமையுடனும் வந்ததும், அதுவரை ராணியின் சோக கீதத்தால் பரிமளித்த தென்னஞ் சோலையில் பெருத்த அபஸ்வரமொன்று குறுக்கிட்டு விட்டது போன்ற பிரமையும் எரிச்சலும் அனைவருக்கும் ஏற்பட்டன.

''ஆலிவர் லிவாஸியர் அவனது இன்னொரு பெயர்'' என்று ஸில்வர் எரிகிற கொள்ளியை ஏறத் தள்ளியதன்றி, ''உனக்கு எப்படித் தெரியும் அவன் கடலில் நடமாடுவது?''என்று கேட்டதும், பதிலுக்கு ராணியிடமிருந்து முத்திரைக் கடிதத்தை அனந்த் எடுத்துக் கொடுத்ததும்,எல்லோருக்கும் வியப்பாக இருந்ததென்றாலும் அதைப் படித்த ஸில்வரின் முகத்தில் சொல்லவொணாச் சினமே படர்ந்தது.

''கோபித்துப் பயனில்லை. இரைந்து படி, எல்லோரும் கேட்கட்டும்'' என்று அனந்த் மிகுந்த அமைதியுடன் கூறினான்.

அனந்தை ஒரு முறை முறைத்துப் பார்த்த ஸில்வர் பிறகு படிக்கலானான். ''ஸார்கேல் அவர்களுக்குத் தலை வணங்கி எழுதுவது; இப்பொழுது இன்னொரு பயங்கரக் கொள்ளைக்காரன் மகாராஷ்டிரக் கடலில் உலாவுகிறான். அவன் பெயர் ஆலிவர் லா பூஷே. ஆலிவர் லிவாஸியர் என்றும் பிரசித்த மானவன். கடற் போரில் நிகரற்றவன். பிரெஞ்சுக்காரன். அவனைத் தாங்கள் எப்படியாவது மடக்க வேண்டும். காரணம் தாங்கள் அறிவீர்கள் -அனந்த்.''

அந்த ஓலையைப் படித்து முடித்ததும், அனந்தை நோக்கி ஸில்வர் கேட்டான்: ''லிவாஸியர் அரபிக் கடலில் உலாவுவது உனக்கு எத்தனை நாளாகத் தெரியும்?'' என்று.

''சில நாட்களாகத் தெரியும்'' என்றான் அனந்த்.

''தெரிந்தும் எங்களிடம் ஏன் சொல்லவில்லை?'' ஸில்வரின் இந்தக் கேள்வியில் உஷ்ணம் பெரிதும் தகித்தது. இந்தச் சமயத்தில் உரையாடலில் உட்புகுந்தான் ஸித்தி அஹமத். ''இவன், அவனது நண்பன். எங்களைச் சூறையாட அனுப்பியிருக்கிறான்'' என்று தெரிவித்தான், தனது உதடுகளையும் பெரிய மீசையையும் பயங்கரமாக அசைத்து.

''நான்ஸென்ஸ் உளறாதே'' என்று அஹமதைக் கடிந்து கொண்ட ஸில்வர் ''நான் படித்த கடிதத்தைக் கேட்டாய் அல்லவா?'' என்று வினவினான். ''கடிதத்தில் லா பூஷேயை மடக்கும்படி சொல்லியிருக்கிறான் அனந்த்'' என்று சுட்டிக் காட்டவும் செய்தான், ஸில்வர் எரிச்சலும் சலிப்பும் இணைந்த குரலில்.

அஹமதின் பெருவிழிகள் ஸில்வரை நோக்கி உருண்டன. ''இது போலிக் கடிதமாக இருக்கலாம். உன் கண்ணிலும் அந்த இரு முட்டாள்கள், டெய்லர், இங்கலண்ட் கண்களிலும் மண்ணைத் தூவச் செய்யும் தந்திரமாயிருக்கலாம். இல்லாவிட்டால் கடல்ராணியின் கப்பல் எப்படி லா பூஷேயிடம் கிடைத்தது? சமீபத்தில் அரபிக் கடலில் கப்பல் போர் எதுவும் நடைபெறவில்லை, ராணியின் கப்பலைப் பிரெஞ்சுக்காரன் பிடிக்க'' என்று கரகரத்த குரலில் சொன்னான் அஹமத்.

அவன் விளக்கத்திலோ கேள்வியிலோ எந்தவித முரண்பாடும் இல்லாததைக் கவனித்த ஸில்வர், அனந்தை நோக்கினான் சந்தேகக் கண்களுடன். ''இவன் கேட்பதில் நியாயம் இருக்கிறது'' என்றும் கூறினான் சந்தேகத்தின் சாயல் குரலில் தெரிய.

அனந்தின் இதழ்களில் இகழ்ச்சிப் புன்னகை படர்ந்தது. ''ஸில்வர்! உன் கூரிய அறிவும் வர வர மழுங்கி வருகிறது. கடல் ராணி தனது கப்பலின் பெயரைப் பகிரங்கமாக எல்லோரும் பார்க்க எழுதி வைத்துப் பாய்மரச் சீலையிலும் அதைத் தீட்டி விளம்பரப் படுத்தி லா பூஷேயிடம் கொடுத்து, 'நீ போய் என் பெயரால் எதிரி மோஹராக்களைத் திருடி வா!' என்று சொல்வாளென்று எதிர்பார்க் கிறாயா? ராணியைப் பிடிக்க சதா முயன்று கொண்டிருக்கும் பிரிட்டிஷ், போர்ச்சுகீஸ், டச்சுக்காரர்கள் அவள் கப்பலின் நடமாட்டத்தைச் சுதந்திரமாக அரபிக்கடலில் விட்டுத் தங்கள்



பொருள்களை இழக்க ஆசைப்படுவார்களென்று நினைக்கிறாயா? எப்படியாவது ராணியைத் தீர்த்துக் கட்ட இரண்டு பிரிட்டிஷ்காரர்கள் லெப்டினண்ட் ஸ்மித்தும் காப்டன் ஸ்டாண்டனும் இங்கு வந்தது உனக்குத் தெரியாதா?'' என்று வெகு வேகமாகக் கேள்விகளை உணர்ச்சியற்ற வறண்ட குரலில் தொடுத் தான் அனந்த். இதைச் சொல்லி முடித்தபோது அவன் இதழ்களில் ஆரம்பத்தில் விரிந்திருந்த புன்முறுவல் மறைந்து விட்டது.

அனந்தின் விளக்கத்தில் உண்மை பூராவாகப் புதைந்து கிடப்பதைக் கண்ட ஸில்வர் , அஹமதை நோக்கித் திரும்பி, ''அனந்த் சொன்னதைக் கேட்டாயல்லவா?'' என்றான்.

''கேட்டேன். இன்னும் எனக்குத் திருப்தி இல்லை'' என்றான் அஹமத்.

''உன்னைத் திருப்திப்படுத்த என்ன செய்ய வேண்டும்?'' என்று எரிந்து விழுந்தான் ஸில்வர்.

அஹமத் தனது மூளை மிகக் கட்டை என்பதை நிரூபித்தான். ''ராணியை என்னிடம் ஒப்படைக்க வேண்டும்'' என்றான் திட்டமாக.

''ஒப்படைத்தால்?'' சர்வ சகஜமாக எழுந்தது, அனந்தின் கேள்வி.

''எங்கள் தலைவர் ஸாத் ஸித்தியிடம் ஒப்படைப்பேன்!'' என்றான் அஹமத்.

''அவர் ராணியை அஞ்சன்வேல் கோட்டைப் பாறையிலிருந்து பாதாளத்தில் தள்ளிக் கழுகுக்கு இரையாக்குவார்?'' என்றான் அனந்த் நிதானமாக.

அஹமதின் கண்களில் வியப்பு பெரிதும் விரிந்தது. ''உனக்குச் சோதிடம் தெரியுமா?'' என்று வினவினான் அஹமத், வியப்பு குரலிலும் விரிய.

''தெரியாது!''

''அப்படியானால் அஞ்சன்வேல் தண்டனை முறை எப்படித் தெரியும் உனக்கு?''

''சோதிடம் தெரியாதே தவிர, சரித்திரம் தெரியும்!''

''என்ன சரித்திரம்?''

''பூர்வ கதை.''

''என்ன கதை அது?''

*''இதயசந்திரன் கதை. அவனை அப்படித்தான் தீர்த்து விடப் பார்த்தார் ஸாத் ஸித்தி. ஆனால், அந்தத் தமிழன் ஸாத் ஸித்தியின் கண்களிலும் மண்ணைத் தூவினான். உதவிக்குக் கனோஜியின் மகள் மஞ்சுவும் இருந்தாள்.

புரிந்துகொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான் ஸில்வர். அஹமதின் முகம் மிகவும் குழம்பிக் கிடந்தது. ''என் மூளை குழம்பிக் கிடக்கிறது'' என்று வெளிப்படையாகவே சொன்னான்.

ஸில்வர் கடகடவென நகைத்தான். ''எதற்கு நகைக்கிறாய்?'' என்று தனது பெரு விழிகளை உருட்டினான் ஸித்தி அஹமத், ஸில்வரை நோக்கி.

ஸில்வர் தனது நகைச்சுவையைக் காட்டினான். ''உனக்கு மூளை இருக்கிறது என்று அறிவித்ததைப் பற்றி''என்றான் ஸில்வர் மீண்டும் நகைத்து

''அப்படி அறிவிக்கவில்லை,மூளை குழம்பியிருக்கிறது என்றுதான் சொன்னேன்'' என்று திருத்திய அஹமதின் பேச்சில் அபாயச் சாயை ஒலித்தது.

ஸில்வர், அஹமதின் குரலிலிருந்த அபாயத்தைச் சிறிதும் லட்சியம் செய்யவில்லை. ''மூளை இருந்தால்தான் குழம்பும். குழம்பியதாக அறிவித்ததால் இருப்பதாக அறிவித்த மாதிரிதான்'' என்று சொன்ன ஸில்வர், ''இனி நீ வந்த காரியத்தைக் கவனிக்கலாம்'' என்று கூறினான்.

ஸித்தி அஹமதின் இதழ்களில் .புன்சிரிப்பு பயங்கரமாக விரிந்தது. அவன் நெற்றி சிறிது சுருங்கியது, ஏதோ சிந்திப்பதற்கு அறிகுறியாக. பிறகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனைப் போல் இருமுறை பெரிதாகக் கனைத்தான். அதை அடுத்துத் தடதடவெனப்

* இந்த விவரங்களை 'ஜலதீபம்' என்ற நூலில் படிக்கலாம்.



பலர் சோலைக்கு அப்பாலிருந்து ஓடிவரும் சத்தம் கேட்டது. இரண்டே விநாடிகளில் நெட்டையான கறுத்த அபிஸீனியர்கள் பதின்மர், ராணி, அனந்த், சாரு, ஸில்வர் ஆகிய நால்வரையுமே வளைத்துக் கொண்டார்கள். ஒவ்வொருவர் கையிலும் நீண்ட துப்பாக்கிகள் இருந்தன. அந்தத் துப்பாக்கிகள் அனைத்தும் சிறைப்பட்டவர்களை நோக்கி விபரீதமாக வாய்களைப் பிளந்தன.

''ஸித்தி அஹமத் அத்தனை முட்டாளல்ல என்பதைப் புரிந்து கொண்டிருப்பீர்கள் இப்பொழுது''என்ற அஹமத்,''இங்கு வர எங்கள் தலைவர் ஸாத் ஸித்தி ஆணையிட்டதும் இவர்களை முன்பே இங்கு அனுப்பிவிட்டேன். இவர்கள் சாதாரணப் பயணிகளைப் போல் மாலுமிகளின் விடுதிகளில் தங்கியிருந்தார்கள். நான் வரும் நாள், நேரம் இத்தனையையும் முன்னதாக அறிவித்திருந்தேன். என்னைச் சந்திப்பது எப்பொழுது என்றும் சொல்லியிருந்தேன். ராணியை நாங்கள் சமயம் பார்த்துக் கடத்திச் செல்லத் தீர்மானித் திருந்தோம். மேற்கொண்டு செய்வதை ஆலோசிக்கவே இங்கு அவர்களை வரச் சொல்லியிருந்தேன். ஆனால் ராணி இங்கு வந்தாள் எங்களுக்கு முன்பாக. அவள் அப்படி வந்ததும் தவறு. வந்து சும்மா இல்லாமல் பாடியதும் அவள் செய்த தவறு. ''ஸில்வர்! யூ ராஸ்கல்! யூ திங் யூ ஆர் வெரி கிளெவர், பட் அஹமத் ஈஸ் நோ பூல்'' என்றும் விளக்கினான்.

அப்பொழுது கேட்டான் அனந்த். ''எங்களைப் பிடித்து என்ன பயன்? உன்னைக் கொள்ளையடித்த விவாஸியரை எப்படிப் பிடிப்பதாக உத்தேசம்?''

இதைக் கேட்ட அஹமத் சிறிது சிந்தனையில் ஆழ்ந்தான். பிறகு கேட்டான் அனந்தை நோக்கி,''அதைச் செய்து முடிக்க உனக்கு ஏதாவது வழி தெரியுமா?'' என்று.

அனந்தின் கண்கள் அஹமத்தின் பெரு விழிகளை ஈர்த்து நின்றன பல விநாடிகள். பிறகு அஹமதிடமிருந்து நீங்கி ராணியை யும் சாருவையும் நோக்கின. அனந்த் நீண்ட நேரம் சிந்தனை வசப் பட்டான். முடிவில் அஹமதை நோக்கி, ''ஒரு வழி இருக்கிறது'' என்றான்.

அஹமதின் கண்கள் பளிச்சிட்டன. ''என்ன வழி?''என்ற அவன் கேள்வியில் ஆவல் இருந்தது.

அனந்த் உடனடியாகவோ நேரடியாகவோ பதில் சொல்ல வில்லை. சுற்றி வளைத்துப் பேசத் தொடங்கி, ''லிவாஸியர் மிகவும் தந்திரசாலி,மிகச் சிறந்த உலக மாலுமிகளில் ஒருவன். நம் கையில் அகப்பட இஷ்டம் இல்லா விட்டால் அகப்படமாட்டான். எப் பொழுது தாக்குவான், எப்பொழுது பாய் விரித்து ஓடுவான் என்று சொல்ல முடியாது'' என்று லிவாஸியரின் பிரதாபத்தை எடுத்துச் சொன்னான்.

''இதெல்லாம் எங்களுக்கே தெரியும்'' என்று இடைபுகுந்து பேசினான் ஸில்வர்.

''உங்களுக்கே என்றால்?''அனந்தின் கேள்வியில் இகழ்ச்சி ஒலி இருந்தது.

''எனக்கு,டெய்லருக்கு,இங்க்லண்டுக்கு''என்றான் ஸில்வர்.

''அப்படியானால் அவனைப் பிடிப்பதற்கென்ன?''என்று கேட்டான் அனந்த்.

''மாக்ரேயைப் பிடித்த பிறகு அவனை நோக்கிச் செல்ல இருக்கிறோம்'' என்று ஸில்வர் பதில் சொன்னான்.

''அவனைப் பிடிப்பதற்கும் அருகிலிருக்கும் லா பூஷேயைப் பிடிப்பதற்கும் என்ன சம்பந்தம்?'' என்று வினவினான் அனீந்த்.

''அருகில் இருக்கிறானா! யார் சொன்னது?''என்று சீறினான் ஸில்வர்.

''அஹமத் சொல்லவில்லையா ஸித்தியின் கப்பல்களைப் பிடித்ததாக? அந்தச் சண்டை அருகில் தானே நடந்திருக்க வேண்டும். காஸண்ட்ராவுடன் போய் லா பூஷேயைப் பிடித்து விடுவதுதானே?'' என்று வினவினான் அனந்த்.

''இத்தனை நாள் அவன் ஓடியிருப்பான், தி வெரி ஐடியா ஆஃப் த எக்ஸிஸ்டன்ஸ் ஆஃப் காஸண்ட்ரா இன் திஸ் ரீஜன் வுட் ஹாவ் பிரைடன்ட் ஹிம் (இந்தப் பிராந்தியத்தில் காஸண்ட்ரா இருப்பதே அவனை நடுங்கச் செய்திருக்கும்)'' என்று ஸில்வர் சமாதானம் கூறினான்.



''யூ ஸீ அனந்த்! காஸண்ட்ரா ஈஸ் எ பிக் மான் ஆஃப் வார், ஹாஸ் டூ மெனி கன்ஸ் அண்ட் டு வெடரன் ஸீ காப்டன்ஸ் லைக் டெய்லர் அண்ட் இங்க்லண்ட் டு நாவிகேட் ஹர் அண்ட் ஃபைட். ஐ பெட் லிவாஸியர் ஈஸ் ஃபோர் அவே பை நௌ (இதோ பார் அனந்த்! காஸண்ட்ரா பெரிய போர்க் கப்பல்.ஏராளமான பீரங்கிகளை உடையது. டெய்லரையும் இங்க்லண்டையும் போன்ற இரண்டு பெரிய கடல் காப்டன்களை உடையது. ஆகவே லிவாஸியர் இப்பொழுது வெகுதூரத்தில் இருப்பான்)'' என்று கூறினார், கூறி இகழ்ச்சியாக நகைக்கவும் செய்தான்.

அதே சமயத்தில் அடர்ந்த அந்தத் தோப்பின் மரமொன்றின் மறைவிலிருந்து இன்னொருவன் நகைப்பும் கேட்டது. அதில் குரூரமில்லை, பயங்கரம் இல்லை, மிக இன்பமாக இருந்தது. அந்தச் சிரிப்பைத் தொடர்ந்து வெளியே வந்தவன் யாரையும் கவனிக்காமல் நேராக ராணியிடம் வந்து தன் ஹாட்டைக் கையிலேந்தி நன்றாக உடலை வளைத்துத் தலைவணங்கி, ''ஐ ஹாவ் ஹேர்ட் அபௌட் யுவர் ப்யூட்டி. நௌ ஐ ஹாவ் ஹேர்ட் யுவர் ம்யூஸிக். ரூமர்ஸ் டு நாட் லை மை லேடி (உங்கள் அழகைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்பொழுது சங்கீதத்தையும் கேட்டேன். வதந்திகள் பொய் சொல்லவில்லை)'' என்ற அவன் சுற்றுமுற்றும் பார்த்து விட்டு, ''லெட் மி இண்ட்ரட்யூஸ் மைஸெல்ஃப் ஸின்ஸ் நோ ஒன் எல்ஸ் வுட். லேடி! லிவாஸியர் அட் யுவர் சர்வீஸ்'' (வேறு யாரும் அறிமுகப்படுத்தாததால் என்னை நானே அறிமுகப்படுத்திக் கொள்கிறேன். அம்மணி! நான் லிவாஸியர், வணங்குகிறேன்)'' என்று தன்னைத் தானே அறிமுகப்படுத்திக் கொண்டான்!

## அத்தியாயம் - 54

# காணக் கிடைக்காத தங்கம்!

**லி**வாஸியரின் துணிவு ஸித்தி அஹமத் உட்பட எல்லோரை யும் வியப்பின் உச்ச வரம்புக்குக் கொண்டு சென்று விட்டதால் அனைவரும் ஏதோ மந்திரத்தில் கட்டுண்டவர்கள் போல் வாயடைத் துச் சிலைகளென நின்றார்கள். தனது பெயரை உபயோகித்து, ஸித்திகளின் கப்பல்களைக் கொளுத்திச் சூறையாடியதற்காக அவன்மீது சீற்றம் அடைந்திருந்த ராணிகூட, அவன் தன் முன்பாகத் தலைகுனிந்து வணங்கியபோது சீற்றத்தை உதறிச் செவ்விய இதழ்களில் இளநகை யொன்றைப் படரவிட்டாள். அவன் தலை வணங்கி நிமிர்ந்தபோது அவனை, அவள் கண்கள் ஆராயவும் செய்தன.

அதிக உயரமில்லாத அளவோடு கூடிய மெல்லிய சரீரம், அலட்சியச் சிரிப்பு உலாவிய இதழ்கள், குழந்தை முகத்தில் குறுகுறுத்த கண்கள், நீண்ட கைகள், பெண்களின் இடையைப் போல சிறுத்த இடை, இடையில் கொள்ளைக்கார மாலுமிகளின் பெரிய தோல் பெல்ட், அதில் செருகப்பட்ட இரண்டு அழகிய கைத்துப்பாக்கிகள், வலது புறத்தில் கச்சையிலிருந்து பாதத்தைத் தொட்டுக் கொண்டிருந்த நீண்ட வாள் இப்படிக் காட்சியளித்தான் லிவாஸியர்.

அவனது ஷர்ட் நல்ல சில்க் துணியால் தயாரிக்கப்பட்டு, சில்க் நிஜாருக்குள் புதைந்து கிடந்தது. காலில் இருந்த பூட்ஸ்களில் இருந்த லேஸ்கள் கூட அலங்காரத்தின் அடையாளமாக விளங்கின. அவன் தனது கழுத்தைச் சுற்றிச் சிவந்த கர்சீப் ஒன்றைக் கட்டியிருந்தான். எந்தவிதக் குண்டலத்தையோ வீரச் சங்கிலியையோ அவன் அணியாவிட்டாலும் அவன் நின்ற தோரணையிலேயே கம்பீரம் இருந்தது. இத்தகைய லிவாஸியர் முதல் பார்வைக்குக் குழந்தை போல் இருந்தானே தவிர, அவன் கண்களிலிருந்த குறுகுறுப்பில்



கொலைத் தன்மையும் வஞ்சகமும் கலந்திருப்பதை இரண்டாவது முறை கவனித்தபோது உணரவே செய்தாள் ராணி.

வாளைச் சுழற்றுவதில் இணையற்றவன் என்று பிரசித்தி பெற்றிருந்த லிவாஸியரின் கைகள் மெல்லியதாக இருந்தாலும், வாளை ஏந்தும்போது அவை சீறும் பாம்பைப் போல் இஷ்டப்படி வளையக் கூடியவை என்பதைப் புரிந்துகொண்ட ராணி, அவன் இடையிலிருந்த வாளின் அதிகப்படி நீளம் அவனுக்குத் தேவைதான் என்று நினைத்தாள். இப்படி அணுஅணுவாக அவனை நோக்கி ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்த ராணி, ''காப்டன் லிவாஸியர்!'' என்று மெதுவாக ஒருமுறை அழைத்தாள்.

''மை லேடி! யுவர் அட்டென்ஷன் ப்ளாட்டர்ஸ் மி (அம்மணி! தங்கள் கவனிப்பு எனக்குப்பெருமையை அளிக்கிறது)'' என்றான் லிவாஸியர், இரண்டாம் முறை ராணியை வணங்கி.

திடீரென ஏற்பட்ட பிரமை நீங்கிவிடவே ஸித்தி அஹமத் தனது இடையிலிருந்த கைத்துப்பாக்கிமீது கையை வைத்தான்.

''டோண்ட் ட்ரை எனிதிங் ஸ்டுபிட் (முட்டாள்தனம் எதிலும் இறங்காதே)'' என்ற அனந்தின் வறண்ட குரல் ஸித்தி அஹமதின் கையைத் தேக்கியதே தவிர, வாயைத் தேக்காததால், ''இதில் முட்டாள்தனம் என்ன இருக்கிறது? எங்கள் கப்பல்களைக் கொள்ளையடித்தவனை நான் சுடுவதை யார் தடுக்கமுடியும்?'' என்று கேட்டான் அஹமத், பெருவிழிகள் சினத்துடன் சுழல.

அனந்த், சாருவுடன் நான்கடி நடந்து முன்னே வந்தான். அஹமதைப் பரிதாபம் சொட்டிய கண்களுடன் பார்த்தான். ''லிவாஸியருக்கு யார் உதவியும் தேவையில்லை. நீ உன் பிஸ்டலை உருவு முன்பு உன்னைப் பிணமாக்கி விடுவான்'' என்று எச்சரித்தான்.

அஹமதின் எரிச்சல் அதிகமாகத் தெரிந்தது அவன் முகத்தில். ''என்னைச் சுடுவதை நீங்கள் பார்த்துக் கொண்டிருப்பீர்களா?'' என்று கேட்டான் எரிச்சல் குரலையும் ஊடுருவ.

இதற்குப் பதில் அனந்த் சொல்லு முன்பாக ஸில்வர் கேட்டான், ''கடல் ராணியைத் தூக்கிச் செல்ல நீ வந்திருக்கிறாய். உன்னைக் காத்து ராணியிடம் ஒப்படைப்போம் என்று நினைக்கிறாயா?'' என்று.

இதற்கு ஏதும் பதில் சொல்லத் தெரியாததால் அஹமத் விழித்தான் ஆந்தை போல் சுற்றும்முற்றும் நோக்கினான் ஒரு முறை. அங்கிருந்த ஒவ்வொருவர் கண்களிலும் தன்மீது பரிதாபம் சிறிதும் இல்லாததையும், ராணி, சாரு இவர்களின் இதழ்களில் புன்முறுவல் விரிந்ததையும் கவனித்தான். அனந்தின் இதழ்களில் மட்டும் மற்றவர்கள் காட்டிய புன்னகை அரும்பவில்லை. உதடுகள் கடினமாக மூடியிருந்தன. முகம் கல்லாயிருந்தது. பெருத்த அபாயம் எதையோ அவன் எதிர்பார்க்கிறான் என்று அஹமதுக்குச் சந்தேகமறப் புரிந்ததால் அனந்தை நோக்கி, ''நீ பெரும் வீரனென்று பிரசித்தி இருக்கிறது'' என்று துவங்கினான் பேச்சை.

அனந்த் மெள்ள உதடுகளைத் திறந்து, ''சில சமயங்களில் வதந்தி ஒரு மனிதனின் திறமையை அதிகப்படுத்துகிறது'' என்று கூறினான்.

அஹமதின் இதழ்களில் இகழ்ச்சியும் வெறுப்பும் அதிகமாகத் தெரிந்தன. ''லிவாஸியரிடம் அஞ்சுகிறாயா?'' என்று வினவினான் வெறுப்புடன்.

''அசட்டுத் தைரியத்தால் சாவதைவிட பயத்தால் பிழைப்பது நல்லது!'' என்று பதில் கூறினான் அனந்த்.

''ஒரே மனிதன் இங்கிருக்கும் அனைவரையும் கொன்றுவிட முடியுமா?'' ஸித்தி அஹமதின் கேள்வி எழுந்தது படபடப்புடன்.

''முடியாது!'' என்று ஸில்வர் பதில் கூறினான்.

''அப்படியானால் இவனிடம் பயம் எதற்கு?'' என்று கேட்டான் அஹமத்.

''லிவாஸியரால் வேகமாக ஒருவரைக் கொல்ல முடியும்'' ஸில்வரின் குரலின் உள்ளே இருந்த நகைப்பு தெரிந்தது.

''அதனால்?''

''முதலில் யார் கொல்லப்படுவார்என்பது தெரியாதல்லவா?''

''தெரியாது.''

''இப்பொழுது உனக்குப் புரியவில்லையா?''

''என்ன புரிய வேண்டும்?''



''முதலில் சாவது யார் என்ற கேள்வி எழுகிறது. சாவது நீயாயிருந்தால் பாதகமில்லை...''

''ஏன் பாதகமில்லை?''

''ராணியைத் தூக்கிச் செல்ல நீதான் வந்திருக்கிறாய்'' என்ற காரணத்தைச் சொன்னான் ஸில்வர்.

அஹமத் மிரள மிரள விழித்தான் ஒரு விநாடி. கைத்துப்பாக்கிகளைத் தனது உத்தரவின்படி கீழே போட்டுவிட்டுத் தடி மரங்கள் போல் நின்றிருந்த தனது வீரர்கள் இருவரையும் பார்த்து, ''ஏன் நிற்கிறீர்கள் மரம் போல், உங்களுக்கு வெட்கமில்லை?'' என்று சீறினான்.

''இருக்கிறது'' என்று ஸில்வர் பதில் சொன்னான்.

''என்ன இருக்கிறது?'' என்று அஹமத் கேட்டான்.

''அவர்களுக்கு வெட்கம் இருக்கிறது. அத்துடன் உயிரும் இருக்கிறது. உயிர் போன பின்பு வெட்கம், மானம் இவை பொருளற்றவை என்று நினைக்கிறார்கள்'' என்று ஸில்வர் விளக்கியதும், அஹமதின் ஆட்கள் தங்கள் தலைகளை வேகமாக ஆட்டினார்கள் மேலும் கீழுமாக, ஸில்வர் சொன்னது சரியென்பதைக் குறிப்பிட!

அஹமதின் கோபம் எல்லை கடந்தது. ''அஞ்சன்வேலுக்கு வாருங்கள். உங்கள் தலைகள் ஆடுவதைப் பார்த்து விடுகிறேன். இரண்டையும் ஒரே வெட்டில் தரையில் உருளச் செய்கிறேன்'' என்று கூவினான் அஹமத் இரைந்து.

அதுவரை அங்கு நடந்த உரையாடல்களை மௌனமாகக் கவனித்துக் கொண்டு புன்சிரிப்புடன் நின்றிருந்த லிவாஸியர், ''இஃப் அண்ட் வென் யூ கோ டு அஞ்சன்வேல் தட் மைட் ஹாப்பன் (நீ அஞ்சன்வேலுக்குச் சென்றால் நீ சொல்வது நடக்கலாம்)'' என்றான் மெதுவாக. அவன் குரல் மிக அழகாக இருந்தது. சொற்கள் மிக இனிமையாக வெளிவந்தன.

''நான் செல்வதை யார் தடுக்க முடியும்?'' என்று கேட்ட அஹமத், ''ஹாவ் யூ எனி ஐடியா ஹௌ மெனி மென் ஐ ஹாவ் ப்ராட் வித் மி (என்னுடன் எத்தனை பேரை அழைத்து வந்திருக்கிறேன் என்பது உனக்குத் தெரியுமா?)'' என்று ஆங்கிலத்திலும் வினவினான்.

லிவாஸியரின் புன்முறுவல் அதிகமாக விரிந்தது அவன் செவ்விய இதழ்களில். அணுவளவும் மீசையோ தாடியோ இல்லாமல் அன்றாடம் வழித்துவிடப்பட்டிருந்த முகம் லேசாகச் சிவந்தது. ''லெட் அஸ் டு அவே வித் இங்க்லீஷ். இட் ஈஸ் எ ஃபாரின் லாங்வேஜ் ஃபார் போத் ஆஃப் அஸ் (ஆங்கிலத்தை விட்டு விடுவோம். நம் இருவருக்கும் அது அந்நிய மொழி)''என்ற லிவாஸியர், ''நீ நிரம்ப வீரர்களை அழைத்து வந்திருப்பாய் என்பதில் சந்தேகமில்லை'' என்று மராத்தியில் பேசினான்.

அவன் மராத்தி பரம சுத்தமாயிருந்ததைக் கண்டு ராணியும் சாருவும் வியப்படைந்தார்கள். அவர்கள் வியப்பைக் கவனித்த லிவாஸியர், சாருவுக்கு தலை வணங்கினான். ''இவனை அனுமதித்தால் காலை வரையில் ஒவ்வொருவருக்காகத் தலை வணங்கிக் கொண்டே இருப்பான்'' என்று எரிந்து விழுந்தான் அஹமத்.

லிவாஸியர் அவனை நோக்கி நகைத்தான் மெள்ள. ''அஹமத்! பெண்களுக்கு மரியாதை காட்ட நாம் பழகவேண்டும். எங்கள் நாட்டில் அது மிக முக்கியமாகக் கருதப்படுகிறது'' என்று அறிவுரை கூறினான்.

''உன் அறிவுரை எனக்குத் தேவையில்லை''என்றான் அஹமத்.

''அறிவு சம்பந்தப்பட்ட எதுவும் அங்கு ஏறாதென்பது எனக்குத் தெரியும். ஆனால், அஹமத்! இந்தப் பெண்களில் யூார் மீது நீ கை வைத்தாலும் அடுத்த விநாடி நீ பறந்து கொண்டிருப்பாய்'' என்று கூறியதன்றிப் போகும் இடத்தைக் குறிப்பிடத் தனது வலக் கை ஆள்காட்டி விரலை வானத்தை நோக்கி உயர்த்தினான்.'

இந்தச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அஹமத் வெகு துரிதமாகத் தனது கச்சையிலிருந்த பிஸ்டலை எடுத்து விட்டான். அப்பொழுதுதான் தன் எதிரி எப்பேர்ப்பட்டவன் என்பதைப் புரிந்து கொண்டான். லிவாஸியரின் இடது கையில் ஜால வித்தைபோல் அவன் கைத்துப்பாக்கி தோன்றியது. அதிலிருந்து பறந்த ரவை அஹமதின் ரிவால்வரைப் பறித்துச் சென்று எட்டடிக்கு அப்பால் வீழ்த்தியது. ''உன் கையைக் காயப்படுத்த எனக்கு இஷ்ட மில்லை'' என்று கையைச் சுடாததற்குக் காரணம் சொன்னான் லிவாஸியர்.



இந்தச் சமயத்தில் அஹமதின் உதவிக்கு ஸில்வர் வந்தான். ''லெட் அஸ் ஸ்டாப் திஸ் டாம் பூலரி, லெட் அஸ் டாக் (இந்த முட்டாள்தனத்தை நிறுத்துவோம். நாம் பேசுவோம்)'' என்று ஸில்வர் யோசனை சொன்னான்.

''அதுதான் சரி. விடியச் சில விநாடிகளே இருக்கின்றன'' என்றாள் ராணி.

''எப்பொழுதும் காலை நேரம் நமக்குத் தெளிவை அளிக்கிறது'' என்றான் லிவாஸியர்.

அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே கிழக்கு வெளுத்து வெளிச்சம் லேசாகச் சோலையை ஊடுருவியது. அப்பொழுது ராணியை நோக்கிக் கேட்டான் லிவாஸியர், ''லேடி! வில் யூ டேக் எ ஸிம்பிள் டோக்கன் ஆப் அப்ரீஸியேஷன் ஃப்ரம் யுவர் ஸ்லேவ் (அம்மணி! தங்களிடம் உள்ள மதிப்பைக் காட்ட உங்கள் அடிமை ஒரு பரிசளிக்கிறான், ஏற்றுக் கொள்வீர்களா?)'' என்று மிகப் பணிவுடன் கேட்டான்.

அத்துடன் தனது கையைச் சோலைக்கு வெளியே நீட்டவும் செய்தான். அவ்வழியில் கண்ணைச் செலுத்திய அனைவரும் பிரமை பிடித்து நின்றனர். ''ஏற்கிறேன். கண்டிப்பாக ஏற்கிறேன். என்ன அழகான பரிசு!'' என்று குரலில் வியப்பு அலை பாயக் குதூ கலத்துடன் கூறினாள் கடல் ராணி.

பரிசு மகத்தானது. யாரும் எதிர்பாராத பரிசு! அதை அங்கே கொண்டுவர முடியுமென்று அனந்த்கூட நினைக்கவில்லை. ''அற்புதம்! காணக் கிடைக்காத தங்கம்'' என்ற இந்திரஜித் தனது இதழ்களை அசைத்து முணுமுணுத்தான்.

அஹமதின் முகத்தில் அசட்டுத்தனமும் கிலியும் கலந்து தாண்டவமாடின. நிலைமை ஒவ்வொரு விநாடியும் படு மோச மாகிக் கொண்டு வருவதை ஸில்வரும் உணர்ந்தான்!.

அத்தியாயம் - 55

# கடல் ராணியின் பயணம்!

இயற்கை சற்றே கண்ணை விழித்து முந்திய இரவைக் கிழித்துவிட்ட அந்தப் பஞ்ச உஷத்காலத்தில், சோலையில் இருந்தவர்களின் கண்ணெதிரே கடலலைகள் மண்ணைத் தழுவி நின்ற மணற்பரப்புக்கு அப்பால், சிந்து துர்க்கத்துக்கும் பாண்டவ கட்டுக்கும் இடையே இருந்த கடலின் ஆழத்தில் ஆடி நின்றது மிக அழகிய கப்பலொன்று. அதன் பக்கப் பலகையில் பெரிதாக எழுதப்பட்டிருந்த 'கடல் ராணி' என்ற வாசகத்தைக் கடலின் அலைகள் எழுந்து எழுந்து தழுவியது கூடப் பார்ப்பதற்கு மிகக் கவர்ச்சியாயிருந்தது.

மூடுபனிக் காலம் ஓரளவு நீங்கி விட்டதன் காரணமாக லேசான பனித் திரைக்குள் அலைகளில் ஆடி நின்ற அந்தக்கப்பலின் உருவம் சிறிதளவு மயக்கத்தையும் அளித்தது, பார்ப்பவர்களுக்கு. அத்தகைய ஒரு கப்பலை எப்படி காஸண்ட்ராவின் மாலுமிகளோ சிந்து துர்க்கத்துக் காவலர்களோ அறியாமல் அந்த இடத்துக்கு லிவாஸியரால் கொண்டு வர முடிந்தது என்பதும் விளங்காத விந்தையாக இருந்ததால் அனைவரும் மேற்கொண்டு பேச நா எழாமல் பிரமை பிடித்து நின்றனர். எதையும் ஆராய்ச்சி செய்து முடிவுக்குத் துரிதமாக வரக்கூடிய இந்திரஜித் அனந்தின் மூளைகூட அந்த ஆரம்ப நிமிடங்களில் வேலை செய்ய மறுத்தது. கடல் ராணி, சாரு, அனந்த் ஆகியோரைச் சூழ்ந்து கொண்டிருந்த அஹமதின் அபிஸீனிய வீரர்கள் லிவாஸியரின் சிரிப்பைக் கேட்டதுமே பழையபடி சோலை மரங்களில் மறைந்துவிட்டாலும், தங்களையும் அறியாமல் சோலைக்குள் வந்த லிவாஸியரையும், அவன் காட்டிய கப்பலையும் கண்டு செயலிழந்து செய்வது இன்னதென்று அறியாமல் நின்றார்கள்.

இந்திரஜித் அனந்த் அந்த மரக்கலத்தை காணக் கிடைக்காத தங்கம் என்று குறிப்பிட்டது எத்தனை பொருத்தம் என்பதை,



அதைக் குதூகலத்துடன் ஏற்றுக் கொண்ட கடல் ராணியும் உணர்ந்ததால் அவள் சற்று நகர்ந்து தனது உடல் அனந்தின் உடலோடு உராய நின்றாள். அவனது இன்னொரு பக்கத்தில் ஏற்கெனவே உராய்ந்துகொண்டு நின்ற சாருவும் சற்று அதிகமாக இழைந்தாள். புதுவிதச் சேலையையோ ஆபரணத்தையோ பார்க்கும்போது ஏற்படும் உற்சாகத்தில் பெண்கள் மனம் தங்கள் இதய புருஷனை நாடுவது போல், அந்த இரு பெண்களின் இதய நெகிழ்ச்சி, கப்பலைக் கண்டதும் இந்திரஜித்திடம் அவர்கள் மனத்தை அதிகமாக ஈர்க்கச் செய்ததன் விளைவாக இருவரும் நன்ருக அவனை நெருங்கவே, அவன் கைகளும் அவர்களுக்குப் பின்னால் ஆதரவுடன் தவழ்ந்தன.

எல்லோரும் நிலைகுலைந்த நேரம் அது. சொப்பனத்தில் கூடச் செய்யமுடியாத அந்த அற்புதத்தை, லிவாஸியரின் அளவிட முடியாத துணிவைக் கண்டு அச்சமும் ஆச்சரியமும் அனைவர் உள்ளத்தையும் அணைத்துக்கொண்ட நேரம் அது. இத்தகைய ஒரு பிரம்ம வித்தையை லிவாஸியர் எப்படிச் சாதித்தான்? காஸண்ட்ராவின் கண்ணிலும் சிந்து துர்க்க காவலர் விழிகளிலும் எப்படி மண்ணைத் தூவினான்?'' என்று சோலையில் இருந்தவர்கள் தங்கள் உள்ளத்தில் கேள்விகளை எழுப்பிக்கொண்ட நேரம் அது. ஆனால், மனம் துள்ளியதால் ''லிவாஸியர்! ஈஸ் தேர் நோ லிமிட் டு யுவர் இம்ப்யுடென்ஸ்? (லிவாஸியர், உன் துடுக்குத்தனத்துக்கு எல்லையே இல்லையா?)'' என்று ஸில்வர் வினவினான் உணர்ச்சி பொங்கிய, பாராட்டு ஒலித்த குரலில்.

லிவாஸியர் தனது அழகிய கண்களை ஸில்வரை நோக்கித் திருப்பினான்.

''நோ டேஞ்ஜர் ஈஸ் டூ க்ரேட்,டு ஸர்வ் த ப்யூடீ ஆஃப் சிந்து துர்க் (சிந்து துர்க்கத்தின் அழகிக்குச் சேவை செய்ய எந்த அபாயமும் பெரிதல்ல)''என்று சொன்னான் லேசாகச் சிரித்து.

அனந்தின் கண்கள் கப்பலைவிட்டு லிவாஸியர் மீது நிலைத்தன. ''மிகவும் அழகிய பரிசு'' என்று அவன் உதடுகள் முணுமுணுத்தன.

''உன்னிடம் சிக்கியுள்ள அழகிக்கு. இல்லை அழகிகளுக்கு, இந்தக் கப்பல் எம்மாத்திரம்? தவிர இன்னொரு அற்புத அழகி

இங்கிருப்பது தெரிந்திருந்தால் இன்னொரு கப்பலையும் பிடித்துக் கொண்டு வந்திருப்பேன்!'' என்ற லிவாஸியர் இரு பெண்களையும் நோக்கித் தலையைச் சாய்த்தான் லேசாக.

''காஸண்ட்ரா விழித்தால் உன் நிலைமை இன்னும் சில விநாடிகளில் என்ன ஆகும் தெரியுமா?''என்று ஸில்வர் வினவினான்.

''கேள்விக்குறிகளுக்கு எப்பொழுதும் அர்த்தமில்லை. வீரர்கள் சம்பந்தப்பட்ட வரையில். காஸண்ட்ரா விழித்திருந்தால் தான் வந்திருக்க முடியுமா? ஸித்தி அஹமதுக்குக் கடற்போரில் பழக்கம் இருந்திருந்தால் அவன் கப்பல்களை நான் கொளுத்தி யிருக்க முடியுமா? கடல்ராணி இங்கு வராதிருந்தால் இந்தக் கப்பலை அவரிடம் பரிசாகக் கொடுக்க முடியுமா? என் சிரிப்பைக் கேட்டதும் மறைந்துவிட்ட அஹமதின் புலிகள் மீண்டும் வளைத்துக் கொண்டால் என்ன செய்வது? இப்படிக் கேட்டுக் கொண்டே போகலாம்'' என்ற லிவாஸியர் அஹமத்மீது கண்களை நாட்டினான்.

அப்பொழுதுதான் அதிர்ச்சியிலிருந்து நீங்கிச் சுய உணர்வு வரப் பெற்ற அஹமத், தனது கைகளைத் தட்ட முயன்றான். அதைத் தனது செய்கையால் தடுத்த லிவாஸியர் ''அஹமத்! உன் மூளை ஏன் இவ்வளவு கட்டையாக இருக்கிறது? கடற்போரின் போதே மால்வானிகளையும் கொங்கணிகளையும் நீ பார்த்திருப்பாய். அவர்கள் எல்லோரும் கடல் ராணியில் இப்போதும் இருக்கிறார்கள். அவர்கள் இங்கு வந்தால் உன் கதி என்ன ஆகும்?'' என்று கேட்டதுடன் நில்லாமல், ''அட! நான் எதற்காக ஸில்வரைப் போல் கேள்வி கேட்கிறேன்? வந்தால் உன்னையும் உன் வீரர்களைவும் சுட்டுத் தள்ளுவார்கள்'' என்று சிரித்துக்கொண்டு நிலைமையை விளக்கவும் செய்தான்.

அந்தச் சமயத்தில் இடைபுகுந்த இந்திரஜித், ''லிவாஸியர்! கடல்ராணி நீ அளிக்கும் பரிசைப் பார்க்க வேண்டாமா?'' என்று கேட்கவே, ''நிச்சயமாகப் பார்க்க வேண்டும்.வாருங்கள் ராணி'' என்ற லிவாஸியர் , ''நீங்கள்...'' என்று சாருவை நோக்கினான்.

''பெயர் சாரு. கடல்ராணியைவிட அபாயமானவள்'' என்று அறிமுகப்படுத்தினான் அனந்த்.



''அழகுடன் ஆபத்து இணைந்துதான் நிற்கும்' என்று பாராட்டிய லிவாஸியர், ''நீங்களும் வாருங்கள்' என்று அழைத்து விட்டு முன்னே நடந்தான்.

அவன் போவதை ஒரு விநாடி பார்த்துவிட்டு அவனைத் தொடர்ந்த அஹமத், பக்கத்தில் வந்துகொண்டிருந்த ஸில்வரை நோக்கி, ''இப்பொழுது நான் அவனைச் சுட்டால் என்ன செய்வான்?'' என்று வினவினான்.

''உன் துப்பாக்கி பெல்டிலிருந்து கிளம்புமுன் பிணமாகி விடுவாய்'' என்றான் ஸில்வர்.

''நான் சுடப்போவது அவனுக்கு எப்படித் தெரியும்?''

''லிவாஸியருக்கு முதுகிலும் கண் உண்டு. அவனும் அனந்தைப் போலத் தான்.''

''அனந்தும் அவனும் ஒரே மாதிரிதானா?''

''ஒரு வித்தியாசம் உண்டு.''

''என்ன?''

''அனந்த் நல்லவன்,கூடியவரையில் கொலை செய்யக் குறி வைக்கமாட்டான். ஆனால், லிவாஸியர் அப்படியல்ல, கொலையைத் தவிர வேறு விதமாகக் குறிவைக்கத் தெரியாது அவனுக்கு. உன் அதிர்ஷ்டம் உன் விஷயத்தில் அப்படிச் செய்யவில்லை. கைத் துப்பாக்கியை மட்டும் சுட்டான்.''

இதைக் கேட்டதும் அஹமதின் உடம்பில் நடுக்கம் ஊடுருவிச் சென்றது. இதற்குப்பின் அவன் ஏதும் பேசாமல் நடந்தான். அவர்கள் கரையை அடைவதற்கு முன்பே கடல்ராணியிலிருந்து இரண்டு படகுகள் தரையை நோக்கி வந்து கொண்டிருந்தன. அவை கரையை அடைந்ததும் ஒரு படகில் கடல்ராணி, சாரு இவர்களுடன் அனந்த் ஏறிக்கொண்டான். ஸில்வருடன் லிவாஸியர் வேறு ஒரு படகில் ஏறிக்கொண்டான். அஹமதும் அதில் ஏறமுயலவே அவனைத் தடுத்த லிவாஸியர், ''அதோ உன் படகு இருக்கிறதே அதில் ஏறி வா''என்று கூறிவிட்டான்.

படகுகள் நகர்ந்தன. அஹமத் தனது படகில் ஏறாமல் கரையிலேயே நின்றான், போகும் படகுகளைப் பார்த்துக் கொண்டு.

பிறகு திரும்பிச் சோலைக்குள் சென்று மறைந்தான். அவன் திரும்பிச் சென்றதைப் பார்த்த லிவாஸியர், ''ஒரு உபத்திரவம் தீர்ந்துவிட்டது!''என்று கூறினான்.

''அவனை ஏன் தப்பவிட்டாய்?''என்று ஸில்வர் வினவினான்.

''அவனை அழைத்துச் சென்றால் கப்பலிலிருந்து மீண்டும் தரைக்கு அனுப்ப முடியாது. அதிலேயே இருந்தால் நான் சென்றதும் மால்வானிகள் அவனைக் கொன்று விடுவார்கள்''என்று பதில் சொன்னான் லிவாஸியர்.

லிவாஸியர் காட்டிய அனுதாபம் ஸில்வருக்கு விசித்திரமாக இருந்தாலும் அதைப்பற்றி அவன் ஏதும் கேட்கவில்லை. தன் தோளிலிருந்த கிளியைத் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தான் தீவிர சிந்தனை வசப்பட்டு. ஆனால், கப்பலை அடைந்ததும் லிவாஸியரின் காரணம் அவனுக்குப் புரிந்தது. கப்பலை அடைந்து நூலேணியில் ஏறித் தளத்தை அடைந்ததும் அங்கே பெரும்பாலும் மால்வானிகளும், சில பிரெஞ்சுக்காரரும், கொங்கணிகளும் இருந்ததைக் கவனித்தான் ஸில்வர். லிவாஸியரைக் கண்டதும் அவர்கள் காட்டிய குதூகலத்திலிருந்து அவர்களுக்கு அவனிடம் சிறந்த பக்தி இருப்பதை உணர்ந்து கொண்ட ஸில்வர், ''இதில் ஏதோ மர்மம் இருக்கிறது'' என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டான்.

இந்த மர்மம் கடல்ராணி கப்பலில் காலை வைத்ததும் புரிந்தது ஸில்வருக்கு. தளத்தை அடைந்ததும் கடல் ராணியே வியப்பெய்தினாள். அங்கிருந்த அத்தனை மால்வானிகளும் அவளது மாலுமிகள். கொங்கணிகள் கனோஜியின் கடற்படையைச் சேர்ந்தவர்கள்.

''இந்தக் கப்பலில் இருக்கும் இரண்டு லஷம் மோஹராக்களைக் கொண்டுசெல்ல கடல்ராணியின் தயவு வேண்டும் லிவாஸியருக்கு. இல்லையேல் பெருவாரியாக இருக்கும் மால்வானிகளும் கொங்கணிகளும் பிரெஞ்சுக்காரர்களை வெட்டிப் போட்டுக் கப்பலையும் சூறையாடிய பொருள்களையும் கடத்திச் சென்று விடுவார்கள். அதைத் தடுக்க ஏதோ ஆசை காட்டி இவர்களை இங்கு கொண்டு வந்திருக்கிறான்'' என்று மெள்ள மர்மத்தை அவிழ்க்கவும் முற்பட்டான் ஸில்வர். அவன் முடிவு சரியென்



பதற்கு அடையாளமாகக் கடல் ராணியைக் கண்டதும் மால்வானிகள் குதூகலக் கூவல் போட்டார்கள். அவர்களில் தலைவனாக இருந்தவன் ராணிக்குத் தலை வணங்கி,''உங்கள் அடிமை, உத்தரவுக்குக் காத்திருக்கிறேன்'' என்றான்.

கடல் ராணி வியப்புடன் அவனை நோக்கி,''நீ எப்படி இந்தக் கப்பலுக்கு வந்தாய்?''என்று வினவினாள்.

''பிரெஞ்சுக் காப்டன் எங்களை வேலைக்கு அமர்த்தினார். இந்தக் கப்பலை உங்களுக்குப் பரிசாக அளிக்கப் போவதாகச் சொன்னார். நாங்கள் முதலில் நம்பவில்லை. பிறகு இதன் பக்கப் பலகையிலும் நடுப் பாய்மரச்சிலையிலும் உங்கள் பெயரை எழுதச் சொன்னார். ஸித்திக் கப்பல்களைக் கொள்ளையிட்டதும் அவர் சொன்னபடி எங்களை இங்கு அழைத்து வந்தார்'' என்று விளக்கினான் மால்வானி.

அதைக் கேட்ட ராணி மீண்டும் ஒரு கேள்வி கேட்டாள்: ''இதில் கொங்கணி மாலுமிகள் எப்படிச் சேர்ந்தார்கள்?''என்று.

''நாங்கள் அமர்த்தினோம் காப்டன் சார்பில்''என்றான் மால்வானி.

இந்திரஜித் அனந்த் ஏதும் பேசவில்லை. ராணியையும் மேலும் பேசாதிருக்கக் கண்ணால் ஜாடை காட்டி லிவாஸியருடன் சென்றான். ராணி மால்வானியுடன் பேசியபோது லிவாஸியர் அங்கு நிற்காமல் நடந்து நடுப்பாய்மரச் சிலையிடம் போய் நின்றான் புன்முறுவலுடன். ராணி பேசிவிட்டு வந்ததும் எல்லோரையும் தனது அறைக்கு அழைத்துச் சென்றான்.

அறையில் நீண்ட மேஜையும் அதைச் சுற்றி நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன. சிற்றுண்டி பரிமாறப் பிரெஞ்சு மாலுமிகள் தயாராக நின்றிருந்தனர். அவர்களைப் பார்த்தால் கொள்ளைக்காரர்களாகத் தெரியவில்லை. ஏதோ பெரிய மாளிகையில் பரிமாறுகிறவர்களைப் போல் கண்ணியமான வெண்மையான உடை அணிந்திருந்தார்கள். அவர்கள் ஏந்தி நின்ற பாத்திரங்கள் நல்ல வெள்ளியில் செய்யப்பட்டவை. மேஜை மீதிருந்த கோப்பைகளைத் தவிர பரிமாறும் சாதனங்கள் அனைத்தும் வெள்ளியால் செய்யப்பட்டிருந்ததால் லிவாஸியரின் படாடோப வாழ்க்கையை எல்லோ

ராலும் நன்றாக உணர முடிந்தது. ''இத்தனையும் கொள்ளையடித்த சாமான்களானாலும் அனுபவிக்க மனம் வேண்டுமே!''என்று தனக்குள் சொல்லிக்கொண்டான் அனந்த்.

எல்லோரும் நாற்காலிகளில் உட்கார்ந்து சிற்றுண்டி அருந்து கையில் ராணி கேட்டாள்: ''நீங்கள் கொள்ளையடித்து அனுபவிக் கிறீர்கள். இந்தப் பொருள்களை விற்றால் இன்னொரு கப்பல் வாங்கலாமே''என்று.

''போதிய கப்பல்கள் என்னிடம் இருக்கின்றன''என்ற லிவாஸியர் ''இந்தக் கப்பலை உங்களுக்கு மாலுமிகளுடன் கொடுக்கத் தீர்மானித்தேன். மால்வானுக்கு வடக்கே மலையைக் குடைந்து உட்புகுந்திருக்கும் கடலில் மறைந்து நிற்கும் உங்கள் கப்பல்களோடு இதுவும் சேர்ந்தால் உங்கள் கடற்படை மிகவும் வலுவடையும். இதில் எண்பது பீரங்கிகள் இருக்கின்றன. காஸண்ட்ராவின் பீரங்கிகளைவிட நவீனமானவை.சுடும் சக்தியும் குண்டு வீச்சின் எல்லையும் இவற்றுக்கு அதிகம்!'' என்று விளக்கினான்.

இதைக் கேட்டதும் அனந்தின் புருவங்கள் சிந்தனையுடன் மேலெழுந்தன. கடல்ராணியின் கப்பல்கள் இருக்கும் மறை விடத்தை இவன் எப்படி அறிந்தான் என்ற கேள்வி அவன் அகத்தே எழுந்தது. கடல்ராணிக்கும் அதே கருத்துத் தோன்றவே இருவர் கண்களும் சந்தித்தன ஒரு விநாடி.

ஸில்வர் முகத்தில் கடுமை உருவாயிற்று. மெதுவாக, ''ராணி! உங்களிடம் எத்தனை கப்பல்கள் இருக்கின்றன? எத்தனை அருகில் இருக்கின்றன?'' என்று வினவினான்.

''இப்பொழுது என்னைக் கேட்க அவசியம் இல்லை. லிவாஸியரையே கேட்கலாம்'' என்றாள் ராணி.

அனந்தின் மனத்தில் ஏதோ சிந்தனை உருவாயிற்று. அவனது கால், கடல் ராணியின் கால்களுடன் உராய்ந்தன மேஜைக்கு அடியில். இன்னொரு கால், சாருவின் ஆடையின் நுனியை இரண்டு விரல்களால் பற்றி இழுத்தது. அதிலிருந்து இரு பெண்களும் என்ன புரிந்து கொண்டார்களோ தெரியவில்லை. எழுந்து வெளியே செல்ல முற்பட்டனர்.



''ராணி! இந்த அறையைவிட்டு அகலாதே. உன் சகாப்தம் இன்றுடன் முடிந்துவிட்டது. இப்பொழுது உன் தந்திரமும் புரிந்து விட்டது'' என்று கூறினான் ஸில்வர். அவன் பெல்ட்டிலிருந்த இரு கைத்துப்பாக்கிகளும் சரேலென எழுந்தன அனை வரையும் ஒரு சுற்றுச் சுற்றி எச்சரித்தான்.

ஆனால், லிவாஸியரோ அனந்தோ எந்தவித உணர்ச்சியை யும் காட்டவில்லை. ''ஸில்வர்! உயிரின் மேல் ஆசை இருக்கிறதா உனக்கு?'' என்று வினவினான் லிவாஸியர்.

''ஏன் கேட்கிறாய்?''

''இருந்தால் துப்பாக்கிகளை உறையில் போடு. ராணி வெளியே செல்லட்டும்.''

''உறையில் போடாவிட்டால்?'' என்று கேள்வி எழுப்பிய ஸில்வரின் சொற்கள் சட்டென்று அவன் உதடுகளில் உறைந்து போயின. அனந்தை நோக்கினான் ஒரு விநாடி. அவன் ஊகம் சரியென்பதை ஆமோதிக்கும் வகையில் அனந்த் தலையாட்டினான். அதைப் பார்த்த ஸில்வர் அறையைவிட்டு வெளியே ஓடினான். கப்பல் நங்கூரமெடுத்து நகர்ந்துவிட்டதை உணர்ந்ததால் திகிலும் அடைந்தான். அந்தச் சமயத்தில் ராணி வெளியே வந்ததும் காஸண்ட்ரா தளத்திலிருந்த கொள்ளைக்கார மாலுமிகள் பெரிதாக ஆனந்தக் கூச்சல் போட்டார்கள். கடல் ராணியை நோக்கி டெய்லரும் இங்க்லண்டும் கைகளை ஆட்டினார்கள்.

''முட்டாள்களா! நாம் ஏமாற்றப்பட்டோம். புரியவில்லையா உங்களுக்கு?'' என்று இரைந்தான் ஸில்வர் காஸண்ட்ராவில் இருந்தவர்களை நோக்கி.

அவன் சொற்களைக் கடல்ராணியின் துடுப்புகளின் ஓசை அடக்கிவிட்டது! கடல் ராணியின் பாய்கள் விரித்துவிடப்பட்டி ருந்தன. நடுப் பாய்மரத்தில் சாய்ந்துகொண்ட லிவாஸியர், லேசாகச் சிரித்தான். கடல்ராணி கம்பீரமாகவும் வேகமாகவும் பாய்ந்து சென்றது அலைகடலில்!

## அத்தியாயம் - 56

# பொறாமை!

'கடல் ராணி' பாண்டவ கட்டிலிருந்து சிந்து துர்க்கத்தைக் கடந்துவிட்டதையும் அதைக் கண்ட டெய்லரும் இங்க்லண்டும் குதூகலித்து ஆர்ப்பரித்ததையும் கண்ட ஸில்வர் விவரிக்க இயலாத பிரமிப்பையும், ஆயுளில் அதுவரை கண்டிராத ஏமாற்றத்தையும் அடைந்தான். காஸண்ட்ரா காப்டன்களின் உற்சாகத்துக்குக் காரணம் மிகவும் அறிவாளியான அவன் புத்திக்குக்கூட எட்டாததால் அவன் தன் தோளிலிருந்த அந்த அசுரக் கிளியைக் கையில் எடுத்துத் தடவினான். ''அபாயம்! அபாயம்!''என்று இருமுறை அதைப் பார்த்துச் சொல்லவும் செய்தான். பிறகு கையை உயரத் தூக்கி அதைப் பறக்கவிட முயன்ற தருணத்தில் அவன் கையை அனந்தின் கை இரும்புப் பிடியாகப் பிடித்துக் கிளியைப் பிடுங்கிக்கொண்டது. ''ஸில்வர்! இந்தக் கப்பலிலிருந்து எந்தத் தூது போயும் பயனில்லை. டெய்லரும் இங்க்லண்டும் இந்தக் கப்பல் பயணமாகப் போவதை முன்கூட்டியே அறிவார்கள்'' என்றான்.

''இல்லை. இது தந்திரம், ஏமாற்று வித்தை. அவர்கள் முட்டாள்கள்'' என்று சினத்துடன் பேசினான், என்றும் நிதானத்தை இழக்காத ஸில்வர்.

அந்தச் சமயத்தில் கிளியைத் தடவிய வண்ணம் பாய்மரத்தில் சாய்ந்து நின்ற அனந்த், ''ஸில்வர்! நான் பொய் சொல்வதாக நினைக்கிறாயா?'' என்று வினவினான். அப்படி அவன் வினவிய போது அவன் கண்கள் அரைவாசித் தூக்கத்தில் இருந்தன. ''இரவு முழுதும் தூக்கம் இல்லை. உன் தொந்தரவு வேறு இப்போது?'' என்று சொல்லிக்கொண்டு பாய் மரத்தடியில் உட்கார்ந்து கொண்டான் அனந்த்.

அந்த அரைவாசித் தூக்கத்தில் அனந்த் மிக அபாயமானவன் என்பதை உணர்ந்திருந்த ஸில்வர், சில விநாடிகள் அவனை நோக்கினான். அவன் கையிலிருந்த கிளியையும் பிடுங்கிக் கொண்டான்.



கிளி அவன் சொல்லிக் கொடுத்த 'அபாயம்' என்ற சொல்லை நான்கு முறை திரும்பத் திரும்பச் சொல்லியது. இங்க்லண்டுக்கும் டெய்லருக்கும் நிலைமையை உணர்த்தச் சொல்லிக் கொடுத்த பாடத்தைத் தனக்கே கிளி திரும்பப் படிப்பதைக் கண்ட ஸில்வர் மிகுந்த எரிச்சலுடன், ''நீ போயும் போயும் கிளிதானே'' என்று அதன்மீது எரிந்து விழுந்தான். கிளி மீண்டும் ''அபாயம்!''... ''அபாயம்!'' என்றது.

''என்ன அபாயம்? மண்ணாங்கட்டி அபாயம்'' என்ற ஸில்வர், அனந்தை நோக்கினான். அனந்தின் அரைவாசித் தூக்கத்தில் அவன் முகத்தில் அபாயத்தின் சாயை முழுவதும் எழுதி ஒட்டியிருந்தது. அந்தச் சமயத்தில் அறையைவிட்டு வெளியே வந்த லிவாஸியர் ஸில்வரை நோக்கிப் புன்முறுவல் செய்தான். அந்தப் புன்முறுவலிலும் அபாயம் உறைந்து கிடப்பதை உணர்ந்த ஸில்வர், தன் தடியை ஊன்றிக்கொண்டு அவனை நோக்கி நொண்டி நொண்டி ஓடினான்.

''எஸ், ஸில்வர்! தியர், வாட் கான் தூ ஃபார் யூ'' (அருமை ஸில்வர்! உனக்கு நான் என்ன செய்யக்கூடும்?)'' என்று வினவினான். ஆங்கில வார்த்தைகளில் 'டிக்'கு 'தி' போட்டுப் பிரெஞ்சு மென்மையை உச்சரிப்பிலும் காட்டினான் லிவாஸியர்.

''ஐ நோ யூ ஆர் பிரெஞ்சு(நீ பிரெஞ்சுக்காரன் என்பது எனக்குத் தெரியும்)'' என்று ஸில்வர் எரிந்து விழுந்தான்.

''குத் (நல்லது)'' என்றான் லிவாஸியர் மீண்டும் ''ட்க்குப் பதில் 'த்' தைப் போட்டு...'' அடுத்து மராத்திக்குத் திரும்பி, ''இன்று பகல் நாம் பேசுவோம். உனக்கு விளக்கிச் சொல்கிறேன்'' என்ற லிவாஸியர், ''ராணி! உங்கள் அறைக்கு வருகிறீர்களா?'' என்று அழைத்துவிட்டுச் சற்று முன்பு சிற்றுண்டி அருந்திய அறைக்குப் பக்கத்திலிருந்த அறைக்குச் சென்றான்.

அந்த அறையைப் பார்த்துப் பிரமித்தாள் ராணி. அறை மிக அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. இரண்டு சிறு கட்டில்களில் ரோஜா புஷ்பங்கள் இழைத்தது போன்ற துணிகளில் செய்யப்பட்ட உயரமான மெத்தைகள் போடப்பட்டிருந்தன. அவற்றுக்கு இடையே ஒரு சிறு மேஜையும், மேஜைமீது பிரெஞ்சு நாட்டு செண்ட்களும் வைக்கப்பட்டிருந்தன. மேஜைக்கு அருகேயிருந்த சுவர்ப் பலகையில் வேலைப்பாடு மிகுந்த பெரிய கண்ணாடி ஒன்று மாட்டப்பட்டிருந்தது. ஒரு ஜக்கும் இரண்டு கோப்பைகளும்கூட

மேஜைமீது இருந்தன. நல்ல வசதியாகத் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் விதரணையுடன் செய்யப்பட்டிருந்ததைப் பார்த்த ராணி, பின்னால் நின்ற லிவாஸியரை நோக்கி, 'ப்யூட்டிஃபுல்? தாங்க் யூ'' என்று பாராட்டினாள்.

லிவாஸியர் தலையை நன்றாகத் தாழ்த்தினான். ''இட் ஈஸ் எ ப்ளஷர் டு ஸர்வ் த ப்யூட்டி ஆஃப் சிந்து துர்க் (சிந்து துர்க்க அழகிக்குச் சேவை செய்வதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி!)'' என்றும் சொன்னான்.

''நௌ ஐ வில் ஸெண்ட் சாரு'' என்று கூறிவிட்டுச் சென்றான் லிவாஸியர். சில நிமிஷங்களில் சாருவும் வந்து சேர்ந்தாள். அறையையும் பஞ்சணைகளையும் கண்ட சாரு மெய்மறந்து, ''இது என்ன ராணி?'' என்று வியப்புடன் கேட்டாள்.

''நமது அறை'' என்றாள் ராணி.

''அவருக்கு?''

இதைக் கேட்ட ராணி நகைத்தாள். ''எப்பொழுதும் அவர்கூட இருக்கவேண்டும் உனக்கு'' என்று பரிகாசமும் செய்தாள்.

''உனக்கு மட்டும் அவர் வேண்டாமாக்கும்?'' என்று வினவினாள் சாரு. பிறகு இருவரும் சேர்ந்து நகைத்தார்கள். ''சரிதான், உள்ளே வாடி'' என்ற ராணி, சாருவை உள்ளே இழுத்துக் கதவை லேசாக மூடினாள். தொப்பென்று ஒரு மெத்தை மேல் விழுந்தாள். சாருவும் அவள் செய்கையைப் பின்பற்றினாள். இரு பெண்களும் அண்ணாந்து பார்த்தார்கள். கண்ணாடியில் இருவர் உருவமும் நன்றாகத் தெரிந்தது.

''நல்லவேளை!'' என்றாள் சாரு.

''என்ன நல்லவேளை?'' என்று ராணி கேட்டாள், சாருவின் மனத்தைப் புரிந்துகொண்டு.

''நாம் மட்டும் இருக்கிறோம் இங்கு'' என்று கூறிய, சாரு புன்முறுவல் செய்தாள்.

''அவரும் இருந்தால் என்று நினைக்கிறாயா? வெட்கம் கெட்டவளே!''

''உனக்கு மட்டும் அந்த நினைப்பு இல்லையாக்கும்?''

''எந்த நினைப்பு?''

''கண்ணாடி நினைப்பு!''

''கண்ணாடி நினைப்பா?''



''பாசாங்கு செய்யாதே! பசப்பாதே! அவரும் சேர்ந்து அதில் தெரிந்தால்?''

''உளறல், சுத்த உளறல்!'' என்று கூறிய ராணியும் சாருவும் மறுபடியும் நகைத்தார்கள். திடீரென்று அவர்கள் நகைப்பு உறைந்தது. தாழிடாத அறை வாசற்கதவை மூடிவிட்டு அதில் சாய்ந்து நின்றான் அனந்த். அவன் கண்கள் பலகைச் சுவரிலிருந்த கண்ணாடியில் நிலைத்திருந்தன.

இரண்டு அழகிய புஷ்பித்த கொடிகள் போல் படுத்துக் கிடந்த இரு பெண்களையும் பார்த்த அனந்த், கண்ணாடியிலிருந்து கண்களை விலக்கவில்லை. சற்றே ஒருக்களித்ததால் ராணியின் ஒரு மார்பு பஞ்சணையில் அழுந்தி இன்னொரு மார்பு எழுந்து நின்ற காட்சியும், மல்லாந்த நிலையைவிட்டு எழுந்திராமல் முகத்தை மட்டும் அவன் பார்வையிலிருந்து திருப்பிக் கொண்டதால் இரட்டை அழகுகளும் நிமிர்ந்துவிட்ட சாருவின் காட்சியும் அனந்தை நிலைகுலையச் செய்தன. 'இந்த அறையில் இருவரும் ஏன் சேர்ந்து படுக்கிறார்கள்?' என்று அவர்கள் செய்கையை உள்ளூரக் கண்டிக்கவும் செய்தான் மகாராஷ்டிரா வாலிபன். அந்த அழகிகளின் அழகிடங்கள் மனத்தைப் பெரிதும் அலைக்கழிப்பதைக் கண்ட அவன் , அவர்கள் இருவரும் கொண்டிருந்த புன்முறுவலைக் கண்டு, ''ஏன் அப்படியே படுத்திருக்கிறீர்கள்? ஓர் ஆண்மகன் வந்திருக்கிறானே என்ற அச்சம் இல்லையா?'' என்று வினவினான் சீற்றத்துடன்.

''இல்லை!'' இருபெண்களின் பதிலும் ஒன்றாக ஒலித்தன.

''உண்மையாகவா?'' அனந்தின் குரலில் கடுமை இருந்தது.

''ஆம்!'' இரட்டைப் பெண்களின் ஒலி மீண்டும் எழுந்தன.

''ஏன்?''

இம்முறை பதில் ஒருவரிடமிருந்துதான் வந்தது. ''அச்சம் உங்களுக்குத்தான் இருக்கிறது'' என்று கூறினாள் ராணி சிரித்தபடி.

''சந்தேகமில்லை'' என்று ஒத்துப் பாடினாள் சாரு.

''எனக்கு என்ன அச்சம் உங்களிடம்?'' என்று வினவினான் அனந்த்.

''இல்லாவிட்டால் கதவுக்கு அருகே நிற்பானேன்? உள்ளே வாருங்களேன்'' என்றாள் ராணி.

''யாராவது என்னைப் போல் கதவைத் திறந்துகொண்டு வந்தால்?'' இந்திரஜித் ஏதோ கேட்கவேண்டும் என்பதற்காகக் கேட்டான்.

''இதுவும் நாங்கள் சொல்லித் தரவேண்டுமா?'' என்று சாரு கேட்டாள்.

''எது?''

''கதவைத் தாளிட்டுக்கொண்டு வருவதற்கு?''

''எதற்குக் கதவைத் தாளிடவேண்டும்?''

''யாரும் பார்க்காதிருப்பதற்காக...''

''எதை?''

இந்தக் கேள்வியைக் கேட்டதும் இரு பெண்களும் நகைத்தார்கள். உணர்ச்சி வேகத்தில் தான் உளறிவிட்ட பதிலின் தன்மையைப் புரிந்துகொண்ட அனந்த், சற்றுச் சங்கடத்தில் ஆழ்ந்தான். பிறகு தன்னைச் சமாளித்துக்கொண்டு, ''இங்கு சரசமாட வரவில்லை நான்'' என்றான். அவன் குரலில் சினம் நன்றாக ஒலித்தது.

அப்பொழுதும் பெண்கள் விடவில்லை. ''பின் எதற்காக வந்தீர்கள்?'' என்று வினவினாள் ராணி.

''செய்தி சொல்ல வந்தேன்.''அனந்தின் குரல் பெரிதும் திடப்பட்டு வந்தது.

''என்ன செய்தி?'' என்று சாரு கேட்டாள்.

''இன்று பகல் உணவின்போது லிவாஸியர் தனது திட்டத்தை விவரிப்பான்.''

''அதனால் என்ன?'' என்று ராணி கேட்டாள்.

''நீங்கள் இருவரும் நீராடி வேறு உடை அணிந்து வரவேண்டும் என்பது லிவாஸியர் விருப்பம்,'' என்றான் அனந்த்.

''வேறு உடையை எங்கே கொண்டு வந்திருக்கிறோம்?'' என்று சாரு வினவினாள்.

''இந்த ஒவ்வொரு கட்டிலுக்கு அடியிலும் ஒரு பெட்டி இருக்கிறதாம். அதில் நிரம்பப் பெண்களின் ஆடைகள் இருக்கிறதாம்...'' என்றான் அனந்த்.

''இதையும் லிவாஸியர் சொன்னானா?'' ராணி வினவினாள் வியப்புடன்.

சாரு பேசவில்லை. சட்டென்று கட்டிலிலிருந்து குதித்து அடியிலிருந்த பெட்டியைச் சரசரவென்று வெளியே இழுத்துத் திறந்தாள். திறந்து அதிலிருந்த பட்டுச் சராய்கள், சேலைகள், கச்சைகள் இவற்றை இரு கைகளாலும் அள்ளினாள். ராணி பிரமித்தாள்.



''லிவாஸியரைப்போல் ஒருவனை நான் பார்த்ததில்லை!'' என்று ராணி வியப்புடன் கூறினாள்.

''நானும் பார்த்ததில்லை'' என்று சாருவும் கூறினாள்.

''அப்படியானால் அவனையே கல்யாணம் செய்து கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டுக் கதவைத் திறந்து கொண்டு வெளியே செல்ல முயன்ற அனந்த், ஒருமுறை அந்த இரு பெண்களையும் திரும்பிப் பார்த்து, ''லிவாஸியர் பகல் ஒரு மணிக்கு உங்களை எதிர்பார்க்கிறான். முக்கிய விஷயம் ஏதோ சொல்லப் போகிறானாம்'' என்று சொல்லம்பை வீசிவிட்டு வெளியேறினான்.

அவன் சென்றதும் கதவைத் தாளிட்டாள் சாரு. ''ஆண்களுக்குப் பொறாமை போவதில்லை பார்த்தாயா?'' என்று கேட்டாள் ராணி. அடுத்த விநாடி இரு பெண்களும் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டு பஞ்சணையொன்றில் வீழ்ந்தார்கள்.

''சீ சாரு! பைத்தியமே, இறுக்காதே நான் அவரல்ல'' என்று கூறினாள் ராணி. இருவரும் இரைந்தே நகைத்தார்கள் அடுத்தபடி. அந்தச்சிரிப்பில் விரிந்தது கனவு, எதிர்பார்ப்பு, உணர்ச்சிப் பெருக்கு.

அன்று பகல் நீராடி, பகல் ஒரு மணிக்கு லிவாஸியரின் உணவு அறையில் மற்றவர்களைச் சந்தித்தபோதும் இரு பெண்களின் உற்சாகமும் விஷமமும் எல்லைமீறி இருந்தன. லிவாஸியர் அவர்கள் இருவரையும் வரவேற்று அவர்கள் இடங்களுக்கு அழைத்துச் சென்றான்.

குனிந்த தலையுடன் உட்கார்ந்திருந்த அனந்த், கடைக்கண்ணால் இரு பெண்களையும் நோக்கி லிவாஸியரையும் நோக்கினான். எல்லையற்ற பொறாமை அந்தக் கண்ணில் குடி கொண்டிருந்தது.

அந்தப் பொறாமையை உடைத்தான் ஒரே வாசகத்தில் லிவாஸியர். உணவருந்த எல்லாரும் அவரவர் ஆசனங்களில் உட்கார்ந்ததும், ''லேடீஸ் அண்ட் ஜென்டில்மென்! ப்ரே ஃபார் த விக்டரி ஆஃப் கடல்ராணி, ஐ மீன் த ஷிப் (சீமாட்டிகளே! கனவான்களே! கடல் ராணிக் கப்பலின் வெற்றிக்குப் பிரார்த்தியுங்கள்)'' என்று கூறினான். முதலில் அவன் உணவுத் தட்டு எதிரில் தலை குனிந்து, கை குவித்து, கண்களை மூடிப் பிரார்த்தனையை முணுமுணுத்தான். அது முடிந்ததும் சொன்னான், ''இன்னும் நான்கு நாட்களுக்குள் நாம் காப்டன் மாக்ரேயைச் சந்திப்போம்!'' என்று.

## அத்தியாயம் - 57

# கவர்னர் பூன்!

பம்பாய் துறைமுகத்திலிருந்து சற்று எட்ட இருந்த தமது மாளிகையின் தாழ்வாரத்திலிருந்த கவர்னர் சார்ல்ஸ் பூன், கடலில் ஆடி நின்ற தமது கப்பற்படையை மிகுந்த அதிருப்தியுடன் நோக்கிப் பெருமூச்சுவிட்டார். அப்பொழுதும் துறைமுகத்தில் பதினைந்து கப்பல்களுக்கு மேல் நின்றிருந்தாலும், அவற்றில் பீரங்கிகளும் மற்றும் பல அக்காலத்திய ஆயுத வசதிகளும் நிரம்ப இருந்தாலும், மொத்தமாகக் கப்பல்களையும் அவற்றின் தரத்தையும் மட்டும் கணக்கெடுத்துக் கொண்டால், அடிப்படை அல்ப சொல்பமான தல்ல என்பதை கவர்னர் பூன் உணர்ந்திருந்தும் அவர் மனத்தில் அதிருப்தி பெரிதும் குடி கொண்டிருந்தது.

கனோஜி ஆங்கரேயிடம் அவர் அடைந்த தோல்விகள் அவர் மனத்தை உடைத்துக்கொண்டிருந்தன. தமது தோல்விகளுக்குக் காரணம் என்னவென்பதை அடிக்கடி ஆராய்ந்த அவருக்கு ஏதும் புலப்படவில்லை. அவரிடம் குமாஸ்தாவாயிருந்து,அவருக்குத் தலையாட்டி பொம்மையாயிருந்த ஒரே காரணத்தாலேயே கடற் படைத் தலைவனாக உயர்த்தப்பட்ட வால்டர் ப்ரௌன் தமது தோல்விகளுக்கெல்லாம் அவ்வப்போது சரியான சமாதானங்களைச் சொன்னபடியாலும், அவை கூடியவரை திருப்தியாகவே இருந்த படியாலும், கவர்னர் பூன் பிரிட்டிஷ் தோல்விகளின் உண்மைக் காரணத்தை உணரவில்லை.

'ப்ராம்' என்ற பெரிய அக்கினிக் கப்பலையே கனோஜி கொளுத்திவிட்ட பிறகு, கவர்னர் தமது கடற்படையின் திறமையில் பெரிதும் நம்பிக்கை இழந்து கிடந்தார். இத்தனை தோல்விகளும் அவமானமும் போதாதென்று மீண்டும் மேலைக் கடலில் டெய்லரும் இங்க்லண்டும் காஸண்டராவில் உலாவ ஆரம்பித்துவிட்ட செய்தியும், அவர்களுக்கு உதவ கடல் ராணி என்ற ஒரு கொள்ளைக் காரியும் ஏற்பட்டுவிட்டாள் என்ற செய்தியும் அவர் மனத்தைப் பெரிதும்



குழப்பியிருந்தன. இவற்றின் விளைவாகக் கடலையும் கப்பல் களையும் பார்த்துக்கொண்டிருந்த கவர்னர் தமக்குப் பின்னால் ஏதோ காலடிச் சத்தம் கேட்கவே திரும்பிப் பாராமலே, ''யூ இடியட், ஐ டோண்ட் வாண்ட் டு ஸீ யுவர் ஃபேஸ்; கெட் அவே(அடே முட்டாளே! உன் முகத்தை நான் பார்க்க இஷ்டப்படவில்லை. போய்விடு)'' என்று எரிந்து விழுந்தார்.

கவர்னர் அளித்த அந்தப் பட்டத்தை வாங்கிக்கொண்டும், வந்தவன் அசையவில்லை. ''யுவர் எக்ஸலென்ஸி...'' என்று துவங்கினான் மெதுவாக.

''எக்ஸலென்ஸி! தேர் ஈஸ் நத்திங் எக்ஸலெண்ட் ஹியர். கெட் அவே (எக்ஸலன்ஸியா! இங்கு எதுவும் சிறப்பாயில்லை. போய் விடு)'' என்றார் சிறிதும் திரும்பிப் பார்க்காமலே.

இருப்பினும் பின்னால் நின்றவன் போகவில்லை. ''ஐ ஹாவ் நியூஸ் யுவர் எக்ஸலென்ஸி (தங்களுக்குச் செய்தி இருக்கிறது. எக்ஸலென்ஸி)'' என்று அவன் மீண்டும் சொன்னான்.

கவர்னர் பூனின் முகத்தில் சிறிது சிந்தனை படர்ந்தது. 'இது ப்ரௌன் குரலல்ல' என்று தீர்மானித்துக் கொண்டதால் சிறிது கழுத்தை மட்டும் திருப்பினார். பின்னால் நின்றவனைப் பார்த்ததும் முழுவதும் திரும்பி நின்றார். '' ஐ தாட் இட் வாஸ் ப்ரௌன் (உன்னை ப்ரௌன் என்று நினைத்தேன்)'' என்றும் சொன்னார்.

காப்டன் ஜேம்ஸ் மாக்ரே கால்களைக் குவித்துச் செங்குத்தாக ராணுவ பாணியில் நின்றிருந்தான். ''ஃபார் எ கவர்னர் மிஸ்டேக்ஸ் ஆர் பர்மிஷபில் (கவர்னர் தவறுகள் செய்யலாம்)'' என்று மிக மரியாதையுடன் சொன்ன காப்டன் மாக்ரே, கவர்னர் முகத்தில் சரேலென ஏறிவிட்ட கோபத்தைக் கண்டதும் அதை அதிர்ச்சியால் நீக்க முடியும் என்பதை உணர்ந்து கொண்டதால், ''யுவர் எக்ஸ லென்ஸி! லிவாஸியர் ஈஸ் ஹியர் (லிவாஸியர் இங்கிருக்கிறான்)'' என்று ஒரு வெடியை வீசினான்.

அடுத்து கவர்னரின் செய்கை மிக விபரீதமாக இருந்தது. நன்றாக முறுக்கிவிடப்பட்ட அவர் பழுப்பு மீசை இருமுறை ஏறி இறங்கியது, உதடுகளின் எழுச்சி தாழ்ச்சியால். ''லிவாஸியர்! யூ மீன் பூஷே? தட் பிரெஞ்ச் ராஸ்கல்? (லிவாஸியர்!அதாவது, பூஷேயைச்

சொல்கிறாயா? அந்தப் பிரெஞ்சு ராஸ்கலா?)''என்று இரைந்து எரிந்து விழுந்தார் கவர்னர்.

''எஸ் யுவர் எக்ஸலென்ஸி!''

''தட் ஃபெலோ ஈஸ் எ டேன்ஜரஸ் பைரேட் (அவன் அபாயமான கொள்ளைக்காரனாயிற்றே?)''

''அவன் தான் எக்ஸலென்ஸி!''

''சரி சரி, அழைத்து வா!''

''அவன் இங்கில்லை.''

எக்ஸலென்ஸி மறுபடியும் வெடித்தார். ''யூ ஸெட் ஹீ வாஸ் ஹியர் (அவன் இங்கிருப்பதாக நீதான் சொன்னாய்)'' என்றார்.

''வென் ஐ ஸெட் ஹியர் ஐ மெண்ட் த அரேபியன் போர்ட் (இங்கிருக்கிறான் என்று சொன்னது அரபிக் கடலில் இருக்கிறான் என்பதைக் குறிக்க)'' என்றான் மாக்ரே.

''வெரி நைஸ் வெரி நைஸ் (நல்லது மிகவும் நல்லது)'' என்றார் கவர்னர் எரிச்சலைப் பெரிதும் காட்டி.

''எது எக்ஸலென்ஸி?''

''லிவாஸியர் இங்கிருப்பது. ஏற்கெனவே டெய்லர், இங்க்லண்ட், ஆங்கரே. போதாக்குறைக்கு இவன். இங்கிலாந்தின் வாணிபத்தை நாசம் செய்ய வேறென்ன வேண்டும்?'' என்று பொருமிய கவர்னர், ''அவன் இப்பொழுது எங்கிருக்கிறான்?'' என்றார்.

காப்டன் மாக்ரேயின் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் தெரியவில்லை. ''திட்டமாகத் தெரியாது. கடைசியில் அவனைப் பார்த்தவர்கள் ஸாத் ஸித்தியின் கடற்படையினர்.''

''தட் ஈஸ் குட்?'' என்றார் கவர்னர். ''நல்லவேளை நமது எதிரிகளிடம் சிக்கவில்லை. நண்பர்களிடம் சேர்ந்திருக்கிறான்'' என்று சந்தோஷப்பட்டுக் கொண்டார்.

இந்த மகிழ்ச்சியை உடனடியாக உடைக்க இஷ்டப்படாத காப்டன் மாக்ரே சில விநாடிகள் மௌனமாக நின்றான். ''யூ ஹாவ் ஆல் ஆஃப் எ ஸடன் பிகம் டம்ப் (நீ திடீரென்று மௌனமாகி விட்டாய்)'' என்று குற்றம் சாட்டினார் கவர்னர்.



காப்டன் மாக்ரேயின் இதழ்களில் புன்முறுவல் அரும்பிற்று. ''ஐ ஆம் டம் ப் பிகாஸ் யுவர் எக்ஸலென்ஸி ஈஸ் ஜூபிலண்ட் (தங்கள் மகிழ்ச்சி கண்டு ஊமையானேன்)'' என்று மாக்ரே கூறினான்.

கவர்னரின் குதூகலம் அதிகமாயிற்று. ''ஹொய் ஷூட் ஐ நாட் பி ஜூபிலண்ட்? ஈஸ் நாட் லிவாஸியர் த கிரேட்டஸ்ட் ஹீரோ ஆஃப் த ஸெவன் ஸீஸ் ஜாயிண்ட் அவர் ஃப்ரெண்ட் ஸாத் ஸித்தி? டஸ் திஸ் நாட் மீன் த எண்ட் ஆஃப் த ராஸ்கல்ஸ் ஹூ டிபீடட் அண்ட் ப்ளண்டர்ட் யூ? வித் த கம்பைன்ட் மைட் ஆஃப் த இங்கிலீஷ் அண்ட த ஸித்தி, இட் ஷூட் பி ஈஸி டு லிக்விடேட் டெய்லர் அண்ட் இங்க்லண்ட் (நான் ஏன் குதூகலப்படக்கூடாது? ஏழ் கடலின் இணையற்ற வீரன் லிவாஸியர் நமது நண்பரான ஸித்தியுடன் சேர்ந்து விடவில்லையா? உன்னைத் தோற்கடித்து, கொள்ளையும் அடித்த அந்த இரண்டு அயோக்கியர்களின் முடிவுக்கு இந்த நட்பு காரணமாகாது? இங்கிலீஷ்காரர்கள், ஸித்தி இவர்களின் கூட்டு பலத்தால் நாம் டெய்லரையும் இங்க்லண்டையும் அழிப்பது சுலபமில்லையா?)'' என்ற கவர்னர் அதி உற்சாகத்தைக் காட்டினார்.

அந்த உற்சாகத்தில் கவர்னர் கதை முழுவதையும் மாற்றி விட்டதை மாக்ரே கவனித்தான். முதலில் அவர் அபிப்பிராயத்தில் அயோக்கியனாக இருந்த லிவாஸியர், திடீரென ஏழ்கடல் வீரனாக மாறிவிட்டதையும், அவனும் ஸித்தியும் சேர்ந்து கொண்டதாகத் தாமாக நினைத்துக்கொண்டு கவர்னர் டெய்லரையும் இங்க்லண்டை யும் ஏற்கெனவே அழித்துவிட்டதாகப் பகற்கனவு கண்டதையும் எண்ணிய மாக்ரே அடுத்து என்ன சொல்வது, எப்படி விஷயத்தை விளக்குவது என்று தெரியாமல் விழித்தான்.

ஆனால், அவசரக் குடுக்கையான கவர்னர் பேச்சை நிறுத்த வில்லை. ''நீ போய் ஸித்தியைக் கலந்துகொள். முடியுமானால் லிவாஸியுரை இங்கு அழைத்து வா. நாம் கொள்ளைக்காரர்களை அராபியக் கடலிலிருந்து விரட்டத் திட்டமிடுவோம்'' என்றார்.

காப்டன் மாக்ரே இந்தத் திட்டங்களைக் கேட்டு முகம் சுளித்தான். கவர்னர் அருகில் வந்து தமது நகைச்சுவையைக் காட்டினார். அவன் முதுகில் சந்தோஷத்தால் அறைந்தார். ''யூ ஃபீல் ஸாரி பிகாஸ் விக்டரி ஈஸ் நௌ ஸர்ட்டன். யூ ஹாவ் ஸோ ஃபார் நோன் ஒன்லி டிபீட் (இப்பொழுது வெற்றி தீர்மானமாயிருப்பதால் வருந்துகிறாய் போலிருக்கிறது? இருக்கும். நீ தோல்வியைத்தானே

இதுவரை கண்டிருக்கிறாய்)'' என்று சுட்டிக் காட்டினார் உற்சாகத்துடன்.

அப்பொழுதுதான் மாக்ரே தனது வெறுப்பைக் காட்டினான். ''எக்ஸலென்ஸி! யூ ஜம்ப் டு கன்க்ளுஷன்ஸ்'' என்றான்.

''வாட் டு யூ மீன் (என்ன சொல்கிறாய் நீ)'' கவர்னர் சிறிது நிதானத்தையும் சந்தேகத்தையும் அடைந்தார்.

''ஐ டிட் நாட் ஸே லிவாஸியர் ஜாயின்ட் ஸித்தி (லிவாஸியரிடம் ஸித்தி சேர்த்துவிட்டதாக நான் கூறவில்லை)'' என்று மெள்ள விஷயத்தை அவிழ்த்தான்.

கவர்னர் குதூகலம் மறைந்து விநாடியில் அவர் முகத்தில் பழையபடி சினம் துளிர்த்தது. ''வாட் எல்ஸ் டிட் யூ ஸே (வேறு என்ன சொன்னாய் நீ?)'' என்று வினவினார், கோபம் குரலிலும் ஒலிக்க.

''லிவாஸியரைக் கடைசியாகப் பார்த்தவர்கள் ஸாத் ஸித்தியின் கடற்படையினர் என்று சொன்னேன்'' என்றான் மாக்ரே.

''அதற்கு என்ன அர்த்தம்?'' என்று கேட்டார் கவர்னர்.

''அர்த்தம் எதுவாக இருந்தாலும் ஸாத் ஸித்தியுடன் லிவாஸியர் சேர்ந்துவிட்டான் என்று சொல்ல முடியாது! ஏனென்றால், லிவாஸியரைப் பார்த்தவர்கள் அவனால் தோற்கடிக்கப்பட்டவர்கள்.''

''ப்ரொஸீட் (மேலே சொல்)'' கவர்னர் கம்பீரமாக உத்தரவிட்டார்.

''லிவாஸியர், ஸாத் ஸித்தியின் கப்பல்கள் இரண்டைச் சூறையாடினான். பிறகு கொளுத்திவிட்டான். இதுதான் எனக்குக் கிடைத்த செய்தி.''

''இதை உடனடியாக ஏன் சொல்லவில்லை?''

''தங்கள் குதூகலம் அதற்கு இடம் கொடுக்கவில்லை.''

கவர்னர் சங்கடத்தில் ஆழ்ந்தார். தான் அவசரப்பட்டுவிட்டதை உணர்ந்ததால் மீண்டும் மாக்ரேக்கு முதுகைக் காட்டிக் கடலில் ஆடி நின்ற கப்பல்களைக் கவனித்தார். மீண்டும் திரும்பினார். ''வாட் எல்ஸ் டு யூ நோ அபௌட் லிவாஸியர்? (லிவாஸியரைப்பற்றி உனக்கு வேறு என்ன தெரியும்?)'' என்று வினவினார்.



மாக்ரே சிறிதும் நிதானிக்காமல் பதில் சொன்னான்: ''லிவாஸியர் கப்பலில் பிரெஞ்சுக்காரர்களைத் தவிர மால்வானிகளும் கொங்கணிகளும் இருந்தார்களாம்'' என்று.

''வாட் வேர் தே டூயிங் இன் ஹிஸ் ஷிப் (அவன் கப்பலில் அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்?)'' என்று கேட்டார் கவர்னர். அவர் குரலில் உஷ்ணம் மீண்டும் ஏறிக்கொண் டிருந்தது.

''லிவாஸியருக்கு உதவிக்கொண்டிருந்தார்கள்'' என்றான் காப்டன் மாக்ரே.

''மால்வானீஸ்! த பைரேட்ஸ்! ஆல் த டாம் நேட்டிவ்ஸ் ஆஃப் திஸ் கண்டரி ஆர் பைரேட்ஸ் (மால்வானிகள்! அந்தக் கொள்ளைக்காரர்களா? இந்தச் சனியன் பிடித்த நாட்டில் எல்லாரும் கொள்ளைக் காரர்கள்)'' என்று சீறினார், அலுத்துக் கொண்டார் கவர்னர்.

மாக்ரே மீண்டும் முகம் சுளித்தான். ''ஒரு சிலர் கொள்ளைக்காரர்களாக இருப்பதால் ஒரு நாட்டையே வசை பாடக்கூடாது. டெய்லரும் இங்கலண்டும் கொள்ளைக்காரர்கள். அதற்காக நமது நாட்டையே நொந்து கொள்வதா?'' என்று வினவினான்.

கவர்னர் சரியாக எதையும் யோசிக்கும் நிலையில் இல்லை. ''சரி, நீ எதற்காக இங்கே வந்தாய்?'' என்று வினவினார்.

மாக்ரே நிதானமாகப் பதில் சொன்னான்: ''எனக்குப் பத்துக் கப்பல்கள் வேண்டும்'' என்று.

''எதற்கு?''

''டெய்லரையும் இங்க்லண்டையும் சிறை செய்ய, காஸண்ட்ராவைத் திரும்பப் பெற.''

''அத்தனை சுலபமா அது?''

''இப்பொழுது சுலபம்!''

''எப்படிச் சொல்கிறாய்?''

''காஸண்ட்ரா சிந்து துர்க்கத்தில் சிக்கிக் கிடக்கிறது.''

''யாரிடம்?''

''கடல் ராணியிடம்.''

கவர்னர், மாக்ரேயை உற்று நோக்கினார். ''யூ வாண்ட் டு கோ அகெய்ன்ஸ்ட் எ உமன்? (நீ ஒரு பெண்ணை எதிர்த்துச் செல்ல

நினைக்கிறாயா?)''என்று வினவினார் கண்களில் விஷமம் தாண்டவமாட.

''அவள் சாதாரணப் பெண்ணல்ல.''

''அசாதாரணம் என்ன இருக்கிறது அவளிடம்?''

''அவளிடம் டெய்லரும் இங்க்லண்டும் சிறைப்பட்டிருக்கிறார்கள்.''

கவர்னர் சிறிது சிந்தித்தார். ''சரி, பத்துக் கப்பல்களை அழைத்துச் செல். டெய்லர் கூட்டத்தை இங்கே கொண்டுவா! அவர்கள் அனைவரையும் இங்கே தூக்கிலிடுகிறேன்'' என்றார் முடிவில்.

மிகுந்த திருப்தியுடன் திரும்பினான் மாக்ரே. ''ஒரு நிமிஷம்'' என்று கவர்னர் அவனை நிறுத்திவிட்டு அவனருகில் வந்து, ''காப்டன்'' என்று மெதுவாக அழைத்தார்.

''எஸ் எக்ஸலென்ஸி!'' என்றான் மாக்ரே. ''உனக்கும் நான் ஒரு தகவல் கொடுக்கமுடியும். அனந்த் என்று ஒருவன் இருக்கிறான், அந்தக் கூட்டத்தில்... அவன் அபாயமானவன், மிகத் தந்திரசாலி யென்றும் கேள்வி'' என்றார்.

''அவனை எனக்குத் தெரியும்'' என்றான் மாக்ரே.

''எப்படித் தெரியும்?''

''அவன் எனது நண்பன். நமது கட்சியில் இருக்கிறான்.''

''அவனை எங்கே சந்தித்தாய்?''

''அது என் ரகசியம்'' என்ற மாக்ரே, கவர்னருக்குத் தலை வணங்கி மாடிப்படிகளில் இறங்கிச் செல்ல முயன்றான். இரண்டாவது படியில் வால்டர் ப்ரெளன் நின்றிருந்தான். ''கவர்னரிடம் நீ ஏன் முக்கிய விஷயத்தை மறைத்தாய்?'' என்று வினவினான் ப்ரெளன்.

''என்ன விஷயம்?'' என்று கேட்டான் மாக்ரே.

''கனோஜியிடம் நீ செய்துகொண்ட ஒப்பந்தம்'' என்றான் ப்ரெளன்.

அடுத்த விநாடி ப்ரெளன் மிரண்டு விழித்தான். அவன் வாய் அடைந்துவிட்டது. மாக்ரேயின் ட்ரெளஸர் பையிலிருந்து சிறு துப்பாக்கியொன்று கிளம்பி அவன் முகத்துக்கு எதிரே நிலைத்து நின்றது.

## அத்தியாயம் - 58

# சுவர்க் கோழி!

கவர்னர் மாளிகையில், அதுவும் அவர் அறையின் வாயிலில் காப்டன் மாக்ரே அத்தகைய துணிகரச் செயலில் இறங்குவான் என்பதைக் கனவிலும் நினைக்காத ப்ரெளன் முகத்தில் மிதமிஞ்சிய அச்சம் நிலவியது. அந்த அச்சத்தையும், அச்சத்தின் விளைவாக ப்ரெளனின் உடலில் ஊடுருவிச் சென்ற நடுக்கத்தையும் கண்ட மாக்ரே லேசாக நகைத்ததோடு நில்லாமல், ''தகுதிக்கு மீறிய அந்தஸ்தைப் பெறுபவர்களுடைய நிலைமையெல்லாம் இப்படித்தான்!'' என்றும் கூறினான், கையிலிருந்த ரிவால்வரை லவலேசமும் அகற்றாமல்.

வால்டர் ப்ரெளன் முகத்தில் சட்டென்று அச்சம் மறைந்தது. ''தகுதிக்கு மீறிய அந்தஸ்தை யார் பெற்றார்கள்? கொடுத்தது யார்?''என்று வினவினான் கோபத்துடன்.

''பெற்றது நீ. கொடுத்தது ஹிஸ் எக்ஸலன்ஸி. நமது கவர்னர்'' என்றான் மாக்ரே, ப்ரெளனின் கோபத்தைச் சிறிதும் லட்சியம் செய்யாமல்.

ப்ரெளனின் கண்களில் குள்ளநரியின் தந்திரச் சாயை துளிர்த்தது. ''கவர்னரின் முடிவுகளைப் பற்றி நீ கேள்வி கேட்கிறாய்'' வாசகத்தை முடிக்கவில்லை ப்ரெளன்.

''நான் அல்ல கேட்பது...'' என்றான் மாக்ரே, இதழ்களில் புன்முறுவலைப் படரவிட்டுக்கொண்டு.

''வேறு யார் கேட்கிறார்கள்?''

''எல்லோரும் கேட்கிறார்கள்; போர் அனுபவமற்ற குமாஸ்தாவை கவர்னர் எப்படிப் பிரிட்டிஷ் கடற்படைக்குத் தலைவனாக நியமித்தார் என்று கேட்கிறார்கள். அதுவும் கனோஜி ஆங்கரே போன்ற இணையிலாக் கடல் வீரனுக்கு எதிராக அனுப்பி,

ஏன் பிரிட்டனுக்குத் தோல்வியையும் நஷ்டத்தையும் சம்பாதித்துக் கொடுக்கிறார் என்றும் கேட்கிறார்கள்.''

''எதிரியைப் புகழ ஆரம்பித்துவிட்டாய்.''

''எந்த வீரனையும் புகழ்வேன்! அவன் எதிரியாக இருந்தாலும் அதைப்பற்றிக் கவலையில்லை.''

இதற்கு மேல் பதில் சொல்லத் தெரியாத ப்ரெளன், ''நீ கவர்னருக்குத் துரோகி,பிரிட்டனுக்குத் துரோகி!'' என்று கூவினான்.

மாக்ரேயின் கண்கள் சினத்தைக் கக்கின. ''இருவருக்கும் துரோகி நீதான். கனோஜியைப் பற்றிய உண்மை நிலைமையைக் கூறாதது நீ செய்த முதல் குற்றம். உன்னால் கடற்படையை நடத்தமுடியாது என்பதைச் சொல்லாதது இரண்டாவது குற்றம். தோல்வியடைந்து கவர்னர் கஷ்டப்பட்டுப் பெரும் செலவில் கட்டிய ப்ராம் போன்ற கப்பல்களைத் தொலைத்தும் நீ பதவியி லிருப்பது மூன்றாவது குற்றம். நீ செய்ததெல்லாம் உன்னை நம்பிய கவர்னரையும் நாட்டையும் காட்டிக் கொடுத்ததுதான். உன்னைப் பற்றி கவர்னரிடம் நான் பேச ஏதாவது ஒரு சமயம் கிடைக்கும். அப்பொழுது அவரிடம் விரிவாகச் சொல்கிறேன்'' என்றான் மாக்ரே. அப்பொழுதுதான் வால்டர் ப்ரெளன் தனக்கு விரித்த வலையைப் புரிந்துகொண்டான்.

''அந்தச் சமயம் உனக்கு இப்பொழுது கிடைத்துவிட்டது'' என்ற குரலைக் கேட்ட மாக்ரே பளிச்சென்று திரும்பினான். திரும்பிய வேகத்தில் வாயிற்படிக்கு வெகு அருகில் நின்ற கவர்னர் மீது மோதிவிட்டுக் கீழே விழ இருந்த கவர்னரைத் தாங்கிப் பிடித்து நிற்க வைத்தான்.

கவர்னர் திடமாக நின்று தமது உடையைச் சரிசெய்து தட்டி விட்டுக் கொண்டார். ''காப்டன் மாக்ரே! நீ சொல்ல வேண்டியதைச் சொல்லலாம்'' என்றார்.

''இன்னும் இவன் சொல்லவேண்டியது என்ன இருக்கிறது?'' என்று ப்ரெளன் கேட்டான்.

கவர்னர் தன் கையசைப்பினால் ப்ரெளனை அடக்கினார். பிறகு இருவரையும் உள்ளே வரச் சொல்லி, தாம் மீண்டும் பழையபடி சாளரத்தருகே சென்று சாய்ந்து நின்றுகொண்டார். மாக்ரே பேசலாம் என்பதற்கு அறிகுறியாகக் கையால் ஜாடை



காட்டினார். ப்ரெளன் பேசவில்லை. ''முதலில் நமது கடற்படைத் தலைவர் பேசட்டும். அவர் தங்களுக்கு முக்கியமான செய்தி வைத்திருக்கிறார்'' என்றான் மாக்ரே.

அடுத்துக் கவர்னர் ப்ரெளனைக் கவனித்தார். ''என்ன விஷயம்?'' என்று விசாரித்தார்.

அதுவரை தைரியசாலியாக இருந்த ப்ரெளனுடைய கால்கள் நடுங்கின. ''யுவர் எக்ஸலென்ஸி!'' என்று துவங்கினான்.

''சொல்.'' கவர்னர் முகம் கற்சிலையாக இருந்தது.

ப்ரெளன் சங்கடப்பட்டான்.

''முதலில் இவனை நான் விசாரித்துவிட்டுத் தங்களிடம் அனுப்புகிறேன்'' என்றான்.

''என்னால் விசாரிக்கமுடியும், சொல்'' என்று கவர்னர் அடம் பிடித்தார்.

ப்ரெளன் விழித்தான், எப்படித் துவங்குதென்று அறியாமல், அந்தச் சமயத்தில் மாக்ரே ப்ரெளனுக்குக் கை கொடுத்தான்.

''யுவர் எக்ஸலென்ஸி! நீங்கள் என் பின்னால் வருவதற்கு முன்புதான் இந்தக் கோழியைச் சுட என் கைத்துப்பாக்கியை எடுத்தேன்'' என்று கூறினான்.

''கோழி? யூ மீன்...'' என்று கவர்னர் திகைத்தார்.

''காக் (சேவல்)'' என்று பொருளை விளக்கினான் மாக்ரே.

''நான் கோழியல்ல'' என்றான் ப்ரெளன்.

''கவர்னரிடம் சதா கோள் சொல்லும் நீ யார்?'' என்று கேட்டான் மாக்ரே.

ப்ரெளன், கவர்னரைப் பரிதாபமாகப் பார்த்தான். ஆனால் ஏதும் பேசவில்லை. மாக்ரேயே பேசினான். ''எக்ஸலென்ஸி! உங்களிடம் நான் ஓர் ஒப்பந்தத்தை மறைத்ததாக இந்தக் கோழி குற்றம் சாட்டினான்'' என்று.

''நான் கோழியல்ல?'' என்று சீறினான் ப்ரெளன்.

''டஸ் நாட் மாட்டர் வாட் யூ ஆர். டெல் மி வாட் த மாட்டர் ஈஸ் ( நீ எதுவாயிருந்தாலும் பாதகமில்லை. விஷயம் என்ன வென்று சொல்)'' என்று கவர்னர் வினவினார்.

ப்ரௌன் பதில் பேசவில்லை. ''எக்ஸலென்ஸி! ஹி ஹாஸ் கால்ட் மி எ ட்ரெய்டர், ஹி மஸ்ட் ப்ரூவ் இட். ஆர் கிவ் மி ஸாடிஸ்ஃபாக்ஷன் (இவன் என்னை ராஜத் துரோகி என்றான். ஒன்று அதை நிரூபிக்கவேண்டும் அல்லது என்னுடன் போரிட வேண்டும்)'' என்று மாக்ரே கூறினான்.

ப்ரௌனின் உடல் நடுக்கம் கண்டது. மாக்ரேயுடன் சண்டையிட்டால் கோழியைச் சுடுவது போல் தன்னைச் சுட்டுவிடுவான் என்பதைப் புரிந்து கொண்டதால், ''ஐ நெவர் கால்டு யூ ட்ரெய்டர் (உன்னை நான் துரோகியென்று அழைக்கவில்லை)'' என்றான்.

மாக்ரேயின் உயர்ந்த உருவம் மெள்ள ப்ரௌனை நெருங்கியது. ''யூ ராட்! ஹௌ நாட் டெல் த கவர்னர் நௌ, வாட் யூ வுட் ஸே இன் மை ஆப்ஸன்ஸ் (அடே எலி! நான் இல்லாதபோது கவர்னரிடம் சொல்லப் போவதை இப்பொழுதே சொல்)'' என்று சீறினான் மாக்ரே. ப்ரௌனை அதிகமாக நெருங்கி, அவனைக் கன்னத்தில் அறையக் கையையும் ஓங்கினான்.

''ஸ்டாப் இட்!'' என்ற கவர்னரின் அதிகாரக் குரல் மாக்ரேயின் கையைத் தேக்கியது. ''காப்டன் மாக்ரே கம் அண்ட் ஸிட் டௌன் (இங்கு வந்து உட்கார்)'' என்ற அழைப்பும் கவர்னரிடமிருந்து வந்தது.

மாக்ரே திரும்பிப் பார்த்தான். தனக்கும் ப்ரௌனுக்கும் நடந்த உரையாடலின்போது கவர்னர் தமது நாற்காலியில் அமர்ந்து கைகளை மேஜையின்மீது ஊன்றிக் கொண்டுவிட்டதையும் அவர் முகத்தில் தீவிர யோசனை உலாவுவதையும் கண்டான். அவர் கட்டளைப்படி அவருக்கு எதிரிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்தும் கொண்டான்.

பிறகு கவர்னர், ப்ரௌனை நோக்கி, ''நௌ யூ கான் லீவ் அஸ் (இனி நீ எங்களை விட்டுச் செல்லலாம்)'' என்றார்.

''நான் ...தங்கள்...''என்று துவங்கினான் ப்ரௌன்.

''என் கடற்படைத் தலைவன்'' என்று வாக்கியத்தை முடித்த கவர்னர், ''அதனால்தான் நீ பிராணனை விடுவதை நான் விரும்பவில்லை. இந்த மாக்ரே துஷ்டன். உங்கள் இருவருக்கும் சண்டை நடந்தால், விளைவு உனக்கே தெரியும்''என்று கூறினார்.



ப்ரௌனின் கோபம் தலைக்கேறினாலும், தனது பலவீனத்தையும் சற்று முன்பு தன்னை நோக்கிய துப்பாக்கியின் பயங்கர வாயையும் எண்ணி அந்த அறையைவிட்டு அகன்றான். அவன் போனதும் கவர்னர் தமது நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து கொண்டார். ''நௌ டெல் மி'' என்றார்.

மாக்ரே பதில் ஏதும் சொல்லவில்லை. தனது கோட்டின் உட்புறம் கையை விட்டு அதிலிருந்த ஒப்பந்தத்தை எடுத்து கவர்னரிடம் நீட்டினான். கவர்னர் அதை வாங்கிப் பிரித்துப் படித்தார். பிறகு திரும்ப அதை மாக்ரேயிடம் கொடுத்தார்.

''இதை எந்த இடத்தில் கையெழுத்திட்டாய்?''என்று சர்வ சாதாரணமாக வினவினார்.

மாக்ரே உண்மையைச் சிறிதும் ஒளிக்காமல் சொன்னான்: ''கனோஜியின் அரண்மனையில் '' என்று.

''நீ இந்தக் கடல் ராணியை நம்ப முடியுமா?'' கவர்னரின் அடுத்த கேள்வி எழுந்தது.

''முடியும்.!''

''இந்த ஒப்பந்தத்தின்படி ஐந்து கப்பல்களுடன் நீ போக வேண்டும்.''

''குறைந்த பட்சம் ஐந்து கப்பல்களுடன் என்று இருக்கிறது வாசகம்.''

''ஐ.ஸி.''

''எஸ் யுவர் எக்ஸலென்ஸி! நான் ஐந்து கப்பல்களுடன் போனால் அவர்கள் கையாளாக இருக்கவேண்டும். பத்துக் கப்பல்களுடன் சென்றால், அதாவது அவர்கள் எதிர்பாராத பலத்துடன் சென்றால், நிலைமை வேறு.''

புரிந்துகொண்டதற்கு அறிகுறியாகக் கவர்னர் தலையை அசைத்தார். மாக்ரே தனது திட்டத்தை விவரித்தான்: ''யுவர் எக்ஸலென்ஸி! நான் முதலில் ஐந்து கப்பல்களுடன் போவேன். ஒப்பந்தப்படி மீதி ஐந்து கப்பல்கள் நான் புறப்பட்ட மறுநாள் புறப்படும். எதிரிகளுடன் நான் இணையும்போது ஐந்து கப்பல்கள் இருக்கும். காஸண்ட்ரா கைவசமானதும் எதிரிகளை மடக்கிப்

பிடிக்கவும், அவர்கள் கப்பல்களை அழிக்கவும் மீதி ஐந்து கப்பல்கள் என்னுடன் சேர்ந்து கொள்ளும். ஐந்து புதுக் கப்பல்கள் போருக்குப் பிறகு களைத்து நிற்கும் எதிரிக் கப்பல்களை வளைத்துக் கொள்ளும் முடிவை நான் விவரிக்கத் தேவையில்லை'' என்று கூறினான்.

அத்துடன் நிற்கவில்லை மாக்ரே. தனது பையிலிருந்து இன்னொரு காகிதத்தையும் எடுத்து கவர்னர் முன்பாக விரித்தான். கவர்னர் கூர்ந்து அந்தக் காகிதத்தில் கண்ட படத்தை ஆராய்ந்தார். அராபியக் கடலின் கடற்பகுதி அதில் வரையப்பட்டிருந்தது. ஐந்து பிரிட்டிஷ் கப்பல்கள் எதிரிகளைச் சந்திக்குமிடம், மற்றவை மறைந்து நிற்கும் குடைவரைப் பகுதிகள், எல்லாவற்றையும் விவரமாக வரைந்திருந்தான் மாக்ரே.

''எந்த இடத்தில் எதிரிகளுடன் மோதுவாய்?'' என்று வினவினார் கவர்னர்.

''இந்த இடத்துக்கு நமது எதிரிகளை, இல்லை, நண்பர்களை அழைத்து வருவேன். இங்கு அவர்கள் நம்மிடம் சிறைப்படுவார்கள். லாபூஷே, அனந்த், டெய்லர், இங்க்லண்ட், ஆல் ஆஃப் தெம், அதாவது இவர்களில்- போரில் சாகாதவர்கள்'' என்றான் மாக்ரே.

மாக்ரேயின் விரல் பதிந்து நின்ற இடத்தை கவர்னர் கவனித்தார்.

''விஜயதுர்க்கத்தின் சிறிது கீழே,சிந்து துர்க்கத்திற்குச் சிறிது மேலே. நல்லது நல்லது, நல்ல இடம் மாக்ரே! உன்னைப் பாராட்டுகிறேன்'' என்றார் கவர்னர்.

''எதிரிகளுடன் நான் செய்துகொண்ட ஒப்பந்தம்...'' என்றான் மாக்ரே நகைத்து.''இந்த ஆண்டின் முதல்தர ஜோக்-நோ நோ. தட் ஈஸ் ராங்-ஐ ஷுட் ஸே டிப்ளமாடிக்-ராஜதந்திரம்'' என்ற கவர்னர் மாக்ரேயுடன் சேர்ந்து நகைத்தார்.

கவர்னர் அறையின் சாத்தப்பட்ட கதவுக்கு அப்புறத்தில் நின்று அனைத்தையும் சுவர்க்கோழி போல் ஒட்டுக்கேட்ட ப்ரௌன் இருவர் நகைப்பையும் கேட்டவுடன் கோபத்தால் முகம் சிவக்கப் படிகளில் பூனைபோல் இறங்கிச் சென்றான்!

## அத்தியாயம் - 59

# இணைந்த கைகள்!

பம்பாய் துறைமுகத்தில் கவர்னர் மாளிகையில் காப்டன் மாக்ரே, கவர்னர் முன்பாக விரித்த அரபிக் கடற்பகுதிப் படத்தில் எந்த இடத்தில் தனது ஆள்காட்டி விரலை ஊன்றியிருந்தானோ அதே இடத்தில் அதே இரவில் 'கடல் ராணி'யின் தனது அறையில் அதே மாதிரிப் படத்தில் தனது ஆள்காட்டி விரலை ஊன்றியிருந்தான் காப்டன் லிவாஸியர்.அவன் மேஜையைச் சுற்றி அமர்ந்திருந்த அனந்தும், சாருவும், ரத்னாவும் அவன் விரல் பதிந்து கிடந்த இடத்தை ஆச்சரியமும் குழப்பமும் கலந்த உணர்ச்சிகளுடன் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

அன்று பகல் போஜனத்தின்போது ''மாக்ரேயை இன்னும் நான்கு நாட்களில் நாம் சந்திப்போம்!'' என்று லிவாஸியர் அறிவித்த போது ஏற்பட்ட சந்தேகங்களும், ஆட்சேபணை சமாதானங்களும் அப்பொழுதும் அவர்கள் சிந்தனையில் இருந்தன. உணவுக்கு முந்தி லிவாஸியர் செய்த பிரார்த்தனை முடிந்ததும் அவள் செய்த அந்த அறிவிப்பில் நிச்சயம் இருந்தது. சந்திப்போடு வெற்றியும் கொள்வோம் என்ற சூசனையும் இருந்ததை உணவு மேஜையைச் சுற்றி உட்கார்ந்திருந்த அனைவருமே கவனித்தார்கள். ஆனால், மாக்ரேயைச் சந்திக்க நான்கு நாட்கள் எதற்கு என்ற சந்தேகம் மற்றவர்களுக்கு ஏற்பட்டாலும் அனந்துக்கு ஏற்படாததால் அவன் கேள்வி ஏதும் கேட்கவில்லை. ஆனால், ராணி மட்டும் கேட்டாள்:''மாக்ரேயைச் சந்திக்க நான்கு நாட்கள் எதற்கு?''என்று.

லிவாஸியர் தனது உணவுத் தட்டிலிருந்து கண்களைச் சிறிது தூக்கி ராணியின் கண்களைச் சந்தித்தான்.''ராணி! நீ என்னிடம் இந்த மாதிரி கேள்விகளைக் கேட்பாய் என்பது முன்னமே தெரியும். நீ என்னை முழுதும் நம்பவில்லை என்பதும் எனக்குத் தெரியும்!'' என்று கூறினான்.

இந்தச் சமயத்தில் சற்று எட்ட உட்கார்ந்திருந்த ஸில்வர் தனது தோளின் மீதிருந்த அசுரக் கிளிக்குத் தட்டிலிருந்த ஒரு மாமிசத்

துண்டை ஊட்டிக்கொண்டே சொன்னான்,''உன்னை யாரும் நம்பமுடியாது. நான்கூட நம்பவில்லை!''என்று.

லிவாஸியரின் இதழ்களில் புன்முறுவல் அரும்பிற்று, ''நீ நம்பினால் என்ன நம்பாவிட்டால் என்ன?'' என்று லிவாஸியர் கேட்டான், ஒரு மாமிசத் துண்டைக் கத்தியால் கொத்தி எடுத்து வாயில் அடைத்துச் சுவைத்த வண்ணம்.

''ராணியின் நம்பிக்கை மட்டும்தான் உனக்கு வேண்டு மாக்கும்?'' என்று விஷமத்துடன் வினவினான் ஸில்வர்.

இதைக் கேட்ட ராணியின் முகம் சிவந்தது சினத்தால், அதை லிவாஸியரும் கவனித்திருக்கவேண்டும். அடுத்து வந்த அவன் சொற்களில் பயங்கரமான ஏதோ ஒரு ஒலி ஊடுருவி நின்றது.

''எந்தப் புத்திசாலியின் நம்பிக்கையும் எனக்கு வேண்டும். இங்குள்ள மாலுமிகளில் முக்கால்வாசிப் பேர் ராணியைச் சேர்ந்தவர்கள். ராணி என்னை நம்பினால், அவர்கள் என்னை நம்புவார்கள். அடுத்து சாரு, பேஷ்வாவின் உறவினள். அவள் தயவிருந்தால் கரையில் இறங்கும்போது நமது வலு அதிகமாகும். அனந்தைப் பற்றி நான் உனக்குச் சொல்ல வேண்டியதில்லை. அவர் உன்னையும் என்னையும் எல்லோரையுமே அழித்துவிடும் ஆற்றலும் அறிவும் உள்ளவர்...'' என்ற லிவாஸியர் தனது பேச்சைப் பாதியிலேயே நிறுத்தினான்.

அந்த நிறுத்தத்திலேயே அபாயம் இருந்ததை ஸில்வர் கவனித்தான். இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல்வினவி னான்:''அறிவாளிகள் பட்டியலில் என் பெயரைச் சேர்க்க வில்லையே... ஏன்?''என்று.

லிவாஸியர் மேலும் வாயிலிருந்த மாமிசத்தைச் சுவைத்த வண்ணம் ஸில்வரை விஷமக் கண்களால் பார்த்தான்.''அறிவாளி என்று நீயே உன்னை நம்புகிறாயா?''என்று கேட்டான்.

ஸில்வர் மெள்ள மெள்ள நிதானத்தை இழக்கத் தொடங் கினான்.''நம்பினால் அது தவறா?''என்று வினவிய அவன் குரலில் சினத்தின் சாயை இருந்தது.

லிவாஸியர் தனது நாற்காலியில் நன்றாகச் சாய்ந்துகொண்டு கால்களையும் நீட்டினான் மேஜைக்கு அடியில். ஏதோ கதை சொல்வது போல் பேசலானான்:''ஸில்வர்! இந்தக் கப்பலில் உள்ள மால்வானிகள் அனைவரும் உன்னைப்பற்றி அறிவார்கள். நீ



மலையாளத்தில் செய்துள்ள கொலைகளைப் பற்றி அறிவார்கள். டெய்லர், இங்க்லண்ட் இவர்களின் பெயர்களைப் போல் உன் பெயரும் அரபிக் கடல் பகுதியில் பிரசித்தம். அப்பேர்ப்பட்ட நீ டெய்லரையும் இங்க்லண்டையும் எச்சரிக்க உன் கிளியைப் பகிரங்கமாகத் தூது விட முனைந்தாய். இது அறிவுள்ளவன் செயலா? அது கிடக்கட்டும். நாளைப் பாண்டவ கட்டை நெருங்குவதானால் சிந்து துர்க்கத்தைத் தாண்டித்தான் வரவேண்டும். இவ்வளவு பெரிய கப்பலைக் கவனிக்காமல் இருக்க டெய்லரும் இங்க்லண்டும் அத்தனை அறிவிலிகளா? அறிவாளியாயிருந்தால் இவற்றை யெல்லாம் நீ கவனித்திருப்பாய். கவனித்திருந்தால் கப்பல் தளத்திலிருந்து அவர்களுக்குக் கிளியைத் தூது விட நினைத்திருக்க மாட்டாய். அப்பா! அதற்குப் பிறகு உன்னைத் தப்புவிக்க மால் வானிகளை நான் எத்தனை தூரம் சமாதானப் படுத்த வேண்டி யிருந்தது!''என்று அலுத்துக்கொண்டான் லிவாஸியர்.

அவனது ஒவ்வொரு சொல்லிலும் ஏளனமும், 'நீ முட்டாள், நீ முட்டாள்' என்ற உட்பொருளும் ஒலித்ததை ஸில்வர் மட்டுமல்ல மற்றவர்களும் உணர்ந்தார்கள். ஏதோ பயங்கர முடிவுக்கு ஸில்வரை அழைத்துச் செல்ல லிவாஸியர் இவ்வித உரையாடலில் இறங்கி யிருக்க வேண்டும் என்பதும் மற்றவர்களுக்குத் தெளிவாக விளங்கியது. கோபத்தால் நிதானத்தை அறவே கைவிட்ட ஸில்வருக்கு மட்டும் அது விளங்காததால் அவன் முகத்தில் வெறி பெரிதும் குடி கொண்டது. சாதாரணமாக மிக நிதானத்தைக் காட்டும் கண்களில் கோபாக்கினி துளிர்த்தது. ''என்னை அவதூறு கூறிவிட்டுப் பிழைக்கும் மனிதன் மாநிலத்தில் கிடையாது'' என்றான் சீற்றம் நிரம்பிய குரலில்.

''மாகடலில்?''என்று கேட்டான் லிவாஸியர்.

''என்னிடம் விளையாடாதே லிவாஸியர்.உன்னைக் கொல்ல எனக்கு விருப்பம் இல்லை''என்றான் ஸில்வர்.

''நான் கேதலிக்'' என்றான் லிவாஸியர். அத்துடன், ''லோ ஐ பிலீவ் அவர் லைஃப்ஸ் ஆர் இன் த ஹாண்டஸ் ஆஃப் அவர் குட் லார்ட் (நான் கேதலிக் ஜாதி. ஆகையால் நமது உயிர்கள் ஆண்டவனிடம் இருப்பதாக நினைக்கிறேன்)'' என்றும் கூறினான். மேலும் தொடர்ந்தான்: ''நான் பிரார்த்தனை செய்தபோது நீ பிரார்த்தனை செய்யவில்லை. ஐ பிலீவ் யூ ஆர் எ ஹெரிடிக் (நீ ஒரு நாஸ்திகன் என்று நினைக்கிறேன்)''என்று.

அவன் வலையில் மேலும் விழுந்த ஸில்வர் சட்டென்று தனது கைத்துப்பாக்கியை எடுத்து லிவாஸியர் முன் நீட்டினான், மேஜைக்கு குறுக்கே. ''மை டியர் லிவாஸியர்! ஸப்போஸ் ஐ ஸெண்ட் யூ டு யுவர் பிலவ்ட் லார்ட்? (லிவாஸியர் டியர்,உன்னை உனது ஆண்டவனிடம் அனுப்பினால்)'' என்று கேட்டு நகைத்தான்.

மேஜையைச் சுற்றியிருந்த மற்றவர்கள் அதிர்ச்சியுற்றாலும் அனந்தும் லிவாஸியரும் சிறிதும் கலங்கவில்லை. லிவாஸியர் சொன்னான்: ''காட் டஸ் நாட் வாண்ட் மி நௌ (கடவுள் இப்போது என்னை அழைக்கவில்லை)'' என்று. ''உன்னையும் அழைக்கவில்லை நீ நாஸ்திகன் என்பதால்; ஆனால், நரகம் உன்னை அழைக்கிறது. அங்கு உன்னை அனுப்ப முடியும்'' என்றும் கூறினான்.

ஸில்வருக்கு ஏதும் புரியவில்லை. தன்னையும் மீறிய விவகாரம் ஏதோ நடந்திருக்கிறது என்று நினைத்தான். அப்பொழுது சொன்னான் லிவாஸியர்: ''ஸில்வர்! நீ அறிவாளியாயிருந்தால் எனது இடது கை மேஜைமீது இல்லை என்பதைக் கவனித்திருக்க வேண்டும். அதில் ஒரு சிறு கைத்துப்பாக்கி உன் வயிற்றை நோக்கி விழித்துக்கொண்டிருப்பதை நீ ஊகித்திருக்க வேண்டும். ஒரு நாயைச் சுடுவதுபோல் உன்னை இப்போது நான் சுட்டுவிட முடியும். உன்னுடைய துப்பாக்கியின் குதிரை இழுக்கப்படுமுன் விவகாரம் முடிந்துவிடும். ஆனால், நான் கண்ணியமுள்ளவன். உன்னைக் கொலை செய்ய இஷ்டப்படவில்லை. வெளியில் கப்பல் தளத்தில் என்னைச் சந்திக்கலாம். எந்த ஆயுதங்களைக் கொண்டு போரிடுவது, பிஸ்டலா, கத்தியா என்பதை நீயே முடிவு செய்யலாம்'' என்று.

ஸில்வர் குதித்து எழுந்தான். ''கத்திகளே போதும், உன்னைக் கொல்ல!'' என்றான்.

''குட் (நல்லது)''என்று லிவாஸியர் கூறினான் புன்னகையுடன்.

''இதில் நல்லது என்ன இருக்கிறது?'' என்று வினவினான் ஸில்வர்.

''நான் அனந்தைப் போல் கருணை உள்ளவன் அல்ல; கையிலும் காலிலும் சுடமாட்டேன். என் துப்பாக்கி எப்பொழுதும் புருவத்தின் மத்தியை அல்லது நெஞ்சை நோக்கும். கத்தி அத்தனை தீமை விளைவிக்காது''என்று கூறி எழுந்தான் லிவாஸியர்.

ஸில்வரும் மற்றவர்களும் எழுந்தனர் வெளியே தளத்தில் கத்திகளுடன் இருவரும் சந்தித்தனர். சண்டை மூன்று நிமிடங்கள் கூட நடக்கவில்லை. லிவாஸியரின் வாள் ஸில்வரின் வலது கையில் பாய்ந்தது. ''ஸில்வரை அழைத்துச் சென்று காயத்துக்குக் கட்டுப்



போடுங்கள். மதுவை நிரம்பக் கொடுங்கள். அவன் தூங்கட்டும்'' என்று சற்று எட்ட நின்றிருந்த தனது உதவி காப்டனுக்கு உத்தரவிட்ட லிவாஸியர், ஏதுமே நடக்காததுபோல் மற்றவர்களுக்குத் தலை சாய்த்து விட்டுத் தனது அறையை நோக்கி நடந்துவிட்டான்.

இந்தச் சண்டையில் அனந்த் தலையிடவில்லை. அவனை இரு பெண்களும் காரணம் கேட்டபோது, ''இந்தச் சண்டை சாதாரணமாக ஏற்பட்டதல்ல. இதைப்பற்றி இன்றிரவு நாம் அதிகமாக அறியமுடியும்'' என்று காரணம் சொன்ன அனந்த் அவர்களை அழைத்துக்கொண்டு அவர்கள் அறைக்குச் சென்றான்.

அவன் சொன்னபடிதான் நடந்தது. இரு பெண்களையும் அனந்தையும் அன்றிரவு தனது அறையில் சந்திக்கும்படி செய்தி அனுப்பினான் லிவாஸியர். அவர்களது மூவரும் உள்ளே நுழைந்தபோது லிவாஸியர் மேஜைக்கு எதிரே நின்றுகொண் டிருந்தான். மேஜையில் அரபிக் கடல் கரைப் பகுதியின் படம் விரிக்கப்பட்டிருந்தது. அதில் ஓர் இடத்தில் திடமாக ஊன்றியிருந்தது அவன் விரல். அதை நோக்கி ராணி ஒரு புறமும் சாரு ஒரு புறமும் வர நடந்து சென்றான் அனந்த். மூவரும் மேஜையைச் சுற்றி அமர்ந்து கவனமாக நோக்கினார்கள். லிவாஸியரின் விரல் 'தேவ்கர்' துறைமுகத்தின்மீது ஊன்றியிருந்தது. அது சொல்லிய கதை மூவருக்கும் புரிந்தது. மூவரில் அனந்தின் கண்களில் மட்டும் சிறிது சந்தேகச் சாயை படர்ந்தது. அதைக் கவனித்த லிவாஸியர் சொன்னான், ''கதவை மூடிவிடு ராணி''என்று. ராணி சென்று கதவை மூடிவிட்டு வந்தாள்.

''நௌ அனந்த்! லெட் அஸ் எக்ஸாமின் த பொஸிஷன் (அனந்த் இப்பொழுது நிலைமையை ஆராய்வோம்)''என்றான்.

அனந்த் தலையை ஆட்டினான். லிவாஸியர் சொன்னான்: ''மாக்ரே இங்கேதான் நம்மைச் சந்திக்க முயற்சி செய்வான்'' என்று.

அனந்த் அதற்கும் மௌனமாகவே தலை ஆட்டினான். பிறகு தனது ஆள்காட்டி விரலைப் படத்தின் வேறொரு இடத்தில் ஊன்றினான்.

''ரைட் கொய்ட் ரைட்''என்று குதூகலித்தான் லிவாஸியர். ''அனந்த் ஐ ஹாவ் நெவர் கம் அக்ராஸ் எ க்ளவரர் ஸெய்லர்! (நான் சந்தித்த மாலுமிகளில் உன்னைவிடச் சிறந்தவன் யாருமில்லை)'' என்று கூறி ''டு கெதர் வீ வில் மேக் இட்(நாம் இருவரும் இதற்கு முடிவு காண்போம்)''என்றும் சொல்லிக் கையை நீட்டினான் அனந்தின் கையும் லிவாஸியர் கையும் இணைந்தன, இறுக்கிப் பிடித்தன ஒன்றை ஒன்று.

## அத்தியாயம் - 60

# கடல்போர்!

**லா** பூஷே என்று பிரசித்தமான காப்டன் லிவாஸியரும் இந்திரஜித் அனந்தும் மேஜைக்குக் குறுக்கே அதன் மீது விரிந்து கிடந்த படத்துக்கும் குறுக்கே கைகளை நீட்டி, ஒரு கையை இன்னொரு கை அழுத்திப் பிடிக்க நின்றிருந்த காட்சி, மூன்றாவது மனிதர்களுக்கு, சூக்ஷ்மமில்லாத புத்திகளுக்கு, வியப்பாய் இருக்கலாம் காரணம் புரியாமலும் இருந்திருக்கலாம். ஆனால் அனந்தின் இருபுறமும் நின்ற பெண்களுக்கு அவ்விரு வீரர்களின் செய்கையில் எந்தவித வியப்போ குழப்பமோ இல்லை. அவர்கள் இருவரும் கூட லேசாகத் தங்கள் தலைகளை அசைத்தார்கள், புரிந்து கொண்டதற்கு அறிகுறியாக!

கைகளை இணைத்து நின்ற அந்த இரு கடல் வீரர்களின் கண்கள் கூட இணைந்து நின்றன சில விநாடிகள். ''டு கெதர் வீ வில் மேக் இட் (நாமிருவரும் இதற்கு முடிவு காண்போம்)''என்று லிவாஸியர் கூறிய பிறகு, இருவரும் நீண்ட நேரம் மௌனமே சாதித்தாலும் அந்த மௌனத்திலும் அர்த்தங்கள் புதைந்து கிடந்தன. வாய்கள் பேசாவிட்டாலும் இதயங்கள் பேசிக்கொண்டுதான் இருந்தன. சிறிது நேரம் கழித்து அனந்தின் கையிலிருந்து தனது கையை விடுவித்துக் கொண்ட லிவாஸியர் சொன்னான்: ''நௌ வி கான் எக்ஸ்ப்ளெய்ன் த பொஸிஷன் டு த விமன் (இனி நிலைமையை நாம் பெண்களுக்கு விளக்கிச் சொல்வோம்)''என்று.

இதைக் கேட்டதும் அதுவரை மௌனமாக நின்றிருந்த ராணி, சாரு இருவருமே மெள்ள, மதுரமாக, இகழ்ச்சி ததும்ப, நகைத் தார்கள். அவர்கள் நகைப்பைக் கேட்ட அனந்த் புன்முறுவல் கொண்டான். லிவாஸியர் முகத்தில் மிதமிஞ்சிய பிரமிப்பைக் காட்டினான். ''லேடீஸ்!ஆம் ஐ டு டேக் இட் தட் யூ போத் அண்டர்ஸ் டாண்ட் த ஸ்ட்ராடஜீ (பெண்களே! உங்கள் இருவருக்கும் நமது



போர்த் தந்திரம் தெரிந்துவிட்டதென்று நான் தீர்மானிக்கலாமா?'' என்று வினவினான்,பிரமிப்பு குரலிலும் விரிய.

இதற்குப் பதில் சாருவிடமிருந்து வரவில்லை. ராணியே பதில் கூற முற்பட்டு,''காப்டன் லிவாஸியர்!பெண்கள் என்றால் புத்தி குறைந்தவர்கள்,ஆண்களின் விளையாட்டுக் கருவிகள் என்று நினைப்பதைப் போல் அறிவுகெட்ட விஷயம் உலகத்தில் வேறு எதுவுமில்லை. ஐ கான் டெல் யூ யுவர் ப்ளான் இன் டிடெய்ல் அண்ட் இட் ஹாப்பன்ஸ் ஐ நோ மோர் அபௌட் த வெஸ்டர்ன் ஸீ போர்ட் தான் அய்தர் ஆஃப் யூ (உங்கள் திட்டத்தை நான் உங்களுக்கு விளக்கிச் சொல்ல முடியும். தவிர மேற்குக்கடற் கரையைப் பற்றி உங்கள் இருவரைவிட எனக்கு அதிகமாகத் தெரியும்)'' என்று சொன்னாள்.

இதைக் கேட்ட லிவாஸியரின் முகம் அதிகப் பிரமிப்பைக் காட்டியதென்றால் அடுத்தபடியாகப் பெரிய அதிர்ச்சி அவனுக்குச் காத்திருந்தது. ''ராணி! மேற்குக் கடற்கரையைப் பற்றிக் கூறியபோது நீ என்னை மறந்துவிட்டாய் 'எனக்கு' என்பதை 'எங்களுக்கு' என்று நீ சொல்லியிருக்க வேண்டும்''என்றாள் சாரு நிதானமாக.

லிவாஸியர் சாருவின் மீது தனது அழகிய கண்களைத் திருப்பினான். ''உனக்கும் கடல் போர் பழக்கமுண்டா?''என்று வினவினான் அதிர்ச்சி மிகுதியால்.

சாருவின் கவர்ச்சி மிக்க விழிகள் பக்கவாட்டில் அனந்தைப் பார்த்தன ஒரு விநாடி. பிறகு லிவாஸியரின் கண்களைச் சந்தித்தன துணிவுடன். ''காப்டன்! தேர் ஈஸ் ஆன் ஓல்ட் ப்ராவர்ப் விச் ஸேஸ் எவ்ரி ஷிப் ஷுட் கம் டு இட்ஸ் ஹார்பர் ஒன் டே அண்ட் எவ்ரி வாக்ரண்ட் ஷுட் கம் ஹோம் ஸம் டே (காப்டன்! எந்தக் கப்பலும் ஒரு நாள் தனது துறைமுகத்துக்கு வரவேண்டும். திரியும் எந்த ஆண் மகனும் ஒரு நாள் இல்லம் திரும்ப வேண்டும். இப்படியொரு ஆங்கிலப் பழமொழி இருக்கிறது). அதனால் கப்பலுக்குக் கடல் எப்படி முக்கியமோ, அப்படித் தரையும் முக்கியம். நான் தரைக் கோட்டைகளில் பழகியிருக்கலாம். ஆனால், அதைச் சார்ந்த கடற் பகுதிகள் தெரியாதென்பது இல்லை''என்று கூறிய சாரு, '' நௌ லெட் மீ ஸீ வாட் வாஸ் கோயிங் இன் யுவர் மைண்ட் அண்ட் ஹிஸ் (இப்பொழுது பார்ப்போம். உங்கள் மனத்திலும் இவர்

மனத்திலும் ஓடிய எண்ணங்கள் யாவை என்பதைக் கவனிப்போம்)'' என்றும் சொல்லி, படத்தின்மீது குனிந்து தனது ஆள்காட்டி விரலை தேவ்கட் என்ற புள்ளியின்மீது வைத்தாள். பிறகு ராணியைத் திரும்பி நோக்கினாள். சரியென்பதற்கு அறிகுறியாக ராணி தலையசைத்தாள்.

சாரு தொடர்ந்தாள்: ''காப்டன் லிவாஸியர்!தேவ்கர் என்று அழைக்கப்படும் தேவ்கட் அதாவது தேவகோட்டையில் காப்டன் மாக்ரே உங்களைச் சந்திக்க முயலலாம் என்பது உங்கள் ஊகம். அதில் தவறும் இல்லை. தேவ்கட், விஜயதுர்க்கத்துக்குத் தெற்கில் பம்பாயிலிருந்து நூற்று எண்பது மைல் தூரத்தின் இருக்கிறது. தேவ்கட்டின் துறைமுகம் எந்தக் காலத்திலும் கப்பல்களால் அணுகக்கூடியது. இரு பக்கங்களிலும் இறங்கும் மலைப் பாறைகளால் அணைக்கப்பட்டது. துறைமுகத்தில் நுழைவாயில் அகலமானது. துறைமுகத்தின் ஆழம் பதினெட்டு அடிகளுக்கு மேல் இருக்கிறது. நல்ல வாட்டமாக அமைந்துள்ள துறைமுகம் அது. *''உக்கிரமான பருவ மழை பெய்யும் காலங்களிலும் கப்பல்கள் தேவ்கட்டில் நுழைந்து தங்கமுடியும். பௌர்ணமியிலும் அமாவாசையிலும் துறைமுக ஆழம் பெரிதாக இருக்கும். இத்தனைக்கும் இந்தத் துறைமுகம் வெளியிலிருந்து யார் கண்ணுக்கும் புலப்படாது. அதனால்தான் மாக்ரே 'கடல் ராணி'யையும் அதன் துணைக் கப்பல்களையும் இங்கு எதிர்பார்க்கிறான். இந்தத் துறைமுகத்தின் நுழைவாயிலை அடைந்துவிட்டால் உள்ளே இருக்கும் கப்பல்கள் வெளிவராது தடை செய்ய முடியும் என்று மாக்ரே நினைக்கிறான். ஆனால், அவனை வேறு வழியில் மடக்க நீங்கள் முயற்சி செய்கிறீர்கள்.''

இவ்வண்ணம் அவர்கள் திட்டத்தையும் தேவகோட்டைத் துறைமுகச் சிறப்பையும்,விளக்கிய சாரு, ராணியை நோக்கி, ராணி! தேவ்கட்டின் சரித்திரம் தெரியுமா உனக்கு?''என்று வினவினாள்.

கேள்வி ராணியை நோக்கிக் கேட்கப்பட்டதானாலும் அந்தக் கேள்வி தங்களுக்கும் ஏற்பட்டதென்பதை லிவாஸியரும் அனந்தும் புரிந்து கொண்டாலும் பதிலேதும் சொல்லாமல் மௌனமே சாதித்தார்கள்.

* Tailor's Sailing Directory Page 390 - 'It is high water on full and change of the moon at eleven hours; the rise and fall is about nine feet at spring tides.'



ராணி மட்டும் சொன்னாள்:''எனக்குத் தெரியாது. சரித்திர ஆராய்ச்சியாளருக்குத் தெரிந்திருக்கலாம்'' என்று.

சாருவின் புருவங்கள் கேள்வி கேட்பன போல் மேலே எழுந்தன.''ஆராய்ச்சியாளரா!''என்று வினவினாள் ஏதும் புரியாமல்.

''மாணவர் என்று சொல்லிக் கொள்ளுகிறார்''என்றாள் ராணி பதிலுக்கு.

''யார் அவர்?''சாரு விழித்தாள்.

''இவர்தான்''என்று அனந்தின் தோளைத் தொட்டுக் காட்டிய ராணி,''முதலில் சிந்து துர்க்கம் வந்தபோது அதன் சரித்திரத்தை விளக்க இவர் தவறவில்லை. தாம் ஒரு சரித்திர மாணவர் என்றும் சொல்லிக் கொண்டார்'' என்று கூறிய ராணி புன்முறுவல் செய்தாள்.

சாருவும் பதில் புன்முறுவல் செய்து,''அப்படியா!சிந்து துர்க்கம் வந்ததும் உன்னிடம் தனது ஆராய்ச்சித் திறமையைக் காட்டியிருக்கிறார் இவர்'' என்றாள்.

உரையாடலின் போக்கு அநாவசியத் திசையில் திரும்புவதைப் பார்த்த அனந்த், ''இந்த தர்க்கத்தைப் பிறகு வைத்துக் கொள்வோம், முதலில் தேவ்கட்டின் சரித்திரத்தைச் சொல்''என்று கூறினான்.

''சரித்திரம் இப்பொழுது எதற்கு?''என்று லிவாஸியர் வினவினான். எந்தச் சமயத்திலும் தெளிவாக இருக்கும் அவன் அழகிய வதனத்தில்கூட சிறிது குழப்பம் தெரிந்தது.

''சரித்திரம் நமக்குத் தெரியாத, நாம் பார்க்காத, பழைய உண்மைகளைக் கூறுகிறது. அது நமது திட்டத்துக்கும் கை கொடுக்கலாம்'' என்று அனந்த் கூறினான்.

அதற்கு மேல் லாபூஷே எந்த ஆட்சேபணையையும் கிளப்பவில்லை.''சொல்லுங்கள்''என்று சாருவை நோக்கிக் கூறினான். சாரு தேசப் படத்தில் தேவ்கட் இருந்த இடத்தில் தனது ஆள்காட்டி விரலை ஊன்றினாள். ''இந்தத் தேவ்கட் பழைய காலத்தில் தமார் என்று அழைக்கப்பட்டது. இது அழகிய வட்டமான துறைமுகம் என்றும் அலை குறைவாக இருக்கும் சமயத்தில் பெரும் கப்பல்களும் இதில் நுழையலாம் என்றும் *பழைய பயண நூல்களில்

* Prim, Rot Da costa da India, Page 23 - Mentioned as Toperon both by Ptolemy and Periplus, Refer Macrindle's Periplus, Page 129.

காணப்படுகிறது. கப்பல்களுக்கு இந்தத் துறைமுகம் ஆதிகாலத்தி லிருந்து பெரும் வரப்பிரசாதமாக இருந்திருக்கிறது. இந்தக் கோட்டை,இப்பொழுது ஓரளவு நிலத்தைத் தொட்டுக் கொண்டி ருந்தாலும் ஆதி காலத்தில் கடலால் சூழப்பட்டிருந்ததால் இது ஜன்ஜீரா (கடற் தீவுக் கோட்டை) என்று அழைக்கப்பட்டது'' என்று கூறினாள். ''இப்பொழுது இது நிலத்தைத் தொட்டுக் கொண்டி ருப்பதால் ஓர் அபாயம் இருக்கிறது. இந்தத் துறைமுகத்தில் நீங்கள் தங்கினால் தரைபீரங்கிகள் மூலம் உங்கள் கப்பல்கள் தாக்கப் படலாம்'' என்றும் சுட்டிக் காட்டினாள்.

மற்ற மூவரும் மிகுந்த வியப்புடன் சாருவை நோக்கினார்கள். சரித்திரத்தை விவரித்ததால் தேவ்கட் துறைமுகத்தில் தங்குவதால் ஏற்படக்கூடும் ஆபத்தைச் சாரு விளக்கியதால் எல்லோரையும் விட இந்திரஜித் பிரமித்தான். ''சாரு! உனக்கு இவ்வளவு தூரம் சரித்திர ஆராய்ச்சி இருக்குமென்று எனக்கு இந்த விநாடி வரை தெரியாது'' என்று தனது பாராட்டுதலைத் தெரிவித்தான்.

ராணியின் முகம் சிவந்தது. ''இப்பொழுது தெரிந்துவிட்ட தல்லவா?''என்று வினவினாள் சிறிது சினம் குரலில் தொனிக்க.

அனந்தின் புத்தி எங்கோ வேலை செய்து கொண்டிருந்ததால் ''புரிந்துவிட்டது'' என்று கூறினான்.

''சரி, உங்கள் ஆராய்ச்சி நடக்கட்டும். நான் போகிறேன்''என்று அறையை விட்டுக் கிளம்ப முற்பட்டாள்.

''சரித்திர ஆராய்ச்சி முடிந்துவிட்டது.நீ இவரை அழைத்துப் போகலாம்''என்றாள் சாருவும் சினத்துடன்.

''எதற்கு?''

''உனக்குத்தான் தெரியும்!''

''உனக்குத் தெரியாதோ?''

''தெரிய அவசியம் இல்லை.''

''ஏனோ?''

''ராணி இருக்கும்போது சாதாரணப் பிரஜைகளை யார் விரும்புவார்கள்?''

''விரும்பாமலா மலைக் குடிசைக்கு வந்தார்?''



''வந்து என்ன பயன்? அங்கேயுந்தான் நீ தொடர்ந்து வந்து விட்டாயே?''

இதைக் கேட்டதும் ராணி வெகுண்டெழுந்தாள். ''சாரு! பேசுவதைச் சிந்தித்துப் பேசு''என்றாள் உஷ்ணம் ஒலித்த குரலில்.

''அந்தப் பாடத்தை உனக்கே திருப்பிப் படித்துக் கொள்'' என்றாள் சாரு.

''என்ன சொன்னாய்?''என்று ராணி அனந்தின் உடலுக்குக் குறுக்கே சாய்ந்து சாருவைப் பிடிக்க முயன்றாள்.

''ராணி! எங்கே பார்ப்போம் உன் சாமர்த்தியத்தை'' என்று கூறிக் கொண்டே ராணியின் மேலாடையைப் பிடித்தாள்.

ராணியும் சாருவின் மார்பை மறைத்த சட்டையைப் பிடித்தாள்.

லிவாஸியர் என்ன செய்தென்று தெரியாமல் விழித்தான்.

''அனந்த்! கடற்போர் துவங்கிவிட்டது. நீ தப்பித்துக் கொள்'' என்றான்.

அனந்தும் பொறுமை இழந்தான். இரு பெண்களின் கைகளை யும் இரு கைகளால் பிடித்து இறுக்கினான்; விலக்க முயன்றான். ஆனால் இரு பெண்களின் வலுவும், ஆக்ரோஷமும் அவன் முயற்சியைத் தோற்கடித்தன. இருவர் திமிறலும் அதிகமாயிருந்தது. ''ராணி! சாரு!''என்று உறுமிய அனந்த் இரு பெண்களையும் இரு கைகளாலும் இறுக அணைத்தான், சிற்றிடைகளைப் பலமாக வளைத்து.

இதைக்கண்ட லிவாஸியரும் தனது இயற்கையான பிரெஞ்சுக் குணத்தைக் காட்டினான். ''தட் ஈஸ் ரைட் அனந்த், ஹக் தெம் ஸ்ட்ராங்க், அண்ட் க்ரஷ் தெம்'' என்று மிகுந்த மகிழ்ச்சியுடன் கூறினான்.

அத்தியாயம் - 61

# மூவரையும் அழிப்பேன்!

**சா**ருவும் ராணியும் தனது உடலுக்குக் குறுக்கே பாய்ந்து ஒருவர் சட்டையை இன்னொருவர் பிடித்துக் கிழித்து விடும் நிலை வந்ததும் அவர்களை அடக்கத் தனது இரு கைகளாலும் இறுக்கிப் பிடித்த அனந்த் ,''ஹக் தெம் ஸ்ட்ராங்க்.... க்ரேஷ் தெம்(அவர்களை இறுக்கி அணை, நொறுக்கிவிடு)''என்று லிவாஸியர் போட்ட மகிழ்ச்சிக் கூச்சலால் சிறிது சினம் அடைந்தான் என்றாலும் பெண்களின் திமிறலால் வேறு வழியில்லாத காரணத்தால், லிவாஸியர் யோசனையைப் பின்பற்றி அவர்கள் இடைகள் சிவந்து கன்றிப் போகப் பிடித்து இருவரையும் தன்னை நோக்கித் திருப்பினான். அதன் விளைவாக இரு பெண்களும் அவன் மார்பின் மீது அழுந்திவிட்டதாலும், அழுத்தியதோடு நில்லாமல் திமிறிய தாலும் அனந்தைப் பின்புறமாகச் சாய்த்துவிட்டதாலும் அனந்த் தனது நாற்காலி மீது உட்கார முற்பட்டு நாற்காலியுடன் பின்னால் தடாலென விழுந்தான். அப்பொழுதும் அந்தப் பெண்களின் சீற்றம் தணியாமல் விழுந்து கிடந்த அனந்தின் இரு புறத்திலும் முழங்கால் களைத் தரையில் ஊன்றித் தொடைகளை அவன் விலாப்புறங்களில் அழுத்திக் குறுக்கே பாய்ந்து சண்டையிட்டார்கள்.

இந்த விபரீத நிலையில் மூவரையும் பார்த்த லிவாஸியர் நடுவே இருந்த மேஜையைச் சுற்றி வந்து அனந்தை விடுவிக்க முயன்று, இரு பெண்களையும் நோக்கிக் குனிந்து, ''லேடீஸ்! டோன்ட் கில் ஹிம்(பெண்களே அவனைக் கொன்று விடாதீர்கள்)'' என்று விண்ணப்பித்துக் கொண்டான். அதே சமயத்தில் அனந்த் தனது உடலை ஒரு விதமாகத் திருப்பினான். இரு முழங்கால்களை எடுத்து இரு பெண்களையும் நிமிர்த்திச் சுழற்றவே இரு பெண்களும் அவன் இருபக்கங்களிலும் சரேலென விழுந்தார்கள் அந்த வினாடியில் மின்னல் வேகத்தில் எழுந்து விட்ட அனந்த், ராணியையும் சாருவையும் ஒவ்வொரு கையால் ரவிக்கையைப் பிடித்துத் தூக்கி நிறுத்தினான். ''இன்னுமொரு முறை இப்படிப் போரிட்டால்



உங்கள் இருவரையும் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது!'' என்று சீறினான்

அவன் சீற்றத்தைக் கண்ட இரு பெண்களும் சற்று நிதானித் தார்கள். ''என்னதான் செய்துவிடுவீர்கள்?''என்று ராணி வினவினாள் அந்த நிலையிலும் சிறிது வேகத்தைக் காட்டி.

''செய்வதைச் சொல்லுங்கள். தெரிந்து கொள்கிறேன்'' என்றாள் சாரு பெருமூச்சால் விம்மிய மார்புடன்.

அனந்த் இருவரையும் சுட்டு விடுவதுபோல் பார்த்தான். ''நீங்கள் இருவரும் பெண்கள் அல்ல!''என்று சொன்னான் கடுமையும் எரிச்சலும் கலந்த குரலில்.

''வேறு யார்?'' இரு பெண்களும் ஏக காலத்தில் கேட்டார்கள்.

''காட்டுப் பூனைகள்...''அனந்த் பேச்சை முடிக்கவில்லை.

''என்ன சொன்னீர்கள்?'' என்று இரு பெண்களும் ஏக காலத்தில் மீண்டும் நெருங்க முயன்றார்கள்.

''இன்னொரு முறை உங்கள் சுபாவத்தைக் காட்டினால் என் சுபாவத்தைக் காட்டுவேன்'' என்றான் அனந்த்.

''காட்டுங்கள்''என்று இருவரும் மீண்டும் சீறினார்கள்.

''இன்னொரு கடற் போரை...கன்னிப் போரை...இல்லை காதல் போரை...நான் அனுமதிக்க முடியாது'' என்று திட்டமாக அறிவித்த லாபூஷே, ''லேடீஸ்! ஹாவ் யுவர் க்வாரல் லேட்டர். நௌ டு பிஸினஸ் (பெண்களே!உங்கள் சண்டையைப் பிறகு வைத்துக் கொள்ளுங்கள். இப்பொழுது விஷயத்தைக் கவனிப்போம்). இந்தப் படத்தைப்பாருங்கள்'' எனக் கூறிக் கொண்டு மேஜைக்கு அப்புறம் சென்று இந்தியாவின் மேலைக்கரைப் படத்தைச் சரிப்படுத்தி விரித்தான்.

லிவாஸியரின் குரலிலிருந்த தீர்மானம் அந்தப் பெண்களை யும் சுயநிலைக்குக் கொண்டு வரவே, தங்கள் ரவிக்கைகளைப் பிடித்திருந்த அனந்தின் கைகளை அகற்றி, பழையபடி படத்தைப் பார்க்கலாயினர். அனந்தும் படத்தைக் கூர்ந்து கவனித்தான்.

லாபூஷே மீண்டும் தனது ஆள்காட்டி விரலைத் தேவ்கட்டில் ஊன்றினான். ''இந்தத் துறைமுகத்தை நாளை நடுப்பகலில் நாம் அடைவோம். அதற்குக் காற்று அனுகூலமாக இருக்கிறது. நாம் தேவகோட்டைத் துறைமுகத்தை அடைந்த சில மணி நேரங்களில்

காஸண்ட்ராவையும் அங்கு எதிர்பார்க்கிறேன். இந்த தேவ்கட்டில் தான் மாக்ரே நம்மைச் சந்திக்கத் திட்டமிட்டிருக்கிறான். அவனது ஐந்து கப்பல்களைச் சந்திக்க நமது இரண்டு கப்பல்கள் போதா. மாக்ரே கடற்போரில் மிக வல்லவன். ஏதோ ஒருமுறை இங்கலண்டிடமும் டெய்லரிடமும் தோற்றுவிட்டதால் அவன் திறமையை நாம் குறைத்து மதிப்பிடக்கூடாது'' என்று சொன்னான்.

அனந்த் படத்தை நன்றாக ஆராய்ந்தான். பிறகு சொன்னான்: ''மாக்ரே ஐந்து கப்பல்களுடன் வரமாட்டான்.''

இந்தப் புதுச் செய்தி லிவாஸியருக்கும் இரு பெண்களுக்கும் சிறிது அதிர்ச்சியைத் தரவே ''வாட் டு யூ மீன்?'' என்று லிவாஸியர் கேட்டான்.

''வேறு எத்தனை கப்பல்களுடன் வருவான்?'' என்று ராணி வினவினாள்.

''பத்துக் கப்பல்களுடன் வருவான்'' என்று கூறிய அனந்த், ''அதனால்தான் அவனைத் தேவ்கட்டில் சந்திப்பது உசிதமல்ல என்று சொன்னேன்'' என்று கூறினான்.

''ஐ நோ, ஐ நோ, யூ ஹாவ் ஆல்ரெடி புட் யுவர் ஃபிங்கர் அட் பூர்ணகட் (தெரியும் எனக்கு. உன் விரலால் பூர்ணகட்டைச் சுட்டிக் காட்டியிருக்கிறாய்)'' என்று லிவாஸியர் கூறினான்.

''பூர்ணகட்டையா!'' என்று ராணி வியப்புடன் வினவினாள்.

ராணியின் வியப்பை லிவாஸியர் அனந்த் இருவருமே கவனித்தார்கள். ஆனால், லிவாஸியரே கேட்டான்: ''அங்கு மாக்ரேயைச் சந்திப்பதில் இஷ்டமில்லையா?'' என்று.

''இல்லை'' என்றாள் ராணி.

''ஏன்?'' என்று வினவினான் அனந்த்.

ராணி இகழ்ச்சியுடன் அனந்தைப் பார்த்தாள். ''பூர்ண கட்டில் எந்தவிதப் பூர்த்தியும் கிடையாது. அதன் துறைமுகத்தில் எந்தக் கப்பலும் நுழைய முடியாது. சிறிய துறைமுகம், தவிர மச்சகண்டி நதியின் முகத் துவாரத்தில் இருக்கிறது'' என்று விளக்கினாள்.

''மேலும் விளக்கிச் சொல்'' என்றான் அனந்த்.

''மச்சகண்டி என்று அழைக்கப்படும் மத்ஸ்ய கந்தி நதி திடீர் திடீர் என்று வெள்ளம் வரக்கூடியது. தவிர மணலை முகத்துவாரத்துக்குக் குறுக்கில் வீசியிருக்கிறது. இன்றைக்கு ஆழமாக இருக்கும்



துறைமுகம் திடீரென்று நீர் வடிந்து நாளைக்கு வெறும் மணற் பகுதியாகிவிடும்'' என்று பதில் சொன்னாள் ராணி.

ஆனால், மத்ஸ்யகந்தியின் திடீர் மாறுதலால் ஏற்படக் கூடிய விளைவுகளைப் பற்றி அனந்த் சிறிதும் கவலைப்படவில்லை. ''நாம் தேவ்கட் துறைமுகத்துக்குள் கப்பலைக் கொண்டு செல்லப் போவதில்லை. சற்று முன்பாகவே நிறுத்தி வைக்கப் போகிறோம்'' என்று கூறிய அனந்த் லிவாஸியரை நோக்கினான்.

லிவாஸியர் புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்து ராணியை நோக்கி, ''ராணி! அனந்த் டஸ் நாட் வாண்ட் டு ஹைட். ஹி வாண்ட்ஸ் டு ஃபேஸ் த எனிமி (ராணி, அனந்த் எதிரியிடமிருந்து மறைய இஷ்டப்படவில்லை. பகிரங்கமாகச் சந்திக்க விரும்புகிறார்)'' என்று கூறினான். அவன் குரலில் மிகுந்த மரியாதை இருப்பது ராணிக்குப் புரிந்தது.

சாருவுக்கு ஓரளவு அந்த இரு காப்டன்களின் திட்டமும் புரிந்திருந்தாலும், ''காப்டன்! ஐ டோண்ட் ஃபாலோ (காப்டன் நீங்கள் சொல்வது விளங்கவில்லை)'' என்றாள்.

ராணி விவரிக்கத் தொடங்கினாள். ''இப்பொழுது நம்மிடம் இருக்கும் சக்தி மகத்தானது. நாம் பகிரங்கமாகப் பூர்ணகட் துறைமுகத்துக்கு எதிரில் 'கடல்ராணி'யை நிறுத்தி எதிரியின் தாக்குதலுக்கு இலக்காகலாம். அப்படி எதிரி தாக்க முற்பட்டதும் கடல் ராணி துறைமுகத்தை நோக்கிச் சிறிது பின்னடையும். அப்பொழுது அப்பால் மறைவில் நிற்கும் காஸண்ட்ரா மாக்ரேயுடன் மோதும். காஸண்ட்ராவின் பலத்துக்கு முன்பாக மாக்ரேயின் கப்பல்கள் திண்டாடும். சில அமிழ்ந்து போகும்'' என்று சொன்னாள் ராணி.

இங்கு அனந்த் இடைபுகுந்தான். ''முதலில் ஐந்து கப்பல்களுடன் வரும் மாக்ரே, உருப்படியாக மீதியிருக்கும் கப்பல்களுடன் பின்வாங்குவான். அவன் ஓடிவிட்டான் என்று காஸண்ட்ரா பின் தொடரும். அவனுக்குப் பின்னால் வரும் ஐந்து புதுக் கப்பல்கள் காஸண்ட்ராவைச் சூழ்ந்து கொள்ளும். அந்த இரண்டாவது ஐந்து கப்பல்கள் வராவிட்டால் மாக்ரே தப்பமுடியாது. அதனால்தான் மாக்ரே பத்துக் கப்பல்களுடன் வருவான் என்று சொன்னேன். மாக்ரே ஈஸ் அன் எக்ஸலண்ட் ஸீமேன் அண்ட் ஆன் இண்டலிஜெண்ட் ஒன் (மாக்ரே சிறந்த மாலுமி, அதுவும் புத்திசாலி)'' என்று விளக்கினான்.

லிவாஸியர் தீர்க்க சிந்தனையில் இறங்கினான். அப்போது சாரு கேட்டாள், ''எல்லோரும் கடலைப் பற்றியே சிந்திக்கிறீர்கள். நிலத்தைப் பற்றி யோசிக்க ஏதும் இல்லையா?'' என்று.

அனந்தின் முகத்தில் மகிழ்ச்சியின் சாயை படர்ந்தது. அவன் கண்கள் அவளை நோக்கித் திரும்பின. வியப்பை வீசிக்கொண்டு ''சாரு, நீ லேசுப்பட்டவள் அல்ல'' என்று பாராட்டுதலைப் பகிரங்கமாகத் தெரிவித்தான் அனந்த்.

அவளைப் பாராட்டியதால் சிவந்துவிட்ட ராணியின் முகத்தை அனந்த் கவனிக்கவில்லை. ''ஆம், நிலத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். பூர்ணகட் மலை உச்சியில் உள்ள சிறு கோட்டை. அதற்கு மதில் கிடையாது. சுமார் இருபத்திரண்டு ஏக்கர் விஸ்தீரண முள்ளது. அங்குள்ள கட்காரிகளிடம் (கோட்டைக் காரியக்காரர்கள்) பேஷ்வா வரிகூட வாங்குவதில்லை. காரணம், அவர்கள் சிறந்த வீரர்கள். பீரங்கிகளைப் பயங்கரமாக இயக்க வல்லவர்கள் என்பதுதான். அந்தப் பீரங்கி பலத்தை நாம் உபயோகிப்போம். அந்தப் பீரங்கிகள் இன்றுவரை யாரை''யும் மத்ஸ்யகந்தி நதியை அணுக விடவில்லை. கோட்டை காரியஸ்தர்கள் நம் வசப்பட்டால் மாக்ரே நமது அருகில் வரமுடியாது. அது மட்டுமல்ல. நமது கப்பல்கள் அவனைத் தாக்கலாம்'' என்றான் அனந்த். மேலும் சொன்னான்: ''பேஷ்வாவின் பிரதிநிதியான சாருவுக்குக் கோட்டை வாசிகள் அடங்கியாக வேண்டும்!'' என்று.

''ஓகோ!'' என்றாள் ராணி.

''என்ன ஓகோ!'' என்று வினவினான் அனந்த்.

''உங்களுக்குச் சாருவின் உதவியே போதும்'' என்று ராணி கூறினாள்.

அனந்த் புன்முறுவல் செய்தான். ''ஆம். ஏனென்றால் உன் உதவி ஏற்கெனவே இருக்கிறது'' என்றான் அனந்த்.

ராணி பிரமித்தாள். ''என்ன சொல்கிறீர்கள்?'' என்று வினவினாள்.

''இந்தக் 'கடல் ராணி' காலையில் கிளம்பியதும் நடுப் பகலுக்குச் சிறிது முன்பு மால்வானுக்கு வடக்கே ஒன்றரை மைல் தூரத்திலுள்ள மலை வெடிப்பைக் கடந்தது. அந்த வெடிப்பில், கடல் உட்புகுந்து அளித்த இயற்கைத் துறைமுகத்தில் மறைந்திருந்த உன் கப்பல்கள் ஐந்து புறப்படுவதைப் பார்த்தேன். அவை இந்தக் கப்பலைத் தொடர்வதையும் பார்த்தேன். இந்தக் கப்பல் எந்த



நடவடிக்கையில் இறங்கினாலும் அந்த ஐந்து கப்பல்களும் சமயம் வரும்போது கலந்துகொள்ளும். அது பெரிய உதவி ராணி. எங்களைக் கேட்காமலே இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறாய். அதற்கு நன்றி. உன் கப்பல்கள், அவற்றின் போர்த் திறமை, நமது கடல் பலத்தை அதிகப்படுத்துகின்றன. ஆனால், நிலபலமும் வேண்டும். அதற்குத் தான் பூர்ணகட்டைத் தேர்ந்தெடுத்தேன். அதன் பீரங்கிகளின் பலம் என்பது ஒரு பாதுகாப்பு நமக்கு. அதைவிட அதிகப் பாதுகாப்பு அதற்குத் தெற்கே உள்ள விஜயதுர்க்கம். கடல்ராணியும் காஸண்ட்ரா வும் உனது ஐந்து கப்பல்களும் தமது துறைமுகத்தைக் தாண்டுவதை கனோஜி ஆங்கரே கவனிக்காமல் இருக்க மாட்டார். கவனித்த பின்பு கையைக் கட்டிக் கொண்டு சும்மா உட்கார்ந்திருக்கவும் மாட்டார். அவர் சும்மா உட்கார்ந்திருந்தாலும் அவரை எழுப்ப ஒருவன் நேற்றே புறப்பட்டிருப்பான்'' என்று விளக்கினான்.

''யார் அவன்?'' என்று ராணி கேட்டாள்.

''துலாஜி ஆங்கரே! கனோஜியின் மகன்-எனது நண்பன். நாங்கள் இருவரும் ஒன்றாகத்தான் அரபிக் கடலிலிருந்து கொள்ளைக் காரர்களை விரட்டக் கிளம்பினோம். ஒன்றாவே அந்தப் பணியை முடிப்போம்'' என்றான்.

அவன் சொற்களில் உறுதி பலமாக இருந்ததை மற்ற மூவரும் கவனிக்கவே செய்தார்கள். காஸண்ட்ராவில் ஏற்கெனவே நடந்த நிகழ்ச்சிகள் ராணியின் நினைவுக்கு வந்தன. அனந்தின் ஏற்பாடுகள் திட்டமாக ஒரு தொடர்ச்சியுடன் தொகுக்கப்பட்டிருப்பதை உணர்ந்த தால் வியப்பின் வசப்பட்டாள். ''ஆம்,ஆம். இருவரும் இணைபிரியாத ஜோடிகள்'' என்று சொன்னாள் ராணி வியப்பு குரலிலும் ஒலிக்க.

அதற்குப் பிறகு அனந்த் பேசவில்லை. ''லிவாஸியர்! இன் அனதர் டென் டேஸ் அட் த மோஸ்ட் ஐ வில் ஸ்மாஷ் டெய்லர் இங்க்லண்ட் அண்ட் ஸில்வர் (லிவாஸியர்! இன்னும் பத்தேநாள்; டெய்லர், இங்க்லண்ட், ஸில்வர் இந்தத் திரிமூர்த்திகளை ஒழித்துக் கட்டுகிறேன்)'' என்று கூறிக் கையை முஷ்டியாகப் பிடித்து மேஜை மீதிருந்த படத்தில் குத்தினான். ''அண்ட் ஐ வில் க்லிப் த விங்ஸ் ஆஃப் காஸண்ட்ரா ஹியர் (காஸண்ட்ராவின் இறக்கைகளையும் இந்த இடத்தில் வெட்டிவிடுகிறேன்)'' என்றும் ஆவேசத்துடன் சொல்லி மீண்டும் பூர்ணகட் கோட்டையின் பகுதியில் ஆள் காட்டி விரலை ஊன்றினான்.

## அத்தியாயம் - 62

# கதைக்குக் காலமில்லை!

பூர்ணகட் துறைமுகப் பகுதியில் ஆள்காட்டி விரலை ஊன்றிய இந்திரஜித் அனந்த் நீண்ட நேரச் சிந்தனையில் ஆழந்துவிட்டான். அவன் சிந்தனையின் ஆழத்தையும் அதன் விளைவாக அவ்வப்போது முகத்தில் ஏற்பட்டுக் கொண்டிருந்த மாறுதல்களையும் கவனித்த லிவாஸியரும், அதுவரை சண்டையிட்ட இரு பெண்களும், அவன் யோசனையில் குறுக்கிடாமல் மௌனமாகவே நின்றனர். பூர்ணகட்டில் ஊன்றியிருந்த அவன் விரல் திடீரென பூர்ணகட்டுக்கும் மேலேயிருந்த ஜெய்கட் கோட்டைக்குச் சென்று மறுபடியும் கரையோரமாகவே சிந்து துர்க்கம் வரை வந்து நிலைத்து நின்றுவிட்டதையும் கவனித்த லிவாஸியருக்கும் சாருவுக்கும் ஏதும் புரியாவிட்டாலும் ராணி மட்டும் அவன் இதயத்தில் ஓடிய எண்ணங்களைப் புரிந்து கொண்டதால் சிறிது ஆனந்தப் புன்முறுவல் கொண்டாள். ''உண்மை, மேலைக் கடலோரத்தில் எல்லா காலங்களிலும் எல்லா சமயங்களிலும் உட்புகக்கூடிய பந்தோபஸ்தான துறைமுகம் வேறு எதுவும் கிடையாது. நாம் சிந்து துர்க்கத்தை விட்டுக் கிளம்பிவிட்டதால் மாக்ரே நம்மைச் சந்திக்க முடியும் இடம் தேவ்கட் ஒன்று தான்''என்று கூறினாள்.

அனந்த் தலையசைத்தான் யந்திரம்போல,''ஆகவே நாம் முதலில் நினைத்தபடி தேவ் கட்டில் தங்காது போகும் பட்சத்தில் மாக்ரே நமது யோசனைகளைப் புரிந்து கொள்ளவும் செய்யலாம். பின்னால் வரும் டெய்லரும் நம்மைச் சந்தேகித்தாலும் சந்தேகிக்கலாம். எந்தச் சந்தேகத்துக்கும் இடம் கொடாதிருப்பது நல்லது. தேவ்கட்டில் ஒரு நாள் தங்குவோம்'' என்று அனந்த் சொன்னான் படத்தை நோக்கிக் கொண்டே.

கடல்ராணியால் அனந்தின் முகத்தைப் பார்க்க முடியாவிட்டாலும் முரட்டுக் குழல்களுடன் காட்சியளித்த குனிந்த அவன் தலையை நோக்கினாள். ''ஒரு நாள் தங்குவதால் என்ன பலன் ஏற்படப்போகிறது ?'' என்று கேட்டாள் ராணி.



அனந்தின் தலை சிறிதுகூட நிமிரவில்லை. ''தேவ்கட் துறைமுகம் அழகானது. அதற்குள் பாய்ந்துள்ள கடலின் ஆழம் அதிகமாதலால் அலை அதிகமில்லை. அங்கு வட்டமான துறைமுகத்தில் பெரிய குளம்போன்ற நீல நிற நீரும், அக்கம் பக்கங்களில் எழும் பெரும் மலைச் சரிவுகளும், அவற்றில் முளைத்திருக்கும் செழித்த மரங்களும் மனத்தை மயக்கும். தவிர துறைமுக ஆழமும் எந்தக் கப்பலுக்கும் இடம் அளிக்கும்''என்றான் அனந்த் குனிந்த வண்ணம்.

தேவ்கட்டின் அழகும் ஆழமும் அது அளிக்கக்கூடிய பாதுகாப்பும் எல்லோருக்கும் தெரிந்த விஷயம் ஆதலால், அதை எதற்காகத் திரும்பச் சொல்கிறான் அனந்த் என்பது இரு பெண்களுக்கும் புரியாததால்,''நாம் தேவகட்டின் அழகை ரசிக்கவா செல்கிறோம்?''என்று வினவினாள் சாரு.

அனந்த் சிறிது தலையை நிமிர்த்தி வினவினான்,''அழகை ரசிப்பதில் என்ன தவறு?''என்று.

இந்தக் கேள்வி மிக விசித்திரமாக இருக்கவே, ''இந்தத் தேசப்படத்தை நாம் விரித்துப் பார்த்துக் கொண்டிருப்பது அழகான இடங்களைக் கண்டுபிடிக்க அல்ல! போருக்கு வசதியான இடத்தைக் கண்டுபிடிக்க முயலுகிறோம்''என்றாள் ராணி.

''அழகான இடத்தில் போரிட்டால் தவறு ஏதேனும் இருக்கிறதா?'' என்று வினவினான் அனந்த்.

லிவாஸியருக்கு அவர்கள் உரையாடலின் போக்கு விளங்காததால் தனது கண்களால் அனந்தின் கண்களை அளவெடுத்தான். ''அனந்த்! தற்சமயம் இந்தக் கப்பலின் தலைவன் யார்?''என்று வினவினான்.

''நீதான் லிவாஸியர்''என்று அனந்த் சர்வ சாதாரணமாகப் பதில் சொன்னான்.

லிவாஸியர் இதழ்களில் புன்முறுவல் அரும்பிற்று.''கப்பல் எதற்காக எந்த இடத்தில் நிறுத்தப்படுகிறது? பிறகு எங்கு போகும்? என்ன அலுவல் புரியும்? இந்த விஷயங்களை அறிந்து கொள்ளக் கப்பல் தலைவனுக்கு உரிமை உண்டு என நினைக்கிறேன்'' என்று சொன்னான் புன்முறுவலின் ஊடே.

''உண்டு''என்று சொன்ன அனந்த், ''லிவாஸியர்! நாம் புறப்படு முன் காஸண்ட்ரா தலைவர்களுடன் போர் முறைகளைப் பற்றிக் கலந்து பேசவில்லை!''என்றான்.

''ஆம், அதற்கு அவகாசமும் இல்லை, அவசியமும் இல்லை என்று நினைத்தோம்'' என்று லிவாஸியர் குறிப்பிட்டான்.

''ஆம், ஆனால், நம் மனப் போக்கு முழுவதும் டெய்லருக்கோ இங்கிலண்டுக்கோ தெரியாது. அவர்களுக்கும் எடுத்துச் சொல்லி மாக்ரேயுடன் நாம் மோதும்போது யார் யார் எப்படி எப்படி இயங்க வேண்டும் என்பதைத் தீர்மானித்துக் கொள்ளலாம் அல்லவா?'' என்று வினவினான் அனந்த்.

''யூ மீன் எ பிரிலிமினரி கான் ஃப்ரன்ஸ்?(பூர்வாங்க ஆலோசனை செய்ய வேண்டும் என்கிறாயா?)''என்று கேட்டான் லிவாஸியர்.

''டோன்ட் யூ திங்க் தட் ஈஸ் பெட்டர் (அது நல்லது என்று நீ நினைக்கவில்லையா?'' என்று அனந்த் வினவினான்.

லிவாஸியர் சில விநாடிகள்தான் சிந்தித்தான். பிறகு ஏதோ புரிந்துகொண்டவன் போல் ,''சரி சரி.முற்றிலும் சரி!'' என்றான்.

எதை லிவாஸியர் புரிந்து கொண்டுவிட்டான்? எதைச் சரி என்கிறான்? என்பது இரு பெண்களுக்கும் புரியாததால், ''எது சரி'' என்று இருவரும் ஏககாலத்தில் கேட்டார்கள்.

''அனந்தின் யோசனை''என்று லிவாஸியர் பதில் சொன்னான்.

அப்பொழுது வினவினான் அனந்த்:''லிவாஸியர்!ஸில்வர் நாளைக்கு எப்பொழுது எழுந்திருப்பான்?''என்று.

இதற்கு ராணி பதில் சொன்னாள்:''ஸில்வர் உறக்கத்திலும் விழித்திருப்பவன்...எந்த விநாடியிலும் எழுந்திருப்பான். இப் பொழுது கூட அவன் இந்த அறைக் கதவுக்கு அப்பால் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருக்கலாம்''என்று.

அனந்த், ராணியைப் பார்த்து,''ஸில்வர் இன்று ஒட்டுக் கேட்கவில்லை. நாளைக்கு ஒட்டுக்கேட்பானா என்பது சந்தேகம் ராணி''என்று விளக்க முற்பட்டான்.

அந்த விளக்கத்தைத் தடுக்க முற்பட்ட லிவாஸியர் ''ராணி! எந்த மாலுமி வாழ்க்கையும் கஷ்டமானது. ஆகையால் அவர்கள் சற்று நிம்மதியாகத் தூங்க வேண்டியதும் அவசியம்''என்றான்.



ராணிக்கு உண்மை புலப்படவே முகத்தில் கவலையைக் காட்டினாள். ''டிட் யூ கில் ஹிம் லிவாஸியர்? (அவனைக் கொன்று விட்டாயா லிவாஸியர்?'' என்று வினவினாள் கவலை குரலிலும் தெரிய.

லிவாஸியர் முகத்தில் அனுதாபம் தெரிந்தது.''லேடி! ஐ ஆம் நாட் எ மர்டரர் (பெண்ணே! நான் கொலைகாரனல்ல)''என்று கூறினான்.

''தென் வாட் டிட் யூ டு டு ஹிம்? (அவனை என்ன செய்தாய்)'' என்று வினவினாள்.

லிவாஸியர் தனது அழகிய முகவாய்க் கட்டையைத் தடவிக் கொண்டான் வலது கையால். ''ஐ ஜஸ்ட் கேவ் ஹிம் ஸ்லீப், அண்ட் ஸ்லீப், டியர் லேடி, ஈஸ் எ மான்ஸ் பர்த்ரைட் (அவனுக்குத் தூக்க மளித்தேன். அம்மணி! தூக்கம் ஒவ்வொரு மனிதனுக்கும் பிறப் புரிமை)''என்று விளக்கினான்

நடந்தது என்னவென்பதைச் சாரு, ராணி இருவருமே புரிந்து கொண்டதால் புன்முறுவல் செய்தார்கள். ''யுவர் பிலாஸஃபி ஈஸ் எக்ஸ லெண்ட், யுவர் மெதேட் ஒண்டர்புல் (உங்கள் தத்துவம் சாலச் சிறந்தது. செய்முறையும் பிரமிக்கத் தக்கது)'' என்று சம்பாஷணையில் கலந்து கொண்டாள் சாரு.

லிவாஸியர், சாருவை மிகுந்த மரியாதையுடன் நோக்கினான். ''சார்மிங் லேடி!யுவர் அண்டர்ஸ்டாண்டிங் ஆஃப் த மெதேட் ஈஸ் வெரி நைஸ். ஐ ஆம் ப்ளாட்டர்ட் பை யுவர் அக்ஸப்டன்ஸ் ஆஃப் மை மெதேட் (அழகியே! என் வழியை நீ திட்டமாக அறிந்து கொண்டிருக்கிறாய். அதை நீ ஒப்புக்கொண்டது எனக்குப் பெருமையைத் தருகிறது)'' என்று கூறித் தலையும் வணங்கினான்.

''ஸில்வரின் மதுவில் மருந்தைக் கலந்து துயில வைப்பது பாராட்டுக்குரிய விஷயம் அல்லவென்றாலும் தற்சமயம் ஸில்வர் தூங்குவதில் அர்த்தம் இருக்கிறது''என்று கூறினுன் அனந்த். அத்துடன் சொன்னுன்: ''லிவாஸியர்! வி டு மஸ்ட் ஹாவ் ஸம் ஸ்லீப். ஆல்ரெடி த நைட் ஹாஸ் ரன் அவுட் மச் லிவாஸியர்(நமக்கும் உறக்கம் வேண்டும். இரவும் பெரிதும் கழிந்துவிட்டது)''என்றான்.

அதற்கு ஒப்புதல் தெரிவிக்க லிவாஸியர் தலையை வணங்கி, ''குட் நைட் டு யூ அனந்த். குட் நைட் டு யூ லேடீஸ். ஹாவ் குட் ரெஸ்ட் அண்ட் ப்ளெஸண்ட் ஸ்லீப்... தோ ஐ டௌட் வித் அனந்த்

ட்ரெயிலிங் யூ வெதர் தட் ஈஸ் எ பாஸிபிலிடி (குட் நைட் அனந்த். குட் நைட் பெண்களே. நன்றாக இன்பமாக உறங்குங்கள். இருப்பினும் அனந்த் உங்களைத் தொடரும்போது உறக்கம் கிடைக்குமா என்பது சந்தேகம்)'' என்று சொல்லி நகைத்தான்.

இரு பெண்களும் அவன் பேச்சைக் கேட்டுப் புன்முறுவல் கொண்டாலும் அனந்த் மகிழ்ச்சியை முகத்தில் காட்டவில்லை. ''குட் நைட் லிவாஸியர்!''என்று கூறிவிட்டு அந்த அறையை விட்டு வெளியேறினான். இரு பெண்களும் அவனைத் தொடர்ந்து அறைக்கு வெளியே வந்ததும், ''நீங்கள் அறைக்குச் செல்லுங்கள். நான் ஸில்வரைப் பார்த்துவிட்டு வருகிறேன்''என்று ஸில்வர் காவலில் வைக்கப்பட்டிருந்த அறையை நோக்கி நடந்தான் அனந்த். அவன் எதிர்பார்த்தபடிதான் சகலமும் இருந்தது. ஸில்வர் அந்த அறையில் இல்லை. பல மாலுமிகள் சுரணையின்றி உறங்கிக் கொண்டிருந்தார்கள். இதைக் கண்ட அனந்த் மெதுவாகப் பூனை போல் அடிவைத்துக் கப்பல் தளத்தைச் சுற்றிச் சென்றான்.இருள் நன்றாகக் கவிந்திருந்ததா லும் தளத்தின் முக்கால் வாசி விளக்குகள் அணைக்கப்பட்டிருந்ததாலும் அறையிலிருந்த நல்ல வெளிச்சத்திலிருந்து அனந்த் வெளியே வந்திருந்ததாலும் தளத்தின் இருட்டுக்கு அவன் கண்கள் ஈடு கொடுக்கமுடியவில்லை. மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து சென்றான் அனந்த். நடுப்பாய்மரத்தை அடைந்து அதில் மறைந்து நின்று தலையை மட்டும் வெளியே நீட்டினான்.

சற்றுத் தூரத்தில் தளத்தின் பலகைக்கு அருகில் நின்று கொண்டிருந்தான் ஸில்வர். அவன் கையிலிருந்து சிறு விளக்கு ஒன்றை நன்றாக உயர்த்தி ஆட்டிக் கொண்டிருந்தான். இரண்டு மூன்று முறை விளக்கை ஆட்டிவிட்டுச் சிறிது நிதானித்தான்.

பின்னால் வந்து கொண்டிருந்த காஸண்ட்ராவின் தளத்திலிருந்து ஒரு விளக்கு பதிலுக்கு ஆட ஆரம்பித்தது. மும்முறை ஆடி நின்றது. மீண்டும் ஸில்வர் விளக்கை ஆட்டினான். காஸண்ட்ராவிலிருந்து பதிலும் வந்தது. அனந்த் அந்த விளக்குகள் சொன்ன கதையைப் புரிந்து கொண்டதால் ஓரளவு கவலை அவன் முகத்தில் தாண்டவமாடியது. பிறகு புன்சிரிப்பு ஒன்றும் அவன் இதழ்களில் அரும்பியது. ''ஐ ஹாவ் ஆன் மை ஹாண்ட் ஒன் ஆஃப் த ஒர்ஸ்ட் ஸ்கௌண்ட்ரல்ஸ் ஆஃப் த ஸீ பேரிங் கம்யூனிட்டி (கடலோடும்



வர்க்கத்தில் பரம அயோக்கியர்கள் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவனை என் தலையில் கட்டிக் கொண்டிருக்கிறேன்)'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் அனந்த்.

அந்த சமயத்தில் தனது வேலை முடிந்துவிட்டதென்ற எண்ணத்தால் குதூகலப்பட்ட உள்ளத்துடன் ஸில்வர் தனது கைத் தடியை அதிக ஓசைப்படுத்தாமல் மெள்ள ஊன்றி நடந்தான் தனது அறையை நோக்கி. அறையை அடைந்ததும் அங்கு மயங்கிப் படுத்திருந்த மாலுமிகளில் இருவரைக் காலைப் பிடித்து இழுத்து ஒரு பக்கமாகக் கிடத்தினான். ''காம்ரேட்ஸ்! லிவாஸியர்ஸ் மெடிஸன் ஈஸ் குட், வெரி குட் திஸ்லீப் டார்லிங்ஸ்(தோழர்களே! லிவாஸியரின் மருந்து நல்லது, மிக நல்லது, தூங்குங்கள் அன்பர்களே)''என்று கூறிவிட்டு அவர்களை விலக்கியதால் கிடைத்த இடத்தில் படுத்துக் கண்களை மூடினான்.

சற்று எட்ட ஒரு மூலையில் உட்கார்ந்திருந்த அவன் அசுரக் கிளி தத்தி அவனை நோக்கி ஓடிவரவே அதைப் பிடித்து தன் மார்புடன் அணைத்துக்கொண்டான். சிறிது நேரத்தில் நன்றாக உறங்கிவிட்டான் ஸில்வர். கிளியும் தலை சாய்த்துப் படுத்தது.

இவையனைத்தையும் அறைக் கதவின் ஓரத்தில் கதவின் மறைவில் நின்று பார்த்தான் இந்திரஜித் அனந்த். அத்துடன் ஸில்வர் படுத்திருந்த இடத்துக்குச் சற்று எட்ட இருந்த மேஜைமீது குவளையொன்று கவிழ்ந்து கிடப்பதையும் அதிலிருந்து மது மேஜைமீது பரவிக் கிடப்பதையும் சிறிதளவு ஓரத்தில் கூட வழிந்து கிடப்பதையும் கவனித்தான். அன்றிரவு அங்கு நடந்த முழுக் கதையும் அவன் கண் முன்பு விரிந்தது.

அந்தக் கதையைச் சொல்ல இரு பெண்களும் இருந்த அறைக்குச் சென்றான் அனந்த்.

''இப்பொழுது எதற்குக் கதை? பொழுது விடிய அதிக நேரமில்லை'' என்றாள் ராணி.

''கதைக்குக் காலமில்லை!'' என்ற இந்திரஜித் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்று அங்கிருந்த பஞ்சணையொன்றில் உட்கார்ந்து கதையைச் சொல்லத் துவங்கினான்.

## அத்தியாயம் - 63

# மதுவும்ஸில்வரும்!

அந்த அறையிலிருந்த இரண்டு கட்டில்களில் ஒன்றில் உட்கார்ந்துகொண்ட அனந்த், எதிரே இருந்த கட்டிலில் இரு பெண்களையும் உட்காரச் சொல்லிவிட்டுத் தனது கதையைச் சொல்லத் துவங்கி, ''சில சமயங்களில் மனிதன் தனது திறமைகளை அதிகமாக மதிக்கிறானே தவிர, பட்சிகளின் திறமையைப் பற்றிச் சரியான எடை போடுவதில்லை''என்று கூறினான்.

இந்த அநாவசியப் பேச்சைக் கேட்ட கடல் ராணி, ''சுருக்கமாக உங்கள் கதையைச் சொல்லுங்கள். எங்களுக்கு உறக்கம் வருகிறது.'' என்றாள்.

அனந்த் தனது இதழ்களில் லேசாகப் புன்முறுவல் கூட்டினான். ''யாருக்கு உறக்கம் வரவேண்டுமோ அவருக்கு வருவதில்லை. யாருக்கு வரக்கூடாதோ, அவர்களுக்கு வருகிறது''என்று சொன்னான் புன் முறுவலின் ஊடே.

''உம்... உம்... சீக்கிரம்'' என்று விரட்டினாள் சாரு.

''உங்களைப் போல் ஸில்வரும் அவசரப்பட்டிருந்தால் காரியம் சுலபமாகிவிடும்'' என்று அனந்த் சுட்டிக் காட்டியதும் இரண்டு பெண்களும் சட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்து,''என்ன ஸில்வரா!''என்று ஒரே சமயத்தில் வியப்புக் குரல் எழுப்பினார்கள்.

''ஆம் ஆம். உங்களைப் போல் அவன் தூங்குமூஞ்சியல்ல! இரவிலும் விழித்திருக்கிறான். கடமையையும் செய்கிறான்'' என்று கூறிய அனந்த், ''ஆனால், முழுப் பெருமையும் அவனைச் சார்ந்த தல்ல''என்றும் சொன்னான்.

இரு பெண்களும் கட்டிலை விட்டு எழுந்து அனந்தின் அருகில் வந்து அவன் முன்பு நின்றார்கள். ''நடந்தது என்ன? தெளிவாகச் சொல்லுங்கள்'' என்று கேட்டாள் ராணி.

''ஸில்வர்மதுவை அருந்தவில்லையா?''என்று சாரு வினவினாள்.



எதிரேயிருந்த இரு பெண்களையும் அவர்கள் உடல்களின் துடிப்பையும், அதனால் தனது முகத்துக்கு எதிரே அசைந்த இரட்டை அழகுகளையும் கவனித்த அனந்த், சற்றே மதிமயக்கம் கொண்டான். அதிலிருந்து அவன் விடுபட முயன்ற சமயத்தில் இரு பெண்களும் அவனைப் பெரிதும் நெருங்கி அவன் இரு தோள்களிலும் தங்கள் கைகளை வைத்தார்கள். இப்படித் தனது தோள்களை ஆளுக்கொரு தோளாகப் பங்கு போட்டுக் கொண்ட இரு தருணிகளையும் நோக்கி கண்களை உயர்த்திய அனந்த், அவர்களின் முகங்களைப் பார்க்கமுடியாத நிலையில் இருந்தபடியால், ''ராணி! சாரு! உங்கள் கட்டிலில் உட்காருங்கள். உங்களை என்னால் சரியாகப் பார்க்க முடியவில்லை'' என்று வேண்டிக் கொண்டான்.

சாருவும் ராணியும் புன்முறுவல் கொண்டாலும் ராணியே கேட்டாள்,''ஏன் பார்க்க முடியவில்லை?''என்று.

''மிகவும் நெருங்கிவிட்டீர்கள்''அனந்த் பதில் சொல்லத் திணறினான்.

''நெருங்கினால் என்ன? எங்களைப் பிடிக்கவில்லையா?'' என்றாள் சாரு சினம் துளிர்த்த குரலில்.

''பிடிக்கிறது பிடிக்கிறது.ஆனால் முகம் தெரியவில்லை. முகத்துடன்தானே பேசமுடியும்?'' என்று கேட்டான் குழப்பத்துடன்.

''பேச முகம் தெரிவானேன்?''என்றாள் ராணி.

''கண்ணை மூடிக்கொண்டு பேச முடியாதா?''என்று சாரு வினவினாள்.

''கண்ணை மூட முடியவில்லை'' என்ற அனந்த் தனது கைகளால் அவர்களின் இடைகளைத் தழுவிக்கொண்டு எழுந்திருந்து அவர்களை அப்படியே தள்ளிக்கொண்டு போய் எதிர்க் கட்டிலில் உட்காரவைத்துப் பழையபடி தான் அமர்ந்திருந்த கட்டிலுக்கு வந்தான். வந்தவன் உட்காரவில்லை. நின்றபடியே அந்த இரு தருணிகளையும் நோக்கினான்.

''எச்சரிக்கையுடன் கேளுங்கள்.நான் சொல்வதை யாரிடமும் சொல்லவேண்டாம். ஸில்வர் உறங்கவில்லை. காஸண்ட்ராவுக்கு விளக்குமூலம் ஏதோ செய்தி சொல்லியிருக்கிறான். அது என்னவென்று எனக்கு விளங்கவில்லை'' என்று கூறினான். பிறகு அறையில் அப்படியும் இப்படியும் நடந்துகொண்டே பேசினான்:

''மதுவில் மருந்தைக் கலந்து சாமர்த்தியமாகத்தான் லிவாஸியர் கொடுத்தான். அந்த மருந்தை ஸில்வர் குடித்தும் இருப்பான். மனிதனுக்கு இல்லாத சுரணை,வாசனையை அறியும் சக்தி பட்சிகளுக்கு இருப்பதால் காப்டன் ப்ளிண்ட் மது அருந்தவிடாமல் ஸில்வரைத் தடுத்திருக்கிறது. ஸில்வர் மதுவைக் குப்பியிலிருந்து குவளையில் கொட்டியதும் சட்டென்று பறந்து குவளையைச் சாய்த்து விட்டது. கூரிய அறிவுள்ள ஸில்வர்,விஷயத்தைப் புரிந்து கொண்டான். உடனே தனது ஆசைக் கிளியைப் பிடித்து அதட்டுவது போல் அதட்டி 'ப்ளிண்ட்,மை டியர்!யூ ஸிட் இன்தட் கார்னர். டோண்ட் டிஸ்டர்ப் அஸ்'' என்று கடிந்து கொண்டு ஒரு மூலையை நோக்கி அதை விட்டெறிந்தான்.

கிளி அந்த மூலையை விட்டு நகரவில்லை.எஜமான் சித்தத்தை அறிந்து உட்கார்ந்து விட்டது. பிறகு ஸில்வர் சிறிது புன்முறுவல் கொண்டு தன்னைச் சுற்றி நின்ற மாலுமிகளை நோக்கி,''மை ஃப்ரண்ட்ஸ்!ஆஃப்டர் ஆல் எ பர்ட். ஈஸ் எ பர்ட் இட் டஸ் நாட் அண்டர்ஸ்டாண்ட் த குவாலிடி ஆஃப் த வொய்ன் (நண்பர்ளே! என்ன இருந்தாலும் பறவை பறவைதான். அதற்கு மதுவின் உயர்வு தெரியாது.)''என்று பணிவுடன் கூறினான். அத்துடன் சொன்னான்: ''மை ப்ரண்ட்ஸ்! திஸ் ஈஸ் லிவாஸ்யர்ஸ் வொய்ன் ஸ்பெஷலி ஸெண்ட் ஃபார் மி. உட் யூ அலௌ மி டு டேக் இட் அலோன் (நண்பர்களே! இந்த மது எனக்குப் பிரத்யேகமாக லிவாஸியரால் அனுப்பப்பட்டது. இதை நான் தனியாகத்தான் குடிக்க வேண்டுமா)'' என்று கேட்டான்.''நோ ஸெய்லர் ட்ரிங்ஸ் அலோன் (எந்த மாலுமியும் தனியாகக் குடிக்க மாட்டான்)'' என்றும் சொல்லி அவர்களுக்கும் மதுவைக் குவளையில் கொட்டிக் கொட்டிக் கொடுத்தான்.

மதுவின் மர்மத்தை அறியாத மாலுமிகளும் அதை அருந்தினார்கள். தள்ளாடினார்கள். தரையில் அமர்ந்தார்கள், படுத்தார்கள். பிறகு ஸில்வர் அவர்களை அலட்சியமும் வெறுப்பும் கலந்த பார்வையால் நோக்கினான். மதுக்குப்பியைக் கையில் எடுத்துக்கொண்டு' 'யோ ஹோ ஹோ அண்ட் எ பாட்டில் ஆஃப் ரம்'என்று தனது பழைய பாட்டை மெதுவாக இசைத்தான். பாடி முடித்ததும் மதுவின் மருந்தில் ஆழ்ந்த மாலுமிகளைத் தனது ஒற்றைக் காலால் உதைத்துப் பார்த்தான். சிலரைத் தனது ஊன்று கோலால் தள்ளிப் பார்த்தான். எல்லோரும் கும்பகர்ணனிடம் அடைக் கலமாகி விட்டதை உணர்ந்ததும், அறையிலிருந்த விளக்கைச் சிறிது



செய்துகொண்டு வெளியேறினான். தளத்தின் ஓரப் பலகைக்கு வந்ததும் திரியைத் தூண்டி காஸண்ட்ராவுக்கு எச்சரிக்கை செய்தான். அங்கிருந்து பதில் வந்ததும் திருப்தியடைந்து திரும்பவும் அறைக்கு வந்து படுத்துக் கொண்டான்.''

இப்படிக் கதையைச் சொல்லிமுடித்த அனந்தை இரு பெண்களும் வியப்புடன் நோக்கினார்கள். ''இதெல்லாம் எப்படி உங்களுக்குத் தெரியும்?''என்று ராணி கேட்டாள்.

லிவாஸியர் அறையைவிட்டு வெளியில் வந்ததும் உங்களிடம் கூறியபடி ஸில்வரின் அறைக்குச் சென்றேன். அங்கு ஸில்வர் இல்லை.மற்ற மாலுமிகள் சுரணையின்றிக் கிடந்தார்கள்.அதைக் கண்டு நான் வெளியே வந்து ஸில்வரைத் தேடினேன். அவன் காஸண்ட்ராவுக்கு விளக்கால் சைகை செய்து கொண்டிருந்தான். நான் நடுப் பாய்மரத்தில் மறைந்து நின்றேன். தனது அலுவல் முடிந்ததும் ஸில்வர் அறைக்குத் திரும்பி, தனது கிளியை மார்பில் அணைத்துப் படுத்தான். எட்ட இருந்த மேஜை மீது மது வழிந்து ஓடிக்கொண் டிருந்தது. எல்லாவற்றையும் இணைத்து ஸில்வரின் பழக்க வழக்கங் களையும், யாரையும் வசீகரிக்கும் அவனது ஜாலத்தையும் சேர்த்துப் பார்த்தேன். இப்படித்தான் நடந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன்... இதுதான் கதை ''என்று பதில் சொன்னான் அனந்த்.

''இதை ஏன் லிவாஸியரிடம் சொல்லாமல் எங்களிடம் சொல்கிறீர்கள்?'' என்று சாரு கேட்டாள்.

''லிவாஸியர் கெட்டிக்காரன்.சில சமயங்களில் அவசரக் குடுக்கை. ஆகையால்தான் அவனிடம் சொல்லவில்லை. லிவாஸியர் மதுவில் மருந்தைக் கலந்தபோது ஸில்வர் மதுவின் பக்குவங்களை நன்றாக அறிந்தவன் என்பதை உணர்ந்திருக்க வேண்டும். அறிய வில்லை. தவிர, அவசரப்பட்டு ஸில்வரைக் காவலில் வைத்தான். இதனால் ஸில்வரும் காஸண்ட்ராவில் உள்ள அவன் சகாக்களும் எச்சரிக்கை அடைந்திருக்கிறார்கள். இது நமக்குப் பலவீனம்''என்று விளக்கிய அனந்த், ''பெண்களே! இதைப் பற்றி மூச்சுக்கூட விட வேண்டாம்'' என்று கட்டளையிட்டான். அத்துடன் அவர்கள் அறையைவிட்டு அகன்று எந்த அறைக்கும் செல்லாமல் தளத்தில் உலாவினான். பிறகு தளத்திலேயே மல்லாந்து படுத்து ஆகாயத்தை நோக்கினான். சிறுகச் சிறுக உறக்கம் வரவே கண்களை மூடினான்.

பொழுது விடிந்தும் அவன் எழுந்திருக்கவில்லை. காலையில் கப்பலை இயக்க வேண்டிய மாலுமிகள் சிலர் தளத்தில் உலாவிய போது அனந்த் படுத்திருப்பதைக் கவனித்து வியந்தாலும் அதைப் பற்றி ஏதும் கேட்கவில்லை. அவனை எழுப்பவும் இல்லை. சூரியக் கிரணங்கள் நன்றாக ஏறிவிட்ட பிறகு தளத்துக்கு வந்த லிவாஸியர் அனந்த் தரையில் படுத்திருப்பதைக் கண்டு சிறிது நேரம் சிந்தனை யுடன் அவன் பக்கத்தில் நின்றான். காப்டன் வந்ததும் அவனை அணுகிய இரு மாலுமிகள் ''இவரை எழுப்பட்டுமா?'' என்று வின வினார்கள்.

''வேண்டாம். எழுந்ததும் அவரே எனது அறைக்கு வருவார்'' என்று சொல்லிச் சென்றான். அவன் முகத்தில் தீவிர சிந்தனை படர்ந்து கிடந்தது.

காலைச் சிற்றுண்டி அருந்தியபோதுதான் லிவாஸியரை அனந்த் சந்தித்தான். ''அனந்த்! நீ ஏன் தளத்தில் தரையில் படுத்து விட்டாய்?''என்று வினவினான் லிவாஸியர்.

''இரவு சுகமாக இருந்தது. ஆகாயம் நிர்மலமாய் இருந்தது. அழகை அனுபவித்தேன்'' என்றான் அனந்த்.

''எந்த அழகை?''என்று கேட்ட லிவாஸியர் மேஜைக் கோடியில் கோப்பைகளில் பாலைப் பருகிக் கொண்டிருந்த இரு பெண்களின் மீதும் கண்களை ஓட்டினான்.

அவன் கண்கள் ஓடிய திசையையும் கவனித்த் அனந்த் புன்முறுவல் கொண்டான்.''வானத்தின் அழகைச் சொல்கிறேன், மானிட வனப்பை அல்ல!''என்றான்.

''ஏன் உறக்கம் வரவில்லையா?'' என்று லிவாஸியர் கேட்டான்.

''என் நண்பருக்கு உறக்கம் வராவிட்டால் எனக்கு வராது'' என்றான் அனந்த்.

''யார் உனது நண்பர்?''என்று லிவாஸியர் விசாரித்தான்.

''பழைய நண்பர். ஸில்வர்''என்றான் அனந்த்.''

பிளேட்டில் இறைச்சியை வெட்டிக்கொண்டிருந்த லிவாஸி யரின் கத்தி சட்டென்று நின்றது. அவன் கண்களில் விபரீதமான சாயை ஒன்று படர்ந்தது!

அத்தியாயம் - 64

# துறைமுகச் சிறை!

ஸில்வர் இரவு முழுவதும் உறங்கவில்லை என்ற விஷயத்தை அனந்த் மிக சூசகமாக அறிவித்தாலும் லிவாஸியரின் கூரிய மூளையில் அது சரேலெனப் பாய்ந்ததால், முகத்தில் உணர்ச்சிகளைக் காட்டிய லிவாஸியர், அவற்றை விநாடி நேரத்தில் மறைத்துக் கொண்டு தட்டிலிருந்த இறைச்சியை நன்றாக அழுத்தி அழுத்தி நறுக்கலானான். அந்த அழுத்தத்திலிருந்தே லிவாஸியரின் உள்ளம் எரிமலையாகியிருக்கிறதென்பதைப் புரிந்துகொண்ட அனந்தும் பேச்சை நிறுத்திக் கொண்டு தானும் சிற்றுண்டி அருந்துவதில் சிரத்தை காட்டினான்.

லிவாஸியரும் மேற்கொண்டு ஏதும் பேசவில்லை. சில நிமிஷங்களுக்குள்ளாகவே பழைய சாதாரண நிலையை அடைந் தான். பிறகு அன்று பூராவும் ஸில்வரைப் பற்றிய எந்த உரையாடலி லும் அவன் இறங்கவில்லை. எல்லா மாலுமிகளுடனும் சிரித்துக் கொண்டும், குலாவியும் பேசி மிதமிஞ்சிய சகஜபாவத்தைக் காட்டினான். நீண்ட நேரம் கழித்துக் கண் விழித்துத் தள்ளாடித் தள்ளாடி வந்த ஸில்வரின் தோள்மீது கையைப் போட்டுக்கொண்டு, ''ஸில்வர்! மை ஃப்ரண்ட்! நௌ எ டேஸ் யூ ஸ்லீப் டூ மச்'' என்று செல்லமாகக் குற்றம் சாட்டினான்.

''குட்வொய்ன் காஸஸ் குட் ஸ்லீப் (நமது மது நல்ல தூக்கத்தைக் கொடுக்கிறது)'' என்று ஸில்வர் சிரித்துக்கொண்டே கூறினான்.

லிவாஸியர் அவன் முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டு, ''இன்றிரவு அதைவிட நல்ல மது கொடுக்கிறேன்''என்று கூறிவிட்டுத் தளத்தில் மாலுமிகளைப் பார்வையிடச் சென்றான்.

அன்று லிவாஸியர் தனது அறையில் பகல் உணவைத் தனியாகவே அருந்தினான். அறைக் கதவைச் சாத்திக் கொண்டு தன்

டெலஸ்கோப்பால் காஸண்ட்ராவைக் கவனித்தான். அங்கே டெய்லரும் இங்க்லண்டும் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் முகங்களில் மகிழ்ச்சி பெரிதும் தாண்டவமாடிக் கொண்டிருந்ததைக் கவனித்த லிவாஸியர் புன்முறுவல் கொண்டான். திடீரென எதையோ நினைத்துக்கொண்டு மாலுமியொருவனை அழைத்து அனந்தை அழைத்து வரச் சொன்னான். அனந்த் வந்ததும் அவன் கையில் டெலஸ்கோப்பைக் கொடுத்து காஸண்ட்ராவைக் கவனிக்கும்படி கூறினான்.

காஸண்ட்ராவை நோக்கிய அனந்தின் உடல் திடீரென விறைத்தது. காஸண்ட்ராவின் தளத்தில் இரு மாலுமிகள் ராணியின் தந்தை சங்கர் பந்தைப் பலவந்தமாக இழுத்து வந்தார்கள். டெய்லர் தனது கைத்துப்பாக்கியை அவர் முகத்துக்கு நேராக நீட்டி, ஏதோ மிரட்டினான். அனந்த் மீண்டும் லிவாஸியரிடம் டெலஸ்கோப்பைக் கொடுத்து, ''லிவாஸியர்!, இப்பொழுது நீ பார்'' என்றான்.

அதைப் பார்த்த லிவாஸியர் புன்முறுவல் கொண்டான். ''அனந்த்! தே நோ வீ ஆர் லுக்கிங் அட் தெம். ஸோ தே எநாக்ட் எ டிராமா. தே வில் நாட்,டேர் நாட்,கில் சங்கர் பந்த் (அனந்த்!நாம் அவர்களைப் பார்ப்பது அவர்களுக்குத் தெரியும். அதனால் இந்த நாடகம் நடத்துகிறார்கள். அவர்கள் சங்கர் பந்தைக் கொல்லத் துணியமாட்டார்கள்)'' என்று திட்டமாகச் சொன்னான்.

அனந்தும் அதை ஆமோதித்தான்.மெள்ள மெள்ள மாலியும் நெருங்கியது. தேவ் கட்டின் அழகிய துறைமுகம் கண்ணுக்குப் புலப்பட்டது. துறைமுகத்தை அணுகியதும் காஸண்ட்ராவிலிருந்து ஒரு படகு இறக்கப்பட்டது. அதில் இங்க்லண்ட் இறங்க... படகு வேகமாக வந்தது கடல்ராணியை நோக்கி. லிவாஸியரும் நூலேணியைத் தொங்கவிட்டான் இங்க்லண்ட் ஏறிவர. 'கடல் ராணி'யின் தளத்தை அடைந்த இங்க்லண்ட், நேராக லிவாஸியரிடம் சென்று, ''டெய்லர், காஸண்ட்ராதான் துறைமுகத்தில் முதலில் நுழைய வேண்டும் என்கிறான்''என்று செய்தியை அவிழ்த்தான்.

லிவாஸியர் உடலை நன்றாக வளைத்துத் தலையால் வணங்கினான். இங்க்லண்டை நோக்கி,''ஐ டோன்ட் அக்ரி (நான் இதற்கு ஒப்பவில்லை)'' என்றான் .



''சங்கர் பந்த் ஆபத்தில் இருக்கிறார்''என்றான் இங்க்லண்ட்.

''ஸில்வரும் ஆபத்தில் இருக்கிறான். யூ டச் ஒன் ஹேர் ஆஃப் சங்கர் பந்த் ஐ வில் ஹாங் ஸில்வர் ஃப்ரம் மை மாஸ்ட் ஃபார் ஆல் டு ஸீ. ஆஸ்க் டெய்லர் நாட் டு ப்ளே வித் லிவாஸியர் ( சங்கர் பந்தின் ஒரு முடியைத் தொட்டால்கூட ஸில்வரை எல்லோரும் தரிசிக்கும்படி எனது பாய்மரத்தில் தூக்கிலிடுவேன். லிவாஸியரிடம் விளையாட வேண்டாம் என்று டெய்லரிடம் சொல்)'' என்ற லிவாஸியர் மிகக் குரூரமாக நகைத்தான்.

அதே சமயத்தில் இங்க்லண்ட் ஏறிவந்த நூலேணியும் எடுக்கப்பட்டது ஜலமட்டத்திலிருந்து.''இங்க்லண்ட்! யூ கான் ஸ்விம் பாக் டு காஸண்ட்ரா இஃப் யூ லைக் (வேண்டுமானால் காஸண்ட்ராவுக்கு நீ நீந்திச் செல்லலாம்)'' என்றும் கூறினான் லிவாஸியர் நகைப்பின் ஊடே. ''அனந்த்!'' என்று கூவி அனந்தையும் அழைத்து, ''தேவ்கட் துறைமுகத்தைப் பற்றி உனக்குத்தான் அதிகமாகத் தெரியும். இந்தக் கப்பலை அதற்குள் செலுத்து'' என்றும் உத்தரவிட்டான்.

சில நேரங்களில் லிவாஸியர் மிகக் குரூரமாக இருக்க முடியும் என்பது இங்க்லண்டுக்கு ஏற்கெனவே தெரிந்த விஷயமென்றாலும் குரூரத்துடன் அவனால் நகைச்சுவையையும் கலக்க முடியும் என்பதை அன்றுதான் அறிந்து கொண்டான். அது மட்டுமல்ல, யாருடைய ஆபத்தைக் காட்டியும் லிவாஸியரை மிரட்டுவது பலனளிக்காத விஷயமென்பதையும் சந்தேமற உணர்ந்து கொண்டான். சங்கர் பந்தின் ஆபத்தைச் சுட்டிக் காட்டி லிவாஸியரை மடக்கிவிடலாமென்று டெய்லர் எண்ணியது எத்தனை மடத்தனம் என்பதும் தெள்ளத் தெளிவாகப் புரிந்தது இங்க்லண்டுக்கு.சிந்து துர்க்கத்திலிருந்து தந்திரமாகச் சங்கர் பந்தைக் காஸண்ட்ரா கப்பலுக்கு வரவழைத்துக் கப்பலை ஓட்டி மால்வான் தளபதியைச் சிறைப் பிடித்து விட்ட போதே தான் அதை எதிர்த்ததையும் தன் வார்த்தைகளை டெய்லர் மதிக்காததையும் அதை எண்ணிப் பார்த்த இங்க்லண்ட் ''முட்டாள்'' சர்வ முட்டாள்'' என்று டெய்லரைச் சபித்தான்.

அவசியமாகப் பேசவேண்டி இருப்பதாகக் கூறி, சங்கர் பந்தை அழைத்து வரும்படி தன்னை டெய்லர் அனுப்பியதையும் அதற்கு

உடனடியாக ஒப்புக்கொண்டு சங்கர் பந்த் வந்ததையும் எண்ணிப் பார்த்த இங்க்லண்ட், 'மால்வான் தளபதி அத்தனை முட்டாளல்லவே, எப்படி என்னை நம்பி, டெய்லரையும் நம்பி வந்தார்?' என்று தன்னைப் பலமுறை கேட்டுக் கொண்டான். அந்தக் கேள்வி களுக்கு காஸண்ட்ராவில் விடை கிடைக்கவில்லை. ஆனால், இன்று கடல் ராணியில் கிடைக்கும் என்ற நம்பிக்கை இங்க்லண்டுக்கு இருந்தது.

இத்தகைய சிந்தனைகளுடன் எதிரே அணுகிக் கொண்டிருந்த தேவ்கட் துறைமுகத்தை நோக்கிய இங்க்லண்ட், 'அதில் முதலில் நுழைய டெய்லர் ஏன் ஆசைப்பட்டான் ' என்று எண்ணிப் பார்த்தும் விடை கிடைக்கவில்லை. துறைமுகத்தின் உள்ளே அழகாக நீல நிற அலைகள் தாண்டவமாடிக் கொண்டிருந்தாலும் இருபுறமும் ஸஹ்யாத்ரி மலைப் பகுதிகள்பயங்கரமாக எழுந்து கொண்டிருந்தன. அந்த மலைகளுக்கு இடையில் ஒரு கப்பல் சென்றுவிட்டால், இடையே இருந்த வட்டமான துறைமுகத்தில் தங்கிவிட்டால், துறை முத்தின் வாயிலை எந்தக் கப்பலும் அடைத்து விடமுடியும். அதனால் உள்ளே இருக்கும் கப்பல் சிறைப்படும்என்று நினைத்தான்இங்க்லண்ட்.

'இந்த விஷயம் திட்டமாகத் தெரிந்தும் டெய்லர் எதற்காக முதலில் காஸண்ட்ராவை உள்ளே கொண்டு செல்ல இஷ்டப் பட்டான்?' என்று இங்க்லண்ட் நினைத்துப் பார்த்தான். இருப்பினும் அதைப்பற்றி அவன் யாரையும் கேட்கவில்லை. லிவாஸியரே அதைப்பற்றிப் பிரஸ்தாபித்தான்: ''அனந்த்! துறைமுகம் மிக அழகு தான். ஆனால், அதற்குள் 'கடல் ராணி' சென்றால் காஸண்ட்ரா துறைமுக வாயிலை அடைத்துவிடுமே''என்று இங்க்லண்டின் பக்கத்தில் நின்றிருந்த அனந்தைக் கேட்டான்.

அனந்தின் முகத்தில் உணர்ச்சி ஏதுமில்லை. ''உண்மைதான், கண்டிப்பாக டெய்லர் நமக்கு வழிவிட மாட்டான் வெளியேவர'' என்றான் உணர்ச்சி லவலேசமுமற்ற குரலில்.

''அதுமட்டுமல்ல. நம்மீது காஸண்ட்ராவின் பீரங்கிகளைப் பிரயோகிக்கலாம்'' என்று லிவாஸியர் சுட்டிக் காட்டினான்.

''பிரயோகிக்கலாம். நம்மை அழித்து விடலாம்!''என்றான் அனந்த்.



''இருப்பினும் நாம் முதலில் துறைமுகத்துக்குள் பிரவேசிக்கப் போகிறோம்?''

''ஆம்!''

''ஏன்?''

''நமது இஷ்டம் அப்படி இருக்கிறது.''

''இது டெய்லருக்கு லாபம்.''

''இங்க்லண்டுக்கும்தான்.''

இப்படி லிவாஸியரும் அனந்தும் வேண்டுமென்றே தன் இரு பக்கங்களிலும் நின்று பேசிக்கொண்டிருந்ததைக் கேட்ட இங்க்லண்டின் பொறுமையும் எல்லை கடக்கவே, ''காப்டன் லிவாஸியர்! காம்ரேட் அனந்த்! இந்தப் பேச்சுப் போதும்''என்றான் கடுமையுடன்.

''அனந்த்! இங்லண்ட் கோபப்படுகிறார்'' என்று சுட்டிக் காட்டினான் லிவாஸியர்.

''நியாயந்தானே! அவர் வந்த தூது செல்லுபடியாகவில்லை'' என்று ஒத்துப் பாடினான் அனந்த்.

பிறகு அந்த இடத்தைவிட்டு அகன்ற அனந்த், மாலுமிகளை நோக்கி விடுவிடு என்று உத்தரவுகளைப் பிறப்பிக்கலானான்:''பாய் மரங்களில் ஒன்று விரிந்திருந்தால் போதும். மற்றவற்றை அவிழ்த்து விடுங்கள். யார் அங்கே? சுக்கானைப் பிடிப்பவனிடம் சுக்கானைத் திருப்பச் சொல், துறைமுகத்துக்குள் கப்பலைச் செலுத்த. துடுப்புகள் மெதுவாகத் துழாவட்டும். கப்பலின் முகப்பு துறைமுக வாயிலை நோக்கியதும் அலைகளின் வேகத்திலேயே கப்பல் துறைமுகத்துக் குள் நுழையட்டும். பின்னால் வரும் நமது ஐந்து துணைக் கப்பல்களை ஒதுங்கிச் செல்லச் சொல்லிக் கொடியால் சைகை செய்யுங்கள்!''என்று உத்தரவுகளைப் பிறப்பித்த அனந்த், கப்பலின் முகப்பில் நின்றுகொண்டு துறைமுகத்தை அணைத்திருந்த இரு மலைப் பகுதிகளில் தெற்குப் பகுதியை நோக்கிக் கையை ஆட்டினான். தெற்குப் பகுதியின் உச்சியிலிருந்த கோட்டை யிலிருந்து பதிலுக்கு ஆடியது ஒரு மகாராஷ்டிரக் கொடி.

மாலை நேர மஞ்சள் வெயில் தேவ்கட் துறைமுகத்துக்குப் பெரும் அழகைக் கொடுத்திருந்தது. மலை உச்சிகள் இரண்டும் பொன்மயமாகக் காட்சியளித்தன. மலைச் சிகரத்திலிருந்து சிறு கோட்டையைச் சுற்றித் தெரிந்த மந்தாரைப் பூக்கள் மாலை வெயிலில் அதிகப் பொன்னைப் பூசிக் கொண்டு காற்றில் ஆடி உள்ளே நுழைந்து கடல்ராணியை வரவேற்றன.

கடலரசன் தன் அலைக் கரங்களால் கடல்ராணியை ஏந்தி ஏந்தித் தவழச் செய்து தேவ்கட்டுக்குள் செலுத்திக் கொண்டிருந்தான். இந்த அற்புதத்தை ராணியும் சாருவும் ஒருவரையொருவர் அணைத்த வண்ணம் பார்த்துக் கொண்டிருந்தனர். அனந்த் கப்பலின் முகப்பில் நின்ற வண்ணம் கப்பலைச் செலுத்தக், கைகளை ஆட்டியும் இரைந்து குரல் கொடுத்தும் உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தான். லிவாஸியர், முகத்தில் சந்துஷ்டியையும் சிரிப்பையும் கலந்து பரவ விட்டுக்கொண்டு நடுப்பாய்மரத் தூணில் சாய்ந்து கொண்டிருந்தான்.

இங்க்லண்டும் ஸில்வரும் தளத்தின் ஒரு கோடியில் நின்று, பின்னால் எட்ட பிரும்மாண்டமாக வந்து கொண்டிருந்த காஸண்ட்ராவைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இரு பெண்களும் இரு புறத்திலும் எழுந்த மலைப் பகுதிகளின் லாவண்யத்திலும் துறைமுகக் கவர்ச்சியிலும் மெய் மறந்திருந்தார்கள்.

டெய்லர் திட்டப்படியே சகலமும் நடந்தது. 'கடல் ராணி' துறைமுகத்துக்குள் நுழைந்து நங்கூரம் பாய்ச்சியது. காஸ்ண்ட்ராவும் துறைமுக வாயிலை அடைந்து நின்றுவிட்டது. ''கடல் ராணி இனி நமது கையில் இருக்கிறது. இனி அது தப்பமுடியாது!'' என்று காஸண்ட்ராவில் டெய்லர் குதூகலித்தான். துறைமுகச் சிறையில் 'கடல்ராணி' ஆனந்தமாக ஆடி நின்றது.

அத்தியாயம் - 65

# வேடன்விடுதி!

தேவ்கட் துறைமுகத்தில் புக மாலையிலேயே ஏற்பாடுகள் நடந்துங்கூட, இரு பக்கங்களிலும் உள்ள மலைகளைத் தொடாமல் 'கடல் ராணி'உட்புகுந்து நங்கூரம் பாய்ச்சியபோது மாலை மறைந்துவிட்டதால், தென் புறத்தில் உள்ள கோட்டையில் விளக்குகள் எரியலாயின. அதே சமயத்தில் 'கடல்ராணி'யின் விளக்குகளும் காஸண்ட்ராவின் விளக்குகளும்கூட எரியத் தொடங்கிவிட்டதால் மலைக் கோட்டையொன்றும் நீர்க்கோட்டைகள் இரண்டும் சற்றுத் தூரம்விட்டு நிற்பது போன்ற பிரமையை ஆரம்ப இரவின் சூழ்நிலை சிருஷ்டித்தது. நிலவு புறப்படுவதற்கு நாழிகைகள் நான்கு இருந்த காரணத்தால் அந்தப் பிரமையிலும் கூட ஒரு பயங்கரம் கலந்துதான் இருந்தது.

'கடல்ராணி' நங்கூரம் பாய்ச்சிய பின்பு அரை நாழிகைக்கெல்லாம் கோட்டையிலிருந்து மலைச் சரிவில் இறங்கி, தரையில் கட்டப்பட்டிருந்த ஒரு படகில் ஏறிய ஒருவன் படகை 'கடல் ராணி'யை நோக்கிச் செலுத்தி வந்தான். அவன் கப்பலின் தளத்துக்கு வர நூலேணியைத் தொங்க விடுமாறு அனந்த் உத்தரவிடவே நூலேணி தொங்க விடப்பட்டது. அதில் ஏறி வந்த மனிதன் மாலுமி உடையில் இருந்தான். அதிக உயரமோ பருமனோ இல்லாத உடலுடன் கூடிய அவன் தோரணை மட்டும் பிரமாதமாயிருந்தது. கப்பலின் தளத்தில் கால் வைத்ததும் அங்கிருந்தவர்களை ஒரு முறை உற்று நோக்கிவிட்டு, ''இந்தக் கப்பலின் தலைவர் யார்?'' என்று வினவினான்.

அவன் கேள்வி முடிவதற்கு முன்பே அவன் இருந்த இடத்துக்கு வந்துவிட்ட லிவாஸியர் தலை வணங்கி, ''காப்டன் லிவாஸியர் அட் யுவர் சர்விஸ்'' என்று மரியாதை செலுத்தினான்.

''நான் தேவ்கட் கோட்டையின் தலைவன். ஆனால், இந்தக் கப்பலுக்கு ஒரு பிரெஞ்சு காப்டனை நான் எதிர்பார்க்கவில்லை''

என்றான் கோட்டைத் தலைவன், லிவாஸியரின் ஆங்கில உச்சரிப்பிலிருந்து அவன் யாரென்று அறிந்து கொண்டதால்.

லிவாஸியர் மிக அழகாகப் புன்முறுவல் செய்து ''நான் ஒரு தற்காலிக காப்டன்,கப்பலின் சொந்தக்காரர் அதோ இருக்கிறார்!'' என்று கூறி,''ராணி! வாருங்கள் இப்படி''என்று சொல்லி ராணியைக் கோட்டைத் தலைவனுக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

அருகே வந்த ராணியைக் கண்ட கோட்டைத் தலைவன், சிரம் தாழ்த்தி நன்றாக வணங்கினான். ''தங்களைப் பற்றிக் கேள்வி பட்டிருக்கிறேன் . கோட்டையில் தங்க வசதியில்லை. தவிர அடிக்கடி பழுது பார்க்காததால் சில பகுதிகள் இடிந்தும் கிடக்கின்றன. இருப்பினும் தாங்களும் அதோ அந்தப் பெண்மணியும் தங்க ஏற்பாடு செய்கிறேன்''என்று கூறினான். பிறகு கேட்டான்: ''ராணி! அனந்த் என்பவர் இருக்கிறாரா இந்தக் கப்பலில்?''என்று.

சற்று எட்ட நின்றிருந்த அனந்த் நிதானமாக நடந்து வந்து கோட்டைத் தலைவனை நோக்கி, ''நான்தான் அனந்த்''என்று தானே அறிமுகம் செய்து கொண்டான்.

அந்த அறிமுகத்துக்குப் பிறகு கோட்டைத் தலைவன் மற்றவர்களை அறவே புறக்கணித்துவிட்டு, அனந்தைக் கப்பலின் இன்னொரு மூலைக்கு அழைத்துச் சென்று ஏதோ வேகமாகப் பேசினான், கைகளைப் பல திசைகளில் ஆட்டி. அனந்த் எதற்கும் பதில் சொல்லவில்லை. முடிவில், ''எதற்கும் கோட்டைக்கு வருகிறேன்!''என்று மட்டும் சொன்னான்.

அதை ஆமோதித்த கோட்டைத் தலைவன் லிவாஸியரிடமும் கடல்ராணி,சாரு இவர்களிடமும் விடைபெற்றுக் கொண்டு திரும்பிச் சென்றுவிட்டான் கோட்டைக்கு. அவன் நூலேணியில் இறங்கிப் படகில் ஏறியதுமே அனந்த், லிவாஸியரை நோக்கி ''லிவாஸியர், இந்தப் பெண்கள் இருவரையும் கோட்டையில் விட்டு வருகிறேன். ஒரு வேளை டெய்லர் பீரங்கிகளை இந்தக் கப்பலின் மீது திருப்பினால் எனக்கு விளக்கின் மூலம் சைகை செய்'' என்று கூறிவிட்டு ஸில்வரை நோக்கி ''ஸில்வர் மை ஃப்ரண்ட்! வீ ஹாவ் டு பார்ட் ஃபார் எ ஃப்யூ அவர்ஸ் (ஸில்வர்! நண்பனே! நாம் சில மணி நேரம் பிரிய வேண்டிய அவசியம் இருக்கிறது)''என்று சொல்லி ஸில்வரை அன்புடன் தட்டிக் கொடுத்தான்.



ஸில்வர் எந்த விதப் பதிலும் பேசாமல் மௌனமாக நின்றான். தனக்கும் புரியாத ஏதேதோ விஷயங்கள் நடப்பதை உணர்ந்து கொண்டான். துறைமுகம் காஸண்ட்ராவால் அடைக்கப்பட்டு அதன் பலமான பீரங்கிகள் கடல்ராணி மீது திருப்பப்பட்டிருக்கும் இந்தச் சமயத்தில் கடல் ராணியின் கதி அதோகதியாக இருக்க, எதற்காக அனந்த் இரு பெண்களையும் அழைத்துக்கொண்டு தரைக்குச் செல்கிறான் என்று நினைத்துப் பார்த்தும் விடை விளங்கவில்லை அவனுக்கு. ஆகவே அனந்த் சொன்னதற்குத் தலையை மட்டும் அசைத்தான்.தோள் மீதிருந்த அசுரக் கிளியைப் பார்த்து,''காப்டன் பிளிண்ட் உனக்கு ஏதாவது புரிகிறதா?''என்று வினவினான். கிளி, அவன் கேள்வியைப் புரிந்துகொண்டிருக்க வேண்டும். தலையை மேற்கு நோக்கித் திருப்பி இருமுறை ஆட்டியது.கிளியின் ஒவ்வொரு சைகையையும் அறிந்துகொள்ளக் கூடிய ஸில்வருக்கு அன்று மட்டும் ஏதும் புரியவில்லை! எதையும் பொறுத்திருந்து பார்க்கத் தீர்மானித்தான்.

அனந்த் கோட்டைக்குப் போவதில் பரபரப்பைக் காட்டினான். இரு பெண்களையும் வெள்ளைக்காரப் பாணியில் மாலுமி உடைகளை அணியச் செய்தான். ''உங்கள் கட்டிலுக்கு அடியில் இருக்கும் பெட்டியில் உங்களுக்குச் சரியான உடைகள் இருக்கும் என்று கூறிவிட்டு, லிவாஸியருடன் பேச அவனை அவனது அறைக்கு அழைத்துச் சென்றான். கதவை மூடிவிட்டு அவனுடன் பத்து நிமிடங்கள் பேசிய பிறகு திரும்பிய அனந்த், பெண்கள் இருவரும் மாலுமி உடையில் வரவே படகொன்றை அவிழ்த்து நீரில்விட உத்தரவிட்டான். இரு பெண்களுடன் நூலேணியில் இறங்கிப் படகைத் தானே செலுத்திக்கொண்டு தென் கரையை அடைந்தான். அங்கு அவர்களுக்காகவே காத்திருந்த கோட்டைத் தலைவன் மாலுமி உடையிலிருந்த இரு பெண்களையும் கண்டதும் பிரமிப்புக்குள்ளானான். இருப்பினும் ஏதும் கேட்காமல் மூவரையும் கோட்டைக்கு அழைத்துச் சென்று கோட்டையைச் சுற்றிக் காட்டினான்.

அவன் முன்பே சொன்னபடி கோட்டை பாழடைந்த கோட்டையாகவே காட்சியளித்தது. கோட்டையின் வடபுறச் சுவர் அடியோடு இடிந்து கிடந்தது. கிழக்குச் சுவரும் எந்த நிமிஷத்திலும் வடக்குச் சுவரைப் பின்பற்றத் தயாராயிருந்தது. இத்தனையிலும்

அந்தப் பழைய காலக் கோட்டை கம்பீரமாகவே காட்சியளித்தது. அதன் மேற்குச் சுவர் மட்டும் மஞ்சள் மந்தாரை மரங்களால் மறைக்கப்பட்டிருந்ததால் அது வெளிக்குச் சரியாகத் தெரிய வில்லை. ஆனால், அதன்மீது ஏற்றப்பட்டிருந்த பீரங்கிகள் துறைமுக வாயிலை நோக்கிக் கொண்டிருந்ததைக் கவனித்த அனந்த் திருப்திக்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான்.

இப்படிக் கோட்டையைச் சுற்றிப்பார்த்த அனந்த் கோட்டைக் குள் வந்தபிறகு தனக்கும் இரு பெண்களுக்கும் தயார் செய்யப்பட்டி ருந்த விசாலமான அறையைக் கவனித்து, ''வேறு அறைகள் கிடையாதா?''என்று கோட்டைத் தலைவனை விசாரித்தான்.

''இங்கில்லை!''என்று சொல்லிச் சிறிது குழப்பத்தை முகத்தில் காட்டினான் கோட்டைத் தலைவன்.

''வேறு எங்கு இருக்கிறது?''என்று வினவினான் அனந்த்.

''இந்தக் கோட்டைக்குப் பின்புறம் இருக்கும் காட்டில் கூப்பிடு தூரத்தில் வேட்டைக்காரன் வீடு இருக்கிறது. அதில் விருந்தினருக்கு வேண்டிய வசதி இருக்கிறது'' என்றான் கோட்டைத் தலைவன்.

அனந்த் இரு பெண்களையும் நோக்கினான். அவன் முகத்தில் எழுந்த கேள்விக்குறியைக் கண்ட ராணி,''வேண்டாம். இங்கேயே தங்குகிறோம்'' என்றாள்.

''இங்கு என்ன குறைவு இருக்கிறது?''என்று சாருவும் ஒத்துப் பாடினாள்.

''நாம் மூவரும் ஒரே அறையில் தங்குவது எப்படி?''என்று கேட்டான் அனந்த்.

''ஏன் தங்க முடியாது?'' என்று கேட்டாள் ராணி.

இதற்கு அனந்த் என்ன பதில் சொல்வான் என்பதைக் கேட்க ஆவலை முகத்தில் காட்டிய கோட்டைத் தலைவனுக்கு அதிர்ச்சி தரும்படியாகப் பதில் சொன்னான் அனந்த்: ''தலைவரே! இவர் களுடன் நான் தனித்துப் படுப்பது முதல் தடவையில்லை. ஆகை யால் இந்த ஒரு அறை போதும் எங்களுக்கு!''என்று.

கோட்டைத் தலைவனுக்கு ஏற்பட்டதை அதிர்ச்சி என்று சொன்னால் முழு நிலைமை அதில் தெரியாது. அதிர்ச்சியையும்



மீறிய உணர்ச்சிகள் அவன் உடலை ஊடுருவின. மெள்ளச் சமாளித்துக் கொண்டு, ''தங்கள் இஷ்டம்''என்றான் கோட்டைத் தலைவன்.

''இஷ்டத்துக்கென்ன? இவருக்குக் கசக்கிறதா?''என்று கேட்டாள் ராணி கோட்டைத் தலைவனை நோக்கி.

''இனிக்கிறதோ, கசக்கிறதோ எங்களை விட்டால் இவருக்கு வேறு கதி கிடையாது!''என்றாள் சாரு.

இந்த வெட்கம்கெட்ட பேச்சைக் கேட்ட கோட்டைத் தலைவன், 'இரண்டு பெண்களும் பிசாசுகள்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். ''இந்த அறை உங்களுக்குச் சற்று நெருக்கமாய் இருக்கலாம்...'' என்று ஏதோ சொல்ல முற்பட்டவனை, ''அதனால் பாதகமில்லை'' என்று தடுத்துவிட்ட அனந்த், ''தலைவரே! மேற்குப் புறச் சுவர்மீது இருக்கும் பீரங்கிகள் இயங்கும் வகையில் இருக்கின்றனவா?'' என்று விசாரித்தான்.

''நல்ல நிலையில் வைத்திருக்கிறேன்.தேவையான குண்டு களும் கிடங்கில் இருக்கின்றன. இல்லையேல் கொள்ளைக்காரர்கள் நடமாடும் இந்த இடத்தில் கோட்டையை இத்தனை ஆண்டுகள் காக்க முடியுமா?''என்றான்,கோட்டைத் தலைவன் பதிலுக்கு. ''அது மட்டுமல்ல. இந்த மஞ்சள் மந்தாரை மரங்கள்...''என்று கூறிச் சிறிது தயங்கினான்.

''பீரங்கிகளைக் கடலில் வரும் கப்பல்களிலிருந்து மறைக்கும் யோசனையில்லாமல் பெரியவர்கள் எதையும் செய்யவில்லை'' என்ற அனந்த், சரேலெனத் திரும்பி,''இந்தக் கோட்டையின் நிலைமையை அதிகாரிகளுக்கு எடுத்துச் சொன்னீர்களா?''என்று வினவவும் செய்தான்.

''மேலிடம் கவனிக்கவில்லை.''

''பேஷ்வாவுக்கு எழுதுவதுதானே?''

''எழுதினேன். கூடிய சீக்கிரம் கவனிப்பதாகச் சொன்னார், இதற்காக தத்தாஜிராவ் ஆங்கரே என்பவரை அனுப்புவதாகப் பதில் வந்தது. ஆனால், அடுத்த கடிதங்களுக்குப் பதிலும் இல்லை. தத்தாஜிராவையும் காணோம்'' என்றான் கோட்டைத் தலைவன். இதைச் சொல்லி வருத்தத்துடன் பெருமூச்சும் விட்டான்

அதற்குப் பிறகு கோட்டைத் தலைவனுடன் உணவருந்திய அனந்த், இரண்டு பெண்களையும் அழைத்துக் கொண்டு தலைவன் காட்டிய அறைக்குள் சென்று படுத்தான். நாழிகைகள் ஓடிக்கொண்டிருந்தன. நிலவும் மெள்ளத் தலைகாட்டியது. இரு பெண்களும் கண்களை மூடி நன்றாக உறங்கியதைக் கவனித்த அனந்த், அவர்களின் நித்திரை உண்மை தானா என்றுசோதித்து விட்டு, மெள்ள எழுந்திருந்து கதவை ஓசைப்படாமல் திறந்து கொண்டு வெளியே சென்றான்.

கோட்டையின் பின்புறக் காட்டை நோக்கி மெள்ள நடந்தான் சிறிது தூரம். பிறகு தூரத்தில் மினுக்கு மினுக்கு என்று எரிந்து கொண்டிருந்த விளக்கை நோக்கித் துரிதமாக நடக்கலானான். அந்த விளக்கை அடைந்ததும் அதுதான் வேட்டைக்காரன் விடுதியாக இருக்க வேண்டும் என்பதை வெளியிலிருந்த பலவித ஆயுதங்களாலும் விலங்குகளைப் பிடிக்கும் பொறிகளாலும் உணர்ந்து கொண்ட அனந்த், அந்த விடுதியின் கதவை நோக்கி நடந்து மெள்ள அதைத் தட்டினான்.

கதவு திறக்கப்பட்டது; ஆனால் திறந்தவன் வேட்டைக்காரனல்ல!

அத்தியாயம் - 66

# ஒரு கல்லில் இரண்டு மாங்காய்!

வேடன் விடுதியிலிருந்து வெளிவந்தவனைக் கண்டதும் எந்தவித வியப்பையும் காட்டாத இந்திரஜித் அனந்த் கால தாமதமின்றி உரையாடலில் இறங்கினான்: ''நீ எப்பொழுது வந்தாய்?'' என்று எடுத்த எடுப்பிலேயே கேட்டான்.

துலாஜி ஆங்கரேயின் முகத்தில் சந்தோஷத்தின் சாயை விரிந்தது. ''நீ எதிர்பார்த்தபடி... மாலையில்...''என்றான் துலாஜி. அத்துடன்,''பேச இது இடமில்லை. அங்கு செல்வோம்''என்று கூறிச் சற்று எட்ட இருந்த மரத்தடிக்கு அழைத்துச் சென்றான் அனந்தை.

மரத்தடியில் உட்கார்ந்ததும் துலாஜியே பேச்சைத் துவங்கி ''வேடன் விடுதியில் வேறு விருந்தினர்களும் இருக்கிறார்கள்'' என்று குறிப்பிட்டான்.

அவன் சொற்களில் இருந்த ஒலியைக் கண்ட அனந்த், ''துலாஜி! நீ ஏதோ சொல்லத் துடிக்கிறாய் என்று தெரிகிறது, சொல்லிவிடு'' என்று ஊக்கினான்.

''விருந்தினர்கள் உன் ஆதி நண்பர்கள்'' என்றான் துலாஜி.

''ஆதி நண்பர்களா?''அனந்தின் கேள்வியில் வியப்பு தாண்டவமாடியது.

''ஆம்''

''யார் அவர்கள்?...''

''மேஜர் ஸ்டாண்டன்,லெப்டினென்ட் ஸ்மித்.''

இதைக் கேட்டதும் அதிர்ச்சியையோ வியப்பையோ அனந்த் காட்டுவான் என்று துலாஜியும் எதிர்பார்க்கவில்லை. அனந்தும் அந்த உணர்ச்சிகளைக் காட்டவில்லை. ''அவர்கள் எனக்கு எப்படி ஆதி நண்பர்கள்? உன்னைச் சந்தித்த பின்புதானே அவர்களைச் சந்தித்தேன்?'' என்று வினவினான் அனந்த்.

''சிந்து துர்க்க நாடகத்தின் ஆதி நண்பர்கள் என்று சொன்னேன். முடிவிலும் அவர்கள் தலைகாட்ட வேண்டியது அவசியமல்லவா? அப்பொழுதுதானே நாடகம் பூர்த்தியாகும்?''என்று வினவினான் துலாஜி.

இதைக் கேட்டதும் அனந்த் லேசாக வாய்விட்டே நகைத்தான். ''நீ இப்பொழுது காளிதாஸனாகி விட்டாய். நல்ல நாடகங்களை முறைப்படி சிருஷ்டிக்கிறாய்''என்றும் சொன்னான் நகைப்பின் ஊடே.

''அந்தப் பெருமை உன்னைத்தான் சாரும். இந்த நாடகத்தை வகுத்ததும் நானல்ல, சதுரங்கக் காய்களைப் போல் மனிதர்களையும் மரக்கலங்களையும் நகர்த்துவதும் நானல்ல'' என்ற துலாஜி ஆங்கரே, ''நாடக ஆசிரியரே! அடுத்து நான் என்ன செய்ய வேண்டும்? மாக்ரேயை எங்கே சந்திப்பதாக உத்தேசம்?''என்று வினவினான்.

''பூர்ணகட்டில்''என்றான் அனந்த் தாமதமின்றி.

துலாஜி சிறிது நேரம்தான் சிந்தித்தான். ''சரி சரி...காரணம் புரிகிறது'' என்றான்.

''என்ன புரிகிறது?''அனந்தின் கேள்வியில் சற்றே வியப்பு ஒலித்தது.

''அரபிக் கடலைச் சூறையாடி வரும் வெள்ளைக் கொள்ளைக் காரர்களை ஒழித்துக் கட்டுவதாக வாக்குக் கொடுத்தாய் பேஷ்வா வுக்கு. அதில் என் தந்தையையும் மெள்ளச் சேர்த்துவிட்டாய். உன் திட்டம் கொள்ளைக்காரர்களை அழிக்கும் திட்டமானால், அதற்கு இப்பொழுது சமயம் சரியாக இருக்கிறது.''

''எப்படி?''

''நீ துறைமுகத்துக்குள் கடல்ராணியைச் செலுத்துவதைக் கவனித்தேன்.''

''உம்.''

''அடுத்து காஸண்ட்ரா துறைமுக வாயிலை அடைத்து விட்டதையும் கவனித்தேன்.''

''உம்.''



''காஸண்ட்ராவுக்குப் பின்னால் சிறிது தூரத்தில் விளக்குகளை அணைத்துக் கொண்டு கடல்ராணியின் துணைக் கப்பல்கள் ஐந்து நிற்பதையும் பார்த்தேன்.''

''அவ்வளவுதானா?''

''இல்லை. நீ ராணியுடனும் சாருவுடனும் கோட்டைக்கு வந்ததையும் பார்த்தேன். இத்தனையையும் பார்த்தேன்; பார்க்கா ததை ஊகித்தேன்'' என்று துலாஜி புன்முறுவலை இதழ்களில் படரவிட்டுக் கொண்டான்.

அனந்தும் புன்முறுவல் செய்தான்: ''எதை ஊகித்தாய்?'' என்று வினவினான்.

''மந்தாரை மரங்களால் மறைக்கப்பட்டிருக்கும் கோட்டை பீரங்கிகளையும் நீ கண்டிருப்பாய். உன் ஏற்பாடுகள் அத்துடன் பூர்த்தி''என்ற துலாஜி மேலும் சொன்னான்: ''காஸண்ட்ரா எத்தனை பீரங்கிகளைக் கொண்டதாக இருந்தாலும் அது உன்னிடம் இப்பொழுது சிறைப்பட்டிருக்கிறது. அது பீரங்கிகளை இயக்க முற்பட்டால் கிழக்குப் புறமிருந்து கடல்ராணியின் பீரங்கிகளை லிவாஸியர் இயக்குவான். காஸண்ட்ராவுக்கு அப்பாலுள்ள மேல் திசையிலிருந்து ஐந்து துணைக் கப்பல்களும் அர்த்த சந்திர வட்டமாக வளைந்து பீரங்கிகளால் காஸண்ட்ராவைத் தாக்கும். போதாக் குறைக்கு மலை மீதிருக்கும் கோட்டையில் உள்ள பீரங்கிகள் காஸண்ட்ராவை நோக்கிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் காஸண்ட்ராவை விட இன்னும் பெரிய கப்பலாக இருந்தாலும் அழிந்துவிடும். கொள்ளைக்காரர்களை அழிப்பதாயிருந்தால், டெய்லரையும் இங்கலண்டையும் சிறைப்படுத்துவதாக இருந்தால், இதுதான் சமயம். தவிர இங்க்லண்ட் ஏற்கெனவே கடல்ராணியில் இருக்கிறான். கொள்ளைக்காரர்களில் சிறிது நிதானஸ்தனும் புத்திசாலியும் அவன்தான். அவன் உன்னிடம் அகப்பட்டிருக்கும் போது டெய்லரைப் பிடிப்பதோ காஸண்ட்ராவை அழிப்பதோ ஒரு பெரிய காரியமல்ல!''

''துலாஜி!என் மனத்தை இப்படிப் புரிந்து கொள்ளக் கூடியவன் நீ ஒருவன்தான். ஆனாலும் நாம் இப்பொழுது காஸண்ட்ராவைத் தாக்குவதற்கில்லை'' என்றான் அனந்த்.

''ஏன்?''துலாஜியின் கேள்வியில் மர்மத்தின் ஒலி தெரிந்தது.

அதை அனந்த் கவனிக்கவே செய்ததால், ''உனக்கே தெரியும் காரணம்.இருந்தாலும் சொல்கிறேன். நாம் இருவரும் முதலில் புறப்பட்டபோது சமாளிக்க வேண்டியவர்கள் டெய்லர்,இங்க்லண்ட் இருவர்தான் இருந்தார்கள். இப்பொழுது மாக்ரேயும் சேர்ந்து கொண்டான்'' என்று குறிப்பிட்டான்.

''மாக்ரே உனது நண்பன். அவனுடன் ஒப்பந்தமாகி இருக்கிறதே. விஜயதுர்க்கத்தில்தான் அது தீர்மானமாயிற்றே'' என்றான் துலாஜி.

''உண்மைதான். நட்புரிமை? இங்க்லண்ட் - டெய்லர் இருவரைப் பற்றியது. ஆனால், மாக்ரேக்காக நாம் காஸண்ட்ராவை அழித்துவிட்டால் கொள்ளைக்காரரை ஒடுக்கலாம். ஆனால், பிரிட்டிஷ் பலத்தை ஒடுக்க முடியாது. அது இன்னும் பெருகும். ஆகையால் நாம் அதையும் ஒடுக்க வேண்டும். அதனால்தான் பூர்ணகட்டை இந்தப் போருக்குத் தேர்ந்தெடுத்தேன். துறைமுகம் அங்கு சரியில்லை.மத்ஸ்யகந்தி நதி முரடானது. அதற்குள் கப்பலைச் செலுத்தவும் முடியாது. ஆகையால் போர் நடுக்கடலில் நடக்கும். போர் நமக்கும் காஸண்ட்ராவுக்கும் அல்ல. மாக்ரேக்கும் காஸண்ட்ராவுக்கும். 'நம்மைக் கண்டதும் மாக்ரே ஓட முயற்சி செய்வான். துரத்தி ஒழித்துவிடலாம். அவன் கொண்டு வருவதாக நீ ஏற்கெனவே ஆசை காட்டியிருக்கும் இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட மோகராக்களையும் ரத்னங்களையும் வைரங்களையும் விழுங்கிவிடலாம்' என்று டெய்லர் கனவு காண்கிறான். இம்முறை வரும் மாக்ரே, பழைய மாக்ரேயல்ல. தன்னை விட்டு ஓடும் துணைக் கப்பல்களுடன் மாக்ரே வரவில்லை. கப்பற் படையுடன் வருகிறான். அவன் நெஞ்சத்தில் வஞ்சம் இருக்கிறது. டெய்லர், புது மாக்ரேயை இந்தப் போரில் காண்பான்'' என்று விளக்கினான் அனந்த்.

புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான் துலாஜி. ''அரபிக் கடல் இதுவரை காணாத அற்புதத்தைக் காணப் போகிறது'' என்று துலாஜி குதூகலத்துடன் சொன்னான். ''அது மட்டுமல்ல, ஒரே கல்லில் இரண்டு மாங்காயை அடிக்கப் பார்க்கிறாய். இதில் கொள்ளையர் பலம், பிரிட்டிஷ் பலம் இரண்டும் உடைந்து போகும்,'' என்றும் கூறினான்.



அனந்த் ஏதும் பேசவில்லை. தீவிர சிந்தனைக்குப் பிறகு கேட்டான்: ''உனது நண்பர்கள் இருவரையும் என்ன செய்யப் போகிறாய்?''என்று.

''இப்பொழுது அவர்கள் எனது நண்பர்களாகி விட்டார் களா?'' என்று நகைத்தான் துலாஜி.

''உன்னுடன்தானே தங்கியிருக்கிறார்கள்?''

''ஆம், ஆம். அதே விடுதியில்!''

''என்னை வேவு பார்ப்பதற்கு?''

''ஆம்.''

''அவர்களுக்கு வேண்டியதை நீயே சொல்லிவிடு.''

''சரி, என்னுடன் அழைத்துப் போய்விடுகிறேன். ஆனால், நீ என்னுடன் வந்து என் அறையில் சிறிது நேரம் பேசிவிட்டுப் போ.''

''சரி வா!''என்று கூறிய அனந்த், துலாஜியுடன் வேடன் விடுதியில் உள்ள அவனது அறைக்குச் சென்றான். நீண்ட நேரம் அவனுடன் பேசிக் கொண்டிருந்துவிட்டு வெளியில் வந்து, ''துலாஜி! அந்த ஓலையில் திட்டம் பூராவும் இருக்கிறது. ஜாக்கிரதை'' என்று இரைந்து கூறிவிட்டுச் சென்றான்.

அவன் சென்றதும் வெளியே வந்து தனது புரவியில் ஏறிக்கொண்ட துலாஜி, வடக்கு நோக்கி வேகமாகப் புரவியைத் தூண்டினான். அடுத்த விநாடி வெளியே வந்த ஸ்டாண்டனும் ஸ்மித்தும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். ''நாம் நினைத்தது சரியாகப் போய்விட்டது'' என்றான் ஸ்டாண்டன்.

''விஷயம் தெரியாமலா இங்கு வந்தோம்?'' என்றான் ஸ்மித்.

''சரி, புறப்படுவோம்'' என்றான் ஸ்டாண்டன்.

''நமக்கு இங்கு முக்கிய வேலை இருக்கிறதே?''என்றான் ஸ்மித்.

''என்ன வேலை?திட்டத்தைப் பற்றிய ஓலையைத்தான் அவன் கொண்டு போய் விட்டானே?'' என்று ஸ்டாண்டன் சொன்னான்.

''அது சரி. ஆனால், கடல் ராணியைப் பிடிக்கத்தானே முதலில் சிந்து துர்க்கம் வந்தோம்?''என்று வினவினான் ஸ்மித்.

''ஆம்.'' ஸ்டாண்டனின் குரலில் அலுப்பு இருந்தது.

''அவள் இப்பொழுது அதோ அந்தக் கோட்டையில் இருக்கிறாள்'' என்று தூரத்தில் தெரிந்த தேவ்கட் கோட்டையைக் காட்டினான் ஸமித்.

''அவள் மட்டுமில்லை,இன்னொருத்தியும் இருக்கிறாள்.''

''அப்படியானால் நல்லதாகப் போய்விட்டது''என்று ஸ்மித் கோட்டையை நோக்கி நடக்கலானான்.

அவனைக் கையைப் பிடித்து நிறுத்திய ஸ்டாண்டன் ''முதலில் மாக்ரேயின் உத்தரவை நிறைவேற்றுவோம். கடல் ராணி எங்கே போய் விடுவாள்? இப்பொழுது இந்திரஜித்தின் போர்த் திட்டத்தை அறிவது முக்கியம். முதலில் துலாஜியிடமிருந்து அந்த ஓலையைப் பறிக்க வேண்டும். புறப்படு'' என்று கூறி லெப்டினெண்டை அழைத்துக்கொண்டு புரவியில் ஏறித் துலாஜியைத் தொடர்ந்தான்.

அனந்த் கோட்டைக்கு வரும்போது உதயமாகும் காலமாயிருந்ததால் அவன் கோட்டைக்குள் புகாமல் கடல்ராணியிலிருந்து கொண்டு வந்த படகொன்றை எடுத்துக் கொண்டு காஸண்ட்ராவை நோக்கித் தன்னந்தனியே சென்றான். அவனை டெய்லரே வரவேற்று அழைத்துச் சென்றான் தனது அறைக்கு.

இதையெல்லாம் கடல் ராணியிலிருந்து டெலஸ்கோப்பின் மூலம் பார்த்துக்கொண்டிருந்த லிவாஸியருக்குப் பெரும் பிரமிப்பாயிருந்தது. அடுத்து நடந்தது அதைவிட அதிகப் பிரமையை அளித்தது. சிறிதுநேரம் கழித்துச் சங்கர்ப்பந்துடன் வெளியே வந்த அனந்த், அவரையும் அழைத்துக் கொண்டு கோட்டைக்குச் சென்றான். டெய்லரே இருவரையும் அனுப்பி வைத்தான். டெய்லரின் முகத்தில் பெரு மகிழ்ச்சி உலாவியது. அதற்குக் காரணம் மிகுந்த அறிவாளியான லிவாஸியருக்கே புரியவில்லை!

அன்று பகல்வரை சிந்தனையிலிருந்த லிவாஸியரின் பிரமிப்பை அதிகப்படுத்த, காஸண்ட்ரா நங்கூரமெடுத்து,பாய் விரித்து நகர்ந்தது வடக்கு நோக்கி.

அது நகர்ந்த சிறிது நேரத்துக்கெல்லாம் கோட்டையிலிருந்த ராணி,சாரு, சங்கர் பந்த் இவர்களுடன் கடல்ராணிக்கு வந்த அனந்த் தளத்தில் நின்றிருந்த லிவாஸியரை நோக்கி,''காப்டன்! டெய்லர்



ஈஸ் ரீஸனபிள். ஹொய் நாட் வி ஃபாலோ ஹிம்?(டெய்லர் நியாயமாக நடக்கிறான். நாமும் அவனைத் தொடர்ந்தாலென்ன?)'' என்று வினவினான்.

''ஃபாலோ ஹெயர்? (எங்கே செல்வதற்குத் தொடர வேண்டும்?)''என்று லிவாஸியர் வினவினான்.

''பூர்ணகட்.''

''எதற்கு ?''

''ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களை அடிக்க!''என்றான் அனந்த். அவன் முகத்தில் தீவிர சிந்தனை படர்ந்து கிடந்தது.

லிவாஸியர் முகத்தில் அனந்தைவிட சிந்தனை தீவிரமாகப் படர்ந்தது. திடீரென அந்தச் சிந்தனை மேகங்கள் அகன்றன. பெரிதாக நகைத்தான் லிவாஸியர். ''ஹாவ் ஐ நாட் தாட் அபௌட் இட் பிஃபோர் (நான் ஏன் இதை முன்னரே ஊகிக்கவில்லை)'' என்றும் கூவினான் உற்சாகத்துடன். ''ஒரு கல்லில் இரண்டு மாங்காய்! அனந்த் மை பிரண்ட்! யூ ஆர் இங்கார்னேஷன் ஆஃப் த டெவில் இட்ஸெல்ஃப் (அனந்த்நண்பனே!நீ சைத்தானின் முழு அவதாரம்'') என்று கூறி உற்சாகத்துடன் மாலுமிகளை நோக்கி, ''நங்கூரத்தை எடுங்கள். காஸண்ட்ராவைத் தொடருங்கள்'' என்று இரைந்து உத்தரவுகளைப் பிறப்பித்தான்!

## அத்தியாயம் - 67

# பூர்ணகட்!

பூர்ணகட் *துறைமுகம் பெரும் போர்களுக்கான வசதிகளைக் கொண்ட துறைமுகம் அல்லவென்றாலும், அரபிக் கடலின் அழகிய துறைமுகங்களில் அதுவும் ஒன்று என்பதை அனைவரும் ஒப்புக்கொண்டார்கள். 1538-ஆவது ஆண்டில் போர்ச்சுக்கீஸிய கடலோடியாயிருந்த டோமா டி காஸ்ட்ரோ என்பவர் அந்தத் துறைமுகத்தைப் பெரிதும் பாராட்டினார். மச்கண்டி (மத்ஸ்ய கந்தி) நதியை அவர் வெற்றிலை ஆறு என்று அழைத்தார். மத்ஸ்ய கந்தியின் கரையோரங்களில் வெற்றிலைக் கொடிகள் ஏராளமாகப் படர்ந்ததன் காரணமாக அந்த வெற்றிலை ஆற்றின் முகத்துவாரத்தில் மலை மீதிருந்த சிறு கோட்டையிலிருந்து வெளிப்புறக் கிராமங்களுக்குச் செல்லும் பாதை பீரங்கிக் குண்டு வீச்சுத் தூரத்தில் இருந்தது என்றும் குறிப்பிடுகிறார்.

மத்ஸ்யகந்தி ஆற்றின் முகத்துவாரத்தில் வெற்றிலை அதிகமாகப் பயிரிடப்படாத இடத்தில் ஸஹ்யாத்ரி மலைச் சரிவில் கட்டப்பட்டிருந்தது பூர்ணகட் சிறு கோட்டை. கோட்டையிருந்த இடம் 22 ஏக்கர் விஸ்தீரணமென்றாலும் கோட்டை மிகச் சிறியதுதான். அதிகம் பேர் தங்க வசதி இல்லதாது; ஆனால் கோட்டையில் இருந்த 'கட்காரிகள்' (கோட்டை நிர்வாகிகள்) அந்த இருபத்திரண்டு ஏக்கர் நிலத்தைப் பாழாகச் செய்யாமல் விவசாயத்துக்கு உபயோகப்படுத்தி வந்ததாலும், அவர்கள் கோட்டை நிர்வாகத்துக்கு மகாராஷ்டிர அரசிடமிருந்து பணம் ஏதும் வாங்காததாலும், பேஷ்வா கோட்டை விவசாய நிலங்களுக்கு வரி ஏதும் போடாததாலும், கட்காரிகள் நல்ல வெற்றிலை வியாபாரம் நடத்திக் கொழுத்த பணக்காரர்களாய் இருந்தார்கள். தங்கள் பணத்தைக் கொண்டே கோட்டையின் பீரங்கிகளையும் இதர ஆயுத வசதிகளையும் பெருக்கியிருந்ததால் அந்தக் கோட்டையை நெருங்க முடியாத நிலை இருந்து வந்தது.

* Maharashtra State Gezetteer - Ratnagiri Dt. Page 782-783.



இத்தகைய கோட்டையின் சமீபத்தை இரண்டு நாட்கள் கழித்து மூன்ருவது நாள் காலை காஸண்ட்ரா அடைந்து நங்கூரம் பாய்ச்சியபோது, கோட்டையின் பீரங்கிகள் அதை நோக்கித் திருப்பப்பட்டன. அணுகுவது அபாயம் என்பதைக் குறிக்கச் சிவப்புக் கொடி ஒன்றும் கோட்டையின் மீது உயர்த்தப்பட்டது. இந்தநிலையைக் கண்ட டெய்லர் பெரும் சீற்றம் கொண்டானானாலும் அவன் உடனடியாக எந்த நடவடிக்கைகளிலும் இறங்காமல் பின்ஞல் வந்து கொண்டிருந்த கடல்ராணி என்னசெய்யும் என்பதைப் பார்க்கத் தளத்தின் மீது நின்ருன்.

வெகு சீக்கிரம் காஸண்ட்ராவை அடைந்துவிட்ட கடல் ராணியும் நங்கூரம் பாய்ச்சியது, காஸண்ட்ராவிலிருந்து சிறிது தூரத்தில். பிறகு அதன்மீது ஒரு மஞ்சள் கொடி பறந்தது. சற்று நேரத்துக்கெல்லாம் ஒரு படகு கடல் ராணியிலிருந்து இறக்கப்பட்டு இங்க்லண்டும் அனந்தும் ஸில்வரும் ஏறிக்கொண்டு காஸண்ட்ராவுக்கு வந்து சேர்ந்தார்கள். காஸண்ட்ராவின் தளத்தில் டெய்லரைச் சந்தித்த அனந்த், ''காப்டன் டெய்லர்! நான் உனது நண்பன் என்பதைக் குறிப்பிட தேவ்கட்டில் கொடுத்த வாக்குப்படி உனது நண்பர்கள் இருவரையும் அழைத்து வந்துவிட்டேன்'' என்று இங்க்லண்டையும் ஸில்வரையும் சுட்டிக் காடடினன்.

டெய்லரின் கொடிய விழிகள் அனந்தின் முகத்தை ஆராய்ந்தன. முகத்தில் மகிழ்ச்சிக் குறி மட்டுமே தெரிந்ததால் டெய்லரும் தனது இதழ்களில் புன்முறுவலைப் படர விட்டுக்கொண்டு, ''குட்! தட் ஈஸ் வெரிகுட் (நல்லது, மிக நல்லது)'' என்று கூறினன். ஆனல், அவன் குரலில் மகிழ்ச்சி இல்லை. ஆழ்ந்த சந்தேகம் ஒலித்தது. இந்திரஜித் டெய்லரை உற்று நோக்கினன்.

''டெய்லர்! யுஆர் ஆல்வேஸ் எ ஸஸ்பெக்டிங் கஸ் அண்ட் யூ நௌ ஆர் (டெய்லர்! நீ எப்பொழுதும் சந்தேகப் பிராணி. இப்பொழுதும் அப்படித்தான்)'' என்று கூறிய அனந்த் ,''யூ பூல் ஐ ஹாவ் ப்ராட் த டூ மென் ஹூ கான் கமாண்ட் திஸ் ஷிப் வித் யூ. ஐ ஹாவ் கம் அலோன். காண்ட் யூ அப்ரிஷியேட் திஸ் (அட முட்டாள்! உனக்குத் துணையாக இந்தக் கப்பலை நடத்தவல்ல இரண்டு பேரை அழைத்து வந்திருக்கிறேன். தவிர நான் தனியாக வந்திருக்கிறேன். இதை உணர உன்ஞல் முடியவில்லையா?)'' என்றும் வினவினன்.

டெய்லரின் சந்தேகம் அப்போதும் தீராததால் இங்க்லண்டையும் ஸில்வரையும் நோக்கினன் ஒரு விநாடி. ''நாம் அனந்தைச் சிறை

செய்து இங்கேயே வைத்துக்கொண்டால் என்ன ஆகும்?'' என்று வினவினான். அதைத் தொடர்ந்து பெரிதாக நகைத்தான்.

ஸில்வரும் நகைத்தான். ''டெய்லர்! உன்னை நான் சிறந்த காப்டனாகவும் போர்வீரனாகவும் அறிவேன். ஆனால், மூளை உள்ளவன் என்று எப்போதும் கருதியதில்லை'' என்று கூறினான் நகைப்பின் ஊடே. '' அது மட்டுமல்ல, நீ அனந்தைத் தொட்ட மாத்திரத்தில் காஸண்ட்ரா பற்றி எரிந்துகொண்டே கடலில் அமிழ்ந்துவிடும். கடல்ராணியுடன் வந்த ஐந்து கப்பல்களும் காஸண்ட்ராவைச் சுற்றி நிற்கின்றன. அதோ அந்தச் சிறு கோட்டைக்கு அனந்த் என்ன செய்தி சொல்லியிருக்கிறானோ தெரியாது. அனந்தை அற்பமாக நினைக்காதே. கடல் ராணியின் மீது மஞ்சள் கொடி பறக்கிறது பார்'' என்றும் கூறினான்.

ஸில்வர் இப்படிப் பேசிக்கொண்டிருந்த சமயத்தில் பூர்ணகட் கோட்டையிலிருந்து பெரிதாக வெடித்த பீரங்கியின் குண்டு காஸண்ட்ராவுக்கு வெகு அருகில் வீழ்ந்தது. அது வெறும் எச்சரிக்கை குண்டுதான் என்பதும், சிறிது தாமதித்தால் கூட வேறு குண்டுகள் காஸண்ட்ராமீது விழும் என்பதையும் டெய்லர் உணர்ந்திருந்தாலும், அதைப்பற்றி லட்சியம் செய்யவில்லை அவன். தவிர காஸண்ட்ராவின் இணையற்ற பீரங்கி பலத்தால் அந்தச் சிறு கோட்டையைத் தன்னால் அழித்துவிட முடியும் என்பதையும் அவன் அறிந்திருந்தான்.

அதனால் ஸில்வரின் பேச்சுக்கும் எச்சரிக்கைக்கும் அவன் செவிசாய்க்கவில்லை. ''டெய்லர் கோழையல்ல, போரைக் கண்டு அஞ்சுபவனல்ல'' என்றான் ஸில்வரை நோக்கி, உறுதியான குரலில்.

ஸில்வரின் முகத்தில் வெறுப்பு படர்ந்தது. ''வீரம் வேறு, முட்டாள்தனம் வேறு'' என்றான் டெய்லரை நோக்கி.

டெய்லர் அப்பொழுதும் அசைந்தானில்லை. ''கடல் ராணியுடன் வந்திருக்கும் ஐந்து கப்பல்களைப்பற்றி நான் அஞ்சவில்லை. ஒருமுறை காஸண்ட்ரா சுழன்றால் அவை பஸ்மீகரமாகிவிடும். கடல் ராணி? ஹா! நான் அஞ்சவில்லை அதோ மேலே இருக்கும் அந்தக் கோட்டையையும் நொறுக்கிவிடுவேன்'' என்று கூறிக் கையை முஷ்டியாகப் பிடித்து நொறுக்குவதற்கு அடையாளமாகக் காட்டினான்

இத்தனைக்கும் அனந்த் பேசாமல் இடித்த புளி போல் நின்றான். ''நீ ஏன் பேசவில்லை?'' என்று டெய்லர் கேட்டான்.

அனந்த் நகைத்தான் பெரிதாக. ''பேசுவதற்கு ஏதுமில்லை, வீண் வீறாப்பு எனக்குப் பிடிப்பதும் இல்லை'' என்ற அனந்தை



நோக்கி மிகுந்த கோபத்துடன் டெய்லர் ஓர் அடி எடுத்து வைத்தான். அனந்த் நன்ருகத் தளத்தின் பலகையில் சாய்ந்து கொண்டான். அவன் கண்கள் அரைவாசி மூடியிருந்தன. கைகள் செயலற்றுத் தொங்கிக் கொண்டிருந்தன. ''டெய்லர்! அதிகமாக என்னை நெருங்காதே'' என்ற சொற்களை அனந்தின் வாய் முணுமுணுத்தது.

டெய்லரின் கோபம் உச்ச நிலையை அடையவே அவன் பெல்ட்டிலிருந்து தனது கைத்துப்பாக்கியை மிகத் துரிதமாக எடுத்தான். அனந்தின் கைத்துப்பாக்கி அவன் இடையிலிருந்தே இயங்கியது மின்னல் வேகத்தில். டெய்லரின் கையில் ரத்தம் கொட்டியது. அவன் துப்பாக்கி எட்ட வெகு தூரத்தில் சென்று விழுந்தது. அதே சமயத்தில் அனந்தின் குரல் கடுமையாக ஒலித்தது. ''எனது இன்னொரு கைத்துப்பாக்கி இடைக்குக் கீழ் உன் உயிர்நிலையை நோக்கிக்கொண்டிருக்கிறது. நான் இப்போது உன்னைக் கொல்லவில்லை. காரணம், உன்னிடத்தில் உள்ள அன்பல்ல. அடுத்து வரும் போரில் மாக்ரேயைச் சமாளிக்க காஸண்ட்ராவைத் திறமையுடன் நடத்த ஒரு காப்டன் வேண்டியிருக்கிறது'' என்றான்.

டெய்லர் திக்பிரமை பிடித்து நின்றான். கையிலிருந்த ரத்தத்தைக் கூட அவன் லட்சியம் செய்யவில்லை, ''அனந்த்! யூ ஷூட் வெரி ஃபாஸ்ட்'' என்று பாராட்டினான்

அந்தப் பாராட்டுதலைத் தலையசைப்பினால் ஏற்றுக் கொண்டான் அனந்த். ''ஸில்வர்! காஸண்ட்ராமீது வெள்ளைக் கொடியை ஏற்றிவிடு. கோட்டையில் இருப்பவர்கள் நாம் நண்பர்கள் என்பதைப் புரிந்து கொள்ளட்டும். இங்க்லண்ட், காஸண்ட்ராவைச் சற்று வடக்கில் நகர்ந்து டெய்லர்! கீப் காஸண்ட்ரா ரெடி ஃபார் ஆக்ஷன்'' என்று மடமடவென்று உத்தரவுகள் பிறப்பித்தான். கடைசியாக டெய்லரைப் பார்த்துச் சொன்னான் ''டெய்லர்! எதிரி வருகிறான்... நண்பர்களுக்குள் விரோதத்தைக் காட்ட இது சமயமல்ல. இந்தப் போர் முடியட்டும். உன்னுடன் போரிடுகிறேன்.''

டெய்லர் ஏதும் பேசவில்லை. இங்க்லண்டும் ஸில்வரும் அனந்தின் கட்டளைகளை நிறைவேற்றினார்கள். வெள்ளைக் கொடி காஸண்ட்ரா மீது பறந்தது. காஸண்ட்ராவும் நங்கூரமெடுத்து மத்ஸ்யகந்தியின் முகத்துவாரத்திலிருந்து சிறிது வடக்கே சென்று நங்கூரம் பாய்ச்சியது.

அனந்த் திருப்திக்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான். பிறகு டெய்லரை நோக்கி, ''டெய்லர்! ஐ எக்ஸ்ஃபெக்ட் மாக்ரே எனி டைம் நௌ'' என்று சொன்னான்.

டெய்லர் கையிலிருந்து கொட்டிய ரத்தத்தை அநாயாசமாகத் தனது நிஜாரில் துடைத்து விட்டுச் சொன்னான்; ''மாக்ரேயா! அந்தக் கோழையா? அவன் என்னைக் கண்டதும் ஒரு முறை ஓடினான். இம்முறையும் ஓட முயல்வான், ஆனால், நான் அனுமதிக்கப் போவதில்லை'' என்று. தொடர்ந்து, ''மாக்ரே! மாக்ரே!'' என்று அவன் பெயரைச் சொல்லிப் பெரிதாக நகைத்தான்.

அனந்த் அவனை நோக்கினான் தீவிர சிந்தனையுடன். ''எதிரியைக் குறைவாக மதிப்பிடாதே'' என்றும் சொன்னான். பிறகு சிவப்பு, மஞ்சள், வெளுப்பு மூன்று கொடிகளையும் நோக்கினான். ''அபாயம், சுபம், சமாதானம் மூன்று அம்சங்களை மூன்று கொடிகளும் குறிக்கின்றன. இவற்றில் வெற்றி எதற்கு என்பதை இப்போது சொல்ல முடியாது'' என்று கூறிவிட்டுத் தனக்குப் பின்னால் தொங்கிய நூலேணியில் இறங்கித் தனது படகை அடைந்தான். அங்கிருந் த படகில் அவன் நேராகக் கடல்ராணிக்குச் செல்லவில்லை. கோட்டையை அடைந்ததும் அங்கிருந்த கட்காரிகள் அவனைக் குதூகலத்துடன் வரவேற்றனர். அனந்த் ''துலாஜி எங்கே?''என்று வினவினான்.

துலாஜி உள்ளேயிருந்து வெளிவந்து, ''அனந்த்! திட்டப்படி வந்துவிட்டேன்''என்றான்.

''நமது நண்பர்கள்?''என்று கேட்டான் அனந்த் ''திட்டப்படி போய்விட்டார்கள் ''என்றான் துலாஜி.''

''நீ தயாரா?''

''இந்தக் கோட்டையே தயார்!''

''மாக்ரேயை எப்போது எதிர்பார்க்கிறாய்?''

''நாளை மாலையில்.''

''அப்படியானால் இரவில் போரிட வேண்டும்?''

''ஆம்.''

பிறகு இருவரும் பேசவில்லை. உணவருந்தச் சென்றார்கள். துலாஜியின் கணக்கு சரியாயிருந்தது. மறுநாள் காலை மாக்ரே பூர்ணகட்டுக்குச் சிறிது தூரத்தில் தோன்றினான்.

அடுத்து நடந்தது சரித்திரப் பிரசித்தி பெற்ற போர். விளைவு யாரும் எதிர்பாராதது. சிவப்பு, மஞ்சள், வெளுப்பு மூன்றுக்கும் அதில் இடம் இருந்தது.

## அத்தியாயம் - 68

# போர் நாளைக்கு!

பூர்ண கட்டுக்குச் சிறிது தூரத்தில் மாக்ரே மறுநாள் தோன்றினானென்றால் அனந்த் முதல் நாளே காஸண்ட்ராவில் போரை எப்படி நடத்தவேண்டும் என்பதை நிர்ணயிக்கக் கப்பல் தலைவர்களின் கூட்டமொன்றை நடத்தினான். இரவு மூண்ட சமயத்தில் காஸண்ட்ராவுக்கு துலாஜியுடன் வந்த அனந்த், நேராக டெய்லரின் அறைக்குச் சென்று அங்கே கையில் கட்டுப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்த டெய்லரை நோக்கி, ''காப்டன்! எவ[illegible]ண்பன் முக்கியச் செய்தி கொண்டு வந்திருக்கிறான். நாளை மாலையில் இங்கு மாக்ரே நம்மைத் தாக்கத் திட்டமிட்டிருக்கிறான். ஆகையால் நாம் நமது திட்டத்தையும் தீர்மானிக்கவேண்டும். இங்க்லண்டையும் ஸில்வரையும் வரவழையுங்கள்'' என்று மிகுந்த கவலையுடன் பேசினான்.

பதிலுக்கு டெய்லர், ''யூ ஹாவ் த அடாஸிடி டு கம் ஹியர் ஆஃப்டர் ஷூட்டிங் மி? (என்னைச் சுட்ட பின்பு இங்கு வர உனக்கு என்ன துணிவு?)'' என்று சீறினான்.

''ஐ ஆம் ஸாரி டு ஹாவ் ஷாட் அட் ஃஎ ப்ரண்ட்; பட் யூ மேட் மி டு ஷூட் (ஒரு நண்பனைச் சுட்டதற்கு வருந்துகிறேன். ஆனால் அதைச் செய்யத் தூண்டியது நீதான்)'' என்ற அனந்த் ''அவர் குவாரல்ஸ் கான் வெய்ட் லெட் அஸ் டிஸ்கஸ் அபௌட் த எனிமி (நமது சச்சரவுகளைப் பிறகு வைத்துக் கொள்ளலாம். முதலில் எதிரியைப் பற்றிச் சிந்திப்போம்)''என்றான்.

கப்பலில் உட்கார்ந்திருந்த டெய்லர் அதற்கு மேல் ஏதும் பேச வில்லை. கையைத் தட்டி ஒரு மாலுமியை அழைத்து இங்க்லண்டை யும் ஸில்வரையும் அழைத்து வர ஏவினான். அவர்கள் வந்ததும் அனந்த் தாமதமின்றி விஷயத்தைத் துவங்கினான். ''துலாஜி வந்துவிட்டான். மாக்ரே இங்கு நாளை மாலை நம்மைத் தாக்கப் போவதாகச் சொல்கிறான்''என்று.

''மாக்ரே என்னை எதிர்க்க வருகிறானா? ஒரு நாளும் இருக்காது. இந்த காஸண்ட்ராவைப் பார்த்ததும் ஓடிவிடுவான்'' என்றான் டெய்லர்.

''ஓடமாட்டான்''என்று திட்டமாக அறிவித்தான் துலாஜி, ''நாட் ஒன்லி தட் ஹி ஹாஸ் பிராமிஸ்ட் டு காட்ச் யூ (அது மட்டுமல்ல. உங்களைப் பிடித்துவிடுவதாகச் சபதமும் செய்திருக்கிறான்)'' என்றும் அறிவித்தான்.

டெய்லரின் முகத்தில் வியப்பு மிக அதிகமாகப் படர்ந்தது. இங்க்லண்டை நோக்கி, ''இங்க்லண்ட்! மாக்ரே மஸ்ட் ஹாவ் பிகம் மாட்? (இங்க்லண்ட், மாக்ரேக்குப் பைத்தியம் பிடித்திருக்க வேண்டும்)''என்றான்.

இங்க்லண்டுக்கு மட்டும் சிறிது சந்தேகம் உதயமாயிற்று. ''டெய்லர்! எ மான் டஸ் நாட் ஆல்வேஸ் ரன் (டெய்லர்! ஒரு மனிதன் எப்பொழுதும் ஓடுவதில்லை)'' என்றான் மெதுவாக.

அப்பொழுது ஸில்வர் தலையிட்டு, ''நாம் மாக்ரேயைப் பற்றி விவாதிப்பதைவிடப் போரைப்பற்றி விவாதிப்பது நல்லது. மாக்ரே தைரியத்துடன் வருகிறானென்றால் அவனுக்கு ஏதோ புதுத் துணை இருக்கவேண்டும்''என்று கூறிவிட்டு அனந்தை அடிக் கண்களால் கவனித்தான்.

அனந்தின் முகத்தில் கவலைக் குறியைத் தவிர வேறு எதையும் காணோம். ''நாம் அனாவசிய விஷயங்களைப் பேசிக் கொண்டிருக் கிறோம் இதற்காக நான் வரவில்லை'' என்றான்.

''சரி,போரைப் பற்றிப் பேசுவோம்''என்றான் டெய்லர்.

''மாக்ரே ஐந்து கப்பல்களுடன் வருகிறான். நம்மிடம் ஏழு கப்பல்கள் இருக்கின்றன'' என்றான் அனந்த்.

''வேறு என்ன வேண்டும் நமக்கு? காஸண்ட்ராவிடம் முந்நூற்று எண்பது பீரங்கிகள் இருக்கின்றன. காஸண்ட்ரா பத்துக் கப்பல்களுக்குச் சமானம்'' என்று சுட்டிக் காட்டினான் டெய்லர்.

''ஆனால், அதன் வேகம் குறைவு''என்றான் அனந்த்.

டெய்லரின் விழிகள் கோபத்துடன் விழித்து,அனந்தை நோக்கின. ''ஹௌ டேர் யூ டு இன்ஸல்ட் மை ஷிப்(என் கப்பலைப்பற்றிக் குறை சொல்ல உனக்கு என்ன துணிச்சல்?)''என்று சீறினான் டெய்லர்.

''ஐ ஆம் ஸ்டேட்டிங் எ ட்ரூத் (நான் உண்மையைச் சொல்கிறேன்) என்று கூறிய அனந்த் மேலும் விளக்கலானான். ''தேவ் கட்டிலிருந்தே இதன் வேகத்தைக் கவனித்து வருகிறேன். இதன் மூன்று பாய்மரங்கள் நன்றாகத்தான் காற்றில் விரிந்து கிடந்தன. இருப்பினும் தள்ளாடியது கப்பல்''என்று கூறிய அனந்த் மேலே பேசவில்லை. டெய்லர் கேட்டான்: ''இதன் எடை அதிக மில்லையா?'' என்று.



''எடைக்கும் வேகத்துக்கும் சம்பந்தம் இல்லை'' என்ற அனந்த் சட்டென்று ஒரு கேள்வி கேட்டான். ''டெய்லர்! ஹௌ லாங் வாஸ் இட் ஸின்ஸ் யூ காரீண்ட் திஸ் ஷிப்?(டெய்லர்! இந்தக் கப்பலின் அடியைச் சுரண்டி எத்தனை நாளாகிறது?)''

இதற்கு இங்க்லண்ட் பதில் சொன்னான்: ''காஸண்ட்ராவைக் கைப்பற்றிய பிறகு நாங்கள் அதைச் சுத்தம் செய்யவில்லை'' என்று.

''நீண்ட நாளாக நீங்கள் சுத்தம் செய்யாததால் நீண்ட காலப் பயணத்தால் இதன் அடியிலும் பக்கவாட்டிலும் பாசிகளும், கிளிஞ்சல்களும், இதர பூச்சிக் கூண்டுகளும் டன் கணக்கில் அடைந்து கிடக்கின்றன. இதைத் தரையில் இழுத்துச் சுரண்டியிருந்தால் இதன் வேகம் தடைப்பட்டிருக்காது. இருப்பினும் இது நல்ல கப்பல். நல்ல பலமுள்ளது. பட் வென் இட் கம்ஸ் டு எ வார் ஸ்பீட் கௌண்ட்ஸ் வெரி மச் (ஆனால், போர் என்று வரும் போது வேகத்தின் உதவி மிக அவசியம்)'' என்று விளக்கினான் அனந்த்.

இதை ஸில்வர் இங்க்லண்ட் இருவருமே ஆமோதித்தார்கள். டெய்லர் ஆமோதிக்காவிட்டாலும் எதிர்க்கவில்லை. அப்பொழுது வீசினான் முக்கிய வினாக் கணையை அனந்த், ''டெய்லர்! நாம் எப்படிப் போரிடுவது?''என்று.

''நீயே சொல்'' என்றான் டெய்லர்.

''காஸண்ட்ராவின் பீரங்கி பலம் யாருக்கும் இல்லை. ஆகையால் மாக்ரே வந்ததும் அவன் கப்பலை நீ தாக்கு. நீ நேர் எதிராகத் தாக்கினால் அவன் உன்னிடமிருந்து தப்பவும் உனக்கு அப்பால் வளைந்து நிற்கும் ராணியின் துணைக் கப்பல்களைத் தாக்கவும் முயல்வான். அவன் ஐந்து கப்பல்களுடன் உனக்கும் கடல் ராணியின் துணைக் கப்பல்களுக்கும் இடையில் நுழைவான். அப்பொழுது அந்த ஐந்து கப்பல்கள் ஒரு புறத்திலிருந்து அவனைத் தாக்கும். நீ இன்னொரு பக்கத்திலிருந்து அவனைத் தாக்குவாய். உனக்கும் லாபூஷேக்கும் இடையில் மாக்ரே நசுக்குண்டு போவான்'' என்று கூறிய அனந்த் மற்றவர்கள் யோசனைக்குக் காத்திருந்தான்.

''லாபூஷே கடல் ராணியில் இருக்கிறான். துணைக் கப்பல்களில் இல்லை'' என்று குறிப்பிட்டான் இங்க்லண்ட் தீவிர சிந்தனையுடன்.

அனந்த் புன்சிரிப்புக் கொண்டான் ''லாபூஷேயைக் கடல் ராணியை விட்டு மற்ற ஐந்து கப்பல்களில் ஒன்றுக்கு அனுப்பி விடுகிறேன்'' என்றான்.

இதைக் கேட்ட டெய்லர் கடகடவென நகைத்தான் "யூ வில் ஸெண்ட் லா பூஷே? ஈஸ் ஹி யுவர் ஸர்வெண்ட்?"என்றான் நகைப்பின் ஊடே.

அனந்த் அந்த நகைப்பை லட்சியம் செய்யவில்லை. "லாபூஷே வில் கோ ஹொயர் பிராஃபிட் லைஸ் (லாபமிருக்கும் இடத்துக்கு லா பூஷே போவான்)"என்று கூறினான் அனந்த்

"ஷ்யூர்" என்றான் இங்க்லண்ட்.

"லா பூஷே நாளைக் காலையில் கடல் ராணியிலிருந்து படகில் செல்வதை நீங்கள் பார்க்கலாம்"என்று திட்டமாகச்சொன்னான் அனந்த்.

"சரி, கடல் ராணி என்ன செய்யும்? லா பூஷே இல்லா விட்டால் அதை யார் நடத்துவார்கள்?"என்று ஸில்வர் வினவினான்.

"யார் பெயரை அந்தக் கப்பல் தாங்குகிறதோ அவரே நடத்துவார்" என்று அனந்த் சொன்னான் மகிழ்ச்சியுடன்.

"யார் கடல்ராணியா! ரத்னாவா?" என்றுகேட்டான் ஸில்வர்.

"தட் உமன்?" என்று டெய்லர் அலுத்துக் கொண்டான்.

"கடல் போரில் அவள் ஆண்களைவிட வல்லவள். நாளைப் போரில் பார்க்கப்போகிறாய் அதை"என்றுஅனந்த் திட்டமாகச் சொன்னான். அடுத்து அனந்த் விளக்கினான் ஆங்கிலத்தில்: "யூ அட்டாக் மாக்ரே ஃபர்ஸ்ட். ஹி கெட்ஸ் இன் பிட்வீன் யூ அண்ட் தஃபைவ் ஷிப்ஸ் கமாண்டட் பை லாபூஷே. ஆன் த அதர் ஸைட் அ டாக் மாக்ரேஸ் ஃபைவ் ஷிப்ஸ். வென் ஹி கெட்ஸ் இன் பிட்வின் யூ மாக்ரே வில் ட்ரை டு என்டர் த ஹார்பர் பார்பு ரொடக்‌ஷன். கடல் ராணி வில் ஃபார் த வே அண்ட் கிவ் ஃபைட் (நீங்கள் முதலில் மாக்ரேயைத் தாக்குங்கள். மாக்ரே உடனே உங்கள் கப்பல்களுக்கும் ராணியின் ஐந்து கப்பல்களுக்கும் இடையே வருவான். அப்பொழுது நீங்கள் ஒரு பக்கத்திலும்,லா பூஷேயால் நடத்தப்படும் ஐந்து கப்பல்கள் இன்னொரு புறத்திலும் மாக்ரேயைத் தாக்கும். மாக்ரே அப்பொழுது தற்காப்புக்காகத் துறைமுகத்துக்குள் நுழைய முயல் வான். அவனைக் கடல் ராணி தடுக்கும்)" என்றான். "இந்த நிலையில் கடல் ராணி, காஸண்ட்ரா, லாபூஷே இந்த மூன்று சக்திகளுக்கிடையே மாட்டிக் கொள்கிறான் மாக்ரே. ஐ திங் யூ நோ த ரிஸல்ட் (முடிவு உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்)" என்றும் சொன்ன அனந்த் எழுந்தான் போக.

டெய்லர் தனது கட்டிலிலிருந்து எழுந்து இடக் கையை நீட்டி னான் அனந்தை நோக்கி. "அனந்த், யூ ஆர் எ கிரேட் பிளானர்; யூ ஆர்



எ ஜீனியஸ். ஐ குட் ஹாவ் ஆபர்ட் யூ மை ரைட் ஆர்ம். பட் யூ ஹாவ் டாமேஜ்ட் இட் (அனந்த் நீ திட்டமிடும் நிபுணன். நீ மேதை.என் வலது கையை நீட்டியிருப்பேன் குலுக்க. ஆனால், அதை நீ சுட்டு விட்டாய்)"என்றான். டெய்லரின் இடது கையைத் தனது இடது கையால் பற்றிய அனந்த்,"டெய்லர்! எனி ஹாண்ட் ஈஸ் குட் வென் த இன்டென்ஷன்ஸ் ஆர் குட் (டெய்லர்! நமது எண்ணம் சரியாயிருந்தால் எந்தக் கையும் நல்ல கைதான்)" என்றான். அத்துடன் மற்றவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு துலாஜியுடன் கடல் ராணிக்குப் போனான்.

தளத்தில் அவனுக்காக லா பூஷே காத்திருந்தான், இரு பெண்களுடன். அனந்த் தளத்தில் கால் வைத்ததும், "டெய்லர் இணங்கி விட்டானா?" என்று வினவினான்.

"இணங்கிவிட்டான்!" என்றான் அனந்த்.

"அப்படியானால் அந்த ஐந்து கப்பல்களுக்கு நான் போகி றேன்" என்ற லாபூஷே, "நௌ ஸீ க்வீன் வில் ஹாவ் எ ப்யூட்டி க்வீன் ஏஸ் இட்ஸ் காப்டன் (இப்பொழுது கடல் ராணிக்கு ஓர் அழகு ராணி தலைமைக்குக் கிடைத்தாள்)"என்று கூறிப் புன்முறு வல் கொண்ட லா பூஷே பக்கத்தில் நின்ற ரத்னாவைத் தலைகுனிந்து வணங்கி, "காப்டன் டேக் சார்ஜ்"என்றான்.

பிறகு நூலேணியில் இறங்கிச் சென்றான். நூலேணியில் இருந்து கொண்டே சாருவையும் ராணியையும் நோக்கி,"கேர்ள்ஸ்! யுவர் லவர் ஈஸ் தேர். யுவர் இம்பெடிமெண்ட் கோஸ் (பெண்களே! உங்கள் காதலர் அதோ இருக்கிறார். தடங்கல் போய்க் கொண்டிருக் கிறது)" என்று அனந்தையும் தன்னையும் காட்டி நகைத்துக் கொண்டே இறங்கினான் நூலேணியில்.

"இந்தப் பிரெஞ்சுக்காரர்களுக்கு எப்பொழுதுமே பெண் பித்து" என்று சீறினான் அனந்த்.

"உனக்கு மட்டும் என்னவாம்?"என்று துலாஜி நகைத்து விட்டுத் தளத்தின் வேறு பகுதிக்குச் சென்றான். பெண்கள் இருக்கும் இடத்தை அடைய சங்கர்பந்த் அவன் எதிரே வந்தார். "கொல்லன் பட்டறையில் ஈக்கு என்ன வேலை? வாருங்கள் இப்படி"என்று அவரைத் தன்னுடன் இழுத்துக்கொண்டு சென்றான் துலாஜி.

அவன் கண்ணுக்கு மறைந்ததும் இரு பெண்களும் அனந்தை நோக்கி வந்தார்கள். "போர் நாளைக்குத்தான். இன்றைக்கல்ல!" என்ற அனந்த், கப்பல் தலைவன் அறையை நோக்கி நடந்தான், அவர்களிட மிருந்து விடுவித்துக் கொண்டு. அந்த அறையைப் பார்த்ததும் பிரமித்தான். பின்னால் வந்த இரு பெண்களும் நகைத்தார்கள்!

## அத்தியாயம் - 69

# இந்திரியஜித்!

கடல் ராணியின் கப்பல் தலைவன் அறையாக இருந்தது, கப்பல் தலைவி அறையாக மாறியிருந்ததையும், அதில் துப்பாக்கிகள், ரவைகள்,வாள்கள் இவற்றுக்குப் பதிலாக ஊதுவத்தி, சாம்பிராணி, தூபக்கால் முதலிய போகப் பொருள்கள் இருந்ததையும், பஞ்சணையும் ஒன்றுக்கு இரண்டாக இருந்ததையும் அவற்றில் நறுமண மலர்கள் தூவப்பட்டிருந்ததையும் கவனித்த இந்திரஜித் சில விநாடிகள் பிரமை கொண்டான். பிறகு சீற்றம் கொண்டான். அந்தச் சீற்றத்தைப் பின்னாலிருந்த இரு பெண்களின் நகைப்பும் அதிகப் படுத்தவே சரேலெனத் திரும்பி, ''இதற்கென்ன அர்த்தம்? ஏது இந்தப் பொருள்கள்?'' என்று கேட்டான், கோபம் குரலில் மிதமிஞ்சி ஒலிக்க.

கடல்ராணியும் சாருவும் ஒருவரை ஒருவர் பார்த்து லேசாக நகைத்துக் கொண்டனர். அந்த நகைப்பின் ஊடே ராணி கேட்டாள், ''சாரு! இவர் எதற்காகக் கோபிக்கிறார்?'' என்று.

''ஆண்களின் கோபத்துக்குக் காரணம் தேவையில்லை'' என்று சொன்னாள் சாரு இதழ்களைக் கேலியாக மடித்து.

'' காரணம் இருக்கிறது. காரணம் என்ன, இரண்டு காரணங்கள் இருக்கின்றன''என்று கூறி அவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தான் அனந்த்.

இருவ்ரும் மனோகரமாக உடை அணிந்திருந்தார்கள். ராணி தனது நிறத்துக்கு ஈடாகச் சிவப்புப் பட்டுச்சேலையும் கை குறைவாக உள்ள சிவப்பு ரவிக்கையும் அணிந்திருந்தாள். அந்த உடைகளின் நிறத்துக்குச் சரியாக அவள் வதனமும் சிவந்து கிடந்தது. உள் பஞ்சணையொன்றில் தூவப்பட்டிருந்த சிவந்த மலர்களைப் போலவே ஒரு மலரும் அவள் தலையில் செருகப்பட்டிருந்தது. ஒரு காதில் மட்டும் ஒரே ரத்தினம் பதிக்கப் பெற்றிருந்த ஒரு தங்க வளையம் காட்சியளித்தது. அவள் இதழ்கள் காது வளையத்திலிருந்த ரத்தினத்தின் சிவந்த நீரோட்டத்தைத் தோற்கடித்திருந்தன.

சாரு அவளுக்கு நேர் எதிராக வெள்ளைப் பட்டு அணிந்து வெள்ளை மலரைத் தலையில் சூடியிருந்தாள். எதிரே இருந்த



இன்னொரு பஞ்சணையில் வெள்ளை மலர்கள் தூவப்பட்டிருந்ததை அனந்த் பார்த்து அவளையும் பார்த்தான். அவள் காதிலிருந்த ஒரு வளையத்தின் வைரக்கல் அவள் முக ஜாஜ்வல்யத்தைக் கண்டு சிறிது அடங்கியிருந்தாலும் அந்த வெள்ளை வைரத்திலிருந்து கப்பல் பந்தங்களின் வெளிச்சம் கிளப்பிய வர்ண ஜாலங்கள், அவள் அழகிய உடலிலிருந்த வர்ண ஜாலங்களை நினைவுக்குக் கொண்டுவந்தன. வெள்ளைக்குத் தானும் ஈடு காட்ட வேண்டும் என்பதற்காகச் சாரு சிறிது இதழ்களை விரித்து மந்தகாசம் செய்து, உள்ளிருந்த முத்துக்களில் இரண்டை லேசாக வெளிப்படுத்தினாள்.

இரு பெண்களும் கழுத்தில் ஒரே மாதிரியான நவரத்தின மாலையை அணிந்திருந்தார்கள். இரு பெண்களும் ஒரே மாதிரி மந்தகாசம் செய்தார்கள். அவர்கள் கண்கள் ஒரே மாதிரியாகச் சிரிப்பை உதிர்த்துக் கொண்டிருந்தன. இவற்றையெல்லாம் பார்த்த இந்திரஜித் அனந்த், இரண்டாம் முறையாக முதல் கேள்வியின் ஒரு பகுதியைத் திருப்பி, ''ஏது இந்தப் பொருள்கள்?'' என்று கேட்டான்.

''லா பூஷே கொடுத்தார்'' என்றாள் கடல் ராணி.

''கட்காரிகளிடமிருந்து வாங்கி வந்தார்'' என்றாள் சாரு.

''ஆபரணங்களை அவர் முன்பு அளித்த பெட்டியிலிருந்து நாங்களே எடுத்துக் கொண்டோம்'' என்று விளக்கினாள் ராணி.

''ஊதுவத்தியைக் கொளுத்தித் தூபக்காலில் சாம்பிராணியைப் புகைய விட்டதெல்லாம் லிவாஸியர்தான்'' என்றாள் சாரு லா பூஷேயின் மற்றோரு பெயரைக் குறிப்பிட்டு.

''வேறு வேலை இல்லையா லா பூஷேக்கு?'' என்று சீறினான் அனந்த்.

''இருக்கிறது. நீங்களே அவரை வேறு கப்பலுக்குச் சென்று போராடக் கூறியதாகச் சொன்னார். நீங்கள் வந்தவுடன் தான் புறப் பட வேண்டும் என்று இந்தப் பள்ளியறையை... இல்லை... இந்தத் தலைவி அறையை அவசர அவசரமாக அலங்கரித்தார்'' என்று ராணி சொன்னாள்.

அனந்த் கேட்டான் !''லாபூஷேயை நான் இன்றிரவு போகச் சொல்லவில்லை, அவரது கப்பலுக்கு. நாளைக் காலையில்தான் போகச் சொன்னேன். எதற்காக இப்போதே ஓடினான்?''என்று.

''அவரே இதற்குக் காரணம் சொன்னார்'' என்றாள் சாரு.

''என்ன காரணம்?''

''உங்களுக்கு இடைஞ்சலாக இருக்கத் தனக்கு இஷ்டமில்லை யென்று சொன்னார்.''

''அவனால் என்ன இடைஞ்சல் எனக்கு?''

''அவர் எங்கு தங்குவார்? கடல் ராணியில் வசதியான அறை காப்டன் அறை ஒன்றுதான்'' என்றாள் ராணி.

இதைக் கேட்டதும் அனந்த் அதிகக் கோபத்துடன் அறைக்குள் நுழைந்தான். பெண்கள் இருவரும் அவனுடன் நுழைந்து கதவைத் தாளிட்டு அனந்தையே நோக்கினார்கள். விஷமம் சொட்டிய புன் முறுவல் காட்டினார்கள். அனந்த் இரு பஞ்சணைகளிலும் உட்காரா மல் சாளரத்தண்டை சென்று நின்று கொண்டான். தென்றல் அவன் முதுகில் மிக இன்பமாகத் தடவியது. இரண்டு பஞ்சணைகளுக்கு அப் பால் இருந்த தட்டை எடுத்துக் கொண்டு வந்தாள் ராணி. அதிலிருந்த பழங்களை எடுத்து அனந்தை நோக்கி நீட்டினாள் சாரு. வேண்டா மென்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான் அனந்த். அதிலிருந்த பால் குவளையைக் கொடுத்தாள்.அதையும் வேண்டாமென்று தலையை ஆட்டினான். ராணி பழைய இடத்தில் தட்டை வைத்து விட்டுத் திரும்பி வந்தாள். வந்தவள் அனந்தை ஏதும் கேட்கவில்லை. செவ்வலரி தூவியிருந்த பஞ்சணையில் நன்றாக மல்லாந்து படுத்தாள். சாரு வெள்ளை மலர்ப் பஞ்சணையில் படுக்கவில்லை. ''அக்கா! நான் வெளியே போகட்டுமா?''என்று வினவினாள் ராணியை நோக்கி.

''என்னைக் கேட்டால்?''

''அவரைக் கேட்கட்டுமா?'' என்று சாரு வினவினாள்.

''கேள்'' என்ற ராணி நகைத்தாள்.

அனந்தின் உணர்ச்சிகள் பல திசைகளில் ஓடின. முகம் மட்டும் கல்லாயிருந்தது. எந்த உணர்ச்சியும் காட்டாமல்,கடைசியில் அவன் வெடித்தான்,''அட சனியன்களா?'' என்று.

''சாரு!'' என்று அழைத்தாள் ராணி.

''என்ன ராணி?''

''தலைவர் நமக்குப் புதுப் பட்டம் கொடுத்திருக்கிறார்'' என்றாள் ராணி.

''ஆம்! ''சாரு நகைத்தாள்.

''நாம் சனியன்களாம்.''

''சனி ஒருவன்தானே?''

''இருவருக்கும் அவனைப் பிரித்துக் கொடுத்திருக்கிறார்.''



''அப்படியானால் இவர்தான் சனியன்!''

''எப்படி?''

''இவர்தானே தன்னை இரண்டாகப் பிரித்து நமக்கு அளித்திருக்கிறார்?''

அவர்கள் இருவரும் தன்னைச் செய்த கேலியாலும், மறுநாள் வரப்போவது கடினமான போர் என்பதாலும் சினம் தலைக்கேறிய அனந்த், பஞ்சணையில் கிடந்த ராணியைத் தூக்கி ஒரு தோளில் போட்டுக் கொண்டான். அடுத்து சாருவை தூக்கி இன்னொரு தோளில் போட்டுக்கொண்டான். ''உங்கள் இருவரையும் கடலில் எறிந்து விடுகிறேன்'' என்று கூறினான்.

''செய்யுங்கள்''என்றாள் ராணி, அவன் முதுகுப்புறம் தொங்கிய தலையைத் தூக்கி.

''செய்யுங்கள். இப்படியே எங்களைத் தூக்கிக் கொண்டு வெளியே சென்றால் மிக நன்றாக இருக்கும்'' என்றாள் சாரு.

அப்பொழுது தனது நிலைமையை உணர்ந்த அனந்த் இருவரை யும் ஒரே பஞ்சணையில் போட்டு முகப்பில் தான் உட்கார்ந்து கொண் டான். அவர்கள் இருவரையும் நோக்கினான் பல விநாடிகள். கடைசி யாகச் சொன்னான்:''ராணி! சாரு! நீங்கள் இருவரும் என் இதய பீடத்தில் இருக்கிறீர்கள்''என்று.

இருவருக்கும் அது புரிந்தே இருந்ததால் மௌனம் சாதித்தார் கள். அனந்தே பேசினான்: ''நாம் நாளை அரபிக் கடலின் சரித்திரத்தில் இதுவரை காணாத பெரும் போரைக் காணப் போகிறோம். அதன் முடிவைப்பற்றி எனக்குச் சந்தேகம் இல்லை. நிச்சயம் வெற்றி நமக்குத்தான். பிரிட்டிஷ் கப்பல்களில் குறைந்தபட்சம் ஐந்து கப்பல் களாவது நாசம் ஆகும்.காஸண்ட்ரா அழிக்கப்படும் அல்லது அதன் வலு குறைக்கப்படும். அரபிக் கடலில் வெளி நாட்டவர் தலையீடு ஒழியும். நாளைக்கு நமது பலத்தையும் போர்த் தந்திரத்தையும் நமது நாட்டு எதிரிகள் உணருவார்கள். அதனால் நான் இன்று... இன்று... உங்கள்...'' மேலே பேச முடியாமல் தவித்தான். அது வரையில் இருந்த உணர்ச்சி வேகம் தளர்ந்தது.

இரு பெண்களும் எழுந்து அவன் இருபுறமும் அமர்ந்து கொண் டார்கள். இருவரும் இரு, புறங்களிலும் அவனை வெறியுடன் அணைத்துக் கொண்டார்கள். இரு கன்னங்களிலும் இரு முத்திரைகள் பொறிக்கப்பட்டன. அத்தனைக்கும் இந்திரஜித், இந்திரியஜித்தாகவே இருந்தான். எழுந்து வெளியே சென்றான்!.

## அத்தியாயம் - 70

# போரும் விளைவும்!

அன்றிரவு அனந்த் தளத்தில் படுத்திருந்தான். இன்பக் கனவுகள் ஏதேதோ எழுந்தன அவன் உறக்கத்தில். மறுநாள் காலை எழுந்ததும் அவன் ஒரு படகை எடுத்துக் கொண்டு கோட்டைக்குச் சென்றான். அங்கு நீராடிப் புத்துடை அணிந்து வழக்கம் போல் இரு கைத்துப்பாக்கிகளையும் எண்ணெய் கொண்டு துலக்கி, சரி பார்த்து ரவைகளைத் திணித்து இடையில் கட்டிக் கொண்டு புறப்பட்டான். மறுபடியும் படகில் ஏறித் தானே படகைச் செலுத்திக் கொண்டு கடல் ராணியின் துணைக் கப்பல்களைப் பார்வையிட்டான். அவற்றின் தலைமைக் கப்பலிலிருந்த லா பூஷேயிடம் சிறிது நேரம் ஏதோ விவரித்தான். ''லா பூஷே! என் திட்டத்தைச் சொல்லி விட்டேன். எதிரி நாம் எதிர்பார்த்தபடி போரிடாவிட்டால் போர் முறையை நீ மாற்றிக்கொள்'' என்று கூறினான்.

''மாற்ற அவசியம் இருக்காது. மாக்ரே சிறந்த கடல் வீரன். போரில் வல்லவன். ஆனால், பழைய வழக்கங்களின்படி போரிடத்தான் அவனுக்குத் தெரியும்!'' என்றான்.

இந்திரஜித் அனந்த், லா பூஷேயை அர்த்த புஷ்டியுடன் நோக்கினான். ''வாட் அபௌட் காஸ்ண்ட்ரா?'' என்று கேட்டான்.

லா பூஷே பதில் சொல்லவில்லை சில விநாடிகள். பிறகு நிர்ணயமான குரலில் சொன்னான், ''டோண்ட் ஒர்ரி, ஐ வில் டூ மை பார்ட் (கவலை வேண்டாம். என் பங்கை நான் செய்கிறேன்)'' என்று.

அத்துடன் அவனுடன் கை குலுக்கிவிட்டுக் கடல் ராணிக்கு அனந்த் வந்தபோது, நடுப் பகலாகிவிட்டதால் இரு பெண்களுடனும் உணவருந்திவிட்டுக் கடல்ராணியின் பீரங்கிகளைச் சோதித்தான். ''ராணி! நீ கப்பலை இயக்கு. சாரு! நீ என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று வினவினான்.

''சுக்கான் பிடிக்கிறேன்'' என்றாள் சாரு.



இதைக் கேட்ட அனந்த் அசந்து போனான். ''போரில் கப்பலின் சுக்கானைப் பிடித்துத் தேவைக்குத் தகுந்தபடி திருப்புவது சுலபமான காரியமல்ல. நீ சிறிது பிசகினாலும் கடல் ராணி பாதிக்கப்படும்'' என்றான்.

''அது தெரியும் எனக்கு!'' என்றாள் சாரு.

அதற்கு மேல் அங்கு நிற்காமல் துலாஜியுடனும் சங்கர் பந்துடனும் பேசினான் அனந்த். சங்கர் பந்த் வருகிற போரைப் பற்றிச் சிறிது சலனப்பட்டார். ''இந்தப் போரில் நாம் வெற்றியடைந்த பிறகு நாம் இருந்தால் காஸண்ட்ரா, கடல் ராணியை அழிக்கும். நாம் தோற்றாலும் ஆபத்துதான். மாக்ரே நம்மைச் சிறை செய்வான்'' என்று குறிப்பிட்டார்.

''மாக்ரேக்கும் நமக்கும் ஒப்பந்தம் இருக்கிறது'' என்றான் அனந்த்.

''எந்த ஒப்பந்தத்தையும் முறிக்க ஆங்கிலேயர்கள் தயங்க மாட்டார்கள்!'' என்றார் பந்த்.

துலாஜி முடிவில் சொன்னான்: ''போர் முடிந்த பிறகு அதைப் பற்றிப் பேசுவோம். இப்பொழுது அவசரமில்லை'' என்று.

''துலாஜி! நீ பீரங்கிகளைக் கவனித்துக் கொள்'' என்று உத்தரவிட்டான் அனந்த்.

''நீ?'' துலாஜின் கேள்வி துரிதமாக எழுந்தது.

''நடுப்பாய் மரத்தின் உச்சியில் உள்ள வட்டமான கட்டையில் நிற்பேன். சமயம் வந்ததும் கீழே வருவேன்'' என்று கூறினான்.

''அது அபாயமான இடம். உன்னை யாரும் நீளத் துப்பாக்கி கொண்டு சுட்டுவிடலாம்'' என்றான் துலாஜி.

''போரில் எல்லா இடங்களும் அபாயமானதுதான்'' என்று கூறிய அனந்த், தனது நண்பனின் தோளில் கையைப் போட்டுக் கொண்டு கடல் ராணியின் போர் ஏற்பாடுகளைக் கவனிக்கலானான்.

மாலை நெருங்கியதும் ராணியும் சாருவும் சராய்களை அணிந்து வெளியே வந்தார்கள். சாரு, சுக்கானிருப்பிடம் சென்றாள். ராணி தலைவி என்ற முறையில் தனது பணியைக் கவனித்து மாலுமிகளுக்கு உத்தரவுகளைப் பிறப்பித்தாள். கப்பலின் தளத்தில் மையத்திலிருந்த பாய் மரத்தில் சாய்ந்து கொண்டு நின்றாள் போருக்குத் தயாராக.

மாலை வேளை மிக ரம்மியமாக இருந்தது. கதிரவன் சிவந்த பெரும் பழமாகிக் கடலில் மூழ்கச் சமயம் பார்த்திருந்தான். அந்த

சமயத்தில் மாக்ரேயின் பெரும் கப்பல் பிரிட்டிஷ் கொடியுடன் வட திசையில் காட்சியளித்தது. அவன் துணைக் கப்பல்கள் நான்கு அவன் கப்பலைப் பின்பற்றி வந்தன. மாக்ரே தனது கப்பலின் பாய்களை நன்றாக விரித்திருந்தான். காற்று அவனுக்கு அனுகூலமாகத் திரும்பியதால் மாக்ரே வேகமாக வந்தான், பூர்ணகட்டின் வட முனைக்கு. அடுத்துத் தாமதிக்காமல் தனது பீரங்கிகளை இயக்கி னான், காஸண்ட்ராவை நோக்கி. அவனை எதிர்கொள்ள டெய்லர் தயாராயிருந்தான். காஸண்ட்ராவின் இரு பீரங்கிகள் பெரும் சத்தத்துடன் கடலையே பிளந்துவிடுவனபோல் முழுங்கின.

மாக்ரே தனது கப்பலில் நின்றுகொண்டு டெலஸ்கோப் மூலம் எதிரியின் கப்பல்களைச் சந்துஷ்டியுடன் நோக்கினான். அடுத்துத் தன் உத்தரவுகளை உரத்த குரலில் பிறப்பித்தான். மாக்ரேயின் கப்பல் துறைமுகத்தை நோக்கி விரைந்து வந்தது. காஸண்ட்ரா தனது பெரும் பாய்களை விரித்துப் பயங்கரமான கழுகைப் போல் காட்சியளித்தது. காஸண்ட்ரா நகர்ந்தது பெரும் திமிலங்கிலத்தைப் போல். அதன் முந்நூற்று எண்பது பீரங்கிகளும் பல யமன்களைப்போல் வாய் களைத் திறந்தன.

காப்டன் ஜேம்ஸ் மாக்ரே, டெய்லர் நினைத்தது போல் துணிவில்லாத பயங்கொள்ளியுமல்ல, கப்பல் போரில் அனுபவமோ திறமையோ இல்லாதவனுமல்ல. முதல் தடவை டெய்லர் மாக்ரே யிடமிருந்து காஸண்ட்ராவைக் கைப்பற்றியது டெய்லரின் சாமர்த் தியத்தால் மட்டுமல்ல. மாக்ரேயுடன் இணைந்து நின்று போராட வந்த துணைக் கப்பல் ஓடிவிட்டதும் தான் காரணம். ஆனால், தற் பெருமை மிக்க டெய்லர்,மாக்ரேயின் தோல்விக்குக் காரணம் அவன் திறமைக் குறைவும் துணிவுக் குறைவும் என்றே எண்ணியிருந்தான். ஆகவே தன்னைக் கண்டதும் மாக்ரே பயந்து திரும்பி ஓடிவிடுவான் என்ற மமதையுடன் அலட்சியமாகப் போரில் இறங்கினான். 'எந்த மனிதனும் சதா ஓடுவதில்லை'என்று ஸில்வர் ஏற்கெனவே செய்த எச்சரிக்கைகூட அவன் புத்தியில் ஏறாததால், கால் ஜாமத்துக்குள் மாக்ரேயின் கப்பல்களைக் கபளீகரம் செய்துவிடலாம் என்ற உறுதி யுடன் காஸண்ட்ராவை, மாக்ரேயின் கப்பல்கள் வரிசையாக வந்து கொண்டிருந்த பூர்ணகட் துறைமுகத்தின் வட முனையை நோக்கிச் செலுத்தினான்.

காப்டன் மாக்ரேயும் தனது கப்பலிலிருந்த தூரதிருஷ்டி கண்ணாடி மூலம் டெய்லரின் முன்னேற்றத்தைக் கவனித்தான்.



அடுத்துக் காப்டன் ஸ்டாண்டர்னையும் லெப்டினென்ட் ஸ்மித்தையும் அழைத்து, ''நீங்கள் துலாஜியிடமிருந்து அறிந்து வந்த செய்தி உண்மைதானா?''என்று வினவினான்.

''முற்றிலும் உண்மை!'' என்றான் ஸ்மித்.

''உங்களிடமே நாங்கள் திருடிய கடிதத்தைக் கொடுத்தோம்'' என்றான் ஸ்டாண்டர்ன்.

''தென் ஹொய் ஈஸ் தட் கடல்ராணி மேகிங் ப்ரிபரேஷன் டு அட்டாக்?(அப்படியானால் கடல்ராணி ஏன் போருக்குத் தயாரா கிறது?)''என்று வினவினான் மாக்ரே.

''இட் ஈஸ் ஆல் பிரிடென்ஷன். தே ஆர் ஆன் யுவர் ஸைட் (அது வெறும் நாடகம். அவர்கள் உங்கள் பக்கம் தான்)'' என்ற ஸ்மித், ''இட் ஈஸ் த லெட்டர்(அது தான் உங்கள் கடிதத்தில் இருக்கிறதே)'' என்றும் சான்று காட்டினான்.

காப்டன் மாக்ரே அதற்கு மேல் ஏதும் பேசவில்லை. அவர்கள் கொண்டு வந்த கடிதம்தான் ஏற்கெனவே விஜயதுர்க்கத்தில் கடல் ராணியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் நகல் என்பதைப் புரிந்து கொண்டதால், ஸ்டாண்டர்னின் கண்ணிலும் ஸ்மித்தின் கண்ணிலும் மண்ணைத் தூவ துலாஜியோ அனந்தோ செய்த தந்திரம்தான் அது என்பதை உணர்ந்து கொண்டு, ''சரி, போய் பீரங்கிகளைக் கவனி யுங்கள். என் உத்தரவுகளைச் சரியாக நிறைவேற்றி இம்முறையாவது நல்ல பெயரெடுங்கள்''என்று கண்டித்துச் சொல்லிவிட்டுப் போருக்கான உத்தரவுகளைப் பிறப்பிக்கலானான்.

தனது உப தலைவனான மார்ச் என்பவனை அழைத்து,''நமது கப்பலின் பக்கவாட்டை காஸண்ட்ராவுக்காகத் திருப்பு காஸண்ட்ரா அருகில் வந்ததும் பக்க பீரங்கிகள் அனைத்திலும் குண்டுகளை மும்முறை இடைவிடாமல் வீசு. டோண்ட் டேக் மச் டைம் டு ரீ லோட் த கன்ஸ் (பீரங்கிகளில் குண்டுகளை மறுபடியும் திணிக்க அதிக நேரம் எடுத்துக்கொள்ளாதே)'' என்று கூறிவிட்டுத் தளத்தின் மேல் பகுதிக்குச் சென்றான்.

காஸண்ட்ரா நேராகத் தன்னை நோக்கி வருவதை உணர்ந்த மாக்ரே, அது போரைத் துவங்கட்டும் என்று காத்திருந்தான். குண்டுகளை வீணாக அடிப்பதிலோ நஷ்டப்படுவதிலோ மாக்ரே நம்பிக்கை இல்லாதவன். தவிர, காற்று எதிரியைவிடத் தனக்கு

அனுகூலமாயிருப்பதையும் உணர்ந்ததால் மிக லாகவமாகத் தனது கப்பலை இயக்க முடியும் என்பதை உணர்ந்திருந்தான். ஆகவே காஸண்ட்ராவின் இரு பீரங்கிகள் தனது கப்பலை நோக்கி வெடித்தவுடன் கப்பலின் பக்கத்தைக் காஸண்ட்ராவை நோக்கித் திருப்பவே, ஐம்பது பீரங்கிகள் காஸண்ட்ராவை நோக்கிச் சீறின. குண்டுகள் காஸண்ட்ராவின் பக்கப் பலகைக்கு அதிகச் சேதம் விளைவிக்காவிட்டாலும் அதன் முனையைச் சிறிது உடைக்கவே செய்தன!

டெய்லர் எதிரியின் போர் முறையை, நொடிப் பொழுதில் ஊகித்துக் கொண்டதால் மாக்ரேயின் கப்பலை விட்டு மாக்ரேயின் துணைக் கப்பல்களைத் தாக்கினான். அவற்றில் இரண்டு காஸண்ட்ராவின் பீரங்கி வீச்சைத் தாங்க முடியாமல் தள்ளாடின.

அந்தச் சமயத்தில் மாக்ரே கொடிகளைக் கொண்டு மற்றக் கப்பல்களுக்கு ஏதோ சைகை செய்யவே, அவை, மாக்ரேயின் கப்பலைத் தொடர்ந்து மேல் திசையை நோக்கித் திரும்பின. ''த கவர்ட்! ஹி வாண்ட்ஸ் டு ரன் (கோழை! ஓடப் பார்க்கிறான்)'' என்று சபித்தான் டெய்லர் தனது தளத்திலிருந்து. அதன் விளைவாக காஸண்ட்ராவை மீண்டும் பின்னடையச் செய்து, பிறகு மாக்ரே எதிர்பாராத சமயத்தில் தாக்கலாம் என்று நினைத்தான். ஆனால், துறைமுகத்திலிருந்த கடல் ராணி, அனந்த் முதலில் நிர்ணயித்த திட்டத்தின்படி மத்ஸ்யகந்தி நதியின் முகத் துவாரத்தையும் பூர்ணகட் துறைமுகத்தையும் அடைத்துக் கொண்டது.

அதைக் கண்டதும் டெய்லர், இங்க்லண்டை அழைத்து ''ஸீ தட், அனந்த் ஹாஸ் டர்ன்ட் ட்ரெய்டர் (அதோ பார், அனந்த் துரோகியாகிவிட்டான்)'' என்று துறைமுகத்தை அடைத்துவிட்ட கடல்ராணியைச் சுட்டிக் காட்டினான்.

''ஹீ ஈஸ் நோட்ரெய்டர். திஸ் வாஸ் த பிளான் அக்ரீடு (அவன் துரோகியல்ல, இந்தத் திட்டம் நம்மால் ஒப்புக் கொள்ளப்பட்டது)'' என்று இங்க்லண்ட் சுட்டிக் காட்டினான்.

''டாம் ஹிஸ் பிளான். ஐ வில் ஷோ வாட் டெய்லர் ஈஸ் (மண்ணாங்கட்டித் திட்டம். டெய்லர் யாரென்பதைக் காட்டுகிறேன்)'' என்று சீறிய டெய்லர், ''பாய்ஸ்! டு ஆக்ஷன்'' என்று கூவிக் கொண்டு காஸண்ட்ராவை, மாக்ரேயை நோக்கி மீண்டும் திருப்பினான்.



சுமார் ஒரு மணி நேரத்துக்குமேல் நடந்த போர் அப்பொழுதும் மும்முரமான நிலைக்கு வராததால், இனி தாமதிப்பதில் பயனில்லை என்று கதிரவன் கடலில் மூழ்கி இருளும் கவிந்தது. கோட்டையில் விளக்குகள் எரிந்தன. கடல்ராணியிலும் மற்ற கப்பல்களிலும் பாய்மர லாந்தர்களும் எரிந்தன.

பூர்ணகட்டின் எதிரிலிருந்த அரபிக் கடல் பிராந்தியம் பன்னிரண்டு ஆபரணங்களை அணிந்த அழகுள்ள அணங்கு போல் காட்சியளித்தது.

துறைமுகத்தை அடைத்து நின்ற கடல் ராணி துறைமுகத்துக்கு அழகு செய்தது. எட்ட லா பூஷேயின் தலைமையில் ஊர்ந்து கொண்டிருந்த ஐந்து துணைக் கப்பல்கள் போரை வேடிக்கை பார்ப்பன போல் விளக்குக் கண்களைச் சிமிட்டின. சற்றே போரிலிருந்து அகன்றதாகப் போக்குக் காட்டிய மாக்ரே தனது ஐந்து கப்பல்களுடன் சர விளக்குகள் போல் புகுந்து கொண்டிருந்தான். கடல் ராணி, காஸண்ட்ரா இவற்றுக்கும் கடல் ராணியின் ஐந்து துணைக் கப்பல்களுக்கும் இடையில் மாக்ரே, வந்தபோது, இரு புறமும் குண்டுகளை வீசிக்கொண்டே வந்தான். காஸண்ட்ராவின் பெரும் குண்டுகள் சீறின. ஆனால், அதிக எடையினால் மட்டுமில்லாமல் அடியில் பிடித்திருந்த பாசியின் எடையாலும் அதன் வேகம் சற்றுக் குறைவாகவே இருந்தபடியால் டெய்லரால் கப்பலை இஷ்டப்படி திருப்ப முடியவில்லை. கிட்டத்தட்ட நின்றே போராட வேண்டியதாயிற்று. இருப்பினும் டெய்லர் நிதானத்தை இழக்காமல் போராடினான். இருமுறை மாக்ரேயை நெருங்க முயன்றான். மாக்ரே அகப்படாமல் திரும்பிவிட்டதால் கடல் ராணியின் குண்டு ஒன்று காஸண்ட்ராவின் தளத்தில் விழுந்தது.

டெய்லர் நிதானம் இழந்தான். டெலஸ்கோப்பின் மூலம் கடல்ராணியை நோக்கினான். அதன் தளத்தில் அனந்தும் இல்லை, துலாஜியும் இல்லை. கடல் ராணியான ரத்னா மட்டும் டெலஸ்கோப் பால் காஸண்ட்ராவைக் கவனித்துக் கொண்டிருந்தாள். சாரு, சுக்கான் சக்கரத்தை இயக்கிக் கொண்டிருந்தாள்.

கடல்ராணி திடீரென்று ஏதோ உத்தரவு பிறப்பித்தாள். ஒரு குண்டு வேகமாகக் காஸண்ட்ராவின் பாய்மரமொன்றில் பாய்ந்து அதை நொறுக்கிவிட்டது. டெய்லர் மீண்டும் குண்டு வந்த திசையை நோக்கினான். அது கடல் ராணியின் பக்கவாட்டுத் துளைகளிலிருந்து

வரவில்லை, தளத்திலிருந்த பீரங்கியிலிருந்து வந்தது. அந்த பீரங்கியை அனந்த் இயக்கிக் கொண்டிருந்தது டெய்லருக்கு நன்றாகத் தெரிந்தது. அவன் அதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தபோது துலாஜி சற்றுத் தூரத்திலிருந்து இயக்கிய பீரங்கியொன்று டெய்லருக்குக் குறி வைக்கப்பட்டிருந்தது. டெய்லர் சரேலெனத் தரையில் படுத்தான்.

அவன் எழுந்தபோது கடல்ராணி துறைமுகத்தை அடைக்கவில்லை. மாக்ரேயின் கப்பலை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அதற்கு எதிர்த் திசையிலிருந்து லா பூஷேயின் ஐந்து கப்பல்கள் துரிதமாக வந்தன, மாக்ரேயை நோக்கி. அவற்றின் முதல் கப்பலில் பாய் மரத்தில் சாய்ந்து டெலஸ்கோப்பால் சுற்றும் கவனித்துக் கொண்டிருந்த லா பூஷே, வழக்கப்படி யுத்த குதூகலத்தால் நகைத்துக்கொண்டிருந்தான். நாற்புறத்திலும் அந்தக் கப்பலிலிருந்த பந்தங்கள் ஏதோ பேய் சிரிப்பது போன்ற பயங்கரத்தை அவன் முகத்துக்கு அளித்தன.

அடுத்த கணம் அவனுடைய தலைமையில் சீறிவந்த ஐந்து கப்பல்களிலிருந்து மால்வானிகள் பெரும் கூச்சல் போட்டார்கள். பீரங்கிகளும் சாதாரணத் துப்பாக்கிகளும் பயங்கரமாகச் சப்தித்தன. லா பூஷேயின் வேகத்தால் தேங்கிவிட்ட மாக்ரேயின் ஐந்து கப்பல்களில் மூன்று கப்பல்களின் பாய்மரங்களை லா பூஷே சுட்டுத் தள்ளிவிட்டான். அவற்றில் இரண்டு கப்பல்கள் மெள்ள மூழ்கிக் கொண் டிருந்தன.

இந்த அபாய நிலையிலும் மாக்ரே அசையவில்லை. தனக்குத் துணை வர வேண்டிய கடல் ராணியின் துணைக் கப்பல்கள் தனது கப்பல்களைத் தாக்க வேண்டிய காரணம் என்னவென்று எண்ணினான். ஏதோ பெரும் சூது நடந்திருக்கிறது என்று எண்ணி ஒரு பெரிய விளக்கை எடுத்துப் பாய் மரமொன்றின் மீது ஏறி வடக்கே ஆட்டிவிட்டு இறங்கினான். அடுத்துக் கடல் ராணியை நோக்கி வந்தான்.

கடல் ராணி அவனைச் சந்திக்கவில்லை. காஸண்ட்ரா மீது குண்டுகளை வீசியது. எங்கும் குண்டுகளின் புகை அரபிக் கடலின் அந்தப் பகுதியைச் சூழ்ந்து கொண்டது. கடல் ராணி டெலஸ்கோப்பை மடியில் செருகிக் கொண்டு அனந்தின் பக்கத்திலிருந்த பீரங்கியொன்றை இயக்கி மாக்ரேயின் பாய்மரமொன்றைத் தீக்கிரையாக்கினாள். அதனால் வெகுண்ட மாக்ரே, கடல் ராணியை நெருங்க முற்பட்டான். இடையே காஸண்ட்ரா புகுந்தது. டெய்லர், கடல்



ராணியை நெருங்கி வந்து தனது நீண்ட துப்பாக்கியால் சுட்டான், சுக்கான் சக்கரத்தை நோக்கி. ரவை சாருவின் தோளில் பாய்ந்தது. அவள் கையில் ரத்தம் குமிழ் எடுத்துப் பெருகியது. அதைக் கண்ட அனந்த் அவளைத் தூக்கிக் கொண்டு தலைவி அறைக்குச் சென்றான். காயத்துக்கு ஏதோ சிகிச்சை செய்துவிட்டுத் திரும்பிச் சுக்கானைத் தானே திருப்பலானான்.

டெய்லர் திகைத்தான். அந்தச் சமயத்தில் ஸில்வர் ஓடி வந்து வடக்கே வந்து கொண்டிருந்த புது ஐந்து பிரிட்டிஷ் கப்பல்களைக் காட்டி ,''தே ஆர் பிரிட்டிஷ். மாக்ரே ஹாஸ் கம் வித் டென் ஷிப்ஸ் ஹி ஹாஸ் ஷோன் ஒன்லி ஃபைவ் இன் த பிகினிங் (அந்தக் கப்பல்கள் பிரிட்டிஷ். மாக்ரே பத்துக் கப்பல்களுடன் வந்தான். ஆனால், ஐந்து கப்பல்களைத்தான் முதலில் காட்டினான்.)''என்று கூறினான்.

இங்க்லண்டும் பீரங்கிகளை விட்டு ஓடிவந்தான். ''டெய்லர், வீ ஆர் அவுட் மானுவேர்ட்(டெய்லர்! எதிரிகள் நம் சக்தியை மீறிவிட்டார்கள்)'' என்று கூறினான்.

''வாட் டூ யூ அட்வைஸ்(நீ என்ன சொல்கிறாய்)?''என்று கர்ஜித்தான் டெய்லர்.

''வி ஹேவ் டு எஸ்கேப்!'' என்றான் ஸில்வர்.

''வாட் அபௌட் த டூ லாக்ஸ் அண்ட் த டைமண்ட்ஸ் மாக்ரே காரீஸ்!(மாக்ரே கொண்டு வந்திருக்கும் இரண்டு லட்ச ரூபாயும் வைரங்களும் என்ன ஆவது)'' என்று கேட்டான் டெய்லர்.

''டாம் த லாக்ஸ் டெய்லர்! வீ மஸ்ட் ஸேவ் காஸண்ட்ரா (லட்சங்கள் ஒழியட்டும்,காஸண்ட்ராவைக் காப்பாற்றியாக வேண்டும்)'' என்ற ஸில்வர், ''டெய்லர்! ஐ வில் டர்ன் அண்ட் மூவ் த ஷிப் ஸௌத். விண்ட் ஈஸ் ப்ளோயிங் தட் வே(இந்தக் கப்பலை நான் தெற்குத் திசைக்குத் திருப்பப் போகிறேன். காற்று அந்தப் பக்கமாக அடிக்கிறது)''என்றும் சொல்லிவிட்டு, சுக்கானிடம் சென்று சக்கரத்தை வேகமாகத் திருப்பினான். காஸண்ட்ரா வேகமாகத் திரும்பிப் பாய் விரித்து ஓடியது- இரு புறமும் தனது பீரங்கிகளைப் பிரயோகித்துக் கொண்டே.

கடல்ராணி அதைப் பார்த்து நகைத்தாள். மீண்டும் அனந்த் பீரங்கி கொண்டு மற்றுமொரு பாய்மரத்தை உடைத்தான். தீப்பற்றிய பாய்களுடனும் உடைந்த பாய்மரங்களுடனும் காஸண்ட்ரா தனது

முந்நூற்று எண்பது பீரங்கிகளையும் வீசிக் கொண்டே பயங்கரமாக நுழைந்து விரைந்தது தெற்கு நோக்கி. அனந்த் குறிப்பிட்டது போல அதன் வேகம் அதிகமில்லை என்றாலும் குண்டு வீச்சு பலமாக இருந்ததால் மற்ற கப்பல்கள் அதை அதிகமாக நெருங்கவில்லை.

சற்று கிட்டே இருந்த கப்பல் கடல்ராணி ஒன்றுதான். காஸண்ட்ரா அருகில் வந்தபோது அதன் இன்னொரு பாய் மரத்தையும் தீர்த்துவிட அனந்த் பீரங்கியைக் குறிவைத்தான். ராணி அவனை நெருங்கி, ''வேண்டாம், நிறுத்துங்கள்'' என்றாள்.

''ஏன்?''

''அது சிறந்த கப்பல். அதை நாசம் செய்ய வேண்டாம்'' என்றாள் . வேறு காரணங்கள். அவளுக்கு இருந்தாலும் அதை அவள் வெளியிடவில்லை.

காஸண்ட்ரா ஓடுவதைப் பார்த்ததும் மாக்ரே புதிதாக வந்த தனது ஐந்து கப்பல்களுடன் அதைத் தொடர்ந்தான்.

இடைபுகுந்த லாபூஷே அவற்றிலும் இரண்டைச் சேதப் படுத்தி விட்டான்.

நள்ளிரவுவரை நடந்த பயங்கரப் போரின் விளைவுகள் விபரீதமாக இருந்தன. உடைந்த கப்பல்களின் பலகைகள் எங்கும் அலைகளில் மிதந்து கொண்டிருந்தன. மாண்ட மாலுமிகளின் பிணங்களைச் சுறாக்கள் இழுத்துக் கொண்டு மறைந்தன. இரண்டு கொடி மரங்கள் அலைகளால் உருட்டப்பட்டுப் பூர்ணகட் துறைமுகத்துக்குள் நுழைந்து கொண்டிருந்தன. அவற்றில் ஒன்றைப் பிடித்துத் தப்ப எண்ணி, மாண்டு விட்ட மாலுமியொருவனின் பிணம் அதன்மீது நீண்டு கிடந்ததால் மரத்துடன் அந்தச் சடலமும் துறைமுகத்துக்குள் சென்று கொண்டிருந்தது.

போர் முடிந்துவிட்டதன் காரணமாகக் கடல்ராணியின் தளம் சுத்தம் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. நாழிகைகள் ஓடின. பூர்ணகட்டின் போர் பயங்கரத்தின் விளைவுகளை முற்றிலும் விளக்க அருணன், தனது செவ்விய கிரணங்களை அரபிக் கடல்மீது வீசினான்!

### அத்தியாயம் - 71

## மலைமீது மூவர்!

பூர்ணகட் கடல் போரின் மறுநாள் அருணன் உதயமான போது அவன் செந்நிறம் கடலின் நீலத்தையும் சற்றே சிவப்பாக அடிக்க முயன்று முடியாததால் அத்தனை சிவப்பையும் கடல் ராணி'மீது நின்றிருந்த கடல் ராணி ரத்னா மீது பூசி அவளைச் சொர்ணமயமாக அடித்திருந்தான். அவள் அழகிய கன்னங்களிலும் நெற்றியிலும் விழுந்திருந்த பீரங்கி வெடி மருந்து பட்டைகள் இரண்டு அவள் அழகைக் குறைப்பதற்குப் பதில் சொர்ணத்துடன் கறுப்பு வைரம் கலந்துவிட்டது போன்ற பிரமையை ஏற்படுத்திய தால், அருணன் இனி தனக்கு வேலையில்லை என்று கதிரவனுக்கு இடம் விட்டுக் கடல் பிராந்தியத்தை வெள்ளியாக அடித்து விட்டான்.

அந்த வெள்ளிக் கிரணங்களில் மூழ்குவதுபோல் அசையாமல் நின்ற ராணி சுற்றுமுற்றும் தளத்தையும் கடல் பகுதியையும் நோக்கினாள். சுற்றிலும் மிதந்து கொண்டிருந்த பல பலகைகளும் அலைகளில் உருண்டு பூர்ணகட் துறைமுகத்துக்குள் நுழைந்து கொண்டிருந்த பாய் மரத் தண்டுகளும், கரையோரமாகப் புரண்டு கடைசியாக மணலில் ஒதுங்கிவிட்ட பிணங்களும் மனோகரமான காலை நேரத்தைப் பயங்கரமாக அடித்திருந்தன. அந்தக் காலையில் அதிகச் சிந்தனை வசப்பட்டிருந்த கடல் ராணி கைகளில் இருந்த வெடி மருந்துக் கரியைப்பற்றி லட்சியம் செய்யாமல் நெற்றியைச் சிறிது துடைத்துக் கொள்ளவே அவள் அழகிய நுதல் கரியாகி, அவள் வதனம் பாதிக் கிரகணம் பிடிக்கப்பட்ட சந்திரனைப் போல் காட்சியளித்தது. அவள் சிந்தனையில் ஆழ்ந்திருந்ததன் விளைவாக மாலுமிகள் கடல் ஜலம் இழுத்து தளத்தைக் கழுவியபோது அவள் காலையும் கழுவியதைக்கூடக் கவனிக்காமல் சிலைபோல் நின்று கொண் டிருந்தாள் ரத்னா.

அதே தளத்தில் மற்றொரு புறம் நின்று கொண்டிருந்த சாருவும் ஆழ்ந்த சிந்தனையில் இருந்ததால் காற்றில் அவள் தலைக் குழல்கள்

பயங்கரமாக அலைந்ததைக்கூட அவள் கவனிக்கவில்லை. அவள் வெளுத்த உடையும் பால்முகமும் ராணியின் முகத்தையும் ஆடையையும் போலக் கறை படிந்து இருந்ததன்றி முதல் நாள் பட்ட கைக் காயத்திலிருந்த ரத்தம் அவள் சட்டையின் ஒரு பகுதியை லேசாக நனைத்திருந்தும் அதைக்கூட அவள் லட்சியம் செய்ய வில்லை. கடலை வெறித்து நோக்கிக் கொண்டிருந்தாள்

'கடல் ராணி' தளத்தின் வடக்கு-தெற்கு மூலையில் இரண்டு பெண்களும் சிந்தனை வசப்பட்டிருந்ததைப் பார்த்த துலாஜி, ஓரளவு அவர்கள் மன ஓட்டத்தைப் புரிந்து கொண்டிருந்தாலும், மரக்கலத்தின் மேற்குப் பலகையில் சாய்ந்து தலையை, மார்பை நோக்கித் தொங்கவிட்டுக் கொண்டிருந்த அனந்துக்கு என்ன யோசனை இருக்க முடியும் என்பது புரியவில்லையாகையால் பக்கத்திலிருந்த சங்கர் பந்தை நோக்கி, ''திரிமூர்த்திகளையும் கவனித்தீர்களா?''என்று வினவினான்.

சங்கர் பந்தும் ஏற்கெனவே அவர்களைக் கவனித்துக் கொண்டு தானிருந்தாராதலால், ''ஆமாம், எனக்கொன்றும் புரியவில்லை. போர்தான் முடிந்து விட்டதே''என்றார்.

''வெற்றியும் கிடைத்துவிட்டது!'' என்றான் துலாஜி.

''ஆகையால் கொண்டாட்டத்துக்கு இது சமயம். சிந்தனைக்கோ சிந்தைச் சிதைவுக்கோ அல்ல'' என்றார் சங்கர் பந்த்.

துலாஜி தனது நெடிய ஒல்லியான உடலை நன்றாக நிமிர்த்தி னான். ''சங்கர் பந்த்! நாம் முடிவு கண்டது அரசியல் பிரச்னை களுக்கு'' என்று சுட்டிக் காட்டினான்.

''வேறு எதற்கு முடிவு காண வேண்டும்? போரில் வெற்றி கொண்டோம். பிரிட்டிஷ் கொள்ளைக்காரர்களை மட்டுமின்றி பிரிட்டிஷ் நிர்வாக பலத்தையும் ஓரளவு முறித்து விட்டோம்'' என்ற சங்கர் பந்தின் புத்தியில் அப்போதுதான் ஞானம் உதயமாகவே அவர் சட்டென்று சொற்களை நிறுத்தி, ''ஆம். ஆம் துலாஜி! நீங்கள் சொல்வது சரி. மனிதப் பிரச்னைகள் பாக்கியிருக்கின்றன!'' என்று கூறி முகத்தில் குழப்பத்தைப் படரவிட்டுக் கொண்டார்.

அந்தச் சமயத்தில் நூலேணியில் ஏறி கடல்ராணியின் தளத்தில் குதித்த லிவாஸியர் நேராக துலாஜி இருக்குமிடம் வந்தான்.



''இரண்டு பெண்களும் நன்றாக நிற்கவில்லை'' என்று கையால் அவர்கள் இருந்த திசைகளைச் சுட்டிக் காட்டி, ''ஒன்று வடதுருவம், இன்னொன்று தென்துருவம். துருவங்கள் சேர்வ தில்லை'' என்று சொல்லி நகைத்தான்.

துலாஜி லா பூஷேயுடன் கைகுலுக்கினான். ''நேற்றைய போரில் உங்கள் தாக்குதல் பிரமிக்கத் தக்கதாக இருந்தது. மாக்ரேயின் இரண்டு கப்பல்களை மூழ்கடித்துவிட்டீர்கள்!'' என்று பாராட்டவும் செய்தான்.

''கனோஜியிடம் ஒப்புக்கொண்ட பணியைச் செய்தேன்'' என்ற லிவாஸியரைப் பிரமிப்புடன் பார்த்தார் சங்கர் பந்த். ''என்ன கனோஜியிடம் ஒப்புக்கொண்ட பணியா!'' என்றும் வினவினார் வியப்பு நிரம்பிய குரலில்.

''ஆம்'' என்ற லிவாஸியர், ''இதில் என்ன விசித்திரம் இருக்கிறது?'' என்று வினவினான்.

''நீங்கள் வெள்ளையர். கனோஜி மராட்டியர்'' என்று தடுமாறினார் சங்கர் பந்த்.

லிவாஸியர் பெரிதாக நகைத்தான். ''நீங்களும் நானும் எப்படி? உங்கள் கப்பலில் நின்று நான் போரிடவில்லையா?''என்று வினவினான்.

சங்கர் பந்த் சிந்தனை வசப்பட்டார். இருப்பினும் சொன்னார் ''நான் ஸார்கேல் அல்ல'' என்று.

''நீர் மால்வான் தளபதி. இருப்பினும் கொள்ளைக்காரர். கனோஜி ஸார்கேல், அதாவது மகாராஷ்டிரக் கடல் தளபதி. இருப்பினும் கொள்ளைக்காரர். நாமெல்லாம் ஒரே குலம். இதில் வெள்ளை கறுப்பு கிடையாது'' என்றான் லா பூஷே.

லா பூஷேயின் இந்தப் பொதுக் கொள்கையிலோ, நகைப் பிலோ சங்கர் பந்த் மயங்கவில்லை. தன்னையும் மீறிய ஏதோ ரகசியம் சமீபகால நிகழ்ச்சிகளில் இருக்கிறதென்பதை ஊகித்துக் கொண்டாலும் அதைப்பற்றி அவர் கேட்கவில்லை.

அவர் சந்தேகத்தை அதிகம் ஊன்றவிடாத துலாஜி சொன் னான்:''தளபதி! சிந்து துர்க்கத்துக்கு அனந்த் வந்து சேருவதற்கு முன்னாலிருந்தே ஏதேதோ திட்டங்கள் உருவாயின. அவற்றைப்

பிறகு விளக்கமாகச் சொல்கிறேன். நாம் உடனடியாகக் கவனிக்க வேண்டிய விஷயங்களைக் கவனிப்போம். நாம் எத்தனை கப்பல்களை இழந்திருக்கிறோம்? இருக்கும் கப்பல்களுக்கு ஏற்பட்டிருக்கும் சேதம் எவ்வளவு?இந்த விஷயங்களை முதலில் கவனிப் போம். வாருங்கள் தலைவியின் அறைக்கு''என்று சொன்னதோடு நில்லாமல் தலைவியின் அறையை நோக்கி நடக்கவும் செய்தான். சங்கர் பந்தும் லா பூஷேயும் அவனைத் தொடர்ந்தார்கள்.

ஆனால், கப்பலின் வடக்கு முனையிலும் தெற்கு முனையிலும் நின்றிருந்த இரு பெண்களும் அசையவில்லை. அனந்தும் தொங்கப் போட்டிருந்த முகத்தைத் தூக்கவில்லை. ''அனந்த்! ஏய் அனந்த்!'' என்று துலாஜி உரக்கக் குரல் கொடுத்த பிறகுதான் அனந்த் தலையை நிமிர்த்தினான். சுற்று முற்றும் நோக்கினான்.

பூர்ணகட் துறைமுகத்தை ஏராளமான கழுகுகள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. கரையில் ஒதுங்கிய பிணங்களைச் சில கொத்திக் கொண்டிருந்தன. பிணங்களைக் கொத்துவதில் ஏற்பட்ட போட்டியில் ஒரு கழுகு இன்னொரு கழுகைச் சிறகால் அடித்துத் தள்ளவே, இரண்டுக்கும் சண்டை மூண்டு பிணத்தை விட்டு ஒன்றையொன்று கொத்திக் கூச்சல் போட்டன. கழுகுகளோடு போட்டி போடமுடியாத பெரிய கடல் கொக்குகள் நான்கு, மலை உச்சியின் ஒரு பகுதியில் உட்கார்ந்து ஒடு பிணம் ஒட உறு பிணம் வரும் நேரத்தை நோக்கிக் கொண்டிருந்தன.

உருண்ட பிணங்களிலொன்று அலைகளால் மீண்டும் உருட்டப் பட்டு மலை ஓரத்துக்கு வரவே அவற்றை நோக்கிக் கொக்குகள் பறந்தன.

இவற்றையெல்லாம் கவனித்த அனந்த் 'மனிதர்களுக்கும் கழுகுகளுக்கும் அதிக வித்தியாசமில்லை'யென்று நினைத்தான். 'பிணத்தைவிடக் கேவலமான பணத்துக்கு மனிதனும் இந்தக் கழுகுகளைப் போல் ஒருவனையொருவன் கொத்திக் கடித்து ஒழிக்க முயலுகிறான்' என்று தன்னுள் சொல்லிக் கொண்டான்.

''இரண்டு பேருக்கு இடையில் ஏற்பட்ட சண்டையில் ஒதுங்கி விட்ட பிணத்தைக் கொத்த வந்த இரண்டு கொக்கைப் போலத்தான் பாரதமும் இருக்கிறது'' என்று உள்ளுக்குள் முணுமுணுத்தான்.



அவன் நீர்க்காலோசனையையும் கண்ணை விழித்த பின்பும் அவன் தன்னைப் பார்க்காமல் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருந்ததையும் கண்ட துலாஜி' அவனை நெருங்கி அவன் தோள்மீது கையை வைத்து, ''அனந்த்''என்று அழைத்தான்.

''உம்''என்று ஒரு ஹுங்காரம் மட்டும் அனந்திடமிருந்து வெளிவந்தது.

''எந்தக் கோட்டையைப் பிடிக்கப் பார்க்கிறாய்?''என்று கேட்ட துலாஜி, அவன் தோளைக் குலுக்கினான்.

''அதோ கரையைப் பார்'' என்றான் அனந்த்.

''பார்த்தேன்!''

''என்ன புரிந்துகொண்டாய்?''

''இரண்டு கழுகுகளின் சண்டையில் கொக்கு பயனடைந்தது!''

''கொக்கு யார் தெரியுமா?''

''யார்?''

''பிரிட்டன். நாம் போரை வென்றுவிட்டோம். பிரிட்டனை வெல்லவில்லை.''

''நீ அரசியல் பேசுகிறாய்'' என்றான் துலாஜி.

''இல்லை. உண்மை பேசுகிறேன் '' என்ற அனந்த் மீண்டும் யோசனையில் இறங்கினான்.

அந்தச் சமயத்தில் எதிரேயிருந்த கோட்டையிலிருந்து கடலை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த மூன்றுபேர் மலை உச்சிக்கு வந்து வரிசையாக நின்றுகொண்டார்கள்.

அந்த மூவரைக் கண்டதும் துலாஜி அனந்தை நோக்கி, ''அனந்த், நீதிபதிகள் வந்துவிட்டார்கள். நான் லா பூஷேயையும் பந்தையும் அழைத்து வருகிறேன்'' என்று கூறித் தலைவியின் அறையை நோக்கி விரைந்தான்.

அனந்த் அந்த மூவரையும் நோக்கினான். அவர்கள் மூவருக்குப் பின்னால் ஒருவன் பெரிய கொடியொன்றைப் பிடித்துக்கொண்டு வந்து நின்றான். அந்தக் கொடி ராணியையும் நூலேணியையும் கூட இவ்வுலகத்துக்கு இழுத்தது. இருவரும் அனந்த் இருந்த இடத்தை அணுகி அவனுக்கு இருபுறமும் நின்றார்கள்.

தலைவி அறைக்குள்ளிருந்து லா பூஷேயையும் சங்கர் பந்தையும் அழைத்து வந்த துலாஜி, கரையையும் நோக்கி, கப்பல் தளத்தையும் நோக்கினான். ''அங்கு மூவர்... இங்கு மூவர்'' என்று மலை உச்சியையும் ராணி, அனந்த், சாரு மூவரையும் சுட்டிக் காட்டினான்.

''நாம் மூவர்!'' என்று தன்னையும் சங்கர் பந்தையும் துலாஜியையும் சுட்டிக் காட்டிய லா பூஷே பெரிதாக நகைத்தான்.

மற்றவர்கள் நகைக்கவில்லை. ''சீக்கிரம் நீராடி உடை மாற்றுங்கள். நாம் கரைக்குச் செல்லவேண்டும். நீதிபதிகள் காத்திருக்கிறார்கள்'' என்று கூறவே சங்கர் பந்த் நகர்ந்தார், தளத்துக்கு அடியிலிருந்த அறையை நோக்கி. லா பூஷேயும் அவரைத் தொடர்ந்தான்.

''நீங்கள் என்ன செய்வதாக உத்தேசம்?''என்று துலாஜி கேட்டுக் கொண்டிருக்கையில் கடல் ராணி கப்பல் பலகையில் ஏறிச் சரேலென நீரில் குதித்தாள். அவளைத் தொடர்ந்தாள் சாரு. அனந்த் ஒரு விநாடி யோசித்தான். பிறகு அவனும் கடலில் குதித்தான். மூவரும் ஒன்றாகக் கரையை நோக்கி நீந்துவதைக் கண்ட துலாஜி இன்ப நகை கொண்டான். 'எந்தச் சண்டை முடிந்தாலும் இந்தச் சண்டை முடியாது!' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். ''இல்லை, முடிந்துவிட்டது... முடிந்துவிட்டது!'' என்றான் அடுத்த விநாடி.

இரு பெண்களுக்கு இடையில் நீந்திய அனந்தின்மீது இரு பெண்களும் ஆளுக்கொரு கையைப் போட்டுக்கொண்டு ஒற்றைக் கையாலும் கால்களாலும் நீந்தினார்கள். அவ்வப்பொழுது கால்களை உதைத்தபோது அவர்கள் எழில்கள் அனந்தின் மீது பட்டுக் கொண்டிருந்ததால் அவர்கள் நீச்சல் சொர்க்க நீச்சலாக இருந்தது.

மலை உச்சிமீது நின்ற மூவரும் இந்த விந்தையைக் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டு நின்றார்கள்!

## அத்தியாயம் - 72

# காதலும் கடலும்!

பூர்ணகட்டின் உக்கிரமான போர் முடிந்த மறுநாள் உச்சி வேளைக்குச் சற்று முன்பே பூர்ணகட் கோட்டையின் நடு மண்டபத்தில், மலை உச்சியில் காட்சியளித்த மூவரும் மூன்று பெரும் ஆசனங்களில் அமர்ந்திருந்தார்கள். எதிரே வரிசையாக இருந்த மஞ்சங்களில் ராணி, சாரு, அனந்த் மூவர் ஒரு புறத்திலும், சங்கர் பந்த், துலாஜி, லா பூஷே ஆகிய மூவர் மற்றொரு புறத்திலும் அமர்ந்திருந்தார்கள். மண்டபத்தின் கதவுகள் சாத்தித் தாழிடப் பட்டிருந்தன. மண்டபத்தில் பரிபூர்ண மௌனம் நிலவியிருந்தது. முதல் நாள் பெரும் வெற்றி ஏற்பட்டிருந்துங்கூட அங்கிருந்த ஒன்பது பேரும் எந்தவித உணர்ச்சியையும் காட்டாமல் அமர்ந்திருந்தனர். இந்த மௌனத்தை நடு மண்டபத்திலிருந்த மூன்று ஆசனங்களில் உட்கார்ந்திருந்த மூவருக்கும் நடு நாயகமாய் அமர்ந்திருந்த பேஷ்வா பாஜிராவே உடைத்தார்.

மௌனத்தை உடைக்கு முன்பாக அவரது ஈட்டி போன்ற கண்கள் எதிரிலிருந்த ஆறு பேரையும் ஒரு முறை அளவெடுத்தன. பிறகு எத்தனையோ போர்களில் பெரும் படைகளுக்கு உத்தர விட்டனவும், அழகிகள் பலரை மயக்கியனவுமான அவரது உதடுகள் மெள்ள அசைந்தன. ''நமது ஸார்கேல் கனோஜியின் தயவாலும் திட்டத்தாலும் இன்று ஒரு பெரும் கடல் போரை வென்றிருக்கிறோம்'' என்ற சொற்களைச் சர்வ சாதாரணமாக எந்தவித உணர்ச்சியுமின்றி உதிர்த்தன, வாலிப பேஷ்வாவின் வீர உதடுகள். அதை அறிவித்தபோது பேஷ்வாவின் தலை லேசாகப் பக்கத்திலிருந்த கனோஜி ஆங்கரே மீது திரும்பிச் சிறிது தாழவும் செய்தது.

வயதேறி உடல்நிலை குன்றியிருந்த அந்தச் சமயத்திலும் கனோஜி ஆங்கரேயின் முரட்டு உதடுகளில் புன்னகை விரிந்தது. அவரது பயங்கர மீசையும் சற்றே ஏறி இறங்கியது. அவரது கண்கள் பேஷ்வாவைத் திரும்பி நோக்கின. ''பேஷ்வா! இதில் நான் செய்தது

அதிகமல்ல, எனது பிரதான தளபதி ருத்ராஜி அனந்த், தமது தம்பியை இந்த அபாயமான பணிக்கு அர்ப்பணித்திருக்காவிட்டால் காஸண்ட்ராவை நாம் முறியடித்திருக்க முடியாது!'' என்று பணிவுடன் தெரிவித்து பேஷ்வாவுக்கு மறுபுறத்தில் அமர்ந்திருந்த தமது தளபதியைச் சுட்டிக் காட்டினார்.

ருத்ராஜி அனந்த், கனோஜிக்கு அடுத்தபடி பயங்கரத் தோற்றத்துடன் அமர்ந்திருந்தார். அவரது இடையில் அப்பொழுதும் காட்சியளித்த மூன்று கைத்துப்பாக்கிகளும் அவற்றின் பிடிகளிலிருந்த வைரங்களும் அவர் எத்தனை கொள்ளைகளை அடித்திருக்க முடியும் என்பதற்குச் சின்னஞ்சிறு அத்தாட்சிகளாக விளங்கின.

கனோஜியின் சொற்களைக் கேட்ட அவர் பேஷ்வா இருப்பதையும் மறந்து சிறிது பலமாகவே நகைத்தார். ''நானாவது எனது தம்பியை அர்ப்பணிப்பதாவது! சண்டையிருக்கும் இடத்தை நாடித் திரியும் அவனுக்குக் கனோஜி அனுப்பின உத்தரவு கற்கண்டாக இருந்தது. உத்தரவு கிடைத்ததும் கார்வாருக்குப் புறப்பட்டு விட்டான். இதில் என் உத்தரவோ அர்ப்பணிப்போ ஏதுமில்லை'' என்றார் நகைப்பின் ஊடே.

ருத்ராஜி அனந்தின் சொற்களை ஆமோதிப்பதற்கு அறிகுறியாக பேஷ்வா தலையை ஒருமுறை அசைத்தார். ''ஆம். யாரும் இந்திரஜித் அனந்தைத் தூண்ட வேண்டியதில்லை. அவன் ஒரு நாடோடி. இந்த ஸஹ்யாத்ரியின் மகாராஷ்டிரப் பிராந்தியத்தில் அவன் போகாத இடமில்லை'' என்று கூறிய பேஷ்வா சற்று நிதானித்து, ''நுழையாத குடிசையும் இல்லை!'' என்று வார்த்தையை முடித்தார்.

பேஷ்வாவின் கிருத்திருமமான சொற்களின் கடைசிப் பகுதியைக் கேட்டதும் சாருவின் முகத்தில் சீற்றம் தெரிந்தது. பேஷ்வாவை நோக்கி, ''ஓகோ! எனக்கு அமைத்ததுபோல் இன்னும் பல குடிசைகளை அமைத்திருக்கிறீர்களா?''என்று வினவினாள் சுடு சொற்களில்.

கடல்ராணியும் பேஷ்வாவை உக்கிரத்துடன் நோக்கினாள். ''பேஷ்வா குடிசை கட்டுகிறவர். இவர் குச்சு நுழையும் வீரர். சேர்க்கை மிக நன்றாயிருக்கிறது''என்று கூறி பேஷ்வாவையும் பார்த்து அனந்தையும் நோக்கினாள், அக்கினி வீசிய கண்களால்.



இந்தச் சமயத்தில் கனோஜி தமது சுபாவத்தைக் காட்டாமல் இருந்திருக்கலாம். ஆனால், வாயை மூடிக்கொண்டு உட்கார்ந்திருக்க முடியாததால், ''குச்சுக்குள் என்ன, கோட்டைக்குள்ளும் நுழைவான் அனந்த்'' என்று கூறி ராணியை நோக்கி நகைத்தார்.

''அதனால்தான் கார்வாருக்குப் புறப்படு என்று சொன்னதும் சிந்து துர்க்கத்துக்கும் போய் வருகிறேன் என்றான்'' என்று விளக்கினார் ருத்ராஜி அனந்த் விஷமக் குரலில்.

''அப்படியா?''என்று கறுவினாள் ராணி. இதழ்களைச் சினத்துடன் உட்புறம் மடித்துப் பற்களால் கடித்துக் கொண்டாள்.

''குழந்தை என்ன செய்வான்? கடல்ராணியின் அழகும் கொள்ளைக்காரி என்ற பிரசித்தியும் அத்தனை அதிகமாக இருந்தன!'' என்று காரணம் சொன்னார் ருத்ராஜி.

சற்றே மௌனமாயிருந்த சாருவின் கண்கள் தீப்பொறிகளைக் கக்கின. ''பேஷ்வா! மேலைக் கடலோரமாக வேவு பார்க்க எத்தனை குடிசைகளை அமைத்தீர்கள்? எத்தனை அழகிகளை ஆங்காங்கு நிறுத்தினீர்கள், இந்தக் கடல் வீரருக்கு வலை வீச?'' என்று கேட்டாள் சாரு.

பேஷ்வாவின் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் தெரியவில்லை. ''வேறு குடிசை அமைக்கவில்லை. இவன் கார்வாருக்குப் புறப்பட்ட இரவு நடந்ததைக் கவனித்தேன். வேறு குடிசையால் பயனில்லை என்று தீர்மானித்தேன். நான், உன் மாமன்தான். இருப்பினும் அத்தனை வெளிப்படையாக மலைக் குடிசையில்...'' என்ற பேஷ்வா சிறிது தயங்கினார் முடிக்க.

''வெளிப்படையாக என்ன நடந்தது?''கடல் ராணி சீறினாள்.

''எதுவும் நடக்கவில்லை. காதலர்களின் அசட்டுத்தனம். அதற்கும் அனந்தைக் கோபித்துப் பயனில்லை. இவள்தான் அவனை இறுக்க...உம்... உத்தரவு கொடுத்தாள் கார்வார் செல்ல''என்ற பாஜிராவ், ''மருமகளே! இதில் ஏதும் தவறில்லை. பெருத்த அபாயத்தை நாடிச் செல்லும்போதோ, திரும்பி வெற்றியுடன் வரும்போதோ உரிமையுள்ளவள் வீரனை அணைப்பது க்ஷத்திரிய மரபு''என்று சரிக்கட்ட முயன்றார் ''இதற்கும் ராமாயணத்தில் அத்தாட்சி இருக்கிறது. கரதூஷணர்களின் பெரும் படையை வெற்றி கொண்ட ராமன் காயங்களுடன் பர்ணசாலைக்குள் நுழைந்தபோது சீதை அவனை மார்புறத் தழுவிக் கொண்டாள்''என்று புராண அத்தாட்சியும் காட்டினார்.

அதுவரை சும்மாயிருந்த லா பூஷே பெரிதாக நகைத்தான் ''யூ மீன் சீதா ஹக்ட் த ஹீரோ ஆப்ஃடர் விக்டரி! அவர் விமன் டோண்ட் வெய்ட் தட் லாங். தே ஹக் அஸ் எனி டைம் (சீதை வெற்றிக்குப் பிறகுதான் வீரனை அணைத்துக் கொண்டாளா? எங்கள் நாட்டுப் பெண்கள் அவ்வளவு நேரம் காத்திருக்க மாட்டார்கள். சண்டைக்கு முன்னும் பின்னும் எந்தச் சமயத்திலும் அணைப்பார்கள்)''என்று கூறித் தனது சராயிலிருந்து ஒரு மதுக் குப்பியை எடுத்துச் சிறிது மதுவை உறிஞ்சினான்.

அதைக் கண்ட கனோஜி தமது உதடுகளை நாக்கால் தடவிக் கொண்டார். பிறகு லா பூஷேயை நோக்கிக் கையை நீட்டினார் ''கூடாது கனோஜி! நீர் மதுவை அருந்தக் கூடாது. மருத்துவர் கூறியிருக்கிறார்'' என்று பாஜிராவ் தடுத்தார்.

''மருத்துவருக்குக் கடல் வாழ்க்கையைப் பற்றி என்ன தெரியும்? அகப்பட்டபோது மதுவையும் மங்கையரையும் அனுபவிக்க வேண்டும். இதை நான் இங்கே வந்த அந்தத் தமிழன் இதயசந்திரனுக்கே சொல்லிக் கொடுத்தேன்'' என்று தமது கொள்கையைத் திரும்பப் படித்தார்.

சங்கர் பந்த் அந்த மண்டபத்திலிருந்த அனைவரையும் வெறுப்புடன் பார்த்தார். ''நமக்குப் பெண்களையும் குடிசைகளையும் தவிர பேசுவதற்கு ஏதுமில்லையா?'' என்று கேட்டார் மிகுந்த வெறுப்புடன்.

''வாழ்க்கைக்கு வேறு எவை ரசம் கூட்டுகின்றன?'' என்று வினவினார் கனோஜி.

பாஜிராவ் தமது ஒரு கையின் அசைப்பினால் அந்தத் தர்க்கத்துக்கு முடிவு கட்டினார்: ''சங்கர் பந்த் கேட்பது சரி. நாம் இங்கே கூடியிருப்பது இந்த விஷயங்களைச் சர்ச்சை செய்ய அல்ல! கனோஜியின் உதவியாலும் ருத்ராஜியின் உதவியாலும் நாம் இப்பொழுது வெள்ளைக் கடற்கொள்ளைக்காரர்களை முறியடித்து விரட்டியிருக்கிறோம். பிரிட்டிஷ் கடல் பலத்தையும் ஓரளவு நாசம் செய்திருக்கிறோம்.'' என்று கூறிய பேஷ்வாவை, கனோஜி இடைமறித்து,'' பேஷ்வா! அனாவசியமாகப் புகழை எங்களுக்கு அளிக்கிறீர்கள். உங்கள் சூழ்ச்சியில்லாவிட்டால் இவை எதுவுமே நடந்திருக்காது. என் மகன் துலாஜி என்னையும் மீறி வெள்ளைக்



கொள்ளைக்காரர்களை அடைந்ததும், அனந்த் சிந்து துர்க்கம் சென்றதும் எல்லாம் உங்கள் திட்டம்தானே?'' என்று கேட்டார் கனோஜி.

பாஜிராவின் கூரிய கண்கள் எதிரே உட்கார்ந்திருந்த அறுவரையும் நோக்கின ஒரு விநாடி. பிறகு பதிந்தன கடல் ராணி மீது, ''ராணி! உனக்கு வந்த கடிதத்தைப்பற்றிச் சொல்கிறாயா?'' என்று வினவினார் மெதுவாக.

ராணி அழகாகப் புன்முறுவல் கொண்டாள். ''ஒரு பெரிய வீரன், அழகன் என்னைச் சந்திக்கப் போவதாகவும், அவருக்கு உதவுமாறும் ஓலை அனுப்பியிருந்தீர்கள். அந்த வீரன் நான் கடல் நீராடும் துறைக்கு வருவார் என்று மட்டும் எழுதவில்லை. அவர் அங்க அடையாளங்களையும் குறிப்பிடவில்லை. அது கிடக்கட்டும், பேஷ்வா! எங்களையெல்லாம் சூத்திரப் பாவைகளாக ஆட்டி வைத்தவர் தாங்கள்தானே? சூத்திரக் கயிறுகளை எப்படி இயக்கினீர்கள் என்று தாங்களே சொல்லிவிடலாமே'' என்றாள்.

அதை மற்றவர்கள் ஆமோதிக்கவே பேஷ்வா மெள்ளப் பேசலானார்:

''ராணி! நான் சூத்ரதாரி என்று சொல்வது சரியாகாது. ஆட்சியிலிருப்பவர்கள் யாருக்கும் நாட்டைக் காக்கும் பொறுப்பு உண்டு. அந்தப் பொறுப்பை நிறைவேற்ற தகுதியான ஆயுதங்களைக் கையாள்வதும் தவறாகாது. அப்படி ஆயுதங்களைப் பொறுக்கினேன். பிரிட்டிஷ் ஆண்டு கணக்குப்படி 1715-ஆவது ஆண்டு டிசம்பர் மாதத்தில் கவர்னர் சார்லஸ் பூன் பம்பாய் வந்த பிறகு அரபிக்கடலில் நமது அமைதி குலைந்தது. அவர் நமது கடல் பலத்தை முறிக்க முயன்று பல தோல்விகளை அடைந்தும் சும்மா இருக்கவில்லை. மேலும் மேலும் தொந்தரவு செய்தார். அவர் பலவீனத்தாலும் அசட்டுத்தனத்தாலும் வெள்ளைக் கொள்ளையர் அரபிக்கடலைச் சூறையாட முற்பட்டார்கள். கனோஜிக்கும் வயதேறிவிட்டதால் அவர் போரில் ஈடுபட மறுத்தார். காரணம் அவரது நண்பர், எனது தந்தை பேஷ்வா பாலாஜி விதிவசத்தால் காலமாகிவிட்டதுதான். 1720-ஆம் ஆண்டு நமது வரலாற்றில் முக்கியமானது. அந்த ஆண்டில் என் தந்தை மறைந்து, நான் சிறு வயதில் பேஷ்வாவானேன். 1720-இல் மடகாஸ்கர் கொள்ளைக்காரர்களான இங்க்லண்டும், டெய்லரும்

அரபிக்கடலில் அனர்த்தம் செய்து கொண்டிருந்தார்கள். 1720 - இல் கவர்னர் பூன் விஜயதுர்க்கத்தைத் தாக்கினார். அந்த 1720 - ஆவது ஆண்டு மகாராஷ்டிரச் சரித்திரத்தில் முக்கிய ஆண்டு. அந்த ஆண்டுக்கு முதல் ஆண்டில்தான் காப்டன் மாக்ரே காஸண்ட்ரா என்ற பெரிய போர்க் கப்பலை இங்க்லண்டிடமும் டெய்லரிடமும் பறி கொடுத்தார். அந்தக் கப்பலால் அரபிக்கடல் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டது. அந்த ஆண்டில்தான் மகாராஜா ஷாஹு என்னைப் பார்த்துக் கேட்டார், 'பல அக்கிரமங்களைப் பற்றிக் கேள்விப்படுகிறேன். அதற்கு நீ என்ன செய்ய உத்தேசம்?' என்று.

வேறு வழியின்றிப் புதுத் திட்டம் வகுத்தேன். இந்திரஜித் அனந்தின் போர்த்திறன் என் காதில் விழுந்தது. அவன் ஒரு நாடோடியென்றும் சம்பந்தமில்லாத் சண்டைகளில் நுழைபவனென்றும் கேள்விப்பட்டேன். கார்வாரில் பிரிட்டிஷ் கடற்படையையும், தரையில் இறங்கிய மாலுமிகளையும் புரவிப் படை கொண்டு அவன் நாசம் செய்ததைப்பற்றிப் பெரும் பிரசித்தி இருந்தது. அடுத்தபடி துலாஜி ஆங்கரே தந்தையையும் மீறிக் கடலில் உலாவுவதாகவும் கேள்விப்பட்டேன். முதியவர்கள் உதவாதபோது இந்த இரண்டு வாலிபர்களையும் உபயோகப்படுத்தத் தீர்மானித்தேன். இருவரையும் நானே தனிமையில் சந்தித்துப் பேசினேன். அப்பொழுதுதான் கடல்ராணியைப்பற்றி விளக்கினான் அனந்த். துலாஜியும் மிகுந்த பெருமையுடன் ராணியைப் பற்றிக் கூறினான். இரண்டு வாலிபர்களும் இஷ்டப்படி நடக்க அனுமதி கொடுத்தேன். என் மருமகளை வேவுகாரியாக்கி அனந்திடம் ஒப்படைத்தேன். அனந்த் எனக்கு அடிக்கடி செய்தி அனுப்பவும் உத்தரவிட்டிருந்தேன். இருவரும் புறப்பட்டார்கள். துலாஜி கடலை நோக்கிச் சென்றான். சாருவிடம் மயங்கிய அனந்த் பிரியா விடைபெற்று மலை வழியே நடந்தான். மீதிக் கதையை இரு வாலிபர்களும் சொல்வார்கள்.'' இங்கு மௌனமானார் பேஷ்வா. அவர் கண்கள் அனந்தை நோக்கின.

அவற்றின் குறிப்பறிந்த அனந்த் சொன்னான் : ''பேஷ்வாவின் உத்தரவைப் பெற்ற நாங்கள் இருவரும் என்ன செய்யவேண்டும் என்பதைத் தீர்மானித்தோம். துலாஜி எப்படியாவது காஸண்ட்ராவில் ஏறிவிடவேண்டியதென்றும், வெள்ளைக் கொள்ளைக்காரர்களிடம் சேர்ந்து பணிபுரிந்து, தேவையானபோது என்னிடம் இணையவேண்டிய தென்றும் தீர்மானித்தோம். சரித்திரப் பாடம்



பயின்ற நான் எந்த இடத்தில் கொள்ளைக்காரர்களைச் சந்திக்கலாம் என்று யோசித்தேன். சிந்து துர்க்கம் அதிக வசதியாக இருந்தது. அதற்கான திட்டங்களை நானும் துலாஜியும் வகுத்தோம். சிந்து துர்க்கத்துக்குத் துலாஜி காஸண்ட்ராவைக் கொண்டு வரவேண்டியதென்றும், அங்கு நாங்கள் சந்திப்பதென்றும் முடிவு செய்தோம். நான் மீண்டும் கார்வார் சென்றேன். துலாஜி கடலுக்குச் சென்றான்.

கார்வாரில் நான் லாங்ஜான் ஸில்வரை ஓராண்டு கழித்துச் சந்தித்தேன். அவனைப்பற்றி ஏற்கெனவே கேள்விப்பட்டிருந்தேன். கொள்ளைக்காரனைக் கொண்டு கொள்ளைக்காரரைப் பிடிக்க முடிவு செய்து அவனைக் காப்பாற்றி, அவனுடன் சிந்து துர்க்கம் வந்தேன். வருவதற்கு முன்பே துலாஜிக்குச் செய்தி அனுப்பினேன், பத்து நாட்களில் அவனைச் சிந்து துர்க்கத்தில் சந்திப்பதாக. நான் சிந்து துர்க்கம் வெளிப்பாறையில் அமர்ந்து சிவாஜி மகாராஜாவையும் அந்தக் கோட்டைச் சிறப்பையும் எண்ணினேன். அங்கிருந்த அறையில் தூங்கினேன். அரைத் தூக்கத்தில் கடல் ராணி என்னை எழுப்பினாள். அடுத்து நடந்தது, அவளுக்குத் தெரியும்.'' இங்கு நிறுத்தினான் பேச்சை அனந்த்.

ராணி உணர்ச்சி வசப்பட்டிருந்தாள். ஆகவே யாரும் கேட்காமலே கதையைத் தொடர்ந்தாள். ''அங்கேதான் இந்தச் சோம்பேறி வீரனைச் சந்தித்தேன். ஒரு தூங்குமூஞ்சி எப்படி இரு வெள்ளைக்காரர்களை அனாயாசமாகச் சுடமுடியும் என்பதைப் பார்த்தேன். பிறகு இவர் செய்த சாகசங்கள் ஜகப்பிரசித்தம். என்னை மெள்ள கைக்குள் போட்டுக்கொண்டார். இவர் சிந்து துர்க்கம் வருவதற்கும் காஸண்ட்ரா இவரைத் தேடி வருவதற்கும் சரியாயிருந்தது. எனக்கும் காப்டன் இங்க்லண்டுக்கும் ஸில்வரை இவர்தான் அறிமுகப்படுத்தி வைத்தார். அந்த மூவரைப்பற்றிய சகல விவரங்களையும் இவர் அறிந்திருந்தார். பிறகு நாங்கள் காஸண்ட்ராவுக்குச் சென்றோம். அங்கு துலாஜி கூனனாக இருந்தார். பிறகு நன்றாக நிமிர்ந்தார். ஆனால், நானும் அனந்தும் மாக்ரே பெரும் பொக்கிஷம் கொண்டு வருவதாகச் சொல்லி, காஸண்ட்ராவைப் பூர்ணகட்டுக்குக் கொண்டு வந்த தந்திரத்தின் மூல புருஷர் துலாஜிதான். '' சிந்து துர்க்கத்தில் துலாஜியும் இவரும் செய்த தந்திரங்கள் பல. விளைத்த விநோதங்கள் எவ்வளவோ. திடீரென்று ஒரு நாள் அனந்த் மறைந்தார், சுரங்கப் பாதை வழியாக. நானும் அவரைத்

தொடர்ந்து விஜய துர்க்கம் வந்தேன். அங்கு எனக்குப் பதில் கடல் ராணியாக இவள் வீற்றிருந்தாள். காப்டன் மாக்ரேயிடம் காஸண்ட்ராவை ஒப்படைப்பதாக ஒப்பந்தமும் நடந்தது. மாக்ரே அங்கு எப்படி வந்தார்? லா பூஷே எப்படிச் சிந்து துர்க்கம் வந்தார்? இவை எனக்குப் புரியவில்லை...''

இதற்கு கனோஜி பதில் சொன்னார். ''பேஷ்வா அவர்கள், கொள்ளைக்காரர் பலம், நம்மை ஆள முயலும் பிரிட்டிஷ் பலம் இரண்டையும் முறிக்கவேண்டுமென்றார். அதற்காக மாக்ரேயிடம் ஓர் ஒப்பந்தம் செய்தேன். இதற்கிடையில் பிரசித்தி பெற்ற பிரெஞ்சு கொள்ளைக்காரர் லா பூஷே அரபிக்கடலில் நடமாடுவதாகக் கேள்விப்பட்டேன். அவருடன் தொடர்பு கொண்டு அவரைக் கடல்ராணிக்கு உதவுமாறும், அதற்காக காஸண்ட்ராவை அவருக்கு அளிப்பதாகவும் ஒப்பந்தம் செய்தேன். மால்வானிகள் கப்பல்கள் இருக்கும் ரகசிய இடம் செல்ல ஒரு கப்பலையும் கொடுத்தேன். லா பூஷே நாங்கள் திட்டமிட்டபடி செய்தார். கடல் ராணியின் கப்பல்கள் இருக்குமிடம் சென்றார். தமது பிரெஞ்சு மாலுமிகளுடன் மால்வானிகளையும் தம்முடன் சேர்த்துக் கொண்டார். வழியில் ஸித்திகளின் கப்பலைக் கொளுத்தினார். சிந்து துர்க்கமும் சென்றார். அங்கு டெய்லரையும் இங்கலண்டையும் நட்பு கொண்டார். அனந்தையும் துலாஜியையும் நட்புகொண்டார்'' என்று கூறினார் கனோஜி.

பேஷ்வா கடைசியாக அனந்தை நோக்கினார். ''பிறகு உன் திட்டங்களை அடிக்கடி எழுதியனுப்பினாய். எதிரிகளை இங்கு சந்திக்கப் போவதாகக் கூறினாய். நீ முதலில் எழுதியபோது கவர்னர் பூன் இங்கிலாந்து போய்விட்டதாக எழுதியிருந்தது, உனக்கு நினைப்பிருக்கும். அது தவறான வதந்தி. புது கவர்னர் பிப்ஸ் வந்தும் பூன் போகவில்லை. தமது தோல்விகளுக்கு ஈடு கட்ட இந்தக் கடைசிப் போரில் ஈடுபட்டார். ஆனால், இனி போய் விடுவார். பிப்ஸ் ஐந்து மாதங்களாகக் காத்திருக்கிறார், பதவி ஏற்க. இந்தத் தோல்விகளுக்குப் பிறகு பூன் இங்கிருக்கமாட்டார்'' என்றார். பிறகு ஒரு கேள்வி கேட்டார் ''அனந்த்! உனக்கு நல்ல வாய்ப்பிருந்தபோது காஸண்ட்ராவை ஏன் தப்பிப் போக விட்டாய்?'' என்று.

''கடல் ராணி காஸண்ட்ராவை நாசப்படுத்துவதை விரும்பவில்லை. அவள்தான் போகவிட்டாள்'' என்றான் அனந்த்.



''ஏன் ராணி?'' என்று கேட்டார் பேஷ்வா.

''நமது திட்டம் கொள்ளைக்காரர்களையும் பிரிட்டிஷ் பலத்தையும் உடைப்பது. காஸண்ட்ராவின் பாய்மரங்கள் போய் விட்டன. அதன் பீரங்கி பலத்தை, தங்கள் தரை வீரர் திட்டமும் கடல் வீரர் திட்டமும் முறித்துவிட்டன. காஸண்ட்ரா இப்பொழுது சிறகிழந்த பறவை. மாக்ரேயின் கப்பல்களில் நான்கு போய் விட்டன. இருப்பினும் மாக்ரே' காஸண்டராவைத் தொடர்ந்திருக்கிறார். வெள்ளையரை வெள்ளையரே அழித்துக் கொள்வார்கள். இனி நாம் செய்யவேண்டியது அதிகம் இல்லை!'' என்றாள் ராணி.

''ரத்னா! உனக்குக் கடல் ராணி என்ற பெயர் தகும். நீ 'கடல் ராணி'யையும் அதன் பீரங்கிகளையம் இயக்கியதைக் கவனித்தேன்'' என்று பாராட்டினார் பேஷ்வா. ''உன் முடிவு சரி'' என்றும் குறிப்பிட்டார்.

ராணி ஆசனத்திலிருந்து எழுந்தாள். ''பேஷ்வா! சாரு எப்பொழுது மரக்கலத்தை நடத்தப் பயின்றாள்? அவள் சுக்கான் பிடித்துக் கடல் ராணியைத் திருப்பியிருக்காவிட்டால் இந்தப் போர் இத்தனை திறம்பட நடந்திருக்காது'' என்றாள்.

''ஆமாம் சாரு! நீ எப்பொழுது கப்பலைச் செலுத்தக் கற்றுக் கொண்டாய்?'' என்று பேஷ்வா கேட்டார்.

சாரு தனது அழகிய கண்களால் பேஷ்வாவை ஏறெடுத்து நோக்கினாள். ''குடிசையிலிருந்த காலத்தில் கனோஜி அடிக்கடி வந்து கப்பல் மர்மங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். மனத்தில் பதிந்ததை நடைமுறையில் செய்து பார்த்தேன்'' என்று சொன்னாள்.

பேஷ்வா முடிவில் அனைவரையும் பாராட்டினார். கடைசியில் லா பூஷே எழுந்திருந்தான். ''காஸண்ட்ராவின் கதை இன்னும் முடியவில்லை. அதை நான் கைப்பற்றாமல் உறங்கமாட்டேன். அதற்கொரு கப்பல் வேண்டும்!'' என்றான்.

''கப்பலுக்கு என் பெயரை முதலில் சூட்டியது நீங்கள். அதை எடுத்துக் கொள்ளுங்கள்!'' என்றாள் கடல் ராணி.

''உங்கள் இருவரையும் சிந்து துர்க்கத்தில் விட்டுப் போகிறேன் வாருங்கள்''என்று அழைத்தான் லா பூஷே, இரு பெண்களையும் நோக்கி.

''மூவரையும் என்று சொல்லுங்கள்'' என்றான் துலாஜி.

''மறந்துவிட்டேன். ஆம் ஆம். மூவர்'' என்றார் பேஷ்வா.

★ ★ ★

அடுத்த மாதத்தில் ஒரு நாள் காலை ரத்னா அலைகடல் தாமரையாக மீண்டும் கடலில் நீந்திக்கொண்டிருந்தாள். மீண்டும் பழைய கரைக்கு வந்தாள். அன்றும் உறங்கிக்கொண்டிருந்தான் அறைவாயிலில் அனந்த். அதே பழைய கிழிந்த உடை. அதே இரண்டு கைத்துப்பாக்கிகள் கச்சையில். அவனை உற்று நோக்கிய கடல் ராணி, ''எழுந்திருங்கள், வெட்கமில்லை'' என்று அவன் தோளைத் தொட்டு அசைத்தாள். அந்தச் சமயத்தில் உள்ளேயிருந்து வெளியே வந்தாள் சாரு நெகிழ்ந்த உடையுடன்.

''புருஷனைக் கேட்கிறாயே. நமக்கு வெட்கம் இருக்கிறதா? மூவரும் ஒரே அறையில்...'' என்று துவங்கி நிறுத்தினாள் சாரு.

''சே! சே! சாரு பேசாதே. இந்தப் பொய்த் தூக்கத்தை நம்பாதே'' என்றாள் ராணி.

இருபெண்களும் அனந்தை நோக்கி வந்தார்கள். முதல் நாள்போல் அன்றும் அவன் கைத்துப்பாக்கிகள் இயங்கின மின்னல் வேகத்தில். ஆகாயத்திலிருந்து விழுந்தன இரு கடல்பறவைகள் இரு பெண்களுக்கும் இடையில்.

''பாவம் இவற்றை எதற்காகச் சுட்டீர்கள்?'' என்று கேட்டாள் ராணி.

''வெள்ளைக்காரர் யாரும் இல்லை உன்னைத் தூக்கிப் போக. தவிர நீங்கள் சமைக்க ஏதாவது பொருள் வேண்டாமா?'' என்றான் அனந்த்.

''சமையலுக்குத்தான் நாங்கள் ஏற்பட்டோமா?'' என்று சீறினாள் சாரு.

''சமையலுக்கும்தான்'' என்ற அனந்த் அவர்கள் மீது தனது கண்களை ஓடவிட்டான்.

''சே; சுத்த வெட்கங் கெட்டவர். வாடி சாரு'' என்று அழைத்துக் கொண்டு அறைக்குள் சென்றாள் கடல் ராணி.



சோம்பல் முறித்துக்கொண்டு எழுந்த அனந்த் அறையை நோக்கிச் சென்றான். கதவு அடைத்திருந்தது. இருமுறை கதவைத் தட்டினான். '' உள்ளே வரலாமா?'' என்றும் கேட்டான்.

''கூடாது'' என்றாள் சாரு.

''ஏன்?'' என்று கேட்டான் அனந்த்.

''நீங்கள் வரக்கூடிய நிலையில் நாங்கள் இல்லை'' என்றாள் ராணி.

அடுத்து இருவர் நகைப்பும் இன்பமாக ஒலித்தது அவன் காதில். கதவில் சாய்ந்து கொண்டான் அனந்த். ''சொர்க்கம் இப்படித்தானிருக்கும்'' என்றும் தனக்குள் சொல்லிக்கொண்டான். 'சொர்க்கவாசல் எப்பொழுது திறக்கும்?' என்றும் தன்னுள் கேட்டுக்கொண்டான். கேள்வியை நினைத்துத் தானே முறுவல் கொண்டான்.

''இந்தச் சிந்து துர்க்கம் எனது சொந்த துர்க்கம், சொர்க்கம்'' என்று முணுமுணுத்தான். அந்த முணுமுணுப்பில் இன்பம் இருந்தது. முகத்தில் திருப்தியிருந்தது. எதிரே விரிந்தது அரபிக்கடல். அதன் அகண்டம் அவன் இதயத்தைக் கொள்ளை கொண்டது. 'காதலைப் போலத்தான் கடலும்... கரையில்லாதது, முடிவில்லாதது!' என்ற தத்துவம் அவன் இதயத்தை ஆட்கொண்டது.

**(முற்றும்)**

## பின்னுரை

*1.* காஸண்ட்ரா இந்தப் போரால் பெரிதும் நாசம் அடைந் திருந்தது. மாக்ரேயும் அதைத் தொடர்ந்து போரிட்டாலும் காப்டன் இங்க்லண்டின் திறமையால் காஸண்ட்ரா தப்பி, கொச்சிக்குச் சென்று கொச்சி மன்னன் உதவியால் பழுது பார்க்கப்பட்டு மடகாஸ் கரை நோக்கி ஓடியது. இந்த உதவிக்காகக் கொச்சி மகாராஜாவின் பெண்ணுக்குக் கொள்ளைக்காரர்கள் தாங்கள் கொள்ளையடித்த பொருள்கள் பலவற்றையும் ஒரு பட்டுச் சேலையையும் பரிசளித் தார்கள். பிறகு இங்க்லண்ட், ஸில்வர், டெய்லர் மூவருக்கும் சண்டை உண்டாகவே டெய்லர் அதிகாரமேற்று, இங்க்லண்டையும் ஸில்வரையும் மொரீஷியஸ் தீவில் இறக்கிவிட்டான். அங்கிருந்து அவர்கள் ஸெயிண்ட் மேரிஸுக்குச் சென்றார்கள். (Pirates of Malabar - By John Biddulph - P.P. 155 & 156)

*2.* பிறகு லா பூஷே தான் சொன்னபடி காஸண்ட்ராவைக் கைப்பற்றிக் கொண்டான். அதைக் கொண்டு போர்ச்சுகீஸ் வைஸ் ராய் காண்டி டி எரிஸிராவின் 'நோஸ்ட்ரா ஸெனாராடிகாகோ'' என்ற கப்பலைக் கைப்பற்றி அதிலிருந்த வைரங்களையும் ஏராள மான தங்கத்தையும் கைப்பற்றிக் கொண்டான். வைஸ்ராயை மட்டும் தப்பவிட்டான். (Kanoji Angrey Maratha Admiral - By Manohar Malgonkar - Foot note or Page 246)

*3.* கவர்னர் பூன் மனமுடைந்து 1722 ஜூன் மாதம் 9-ஆம் தேதி பிரிட்டனுக்குப் பயணமானார்.

*4.* காப்டன் மாக்ரேயின் சேவையை மெச்சி பிரிட்டிஷ் அதி காரிகள் அவரை 1738-இல் சென்னை கவர்னராக நியமித் தார்கள். இங்கு பெரும் பொருள் திரட்டி *(1,00,000 பவுன்கள்)* மாக்ரே சொந்த நாடு சென்றார். (Biddulph - Page 160).

## ஆசிரியரின் பிற நூல்கள்

ராஜதிலகம்
ராஜபேரிகை
யவன ராணி (2 பாகம்)
கடல்புறா (3 பாகம்)
கன்னிமாடம்
ஜலதீபம் (3 பாகம்)
மன்னன் மகள்
ராஜமுத்திரை (2 பாகம்)
ராஜயோகம்
சேரன் செல்வி
மலைவாசல்
ஜலமோகினி
நாகதீபம்
ஜீவபூமி
நீள்விழி
பல்லவ திலகம்
மூங்கில் கோட்டை
ராணியின் கனவு
மஞ்சள் ஆறு
அவனி சுந்தரி
மோகனச் சிலை
மலை அரசி
வசந்த காலம்
நிலமங்கை
மங்கல தேவி